159

# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

SIXTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLXXXIX (Nos. 1 to 4)

3rd, 5th, 7th and 8th April 1982

©

GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600 009.*

PRICE *Rupee* : 1

D
V211,32 N82
N83.189
122069

TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

159

SIXTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

3RD, 5TH, 7TH AND 8TH APRIL 1982.

VOLUME CLXXXIX (NOS. 1 TO 4).

## TABLE OF CONTENTS

*Saturday, the 3rd April 1982.*


| | |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu .. | i—v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... ... | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies .. .. .. | ix—xii |
| 1. Questions and Answers ... ... ... | 1—25 |
| 2. Personal Explanation *re*— | |
| Reference by Minister for Labour to absence of Thiruvalargal A. Nallasivan and P. Manickam, M.L.Cs. from the House .. .. .. | 25—30 |
| 3. Announcement *re*— | |
| Decision of the Business Advisory Committee ... | 30 |
| 4. Call Attention Notices— | |
| (1) Prevention of harvested paddy being carried by agriculturists to their homes by the Civil Supplies Department officials and imposition of compulsory levy ... ... ... ... | 30—33 |
| (2) Insistence by Tamil Nadu Cement Corporation on Security Deposit from cement stockists and threat of cancellation of the licence of defaulters | 34—36 |
| 5. Private Member's Business— | |
| Bill—The Tamil Nadu Compulsory Registration of Marriages Bill, 1979 (L.C. Bill No. 1/1979) | 36—77 |
| 6. Papers laid on the table of the House ... ... | 77—78 |

*Monday, the 5th April 1982*

1. Questions and Answers ... ... ... 89—112

2. Announcement *re*—
Message from the Assembly .. .. 113

3. Call Attention Notices—
(1) Retrenchment of employees in the Electricity Branch of Madurai Corporation ... ... 113—115
(2) Belated disbursement of teachers' salaries in Municipal Schools in Tiruvannamalai Town 115—116

4. Government Bills—
(1) The Perarignar Anna University of Technology (Amendment and Special Provisions) Bill, 1982 (L.A. Bill No. 10 of 1982) 117—133
(2) The Registration (Tamil Nadu Amendment) Bill, 1982 (L.A. Bill No. 16 of 1982) .. 134—150
(3) The Tamil Nadu Manual Labourers (Regulation of Employment and Conditions of Work) Bill, 1982 (L.A. Bill No. 23 of 1982) .. 150—199

5. Papers laid on the table of the House ... 199—200

*Wednesday, the 7th April 1982*

1. Questions and Answers .. .. .. 227—243

2. Privilege Issue *re*—
Circular of Secretary to Government, Education Department, and Director of School Education, about sending of replies to Members of Legislature on representations made as representatives of unrecognised Associations .. .. 243—245

3. Announcements—
(1) Decision of the Business Advisory Committee 245
(2) Message from the Governor ... ... ... 245
(3) Message from the Assembly ... ... 245—246



PAGES.

4. Call Attention Notices—
(1) Revised guidelines for valuation fixed by Revenue|Registration Departments for registration of documents and consequent hardship to people .. .. .. .. 246—247
(2) Non-repair of Thazhakkudi-Poodapan link Road connecting Veeranarayanamangalam and Nagercoil-Madras National Highways and Erachakulam-Thazhakkudi Road in Thovalai taluk, Kanyakumari District ... ... 248—250

5. Government Resolutions—
(1) Amendment to the Estate Duty Act, 1953 250—253
(2) Change in the order of business .. .. 288—289

6. Government Bills—
(1) The Tamil Nadu Manual Labourers (Regulation of Employment and Conditions of Work) Bill, 1982 (L.A. Bill No. 23 of 1982)—*cont.* 253—282
(2) The Industrial Disputes (Tamil Nadu Amendment) Bill, 1982 (L.A. Bill No. 24 of 1982) 282—283
(3) The Wakf (Tamil Nadu Amendment) Bill, 1982 (L.A. Bill No. 70 of 1981) ... ... 284—288
(4) The Tamil Nadu Contingency Fund (Second Amendment) Bill, 1982 (L.A. Bill No. 29 of 1982) ... ... ... 289—292
(5) The Tamil Nadu Kudiyiruppu Laws (Amendment) Bill, 1982 (L.A. Bill No. 67 of 1981) .. .. .. .. .. 293—299
(6) The Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1982 (L.A. Bill No. 30 of 1982) ... ... ... 299—309
(7) The Tamil Nadu Entertainments Tax (Amendment) Bill, 1982 (L.A. Bill No. 34 of 1982) ... ... ... 309—310

7. Papers laid on the table of the House ... 310—311

PAGES.

*Thursday, the 8th April 1982*


1. Questions and Answers .. .. 337—346

2. Privilege Issue *re*—

(1) Publication of Thiru Arcot N. Veerasamy's speech *re* taxation measures in the Budget in 'Anna' on 3rd March 1982 ... ... 346—347

(2) Heading given in 'Malai Murasu' on 5th March 1982 to a Minister's speech in the House 347—348

3. Adjournment Motion *re*—

Loss incurred by agriculturists due to Cyclone and heavy rain in Namakkal taluk, Salem district 348—349

4. Announcements—

(1) Message from the Governor ... ... 350

(2) Message from the Assembly ... ... 350—352

(3) Business transacted in the Council during the session from 2nd February 1982 to 8th April 1982 ... ... ... ... 427—429

5. Call Attention Notices—

(1) Non-payment of fair price for Sugarcane and fall in the selling price of sugarcane jaggery ... ... ... ... 352—354

(2) Non-usage of overhead water tank in Santhaivillai, Thoppur village, Thovalai taluk, Kanyakumari district ... ... ... 354—355

(3) Non-payment of additional increment for training and annual increment to teachers in Adi Dravidar Welfare Schools .. .. 355—357

6. Government Bills—

(1) The Tamil Nadu Public Property (Prevention of Destruction and Loss) Bill, 1982 (L.A. Bill No. 13 of 1982) ... ... ... ... 357—395

(2) The Provincial Small Cause Courts (Tamil Nadu Amendment) Bill, 1982 (L.A. Bill No. 14 of 1982) ... ... ... ... 395—399


PAGES.


6. Government Bills—*cont.*

(3) The Madras City Civil Courts and Presidency Small Cause Courts (Amendment) Repeal Bill, 1982 (L.A. Bill No. 15 of 1982) ... 399—400

(4) The Tamil Nadu Court-fees and Suits Valuation (Amendment) Bill, 1982 (L.A. Bill No. 17 of 1982) ... ... ... 400—403

(5) The Tamil Nadu Prevention of Cow Slaughter and Animal Preservation Bill, 1982 (L.A. Bill No. 21 of 1982) ... ... ... ... 404—405

(6) The Tamil Nadu Newspaper Employees Relief Fund Bill, 1982 (L.A. Bill No. 31 of 1982) ... ... ... ... 406—407

(7) The Tamil Nadu Panchayats (Validation of Local Cass Surcharge) Bill, 1982 (L.A. Bill No. 25 of 1982) ... ... 407—409

(8) The Indian Partnership (Tamil Nadu Amendment) Bill, 1982 (L.A. Bill No. 27 of 1982) 409—410

(9) The Tamil Nadu Payment of Salaries (Second Amendment) Bill, 1982 (L.A. Bill No. 33 of 1982) ... ... ... 411—422

(10) The Tamil Nadu Labour Welfare Fund (Amendment) Bill, 1982 (L.A. Bill No. 32 of 1982) ... ... ... 422—427

7. Government Resolution—

Change in the order of business ... ... 404

8. Papers laid on the table of the House ... ... 429—430

Index .. .. .. .. 446—484

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

Thiru SADIQ ALI.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HONOURABLE THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. THE HONOURABLE DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance, in charge of Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. THE HONOURABLE THIRU S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control.

4. THE HONOURABLE THIRU K. A. KRISHNASWAMY, Minister for Rural Industries, in charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. THE HONOURABLE THIRU S. D. SOMASUNDARAM, Minister for Revenue, in charge of Revenue, Commercial Taxes, Excise and Census.

6. THE HONOURABLE THIRU R. M. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona and Grant of Liquor Permits.

7. THE HONOURABLE THIRU C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education including Technical Education, Official Language and Handlooms.

8. THE HONOURABLE DR. K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. THE HONOURABLE THIRU C. PONNAIYAN, Minister for Co-operation and Law, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. THE HONOURABLE THIRU P. KULANDAIVELU, Minister for Local Administration, in charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. THE HONOURABLE THIRU S. RAGHAVANANDAM, Minister for Labour, in charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. THE HONOURABLE DR. H. V. HANDE, Minister for Health, in charge of Health.

13. THE HONOURABLE THIRU K. RAJA MOHAMED, Minister for Irrigation, in charge of Agro-Service Co-operative Societies, Irrigation including Minor-Irrigation and Wakf.

14. THE HONOURABLE THIRU S. MUTHUSWAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised, Transport, Motor Vehicles Act and Ports.

15. THE HONOURABLE THIRU S. THIRUNAVUKKARASU, Minister for Industries, in charge of Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. THE HONOURABLE THIRU S. N. RAJENDRAN, Minister for Public Works and Khadi, in charge of Khadi, Prohibition excluding grant of liquor permits passports, Public Works Department and Establishment matters relating to Public Works Department.

17. THE HONOURABLE THIRU M. VIJAYASARATHI, Minister for Adi Dravidar Welfare, in charge of Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. THE HONOURABLE THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## தமிழ்நாடு ஆளுநர்

## திரு. சாதிக் அலி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)— பொது, பொது நிர்வாகம், திட்டம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)— நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன்வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்துறை அமைச்சர்)— மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்)— வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு இராம எம். வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)— தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி மற்றும் கைத்தறி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)-வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள், பதிவு கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம்; கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமி தானம், கிராம தானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர் வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நகர அமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது (நீர்ப் பாசனத்துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்பு.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி—(போக்குவரத்துத் துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்)—பெருந்தொழில்கள், சுரங்கங்கள், கனிப்பொருள்கள், நசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன். (கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்)—கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, டியண இலசவு சீட்டு. பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.



17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள்-அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

## தமிழ்நாடு சட்டமன்றப் மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

---

மாண்புமிகு மேலவைத் தலைவர்

டாக்டர் ம.பொ. சிவஞானம்

மேலவைத் துணைத் தலைவர்

புலவர் புலமைப்பித்தன்

மாற்றுப் தலைவர்கள் பட்டியல்

1. திரு. சி. ரா. இலட்சுமிகாந்தன்
2. திருமதி. மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி
3. திரு. ஏ. ஜே. தாஸ்
4. திரு. சி. ராமலிங்கம்

மேலவைச் செயலாளர்

திரு. கி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலவர்

திரு. த. ப. டில்லிதுரை, பி. எஸ். சி.பி, எல்.,

விவாதப் பதிப்பாளர்

திரு. ரா. கோதண்டராமன், பி. ஏ., பி. ஜி.எல்.பி. எல்.,

தலைமை நிருபர்

திரு. ச. சுவாமிநாதன்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1. அருணாசலம், திரு. க. | நியமனம். |
| 2. ஆறுமுகம், திரு. சோ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 3. ஆற்காடு நா. வீராசாமி, திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 4. ஆனந்தம், திரு வி.வி.வி. | மாநிலச் கட்டமன்றப் பேரவை |
| 5. இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாலர் நல அமைச்சர்) | மாநிலச் சட்டமனறப் பேரவை |
| 6. இராசா முகமது, திரு. கா. பாசனத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமனறப் பேரவை |
| 7. இராமமூர்த்தி, திரு. க. | மாநிலச் சட்டமனறப் பேரவை |
| 8. இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமனறப் பேரவை |
| 9. இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமனறப் பேரவை |
| 10. கண்ணப்பன், திரு. .. காவெட்டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 11. சங்கரலிங்கம், திரு. ம. .. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 12. சண்முகம், திரு. ப. உ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 13. சந்தோஷம், திரு. த. .. | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 14. சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 15. சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு தலைவர்) | நியமனம். |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 16. சீத்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 17. சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |
| 18. சுவாமிநாதன், திரு. ஜி. | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 19. தாமஸ், திரு. பா. ரா. .. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 20. தாமோதரன், திரு. ஏ. ஆர். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 21. தாரா செரியன், திருமதி. | நியமனம். |
| 22. தாஸ், திரு. ஏ. ஜே. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 23. துரைசாமி, திரு. ஓ. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 24. நல்லசிவன், திரு. ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 25. நீலநாராயணன், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 26. புலமைப்பித்தன், புலவர் (துணைத் தலைவர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 27. மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 28. மாணிக்கம், திரு. ப. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 29. மியாகான், திரு. ஜே. எம். .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 30. மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி. |
| 31. முத்து, திரு. எஸ். .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 32. முத்துசாமி, திரு. செ. .. | சேலம்-தருமபுரி-கோயம்பத்தூர் நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 33. முத்தையா செட்டியார், ப டாக்டர் எம். ஏ. | நியமனம். |
| 34. முனுசாமி, திரு. பி. .. | நியமனம். |
| 35. லீலாவதி, செல்வி ஆ. .. | சென்னை-செங்கற்கட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 36. லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வடஆற்காடு தென்ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 37. வசந்தபை, திரு. ஜி. .. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 38. வள்ளிமுத்து, திரு. ஈ. வெ. அ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 39. வீரப்பன், திரு. இராம. (செய்தி அறநிலையத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 40. வெங்கடேசன், திரு. ஈ. எஸ். | நியமனம். |
| 41. ஹண்டே, டாக்டர் எச். வி. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 42. ஜேப்பியார் திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 43. வெற்றிடம் .. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44. வெற்றிடம் .. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 45. வெற்றிடம் .. .. | சேலம் தருமபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46. வெற்றிடம் .. .. | சேலம் தருமபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 47. வெற்றிடம் .. .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48. வெற்றிடம் .. .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 49. வெற்றிடம் .. | .. செங்கற்பட்டு உள்ளாட்சித் மன்றத் தொகுதி. |
| 50. வெற்றிடம் .. | .. சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51. வெற்றிடம் .. | .. கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சித் மன்றத் தொகுதி. |
| 52. வெற்றிடம் .. | .. கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 53. வெற்றிடம் .. | .. மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54. வெற்றிடம் .. | .. மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 55. வெற்றிடம் .. | .. திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56. வெற்றிடம் .. | .. திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57. வெற்றிடம் .. | .. வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58. வெற்றிடம் .. | .. தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59. வெற்றிடம் .. | .. தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60. வெற்றிடம் .. | .. திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61. வெற்றிடம் .. | .. திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி தொகுதி. |
| 62. வெற்றிடம் .. | .. வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63. வெற்றிடம் .. | .. கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

(இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் அறுபத்தி ஒன்றாவது கூட்டத் தொடர்)

*சனிக்கிழமை, 1982 ஏப்ரல் 3.*

*பங்குனி 1, துன்மதி—திருவள்ளுவராண்டு 2013.*

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### போலி பரிசுச்சீட்டுகள்

* 241 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தமிழ்நாடு பரிசுச்சீட்டில் போலிச் சீட்டுகள் வெளிவந்ததாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தமிழ்நாடு பரிசுச் சீட்டின் போலிச் சீட்டுகள் வெளிவந்ததாக அரசின் கவனத்திற்கு இதுவரை கொண்டு வரப்படவில்லை. 15—12—1981 அன்று வெளிவந்த மாலைமுரசு மற்றும் தினகரன் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு வெளிவந்த செய்திகளின் படி போலிச் சீட்டுகளை தஞ்சை மாவட்டத்திலுள்ள நாகையில் நான்கு பேர் காரில் விற்றதாகவும் அதன்பேரில் நாகூர் போலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் அந்த நால்வரையும் கைது செய்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருப்பதாகவும் செய்தியில் குறிப்பிடப்பட்டு இருந்தது. மேலும் அந்த பத்திரிகை செய்திகளில் போலிப் பரிசுச் சீட்டுகள் எந்த மாநில பரிசுச் சீட்டுக்குச் சம்பந்தப்பட்டவை என்று குறிப்பிடவில்லை.

(இ) தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் இதுபற்றி விசாரித்து அறிக்கை ஒன்றை, அரசுக்கு விரைவில் அனுப்பிவைக்கும்படி கோரப்பட்டுள்ளார். அவருடைய அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. இதனிடையில் தஞ்சை மாவட்ட சிறு சேமிப்பு அலுவலர் மூலம் மேற்கூறிய பத்திரிகைச் செய்தி பூடான் மாநில பரிசுச் சீட்டு சம்பந்தப்பட்டது என்று தெரிய வருகிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தமிழ்நாடு பரிசுச் சீட்டு நம்முடைய மாநிலத்தில் அச்சடிக்கப்படுகிறதா அல்லது வேறு மாநிலத்தில் அச்சடிக்கப்படுகிறதா ? தனியார் அச்சகத்தில் அச்சடிக்கப்படுகிறதா அல்லது அரசுத் துறை அச்சகத்தில் அச்சடிக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தமிழ்நாடு பரிசுத் சீட்டைப் பொறுத்தவரையில், தங்கசாலையிலுள்ள அரசு அச்சகத்தில் அச்சடிக்கப்படுகிறது. அங்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு பரிசுச் சீட்டுகளை சரிபார்க்கின்ற வகையிலேயும் கடுமையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** வேற்று மாநில பரிசுச் சீட்டுகள் சில வேளைகளில் போலியாக வந்து விடுவதால், மக்களுக்கு இதிலே குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. குழப்பத்தைத் தவிர்க்க, தமிழ் நாடு பரிசுச் சீட்டுக்களை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் விற்பனை செய்ய வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய குறிப்புகள் இல்லை. இப்போது முகவர்கள் மூலமாக தமிழ் நாடு பரிசுச் சீட்டுகள் விற்கப்படுகின்றன. 15 சதவிகித கழிவுத் தொகை தரப்படுகிறது. இதனால் ஏராளமானவர்கள் போட்டி போட்டு தமிழ் நாடு பரிசுச் சீட்டுகளை வாங்க முகவர்கள் முன்வருகிறார்கள். ஆங்காங்கு மாவட்டங்களில் இருக்கிற முகவர்களுக்கும் ஓரளவுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது.

### நாகர்கோவிலுக்கு குடிநீர்

* 242 வினா.—**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி-திருநெல்வேலி குடிநீர் வடிகால் வாரியமும் மேற்பார்வையாளர் அலுவலகத்தில் நாகர்கோவில் நகர்மன்ற எல்லைக்குட்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட குடிநீர் இணைப்புகளுக்கு பல மாதங்களாகியும் இணைப்பு கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா ?



(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழ இடமில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** கன்னியாகுமரி-திருநெல்வேலி குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வையாளர் அலுவலகம் பாளையங்கோட்டையில் இருக்கிறது. நாகர்கோவில் நகர்மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்குக் குடிநீர் இணைப்பு வழங்குவது இந்த மேற்பார்வையாளர்தான். மாதக்கணக்கில் ஆகியும், ஒரு வருடம் தாண்டியும் கூட, இன்னும் பல இடங்களில் குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லை. உதாரணமாக பெருமாள் திருமண்டபம் என்கிற கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, தண்ணீர் இணைப்பு வேண்டுமென்று கேட்டு, பல மாதங்கள் ஆகியும் இன்னும் அது கிடைக்கவில்லை. இதுபோன்ற ஒரு பிரச்சினையை நான் முன்பு இதே அவையிலே எழுப்பிய பிறகு, அதற்குக் குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட்டது. ஆகவே இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தந்திருக்கிற தகவல், புள்ளிவிவரம் சரியில்லை என்று நான் கருதுகிறேன். பல மாதங்களுக்கு முன்னாடியே குடிநீர் இணைப்பு வேண்டுமென்று மனு அனுப்பிய 50-க்கு மேற்பட்ட இடங்களுக்கு இன்னும் குடிநீர் இணைப்பு கொடுக்கப்படவில்லை என்கிற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. இப்படி தரப்பட்டிருக்கிற தகவல் தவறாக இருக்குமென்றால், இதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தற்போதுள்ள விதிகளின்படி, நகர்மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 300 அடிக்கும் குறைவாக உள்ள குழாய்களுக்குத்தான் நாகர்கோவில் நகராட்சியால் இணைப்பு தரப்படும். 300 அடிக்கு மேல் இருந்தால், பாளையங்கோட்டையிலுள்ள குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வையாளர் அவர்களால்தான் இணைப்புக்கான அனுமதி வழங்கப்படும். அந்த வகையில் மேற்பார்வையாளர் அலுவலகத்திற்கு வந்த மனுக்களை மேற்பார்வையாளர் அலுவலகம் பரிசீலித்து, அனுமதி தந்து, பிறகு அவற்றை நாகர்கோவில் நகராட்சிக்குத் திருப்பி அனுப்பி வைக்கிறோம். அதன் பிறகு அதுகுறித்து நகராட்சி ஆணையாளர் தக்க நடவடிக்கை எடுப்பார். 1—4—1981 முதல் 1—11—1981 வரை 14 விண்ணப்பங்கள்தான் இந்த வகையில் பெறப்பட்டுள்ளன. அதுபற்றிய விவரங்களைச் சொல்கிறேன்.

| | |
|---|---|
| 7—5—1981 | 2 |
| 12—5—1981 | 2 |

| | |
|---|---|
| 2—6—1981 | 1 |
| 10—6—1981 | 1 |
| 12—8—1981 | 2 |
| 19—8—1981 | 1 |
| 30—9—1981 | 1 |
| 15—10—1981 | 3 |

மேற்கூறிய 14 விண்ணப்பங்கள்தான் கன்னியாகுமரி-திருநெல்வேலி குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வையாளர் அலுவலகத்தில் கிடைக்கப்பெற்றுள்ளன. அவைகள் மேல் நடவடிக்கைக்காக 1—11—1981-க்கு முன்னரே அங்கிருந்து நாகர்கோவில் நகராட்சிக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** 1—4—1981-லிருந்து 1—11—1981 வரை உள்ள விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். இப்படி மனுக்களை அனுப்பும்போது, அந்த மனுக்களை மேற்பார்வையாளர் அலுவலகம் பரிசீலனை செய்து, இத்தனை மாதங்களுக்குள் நாகர்கோவில் நகராட்சிக்குத் திருப்பியனுப்ப வேண்டுமென்ற குறியீடு எதையாவது பொதுவாக அரசு வைத்திருக்கிறதா ? இப்படி மனு செய்துகொண்ட பிறகு குறைந்தது ஆறு மாதங்களுக்குள்ளாவது அவை திருப்பியனுப்பப்பட வேண்டுமென்ற குறியீடை அரசு வைப்பது நல்லது. அப்படி இருந்தால்தான், பொதுக் காரியங்களுக்குப் பயன்படுகிற கல்யாண மண்டபம், பள்ளிகள் போன்றவை பயன் பெற முடியும். இப்போது காலதாமதப்படுத்தப்படுவதால், அவர்களுக்கெல்லாம் பலவித தொல்லைகள் ஏற்படுகின்றன. நான் குறிப்பிட்ட திருமண மண்டபத்திற்கு எவ்வளவு காலம் தாமதப்படுத்தி இணைப்பு கொடுக்கப்பட்டது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** காலக் குறியீடு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியது போல், அவர் அதுகுறித்து அவையில் சொல்லியதற்குப் பிறகுதான் கொடுக்கப்பட்டது என்று கருதுகிறேன். இப்போதும் மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வைப் புரிந்துகொண்டு குறிப்பிட்ட அந்த அதிகாரிக்குத் தனியாக ஒரு கடிதம் எழுதி, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்வோம்.



**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உறுதிக்கு நன்றி. அவர்களே குறிப்பிட்டதுபோல், நானே இங்கு முறையிட்ட பின்னர் தான் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தமாதிரி இருக்கிற முறை இல்லாமல் ஒருவர் மனு அனுப்பினால், உடனே அதைப் பரிசீலித்து அவர் அதைப் பெற தகுதியுள்ளவர் அல்லது தகுதி இல்லாதவர் என்று சொல்ல வேண்டும். ஒரு மூன்று மாத காலத்திற்குள் இணைப்பைக் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு குறியீடு வைத்திருப்பது தவறு நடைபெறாமல் இருப்பதற்கு உறுதுணையாக இருக்கும். ஆகவே இதுபற்றிப் பரிசீலனை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

## *Drinking-water for Rettanai village*

*243 Q.—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) the extent of land acquired by the Tindivanam Municipality in Rettanai village for its drinking-water wells and for the protection of its spring sources ; and

(*b*) whether the Municipality is in active possession of the entire extent of this land?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) 28 ஏக்கரும் 3 செண்டும்.

(இ) ஆம்.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்த முழு நிலப் பரப்பிலும் வேறு கிணறுகள் தோண்டக் கூடாது. இல்லையெனில் திண்டிவனம் நகரைப் பொறுத்தவரையில், பாதிப்பு ஏற்படுகிற நிலைமை இருக்கிற குறிப்பிட்ட பகுதி தற்பொழுது வேலியில்லாமல் இருப்பதால் பல்வேறு பகுதிகள் இம்மாதிரி ஆக்கிரமிப்புக்கு ஆளாகிற நிலைமை இருக்கிறது என்கிற தகவல் அரசுக்குத் தெரியுமா ? இதுகுறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ? இது தடுக்கப் படுமா ? இந்த 28 ஏக்கர்களில் இப்போது பயிர் ஏதாவது போடப்படுகிறதா, இல்லையா என்று அறிய் விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. ஆனால் என்னிடத்தில் வருந்தக் கூடிய ஒரு தகவல் இருக்கிறது. 1980 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணியின்போது 34 ஆயிரம்

ரூபாய் மதிப்பில் செட்டணை கிராமத்தில் தலைமை நீரேற்று நிலையத்தின் நீர் அதிகரிப்புக்கு தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆழ் குழாய் கிணறு ஒன்றைத் தோண்டி உரிய மிஷினையும் பொருத்தியது. மேற்படி ஆழ்கிணறைப் பொறுத்தவரையில், மேற்படி கிராமப் பொதுமக்களின் எதிர்ப்பால் மின் இணைப்பு கொடுக்கப்படாமல், அதிலிருந்து நீர் எடுக்க முடியாமல் இன்றைக்கு அது மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் இருக்கிறது. இதுதான் இப்போது இருக்கக்கூடிய வருந்தத்தக்க சூழ்நிலை. மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்பு கொண்டு இந்தப் பிரச்சினை குறித்து அவசரமான நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்படும்.

## சென்னையில் பலமாடிக் கட்டிடங்கள்

* 244 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) பல மாடிக் கட்டிடங்கள் சென்னை பெருநகரில் கட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணங்கள் யாவை ?

(உ) பெருநகர் கட்டிடம் கட்டுவோர் சங்கத்திடமிருந்து இதுபற்றி முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(எ) ஆம் எனில், அதுபற்றி அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(இ) சென்னை பெருநகரிய முழுமைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ள ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை 4—12—1976 நாளிட்ட அரசு ஆணை எண் 2395-படியும், வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசு ஆணை எண் 1764, தேதி 6—9—1979-படியும், கீழ்க் குறிப்பிட்டுள்ள இடங்களில்தான் பலமாடிக் கட்டிடங்கள் (15 மீட்டர் உயரத்திற்கு மேல்) அனுமதிக்கப்படும். எலியட்ஸ் சாலையின் வடக்கு மற்றும் கிழக்குப் பக்கம், நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, மைக் நிக்கோல்ஸ் சாலை, மில்லர்ஸ் சாலை, குக்ஸ் சாலை, அம்பத்தூர்-ராயபுரம் இரயில் பாதை மற்றும் தெற்குக் கடற்கரைப் பகுதியில் மேற்குப் பக்கம்.

விரிவான பரிசீலனைக்குப் பிறகு, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அங்கீகாரம் பெற்று மேலும் பல இடங்களில் பல மாடிக் கட்டிடங்களுக்கு அனுமதி அளிக்கும் வகையில், சென்னை பெருநகர் வளர்ச்சிக்



குழுமம் அரசின் ஒப்புதலுக்காக செயற்குறிப்பு அனுப்பியது. இதனை நன்கு பரிசீலனை செய்து, அரசு தனது 21—5—1981 நாளிட்ட ஆணை எண் 345-ல் மேலும் 16 பகுதிகளில் பலமாடிக் கட்டிடங்கள் அனுமதிக்க ஒப்புதல் அளித்தது.

(உ) மற்றும் (எ) பொது மக்களிடமிருந்தும் மற்றும் பத்திரிகைகளி லிருந்தும் ஆட்சேபணைகள் எழுந்ததாலும் இது சம்பந்தமாக அரசுக்கு பல்வேறு இடங்களிலிருந்து வந்த கோரிக்கைகளைப் பரிசீலிக்க வேண்டி யுள்ளதாலும், அரசு மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆணைகளின் பேரில் நடவடிக்கை எடுப்பதைத் தடை செய்துள்ளது. இதன்படி அரசின் மறு ஆணை வரும் வரை சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பகுதியில் பல மாடிக் கட்டிடங்கள் கட்ட அனுமதி கொடுக்கப்படமாட்டாது. இப்பொருள் பற்றி அரசு தீவிர பரிசீலனை செய்து வருகிறது.

(முற்பகல் 9-40)

திரு. ம. சங்கரலிங்கம் : சென்னை பெருநகர்க் குழுமம் பல மாடிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக என்று சில பகுதிகளை ஒதுக்கீடு செய்து, மற்ற பகுதிகளில் அவற்றுக்குத் தடைவிதிக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருக் கிறது. அதனடிப்படையில் அரசும் தடை விதித்திருக்கிறது என்று அறிகிறேன். மேலும் பலருடைய முறையீட்டின் காரணமாக இந்தப் பிரச்சினை பரிசீலனையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். சென்னையில் ஏற்கெனவே இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது. அதோடு சில முக்கியமான பகுதிகளில் இத்தகைய பல மாடிக் கட்டிடங்களைக் கட்டுவதன் மூலம் சுகாதாரக் கேடு ஏற்படுவதால், அரசு இதில் இன்னும் காலம் தாழ்த்தாமல் விரைவில் முடிவெடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணர்ந்துதான் அரசு இதற்காக ஒரு கேபினெட் சப்-கமிட்டியே அமைத்து, அதுவும் பிரச்சினையைப் பரிசீலனை செய்து அநேகமாக ஒரு முடிவை எடுத்துவிட்டது. எனவே விரைவில் அமைச்சரவை அதன் மீது முறையான இறுதியான முடிவெடுத்து அறிவிக்க இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் ; பலமாடிக் கட்டிடங்களில் குடியிருப்போரில் பெரும்பாலும் ஒவ்வொருவரும் கார் வைத்துக்கொண்டிருப்பவர்களாகவே இருக்கிறார்கள். எனவே இந்தப் பிரச்சினையைப்பற்றி ஆராயும்போது ஒவ்வொரு தளத்திற்கும் தகுந்த முறையில் " கார் பார்க்கிங் " வசதி இருக்க வேண்டும் என்று ஆணையிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அதற்கெல்லாம் ஏற்கெனவே விதிகள் இருக்கின்றன. எவ்வளவு உயரம் இருந்தால், அதற்கு எவ்வளவு கார் பார்க்கிங் ஏரியா இருக்க வேண்டும், அதற்கு ஃப்ளோர் ஏரியா ரேஷியோ எவ்வளவு இருக்க வேண்டும், "செட் பேக்" எவ்வளவு இருக்க வேண்டும் என்றெல்லாம் விதிகள் இருக்கின்றன. அவற்றின் மூலம் இது கட்டுப்படுத்தப் படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : "அபார்ட்மெண்ட் கமிட்டி" மாண்புமிகு அமைச்சர் தலைமையில் இதைப்பற்றி முன்பு பரிசீலனை செய்து, பம்பாய் போன்ற நகர்ப்புறங்களுக்குக்கூட போய்வந்திருக்கின்றது. பல மாடிக் கட்டிடங்கள் கட்டப்படுவதற்கான இடங்களைப்பற்றி விரைவாக நிர்ணயம் செய்யாவிட்டால், அதன் காரணமாக எல்லா இடங்களிலும் கட்டுகிற நிலை வரும். அதன் காரணமாக சுகாதாரக் கேடுகள் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. எனவே கேபினெட் சப்-கமிட்டி எடுத்திருக்கிற முடிவை ஒட்டி குறைந்த அளவு இடங்களையாவது முதலில் அறிவிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : விரைவில் ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பதில் மிகவும் கச்சிதமாக இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : பல மாடிக் கட்டிடங்களில் வசிப்பவர்கள் ஒவ்வொருவரும் கார் வைத்திருக்கிறார்கள். அவைகள் பெரும்பாலும் போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதிகளில்தான் அமைந்திருக்கின்றன. அத்தகைய சாலைகளின் பெயரை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் அதிகமான போக்குவரத்து நெரிசல் இருப்பதன் காரணமாக, அங்கெல்லாம் Road capacity -க்கு தெரிவித்திருக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் பல மாடிக் கட்டிடங்கள் அதிகமாக பேருந்துகளை அதிகரிக்க முடியாத நிலை இருக்கிறது என்றும் நகருக்குள் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிற பகுதிகளில் இருக்கக் கூடாது என்கிற முறையில் அமைச்சரவை பரிசீலனை செய்வதற்கு ஏற்ற வகையில் இத்துறையின் அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்ய முன்வருவாரா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் ஆழமாகப் பரிசீலனை செய்ததன் பின்தான் 16 காரிடார்களில் பல மாடிக் கட்டிடங்கள் கட்டலாம் என்று சொன்னோம். அதற்கு எதிர்ப்பு வந்து விட்டதால், அதை இன்னும் ஆழமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக் கிறோம். விரைவில் நல்ல முடிவு எடுக்கப்படும்.



திரு. க. மீனாட்சிசுந்தரம் : சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதிக்குத் தென் கிழக்கே மத்திய அரசின் சார்பில் மிகப் பெரிய பல மாடிக் கட்டிடம் எழுப்பப்பட்டிருக்கிறது. அது சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதியின் வெளிப் பார்வையைக் கெடுப்பதோடு, சுகாதாரக் கேடுகள் ஏற்படவும் காரணமாக இருக்கிறது. அதோடு காற்று வசதியும் குறைகிறது. எனவே அப்படிப்பட்ட பகுதிகளில் மத்திய அரசாக இருந்தால்கூட, கட்டிடங்களைக் கட்டக்கூடாது என்று அரசு தடை விதிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இவைகளைப் பற்றியெல்லாம் பரிசீலனை செய்யலாம்.

## *Bagasse*

*245 Q.—Thiru K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) the quantity of bagasse that is likely to be available in Tamil Nadu for paper industry; and

(*b*) the quantity of bagasse that is used at present by the Sugar Industry?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : (அ) & (இ) 1981-82 ஆம் சர்க்கரைப் பருவத்தில் 19 இலட்சம் டன் கரும்புச் சக்கை கிடைக்கும் என்றும், அதில் 18.50 இலட்சம் டன் எரிபொருளாகச் சர்க்கரை ஆலைகளில் பயன் படுத்தப்படும். மிகுதி காகிதத்தொழிலில் பயன்படுத்தக் கிடைக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. க. இராமமூர்த்தி : காகித ஆலைக்கு ஒரு லட்சம் டன் கரும்புச் சக்கை போதுமா ? காகித ஆலையின் மொத்தத் தேவை எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மொத்தம் இரண்டு காகித ஆலைகள் அமைய இருக்கின்றன. ஒன்று மதுராந்தகத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அருகில் அமைய இருக்கிறது. அதற்கு ஆண்டொன்றுக்கு 21,000 டன் ஈரப்பசையுள்ள கரும்புச் சக்கை தேவைப்படுகிறது. இதில் 10,000 டன் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்தும் எஞ்சிய 11,000 டன் கரும்புச் சக்கை, கள்ளக்குறிச்சி, ஆம்பூர் மற்றும் உளுந்தூர்பேட்டை ஆகிய ஆலைகளிலிருந்தும் தரப்படவிருக்கிறது.

இன்னொரு காகித ஆலை தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகிதத் தாள் நிறுவனம் சார்பில் நிறுவப்பட இருக்கிற ஆலை. அதற்குச் சுமார் 4.28 லட்சம் டன் கரும்புச் சக்கை தேவைப்படுகிறது. அதைப் பொறுத்தவரை, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, தர்மபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை, காவேரி ஷுகர் மில் அண்டு கெமிக்கல், பேட்டைவாய்த்தலை, டெக்கான் ஷுகர்ஸ், புகளூர் மற்றும் சக்தி சர்க்கரை ஆலை ஆகிய ஐந்து ஆலைகள் மூலம் கரும்புச் சக்கை சப்ளை செய்வதற்கான அக்ரிமெண்ட் போடப்பட்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : தற்போது இந்தக் கரும்புச் சக்கைதான் சர்க்கரை ஆலைகளுக்கு எரி பொருளாகப் பயன்படுகிறது. இந்த ஆண்டைப் போல் மின்சாரப் பற்றாக்குறை ஏற்படும்போது, மற்றும் நிலக்கரி சப்ளையில் பற்றாக்குறை ஏற்படும்போது, இருக்கிற இந்த எரி பொருளையும் காகிதத் தொழிற்சாலைக்குக் கொடுத்துவிட்டால், சர்க்கரை ஆலைகளின் நிலைமை என்னாவது? தற்போது சர்க்கரைத் தொழிற்சாலைகளுக்கான எரி பொருள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. நிலக்கரியிலும் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது. இந்த நிலையில் எந்த அளவுக்கு கரும்புச் சக்கை எரி பொருள் அல்லாத காரியங்களுக்கு உதவ முடியுமோ அந்த அளவு கரும்புச் சக்கை காகிதத் தொழிற்சாலைகளுக்குப் போதுமா என்பதை அரசு பரிசீலனை செய்ததா? இதைப்பற்றிய விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்வியை வேறு விதமாகக் கேட்டுவிட்டு இப்போது அந்தக் காகித ஆலைகளைப்பற்றிய முழு விவரங்களையும் கேட்கிறார்கள். ஒவ்வொரு சர்க்கரை ஆலையிலிருந்தும் எவ்வளவு மிச்சம் கிடைக்கும் என்பதை நான் ஏற்கெனவே சொன்னேன். புகளூரில் 191 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட இருக்கும் செய்திக் காகித ஆலைக்கு சுமார் 4 லட்சம் டன் கரும்புச் சக்கை தேவைப்படுகிறது. அதற்கு 5 சர்க்கரை ஆலைகளோடு 'அக்ரிமெண்ட்' போடப்பட்டிருக்கிறது. இது போதாதென்று இன்னும் இரண்டு சர்க்கரை ஆலைகளை நிறுவுவதற்கு தனியார்கள் மனு செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

கரும்புச் சக்கை சர்க்கரை ஆலைகளில் எரி பொருளாகத்தான் பயன் படுத்தப்படுகிறது. எனவே கரும்புச் சக்கையைக் காகித ஆலைகள் எடுத்துக் கொள்ளும்போது, அவற்றிற்குப் பதிலாக பாய்லர்கள் என்று சொல்லப்படும் கொதிகலன்களை அத்தகைய சர்க்கரை ஆலைகளுக்கு மாற்று ஏற்பாடாகச்





செய்து தர, செய்தித்தாள் மற்றும் காகித ஆலை நிறுவனம் முன்வந்திருக்கிறது. அதோடு நிலக்கரி குறித்தும் மத்திய அரசு நமக்கு உறுதி தந்திருக்கிறது. இந்தக் காகித ஆலைகள் இரண்டும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் உற்பத்தியைத் துவங்க இருக்கின்றன. எனவே அந்த நேரத்தில் இன்னும் அதிகமான நிலக்கரி கிடைக்கும் என்று நம்புகிறோம். மத்திய அரசும் தன்னுடைய உறுதிமொழியைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையில், இந்தக் காகித ஆலைகள் முழுவதுமாக வெற்றிகரமாக நடக்கும் என்று கருதுகிறோம்.

(முற்பகல் 9-50)

திரு. க. இராமமூர்த்தி : சர்க்கரை ஆலைகளிலிருந்து அரசு பெறவிருக்கின்ற கரும்புச் சக்கைகளுக்கு அரசு விலை நிர்ணயித்திருக்கிறதா? அப்படியானால் எவ்வளவு? அதற்கு மாற்று ஏற்பாடாக நிலக்கரி போன்றவற்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்கான இன்வெஸ்ட்மென்ட் (investment) எவ்வளவு? அதுபற்றிய தகவலை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லையென்றாலும், நான் ஏற்கெனவே சொன்ன 190 கோடி ரூபாய் என்பது இதையெல்லாம் உள்ளடக்கியதுதான். செய்தி மற்றும் காகித ஆலைக்கான மொத்த மதிப்பீடு 190 கோடி ரூபாய். சர்க்கரை ஆலைகளிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் கரும்புச் சக்கை, அவற்றிற்கு மாற்று ஏற்பாடாக பாய்லர் கொடுப்பது ஆகியவைகள் எல்லாம் உள்ளடக்கித்தான். அதன் மொத்த மதிப்பு 190 கோடி ரூபாய் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஜே. தாஸ் : கரும்புச் சக்கையை நம்பித்தான் இந்த இரண்டு ஆலைகளும் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். கரும்புச் சாகுபடி சில சமயங்களில் குறைந்துவிட்டால், அப்போது இந்த ஆலைகள் நின்றுவிடும் என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆகவே காகித ஆலைக்கான மாற்றுப் பொருளாக ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : ஆண்டுவாரியாகச் சொல்ல வேண்டுமென்றால், சர்க்கரை ஆண்டு 1981-82-ல் எதிர்பார்க்கப்படும் கரும்புச் சக்கையின் அளவு சுமார் 19 இலட்சம் டன், அதிலே காகிதத் தொழிலுக்காகக் கொடுக்கப்படும் அளவு 37 ஆயிரம்; 1982-83 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் கரும்புச் சக்கையின் அளவு 19 இலட்சத்து 23 ஆயிரம் டன், அதிலே காகிதத்

தொழிலுக்காக எதிர்பார்க்கப்படுவது 41 ஆயிரம் டன் ; 1983-84 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் கரும்புச் சக்கையின் அளவு 19 இலட்சத்து 55 ஆயிரம் டன், அதிலே காகித ஆலைக்காக எதிர்பார்க்கப்படுவது 45 ஆயிரம் டன் ; அதிலே 1984-85 ஆம் ஆண்டில் 18 இலட்சம் டன் எதிர்பார்க்கப்படுகிறது, அதிலே காகித ஆலைக்கு பயன்படுமென்று எதிர்பார்க்கப்படுவது 46 ஆயிரம் டன், அதிலே எரிபொருளாக 18 இலட்சம் டன், 1981, 1982, 1983, 1984 ஆகிய ஒவ்வொரு ஆண்டிற்கும் போனாலும், மீதி 16 ஆயிரம் டன் கரும்புச் சக்கை ஒவ்வொரு ஆண்டும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கரும்பு ஒழுங்காகப் பயிரிடப்படும், ஆலைகள் ஒழுங்காகச் செயல்படும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலே தயாரிக்கப்பட்டிருக்கிற விவரங்கள் இவை. நல்லதை எதிர்பார்க்கிறோம். நல்லதே நடக்கும்.

திரு. வி. வி. வி. ஆனந்தம் : புதிதாக ஏற்படுத்தப்படுகிற காகிதத் தொழிற்சாலைகளில் கொதிகலன்களை இயக்க சூரிய சக்தியை உபயோகப் படுத்தும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : இந்தத் தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில், இதைப் பற்றிய ஆய்வு இப்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

THIRU J. M. MIAKHAN : Are the Government aware that there is an alternative raw material for the paper industry, namely, hay which is available in plenty in Thanjavur district and other places? A large quantity of hay is not used as cattle feed and there is surplus hay available. Is the Hon. Minister aware that it could be used profitably for the manufacture of paper? As a matter of fact, for the information of the Hon. Minister, I may add that there is a plan, a blue-print for the manufacture of quality newsprint from surplus hay, as far as Thanjavur district is concerned.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : காகித அட்டைகள் தயாரிக்கின்ற, நான்கு இலட்சம், ஐந்து இலட்சம் டன் என்ற அளவிலே ஆரம்பிக்கப்படுகிற சிறு சிறு கார்ட்-போர்ட் தொழிற்சாலைகள்தான் இவற்றைப் பயன்படுத்து கின்றன. பெரிய அளவிலே 50 இலட்சம் டன் செய்தித் தாள், காகித ஆலை தயாரிக்கும் தொழிற்சாலைகளில் வைக்கோல் பயன்படுத்துகிற குறிப்பு, மதிப்பீடுகள் எதுவுமில்லை. கரும்புச் சக்கையோடு சேர்த்து மரத்தைப் பயன் படுத்த அதற்கான ஒப்பந்தத்தை வனத் துறையோடு போட்டிருக்கிறோம். மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லாததால், அதனுடைய முழு





விவரங்களை நான் சொல்ல முடியவில்லை. இருந்தாலும் மாற்று ஏற்பாடாக தேவையான அளவிற்குப் பெற வனத் துறையோடு 'அக்ரிமென்ட்' போடப் பட்டிருக்கிறது.

*Industries in Madurai and Ramanathapuram districts.*

*246 Q.—THIRU P. R. THOMAS (on behalf of Thiru D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether any large scale industries have been established in Madurai and Ramanathapuram districts after the present Government assumed office in 1978 ;

(*b*) if so, the details thereof; and

(c) if not, whether there is any proposal with the Government to start such industries there shortly ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : (அ), (இ) மற்றும் (உ) விவர அறிக்கை @ சபை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே; மத்திய அரசால் 10 உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஐந்து திட்டங்கள் நிறை வேற்றப்பட்டிருப்பதாகவும், ஐந்து திட்டங்கள் பரிசீலனையில் இருப்பதா கவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் 10 தொழிற்சாலைகளை நிறுவு வதற்காக மைய அரசு இசைவுக் கடிதங்களை அனுப்பியிருக்கிறது. அதிலே கூட 7 தொழிற்சாலைகள் பரிசீலனையில் இருப்பதாகவும், மூன்று தொழிற் சாலைகள் செயலாக்கப்பட இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே 10 தொழிற்சாலைகளும் இன்னும் துவங்கப்படவில்லை என்பது பொருள். இந்தக் காலதாமதத்திற்கான காரணங்களை நான் அறியலாமா? மத்திய அரசு உரிமங்களையும், இசைவுக் கடிதங்களையும் வழங்கியும் இதில் காலதாமதம் ஏற்படுவதால், இந்தப் பணிகளை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மதுரை, இராமநாதபுரம் மாவட் டங்களில் 19 தொழிற்சாலைகளில் சில உற்பத்தியைத் துவங்கியும், சில ஆரம்பிக்கப்பட்ட நிலையிலும், சில பரிசீலனை என்ற நிலையிலும், பொதுத் துறை, கூட்டுறவுத் துறை, தனியார் துறையிலேயும் இருக்கின்றன என்று

@ 81 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

விவர அறிக்கையிலே கொடுத்திருக்கிறேன். பரிசீலனையில் இருக்கின்றன என்று சொல்லும்போது, சில இடங்களில் நில ஆர்ஜித நிலையிலும், சில இடங்களில் கட்டிடம் கட்டும் நிலையிலும் இருக்கலாம். ஒரு குழந்தையை ஒரு தாய் பத்து மாதங்களுக்குப் பிறகுதான் பெற முடியும். இப்போதுள்ள நிலைமை 2 மாதம், 3 மாதம் என்பதைப் போன்று இருக்கின்ற நிலைமை இதுதான் காரணமே தவிர, தேக்கம் என்பதல்ல. 1978-79 ஆம் ஆண்டிலே தான் லைசன்ஸ் கிடைத்திருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் கிராஃபைட் கிடைக்கிறது என்று சொல்லுகிறார்கள். அங்கே அரசு அந்தத் தொழிலை ஆரம்பிக்கும் உத்தேசம் இருக்கிறதா ? அதைப் போலவே அங்கே முந்திரித் தொழிலையும் வளர்க்கலாம். குறிப்பாக தொழிற்சாலை களைத் துவக்கும்போது, அந்தந்த மாவட்டங்களிலே உள்ள மூலப்பொருள் களை அடிப்படையாகக் கொண்டு துவங்கினால் நல்லது. உப்பு கிடைக்கும் இடத்தில் இரசாயனத் தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம். நீலகிரியில் ஜெரேனியம் நிறைய இருக்கின்றது. அதைப் பயன்படுத்துகின்ற திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா ? அப்படி தொழிற்சாலைகளைத் துவங்குகிறபோது, ஒன்பது மாதம், எட்டு மாதம் என்று அவசரத்தில் பிறக்கிற குழந்தைகளாக இல்லாமல் பத்து மாதத்தில் முழுக் குழந்தைகளாகப் பிறக்க அரசு பிறருக்கு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** எந்தெந்த மாவட்டங்களில் என்னென்ன மூலப் பொருள்கள் கிடைக்கின்றனவோ அவற்றை ஆதாரமாகக் கொண்டு தொழிலைத் துவங்கும் திட்டங்களை அரசு பரிசீலித்துக் கொண் டிருக்கிறது. அந்த வகையிலே இராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங் களில், நான் ஏற்கெனவே சொன்ன தொழிற்சாலைகளுக்கான உரிமங்கள் பெறப்பட்டிருக்கின்றன. நிச்சயமாக குறைப் பிரசவமாக இல்லாமல், முழு மையான குழந்தைகளாக தொழிற்சாலைகள் வர அனைத்து உதவிகளையும் அரசு செய்யும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இந்தத் திட்டங்கள், 1978, 1979, 1980 ஆகிய வருடங்களில் மைய அரசால் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. சில திட்டங்கள் பரிசீலனையில் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். மைய அரசு அனுமதி அளிக்கிறபோதே, ஏறக்குறைய திட்டத்தைப்பற்றிப் பரிசீலனை செய்து, வையபிலிட்டியைத் தெரிந்து, வாய்ப்புகளை உணர்ந்து மாநில அரசு சிபாரிசு செய்து, அதை மைய அரசு நிபுணர்கள் பரிசீலனை செய்த



பிறகுதான், உரிமங்கள் வழங்கப்படுகின்றன. அதற்குப் பிறகு மூன்று ஆண்டுகளாகத் தேக்க நிலையில் இருந்தால், 13 ஆம் மாதத்தில் பெற்றெடுக்கும் கர்ப்பிணிப் பெண் மாதிரி ஆகிவிடும். அப்படி ஆகக்கூடாது . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்றைக்கு எல்லாமே கர்ப்ப விஷய மாக இருக்கின்றதே !

**திரு. ம. சங்கரலிங்கம் :** அதைப்பற்றிப் பரிசீலனை செய்து உடனே தொழில் பிரசவம் ஆக அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** லைசென்ஸ் பெறுகிறபோது ஓரளவிற்கு முழுமையான புராஜெக்ட் என்று கொடுப்பதில்லை. ஏதாவது தொழிலைச் சொல்லி ' அப்ராக்சிமேட் எஸ்டிமேட் ' என்பதைச் சொல்லி, சில நேரங்களில் உரிமங்களைப் பெறுகிறோம். தமிழ்நாடு எலெக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷன் 7 உரிமங்களைப் பெற்றிருக்கிறது. பிறகு அதைப் பொதுத் துறையிலே ஆரம்பிக்கலாமா, கூட்டுத் துறையிலே ஆரம்பிக்கலாமா என்பது பரிசீலனையில் இருக்கிறது. உரிமங்கள் வேறு யாருக்கும் போகக் கூடாது என்பதாலே, முக்கியமான தொழில்களுக்கான உரிமங்களை சம்பந்தப்பட்ட இலாக்கா தொடர்பு கொண்டு பெற்றுவிடுகின்றது. அப்படிப் பெற்ற பிறகு பொதுத் துறையில் ஆரம்பிக்கலாமா, கூட்டுத் துறையில் ஆரம்பிக்கலாமா என்பது பரிசீலனையில் இருக்கிறது. இதுதான் பரிசீலனை என்பதற்குப் பொருள். 13 மாதப் பிரச்சினை அல்ல. 9 மாதம் 10 நாள்—280 நாள் பிரச்சினைதான்.

## *Cement.*

* 247 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether permit-holders have not been supplied with cement for several months, since enough supply of cement has not been made to the stockists ;

(*b*) whether the permit-issuing authorities are not made aware of the stock position while issuing permits ; and

(c) whether effective steps will be taken by the Government for the early supply of cement to permit-holders?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : (அ) மைய அரசு மாநில அரசுகளுக்கு சிமெண்ட்டை ஒவ்வொரு காலாண்டும் ஒதுக்கீடு செய்து வருகிறது. ஆனால் அந்த ஒதுக்கீடு தேவைக்குப் போதுமானதாக இல்லை. ஒதுக்கப்பட்ட அளவைக் கொண்டு அரசுத் துறை நிறுவனங்களுக்கும் தன்னிறைவுத் திட்டங்களுக்கும் முன்னுரிமை கொடுத்து மீதியுள்ளது பொது விநியோகத்திற்கு ஸ்டாக்கிஸ்டுகளுக்கு ஒதுக்கப்படுகிறது.

(இ) பெர்மிட் வழங்கும் அலுவலர்கள் பெர்மிட் வழங்கும்பொழுது விநியோகஸ்தர்களிடம் சிமெண்ட் இருப்பு நிலவரம் தெரிந்துதான் பெர்மிட் வழங்குகிறார்கள்.

(உ) 1-3-1982 முதல் சிமெண்ட் மீதான கட்டுப்பாட்டை மைய அரசு தளர்த்தியுள்ளது. இதன்மூலம் யாவர்க்கும் சிமெண்ட் விரைவில் கிடைக்க ஏதுவாக இருக்கும்.

இந்தக் கேள்வியே 1—3—1982-க்கு முன்னாலே கேட்கப்பட்ட கேள்வி. பதிலும் அதற்கு முன்னாலே வந்திருக்க வேண்டிய பதில். காலம் தாழ்ந்து வந்ததால் பதில் சொல்லுகிறேன். இருந்தாலும்கூட 1—3—1982-க்குப் பின்னாலே பொது முறையில் வழங்கலாம் என்ற நிலை இருப்பதால், இந்தப் பிரச்சினைகள் இப்போதில்லை.

(முற்பகல் 10.00)

திரு. பா. ரா. தாமஸ் : பொதுவாக அரசுத் துறையிலே நடைமுறையில் இருக்கின்ற திட்டங்களுக்கும், அதே சமயத்தில் 20 அம்சத் திட்டங்களுக்கும் மற்ற திட்டங்களுக்கும் இந்த சிமெண்ட் ஒதுக்கப்படுகிறது. அரசு சொல்கின்ற அந்தக் கட்டுப்பாட்டு விலையிலே கொடுத்து வருகின்றார்கள். அதே அரசாணையிலே இனிமேல் 'நோட்டிபை' செய்வதுபற்றி வரவில்லை. சிமெண்ட் கண்ட்ரோலரால் நோட்டிபிகேஷன் செய்யப்பட்ட செக்ஷன்ஸ் யார் யார் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இதிலே 20 அம்சத் திட்டத்திற்கு என்று இருக்கிறது. தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களும் இந்த 20 அம்சத் திட்டத்திலே வருகிறது. ஆனால் உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் வரவில்லை. இவைகளுக்கு மானியம் கொடுக்கிறார்கள். அரசுத் துறைகளுக்கு 60 சதவிகிதம் என்றும் தனியார்களுக்கு 40 சதவிகிதம் என்றும் கொடுக்கிறார்கள். சிமெண்ட் ரூ. 35 என்ற விலை விகிதத்திலே அவர்களுக்குக் கிடைக்காவிட்டால், அவர்களுக்குப் பெருத்த இழப்பு ஏற்படும். அதனால் அவர்களுக்கு நிதிநிலையில் பற்றாக்குறை ஏற்பட்டுவிடும். இதைப் போக்குவதற்கு மான்யம் பெறுகின்ற பள்ளிகள், கல்வி நிறுவனங்களுக்கும் கொடுக்கப்படும் என்ற அரசாணையை அரசு விரைவாக வெளியிடுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : இப்போது புதிதாக மைய அரசு அறிவித்திருக்கின்ற வழி காட்டுதல் அல்லது இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரகாரம், அரசாங்கத்தினுடைய பொதுத் துறைகள், பல்வேறு துறைகளுக்கு, சிறு தொழில்கள் இவைகளுக்கு லெவி சிமெண்ட்டிலிருந்து கொடுக்கப்பட வேண்டும் என்று "இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்" இருக்கிறது. மற்றும் 20 அம்சத் திட்டத்திற்கும் கொடுக்க வேண்டுமென்று "இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்" கொடுத்திருக்கிறார்கள். அது தவிர, பொதுமக்கள் உபயோகம் என்ற அளவிலே 800 சதுர அடி பரப்பளவில் கட்டுகின்ற வீடுகளுக்கு லெவி சிமெண்ட் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது நமக்கு இருக்கின்ற பிரச்சினை நமக்கு அநேகமாக வழங்கப்படுகின்ற சிமெண்ட் அளவு இந்தக் கால் ஆண்டிற்கு 1,40,000 டன் என்றுதான் வந்திருக்கிறது. இதில் நாம் கணக்குப் பார்க்கின்றபோது, அரசுத் துறைகள் எல்லாவற்றிலும் இருக்கின்ற அதிகாரிகள், மற்றும் சீப் இன்ஜினியர்கள் இவர்கள் எல்லாம் அடங்கிய ஒரு கூட்டத்தை நடத்தி, அவர்களுடைய தேவை என்ன என்று அறிந்தேன். சுமார் 4 லட்சம், 5 லட்சம் டன்கள் அவர்களுக்குத் தேவைப்படுவதாக அவர்கள் சொல்கின்றார்கள். கால் ஆண்டுக்கு நமக்கு ஒதுக்கப்படுவது 1,40,000 டன்கள். இந்த 40 ஆயிரம் டன் சிமெண்ட்டு 20 அம்சத் திட்டத்தின்கீழ் வருகின்றவைகளுக்கும், சிறு தொழில்களுக்கும் மற்றும் சிறு வீடுகள் கட்டுபவர்களுக்கும் மீதம் இருக்கின்ற ஒரு லட்சம் டன்னிலே அரசுத் துறை, கார்ப்பரேஷன் போன்ற அரசாங்கம் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு ஒதுக்கப்படுவதாக இருக்கிறது. இதிலே பள்ளிகள், கல்லூரிகள் என்று வருகின்றபோது, அரசாங்கமே நடத்துகின்ற பள்ளிகளுக்கு, கல்லூரிகளுக்கு பொதுப் பணித் துறை மூலமாகக் கொடுக்கிறது. இப்போது இருக்கின்ற பிரச்சினை இந்த 'எய்டட் ஸ்கூல்ஸ்', 'ரெகக்னைஸ்ட் ஸ்கூல்ஸ்'; அதுபோல பள்ளி வாசல்கள், சர்ச்சுகள், இந்து கோயில்கள் இவைகள் கட்டுவதற்கும், அது போன்ற நிறுவனங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். இது எல்லாம் ரூரல் டெவலப்மென்டிலே வருகிறது. நமக்கு ஒதுக்கப்படுகின்ற சிமெண்டிலேதான், இந்த ஒரு லட்சம் டன்னிலே தான் அதைக் கொடுக்கவேண்டும். அப்படி கொடுக்கின்றபோது, அரசாங்கப் பணி தடைப்படுகிறது. இதைக் கருத்திலே கொண்டு அரசாங்கத் துறைகளிலே மிக முக்கியமான பணிகளுக்கு சிமெண்ட் ஒதுக்கப்படுகிறது. அந்த முறையைத் தான் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே Foreign Exchange பணத்தை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலே டெபாசிட் செய்து, சிமெண்ட் உற்பத்தி செய்யப்படுகின்ற அந்தத் தொழிற்சாலைகளுக்கு நேரிலே

சென்று பெர்மிட் இல்லாமலே அந்தத் தொழிற்சாலைகளிலிருந்து சிமெண்ட் வாங்குகின்ற ஒரு திட்டம் நடைமுறையில் இருந்தது. அது நீடிக்கிறதா அல்லது கைவிடப்பட்டு விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** வெளிநாட்டிலேயிருந்து வருகின்ற அந்நியச் செலாவணி பணத்தை மட்டும் கொடுத்து லெவியில்லாமல் பொதுவாக வாங்குகின்ற அந்த முறை இருக்கிறதா என்று கேட்டார்கள். அது மட்டுமல்ல, இப்போது யார் வேண்டுமானாலும் பொதுவாக வாங்கிக் கொள்ளலாம் என்று மைய அரசு ஒரு உத்தரவிட்டுள்ளது. தொழிற்சாலையினுடைய உற்பத்தி அளவிலே மூன்றில் இரண்டு பங்கை, ஆலையினுடைய கெபாசிட்டி எவ்வளவோ, அந்த கெபாசிட்டியிலே மூன்றில் இரண்டு பங்கை லெவிக்குக் கொடுக்க வேண்டும். ஒரு பங்கை வெளியிலே கொடுக்கலாம் என்ற முறை இருக்கிறது. ஆனால் பல்வேறு காரணங்களால், மின்சாரம், நிலக்கரிப் பற்றாக்குறை போன்ற காரணங்களால், 70 சதம் 80 சதம் என்ற அளவிலேதான் அந்த ஆலைகள் உற்பத்தி செய்கின்ற முறையில் இயங்குகின்றன. அந்த அளவிலேதான் இரண்டு பங்கு லெவிக்கும் ஒரு பங்கு வெளியிலும் கொடுக்கப்படுகிறது. மொத்தமாக வெளியிலேயே வாங்கிக்கொள்ளலாம். யார் வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம். சிமெண்ட் கண்ட்ரோலரிடமிருந்து, தமிழ் நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் ஏஜெண்டாக இருந்து வெளிநாட்டிலேயிருந்து வருகின்ற சிமெண்டை இறக்குமதி செய்கின்றோம். அப்படி இறக்குமதி செய்து பெறுகின்ற சிமெண்ட்டிற்கு ரூ. 10, ரூ. 15 கமிஷனாக, நாம் பெற்ற விலையைவிட அதிகமாகப் பெற்று, சிமெண்ட் கண்ட்ரோலருக்குக் கொடுக்கின்றபோது, அது மத்திய அரசுக்குப் போய்ச் சேருகின்றது. அதற்குப் பதிலாக நம்முடைய தமிழ் நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் நம் துறைகளுக்கு எவ்வளவு மொத்தமாகத் தேவை என்று கணக்கிட்டு இறக்குமதி செய்தால், இன்னும் விலை குறைவாக இருக்கும். வெளிநாட்டிலேயிருந்து சிமெண்ட் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதற்கும் மைய அரசோடு தொடர்பு கொண்டு அதற்கான அனுமதியைப் பெற முயற்சி செய்துகொண்டிருக்கிறோம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** நமக்கு ஒரு கால் ஆண்டுக்கு 4 லட்சம் அல்லது 5 லட்சம் டன்தான் தேவைப்படுகிறது. ஆனால் மத்திய அரசு லெவி எப்படி ஒதுக்கப்படுகிறது? 1,40,000 டன்கள்தான் ஒதுக்கப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆக 4½ லட்சம் அல்லது 5 லட்சம் டன் என்று தேவை இருக்கும்போது, ஏறத்தாழ 1½ லட்சம் டன்தான், அதற்குள்ளாகத்தான் கிடைக்கின்றது. இதில் எத்தனை சதவிகிதம் அரசுத் துறைகளுக்கு வைத்துக்கொண்டு, எத்தனை சதவிகிதம்





800 சதுர அடி வீடு கட்டுகின்றவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது, இருபது அம்சத் திட்டத்தின் கீழ் எத்தனை சதவிகிதம் கொடுக்கப்படுகிறது, எந்தெந்த விகிதாசாரப்படி கொடுக்கப்படுகிறது என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றனவா? அதைப் பற்றி அரசு வெளியிடுமா?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இரண்டு நாட்களுக்கு முன்னாலே நடந்த, அரசுத் துறைகள், கார்ப்பரேஷன்கள் போன்ற நிறுவனங்களின் அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் அவரவர்கள் தேவைகள்பற்றிக் கேட்கப்பட்டது. நமக்கு 1,40,000 டன்கள்தான் அவர்கள் கொடுக்கிறார்கள். அதிகாரிகள் கேட்பது 4 லட்சம் டன்கள். ஒவ்வொருவரும் ஒரு லட்சம், இரண்டு லட்சம் டன் என்று கேட்கின்றார்கள். தொழில் துறையில் உள்ள தொழில் துறை இயக்குநர் அவர்கள்தான் 'அலாட்மெண்ட்' கொடுக்கிறார்கள். ஒவ்வொரு துறையிலும் ஒரு ப்ராஜெக்ட்டில் இந்த மூன்று மாத காலத்தில் எவ்வளவு இம்பிளிமெண்ட் ஆகிறது, அதற்கு எவ்வளவு தேவை என்பது பற்றி கணக்கு பெற்று அந்த அளவுக்குக் கொடுக்கலாம். ஆனால் கேட்கின்ற அளவுக்குக் கொடுக்க முடியாது. எல்லாத் துறைகளும் கேட்கின்ற அளவுகளைப் பொறுத்து, நிலைமைகளைப் பொறுத்து, முடிவு எடுக்கப்படுகிறது. குறைந்தது 30 ஆயிரம் டன்கள் 20 அம்சத் திட்டத்திற்கு, சிறு வீடுகள் கட்ட என்று கொடுக்கப்படுகிறது. பல்வேறு துறை அதிகாரிகள் நெருக்குவதன் காரணமாக அப்படி நெருக்கிக் கொடுக்கிறோம். குறிப்பாக தன்னிறைவுத் திட்டத்திற்கும் கொடுக்க வேண்டும். இது ஒரு முக்கியமான, அத்தியாவசியமான திட்டம். இப்படி அரசுத் துறைகளுக்கு அதிகமான அளவுக்குத் தேவைப்படுவதால், இதிலிருந்து கொடுத்து அரசுத் துறைகளில் செய்கின்ற வேலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து கொடுக்கிறார்கள். அதற்கு ஏற்ப அரசு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

**திரு. பா. ரா. தாமஸ் :** ஏற்கெனவே சிமெண்ட் கட்டுப்பாடு வந்த பிறகு, அரசு மானியம் பெற்று நடைபெறுகின்ற தனியார் துறையினர், கல்லூரிகள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசு அனுமதி பெற்று, பெர்மிட் பெற்று கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்த அளவிலே சொல்லிக்கொள்கிறேன். சில இடங்களில் அமைச்சர்களே அடிக்கல் நாட்டியிருக்கின்றார்கள். அப்படி அமைச்சர்கள் அடிக்கல் நாட்டிய கட்டிடங்கள் இருக்கின்றன. அவைகளையும் முடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே தனியார் துறைகளுக்கும் விஸ்தரித்தால் நன்றாக இருக்கும். ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட கட்டிடத்திற்காவது ஒரு அளவு

ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். குறிப்பிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலம் வழங்கக்கூடிய அளவில் செய்ய வேண்டும். அதைப்பற்றிப் பரிசீலித்து ஆணை வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.10)

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு மேலவைத் தலைவர வர்களே, சில நேரங்களில் நல்ல காரியம் செய்யக்கூட பயப்பட வேண்டி யிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், தனியார்கள் கட்டுகிற மருத்துவ மனைகள், கல்லூரிகள்—எய்டட் காலேஜஸ்—இவைகளுக் கெல்லாம்கூட, உறுப்பினர் அவர்கள் சொல்லதுபோல் ஏதாவது முன்னுரிமை கொடுத்து, அதன் அடிப்படையில் ஒதுக்கீடு செய்தால், அந்த ஒதுக்கீட்டின் அளவைக் கொண்டு வந்து, 'பார்த்தீர்களா, அரசுத் துறைக்குக் கொடுக்காமல், தனியாருக்குக் கொடுத்திருக்கிறார்கள், இதிலே என்ன நடந்ததோ' என்ற வாசகம் வரும் வாய்ப்பு நிச்சயமாக இருக்கிறது. இதுபோன்ற குறைபாடுகள் வரக்கூடாதென்பதால்தான், அரசுத் துறையிலே கட்டப்படுகிறவற்றுக்கு மட்டும் முன்னுரிமை கொடுப்பதென்று அரசு முடிவெடுத்துள்ளது.

**திரு. எஸ். ஆர். இராதா :** தலைவரவர்களே, எந்தவிதமான அனுமதியும் இல்லாமல் பல பேர் கட்டிடங்கள் கட்டுகிறார்கள். அவர்களுக்கு எப்படி சிமெண்ட் கிடைக்கிறதென்பது தெரியவில்லை. அப்படி பலர் கட்டும் கட்டிடங் களுக்கு சிமெண்ட் எப்படி கிடைக்கிறதென்பதை அறிய அரசு நர்வடிக்கை எடுக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் மிகவும் நல்லவர். அவருக்கு இதுபோன்ற விவரங்கள் அதிகமாகத் தெரியாது. கட்டிடம் கட்டுவது போன்றவற்றில் அவருக்கு சம்பந்தமில்லை. தனியார்கள் இப்போது எவ்வளவு வேண்டு மானாலும் ஓப்பன் மார்க்கெட்டில் வாங்கிக் கட்டிக்கொள்ளலாம். அப்படி வாங்கிக் கட்டுகிறார்கள். அதை விசாரிக்க வேண்டியதில்லை. பணம் கொடுக் கிறார்கள், வாங்குகிறார்கள். அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதிகக் கவனம் செலுத்த வேண்டியதில்லை.



## ஆதி திராவிடர்-பழங்குடி மக்கள் துறை பள்ளிகள்.

*** 248 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆதி திராவிடர்-பழங்குடி மக்கள் துறை நடத்தும் பள்ளிகளை மேற்பார்வையிடவும், ஆய்வு செய்யவும், மாவட்டக் கல்வி அதிகாரி (District Educational Officer) தரத்தில் பதவிகளை ஏற்படுத்தும் கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) மற்றும் (இ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைப் பள்ளிகளை மேற்பார்வையிடவும், ஆய்வு செய்யவும் ஒரு மாவட்டக் கல்வி அதிகாரி பதவி ஏற்படுத்த அரசு பரிசீலனை செய்தது. ஆயின் இதன் முடிவாக மாவட்டக் கல்வி அதிகாரி பதவி தேவை இல்லை என்றும் மூன்று பள்ளித்துறை ஆய்வாளர் பதவிகள் ஏற்படுத்தினால் போதுமானது என்றும் முடிவு செய்து, அதற்கான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மாவட்டக் கல்வி அதிகாரி பதவி ஏற்படுத்தும் வேறு செயற்குறிப்பேதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, பள்ளித் துணை ஆய்வாளர் பதவிகளை ஏற்படுத்தியிருப்பதாக அமைச்சரவர்கள் சொன் னார்கள். துணை ஆய்வாளர்கள் பதவி என்பது தொடக்கப் பள்ளிகளில் பணி புரிகின்ற ஆசிரியர்களின் பணிகளை மேற்பார்வை செய்ய ஏற்படுத்தப்பட்ட பதவியாகும். நான் கேட்டது மாவட்டக் கல்வி அதிகாரி அந்தஸ்தில் ஒரு கல்வி அதிகாரி பதவியை ஏற்படுத்த வேண்டுமென்பதுதான். அதுதான் கோரிக்கையாக வந்திருக்கிறது. தென் ஆற்காடு மாவட்டத்திற்கு என்று கல்வி அதிகாரி பதவி வேண்டுமென்று கோரவில்லை. இந்த மாநிலத்தில் இருக்கின்ற ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத் துறையின் கீழுள்ள உயர் நிலைப் பள்ளிகளையும், மேல் நிலைப் பள்ளிகளையும் மேற்பார்வையிடவும், அங்கே நடைபெறும் கல்விப் பணிகளை மேற்பார்வையிடவும் மாவட்டக் கல்வி அதிகாரி அந்தஸ்திலே, அந்தப் பதவி நிலையிலே, ஒரு பதவியை மாநில அளவில் ஏற்படுத்த வேண்டுமென்பதுதான் கோரிக்கை. ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தக் கருத்து குறித்து, அதாவது மாநில அளவில் ஒரு கல்வி அதிகாரி பதவி ஏற்படுத்துவது குறித்து மறுபரிசீலனை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** தலைவரவர்களே, கல்வித் துறை நிர்ணயித்துள்ள அளவுகோலின்படி ஒரு மாவட்டக் கல்வி அதிகாரி பதவி ஏற்படுத்த வேண்டுமானால், அவர் கண்காணிப்பின்கீழ் குறைந்தது 45 உயர் நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகள் இருக்க வேண்டும். ஆனால் இந்தத் துறையின்கீழ் மொத்தமாக 30 உயர் நிலை, மேல் நிலைப் பள்ளிகள்தான் உள்ளன. இதன் அடிப்படையிலே ஆராய்ந்துதான் மாவட்டக் கல்வி அதிகாரி பதவியை ஏற்படுத்த முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது போல், தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தனியாகக் கேட்டு எதுவும் கோரிக்கை வரவில்லை. பரீட்சார்த்தமாக இதுபோன்ற பள்ளித் துணை ஆய்வாளர்கள் பதவிகளை முன்னோடித் திட்டமாக தென் ஆற்காடு மாவட்டத்தில் ஏற்படுத்தி, அதைச் செயல்படுத்தி, அது நடைமுறையிலே வெற்றிகரமாக வருகிறதா என்பதை ஆராய்ந்து, வருங்காலத்தில் தமிழகம் முழுவதற்கும் அதை அறிமுகப்படுத்த வேண்டுமென்ற உணர்வோடுதான் இதை அரசு கொண்டு வந்திருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, குறைந்தபட்சமாக இத்தனை பள்ளிக்கூடங்கள் இருக்க வேண்டுமென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். கல்வித் துறையிலே மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இருக்கின்றன, ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள் இருக்கின்றன. இவைகள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேதான் இருக்கின்றன. ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளை மேற்பார்வையிட ஒரு கல்வி அதிகாரி பதவியும், மெட்ரிகுலேஷன் பள்ளிகளை மேற்பார்வையிட ஒரு கல்வி அதிகாரி பதவியும் கல்வித் துறையில் ஏற்படுத்தப் பட்டிருக்கிறதென்பதையும், உள்ளாட்சித் துறைகளில் உள்ள நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளை மேற்பார்வையிட சென்னை, கோவை போன்ற இடங்களில் தனி கல்வி அதிகாரி பதவிகள் ஏற்படுத்தப்பட்டு, அந்தந்தத் துறையிலே உள்ள ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு தரப்பட்டு வருகிறதென்பதையும் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இந்த விவரங்களையெல்லாம் சேகரித்து, நலத் துறையிலும் இத்தகைய பதவியை ஏற்படுத்துவது குறித்து அமைச்சரவர்கள் பரிசீலனை செய்வார்களா? இப்போது ஆதி திராவிடர் நலத் துறையில் டெபுடி டைரக்டர் பதவிக்கு கல்வித் துறையிலிருந்து ஒருவரை Deputation-இல் அனுப்பும் முறை இருக்கிறது. அந்தத் திட்டத்தை மாற்றி, நலத் துறையிலே இருக்கின்ற தலைமை ஆசிரியர்களிடமிருந்து, பணி மூப்பு அடிப்படையிலே, ஒருவருக்குத் துணை இயக்குநர் பதவி உயர்வு கொடுப்பதுபற்றி அமைச்சரவர்கள் பரிசீலனை செய்வார்களா?





**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** தலைவரவர்களே, இதுபோன்ற விஷயங்கள் குறித்து மாண்புமிகு உறுப்பினரவர்கள்கூட பல முறை என்னிடத்தில் நேரடியாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தற்போது உருவாகியுள்ள துணை ஆய்வாளர் பதவிகளையும், இந்தத் துறையில் உள்ள ஆசிரியர்களைக் கொண்டு நிரப்ப வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். தற்போது அது குறித்த கோப்பு கல்வித் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. கல்வித் துறை செயலரோடு கலந்து பேசி, அது குறித்து விரைவான ஆணை பிறப்பிக்க ஆவன செய்கிறேன். இது தவிர மாண்புமிகு உறுப்பினரவர்கள் மேலும் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அது குறித்து அரசு ஆவன செய்யும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, ஆதி திராவிடர் நலத் துறையிலே நடைபெறுகின்ற கல்வி நிலையங்களை கல்வித் துறையே ஏற்றுக்கொள்ளக்கூடுமென்ற கருத்தை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் தெரிவித்து, அதைப்பற்றி முடிவெடுக்கவில்லை என்று ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சரவர்கள் இதே அவையில் சொல்லியிருக்கிறார்கள். அது குறித்து முடிவெடுக்க அவகாசம் இருக்கிறதா அல்லது அரசு முடிவெடுக்க இருக்கிறதா என்ற செய்தியை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, வருவாய்த் துறையிடம் அது ஒப்படைக்கப்பட்டிருப்பதால், அந்த அதிகாரிகள் கல்வித் துறைப் பணிகளைச் செய்ய முடியாததால், தனியாக கல்வித் துறை அதிகாரிகளைக் கொண்டு ஆதி திராவிட நலத் துறைப் பள்ளிகளை நிர்வகிக்கத்தக்க நடவடிக்கையை அரசு எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** தலைவரவர்களே, கல்வித் துறையோடு ஆதி திராவிட நலத் துறை மூலமாக இயங்குகின்ற பள்ளிகளை இணைக்க வேண்டுமென்ற முடிவு எடுக்கவில்லை. அதைக் கல்வித் துறையோடு இணைத்தால், அந்தப் பள்ளிகளின் 'ஸ்டேண்டர்ட்' நல்ல முறையில் இருக்குமென்ற கருத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இருக்குமென்று கருதுகிறேன். அந்த அடிப்படையிலே இந்தத் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளை கல்வித் துறையில் கொண்டுவரலாமா என்பதை அரசு பரிசீலித்து வருகிறது. இது நீண்டகாலமாக இருந்து வருகிறது. அதிலே முடிவு எதுவும் எடுக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்திருப்பதுபோல, வருவாய்த் துறை மூலமாக இருக்கும் அதிகாரிகளைக் கொண்டு இந்தக் கண்காணிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதிலே குறைபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறைபாடுகளைத் தெரிவிப்பார்களானால், அந்தக் குறைகளைக் களைவதற்கு எந்த வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அதை அரசு எடுக்கும்.

[1982 ஏப்ரல் 3

## இடியினால் இறந்த மாணவர்கள்

@ 227 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 1981 ஏப்ரலில் கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரத்தில் உள்ள விவேகானந்தா கல்லூரி வளைவில் இடி விழுந்தது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதில் ( )இறந்து போனவர்கள் ( ) படுகாயம் அடைந்து இனிமேல் வேலைபார்க்க முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(உ) இவ்விபத்தில் இறந்துபோன மாணவர்களின் பெற்றோர்களிடமிருந்து அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளனவா ?

(எ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(இ) இருவர் இறந்தனர். அவர்களில் பஷீர் என்பவன் மாணவன். மற்றொருவர் ஒலிபெருக்கி இயக்குநர் திரு. வரதன். விபத்தில் பாதிக்கப்பட்ட ஒன்பது மாணவர்கள் உடனடி சிகிச்சை அளிக்கப்பட்டு, அவர்கள் இப்போது நல்ல நிலையில் கல்லூரிக்கு வருகின்றனர்.

(உ) மற்றும் (எ) இறந்த மாணவர் பஷீரின் தந்தையிடமிருந்து நிதியுதவி வேண்டி மனு ஒன்று வரப்பெற்று அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10-20)

திரு. ம. சங்கரலிங்கம் : கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரத்தில் உள்ள விவேகானந்தா கல்லூரியில் விழா ஒன்று நடந்துகொண்டிருந்தபோது, இடி விழுந்ததால் பசீர் என்ற பெயருடைய மாணவர் இறந்தார். அந்த மாணவருடைய பெற்றோரிடமிருந்து உதவி கோரி கோரிக்கை ஏதும் அரசுக்கு வந்திருக்கிறதா ? அந்த மாணவர் பி.ஏ. படித்துக் கொண்டிருந்தார். அவர் படிப்பை முடித்துவிட்டு, எங்காவது பணியாற்றி குடும்பத்தைக் காப்பாற்றுவார் என்று அவருடைய குடும்பத்தார் நம்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர் இடிவிழுந்ததால் பலியாகிவிட்டார். அவருடைய குடும்பத்திற்கு அரசு என்ன உதவி செய்திருக்கிறது ?

அதுபோல் வரதன் என்பவர் அன்றைக்கு பலியாகியிருக்கிறார். அவர் அங்கு விழா நடைபெற்றதை முன்னிட்டு ஒலிபெருக்கி வசதி ஏற்படுத்திக் கொடுக்க வந்தார். அவருடைய குடும்பத்திற்கு உதவ அரசு என்ன ஏற்பாடு

@ 30—3—1982 ஆம் தேதிய வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.



1982 ஏப்ரல் 3]

செய்திருக்கிறது? அவருடைய குடும்பத்தை வாழ வைக்க, அவருடைய குடும்பத்திலுள்ள ஒருவருக்கு வேலை கொடுக்கிற கருத்தாவது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அந்த மாணவனுடைய தகப்பனார் நிதி உதவி வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதுபற்றிய தகவலை அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டிருக்கிறோம். அரசு உதவி அளிக்கிறபோது, அந்தக் குடும்பத்தில் வருவாய் தேடுபவர் யாரும் இல்லாதிருந்தால்தான் உதவி கொடுத்து வருகிறோம். சில இடங்களில் இந்த வகையில் சிறப்பாகச் செய்துகொண்டு வருகிறோம். ஆகவே இதுகுறித்தும் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாணவனின் பெற்றோரிடமிருந்து முறையீடு வந்திருப்பதாகவும், அதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் பரிசீலித்துக் கொண்டிருப்பதாகவும் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குடும்பத்தின் நிலைக்கு ஏற்ப அரசு உதவி அளிக்காவிட்டாலும் கூட, அந்தக் குடும்பத்திலுள்ள ஒருவருக்கு வேலை கொடுத்து அந்தவகையில் அக்குடும்பம் காப்பாற்றப்படுமா ? அதுபோல் வரதன் அவர்களுடைய குடும்பத்திலுள்ள அவருடைய மனைவி, பெற்றோர் ஆகியோரிடமிருந்து இது போல் கோரிக்கை வந்தாலும், அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : கோரிக்கை வந்தாலும் வராவிட்டாலும் பரிசீலிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் மனு வந்தால், உடனே அதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. தன்னிலை விளக்கம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆ. நல்லசிவன், திரு. ப. மாணிக்கம் ஆகியோர் அவையில் இல்லாதது குறித்து அவர்களைப்பற்றி மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் குறிப்பிட்டுப் பேசியது குறித்து.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவரவர்களே, 27—3—1982 அன்று நான் சபையில் இல்லாதபோது, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் என்னைப்பற்றிச் சில விஷயங்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்குத் தன்னிலை விளக்கம் கொடுக்கும் வகையில் இதை இங்கு கொண்டு வருகிறேன்.

அவை நடவடிக்கையில் உறுப்பினர்கள் கலந்துகொண்டு கருத்துக்களைத் தெரிவித்த பின்பு, தங்கள் தங்கள் அலுவல்களை கவனிக்க வெளி இடங்களுக்குச் சென்று வருவது என்பது சகஜமாக நடந்து வருகிறது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. 27—3—1982 அன்று நான் அந்த வகையில் அவையில் பேசினேன். பிறகு கன்னியாகுமரியில் நடைபெற்ற கலவரம் பற்றி அறிய கட்சியின் மாநிலச் செயலாளர் என்ற முறையில் நானும், சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் திரு. சங்கரையா அவர்களும் மத்தியானமே நாகர்கோவிலுக்குப் புறப்பட்டுப் போனோம். நிலைமை இவ்வாறிருக்க, இப்படிப்பட்ட சூழ்நிலையில் நான் அவையில் இல்லாததைக் குறிப்பிட்டு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம் அவர்கள் கீழ்க்கண்டவாறு பேசியுள்ளார்கள் : " இப்போது இரண்டு கம்யூனிஸ்ட் கட்சி தோழர்களும் இருக்கக் கூடாதா? கேட்டால் கமிட்டி மீட்டிங் என்கிறார்கள். எந்தக் கமிட்டி இதைவிட முக்கியம்? ஆண்டுக்கு ஒரு முறை பாலிசி ஸ்டேட்மென்ட் வருகிறது. அடுத்த ஆண்டு லேபர் வருகிறதோ, ஹவுசிங் வருகிறதோ? அன்று தொழில் கொள்கைக் குறிப்பில் பேசவில்லை. இன்றையதினம் வந்து பேசிவிட்டு அமைச்சர் என்ன சொல்கிறார் என்று கூட கேட்காமல் * * * என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி என்னைக் கேவலப்படுத்திப் பேசியிருக்கிறார்கள். அப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் இராமமூர்த்தி, வீராசாமி போன்றோர் தலையிட்டு கட்சியின் மாநிலச் செயலாளராக இருப்பதால், அப்படிப் பேசி விட்டு வேறு வேலைக்குப் போயிருப்பதால் அமைச்சர் பதில் கூறலாம் என்று எடுத்துச் சொல்லியும், அமைச்சர் பின்வருமாறு கூறியிருக்கிறார் :

" என்னுடைய கருத்தைச் சொல்ல வேண்டுமென்றால், அவர்கள் அவையில் இருந்திருக்க வேண்டும். நேற்று முன்தினமும் அவர்கள் அவைக்கு வந்திருக்க வேண்டும். ஆக, அவர்கள் கடமையிலிருந்து தவறியிருக்கிறார்கள் " என்று பேசியிருக்கிறார்கள். பொதுமக்களிடத்தில் தவறான எண்ணத்தை என்பேரில் உண்டாக்கும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ்வாறு பேசியிருக்கிறார்கள். இவ்விதமாக விளம்பரத்திற்காகப் பேசியிருப்பதாகவும், கடமையிலிருந்து தவறி விட்டதாகவும் அவர் கூறியிருப்பது என் உரிமையை மீறிய செயல். இது உரிமைப் பிரச்சினை ஆகிறது. இருந்தாலும் மாண்புமிகு தலைவர் அவர்களின் ஆலோசனையின்பேரில் தன்னிலை விளக்கமாக இதைக் கொண்டு வந்திருக்கிறேன். இதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





* **திரு. ப. மாணிக்கம் :** தலைவரவர்களே, நான் 19 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி முடிய சென்னையிலே இல்லை. அதுமட்டுமல்லாமல், நான் இது பற்றி அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலும் தெரிவித்திருந்தேன். இந்தக் கூட்டத் தொடரில் என்னால் கலந்துகொள்ள இயலாது என்று தெரிவித்திருந்தேன். நான் கலந்துகொள்ள இயலாத நிலையில் என்னுடைய கட்சி இருக்கிறது என்பதை முன் கூட்டியே ஒரு சாதாரண தகவலாகச் சொல்லியிருந்தேன். நான் கலந்துகொள்ள இயலாத நிலையில் என்னுடைய கட்சிப் பணி இருக்கிறது என்பதை முன் கூட்டியே ஒரு சாதாரண தகவலாகச் சொல்லியிருந்தேன். ஓர் உறுப்பினர் வெளியூருக்குச் செல்வதாக இருந்தால், அதை முன்கூட்டியே தெரிவித்து விட்டுத்தான் செல்ல வேண்டுமென்று, நான் படித்தறிந்த வரையில், எந்தப் புத்தகத்திலும் இல்லை. அப்படி இருந்தால், முறையாக அதுபற்றி எழுதித் தந்துவிட்டுப் போயிருப்பேன். என்னைப் பொறுத்த வரையில், நான் கட்சியின் பெயலாளராக இருக்கிறேன். பொது வாழ்க்கையில் தொடர்ச்சியாக 42 வருடங்கள் ஈடுபட்டிருக்கிறேன். முதல் முதலாகத்தான் இந்த அவைக்கு நான் வந்திருக்கிறேன். இங்கு வந்து 4 வருடங்கள் கூட இன்னும் முழுமையாக ஆகவில்லை. பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிற எவரும் தங்கள் அரசியல் கடமையை ஆற்றுவதற்காக சில சமயம் வெளியிடங்களுக்குச் செல்லவேண்டி வரும். இப்படிச் செல்வதைப் பார்க்கும்போது, பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவன் என்கிற முறையில், நான் மகிழ்ச்சியடைபவன். இப்படிப் போவதை முரண்பாடாக நான் என்றைக்கும் கருதியதில்லை. நான் வெளியே போயிருக்கிற நேரத்தில் எங்கள் பொது வாழ்க்கைக்கே நோக்கம் கற்பித்து, மாண்புமிகு அமைச்சர் பேசியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன பேசியிருக்கிறார் என்பதை வாசித்துக் காட்டினார். நான் குறிப்பிலே படித்ததும் அதுவேதான். " இன்றையதினம் வந்து பேசிவிட்டு அமைச்சர் என்ன சொல்கிறார் என்று கூட கேட்காமல் * * * " என்று மறைமுகமாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உள்நோக்கம் கற்பிக்கப்பட்டிருக்கிறது. அப்போது மாண்புமிகு உறுப்பினர்களில் 2 பேர் தலையிட்டுப் பேசியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நம்முடைய மன்றத்தில் ஒரு மரபைக் கடைப் பிடித்து வருகிறோம். அந்த மரபையும் மீறி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார். அதாவது "என்னுடைய கருத்தைச் சொல்ல வேண்டுமென்றால் அவர்கள் அவையில்

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

இருந்திருக்க வேண்டும். நேற்று முன்தினமும் அவர்கள் அவைக்கு வந்திருக்க வேண்டும். ஆக, இவர்கள் கடமையிலிருந்து தவறியிருக்கிறார்கள்" என்று பேசியிருக்கிறார்கள். இது மலிவான அவதூறு. இன்னொன்று குற்றச்சாட்டு. என்னைப் பொறுத்தவரையில், இது தன்னிலை விளக்கம் மட்டுமல்ல, உறுப்பினர்கள் அவைக்கு வர முடியாத நிலை இருக்கும்போது, அவர்களுடைய உரிமை பாதிக்கப்படும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கருத்து இருப்பதால், இது குறித்து மாண்புமிகு தலைவர் அவர்களின் கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அமைச்சர் ஏதாவது சொல்ல விரும்புகிறாரா? பெரிதாக்காமல் சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, அன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசுகையில், தொழிலாளர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம் நடக்கும்போது, ஊரகத் தொழில் அமைச்சர் அவையிலே இல்லையே என்று சுமார் 5 அல்லது 10 நிமிடங்கள் அதுபற்றியே பேசினார்கள். அவர்கள் அவையில் இருப்பது அவைக்கு நல்லது என்றும் சொன்னார்கள். அவர்கள் ஒரு 'சீசன்ட் பாலிடீசியன்'. அப்படிப்பட்டவர்கள் தொழிலாளர் நலன் குறித்தும் சொல்லியிருந்தால், நல்ல பலன் ஏற்பட்டிருக்கும். விவாதம் "was of a high என்கிற நல்லெண்ணதில் தான் நான் சொன்னேன். இப்படிப்பட்ட விவாதம் நடக்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் இருக்க வேண்டும் என்பது என்னுடைய விருப்பம், ஆசை, கருத்து. அந்த எண்ணத்தில் தான் நான் அப்படிச் சொன்னேன். இதிலே எந்த கெட்ட நோக்கமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் நல்லசிவனும் மாணிக்கமும் இதை ஒரு உரிமைப் பிரச்சினையாகக் கொடுத்திருந்தார்கள். நான் கேட்டுக்கொண்டதன்பேரில், அவர்கள் இருவருமே தன்னிலை விளக்கத்திற்கு ஏற்றுக்கொண்டார்கள். நம்முடைய அவையின் பாரம்பர்யத்திலும் நடந்துகொள்கிற முறையிலும் பண்பாட்டிலும் மரபிலும் எவ்வளவு சிறப்பாக அது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பதற்குச் சிறந்த சான்று இது என்பதால், அவர்கள் இருவரையும் நான் பாராட்டுகிறேன். இது குறித்து முதலில் நான் ஒன்று சொல்கிறேன். ஓர் உறுப்பினர் அல்லது அமைச்சர் அவையில் இல்லாவிட்டாலும், அவையின் நடவடிக்கைகளைத்



தெரிந்துகொள்ள எத்தனையோ வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை அனைவரும் தெரிந்து வைத்திருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இங்கு விவாதம் நடைபெறும்போது பெரும்பாலான நேரங்களில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இருப்பதில்லை. ஆனாலும் கூட அவர்கள் வெளியே இருந்துகொண்டு இங்கே நடைபெறுகிற விவாதத்தையெல்லாம் கேட்டுக்கொண்டு, ஒவ்வொரு உறுப்பினர் சொன்ன கருத்தையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அதுகுறித்து தகவல்களையெல்லாம் சேகரித்து 7 மணி நேரத்திற்கு பதில் சொல்லியிருக்கிறார்கள் என்பதை இந்த மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். அதுபோல் அவையிலே உறுப்பினர்களோ, அமைச்சர்களோ இல்லாவிட்டாலும் கூட, கட்சி பெரிதா இல்லை மன்றம் பெரிதா என்பது குறித்துப் பேசுவது என்பது அவரவர்கள் மனோபாவத்தைப் பொறுத்தது. கட்சி மாநாடு நடக்கிறபோது, அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் போவது வழக்கம் தான். நம்முடைய அவையைப் பொறுத்தவரையில், நமக்குப் பெருமை கூட இருக்கிறது., 3 கட்சிகளின் தலைவர்களும் இந்த அவையில் இருக்கிறார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் தலைவர் இருக்கிறார். அதுபோல் மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலத் தலைவர் இருக்கிறார். ஆளும் கட்சியின் தலைவர் திரு. ப. உ. சண்முகம் அவர்களும் இந்த அவையில் உறுப்பினராக இருக்கிறார்கள். இது ஒரு சிறப்பு. ஆகவே கட்சிகளின் தலைவர்கள் மாநாட்டுக்குப் போய்விட்டார்கள் என்பது நம்மால், அரசியல் வாதிகளால் எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய ஒன்று தான். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள்

(முற்பகல் 10-30)

அவையில் இருந்து அமைச்சர் அவர்களுடைய கருத்தை மறுத்துப் பேசி அதை எதிர்த்து அமைச்சர் அவர்கள் அழகாகத் தன் கருத்தைத் தெரிவித்து விவாதிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டதே என்கிற ஆதங்கத்தின் பேரில் தான் சொல்லியிருக்கிறார் என்று நான் நினைக்கிறேன்: எப்படியானாலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் சில நேரங்களில் "நாங்கள் பேசும்போது துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்கள் இங்கே இல்லையே" என்று கேட்கிறார்கள். அதற்கும் இதே சமாதானத்தைத் தான் சொல்ல விரும்புகிறேன். துறை அமைச்சர் வெளியே இருந்து இவைகளைத் தெரிந்து கொண்டு பதில் சொல்லும் வாய்ப்பு இருக்கிறது. என்னவிருந்தாலும்*** என்று குறிப்பிட்ட வாசகத்தை அமைச்சர் அவர்கள் தவிர்த்

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

திருக்கலாம். இதுகூட ஒரு குறையே தவிர, குற்றமல்ல. அந்தக் குறையையும் தவிர்த்திருக்கலாம். எனவே அனுபவம் வாய்ந்த இரு மாண்புமிகு உறுப்பினர்களும் என்னுடைய சமாதானத்தை ஏற்று, என்னுடைய கருத்தையும் ஏற்று அமைவார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,*** என்ற வாசகத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அப்படியே அது அகற்றப்படும்.

### 3. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்று காலை அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட அலுவல் விவரம் முடிவு செய்யப்பட்டது——

ஏப்ரல் 5—காலை—அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல்.

ஏப்ரல் 6—மகா வீர் பிறந்த நாள்—விடுமுறை.

ஏப்ரல் 7 & ஏப்ரல் 8—மாலை—அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல்.

மேற்கொண்டு நிகழ்ச்சி விவரம் பின்னர் முடிவு செய்யப்படும்.

### 4. கவன ஈர்ப்பு.

(1) குமரி மாவட்டத்தில் விவசாயிகள் தங்கள் வீடுகளுக்கு எடுத்துச் செல்லும் நெல்லை சிவில் சப்ளைஸ் இலாக்காவினர் சட்ட விரோதமாகத் தடுத்து, நாகர்கோவில் நகரில் லெவி முறையை அமுல் செய்வது குறித்து.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன் :

"குமரி மாவட்டத்தில் பரவலாக அறுவடை தொடங்கியிருக்கும் இச்சமயத்தில் அறுவடை செய்த நெல்லை விவசாயிகள் தங்கள் வீடுகளுக்கு எடுத்துச் செல்வதை சிவில் சப்ளைஸ் இலாக்காவினர் சட்ட விரோதமாக

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





நாகர்கோவில் நகரின் நான்கு எல்லைகளிலும் தடுப்புச் சாவடி ஏற்படுத்தி கட்டாய லெவி முறையை அமுல் செய்து வருவதால் எழுந்துள்ள பிரச்சினை குறித்து".

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப் பட்டிருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தரப்பட்டிருக்கும் விவர அறிக்கையில் "நாகர்கோவில் நகரைச் சுற்றி பத்து லெவி சோதனைச் சாவடிகள் நிறுவப்பட்டுள்ளன. இவை உரிமம் பெற்ற வியாபாரிகளும் உரிமம் இல்லாத இடைத்தரகர்களும் நெல் கடத்திச் செல்வதையும் லெவி ஏய்ப்புச் செய்வதையும் கண்காணிக்கின்றன" என்று சொல்லப்பட்டிருக்கிறது. உரிமம் பெற்ற அரிசி ஆலைகளின் அதிபர்கள்தான் லெவி அளக்க வேண்டும். மற்றவர்கள் யாரும் லெவி அளக்க வேண்டியதில்லை. விவசாயிகள் தங்களுடைய வீட்டிற்கு எடுத்துச் செல்லும் நெல்லை, தங்களுடைய தேவைக்கும் விற்பனைக்கும் கொண்டு போகிற நெல்லை தடுப்பதன் காரணமாக விவசாயிகள் பெரும் துன்பத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். உரிமம் பெற்ற ஆலை அதிபர்களைக் கண்காணிக்க வேண்டுமென்றால், ஆலைகளின் எல்லையிலேயே கண்காணிக்கலாம். அவர்கள் ஆலைக்குக் கொண்டுபோய்த்தான் அதை அரிசியாக்க முடியும். எனவே ஆலைகளிலேயே ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரை நியமித்து கண்காணிக்கலாம். நாகர்கோவில் நகரில் சுமார் 50 ஆலைகள் இருக்கின்றன. இதைச்செய்யாமல் நகரைச் சுற்றி முற்றுகை போட்டுக்கொள்கிற மாதிரி, விவசாயிகள் எடுத்துச் செல்லும் நெல்லையெல்லாம் பரிசோதனை செய்கிறோம் என்று சொல்லி, அதிகாரிகள் பலரிடம் கைக்கூலி வாங்கி அனுப்புகிறார்களே தவிர, வேறொன்று மில்லை. எனவே இப்படி தவறு செய்கிறவர்கள்மீது நடவடிக்கை மேற்கொண்டு, இத்தகைய முறைகள் இனி நீடிக்காமல் இருக்க அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, விவர அறிக்கையில் குறிப்பிட்டபடி, சோதனைச் சாவடிகள் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தின் அடிப்படையில் போடப்பட்டிருக்கின்றன. விவசாயிகளிடம் நேரிடையாகக் கொள்முதல் செய்ய வேண்டாம் என்ற கொள்கையைத் தான் நாம் கடைப்பிடித்து வருகிறோம். இதைத்தான் மாவட்ட அதிகாரிகளுக்கும் வழங்கு

@ 86 அம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 ஏப்ரல் 3

துறை அதிகாரிகளுக்கும் அறிவித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே என்னிடம் தகவல் சொன்னதன் அடிப்படையில், அதையே கூட அந்த மாவட்டத்திற்கு அனுப்பி விசாரித்துப் பார்த்து, நீதியை நிலை நாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு விவசாயிக்கும் சான்றிதழ் கொடுக்கலாமா என்பதைக்கூட ஆராயும்படி கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவர்களுக்கு இருக்கிற நிலத்தின் அளவு, அதில் விளையக்கூடிய பொருளின் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் சான்றிதழ் வழங்கிவிட்டால், அவர்களிடம் லெவி வாங்க வேண்டாம் என்று வைக்கலாமா என்றுகூட யோசித்தோம். வியாபாரிகள் ஏமாற்றுகிறார்கள் என்பது உண்மை. அதன் காரணமாகத்தான் நெல் கொள்முதல் பாதிக்கப்படுகிறது. அதைத் தவிர்ப்பதற்காகத்தான் இத்தகைய சான்றிதழ் வழங்கலாமா என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

ஆலைகளில் லெவி கொடுக்கும் தன்மை இருக்கிறது. அதை மீறி வேறு பல இடங்களுக்கும் நெல்லைக் கடத்திச் செல்லுகிற காரணங்களால், எல்லை களில்கூட சோதனைச் சாவடிகளை வைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே அவர்கள் கூறுகிற இடையூறுகள் விவசாயிகளுக்கு ஏற்படாத வகை யில், அவைகளைத் தவிர்ப்பதற்கு என்னென்ன முறைகளை மேற்கொள்ளலாம் என்று ஆராயும்படி சொல்லியிருக்கிறேன். எனவே அதைப்பற்றி உரிய நட வடிக்கை மேற்கொள்ளப்படும். அதோடு உணவுத் துறையின் செயலாளரையும் சில இடங்களுக்குப் போய்ப் பார்த்துவிட்டு, மக்கள் கூறுகிற குறைகளைக் கேட்டு வரும்படி சொல்லியிருக்கிறேன். வந்த பிறகு இதில் ஒரு முடிவு எடுக்கப்படும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** வழங்குதுறை அதிகாரிகளை நாங்களே நேரில் போய்ப் பார்த்து எடுத்துச் சொல்லி நிவாரணம் தேவை என்று கேட்டபோது, சின்னஞ்சிறிய மாவட்டமான கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 12,500 டன் நெல் டார்கெட்டாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்றும், அந்த மாவட்டத் தில் மொத்தமே 46,000 ஏக்கரில்தான் நெல் பயிரிடப்படுகிறது என்றும், மற்ற மாவட்டங்களில் விளைவதைவிட இங்கே விளைச்சல் குறைவு என்றும், எனவே இந்த லெவி கொள்முதலை அரிசி ஆலை அதிபர்களிடம் வாங்க முடியவில்லை என்றும்; இதன் காரணமாகவே இந்தகைய முறைகளை மேற்கொள்ள வேண்டி யிருக்கிறது என்றும் குறிப்பிட்டார்கள். எனவே இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1982 ஏப்ரல் 3] [திரு. ம. சங்கரலிங்கம்]

கன்னியாகுமரி மாவட்டத்திற்கான டார்கெட்டைக் குறைத்தால், இந்தச் சோதனைச் சாவடிகளை உடனே அகற்ற முடியும். இப்போது அறுவடை முடிந்து 2 மாதங்களாகிவிட்டன. இன்னும் அங்கே சாவடிகள் இயங்க வேண்டிய அவசியமில்லை. எனவே டார்கெட்டின் அளவைக் குறைத்து, இந்த அறுவடைக்கான லெவி முறையை முடித்துவிடலாம். மறுபடியும் அறுவடை தொடங்கும்போது, அதற்கேற்ற வகையில் சோதனைச் சாவடிகளை அமைக்க லாம். எனவே இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து, குறிப்பாக விவசாயிகளுக்குத் தொல்லையில்லாமல், லெவி முறையை அமுல் படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதை ஆராயலாம் என்றாலும், வேளாண்மைத் துறை இந்த ஆண்டு அந்த மாவட்டத்தில் எவ்வளவு விளைவு ஏற்படும் என்றும் அதிலிருந்து எவ்வளவு உற்பத்தியாகும் என்றும், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் தங்க ளுடைய சொந்த உபயோகத்திற்கு எடுத்துக் கொள்வது போக மீது எவ்வளவு வியாபாரிகள் மூலம் வாங்கப்படும் என்று சொல்லுகிற கணக்கை வைத்துத் தான் நாங்கள் டார்கெட்டை நிர்ணயிக்கிறோம். அதில் தவறு இருந்தால், ஆராய்ந்து, ஆய்ந்து குறைக்கச் செய்யலாம். ஆனால் அந்தக் கணக்கின் அடிப்படையில்தான் நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அதிலிருக்கிற இடர்பாடுகளை மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். நம் மாநிலம் முழுவதற்குமான லெவி 6 லட்சம் டன் தான். அந்த இலக்கு வந்துவிட்டால், இப்போதே மாநிலம் முழுவதிலும் இருக்கும் லெவிக் கொள்கையை எடுத்துவிடலாம். பிறகு தேவையானபோது கூட போட்டுக்கொள்ளலாம். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த அளவில், சங்கடங்களை நீக்குவதற்கான முறையில் எந்த அளவுக்கு டார்கெட் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது, எந்த அளவுக்கு வசூலிக்கப்பட்டிருக்கிறது என் பதையெல்லாம் பார்த்து நடவடிக்கை எடுக்கலாம் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

(2) தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், அந்நிறுவனத்தின் சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்களை நியமிப்பதற்கு காப்புறுதி வைப்பீடு கட்ட வேண்டுமென்றும் அதை 20—3—1982 க்குள் கட்டத் தவறினால் அவர்களின் உரிமம் ரத்து செய்யப்படும் என்றும் அறிவித்திருப்பது குறித்து.

திரு. க. இராமமூர்த்தி (திரு. ஏ. ஆர். தாமோதரன் சார்பில்): மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்—

"அரசுக் கட்டுப்பாடில்லாத தாராள சிமிண்ட் விற்பனை பங்களவுத் திட்டத்தின்கீழ், கிராமப் பகுதிகளிலும், மாவட்டத் தலைமையிடங்களிலும், நகரியங்களிலும், சென்னை பெருநகர்ப் பகுதிகளிலும் உள்ள சிமெண்ட் விற்பனையாளர்கள் சிமெண்டைப் பெற தமிழ்நாடு சிமெண்ட் கழகத்திற்கு முறையே ரூபாய் 10,000 ரூபாய் 20,000, ரூபாய் 30,000 பிணைய வைப்புத் தொகை செலுத்த வேண்டும் என்றும், இந்தக் கூடுதல் வைப்புத் தொகையை 20—3—1982 க்கு முன் செலுத்தத் தவறினால் அவர்களது சிமிண்ட் இருப்பு விற்பனை உரிமை ரத்து செய்யப்படும் என்றும் தமிழ்நாடு சிமெண்ட் கழகம் கூறியிருப்பதால் சிமெண்ட் விற்பனையாளர்கள் அடையும் இடர்ப்பாடு குறித்து."

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவர அறிக்கை@ ஒன்று அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

*திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இதற்கான பிணைய வைப்புத் தொகை ஏற்கெனவே ரூபாய் 1,000 மற்றும் ரூபாய் 2,000 என்றுதான் இருந்தது. இப்போது திடீரென்று அதை ரூபாய் 10,000, ரூபாய் 20,000 மற்றும் ரூபாய் 30,000 என்று உயர்த்தியிருக்கிறார்கள் மிக அதிகமான அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்கள். இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற புதிய சூழ்நிலைகளில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு வங்கிகளில் கூட வாங்க முடியாத நிலை இருக்கிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கேகூட தெரியும். இந்த நிலைமையில் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் அதிகமான பிணைய வைப்புத் தொகை கட்ட வேண்டியுள்ளது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலில் இது பற்றிய முறையீடுகள் வரவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்றாலும் எங்களுக்கு வரப்பெற்ற பல்வேறு முறையீடுகளின் அடிப்படையில்தான் நான் இங்கே அரசின்

@ 86 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



கவனத்தை ஈர்க்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப்பற்றிப் பரிசீலனை செய்ய முன் வருவாரா ?

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, 1970 ஆம் ஆண்டு ஒரு டன் சிமெண்டின் விலை சுமார் 197 ரூபாய். இப்போது நான்-லெவி சிமெண்ட், டன் ஒன்றின் விலை சுமார் 1,100 ரூபாய். இந்த வேறுபாட்டைப் பார்த்தால், ஏறக்குறைய ஆறு மடங்கு விலை கூடியிருக்கிறது. ஆனால் முன்னாலே டிபாசிட் ரூபாய் 10 ஆயிரம் என்று இருந்தது. இப்போது ரூபாய் 20 ஆயிரம் என்றும், இரண்டாயிரம் என்று இருந்தது. ரூபாய் 10 ஆயிரம் என்றும் இப்போது மாற்றப்பட்டிருக்கிறது. டீலர்சிப் எடுக்கிறபோது, அவர்கள் அந்த டிபாசிட் பணத்தை அந்தந்தத் தொழிற்சாலைகளுக்குக் கட்டுகிறார்கள். அதற்காக 12 சதவீதம் இன்ட்ரஸ்ட்கூட தொழிற்சாலைகள் கொடுக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் நல்ல நோக்கத்திலே சொல்லுகிறார்கள். டிபாசிட் அதிகமாக இருப்பதால், இப்போது வியாபாரிகள் கஷ்டப்படுகிறார்கள் என்ற நோக்கத்திலே சொல்லுகிறார்கள். ஆனால் கணிசமான அளவு இலாபம் இருப்பதாலும், விலை பல மடங்கு ஏறியிருப்பதாலும், தனியார் தொழிற்சாலைகள் எல்லாம் இதைவிட அதிகமாக ஏற்றியிருக்கிறார்கள். அந்த அளவிலே அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷனில் அந்த டிபாசிட் தொகையை உயர்த்தியிருக்கிறது. இப்படி உயர்த்தியிருந்தும்கூட, டீலர்சிப் கேட்டு மனுக்கள் வருவது மிக அதிகமாக இருக்கிறது. இருபதாயிரம், முப்பதாயிரம் என்று இருப்பதால், எடுக்க முடியவில்லை என்ற குறை இல்லை. நூற்றுக்கணக்கான மனுக்கள் வருகின்றன. அவற்றை 'ஸ்குரூடினைஸ்' பண்ணி, யார் யார் ஒழுங்காகக் கணக்கு வைத்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் பார்த்து, அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே வியாபாரிகள் மத்தியிலே கஷ்டம் இல்லை, பாதிப்பு இல்லை. டிபாசிட் வருகிறபோது, அதற்குரிய இன்ட்ரஸ்ட் போய் சேருகிறது.

Thiru A. R. DAMODARAN : Sir, for the past four years, cement stockists have not been able to sell cement because of various Control Orders. To pay a deposit of Rs. 20,000 a cement

stockist today will have to sell 10,000 bags to make his profits of Rs. 2 per bag before he pays this deposit. So, the Hon. Minister is not crorect when he says that there will be no difficulty to stockists. I would like to know why they Tamil Nadu Arasu Cements want to appoint new stockitst when they already have stockists who have not been able to distribute enough cement. Secondly, I would like to know whether collection of these deposits is being done in consultation with other private cement companies also and whether the Hon. Minister is aware that Tvl. Associated Cements are not recovering any deposits from their stockists.

*மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு அரசு இரண்டு சிமெண்ட் ஆலைகளை நடத்துகிறது. ஒன்றை அரியலூரிலும் மற்றொன்றை ஆலங்குளத்திலும் நடத்துகிறது. அரியலூரில் இருக்கின்ற சிமெண்ட் ஆலைக்கு ஏற்கெனவே டீலர்ஸ் இருந்தார்கள். ஆலங்குளம் ஆலைக்கு டீலர்ஸ் நியமிக்கப்படவில்லை. ஆகவே இரண்டிற்கும் சேர்த்து தேவைப்படுகிற அளவிற்கு டீலர்ஸ் நியமிக்கப்பட வேண்டுமென்று " இன்ஸ்டரக்‌ஷன்ஸ்" கொடுக்கப்பட்டிருக்கின்றன. நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, 1970 ஆம் ஆண்டில் சிமெண்டின் விலை டன் ஒன்றுக்கு 197 ரூபாய். இப்போது நான்-லெவி சிமெண்டின் விலை டன் ஒன்றுக்கு சுமார் 1,000 ரூபாய். இந்த வேறுபாடு இருக்கிறது. ஆகவே அவர்கள் சிமெண்டை அங்கிருந்து வெளியே கொண்டுவருகிறபோது காப்புத் தொகையாக இதை வைத்திருக்கிறார்கள். அந்த ரேசியோவிற்கேற்ப வைத்திருக்கிறார்கள். அதற்கான இன்ட்ரஸ்டையும் கொடுக்கிறார்கள். கஷ்டப்படுகிற ஏழை வியாபாரிகள் டீலராக நியமிக்கப்படுவதில்லை. ஏற்கெனவே இருப்பவர்களில் ஒழுங்காக, முறையாக எடுக்காமல் இருந்தால், கணக்கு வழக்கு சரியாக இல்லாமல் இருந்தால், சில பேர் கோட்டாவைப் புதுப்பிக்காமல் இருந்தால், ஒழுங்காகத் தொழிலைச் செய்யாமல் இருந்தால், அவர்களையெல்லாம் நீக்குகிறார்கள். 500 பேர் இருந்தால், அந்த 500 பேருக்கும் கொடுக்க முடியாது. வியாபாரிகளைப் பொறுத்தவரையில், கஷ்டம், நஷ்டம் இல்லை. இலாபம் இருப்பதால்தான், போட்டி அதிகமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் விசாரித்துப் பார்த்தால் தெரியும். ஒவ்வொரு ஆலைக்கும், டீலர்சிப் கேட்டு நூற்றுக்கணக்கான மனுக்கள் வருகின்றன. அதையெல்லாம் 'ஸ்குரூடினைஸ்' பண்ணித் தருகிறோம்.*



## 5. தனி உறுப்பினர் அலுவல்.

### சட்ட முன்வடிவு

*தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு திருமணங்களை கட்டாயமாகப் பதிவு செய்தல் சட்ட முன்வடிவு. (சட்டமன்ற மேலவை சட்ட முன்வடிவு எண் 1/1979.)*

*திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,*

*" தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, திருமணங்களை கட்டாயமாகப் பதிவு செய்தல் சட்ட முன்வடிவு @ (சட்டமன்ற மேலவை சட்ட முன்வடிவு எண் 1/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"*

*என்று முன்மொழிகிறேன்.*

*மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஜே. தாஸ் அவர்களால் வழிமொழியப்பட்டது.*

*மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—*

*" தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, திருமணங்களை கட்டாயமாகப் பதிவு செய்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்ற மேலவை சட்ட முன்வடிவு எண் 1/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"*

*(மாற்றுத் தலைவர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் தலைமை).*

** திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நடைபெறுகிற திருமணங்களைக் கட்டாயமாகப் பதிவு செய்ய வகை செய்வதற்காக நான் முன்மொழிந்த சட்ட முன்வடிவு பற்றிய கருத்துக்களை இந்த அவையின் மேலான பரிசீலனைக்கு வைப்பதிலே பெருமிதம் அடைகிறேன். இந்தச் சட்ட முன்வடிவு தமிழகத்தினுடைய வரலாற்றோடு பின்னிப் பிணைந்த ஒன்று என்பதை இந்த அவை நிச்சயமாக ஏற்கும் என்று நான் நம்புகிறேன்.*

*தமிழகத்தைப் பொறுத்தவரையில், மிகப் பெருமளவிலே சமுதாயப் புரட்சி இயக்கத்தை நடத்தி அதனுடைய பல்வேறு கட்டங்களில் பல்வேறு இன்னல்களை ஏற்று, அந்த இன்னல்களின் அடிப்படையில் சமுதாய மாற்றங்களை ஏற்கச் செய்து இன்றைக்கு ஓரளவிற்கு நிம்மதி பெறுகிற வகையிலே, மன ஆறுதலையும், நிறைவையும் பெறுகிற வகையிலே மாற்றங்கள் வேண்டும் என்று நாம் உணர்கிறோம். இந்தியா முழுக்க சமுதாயச் சீர்திருத்தவாதி*

---

@ Publishd at pages 63-67 of Part IV|Section I of the—Tamil Nadu Government Gazette, dated 6th March 1979.

கள் பல கட்டங்களில் தோன்றினார்கள் என்றாலும் கூட, இந்திய சரித்திரத்தின் பல்வேறு கால கட்டங்களிலே இது போன்ற சமுதாயச் சீர்திருத்தப் பணிகள் பெரும் இயக்கங்களாக, தனியார் இயக்கங்களாக அல்லது மதச் சண்டைகளாக, மதச் சீர்திருத்த இயக்கங்களாகத் தோன்றி வரலாறு படைத்தன என்றாலும்கூட, தமிழகத்திலே இத்தகைய நிலைமையை தந்தை பெரியார் அவர்களுடைய காலத்திலே நாம் கண்டோம்.

திருமணங்களைப் பொறுத்தவரையில், சமுதாயத்திலே நடைபெறுகின்ற திருமணங்கள், மனம் ஒன்றிய அளவிலே ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும் நடைபெறுகிற திருமணமாக அமைய வேண்டுமே ஒழிய, கட்டாயத் திருமணமாக அமையக்கூடாது, ஜாதி மத வேறுபாடுகளைக் கடந்த திருமணமாக அமைய வேண்டும் என்பதற்கான உணர்வுகளை இந்தியா முழுக்க இருக்கின்ற தலைவர்கள் பல்வேறு கட்டங்களிலே, தாங்களே நடத்திக் காட்டி, தங்களுடைய குடும்பங்களில் அதை ஏற்றுச் செயல்படுத்திக் காட்டி சமுதாயத்தை இழி நிலையிலிருந்து, இருளிலிருந்து மீட்க அவர்கள் துணையாக இருந்தார்கள். ஆனால் அப்படிச் செய்தும் கூட, நாம் எதிர்பார்த்த அளவிற்கு மக்களுடைய பிரதிபலிப்பு இந்தியாவினுடைய பல்வேறு மாநிலங்களில் இல்லாமல் போயிற்று. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இந்திய விடுதலைப் போராட்டத்தினுடைய தலைமை தளபதியாக விளங்கிய தேசத் தந்தை காந்தியடிகள் தன்னுடைய குடும்பத்திலேயே கலப்புத் திருமணத்தைச் செய்து வைத்தார்கள். ஒரு மதத்திற்குள்ளே உள்ள இரு ஜாதிகளுக்கிடையே அல்ல. இரு மதத்திற்கிடையே செய்து வைத்தார்கள். அதைப் போலவே தான் பல்வேறு கால கட்டங்களில் கலப்புத் திருமணத்தை இந்தியாவிற்கு வழி காட்டியாக விளங்குகிற தலைவர்கள் செய்தார்கள் என்பதை என்னாலே உணர முடிகிறது. சமீபத்திலே மறைந்த ஆச்சாரிய கிருபளானி அவர்களுடைய குடும்பத்தை எடுத்துப் பார்க்கிறோம். எந்த அளவிற்கு அவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கலப்புத் திருமணத்தை ஏற்றுக்கொண்டு நமது சமுதாயத்திற்கும், இந்தியாவிற்கும் வழி காட்டியிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறோம். அப்படி அவர்கள் ஏற்றுக்கொண்ட புதிய திருமணத்தை மதிக்காமல் யாரும் இருந்ததில்லை. அதற்கு மாறாக அவர் இந்தியா முழுக்க மதிக்கின்ற தலைவராக விளங்கினார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறோம்.

(முற்பகல் 10-50)

இந்தியாவினுடைய இன்றைய பிரதமர் அவர்கள் உலக அரங்கிலே இந்தியாவினுடைய பெருமையை உயர்த்தி மிகச் சிறப்பாக எடுத்து வைத்து, நிமிர்ந்து நிற்கச் செய்து அதன் விளைவாக "நாம் இந்தியர்கள்" என்று நாம்



பெருமிதமடைகின்ற நேரத்திலே, மனதிலே ஒரு உத்வேகத்தையும், ஒரு பெருமிதமும் கொள்கின்றோம். அந்த அளவுக்கு செயல்படுகின்ற இந்தியாவினுடைய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், தன்னுடைய வாழ்க்கையிலே கலப்புத் திருமணத்தை ஏற்றவர், இரு மதத்தினருக்கிடையே நடந்த திருமணமாக அது நடந்தது. அது பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் ஆதரவோடு, ஆசியோடு நடைபெற்ற திருமணம் என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன். அதைப் போலவே தான் இன்றைக்கு நம்முடைய மாநிலத்தினுடைய ஆளுநராக இருக்கின்ற திரு. சாதிக் அலி அவர்கள், அவர்களுடைய மண வாழ்க்கை வேறு வேறு மாநிலத்தவர்களுக்கு இடையே மதங்களுக்கிடையே ஏற்பட்ட திருமணமாக அமைந்து, இன்றைக்கு அவர்கள் பெரிய பொறுப்பிலே இருக்கின்றார்கள் என்பதைப் பார்க்கிறோம். அதுபோல தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, தந்தை பெரியார் அவர்கள் தமிழ் நாட்டில் மூட நம்பிக்கைக்கு எதிரான போராட்ட இயக்கமாக, ஒரு பெரும் பிரச்சார இயக்கமாக, சுயமரியாதை இயக்கமாக, தன்மான இயக்கமாக நடத்திய அந்தப் பணி அகில இந்தியாவுக்கும் வழி காட்டும் அளவிலே இருந்தது. அன்று தலைவர்கள் எல்லாம் விடுதலை இயக்கத்திலே அவர்களுடைய நேரத்தையும், எண்ணத்தையும் முழுமையாக செலவிட்டுக் கொண்டிருந்த காரணத்தினாலே, சமுதாய அளவிலே இந்தியாவினுடைய பல்வேறு பகுதிகளிலே, மாநிலங்களிலே அதைத் தொடர்ந்து ஆற்றுகின்ற பணிகளுக்கான வாய்ப்புக்கள் குறைவாகவே இருந்தன. அந்த நிலையிலே தமிழகத்திலே அன்றைக்கு அந்த விடுதலை இயக்கத்தில் கலந்துகொண்டு, அதிலே ஒரு பகுதியாக இருந்து, தந்தை பெரியார் அவர்கள் அதற்குப் பிறகு தானே தனித்துக் கொண்டு நடத்தி வைக்க வேண்டியதாக இந்த இயக்கம் இருந்தது. சமுதாயப் புரட்சி இயக்கத்தை தமிழகத்திலே அன்று நடத்தினார்கள். சமுதாய வேறுபாடுகளைப் பொறுத்த வரையிலும் சமுதாய முன்னேற்ற நிலைமைகளைப் பொறுத்த வரையிலும், மூட நம்பிக்கைகளிலே இருந்து விடுபடுகின்ற நிலைமைகளைப் பொறுத்த வரையிலும், நாம் பெருமளவுக்கு வளர்ந்திருக்கிறோம் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். அன்று தந்தை பெரியார் அவர்கள் நடத்திய பெரும் போராட்டத்திற்கு, பணிக்கு உற்ற துணைவனாக அந்த நேரத்தில் அண்ணா அவர்கள் இருந்தார்கள். அப்போது அன்போடு அவர்கள் அழைக்கப்பட்டார்கள். அவருடைய பெயரோடு பெருமிதத்தை இணைத்து அழைத்தார்கள். பெருமிதத்தோடு "தளபதி அண்ணா" என்று அழைத்தார்கள். தந்தை பெரியார் அவர்களுடைய புரட்சிக் கருத்துக்களுக்கு அவர் உறுதுணையாக இருந்தார்கள். அந்தத் தன்மான இயக்கம், சுயமரியாதை இயக்கம் திராவிடக் கழகமாகப்

பெயர் கொண்டு, அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகமாகப் பெயர் கொண்டு, அரசியலிலே ஈடுபடுவதற்கு முன்னதாக அரசியல் பகுதிகளுக்கு வருவதற்கு முன்னதாக, இது எல்லாம் வேண்டாம், சமுதாயப் புரட்சி தான் தன்னுடைய தலையாய பணி என்று தன்னை அர்ப்பணித்துக் கொண்ட போது, பேரறிஞர் அண்ணா அவர்கள் தளபதி அண்ணாவாக நின்று பல்வேறு சுயமரியாதை மாநாட்டிலே கலந்துகொண்டு, இந்தக் கருத்துக்கள் எல்லாம் தமிழகம் முழுவதும் ஏற்கப்படுகின்ற நிலையில் நிலைமைகளை எப்படி உருவாக்கினார் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். பல காலங்களிலே திராவிட கழகத்தின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பல்வேறு மகாநாடுகளே, சமுதாயச் சீர்திருத்த மகாநாடுகள் என்று அழைக்கப்பட்டதும் என்னுடைய நினைவுக்கு வருகிறது. இந்தப் பெரும் பணியை பல்வேறு துறைகளிலே நின்று நிறைவேற்றினார்கள். அதற்குப் பிறகு, கால மாறுபாடுகளிலே அறிஞர் அண்ணா அவர்கள் இங்கே தமிழக அரசினுடைய ஆட்சிப் பொறுப்பை, தலைமைப் பொறுப்பை ஏற்றார்கள். இதற்கு முன்னதாகவும் கூட, தந்தை பெரியார் ஆற்றிய சமுதாயப் பணிகளுக்கு பெரும் வரவேற்பு தமிழகத்திலே இருந்தது என்ற கருத்தோடு, இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காங்கிரஸ் பேரியக்கம், தந்தை பெரியார் அவர்களுடைய இந்தப் பணிகளுக்குத் தனியான மரியாதையைத் தந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். தந்தை பெரியார் அவர்கள் கருத்துக்களோடு, அந்த இயக்கத்தோடு இருந்த கருத்துக்களோடு, தென்னகம் தனியாகப் பிரிய வேண்டும் அல்லது திராவிட நாடு வேண்டுமென்று கேட்ட அந்தச் சூழ்நிலையில், அந்தக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அன்றைக்கு இருந்த விடுதலை இயக்கம், காங்கிரஸ் இயக்கம் மேற்கொண்டிருந்த பெரும் போராட்டம், வெள்ளையனுக்கு எதிராக ஏற்று நடத்திய போராட்டம், அதற்கேற்றவாறு ஒன்றுபட்ட இந்தியாவை உருவாக்குவதிலே காங்கிரஸ் இயக்கம் ஏற்றுக்கொண்ட பொறுப்பு காரணமாக திராவிடக் கழகம், காங்கிரஸ் பேரியக்கம், தேசிய இயக்கம் இவைகளுக்கிடையே மிக்க கடுமையான மோதலுக்கும் கருத்து வேறுபாட்டிற்கும் தயாராக வேண்டும் என்ற கட்டாய சூழ்நிலை இருந்தது. என்றாலும்கூட அதைத் தாண்டி நின்று தந்தை பெரியார் அவர்களுடைய சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களை ஏற்று மதித்தது காங்கிரஸ் என்பதை காலம் காட்டியிருக்கிறது. அதனாலேதான் சுதந்திரம் அடைந்த இந்தியாவில் தமிழகம் அன்றைக்கு சென்னை ராஜ்தானியாக இருந்தபோது நம்முடைய மாநிலத்திலே காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக இருந்த என்னுடைய தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஓமந்தூர் ராமசாமி



ரெட்டியார் அவர்கள் முதலமைச்சராகப் பதவி ஏற்றார். அவருடைய அமைச்சரவை அமைந்தபோது, வெளியிலே பல்வேறு விமர்சனங்கள் வந்தன. அதை நான் இப்போது நினைவு கூர்கிறேன். அன்றைக்குச் சொல்லப்பட்ட விமர்சனங்களிலே ஒன்று, கதர் கட்டிய பெரியார் முதலமைச்சராகப் பதவி ஏற்றிருக்கிறார் என்ற கருத்து, பரவலாக, வேடிக்கையாக அல்லது கேலியாக, கிண்டலாக, விஷமமாகச் சொல்லப்பட்டது. தந்தை பெரியார் அவர்களுடைய புரட்சிகரமான கருத்துக்களுக்கு, சமுதாயச் சீர்திருத்த உணர்வுகளுக்கு காங்கிரஸ் இயக்கம் எப்போதும் பின்னணியில் இருந்ததில்லை. ஆனால் துணையாக இருந்திருக்கிறது என்பதைச் சரித்திரம் காட்டுகிறது. தந்தை பெரியார் அவர்கள், நம்முடைய மாநிலத்தினுடைய முதலமைச்சராக பணியாற்றியவரும், இந்தியாவினுடைய பெருமைக்கு ஈடு கொடுத்த சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி அவர்களுக்கு, எந்த அளவுக்குத் துணையாக நின்று பணியாற்றினார் என்பதை எண்ணிப் பார்க்க முடிகிறது. மறைகின்ற காலம் வரையிலே, எந்த அளவுக்கு அவர்களுடைய தோழமை உணர்வுகள் இருந்தன என்பதையும் பல்வேறு நேரங்களிலே அவருடைய கருத்துக்களைப் படிக்கின்ற நிலைமையும் ஏற்பட்டது என்பதை எண்ணிப் பார்க்கிறேன். அரசியல் ரீதியாக அவரவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சி அடிப்படையிலே அவர்களுக்கிடையிலே மோதல் ஏற்பட்டிருந்தாலும்கூட, தனியான உணர்வுகள் பாதிக்காத வகையிலே அவர்களுடைய பொதுப் பணிகள் அமைந்திருந்தன என்பதை எண்ணிப் பார்க்கிறேன். அடுத்ததாக தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராகப் பணியாற்றினார்கள். அப்போது அது திராவிட கழகமாக இருந்தாலும் சரி, அல்லது திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, தந்தை பெரியாரும், அண்ணாவும் உட்பட, எந்த அளவுக்கு அவர் பதவி ஏற்றதை வரவேற்றார்கள், அவர் மூலமாக தமிழகம் வளரும் என்பதை எதிர்பார்த்தார்கள், எந்த அளவுக்கு அவருக்கு ஆதரவு அளித்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். இதைச் சொல்வதற்குக் காரணம் அரசியலிலே எந்த அளவுக்கு கடுமையாக மோதிக் கொள்பவர்களாக இருந்தாலும்கூட, அந்த அரசியலைக் கடந்து நின்று இந்த சமுதாய முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் என்பதற்கு கடந்த காலம் வழி காட்டியது. அந்தச் சூழ்நிலையிலேதான் தந்தை பெரியார் அவர்கள் பெரும் பொருளாதாரப் புரட்சி, சமுதாயப் புரட்சி, ஜாதி ஒழிப்புப் புரட்சி என்று செய்தார்கள். அதிலே ஒன்று சீர்திருத்தத் திருமணங்கள்—சுய மரியாதைத் திருமணங்கள் ஆகும். தந்தை பெரியார் அவர்கள் வேறு காரணங்களுக்காகப் பிரிந்து இருந்தார்கள். ஒன்று பழமையான மூடப் பழக்கங்களிலே இருந்து மனிதன் விடுபட வேண்டும். அப்படி விடுபடுவதன் மூலமாகத் தான் அவர்களுடைய

வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியும். அதற்கு ஒரு தூண்டுகோலாக இளமை வயதிலேயே, இளமையினுடைய துடிப்பு துடித்துக் கொண்டிருக்கின்ற நிலையிலே வந்து, அதிலே அவன் அடி எடுத்து வைக்கின்றபோது, அந்தச் சீர்திருத்த உணர்வுகள் அவனுக்கு வரவேண்டும். அந்த அடிப்படையிலேதான் தந்தை பெரியார் அவர்கள் சுயமரியாதை, சீர்திருத்தத் திருமணங்களை அறிமுகப்படுத்தினார்கள்.

(முற்பகல் 11-00)

இன்னொன்று, தமிழகத்திலே இருந்த, இந்தியா முழுமையிலும் இருந்த சாதி வேறுபாடுகளைக் கடந்து நின்று செயல்படுவதற்கு அல்லது சாதிகளைக் கடந்து நின்று செயல்பட்டவர்கள் அவர்களுக்குள்ளாகத் திருமணங்களை ஏற்றுக்கொள்ளும்போது அவர்களுடைய திருமண வாழ்க்கை அவரவர்கள் சார்ந்துள்ள மதத்திற்கு மாறாக இருக்கிறது, பெருங் குற்றத்தை அவர்கள் இழைத்துவிட்டார்கள் என்ற உணர்வை உருவாக்கி, அந்த அடிப்படையிலே கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கள் ஒதுக்கப்பட்டவர்களாக, புறக்கணிக்கப்பட்டவர்களாக அல்லது சமுதாயத்தில் மரியாதை, மதிப்பு அற்றவர்களாகச் செய்யும் நிலையைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காக இவர்களே முன்நின்று, பல்வேறு திருமணங்களை நடத்தி வைத்தார்கள். மூன்றாவதாக இருந்த ஒன்று, தந்தை பெரியார் அவர்கள் மிக மிக அதிகமாக வலியுறுத்திய ஒன்று. பொருளாதாரத்தில் சீர் குலைந்துகொண்டிருக்கிற சமுதாயம், மிகப் பெரிய அளவிலே, வறுமையிலே உழன்று கொண்டிருக்கும் சமுதாயம், இந்தத் தமிழ்ச் சமுதாயம். எவ்வளவுதான் வறுமையில் உழன்று கொண்டிருந்தாலும், தங்களுடைய குழந்தைகள் திருமணத்தைச் செய்து வைப்பதென்று வரும்போது, கிராமங்களில் சொல்லுவார்கள், கடன் பட்டாவது திருமணம் செய்ய வேண்டுமென்று சொல்லுவார்கள். இருப்பதை விற்றாவது பெண்ணுக்குத் திருமணத்தை நடத்த வேண்டுமென்று சொல்லுவார்கள். தனக்குச் சோறு இருக்கிறதோ இல்லையோ, பிற்காலத்திற்கு வழி இருக்கிறதோ இல்லையோ, கடனை வாங்கி, தன்னுடைய பிள்ளைகள் தலையிலே கடன் சுமையைச் சுமத்தி விட்டு, திருமணங்களை ஆடம்பரமாக நடத்த வேண்டுமென்ற முனைப்பு இருந்த நிலையில் தமிழ்ச் சமுதாயம் வளர முடியாமல் உழன்று கொண்டிருக்கிறதென்ற உணர்வை—இன்னும் சொல்லப் போனால் கண்டு பிடிக்கப்பட்டது என்ற வார்த்தையைச் சொன்னால் தவறில்லை—அந்தக் கண்டுபிடிப்பை பெரியார் அவர்கள் அன்றைக்கே உணர்ந்ததால், அவர்கள் சுயமரியாதைத் திருமணங்களை நடத்த வேண்டுமென்று அன்றைக்கே முன் வந்தார்கள். அன்று சுய மரியாதைத் திருமணங்களை எளிய முறையிலே நடத்த





வேண்டும், செலவில்லாமல் திருமணங்களை நடத்த முடியுமென்று செய்து காட்டி, இன்றைக்கு அதைச் சாதாரணமாக்கிவிட்டார். அன்றைக்கு அது ஆச்சரியத்திற்குரியது. அந்தத் திருமணங்களை அவரே நடத்தி வைத்தார். அவரே நடத்தி வைத்தார் என்பது மட்டுமல்ல, பல பொதுக் கூட்ட மேடைகளிலே ஆணும் பெண்ணும் ஜோடியாக வந்து, எங்களுக்குத் திருமணம் செய்து வையுங்கள் என்று தந்தை பெரியார் அவர்களிடமும், இயக்கத்தின் தலைவர்களிடமும் கேட்டதும், அவர்களுக்கு மாலை மாற்றி, திருமணம் முடித்து அனுப்பப்பட்டனர். இப்படிப்பட்டவர்களை தம்பதிகள் என்று அனுப்பிவைத்த நிலைமைகள் பலவற்றை தமிழகத்தில் கண்டோம். அந்தத் துறையிலே அவரோடு துணை நின்றவர்கள் என்ற அடிப்படையிலே, இன்றைக்கு நான் மனமார ஒப்புக்கொள்கிறேன், பெருமளவிற்கு திராவிட முன்னேற்றக் கழகத்திலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலும் வயதான தலைவர்களாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள் அந்தக் காலங்களிலே இது போன்ற நடவடிக்கைகளுக்காக பொதுக்கூட்ட மேடைகளுக்கு வருவதையெலாம் நான் சின்னப் பையனாக, ஆரம்பப் பள்ளியில் படிக்கும் பையனாகப் பார்த்தது நினைவிற்கு வருகிறது. அப்படி ஒரு சூழ்நிலை இருந்து, ஒரு நேரத்திலே இந்தத் திருமணங்கள் செல்லுமா, செல்லாதா என்பது பற்றிய மிகப் பெரிய பிரச்சினை, விவாதம் எழுந்தது. இப்படிச் செய்து வைக்கிற சுயமரியாதைத் திருமணங்கள், இப்படிச் செய்து வைக்கிற சீர்திருத்தத் திருமணங்கள் சட்டபூர்வமாக இல்லாமல் இருந்துகொண்டிருக்கின்றன. ஏனென்றால் அன்றைக்கு சமுதாயத்திலே இருந்த நிலைமைகள் அப்படி. அன்று அவரவர்கள் சார்ந்திருக்கின்ற மதத்தின் வழக்குப்படி, மதம் தெரிவித்திருக்கின்ற முறைகளின்படி ஆத்திக முறைப்படி திருமணங்கள் செய்துகொள்வது ஒரு முறை. இன்னொன்று, கஸ்டமரி—அவரவர்கள் சாதி அல்லது பிரிவு, அந்தந்தப் பகுதிகளிலே வழங்குகின்ற முறைகளின் அடிப்படையிலே திருமணங்கள் செய்துகொள்வது. இதுவும் இல்லையென்றால், இதையெல்லாம் தாண்டி நின்று, திருமணப் பதிவாளர் அலுவலகத்திற்குச் சென்று, திருமணத்தைப் பதிவு செய்வது. இந்த 3 முறைகளுக்கு வாய்ப்பு இருக்கிறதென்ற காரணத்தாலே, நாட்டிலே நடைபெறுகின்ற அத்தனை திருமணங்களையும் இந்த 3 தலைப்புகளில் கொண்டு வர முடியுமென்பதால், தனியாக சுய மரியாதைத் திருமணம் அல்லது சீர்திருத்தத் திருமணம் என்ற பெயரிலே நடைபெறுவது முறையா, இவற்றுக்கு சட்டபூர்வமாக அங்கீகாரம் உண்டா, இல்லையா என்ற பிரச்சினை ஏற்பட்டது. அந்தப் பிரச்சினைகளின் விபரீதம் எந்த அளவிற்குச் சென்றது என்றால், சுயமரியாதைத் திருமணங்களின் காரணமாகப் பிறந்த குழந்தைகளுக்கு அல்லது

[திரு. க. இராமமூர்த்தி] [1982 ஏப்ரல் 3

இந்தத் திருமணத்தின் வாயிலாகக் கணவனை இழந்த தாய்மார்களுக்குக் கணவனுடைய சொத்திலே பங்குண்டா, உரிமையுண்டா என்ற நிலைமை எழுந்தபோது, சென்னை நீதி மன்றத்தில் தீர்ப்பு வந்தது. அந்தத் தீர்ப்பு—சுயமரியாதைத் திருமணங்கள், சீர்திருத்தத் திருமணங்கள் செல்லாதவை, முறையற்றவை, இவற்றை அனுமதிக்க முடியாது, சட்ட சம்மதம் இல்லாதவை, ஆகவே இவையெல்லாம் செல்லுபடியாகாத திருமணங்கள் என்று அன்றைக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்த அடிப்படையிலேதான் நாடு முழுக்க ஒரு பய உணர்வே தோன்றியது, வேதனை உணர்வு தோன்றியது. இந்தச் சூழ்நிலையின் அடிப்படையிலே எதிர்காலம் என்னவாகுமென்ற பயம் பிடித்தது. அன்றையதினம் தமிழக முதல்வராகப் பதவி ஏற்றிருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் சுய மரியாதைத் திருமணங்களை, சீர்திருத்தத் திருமணங்களைச் செல்லுபடியாக்கும் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்து, சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் அறிமுகப்படுத்தினார்கள். அப்படி அறிமுகப்படுத்தப்பட்ட அந்தச் சட்ட முன்வடிவு இரண்டு அவையினுடைய பொறுக்குக் குழுவிற்குச் சென்றது. இரண்டு அவைகளிலே பணியாற்றிக்கொண்டிருந்த உறுப்பினர்களைக் கொண்ட பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்குச் சென்றது. நான் மிகுந்த பெருமிதத்தோடு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். அன்றையதினம் காங்கிரஸ் கட்சி சார்பிலே இந்த அவையிலே பொறுப்பு ஏற்றிருந்த, உறுப்பினர்களாகப் பணியாற்றிய, இன்றைக்கும் நம்மோடு வாழ்ந்துகொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சித் தலைவராக விளங்கும் திரு. ராஜாராம் நாயுடு அவர்களும், மறைந்த தலைவர் தேனி என். ஆர். தியாகராசன் அவர்களும் பொறுக்குக் குழுவில் இருந்தார்கள். அவர் எந்த அளவிற்கு தி.மு.க.வை எதிர்த்தார் என்பதை நாடு அறியும். ஆனால் இந்தச் சமுதாயச் சீர்திருத்தப் பணி குறித்து பொறுக்குக் குழுவில் காங்கிரஸ் தரப்பில் அவர் இருந்தார். காலஞ்சென்றவரும், காங்கிரஸ் விடுதலை இயக்கத் தலைவர்களில் ஒருவராக விளங்கியவரின் மகளாக இருந்து, இந்த அவையிலே காங்கிரஸ் கட்சி உறுப்பினராகப் பணியாற்றிய திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி அவர்களும், சட்டமன்றப் பேரவையிலே காங்கிரஸ் கட்சியின் பிரதானக் கொறடாவாக விளங்கிய காலஞ்சென்ற பெரியவர் திரு. கே. விநாயகம் அவர்களும், இன்றைக்கு சட்டமன்றப் பேரவையினுடைய காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவராகப் பணியாற்றுகிற திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களும், அப்போது அந்த அவையிலே இடம் பெற்றிருந்த நானும் அந்தப் பொறுக்குக் குழுவிலே காங்கிரஸ் கட்சித் தரப்பிலேயிருந்து பணியாற்றுகிற வாய்ப்பு ஏற்பட்டது. அதற்குப் பிறகு, அந்தச் சட்டமுன்வடிவு இரண்டு அவைகளிலும் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. நான் நீண்டகால இடை



1982 ஏப்ரல் 3]

வெளிக்குப் பிறகு இந்தச் சட்டமுன்வடிவு மீது நடைபெற்ற விவாதங்களையெல்லாம் 2 நாட்களாக எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது, காங்கிரஸ் கட்சி பிரதான எதிர்க் கட்சியாக விளங்கியது. அதனுடைய தலைவராக விளங்கிய மறைந்த பெரியவர் திரு. கருத்திருமன் அவர்களும், அண்ணா அவர்களும் கம்ப இராமாயணம், திருக்குறள் ஆகியவற்றினை மேற்கோள் காட்டி, இந்த விவாதத்தை எவ்வளவு சுவை மிகுந்ததாக, எவ்வளவு கவி நயம் நிறைந்ததாக, இலக்கியச் சுவை நிறைந்ததாக இரண்டு அவைகளிலும் மாற்றினார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். அப்படி ஏற்று, கொண்டுவரப்பட்ட அந்தச் சமு

(முற்பகல் 11-10)

தாயச் சீர்திருத்தச் சட்ட முன்வடிவு அவையின் ஏகோபித்த ஒப்புதலோடு நிறைவேறியது. சமுதாயச் சீர்திருத்தப் பணிகளிலே 'நாம் கட்சிகளைக் கடந்து செயல்படுகிறோம் என்பதை பெருமையோடு எடுத்துச் சொல்ல முடியும். இது அதற்கு ஓர் எடுத்துக்காட்டாக, நிரூபிப்பாக விளங்குகிறது. அந்த நிலைமையின் அடிப்படையிலே தான் அன்று நடந்த விவாதங்களையெல்லாம் நான் மீண்டும் நினைத்துப்பார்க்கிறேன். அதுகுறித்து பூரிப்படைகிறபோது, அந்தப் பசுமையான நினைவு எனக்கு இன்றைக்கும் வருகிறது. அன்றைக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, நான் சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்தேன். இதுபோல் ஒரு சட்ட முன்வடிவை அன்றைக்கே நான் கொண்டு வந்து அவையின் பரிசிலனைக்கு வைத்தேன். அதுகுறித்து நான் உரிமையோடு, பெருமையோடு இன்றைக்கும் கூறிக்கொள்ள முடியும். எனக்கு அதற்கான அனுமதி அன்றைக்குக் கிடைத்தது. அதுமட்டுமல்ல, அன்றைக்கு இச்சட்ட முன்வடிவு விவாதத்திற்குக் கூட வந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் இடையிலே மறைந்து விட்டார்கள். இடையிலே பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. பிறகு அவையே கலைந்து போனது. அதற்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் அடிப்படயில் தொடர்பெல்லாம் கூட விடுபட்டுப் போய்விட்டது. ஆனால் அன்றைக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆளும் கட்சித் தரப்பிலிருந்து ஒன்றைச் சொன்னார்கள். இதுபோன்ற ஒரு சட்ட முன்வடிவு என்னால் கொண்டுவரப்பட்டு, அது அவையின் முன் விவாதத்திற்குப் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, விவாதம் முடியும் சமயத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தெளிவாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். "இது தனியார் என்கிற அளவில் இராமமூர்த்தி அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவரை திரும்பப் பெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு மாறாக

திருமணத்தைப் பொறுத்தவரையில், திருமணத்தை நடத்தி வைக்கின்ற பாதிரியாரே, (Priest) ரெஜிஸ்டிரார் ஆக மாறி விடுகிறார். அப்படிச் செய்வதை அவர்களுடைய மத அமைப்பிலே சட்ட பூர்வமாக ஏற்றிருக்கிறார்கள். அந்த அளவிற்கு இங்கிலாந்திலே அதுபற்றி பல்வேறு சர்ச்சைகள் எழுந்து, கத்தோலிக்க இயக்கத்திலே ஏற்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக, கொஞ்சம் கொஞ்சமாகச் சட்டங்களைக் கொண்டுவந்து இறுதியாக இத்தகைய நிலையை அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். இதை நான் பல்வேறு மதத்தினர் திருமணங்களைப் பற்றிய நிலைகளைப் பார்த்து தெரிந்து கொண்டேன். எந்தத் திருமணமாக இருந்தாலும், அவர்கள் பதிவு செய்கிறார்கள். அதுபோலத்தான் - முஸ்லிம் மதத்தில் செய்யப்படுகிற திருமணங்களும் அவர்களுடைய பதிவேடுகளிலும் திருமணம் பதிவு செய்யப்படுகிறது. இந்து மதத்தைப் பொறுத்தவரையில், அதற்கான அவசியமே இல்லை என்கிற நிலைமையில், திருமணங்கள் நடைபெறுகிற முறையினால் ஏற்பட்ட ஒன்றாகும் அது. ஒரு இந்து திருமணம் நடைபெறுகிறது என்று சொன்னால், ஊர் கூடித் திருமண விழாவாக நடைபெறுகிறது. ஊர் முழுக்கச் சொல்லித் திருமணம் நடைபெறுகிறது. திருமணம் என்றால், தொடர்புடையவர்கள் தாங்களாகவே அதை விளம்பரப்படுத்துகின்ற நிலைமையில் திருமணம் நடைபெறுகிறது. அப்படிப்பட்ட திருமண முறை தங்களால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று என்கிற நிலைமை சமுதாயத்தில் ஏற்பட்டு விட்டது. ஆதலால், இப்படிப்பட்ட திருமண முறையினால், திருமணம் முடிந்து, சில காலத்திற்குப் பிறகு இந்த இருவருக்கும் திருமணம் நடைபெறவில்லை என்று சொல்கிற நிலைமை வரும்போது, என்ன ஆகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படித் திருமணம் நடைபெற்ற பிறகு, சில ஆண்டுகளுக்குப் பிறகு ஏதோ காரணங்களால் நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டிய அவசியம், கட்டாயம் ஏற்பட்டபோது, இந்த நிலைமைகள் ஏற்பட்டன. திருமணம் நடைபெற்றதற்கான முழுமையான சாட்சியம் (Conclusive Proof) அன்று சாமுதாயத்தின் அமைப்பின் காரணமாக அந்த வகையில் ஏற்பட்டது. ஆனால் இன்றைக்குக் காலம் மாற மாற வேறு விதமாகத் திருமணங்கள் நடைபெறுகின்றன. இருவேறு மதத்தைச் சார்ந்தவர்களிடையே திருமணங்கள் நடைபெறுகின்றன. இருவேறு சமயத்தைச் சார்ந்தவர்கள் அல்லது இருவேறு சாதியைச் சார்ந்தவர்கள் திருமணம் செய்து கொண்டால், அவர்கள் வசதி படைத்தவர்களாக இருந்தால், அவர்களுடைய பின் சந்ததியினர்களுடைய வாழ்க்கை முறையாகவும் சங்கடமில்லாமலும் அமைகிற நிலை இருந்தது. ஆனால் வறுமையில் உழல்பவர்கள் இத்தகைய திருமணத்தை மேற்கொண்டால், திருமண நேரத்தில் அவர்களுடன் சம்பந்தப்





(முற்பகல் 11-20)

பட்டவர்கள் அதற்கு ஆதரவு அளித்தாலும்கூட, பின்னர் அத்தகைய தம்பதிகள் அல்லது அத்தகைய தம்பதிகளின் பின் சந்ததியினர் அவதிப் படுகிற நிலைமை ஏற்பட்டபோது, அவர்களுக்கு ஒரு இன்னல் ஏற்பட்ட போது, அந்தத் தம்பதிகளில் பெண்வழி உறவினர்கள் அல்லது ஆண்வழி உறவினர்கள் அவர்களுக்குத் துணையாக இருந்தார்களா என்றால், இல்லை. தங்களை மதிக்காமல் அவர்கள் திருமணம் செய்துகொண்டதால், எப்படி அல்லல்படுகிறார்கள் பாருங்கள் என்றுதான் மற்றவர்களிடம் சுட்டிக்காட்டிச் சொல்லுகிற நிலை ஏற்பட்டது. அல்லது நம் மரபுகளை மதிக்காமல் திருமணம் செய்து கொண்டார்கள். அதனால் எப்படிக் கஷ்டப்படுகிறார்கள் பாருங்கள் என்று சொல்லுகிற நிலைதான் இருக்கிறது. அந்தத் தம்பதி களில் ஒருவர் அல்லது இருவருமே இறந்து போனால், அவர்களுடைய சந்ததியினர் நாதியற்றுப் போகிற நிலையில் அவர்களெல்லாம் யாருடைய பாதுகாப்பும் இல்லாமல் சமுதாயத்திற்குச் சுமையாகத்தான் உருவாக்கப்படு கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, சுயமரியாதைத் திருமணங்கள் என்பவை, அரசியல் ரீதியாக அவற்றின் அந்தஸ்து எதுவாக இருந்தாலும், இந்த சமுதாயத்தில் அத்தகைய திருமணங்களைப் பொறுத்தவரை, ஏதோ ஒரு இரண்டாந்தர திருமணங் களாக மதிக்கப்பட்டன. சமுதாயத்தில் அத்தகைய திருமணங்களுக்கு ஒரு முழுமையான அங்கீகாரம் இல்லாமல் இருந்தது. அதில் இன்னொரு சாபக் கேடு ஒன்றும் இருந்தது. கலப்புத் திருமணம் அல்லது சுயமரியாதைத் திருமணம் நடைபெற்று என்ன காரணத்தாலோ அத்தகைய தம்பதிகளுக்குள் பிணக்கு ஏற்பட்டு, அவர்கள் ஒருவரோடு ஒருவர் சேர்ந்து வாழ இயலாத நிலையில் நீதி மன்றங்களுக்குச் சென்று தங்களுடைய உரிமைகளை நிலை நாட்டுவதற்கு முயற்சிகளை மேற்கொள்கிறபோது, அத்தகைய திருமணங் களை மறுக்கிற சூழ்நிலைதான் இருந்தது. இப்படித் திருமணம் நடை பெற்றது என்பதையே கூட திருமணம் செய்து கொண்டவர்கள் மறுக்கிற நிலைதான் இருந்தது. அத்தகைய நிலைமைகளில் அதிகமான அவதிக்கு யார் உள்ளானார்கள்? பெரும்பாலும் தாய்மார்கள், பெண்கள்தாம். அவர்கள்தாம் இப்படி ஒரு திருமணம் நடைபெற்றது என்று நிரூபிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகிறார்கள். அத்தகைய நிலைமைகளில் அவர்களால் நான்கு பேருக்குத் திருமண அழைப்பிதழ்கூட அச்சடிக்காமல் திருமணம் செய்துகொண்டவர்கள் நிலையென்ன? கிராமங்களைப் பொறுத்த வரை திருமண அழைப்பிதழ் கொடுப்பதில்லை. அதுமட்டுமல்ல, இத்தகைய

[திரு. க. இராமமூர்த்தி] [1982 ஏப்ரல் 3

திருமணங்கள் நடைபெற்று அவைகளுக்கான திருமண அழைப்பிதழ்கள்
கொடுக்கப்பட்டிருந்தாலுங்கூட, அவைகளை எந்த அளவுக்கு நம்புவது என்ற
பிரச்சினையும் இருந்தது. எனவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் திருமணமே
நடந்ததா இல்லையா என்பதை நிரூபிப்பதற்கான சாட்சியம் தேவைப்படு
கிறது. இன்றைக்கு இருக்கிற சமுதாய அரசியல் நிலைமைகள் காரணமாக,
இப்படிப்பட்ட வழக்குகள் நீதிமன்றங்களுக்கு முன்னால் வருகிறபோது, இரு
சாரார்க்கும் திருமணம் நடைபெற்றது அல்லது திருமணம் நடைபெறவில்லை
என்று சொல்வதற்கான முறையில் தாராளமாகச் சான்றுகள் கிடைக்கின்றன.
அதனால் நீதிபதிகள் ஒரு முடிவுக்கு வருவதற்கு இயலாமல் அல்லல்படுகிற
நிலை இருக்கிறது.

ஆனால் சரியான சாட்சியம் இல்லாமல் ஏழைகள் திருமணம் செய்து
கொண்டால், அதன் காரணமாகவும் பின்னாலே, இடர்ப்படுகிற சூழ்நிலை
தான் இருக்கிறது. இதற்கு மேலாக இன்னொன்றையும் நான் அவையின்
கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிறப்பு இறப்புப் பதிவேடுகளைப் போல இந்தத் திருமணப் பதிவேடும்
அரசின் ஆவணமாகப் பயன்பட்டு, சட்டத்திற்கு விரோதமாகக் குற்றம் புரிப
வர்களை ஒழிப்பதில் உதவி புரியும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.
திருமணம் செய்து கொண்ட பிறகு — சில காலத்திற்குப் பிறகு ஏற்படுகிற
புதிய சபலங்கள் அல்லது ஆசை காரணமாக, பொருளாதார சூழ்நிலை காரண
மாக அல்லது வேறு பல காரணங்களின் அடிப்படையில் சட்ட பூர்வமாக
இத்தகைய திருமண பந்தத்திலிருந்து விலக்கு பெறுவதற்கு பதிலாக, ஒருவர்
இன்னொருவரை ஏமாற்றுவதற்கும், திருமணமே நடைபெறவில்லை என்று
சொல்லிவிட்டுத் தப்பித்துக்கொள்வதற்கும் தற்போது வழிமுறைகள் நிறைய
இருக்கின்றன. எனவே அத்தகைய நிலைமைகளிலிருந்து தப்புவதற்கும்,
திருமணம் செய்து கொண்டவர்களுக்கு ஒரு பாதுகாப்பாக அமைய வேண்டும்
என்ற அடிப்படையில்தான் இந்தச் சட்டமுன்வடிவு கொண்வரப்பட்டிருக்
கிறது. இதன் காரணமாகவே இந்த நாட்டில் நடைபெறும் அனைத்துத்
திருமணங்களும் பதிவு செய்யப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் குறிப்பிட
விரும்புகிறேன்.

சில மதங்களில் அவரவர்களின் கோட்பாட்டிற்கு இணங்க பொது இடங்
களிலோ அல்லது ஆலயங்களிலோ தங்களின் திருமணத்தை நடத்திக்கொள்
கிறார்கள். எனவே அங்கெல்லாம்கூட திருமணங்கள் நடைபெறும்போது,
அவற்றைப் பதிவு செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அத்தகைய அமைப்பு
களிலிருந்து அரசாங்கம் தகவல்களைப் பெறுவது முறையாக இருக்கும். அவர்



1982 ஏப்ரல் 3]

களிடமிருந்து வாரத்திற்கொரு முறையோ அல்லது மாதத்திற்கு ஒரு
முறையோ அல்லது அரசு எப்படி விரும்புகிறதோ அந்த அடிப்படையில்
திருமணப் பதிவுகளைப் பொறுத்த பட்டியல்களை வரவழைத்து, அதற்கான
ரிஜிஸ்தர்களை 'மெயின்டெயின்' செய்ய முடியும். என்னைப் பொறுத்த
வரை இதை வாரா வாரம் செய்ய முடியும் என்று இந்தச் சட்டமுன்வடிவில்
தெரிவித்திருக்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** திருமணங்களைப் பதிவு செய்வதுபற்றி
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். கோடிக் கணக்கான
மக்கள் வாழும் இந்த நாட்டில் இது எளிதாகச் செய்யக்கூடியதா ? அதற்கான
வழிமுறைகளாக மாண்புமிகு உறுப்பினர்கள் எவற்றைச் சொல்ல விரும்பு
கிறார் ?

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு உறுப்பினர்கள் தற்போது சார்ந்திருக்
கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவதற்கு முன்பு தாய்க் கழக
மாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையை ஏற்று ஆட்சிப்
பொறுப்பில் இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த
போது, அன்றையதினம் சட்டத் துறை அமைச்சராகப் பணியாற்றிய மாண்பு
மிகு திரு. மாதவன் அவர்கள் அதற்கான பதிலைத் தந்திருக்கிறார்கள்.
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அண்ணாவின் மீது இருக்கிற பற்று காரண
மாக அண்ணா அவர்கள் நிறைவேற்றிய சமுதாயச் சீர்திருத்த முதல்
சட்டத்தைப்பற்றிய விவரங்களை முழுக்கப் படித்துவிட்டு வந்து எனக்குத்
துணையாகப் பேசுவார் என்றுதான் எதிர்பார்த்தேன். ஆனால் அவரோ. . .

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** துணையாக இருக்கத்தான் விரும்பு
கிறேன். அந்தக் காரணத்தால் தான் இதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.
அண்ணா அவர்கள் கருத்துச் சொல்லியிருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் ஏதேனும் புதிய சூழ்நிலையில் புதிய கருத்துக்களைச் சொல்வார்
என்று எதிர்பார்த்துத்தான் இதைக் கேட்டேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** அதுபற்றிய விவரங்களை நான் சொல்ல
விரும்புகிறேன். பதிவு முறை தேவை என்பது மட்டுமல்ல, இன்னொன்றையும்
தெரிவிக்க விரும்புகிறேன். திருமணங்களைப் பதிவு செய்தல் என்கிற முறை
இன்றையதினம் எல்லா நாடுகளிலும் பின்பற்றப்படுகிறது. நமது நாட்டைத்
தவிர மீதியுள்ள அனைத்து நாடுகளிலும் திருமணங்களைப் பதிவு செய்யும்
முறை இருக்கிறது. அங்கெல்லாம் ரிஜிஸ்தர் 'மெயின்டெய்ன்' செய்யப்படு
கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், சமுதாயச் சீர்திருத்

தத்திற்கு முன்னோடியாக இருக்கிற காரணத்தால், அந்த வகையில் இந்தியாவிற்கே வழிகாட்டியாக இருப்பதால், இந்தத் துறையிலும் வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

திருமணங்களைப் பதிவு செய்தலைப் பொறுத்தவரை, அதற்கான வழிமுறைகளைப்பற்றி என்னுடைய சட்டமுன்வடிவிலேயே தெரிவித்திருக்கிறேன். 1967ஆம் ஆண்டு நவம்பர் 28ஆம் தேதி தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் இந்தச் சட்டமுன்வடிவு பற்றி - 1967ஆம் ஆண்டு இந்து திருமண (தமிழ் நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/67) பக்கம் 391 ல் 2 வது பாராவில் அன்றைய மாண்புமிகு சட்ட அமைச்சர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்.

" திருமணங்களைக் கட்டாயமாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற கருத்து நல்ல கருத்துதான். ஆனால் சுயமரியாதைத் திருமணங்களுக்கு மட்டும் இந்த விதிகள் இருக்க வேண்டும், மற்றவைகளுக்கு வேண்டாம் என்று சொல்லக்கூடாது. அப்படி வேறுபாடுகள் இருக்கக்கூடாது. எல்லாத் திருமணங்களையும் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டும் என்ற கருத்து வரும்போது, யாரும் இதை ஆட்சேபிக்க முடியாது. ஏன் இப்போது அதைக் கொண்டுவரக் கூடாது என்று கேட்கலாம். ஏனென்றால், இப்போது எல்லா

(முற்பகல் 11-30)

இடங்களிலும் பதிவு செய்யக்கூடிய வாய்ப்பில்லை. துணைப் பதிவாளர்களுக்கு மட்டும்தான் இந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறோம். மற்றும் கிராம அதிகாரிகளுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுக்கலாமா என்ற கேள்வி எழுந்தது. இந்த அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுத்தால், எந்த அளவிற்கு பயன்படும் என்பது சந்தேகத்துக்குரிய செய்தியாக இருக்கிறது. கட்டாயம் என்று வரும்போது, கட்டாயம் பதிவு செய்ய வேண்டுமென்றால், அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம் என்று இருக்கிறோம். திருமணத்திற்கு சிலர் சாட்சியாக இருக்க வேண்டும் என்று மற்றவர்கள் சொல்லியிருக்கிறார்கள்." என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இதைக் கிராம அதிகாரிகளின் அடிப்படையிலே வைத்துச் செய்ய முடியும் என்ற உணர்வு 1967 ஆம் ஆண்டிலேயே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பொதுவான கருத்தை அன்றைக்கே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னுமொன்றை நினைவுபடுத்துவது என்னுடைய கடமை என்று நினைக்கிறேன். அன்றையதினம் சட்டமன்றப் பேரவையில் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவராக விளங்கிய மறைந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.



" The first point which I would like to place before this Hoube for consideration is the registration of marriages. A Register of marriages whether they are solemnised as Suyamariyathai marriages, whether they are solemnised under the suyamariyathai or Seerthirutha form or in the orthodox from should be maintained so that it may be available as evidence of proof of marriage at subsequent legal proceedings, if any and this would obviate many of the legal difficulties."

ஆகவே இதை நான் புதிதாகக் கண்டுபிடித்துக் கொண்டு வந்திருக்கிறேன் என்ற பெருமைக்கு ஆளாக்கிக்கொள்ளத் தயாராக இல்லை. மற்றவர்களின் உணர்வின் அடிப்படையிலே, மற்றத் தலைவர்கள் அழுத்தமாகத் தெரிவித்த கருத்தின் அடிப்படையிலே என்னால் முடிந்த அளவிற்கு இந்த அவையின் மேலான கவனத்திற்கு, அதன் பரிசிலனைக்கு வைக்கிறேன் என்ற உணர்வு எனக்கு இருக்கிறது.

நான் கொடுத்திருக்கிற சட்ட முன்வடிவில் பதிவு செய்கிற முறைகளை எந்த அளவிற்கு எளிமைப்படுத்த முடியுமோ அந்த அளவிற்கு எளிமையாக்கியிருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பது எனது கடமையென்று கருதுகிறேன். ஒவ்வொரு மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி அல்லது கிராமம் என்ற அடிப்படையிலே இந்தத் திருமணங்களை எப்படி எளிமையாக, செலவு இல்லாமல் பதிவு செய்ய முடியும் என்பதைத் தெரிவித்திருக்கிறேன்.

**திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொல்லுவது, கிராமத்தில் ஜனன, மரண கணக்குகளை எழுதுவதைப் போலா என்று கேட்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** திருமணத்தைப் பதிவு செய்ய வேண்டிய முறை பற்றி சட்ட முன்வடிவிலே தெரிவித்திருக்கிறேன். அதிலே ஜனன, மரண என்ற கணக்கு அல்ல.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள், குறிப்பிட்டபோது, இந்த அவையின் கூட்டத்தை முடிக்கின்ற " ஜனகனமன " பாட்டாக வந்துவிடுமோ என்று நினைத்தேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** அதனாலேதான் நான் பிறப்பு-இறப்பு என்ற தமிழ் சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறேன். இந்தச் சங்கடங்கள் எல்லாம் வரும் என்பதால்தான், நடைமுறையில் எப்படிப் பதிவு செய்யலாம் என்ற

கருத்துக்களை நான் தெரிவித்திருக்கிறேன். இதுதான் ஏற்கப்பட வேண்டுமென்ற உணர்வோடு இதை நான் இங்கே கொண்டுவரவில்லை என்பதை நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர்கள் வேண்டிய அளவிலே இதற்குத் திருத்தம் கொடுத்தால், அதனைத் தேவைப்படுகிற அளவிலே ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். தந்தை பெரியாரோடு நீண்ட காலம் சமுதாயச் சீர்திருத்தத்தில் தங்களை அர்ப்பணித்துக்கொண்ட திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அவைத் தலைவர், பெரியவர், திரு. சு. வே. ஆ. வள்ளிமுத்து அவர்கள் எல்லாம் இங்கே உறுப்பினர்களாக இருப்பதை பெருமையாக எண்ணி திரும்பத் திரும்ப மகிழ்ச்சி அடைபவன் நான். சுயமரியாதை இயக்க ஆரம்பக் காலங்களில் எந்த அளவிற்கு அவர்கள் சிரமப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்தவன். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் இங்கே இருக்கின்றபோது, அவர்களுடைய துணை இருக்கிறது என்ற தைரியத்திலேதான் இதுபோன்ற சட்ட முன்வடிவை இங்கே நான் கொண்டு வந்திருக்கிறேன். அவர்கள் உரிமையோடு இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்துப் பேசுவார்கள் என்று எதிர்பார்த்தேன். அதற்கும் மேலாக தந்தை பெரியார் அவர்களுடைய கருத்தை, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கருத்தை, டாக்டர் கலைஞர் அவர்களுடைய கருத்தை, புரட்சித் தலைவர் அவர்களுடைய கருத்தையெல்லாம் ஒருங்கிணைத்து, திருத்தங்கள் வேண்டுமென்றால் கொடுத்து, இதை நிறைவேற்றுவார்கள் என்று எதிர் பார்க்கிறேன். அதற்கு நேரம் இருக்கிறது, வாய்ப்பு இருக்கிறது. எல்லோருடைய கருத்தையும் சேர்த்துத்தான் நான் கொண்டு வந்திருக்கிறேன். ஆகவேதான் ஆரம்பத்திலேயே, தேசிய இயக்க உணர்வுகளை உட்படுத்தி இதைக் கொண்டு வந்திருக்கிறேன் என்று சொன்னேன். காந்தியடிகளின் உணர்வுகளை பல்வேறு நடவடிக்கைகளின் அடிப்படையிலே கொண்டு வந்திருக்கிறேன். இன்றைக்கு இந்தியாவின் பிரதமராக விளங்குகிற அன்னை இந்திரா காந்தி அவர்கள், உலகத்திலே இருக்கின்ற எந்தத் தலைவரும் செய்யாத காரியத்தைச் செய்தவர் என்பதை பெருமையோடு சொல்லமுடியும். பிரதமர் அவர்கள் தன்னுடைய மகன் திருமணத்தை நடத்தியதைப் போல அவ்வளவு குறைந்த செலவிலே யாரும் செய்ததில்லை என்பதை நிமிர்ந்து நின்று, உரிமையோடு, பெருமையோடு சொல்ல முடியும். நாற்பது பேருக்குக் கூட அழைப்பு கிடையாது. அது கலப்புத் திருமணம் என்பதோடு மட்டுமல்லாமல், ரிஜிஸ்ட்ரார் வைத்து பதிவு செய்யப்பட்ட திருமணம். அழைக்கப்பட்டவர்கள் மட்டும்தான் வர வேண்டுமென்ற அளவிலே, திருமணத்தை எந்தவித விளம்பரமும் இல்லாமல் நடத்தினார்கள். சீர்திருத்தக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, செயல்பட்டு, மிகச் சிறப்பாக



எளிய முறையில், சட்ட ரீதியாக நடத்திக் காட்டி, தன்னுடைய புரட்சிகரமான சீர்திருத்தக் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துக்காட்டியவர் உலகத்திலேயே அன்னை இந்திரா காந்திதான் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லுவது எனது கடமையென்று கருதுகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி தன்னுடைய மகள் திருமணத்தை எப்படிச் செய்வதாக இருக்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** என்னுடைய மகளுக்கு, நிச்சயமாக சீர்திருத்தத் திருமணம் செய்து வைப்பேன். இன்னுமொன்றையும் சொல்ல விரும்புகிறேன். எங்களுடைய குடும்பத்தில் எத்தனை சீர்திருத்தத் திருமணங்கள் நடைபெற்றன, அதிலே இன்றைக்கு பல்வேறு பொறுப்புகளில் இருக்கின்றவர்கள் திராவிட இயக்கத்திலே கலந்திருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்திப் பார்க்கவேண்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நம்முடைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் தன்னுடைய மகன் திருமணத்தை எளிய முறையில் நடத்தினார் என்று சொன்னார்கள். ஆகவே இப்படிப்பட்ட தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி தன்னுடைய வீட்டுத் திருமணத்தை எப்படிச் செய்யவிருக்கிறார் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் பிரதமர் 40 பேருக்கு அழைப்பு அனுப்பியதாகச் சொன்னார். அப்படியானால் மாண்புமிகு உறுப்பினர் எங்களுக்கு அழைப்பு அனுப்புவாரா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** என்னுடைய குழந்தைகள் திருமணத்தை நிச்சயமாக எளிய முறையில், செலவு இல்லாத வகையில், செய்ய விரும்புகிறேன். ஆடம்பரமாக என்னால் செய்ய முடியாது. அந்த அளவிற்கு வசதி கிடையாது. ஆகவே அப்படிச் செய்ய வேண்டுமென்று நினைத்தாலும் முடியாது. கலப்புத் திருமணமாக இருக்க வேண்டுமென்று நான் கட்டாயப் படுத்த முடியாது. அது அவர்களுடைய உரிமை. அவர்களே தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டிய ஒன்று. எப்படி அமைய வேண்டும் என்பதைப் பொறுத்தவரையில், திருமணம் செய்துகொள்பவர்கள் முடிவு செய்ய வேண்டும். ஆனால் திருமண முறை எப்படி அமைய வேண்டும் என்ற நேரத்தில், தந்தையாகப் பொறுப்பு வகித்து நான் இருந்து நடத்துகிற பொறுப்பிலே இருக்கிறபோது, நிச்சயமாக சட்டபூர்வமான சுயமரியாதை அல்லது சீர்திருத்த முறை.

நம்பிக்கையற்ற திருமணமாகத்தான் அமையும் என்பதை உறுதியாகச் சொல்ல முடியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் நான் ஆரம்பத்திலே பேசியபோது இல்லாமல் போய்விட்டார். தேசிய அளவிலே தலைவர்கள் ஆரம்பக் காலங்களில் வழிகாட்டியிருந்தாலுங்கூட, இந்தியாவினுடைய பல்வேறு மாநிலங்களில், அரசியல் விடுதலைப் போராட்டத்தின் காரணமாக, சமுதாயப் புரட்சி இயக்கம் வலுப்பெறத் தவறிவிட்டது. அது தமிழகத்திலேதான் வலுப்பெற்றது என்பதை ஆரம்பத்திலேயே சொன்னேன்.

அழைப்பு அனுப்பப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் கேட்டார்கள். அந்த நாற்பது பேரில் அவரையும் கொண்டு வருவதற்கு நான் முயற்சி செய்கிறேன். இல்லையென்றால் திருமணத்தை நடத்திவிட்டு அறிவித்துவிடுவேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** எங்களையும் மறந்துவிட வேண்டாம். இப்போது உங்களுக்குள் அழைத்துக் கொள்வதிலேயே சங்கடம் வந்திருப்பதைப் பார்த்தால், வேறு ஏதாவது பிளவு ஏற்பட்டிருக்கிறதா என்ற சந்தேகம் வருகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** இதன்மூலம் எங்களுக்குள்ள உறவை மிகத் தெளிவாக ஆக்கிக் கொண்டிருக்கிறோம். அந்த அளவிலே நீங்களும் சேர வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.

(முற்பகல் 11-40)

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் வெற்றி பெற்றார்கள் என்று தெரிகிறது. அவர்கள் எப்படியோ முயன்று எப்படி திருமணம் நடத்த அழைப்பு அனுப்புவார்கள் என்று கேட்டுப் பார்த்தார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சிக்கிறேன் என்பதிலேயிருந்து, அதிலே அவர் தோல்வியுற்றதாக எனக்குத் தெரிகிறது. அவர்கள் 40 பேர்களைத்தான் அழைப்பதாகச் சொன்னார்கள். 40 பேர்களுக்குத்தான் "இன்விடேஷன்" என்று தெளிவுபடுத்தியதற்காக மகிழ்ச்சி.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த திருமணங்களைப் பொறுத்தவரையிலே, நான் இன்னொன்றைச் சொல்லாமல் முடித்தால், என்னுடைய கடமையிலேயிருந்து தவறியவனாகிவிடுவேனோ என்று கருதுகிறேன். திராவிட இயக்கத்தைப் பற்றிச் சொன்னேன். காங்கிரஸ் பற்றிச் சொன்னேன். அடுத்து, கம்யூனிஸ்ட் கட்சி பற்றி நான் சொல்லியாக



வேண்டும். அதுதான் என் கடமை. பல தலைவர்கள், பொருளாதார ரீதியாக, அவரவர்களுடைய சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டு அந்த சித்தாந்தத்தின் அடிப்படையிலே செயல்படுகின்றார்கள் என்றாலும்கூட, இதுபோன்ற புரட்சிகரமான மாற்றங்களை அவரவர்கள் வாழ்க்கையிலே நடத்திக் காட்டிக் கொண்டிருக்கின்ற நிலைமையிலே இருக்கிறார்கள். இன்றைக்கு டாக்டர் சுப்பராயன் அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்த, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவராக விளங்கிய, மறைந்த மோகன் குமாரமங்கலம் அவர்கள் வாழ்க்கையிலே வேறு மாநிலத்தைச் சார்ந்தவரோடு எப்படி கலப்புத் திருமணத்தைச் செய்து கொண்டார்கள். வழி காட்டினார்கள் என்பதை என்னாலே நினைவு கூர முடிகிறது. அதுபோலவே திரு. பூபேஷ் குப்தா அவர்கள் எந்த அளவுக்கு இதனை தமது சொந்த வாழ்வில் ஏற்று இருக்கிறார்கள் என்பதையும் நான் எண்ணிப் பார்க்கிறேன். கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவராக விளங்குகின்ற திரு. இராமமூர்த்தி அவர்கள் அவர்களுடைய குடும்பத்திலே இது போன்ற திருமணங்களை எப்படி செய்து வைத்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். இந்த அவையினுடைய மாண்புமிகு அங்கத்தினர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய, தமிழகக் கிளையின் பொதுச் செயலாளர் திரு. மாணிக்கம் அவர்கள் தானே கலப்புத் திருமணத்தை ஏற்று எப்படி வாழ்க்கை நடத்துகின்றார் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். இதையெல்லாம் பெருமிதத்தோடு எண்ணிப் பார்க்கின்றபோது, சமுதாயச் சீர்திருத்த நோக்கம் மட்டுமல்ல, அந்த அடிப்படையிலே வருகின்ற சட்டங்களுக்கு, சீர்திருத்தங்களுக்கு இந்த அவை நிச்சயமாக துணை நிற்கும் என்ற உணர்வை என்னாலே பார்க்க முடிகிறது. எனவே இந்தச் சட்ட முன்வடிவு இங்கே இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களுடைய, அல்லது அரசியல் இயக்கத்தினுடைய அல்லது அரசியல் இயக்கத்திற்கு அப்பாற்பட்டிருக்கக்கூடிய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற ஒன்றாக இருக்கிறது என்ற மன நிறைவோடு இந்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு அங்கத்தினர்களின் மேலான கருத்துக்களை, ஆலோசனைகளைத் தருவதற்கு, விரும்பினால் திருத்தங்களைத் தருவதற்கு அவர்களுடைய பரிசீலனைக்கு வைக்கிறேன். அரசு இந்தச் சட்ட முன்வடிவை ஏற்று என்னுடைய இந்தச் சட்ட முன்வடிவைச் சட்டம் ஆக்கியது என்ற பெருமித உணர்வை எனக்குத் தரவேண்டுமென்று விரும்புகிறேன். ஒருவேளை வேறு சூழ்நிலைகள் காரணமாக அப்படி அரசு அதைச் செய்ய முடியாமல் இருக்குமானால், அரசு தரப்பிலே இதனையே கொண்டு வருவதாக இருந்தாலும்கூட ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். இதிலே போட்டியே கிடையாது. செய்ய வேண்டுமென்ற உணர்வோடு, அரசு செய்யும் என்ற நம்பிக்கையோடு

இருக்கிறேன். இந்த அரசு அதை ஏற்கவில்லை என்றால், வேறு எந்த அரசு ஏற்றுச் செய்யப் போகிறது? மாண்புமிகு அங்கத்தினர்களும் அவர்கள் கருத்தைச் சொல்ல வேண்டும் என்று வேண்டி அவர்கள் பரிசீலனைக்கு இந்தச் சட்ட முன்வடிவை வைக்கிறேன்.

திரு. சி. இராமலிங்கம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அங்கத்தினர் திரு. திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் 1979 ஆம் ஆண்டு திருமணங்கள் கட்டாயப் பதிவு செய்தல் சட்டமுன்வடிவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். நான் அவரைத் தனிப்பட்ட முறையிலே பாராட்டுகிறேன். சுய மரியாதைத் திருமணம், கலப்புத் திருமணம் என்ற சூழ்நிலையிலே நான் என்னுடைய சிறு பிராயத்திலே நடந்த நிகழ்ச்சியை நினைத்துப் பார்க்கிறேன். இன்றைக்கு சுய மரியாதைத் திருமணங்கள் என்று சொல்லக்கூடிய அந்தத் திருமணங்கள் யாரால் வந்தன, இந்த நாட்டிலே பாரம்பரியமாக மதவாதிகளாலும், அதே நேரத்திலே பெரியவர்களாலும், ஜாதித் தலைவர்களாலும் எப்படியெப்படி கடைப்பிடிக்கப்பட்டன என்பதை நான் நினைவு கூர விரும்புகிறேன். வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை ஆண்ட காலத்திலே பதவிகள் பெயராலும் உத்தியோகங்கள் பெயராலும் போட்டி ஏற்பட்ட நிலைமையிலேதான், அன்றைக்கு அரசியல் விழிப்புணர்ச்சி காங்கிரஸ் கட்சிக்கு ஏற்படவில்லை என்ற எண்ணத்தில், தென்னகத்தைச் சேர்ந்த நம்முடைய மதிப்பிற்குரிய காலஞ்சென்ற அமரர் வெள்ளுடை வேந்தன் என்று எல்லோராலும் போற்றப்பட்டு புகழ்பெற்ற சர். பி. தியாகராஜ செட்டியார் அவர்களும், டாக்டர் நாயர் அவர்களும், திரு. நடேச முதலியார் அவர்களும் ஒன்றாகச் சேர்ந்து, இந்த சென்னை ராஜ்ஜியத்திலே பிராமணர்களுக்கே பதவிகளில் இருப்பதற்கு அந்த வெள்ளைக்காரர்கள் சலுகைகள் அளிக்கின்றார்கள் என்ற அடிப்படையிலே தான், பிராமணர்கள் அல்லாதார் இயக்கத்தைக் கண்டார்கள். நாளாவட்டத்தில் படித்தவர்களிடையே, பிராமணர் அல்லாதார் மக்களிடையே அது பரவி ஏன் அவர்கள் தங்களை பிராமணர் அல்லாதார் கட்சி என்று வைத்துக்கொள்ள வேண்டும், தென் இந்தியர் நல உரிமைச் சங்கம் என்று என் ஏற்படுத்தக்கூடாது என்ற கருத்து ஏற்பட்டு, அதற்குப் பிறகு அந்தக் கருத்தை மாற்றினார்கள். அதுவே தென் இந்தியர் நல உரிமைச் சங்கம் என்று ஆகியிருக்கிறது. அன்று அது இந்தியாவிலேயிருந்து பிரிந்துவிடுகின்ற ஒரு இயக்கம் என்று காங்கிரஸ்காரர்களால் பிரச்சாரம் செய்யப்பட்டதால், அதுவே அன்றைக்கு ஜஸ்டிஸ் கட்சி என்று உருவாகி, பல போராட்டங்களை வெள்ளைக்காரர்களுடன் நடத்தி அவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். ஆட்சிப்





பொறுப்பிற்கு வந்த பிறகு கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் இருந்தார்கள். மாண்புமிகு திரு. இராமமூர்த்தி அவர்கள் எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஓமந்தூர் ரெட்டியார் அவர்கள்தான் முதலமைச்சராக இருந்தார்கள் என்று சொன்னார்கள். நானும் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன் தான். திரு. சுப்பராயன் ரெட்டியார் அவர்கள்தான் வெள்ளைக்காரர் காலத்திலே முதன் முதலாக முதலமைச்சராக வந்தார்கள். எதற்குச் சொல்கின்றேன் என்றால், அன்றைக்கு அட்வைசரி போர்டு என்றும், துபாஷ் என்றும் வைத்துக்கொண்டு வெள்ளைக்காரர்கள் ஆட்சி நடத்தினார்கள். அப்போது பட்டம் பெற்றவர்கள் பதவியிலே இருந்தார்கள். அதைப் பார்த்த போது, ஏதோ அவர்கள் உயர் ஜாதிக்காரர்கள் என்ற ஒரு அடிப்படை எண்ணம் வந்ததால்தான் சர். பி. தியாகராஜ செட்டியார், திரு. நடேச முதலியார், டாக்டர் நாயர் இவர்கள் எல்லாம் சேர்ந்து தாழ்ந்த சமுதாயம், உயர்ந்த சமுதாயம் என்று நான்கு ஜாதிகள் என்று இந்து மதத்திலே வர்ணிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த ஆபாசத்தை, கட்டுப்பாட்டை, பிரிவினையை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணத்திலேதான் ஜஸ்டிஸ் கட்சியை ஆரம்பித்தார்கள். படிப்படியாக தந்தை பெரியார் அவர்கள் காங்கிரசிலே இருந்து . . .

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் துணையாக இருக்க ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். யார் எல்லாம் என்று அவர்கள் சொன்னார்கள். இந்த அவையிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களுடைய தந்தையார் சர். ஏ. ராமசாமி முதலியார் அவர்களும், அவர்கள் குடும்பமும் இதிலே துணையாக நின்று பணியாற்றியது என்பதை, அவர்கள் பல பேர்களைச் சொல்கின்ற போது, சேர்த்துச் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அந்தக் குடும்பத்தினுடைய ரெக்கார்டு பர்பசுக்கு என்று நான் சொல்கிறேன். பெயரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நினைவுபடுத்துகிறேன்.

திரு. சி. இராமலிங்கம்: மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் நினைவுபடுத்தினார் என்று நினைக்கவில்லை. அதைபற்றிச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். சொல்வேன். இந்த சமுதாயத்திலே தென்னகத்திலே எப்படி பார்ப்பனர் அல்லாதாருக்கு—என்னைப் போல பிற்பட்ட வர் சமூகத்திலே, ஏழை நெசவாளியாக இருப்போருக்கும், மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி போல சுற்ற பரம்பரையினருக்கும் மற்றும் திரு. ஏ. ஆர். தாமோதரன் போன்றவர்களுக்கும்—எப்படி முன்னேற்றம் வந்தது

என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் கடமையிலேதான் சொல்கின்றேன். தியாகராஜ செட்டியாரும், நடேச முதலியாரும் இயக்கத்தை ஆரம்பித்த பிறகு, தந்தை பெரியார் அவர்கள் காங்கிரஸ் இயக்கத்தில் ஜாதிப் பூசல்கள் இருந்ததால், ஜாதியினுடைய ஆதிக்கம் இருந்ததால், அதிலேயிருந்து பிரிந்து ஜஸ்டிஸ் கட்சியிலே சேர்ந்தார்கள். அப்போது ஜஸ்டிஸ் கட்சியிலே முக்கிய பொறுப்பிலே சர் ஏ. இராமசாமி முதலியார், டாக்டர் லெட்சுமணசாமி முதலியார், முத்தையா முதலியார் ஆகியோர் இருந்தார்கள். அதுபோலவே வேறு பல பேர்கள் இருந்தார்கள். பனகல் ராஜா, பொப்பிலி ராஜா என்று சொல்லக்கூடிய அந்த மன்னர்கள் எல்லாம் அந்த ஜஸ்டிஸ் கட்சியிலே இருந்தார்கள். அது ஒரு மன்னர்களுடைய இயக்கமாக இருக்கிறது, ஆகவே இதிலே சமுதாயச் சீர்திருத்தத்தைச் செய்ய முடியாது என்று தந்தை பெரியார் அவர்கள் காங்கிரசை விட்டு சுயமரியாதை இயக்கம் என்று ஆரம்பித்தார்கள். சுயமரியாதைக் கருத்துக்கள் ஜஸ்டிஸ் கட்சியிலே எடுபடாமல் ஜாதி உணர்ச்சியோடு, ஏதோ ஐயர் போனார், அய்யங்கார் வந்தார், முதலியார் வந்தார் என்ற நிலையில் அன்றைக்கு இருந்தார்கள். பட்டம் பதவி வகித்த அரசர்கள், குறுநில மன்னர்கள், ஜமீன்தார்கள், திவான்கள் ஆகியோருடைய கட்சியாக இருக்கிறது, சமுதாயச் சீர்திருத்தத்திற்கு அதிலே இடமில்லை என்ற அளவிலே இருந்தது.

திரு. க. இராமமூர்த்தி: மன்னிக்க வேண்டும், மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேச்சிலே இடையிலே நுழைவதற்கு. நான் அதனாலேதான் நினைவுபடுத்தினேன். சமுதாயச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில், காங்கிரஸ் எப்படி வழிகாட்டியாக இருக்கிறது என்பதற்கு நான் காந்தியடிகளோடு நின்றுவிட்டதாக நினைக்கவேண்டாம். தமிழகத்தைப் பொறுத்த வரையில், சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி அவர்கள் குடும்பத்திலேகூட அதை ஏற்று செயல்படுத்திக் காட்டி யிருக்கிறார்கள். கலப்புத் திருமணத்தை, அந்த ஜாதி உணர்வுகளைக் கடந்து அன்றைக்கு எப்படிச் செயல்படுத்தினார்கள் என்பது அல்ல. அன்றைக்கு அது வேறு பல அரசியல் சூழ்நிலைகளாலும் உருவாகியிருக்கலாம். காங்கிரஸ் இயக்கத்தின் தலைவர்கள் அதற்கு இடம் கொடுக்காமல் நடத்திச் சென்றிருக்கிறார்கள். இடையிலே இருந்தவர்கள் எப்படிச் செயல்பட்டார்கள் என்பது வேறாக இருக்கலாம். ஆனால் இயக்கத்தினுடைய கொள்கைகளை, நடைமுறைகளைப் பார்க்க வேண்டும். அவைகள் எப்படி இருந்தன என்பதைத்தான் அங்கத்தினர் அவர்கள் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.



திரு. சி. இராமலிங்கம்: மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இங்கே என்னை வரலாறையே சொல்லத் தூண்டுகின்றார்கள் என்று நினைக்கிறேன். காங்கிரஸ் இயக்கத்திலே ஊடுருவல் என்று சொன்னார்கள். நான் இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், தந்தை பெரியார் அவர்கள் காங்கிரசை விட்டுப் பிரிந்து வருவதற்குக் காரணமாக அந்த நிலைமைகள் இருந்தன. அதற்குப் பிறகு பிராம்மணர் அல்லாதார் இயக்கத்தை ஆரம்பித்தார்கள். அதற்குப் பிறகுதான் இராஜாஜி அவர்களும் காந்தியடிகளும் தங்களுடைய பிள்ளைகளுக்குத் திருமணம் செய்தார்கள். ஏதோ சிறு பிள்ளைகள் செய்து விட்ட தவறுகளுக்காக அவர்கள் செய்துவிட்டார்களே தவிர வேறு அல்ல. உள்ளபடியே அந்தப் பிள்ளைகளுக்கு கலப்புத் திருமணம் என்ற அளவில் வேறு ஜாதிப் பெண்களைக் கட்டியதாக எனக்குத் தெரியவில்லை.

(முற்பகல் 11-50)

*திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, தயவுசெய்து மன்னிக்க வேண்டும். உறுப்பினரவர்கள் காந்தியடிகள் பற்றி, இராஜாஜி அவர்களைப் பற்றிப் பேசுகிறார்கள். காங்கிரஸ்காரர்கள் என்ற அளவிலே மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குப் பல்வேறு கருத்துக்கள் இருக்கலாம். அதை நான் மறுத்துப் பேசுவதற்குத் தயாராக இல்லை. ஏதோ தவறுகள் நடந்தன, அதனால் திருமணம் செய்தார்கள் என்பது சரியல்ல. அந்த அவசியத்திற்கு அவர்கள் எப்போதும் ஆளாகவில்லை. மாறாகச் சொல்கிறேன், திருமணம் செய்துகொள்ளப் போகிறோமென்று அவருடைய பிள்ளையும், சம்பந்தப்பட்ட பெண்ணும் கருத்து தெரிவித்த பிறகு, 3 ஆண்டுகள் பிரிந்திருக்க முடியுமா, அதற்குப் பிறகு ஒருவரை ஒருவர் விரும்புகிறீர்கள் என்பதை நிரூபிக்க முடியுமா என்று கேட்டபோது, அதை அவர்கள் ஏற்றுக்கொண்டு, வாழ்க்கை நடத்திக் காட்டி, தங்கள் திருமணத்தைப் பதிவு செய்துகொண்டார்கள். 10 மாதங்கள் காலந்தாழ்த்தினால் என்னவாகுமோ என்று அவசரத்தில் நடந்த திருமணங்கள்பற்றி எனக்குத் தெரியும், சொல்ல விரும்பவில்லை. அது இப்போது விவாதத்திற்கு வரவில்லை. ஒருவரை விரும்புகிறோம், திருமணம் செய்துகொள்ள விரும்புகிறோமென்று தெரிவித்த பிறகு, மூன்று ஆண்டுகள் அவர்களைப் பிரித்து வைத்த தைரியம் காந்தியடிகளுக்கும், இராஜாஜிக்கும் இருந்தது. அதற்குப் பிறகு அவர்கள் திருமணம் செய்துகொண்டார்கள். எனவே அந்த உன்னத நிகழ்ச்சிக்கு, நோக்கத்திற்கு மாசு கற்பிக்க வேண்டாமென்று உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னது மிகுந்த நியாயமான ஒன்றாகும். காந்தியடிகள் இராஜாஜி போன்றவர்கள் எல்லாம் இதில் எல்லை கடந்து நின்று, இந்த மாற்றங்களைச் செய்ய முன் நின்ற தலைவர்கள். அவர்கள் முதல் கட்டத்தைச் செய்தார்கள். அதாவது, இராஜாஜி அவர்களின் மகளும், காந்திஜியின் மகனும் ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள், ஆனால் வேறு மொழி பேசுகிறவர்கள். இருந்தாலும் அது முதல் கட்டம். அதைத் தொடர்ந்து தமிழகத்திலே பெரிய அளவிலே மாற்றங்களை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் செய்தார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கருத்துக்களைச் சொல்லுகிறார்கள்.

* **திரு. க. இராமமூர்த்தி :** இரண்டு பேரும் பெருந் தலைவர்களாக இருந்தவர்கள், அவர்களுடைய குழந்தைகளின் திருமணம்தான் நடந்தது. காந்தியடிகளின் எந்த மகனும் அவர்களுடைய உறவில் ஜாதியில் திருமணம் செய்து கொள்ளவில்லை. அதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. சி. இராமலிங்கம் :** நான் அவர்களைக் குற்றமாகச் சொல்லவில்லை. சமுதாயத்தில் ஏற்பட்ட இடர்ப்பாடுகள், துன்பங்களைத்தான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு 37, 38 வயதுதான் இருக்கும். நான் அரசியலுக்கு வந்த பிறகு பிறந்தவர். நாங்களெல்லாம் எவ்வளவு துன்பப்பட்டிருக்கிறோமென்பதைச் சொல்லும்போது, காந்தியடிகளை நாங்களே எடுத்துக்கொண்டோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், பக்கத்திலே இருக்கக்கூடிய திரு. தாமோதரன் அவர்கள் திருமணம் செய்துகொண்ட திரு. வேதாசல முதலியார் அவர்கள் குடும்பம் வேறுசாதி என்று அந்தக் காலத்தில் பேசிக்கொள்வோம். ஒரே முதலியார்தான். இருந்தாலும் ஆர்க்காடு முதலியார், திண்ணனூர் முதலியாரைக் கல்யாணம் செய்து கொள்வதில்லை என்று ஒரு காலத்தில் இருந்தது. காந்தியடிகள் தன்னுடைய மகனுக்குக் கலப்புத் திருமணம் செய்தார் என்றால், அவர் வழிகாட்டி, செய்து காட்டினார்கள். நான் சொல்வதெல்லாம், அன்றைக்கு சுய மரியாதைக் கருத்து ஏற்றுக்கொள்ளப்படாததால்தான் தந்தை பெரியார் அவர்கள் காங்கிரசிலிருந்து வெளியே வந்தார் என்பதுதான்.

* **திரு. க. இராமமூர்த்தி :** மாற்றுத் தலைவரவர்களே, ஏற்றுக்கொள்ளப்படாதது என்பதல்ல. அன்றைக்கு விடுதலை இயக்கம் தலையாய ஒன்றாக நின்றது. தந்தை பெரியார் அவர்கள், தன்னுடைய சமுதாயச் சீர்திருத்த நோக்கம் தலையானது என்று கருதினார்கள். அதனால் அவர்கள் வெளியே வந்தார்கள். எனவே சீர்திருத்த நோக்கத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதல்ல.



**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாற்றுத் தலைவரவர்களே, விடு தலைப் போராட்டம் வேகமாக நடந்து கொண்டிருந்த நேரத்தில், அந்த இயக்கம் அதிலே கவனம் செலுத்திக்கொண்டிருந்ததே தவிர, சமுதாயச் சீர்திருத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அது செயல்படவில்லை எனவே சமுதாயச் சீர்திருத்தக் கொள்கை அல்லது சுய மரியாதைக் கொள்கை என்பது வேறு, சனாதனக் கொள்கை என்பது வேறு என்றுதான் நான் நினைக்கிறேன். அவர்கள் ஆரம்பத்தைச் செய்தார்கள். அவர்கள் மொழியைக் கடந்து, மதங்களைக் கடந்து, இன்னும் சொல்லப் போனால் இந்து, முஸ்லீம், கிருத்துவ என்ற பெரும் மதங்களைக் கடந்து, கலப்புத் திருமணம் செய்து, ஒரு முன்மாதிரியை இந்தியத் துணைக் கண்டத்தில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதைக் குறைத்து மதிப்பிட முடியாது. அவர்கள் ஆரம்பத்தைச் செய்தார்கள். தமிழகத்திலே அதே கொள்கையை வைத்து, சமுதாயச் சீர் திருத்தம் செய்ய வேண்டியிருக்கிறது, அதைக் காங்கிரசில் இருந்துகொண்டு செய்ய முடியாதென்று தந்தை பெரியார் அவர்கள் உணர்ந்து, வெளியே வந்து, சமுதாயச் சீர்திருத்தக் கொள்கையை, சுய மரியாதைக் கொள்கையை முன் வைத்து, அந்த இயக்கத்தைத் துவக்கினார்கள் என்கின்ற அளவிலே அந்த வரலாற்றை முடித்துவிட்டு, இப்போதிருக்கும் பிரச்சினைகளுக்குப் போவோமானால், நன்றாக இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. இராமலிங்கம் :** மாற்றுத் தலைவரவர்களே, அவை முன்னவர் அவர்கள் சொன்னதுபோல, சுயமரியாதைத் திருமணங்களைப் பதிவு செய்ய வேண்டுமென்றால் நம்மைத் தோற்றுவித்த முன்னோர்களை ஓரளவிற்கு நினைவு கூர்வது நலமென்றுதான் இதைச் சொன்னேன். வாதத்திற்கு திரு. இராமமூர்த்தி அவர்களை நான் அழைக்க விரும்பவில்லை. வாதத்தை, சட்ட மன்றத்தை விட்டு வெளியே வைத்துக்கொண்டால் , நான்தான் வெற்றி பெறுவேன். அது வேறு விஷயம். ஆகவே சமுதாயத்திலே இன்றைக்கு இந்த எண்ணங்கள் உருவாகக் காரணமானவர்களை நாம் நினைக்க வேண்டும். அதைத்தான் சொல்ல வந்தேன். தந்தை பெரியார் அவர்கள் திராவிடர் கழகத்தை ஆரம்பித்தார்கள். அவர், அரசியலிலே போகக்கூடாது, சமுதாயச் சீர்திருத்தம் என்றார்கள். அதைச் சட்டத்திலே கொண்டு வந்துதான் செய்ய முடியுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதன் காரணமாக இருவருக்கும் பிணக்கு வந்து, அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்தார்கள். தி. மு. க. வந்த பிறகு, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக வந்தார்கள். அவர்கள் சுய மரியாதை சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சட்டமன்றத்தில் வைத்தார்கள். இன்றைக்கு கோவிலிலே திருமணம் செய்துவிட்டால், முதலியார் பெண்ணை

ஐயர் மகன் கல்யாணம் செய்துவிட்டால், செட்டியார் மகளை யாதவர் ஒருவர் கல்யாணம் செய்துவிட்டால், ஜாதி போய்விடாது. அதைச் சொல்ல விரும்பு கிறேன். ஜாதி எங்கே போய்விடும்? சொல்லுவார்கள், அவரை விதையான ஆலும், சுரை விதையானாலும் விதை ஒன்றுதான், எந்த நிலத்திலே போட்டாலும் விளையும் என்று சொல்லுவார்கள். இது மனிதனுக்கும் பொருந்தும். தந்தை பெரியார் அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள், தனக்குப் பெண்டாட்டி வேண்டுமென்றால் தன் ஜாதியில் பார்த்து கல்யாணம் செய்து கொள்கிறான். ஆசைநாயகி வேண்டுமென்றால் எவளை வேண்டுமானாலும் வைத்துக் கொள் கிறான் என்று சொல்லுவார். அதில் ஜாதி கிடையாது என்று சொல்லுவார். எதற்காகச் சொல்கிறேன் என்றால், பதிவுத் திருமணத்தாலே ஜாதி போய்விடும் என்று சொல்லத் தயாராக இல்லை. அதில் நான் தோற்றுப் போனேன். அதற்காகத்தான் சொல்லுகிறேன், இந்த நாட்டிலே மதமற்ற மக்களாக வாழ வேண்டுமென்ற சிந்தனையை தந்தை பெரியார் அவர்கள் கொண்டு வந்தார்கள். அதனால்தான் மதமில்லை, கடவுள் இல்லை என்று சொன்னார்கள், மனிதன் தான் இருக்கிறான் என்று சொன்னார்கள். யார் அதைக் கடைப் பிடிக்கிறோம்? நாம் கடைப் பிடிக்கிமோமா? இந்துவாக இருந்தால் 4 ஜாதிகளை ஒத்துக் கொள்ள வேண்டும். பகவத் கீதையில் சொல்லுவதை ஒத்துக் கொண்டாலும் சரி, ரிக் வேதத்தில் சொல்லுவதை ஒத்துக்கொண்டாலும் சரி அல்லது கைவல் யத்தை ஒத்துக்கொண்டாலும் சரி. பகவத் கீதையில் கிருஷ்ண பரமாத்மா சொல்லுவார், தேர் ஓட்டும்போது அர்ச்சுனனிடம், "நான்தான் இந்த உலகைப் படைத்தேன், மனிதனைப் படைத்தேன், 4 ஜாதிகளைப் படைத்தேன் அவர்கள்தான். பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள்" என்று சொல்லியிருக்கிறார். அதை ஏற்றுக்கொண்டால், கிருஷ்ணனை கும்பிட்டால், முருகனைக் கும்பிட்டால், காளியைக் கும்பிட்டால் ஜாதி போய் விடுமா?

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு உறுப்பினரவர்கள் எல்லாம் தெரிந் தவர்கள். கீதையை முழுமையாகப் படிக்கவில்லை என்று எண்ணுகிறேன். நான்தான் 4 ஜாதிகளை உண்டாக்கினேன் என்று கிருஷ்ண பரமாத்மா கீதையில் சொல்லவில்லை. இங்கே யாதவ குலத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சரவர்கள் இருக்கிறார்கள். அவருக்கே தெரியும். (சிரிப்பு) ஜாதி களைப்பற்றி கீதையில் எதுவுமே சொல்லவில்லை.

திரு. சி. இராமலிங்கம்: மாற்றுத் தலைவரவர்களே, இதைப் பற்றி வெளி யிலே பேசும்போது, ஆதாரத்தோடு சொல்லுவேன். வேதமென்பது 4 ஜாதி களை உண்டாக்கியது. 5 ஆம் ஜாதி பஞ்சமனை உண்டாக்கியது. தந்தை





பெரியார் அவர்கள் அழகாகச் சொல்லுவார் "அத்திமரத்தில் காய் இருக்கிற தென்றால், உச்சியில் இருந்தால் உச்சிகாய் என்றா சொல்லுகிறோம், கிளையில் இருந்தால் கிளாக்காய் என்றா சொல்லுகிறோம், தண்டில் இருந்தால் தண்டுக் காய் என்றா சொல்லுகிறோம், வேரில் இருந்தால் வேர்ப்பலா என்றா சொல்லு கிறோம், அத்தி மரத்தில் பூராவும் காய்ப்பது அத்திக்காய்தான். அதுபோல கடவுள் முகத்திலே பிறக்கவில்லை, தோளிலே பிறக்கவில்லை, இடுப்பிலே பிறக்க வில்லை, காலில் பிறக்கவில்லை. ஆகவே ஜாதி இல்லை என்பதால்தான் கடவுள் இல்லை என்று சொல்கிறேன்" என்று சொன்னார். இதை ஏற்றுக் கொண்டால், ஜாதி பேதமற்ற சமுதாயத்தை அமைக்க முடியும். ஒரு பக்கம் விநாயகர் கோவில், ஒரு பக்கம் அம்மன் கோவில், ஒரு பக்கம் கிருஷ்ணர் கோவில், ஒரு பக்கம் சர்ச், ஒரு பக்கம் மசூதி என்று ஏற்படுத்தினால், எப்படி ஜாதி பேதமற்ற சமுதாயம் வரும்?

திருமணத்தைப் பதிவு செய்துவிட்டால் போதுமா? கோர்ட்டுக்குப் போனால், எனக்குப் பிறக்கவில்லை என்று எந்தத் தகப்பனும் சொல்வதில்லை. ஆசை நாயகிக்குப் பிறந்தவன் என்று சொல்லுவான். கோர்ட்டுக்குப் போகத் தான் பதிவு. இந்தச் சூழ்நிலை வரும்போது, கடந்த கால நினைவுகளைச் சொல்ல விரும்புகிறேன். 1946-லே எனக்கு முதல் திருமணம் நடந்தது. திருமணம் நடந்த பிறகு, ஒரு ஆதி திராவிடர் திருமணத்திற்குச் சென்றேன். புலவர் நன்னன், தில்லை வில்லாளன், புலவர் மாணிக்கம் எல்லோருடனும் திருமணத்திற்குப் போய், பால் குடித்துவிட்டு வந்தேன். வீட்டுக்குப் போன பிறகு, ஜாதிக் கட்டுப்பாட்டின்கீழ் விலக்கி வைத்தார்கள்.

(நண்பகல் 12-00)

எதற்காக இதை நான் சொல்கிறேன் என்றால் சமுதாயத்திலே நாங்கள் இதற் காக எவ்வளவு போராடியிருக்கிறோம் என்பதை இந்த மன்றம் அறிவதற்காகத் தான். ஜாதி பேதமற்ற சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்றுதான் தந்தை பெரியார் அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். முதல் திருமணத்தை நான் ஒரு பிராமணரை வைத்துச் செய்து கொண்டேன். முதல் மனைவி இறந்தபோது, இரண்டாவது திருமணத்தை சுயமரியாதைத் திருமணமாகச் செய்துகொண்டேன்.

திரு. க. இராமமூர்த்தி: கலப்புத் திருமணமா?

திரு. சி. இராமலிங்கம்: குறுக்கிடு வந்தால் நேரம் அதிகமாகிவிடும். இரண்டாவது திருமணத்தை சுயமரியாதைத் திருமணமாகச் செய்து கொண்ட தற்கு பெரிய எதிர்ப்பு வந்தது. என்னுடைய காலத்திலே சமுதாயம் எப்படி இருந்தது, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் காலத்தில்

எப்படி இது வளர்ந்திருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் இந்தக் கருத்தைத் தெரிவித்தேன். வெள்ளைக்காரன் இந்தக் கட்டிடத்தைக் கட்டினான். இதே அவையில் அவன் அன்றைக்கு மன்றத்தை நடத்தினான். பிறகு ஜஸ்டிஸ் கட்சி ஆட்சிக்கு வந்தது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு விதவையின் மகளைத் திருமணம் செய்து கொண்டதை பெரிய சாதனை செய்ததுபோல இங்கே சொன்னார்கள். அவர்களுடைய ஜாதி என்ன ஜாதி ? அவர்களுடைய சமுதாயத்தில் அதுபற்றிய விவரம் தெரியாதா ?

**திரு. சி. இராமலிங்கம் :** என்னுடைய உறவு முறைகளிலே மாண்புமிகு உறுப்பினர் கை வைக்கக்கூடாது. என்னுடைய குடும்பத்தைச் சார்ந்தது அந்தப் பிரச்சினை. கேள்வி கேட்பது என்றால் முறையாகக் கேட்க வேண்டும்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்) :** திருமணங்களைக் கட்டாயமாக பதிவு செய்தல் பற்றிய சட்ட முன்வடிவின் மீது இங்கே விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதையொட்டி உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. இராமலிங்கம் :** அதற்குத்தான் வருகிறேன். கட்டிடத்தைப் பற்றி சொன்னேன். வெள்ளைக்காரன் கட்டினான், ஆண்டான். பிறகு ஜஸ்டிஸ் கட்சி இதே கட்டிடத்தில் ஆட்சி செய்தது. அதன் பிறகு காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றது. பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சி நடத்தினார்கள். அதற்குப் பிறகு கலைஞர் ஆட்சி செய்தார். இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதைக் கூர்ந்து கவனித்தால், எவ்வளவு மாற்றங்கள் இந்த சமுதாயத்திலே நடைபெற்றுக் கொண்டு வந்திருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்து கொள்ள முடியும். வெள்ளைக்காரன் நாட்டை விட்டுப் போன பிறகு, படிப்படியாக நம்முடைய சமுதாயத்தின் அந்தஸ்துக்கு, நலனுக்கு, நா...ப் நன்மைக்கு சில மாற்றங்களைச் செய்து கொண்டு வருகிறோம். ...லாரிட்டின் படையில் தான் இங்கே கருத்துக்களைச் சொல்லிக் கொ... எந்தன் அடிப் பதிவுத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் ...ருண்டிருக்கிறேன். எந்நீக்கிற எண்ணத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டிருந்தார்கள். ...கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, பதிவுத் திருமணம் அவசியம் ...தேவை என்று சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவ...ர்கள்கூட பதிவுத் திருமணம் தேவை என்றார்கள். இன்றைக்கு ஜாதி ...உண்டு என்று சொல்லக்கூடிய கோயில்களில் திருமணத்தை நடத்திக்கொண்டு ஜாதியற்ற சமுதாயத்தை



அமைக்கப் போகிறோம் என்று சொன்னால் அது எப்படி சாத்தியமாகும் ? முதல் திருமணத்தை நான் சுயமரியாதைத் திருமணமாகச் செய்துகொள்ள என்னுடைய வீட்டில் ஒப்புதல் கிடைக்கவில்லை. முதல் மனைவி இறந்த பிறகு, இரண்டாவது திருமணத்திற்கு எந்தப் பெண் கிடைத்தாலும் பரவாயில்லை என்று சொல்லி பெண் பார்த்தார்கள். என்னுடைய மாமியார் ஒரு விதவை. என்னுடைய மாமனார் அவரை ஒரு ஆசைநாயகியாக வைத்திருந்தார். அவருக்குப் பிறந்த மகளைத்தான் நான் திருமணம் செய்து கொண்டேன். ஆதி திராவிடர் குடும்பத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டதற்காகத்தான் நான் இன்றைக்கு அனகாபுத்தூருக்கு வந்திருக்கிறேன். அவ்வளவு எதிர்ப்பு என்னுடைய குடும்பத்தில் உண்டாகியது. அப்போது தான் பேரறிஞர் அண்ணா அவர்கள், ' கொஞ்சம் நாள் நீ அனகாபுத்தூரிலேயே இரு. பிறகு குடும்பத்திலுள்ளவர்கள் மறந்து போவார்கள் ' என்று சொன்னார்கள். என்னை இந்த அளவுக்குப் பேச வைக்கக் காரணம் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்து தான். என்னுடைய சித்தப்பா முத்தையன் அவர்கள் கோயம்புத்தூரில் பெயர் பெற்றவர்கள். என்னுடைய சித்தப்பா சாந்தி முத்தையா பண்ருட்டியில் பெயர் பெற்றவர்கள். ஜாதியற்ற சமுதாயத்தை அமைக்க தந்தை பெரியார் சொன்ன கருத்தை காந்தியடிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அண்ணா அவர்கள் சொன்ன கருத்தை தகப்பன் ஏற்றுக்கொள்ளவில்லை. பிள்ளையை ஏற்று வந்திருக்கிறேன். அதாவது அண்ணாவின் கருத்தை நான் ஏற்றுக் கொண்டேன். அப்படியாவது ஜாதிகள், மாச்சர்யங்கள் போகுமா என்று பார்த்தால், இன்றுவரை மாறவில்லை. இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஜாதி பேதமற்ற சமுதாயத்தை அமைக்க முடியுமா, இப்போதிருக்கும் அமைப்பை மாற்ற முடியுமா என்பதுபற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். 4 வேதங்களையும் இந்து மதத்திலிருக்கிற கடவுளையும் ஒழிப்பதைவிட மக்கள் பெரிய புராணம், திருவிளையாடல் போன்ற எல்லாவற்றையும் எடுத்துவிட வேண்டும் என்று சொல்வதை எல்லாம் விட்டு விட்டு ' ஒன்றே குலம், ஒருவனே தேவன் '. என்கிற தத்துவத்தை ஏற்றுக்கொண்டால் தான், சமுதாயத்திலுள்ள இழிவு நிலை போகும். ஏதோ பதிவு செய்தால் திருமணம் மற்றதெல்லாம் திருமணம் அல்ல என்கிற நிலைமை இல்லை.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** ஏதோ இந்து சமயத்தை ஏற்றுக் கொண்டவர்கள் தான் தமிழர்கள் என்ற கருத்துப்பட பேசக்கூடாது. இந்து மதத்தை ஏற்றுக்கொண்ட, தமிழ் மொழி தெரிந்தவர்கள் மட்டும் தான் இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்கள் என்பதல்ல. தமிழர்கள் தான் கிறிஸ்தவர்

களாகவும், முஸ்லிம்களாகவும் சில நேரங்களில் மாறியிருக்கிறார்கள். மாண்பு மிகு உறுப்பினர் சொன்ன கருத்து தவறானது. அப்படிப்பட்ட கருத்தைத் தெரிவிக்கவில்லை என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் அப்படிப்பட்ட எந்த ஒரு கருத்தும் இந்த மன்றத்தில் வரக்கூடாது. சில கால கட்டத்தில் மதத்தை ஏற்றுக் கொண்டதற்காக, அதற்குப் பிறகு மொழி அடிப்படையில் அந்தப் பண்பாட்டை ஏற்றுக்கொண்டவர்கள் கூட தமிழர்கள்தான் இந்தக் கருத்தை அனைவரும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கருத்தும் அதுதான். அதை உணர்ந்துதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்துக்களைச் சொல்கிறார்கள் என்று நான் நினைக் கிறேன்.

**திரு. சி. இராமலிங்கம்:** முதலில் நான் பேசும்போதே தெளிவாக இது குறித்துப் பேசியிருக்கிறேன். என்னுடைய முன்னோர்கள் திருநெல்வேலி, தென்காசி, சங்கரன்கோயில், திருநெல்வேலி டவுன் போன்ற பகுதிகளில் வாழ் கிறார்கள். அவர்கள் இன்றைக்கு சங்கரன்கோயிலில் முஸ்லிம் மதத்திற்கு மாறி 'லப்பை' என்று பெயர் மாற்றியிருக்கிறார்கள். என்னுடைய சிறிய தகப்பனாருடைய மகள் ஒரு முஸ்லிமைத் திருமணம் செய்து கொண்டார். வீட்டுக்குப் பக்கத்தில் இருந்தபோது இருவருக்கும் காதல் ஏற்பட்டு, இன்னாரைக் கட்டி கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதன்படி கட்டிக் கொடுத்துவிட்டார்கள். விழுப்புரத்தில் ஜோதி என்பவர் பற்றி ஏற் கெனவே சொல்லியிருக்கிறேன். உயர் ஜாதியைச் சேர்ந்தவருக்கும் கீழ் ஜாதியைச் சேர்ந்தவருக்கும் அங்கு திருமணம் நடந்திருக்கிறது. அதுபோல் என்னுடைய சொந்த பெரியப்பா கிறிஸ்தவ மதத்தில் இருக்கிறார். இன்றைக்கு விருத்தாசலத்தில் அவர்தான் பெரிய உபதேசி. இதுபற்றிப் பிரச்சினை வந்ததால்தான், ஜாதி என்கிற பெயர் வந்ததால் தான், நான் இதைப் பேசு கிறேன். நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், விதை ஒன்று, நிலம் வேறாக இருக்கிறது. இதை மாற்றி நிலம் ஒன்று, விதை வேறு என்கிற நிலைமை வரவேண்டும். இந்தக் கருத்தைத்தான் தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள். இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வதாக இருந்தால், இந்தச் சட்டமே தேவையில்லை. தந்தை பெரியார் அவர்கள் அடிக்கடி முஸ்லிம் போல், கடவுளைப், பின்பற்றுவதைப் பொறுத்தவரையில், இருக்க வேண்டு மென்று சொல்வார்கள். 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்கிற முறை யில் ஜாதிமத பேதமற்ற, உருவமற்ற கடவுள்தான் இருக்க வேண்டுமென்று தந்தை பெரியார் அவர்கள் சொல்லி வந்தார்கள்.





* **திரு. ப. மாணிக்கம்.** 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று பெரியார் எங்கேயும் சொல்லவில்லை. இந்தமாதிரி தந்தை பெரியாரைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொல்ல வேண்டாம்.

**திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் என்னைப்பற்றி நன்றாக அறிவார். நான் பக்கா சுயமரியாதைக்காரன் மட்டு மல்ல; சமரச சன்மார்க்கத்தைச் சார்ந்திருந்தவன். அந்த சமயத்தில் தந்தை பெரியார் அவர்கள் என்னைச் சந்தித்து என் நெற்றியில் இருந்த குங்குமத்தை அழித்துவிட்டு, இராமலிங்கம் அடிகள் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை யும் சொல்லிவிட்டு, 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்கிற தத்துவத்தை என்னிடம் சொல்லித் தந்திருக்கிறார்கள். அந்த வகையில் தந்தை பெரியார் அவர்களோடு நான் இரண்டற கலந்திருக்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தந்தை பெரியார் எல்லா இடங்களிலும் 'கடவுள் இல்லை, கடவுள் இருக்கிறார் என்று சொல்லுகிறவன் மோசடிக்காரன், முட்டாள்' என்கிற தாரக மந்திரத்தைத்தான் தன்னுடைய கடைசி மூச்சு வரை சொல்லி வந்தார். அதில் அழுத்தமாகவும் இருந்தார். அந்தக் கருத்தை ஆணித்தரமாக அழுத்தமாகச் சொன்னார். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு இராமலிங்கம் பெரியார் அவர்கள் இவர் போட்ட திருநீறை அழித்ததாகவும் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்கிற தத்துவத்தைச் சொன்னதாகவும் சொல்கிறார். ஒருவேளை அவர்கள் இப்படி உறுதியாகச் சொல்லுவதிலிருந்து ஒன்று புரிகிறது. இவரிடம் தனியாக ஒருவேளை பெரியார் சொன்னாரோ என்னவோ? (சிரிப்பு).

* **திரு. ப. மாணிக்கம்:** இப்படிக் கூறுவதன் மூலம் வரலாற்றில் பல விஷ யங்கள் வரலாம். அதுவும் அவையில் விவாதம் நடைபெறுகிறது என்று சொன்னால், வரலாற்று நாயகர்களுக்கு எந்தவிதத்திலும் அநீதி இழைக்கக் கூடாது. பெரியார் தலைமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் ஒருவர் பேசுகையில் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று குறிப்பிட்ட உடனே தந்தை பெரியார் அவர்கள் கையை அசைத்து அக்கருத்தை மறுத்தார். இந்தத் தத்துவத்தை அறிஞர் அண்ணா தான் சொல்லியிருக்கிறார் ஆகவே மீண்டும் அப்படிப்பட்ட நாமத்தை தந்தை பெரியாருக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் சூட்டக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. இராமலிங்கம் : நான் தந்தை பெரியாருக்கு நாமம் சூட்டவில்லை. ஆனால் அவர்கள் என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். இங்கே மாண்பு மிகு உறுப்பினர் திரு சங்கரலிங்கம் அவர்கள் ' இவரிடம் தனியாக ஒருவேளை தந்தை பெரியார் சொன்னாரோ என்னவோ ' என்று சொன்னார்கள்.

(பிற்பகல் 12-10)

ஆனால், பேரறிஞர் அண்ணா அவர்கள் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" எனக் கூறினார்கள். அந்தக் கருத்தைத்தான் நாங்கள் ஏற்றுக் கொண்டோம். எனவே இந்த நிலையில் திருமணங்களையெல்லாம் பதிவு செய்ய வேண்டும் என்று சொல்வது அவசியமில்லாத ஒன்று. திருமணத்தில் மந்திரம் சொல்லும்போது " முப்பத்து முக்கோடி தேவர்கள் நாற்பத்தியெட்டாயிரம் ரிஷியா, கின்னரர் கிம்புருடர், மற்றும் மும்மூர்த்திகள் ஆகியோரையெல்லாம் சாட்சியாக வைத்து, அதோடு இந்தப் பக்கத்தில் உள்ள தாய், தகப்பன், அந்தப் பக்கத்திலே உங்கள் மாமன் மாமி ஆகியோர் எல்லாம் இருக்கிறார்கள். இவர்கள் அனைவர் சாட்சியாகத் திருமணம் நடக்கிறது' என்று சொல்லி அம்மி மிதித்து அருந்ததி காட்டி திருமணம் செய்கிறார்கள். இதெல்லாம் மதச் சடங்குகளாக அமைந்திருக்கின்றன. எனவே மதத் துறையில் நடக்கும் இத்தகைய திருமணங்களுக்குப் பதிவு செய்வது என்பது தேவையானதல்ல. தேவைப்படும்போது மட்டும் திருமணங்களைப் பதிவு செய்தால் போதுமானது என்று அரசு வழி வகை செய்தால் போதும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர் கள் தனது கருத்தை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். சமீபத்தில்—6 மாதத் திற்குள்—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு திருமண விழாவில் பேசுகிற போது, தமிழகத்தில் நடைபெறுகிற அனைத்துத் திருமணங்களுமே பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் அதற்கான வழி வகை செய்யப்பட வேண்டும் என்றும் அதற்கேற்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கருத்து தெரிவித்திருக்கிறார். அதையடுத்து மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்களும் அதே கருத்தை வேறு ஒரு நிகழ்ச்சி யில் தெரிவித்திருக்கிறார். அவற்றைப் பத்திரிகையில் படித்திருக்கிறேன் என்று நினைக்கிறேன். எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு இராமலிங்கம் அவர்கள், அந்தக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளுகிறாரா அல்லது மறுக் கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.



திரு. சி. இராமலிங்கம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர் கள் வழக்கறிஞர் என்பது தெரியும். அந்தக் காரணத்தினாலேயே அவர் முடிச்சுப் போடுவார் என்று நான் நினைக்கவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் மாண்புமிகு டாக்டர் ஹண்டே அவர்களும் திருமணங் களைப் பதிவு செய்ய வேண்டும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே அதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா இல்லையா என்று அவைக் குறிப்பில் பதிவு செய்து வேடிக்கை பார்க்க விரும்பக்கூடாது. நாங்கள் அதைப்போல வேடிக்கை பார்ப்பது என்று ஆரம்பித்தால், நிறைய சந்தர்ப்பம் கிடைக்கும், அதைக்கூட அவைக் குறிப்பில் பதிவு செய்துவிட முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எதற்காகச் சொல்கிறேன் என்றால் .

திரு. க. இராமமூர்த்தி ; மசோதா நிறைவேற வேண்டும் என்றுதான் இதைச் சொல்கிறேனே தவிர, வேடிக்கை பார்ப்பதற்காக அல்ல.

டாக்டர் இரா. சனார்த்தனம் . மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இப்படி குறுக்கிடுவதன் மூலம் கொஞ்ச நஞ்சம் வருகிற ஆதரவையும் இழந்து விடுவாரோ என்ற பயம் எனக்கு ஏற்படுகிறது.

திரு. சி. இராமலிங்கம்: தமிழக முதல்வர் அவர்கள் எடுக்கிற எல்லாக் காரியங்களுக்கும் நாங்கள் ஆதரவாகத்தான் இருக்கிறோம். தந்தை பெரியார் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். " என்னுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டவர்கள்தான் என்னுடைய கட்சியில் இருக்க வேண்டும், மிலிட் டிரியில் இருப்பதுபோல் என்னுடைய பேச்சுக்குக் கட்டுப்பட்டவர்கள்தான் இருக்க வேண்டும் " என்று சொன்னார்கள். அதைப்போல நாங்கள் இன்றைய தினம் புரட்சித் தலைவரின் தலைமையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அவர் சொல்லுகிற எல்லாக் கருத்துக்களுக்கும் நாங்கள் ஆதரவு தருகிறோம். அவர் இடுகிற கட்டளைகளை அப்படியே ஏற்றுகொள்ளக் கடமைப்பட்டிருக் கிறோம். எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, பொடி வைத்துப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த அளவுக்குக் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு மேலவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கொண்டு வந்துள்ள திருமணங்கள் அனைத்தையும் பதிவு செய்ய வேண்டும் என்ற சட்ட முன்வடிவை நான் ஆதரித்துச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

## தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு திருமணங்களை கட்டாயமாகப் பதிவு செய்தல் சட்ட முன்வடிவு, சட்டமன்ற மேலவைச் சட்ட முன்வடிவு எண் 1/1979

[திரு பா. ரா. தாமஸ்] [1982 ஏப்ரல் 3

சமுதாயமானது பல மாற்றங்களுக்கு உள்ளாகிக்கொண்டிருக்கிறது. மக்கள் மனதில் பல்வேறு கருத்துக்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. பொருளாதாரத் துறையிலும், சமுதாயத் துறையிலும் பல்வேறு மாற்றங்கள் உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. மாநிலத்தை விட்டு மாநிலம் சென்று திருமணம் செய்யக்கூடிய நிலை இருக்கிறது. ஏன் ஒரு நாட்டைவிட்டு இன்னொரு நாட்டிற்குசென்று அங்குள்ளவர்களை திருமணம் செய்து கொள்ளும் நிலை இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட திருமணங்களை யெல்லாம் எப்படி நிரூபிப்பது? திருமணங்கள் முறைப்படி, செய்து கொள்வதாக இருந்தாலும், மதத்தை விட்டு இன்னொரு மதத்தில் திருமணம் செய்துகொள்வதாக இருந்தாலும் — சட்டப்படி அவைகள் அனைத்தும் சான்று பெற்ற முழுமையான திருமணங்களாக உருவாக வேண்டும் என்றால், அனைத்துத் திருமணங்களுமே பதிவு செய்யப்பட வேண்டியது அவசிய மாகிறது. எனவே நம்முடைய மாநிலத் தலைவர்கள், தேசத் தலைவர்கள் ஆகியோருடைய முன்னேற்றமான கருத்துக்களை ஒருங்கிணைத்து இத்தகைய சட்டத்தை உருவாக்கினால், எதிர்கால சந்ததியினருக்கு, அதிலும் குறிப்பாகத் தாய்மார்களுக்கு, ஒரு பெரிய பாதுகாப்பாக அமையும். எனவே இந்த வகையில் ஒரு சட்ட முன்வடிவைக் கொண்ட மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் எண்ணத்தைப் பாராட்டி இதனை வரவேற்கிறேன்.

பொதுவாக ஆங்கிலத்தில் ஒன்றைச் சொல்வார்கள். "திருமணங்கள் என்பவை சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன" என்று சொல்வார்கள். சொர்க்கம் எங்கே இருக்கிறது என்றுகூட சிலர் கேட்கலாம். "சொர்க்கம் எங்கே இருக்கிறது? நரகம் எங்கே இருக்கிறது?" என்றெல்லாம்கூடக் கேட்கலாம். திருமணத்தை நரகம் என்றுகூட சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் தமிழகத்தில் உள்ள பண்பாட்டின் அடிப்படையில் சொல்வதால், "இதை ஆயிரங் காலத்துப் பயிர்" என்று சொல்வார்கள். இது ஒன்றும் விளையாட்டல்ல, வேடிக்கையல்ல என்பார்கள். இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் பயப்பது என்று தமிழ் இலக்கியத்திலே திருமணத்தைப்பற்றிச் சொல்லப்படுகிறது.

பண்டைக் காலத்தில் தமிழ்ப் பெருமக்கள்—நான் தமிழர்கள் என்று சொல்லும்போது, இங்கேயிருக்கும் அனைத்து இந்துக்களையும், கிறிஸ்தவர் களையும், இஸ்லாமியர்களையும் சேர்த்தே சொல்கிறேன்—இந்துக்களைப் போலவே இந்த நாட்டில் கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் இந்த நாட்டிலே பிறந்து வளர்ந்தவர்கள், ஒரு சந்தர்ப்பத்தில் பிற சமயத்தில் நம்பிக்கை



ஏற்பட்டுப் போனவர்களாக இருந்தாலும், மாறுபட்ட கொள்கையை சமயத் துறையில் கொண்டிருந்தாலும், அவர்கள் அனைவரும் தமிழர்களேதான் என்ற முறையில், திருமணத்தை மிகவும் உயர்ந்ததாகக் கருதினார்கள். இந்தக் கருத்துதான் அனைவராலும் ஏற்கப்பட்டுள்ளது.

நம்முடைய பாரம்பரியத்தின் அடிப்படையிலே பார்க்கும்போது, இந்திய நாட்டில் உள்ள "ஜாயின்ட் பேமிலி சிஸ்டம்" என்னும் கூட்டுக் குடும்ப முறை வெகு சிறந்த அமைப்பாகக் கருதப்படுகிறது. ஒரு குடும்பத்தில் எந்தத் திருமணம் நடைபெற்றாலும், அது பதிவு செய்யப்பட்டாலும், செய்யப் படாவிட்டாலும்கூட, அந்தக் குடும்பத்தின் தலைவர் சொல்லும் முறையிலே அனைத்தும் ஏற்கப்பட்டன. அத்தகைய இணைந்தக் குடும்பங்களைப் பொறுத்தவரையில், தலைவர் என்பவர் ஒரு டிக்டேட்டரைப்போல் இருந்திருக் கிறார். பதிவு செய்யப்படாத அனைத்துத் திருமணங்களுமே அன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதில் சச்சரவு உருவானால், அதில் கருத்து வேறு பாடு உருவானால், அத்தகையத் திருமணங்களைக் குறித்து அந்தத் தலைவர்கள் சொல்லுவதே உண்மை என்ற நிலையிருந்தது.

ஆனால் இன்றைக்குக் காதல் திருமணமானாலும் சரி, பதிவு செய்யப் படாதிருக்கும் கந்தருவத் திருமணமானாலும் சரி, அறநிலையங்களில் மற்றும் ஆலயங்களில் நடைபெற்ற திருமணங்களானாலும் சரி, அவையெல்லாம் பதிவு செய்யப்பட்டாலொழிய சட்டப்படி அவையனைத்தும் முறையான திருமணங் களைப் பொறுத்தவரை அங்கே பதிவேடுகளில் பதிவுசெய்யப்பட்டாலும்கூட திருமணங்களுக்கான ரெஜிஸ்ட்ரார் முன் பதிவு செய்யப்படவில்லை என்றால், அவையேகூட முறையான திருமணங்கள் அல்ல. எனவே இத்தகைய நிலைமை களுக்கெல்லாம் ஒரு பாதுகாப்பு வேண்டும் என்ற முறையில்தான், திருமணங் களனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில், இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

நம் நாட்டு "மேரியஜ் ஆக்ட்" படி திருமணங்களைக்கூடக் கட்டாய மாகப் பதிவு செய்ய வேண்டும் என்ற நிலை இல்லை. திருமணங்களைப் பதிவு செய்தல் என்பது மாநிலங்களின் உரிமையாக இருக்கிறது. எனவே மாநிலம் விரும்பினால்தான், திருமணங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டுவரலாம் என்ற நிலை இருக்கிறது.

[திரு. பா. ரா. தாமஸ்] [1982 ஏப்ரல் 3

இந்து ஆலயங்களில் நடைபெறும் திருமணங்களைப் பொறுத்த வரையில் கூட, அங்கே பதிவேடுகளில் அத்தகைய திருமணங்கள் பதிவு செய்யப்பட்டாலும், கடவுள்களை வணங்கிவிட்டு மதச் சடங்குகளின் அடிப்படையில் திருமணம் செய்தாலும், சட்டப்படி அவை நீதிமன்றத்திற்குப் போகும் போது, முறையான திருமணங்களாகக் கருதப்படுவதில்லை. இந்த நிலையைப் போக்கத்தான் இன்றைய சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இஸ்லாமியர்களைப் பொறுத்தவரையில், நிக்காஹ் என்ற முறையில் மசூதிகளில் பதிவு செய்யப்பட்டாலும்கூட, அவை முறையான திருமணங்களாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

Marriage is considered as a contract and as an agreement. It is also considered as a matter of convenience.

இப்படி திருமணங்கள் என்பதை இப்போது சமுதாய ஒப்பந்தங்களாகக் கருதப்படுகின்ற நிலை வந்திருக்கிறது. ஒரு காலத்தில் திருமணம் என்பது இறைவனோடு இணைந்ததாக இருந்தது, தூய்மையானது, பாராட்டுக்குரியது, கண்ணியமானது என்று கருதப் பட்டது. ஆனால். . .

(பிற்பகல் 12-30)

Thiru K. RAMAMOORTHY : Marriage is considered in some parts as an agreement or as a contract. It is nowhere considered as a matter of convenience. This is for the information of the hon. Member.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம் நாட்டைப் பொறுத்த வரையில், திருமணத்தை நாம் மிகவும் தூய்மையானதாகக் கருதுகிறோம். ஆனால் உலகத்திலே வரும் மாற்றங்களைப் பார்க்கும்போது, இந்தியாவிலேகூட பல இடங்களில் திருமணங்களை, விரும்பினால் ஏற்பது, இல்லாவிட்டால் பிரிந்து செல்வது என்ற நிலை இருப்பதால்தான், சில முற்போக்குவாதிகள் முற்போக்குவாதிகள் என்று சொல்லுவதை விட பிற்போக்குவாதிகள் என்று சொல்லலாம்

ti! s a matter of convenience என்று வைத்துக்கொள்கிறார்கள். நடந்துகொண்டிருக்கிற நாட்டு நடப்பை நான் சொல்லுகிறேன். நானாகப் பார்த்துச் சொல்லவில்லை.

Marriage is considered as a contract, an agreement and is considered as a matter of convenience. If we want, we have it, if we do not want, we kick it away and we have our own arrangements. This is what is going on.



1982 ஏப்ரல் 3] [திரு. பா. ரா. தாமஸ்]

இந்த நிலை வருகிறபோது, இன்று பேச வேண்டிய நிலை வருகிறது. பாதிக்கப்பட்டவர் நீதியைப் பெற வேண்டுமென்றால், வழக்குப் பதிவு செய்ய நீதிமன்றத்திற்குப் போக வேண்டும். நீதிமன்றத்திலே அவர்

He has to produce proof, conclusive evidence to establish his stand, hat he is married to so-and-so.

இந்த நிலை உருவாகும்போது, பதிவு செய்திருந்தால்தான் முடியும். குடும்பத்தில் ஜாயின்ட் ஃபாமிலி என்ற நிலை இப்போது மாறிவிட்டதால், இப்போது இந்த ஏற்பாடு ஆகியிருக்கிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள முறை, வைதிகத் திருமணமாக இருந்தால், பதிவு செய்ய வேண்டாம் என்று இருக்கிறது, சுயமரியாதை திருமணமாக இருந்தால், பதிவு செய்ய வேண்டுமென்று இருக்கிறது. ஒரு தீர்ப்பின் காரணமாக இப்படிப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையிலே இது வந்திருக்கிறது. எப்ப வைதீகத் திருமணத்திற்குப் பதிவு தேவையில்லையோ அதைப் போலவே சுயமரியாதைத் திருமணத்திற்கும் தேவையில்லை என்ற நிலை கடந்து எல்லாத் திருமணத்தையும் பதிவு செய்ய வேண்டுமென்ற நிலை வேண்டும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். திருமணம் செய்துகொள்ளும் அத்தனை பேரும் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்பதும், அத்தனை கோடி மக்களும் இதைப் பயன்படுத்த வேண்டும் என்பதும், சாதாரண ஏழை மக்கள் திருமணத்தைப் பொறுத்த வரையில் அவர்களும் பதிவுசெய்ய வேண்டுமென்று சொன்னால், எதிர்காலத்திலே அவர்கள் பாதிக்கப் படுவார்கள் என்பது பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் என்ன கருதுகிறார் ?

திரு. பா. ரா. தாமஸ்: இதுகாறும் நம்முடைய திருமணங்கள் "பெர்சனல் லா" வாக இருந்தன. சம்பிரதாயப்படி ஆலயங்களில், சர்ச்சுகளில், மசூதிகளில் சென்று திருமணத்தைச் செய்வது என்பது பெர்சனல் லா-வாக இருந்தது. இன்றுள்ள நிலை அப்படியல்ல. இஸ்லாமியர்களுக்குக் கூட நம்முடைய நாட்டிலே, நம்முடைய மாநிலத்திலே பெர்சனல் லாவாகத்தான் இருக்கிறது. பதிவு செய்ய வேண்டுமென்று எந்தவிதமான திட்டவட்டமான அணையும் இல்லை. அண்மையிலே பாகிஸ்தானில் சட்டமாக இயற்றி, அங்கேயுள்ள இஸ்லாமியர்களின் திருமணத்தைப் பதிவு செய்ய வேண்டுமென்று கட்டாயத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்** : சர்வாதிகார நாட்டை உதாரணத்திற்குக் காட்டுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களின் கருத்து நல்ல கருத்தாக இருந்தாலும், அனைத்து மக்களும், சாதாரண ஏழை மக்களும் இதைச் செய்வார்களா? திருமணத்தை நடத்தும்போது, இதை மறந்துவிடுவார்கள். குழப்பம் வரும்போது, இதைப் பதிவு செய்யவில்லை என்றால், அவர்கள் அடிபட்டுப் போகிறார்கள் என்ற சிரமம் வரும். அனைத்து மக்களும் பதிவு செய்ய வேண்டும் என்பதை நடைமுறைப்படுத்த முடியுமா என்ற ஐயப்பாடு இருக்கிறது.

* **திரு. க. இராமமூர்த்தி** : மாற்றுத் தலைவர் அவர்களே, இடையிலே குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். பாகிஸ்தான் என்பது சர்வாதிகார நாடு, ஆகவே திருமணங்களைப் பதிவு செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்த முடிகிறது என்று சொல்ல முடிகிறது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் உலகம் சுற்றிய தமிழர்களில் ஒருவர், தமிழருக்காகப் பாடுபடுபவர் என்று கருதுகிறேன். உலக நாடுகள் அனைத்திலும் திருமணம் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற கட்டாய நிலை இன்றைக்கு இருக்கிறது. ஆனால் நமது நாட்டிலே அப்படி இல்லை: சமுதாய அமைப்பின் காரணமாக இங்கே இல்லை. தமிழகத்தைப் பொறுத்த வரையில், பதிவு செய்வதை எளிமையாக்க முடியும். செலவு இல்லாமலே பதிவு சுலபமாகச் செய்ய முடியும். அதிலிருந்து யாரும் தவறாத அளவிற்குச் செய்யக் கூடிய வகையிலே என்னுடைய சட்டமுன்வடிவில் சில பிரிவுகளைத் தந்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர், மேலும் எளிமையாக்க வேண்டுமென்று விரும்பினால், அதற்கான திருத்தத்தைக் கொடுத்தால் நல்லது. அப்படி இல்லாமல் இந்தச் சட்டமுன்வடிவே வேண்டாமென்ற நோக்கத்தின் அடிப்படையிலே, சமுதாயச் சீர்திருத்தத்தை நோக்கமாகக் கொண்டிருக்கிற கட்சியைச் சேர்ந்தவர், என்று சொல்லிக்கொண்டே இதைத் தவிர்க்க முயலுவதைவிட, இந்தச் சட்டமுன்வடிவை ஏற்பதற்கான காரணங்களைக் காட்ட முன்வருவார்களேயானால், நலமாக இருக்கும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்** : வெளிநாடுகளில் அநேகமாக எல்லோருக்கும் ஐடென்டிட்டி கார்ட் இருக்கிறது. அதற்குக் காரணம், மக்கள் தொகை குறைவாக இருப்பது, வசதி நிறைய இருப்பதுதான். நம்முடைய நாட்டில் வாக்குரிமையையே பயன்படுத்தாமல் இருக்கும்போது, நாம் எதற்காக ஓட்டுப் போட வேண்டும் என்று கருதி பதிவு செய்யாத நாட்டில் இந்தச் சட்டத்தைப் புரிந்துகொண்டு சாதாரண மக்கள் பயன்படுத்திக்கொள்வார்களா என்ற





சந்தேகம் ஏற்படுகிறது. நான் ஒன்றும் இதிலிருந்து நழுவவில்லை. மூன்று முறை காங்கிரஸ்காரர்கள் ஆட்சியிலிருந்த போது, சுயமரியாதை இயக்கத்திற்காக முறையாக நடந்துகொள்ளவில்லை. திரு. இராஜாஜி அவர்கள் காலத்திலும், திரு. காமராஜ் அவர்கள் காலத்திலும் ஒன்றும் செய்யவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு முதன் முதலாகக் கொண்டு வந்த மசோதா இதுதான். அப்போது அமைச்சராக இருந்த திரு. மாதவன் அவர்களை பெரியாரிடம் அனுப்பி, அவர் என்ன கருதுகிறாரோ அந்தக் கருத்தின் அடிப்படையிலே மசோதாவைக் கொண்டுவாருங்கள் என்று சொல்லி, பிறகு அதைக் கொண்டு வந்தார்கள். ஆகவே நாங்கள் அதிலிருந்து நழுவவில்லை. நல்ல கருத்து. ஆனால் நடைமுறைப்படுத்த முடியுமா என்ற சந்தேகத்தின் பேரில்தான் நான் இதைக் கேட்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்)** : டாக்டர் சனார்த்தனம் அவர்கள் விவாதத்தில் பங்குகொள்ளவிருக்கிறார்கள். அப்போது பேச நிறைய வாய்ப்பு இருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி** : சுமரியாதைத் திருமணம் செல்லுபடியாகாது என்ற நிலைமைக்கு நான் வரவில்லை. செல்லுபடியாகாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டதற்குப் பிறகு, ஏற்படக்கூடிய பயங்கரமான விளைவுகளைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காக அந்தச் சட்டம் வந்தது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்** : வழக்குமன்றத்திலே செல்லுபடியாகவில்லை என்ற தீர்ப்பு வந்த பிறகு, ஏற்கெனவே திருமணம் செய்தவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து அவர்களுடைய சுயமரியாதைத் திருமணங்களை அங்கீகரிக்கும் வழிமுறையாக வரவில்லை. அண்ணா அவர்கள், பெரியார் அவர்கள் எல்லாம் திராவிட பார்லிமெண்டரி பார்ட்டி சார்பாக வாதித்தார்கள். பத்தாண்டுக் காலத்திற்கு முன்பு சுயமரியாதைத் திருமணம் செய்தவர்களைப் பாதுகாப்பதில் பயன் இல்லை. இரண்டாண்டுக் காலத்திற்கு முன்பு செய்தவர்களின் நிலை எதிர்காலத்திலே என்ன என்று கேட்டார்கள். முதன் முதலாக பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் சுயமரியாதைத் திருமணச் சட்டமுன்வடிவை அதுவும் பெரியார் அவர்களுடைய கருத்தை அறிந்து கொண்டு வந்தார்கள். அந்தக் கட்டத்திலே கூட இந்தக் கருத்திலேயிருந்து நழுவவில்லை: ஆனால் முழுமையாக நடைமுறைப்படுத்த முடியுமா என்பதுதான் இப்போதுள்ள பிரச்சினை.

**திரு. பா. ரா. தாமஸ் :** பாகிஸ்தான் நாட்டைப் பொறுத்த வரையில், சர்வாதிகார நாடு என்று கூறி, அந்தக் கருத்தை ஏன் ஏற்றுக்கொள்ள முடிய வில்லை என்று டாக்டர் சனார்த்தனம் அவர்கள் கூறுகிறார்கள் என்று தெரிய வில்லை. சர்வாதிகார நாட்டைச் சார்ந்தவர்கள் நல்ல காரியங்களைச் செய்தால் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று இருக்கிறதா என்று தெரியவில்லை. ஒருவேளை இஸ்லாமிய மக்கள் மத முறைப்படி அங்கேயுள்ள பெண்களுக்கு அதிகமான உரிமைகளைக் கொடுக்க வேண்டுமென்ற காரணத்தாலே, பாகிஸ்தான் நாட்டிலே கட்டாயமாகத் திருமணங்களை பதிவு செய்ய வேண்டுமென்று சட்டம் இயற்றியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

***மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பாகிஸ்தானில் இப்போது செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிற பல்வேறு கருத்துக்கள் இஸ்லாத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்று சொல்ல முடியாது. மதத்தையே கூட கட்டாயமாகத் திணிக்கக் கூடாது என்பது இஸ்லாத்தின் கருத்து. மாற்றங்களைக் கூட அவர்களாகவே ஏற்றுக்கொள்ள வேண்டும். தூண்டுதல் காரணமாக மத மாற்றம் செய்யக் கூடாது என்பது இஸ்லாத்தின் கருத்து. சில பேர் தவறாகப் புரிந்துகொண்டு பேசி வருகிறார்கள்: பாகிஸ்தானில் இப்போது சேலை கட்டுவது என்பது இஸ்லாத்துக்கு விரோதமானது, இந்துப் பண்பாட்டை ஒட்டியது என்று சொல்லி தடை செய்கிறார்கள். இது இஸ்லாத்துக்கு உடன்பாடு அல்ல. ஆகவே அவர்கள் நிலைமைக்கு மோசமாக போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதை உதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டாமென்றுதான் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் சொன்னார்கள்.

**திரு. பா. ரா. தாமஸ் :** பொதுவாகவே திருமணங்களைப் பதிவு செய்ய வேண்டுமென்று பல நாடுகளில் முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

"To give greater protection to the weaker sex, the weaker side of the marriage" திருமணத்திலே சம்பந்தப்பட்டவர்களில் பலவீனமாகக் கருதப்படுகிற அவர்களுக்குச் சரியான பாதுகாப்பு வேண்டுமென்றால், பதிவு செய்துதான் ஆக வேண்டும்.

கிருஸ்துவர்களைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். கிருஸ்துவர்கள் எல்லோரும் பணம் படைத்தவர்கள் என்று கருத வேண்டியதில்லை. மிக மிக வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களும் பெரும்பகுதியினர் இருக்கிறார்கள். ஆனால் கிருத்துவ மதத்தைப் பின்பற்றுபவர்களின் திருமணம் ஆலயத்தில் செய்யப்படுவதால், அனைத்தும் பதிவு செய்யப்படுகின்றன.





என் ஊருக்குப் பக்கத்திலே திருப்பரங்குன்றத்திலே முருகன் சந்நிதானம் இருக்கிறது. அங்கே ஏராளமான மக்கள் பல பகுதிகளிலிருந்து வந்து திருமணம் நடத்துகிறார்கள். ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனியாகச் சத்திரங்கள் கூட வைத்திருக்கிறார்கள். அங்கே வந்து தங்குகிறார்கள், திருமணம் நடத்துகிறார்கள். அதிலே பதிவு செய்வது கொஞ்சம்தான். அங்கே ஒரு கட்டணம் வைத்திருக்கிறார்கள். காணிக்கை செலுத்துகிறார்கள். திருமணம் செய்கிறார்கள்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்):** இந்தச் சட்டமுன் வடிவின் மீதான விவாதம் அடுத்த தனி உறுப்பினர் அலுவல் நாள் அன்று தொடர்ந்து நடைபெறும். மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மீண்டும் அவை 5—4—1982 திங்கட்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-30)

## 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders*

Nil.

### *B. Reports, Notifications and Other Papers.*

* 169. Eleventh Report of the Committe on Public Accounts on the Excesses over voted Grants and charged Appropriations for the year 1976-77 (Tamil).

‡ 170. The Perarignar Anna University of Technology (Amendment) Bill, 1982 (L.A. Bill No. 10 of 1982), as passed by the Assembly.

‡ 171. The Tamil Nadu Public Property (Prevention of Destruction and Loss) Bill, 1982 (L. A. Bill No. 13 of 1982), as passed by the Assembly.

‡ 172. The Provincial Small Cause Courts (Tamil Nadu Amendment) Bill, 1982 (L.A. Bill No. 14 of 1982), as passed by the Assembly.

‡ 173. The Madras City Civil Courts and Presidency Small Cause Courts (Amendment) Repeal Bill, 1982 (L.A. Bill No. 15 of 1982), as passed by the Assembly.

‡ 174. The Registration (Tamil Nadu Amendment) Bill, 1982 (L.A. Bill No. 16 of 1982), as passed by the Assembly.

‡ 175. The Tamil Nadu Court Fees and Suits Valuation (Amendment) Bill, 1982 (L. A. Bill No. 17 of 1982), as passed by the Assembly.

‡ 176. The Tamil Nadu Manual Workers (Regulation of Employment and Conditions of Works) Bill, 1982 (L. A. Bill No. 23 of 1982), as passed by the Assembly.

‡ 177. The Industrial Disputes (Tamil Nadu Amendment) Bill, 1982 (L. A. Bill No. 24 of 1982), as passed by the Assembly.

‡ 178. The Wakfs (Tamil Nadu Amendment) Bill, 1982 (L. A. Bill No. 70 of 1981), as passed by the Assembly.

* Laid on the Table of the House on 2nd April 1982.

‡ Circulated to all M.L.Cs. on 2nd April 1982.



இணைப்பு I

(13 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 246-க்கான அடிக்குறிப்பைக் காண்க).

(அ) ஆம்.

(இ) மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பலதரப்பட்ட தொழில் பிரிவுகள் நிறுவுவதற்காக மைய அரசு 10 உரிமங்களையும், 10 இசைவுக் கடிதங்களையும் வழங்கியுள்ளது. மைய அரசு தொழில் நுட்ப வளர்ச்சி தலைமை இயக்குநரகம் (டி. ஜி. டி. டி) ஒரு தொழில் பிரிவை நிறுவுவதற்கான சான்றிதழை வழங்கியுள்ளது.

(1) மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் தொழிற்சாலைகள் நிறுவ மைய அரசால் வழங்கப்பட்ட உரிமங்கள் ;

| | நிறுவனத்தின் பெயர் மற்றும் விலாசம். | உற்பத்திப் பொருளின் பெயர். | உரிமம் எண். | நிலை. |
|---|---|---|---|---|
| 1 | பென்னர் இந்தியா லிமிடெட், மதுரை. | சின்தடிக் காட்ஸ் மற்றும் அப்ரான் (விரிவுபடுத்துதல்) | சி. ஐ.எல். 99/78 | நிறுவனம் நடை பெற்று வருகின்றது. |
| 2 | பாண்டியன் கெமிக்கல் லிமிடெட், மதுரை. | பொட்டாசியம் குளோரேட் (விரிவுபடுத்தல்) | சி. ஐ.எல். 258/78 நாள் 7-12-78. | நிறுவனம் நடைப் பெற்றுவருகின்றது. |
| 3 | சென்னை மோட்டார் லிமிடெட் சென்னை. (சிங்கம்புணரி, இராமநாதபுரம் மாவட்டம்.) | ஸ்டீல் போர்சிங் (விரிவுபடுத்தல்) | சி. ஐ.எல். 221/79 நாள் 27-9-79 | நிறுவனம் நடை பெற்று வருகின்றது. |
| 4 | சுந்தரம் பாஸ்டனர்ஸ் லிமிடெட் சென்னை (அருப்புக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டம்) | ஹை. டி. பாஸ்டனஸ் (விரிவுபடுத்துதல்) | சி. ஐஎல். 203 80 நாள் 1-8-80. | செயலாக்கப்பட்டது. |
| 5 | தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம், சென்னை-2, (ஆலங்குளம், இராமநாதபுரம்) | ஆஸ்பஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் (புதிய நிறுவனம்) | சி. ஐ.எல். 205/80 நாள் 5-8-80 | திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 6 தமிழ்நாடு ப்ளோரின் மற்றும் அலைய்டு இன்டஸ்டிரீஸ் லிமிடெட் சென்னை (மணலூர் இராமநாதபுரம்) | அலுமினியம் புளோரைடு (புதிய தொழிற்கூடம்) | சி. ஐ.எல். 327/80 நாள் 22-10-80 | திட்டம் செயல்படுத்துவது பரிசீலனையிலுள்ளது. |
| 7 திருவாளர்கள் எம். சுந்தரராஜன் உடும்ல்பேட்டை, (நிலக்கோட்டை, மதுரை) | எழுத்துப் பொருள், அச்சுப் பொருள், கட்டும் தாள் மற்றும் உறைத்தாள். | சி. ஐ.எல்74/81 நாள் 31-3-81. | திட்ட செயல்படுத்துவது பரிசீலனையிலுள்ளது. |
| 8 திருவாளர்கள் வைகை கெமிக்கல் தொழிற்சாலை பிரைவேட் லிமிடெட் மதுரை, (சிவகங்கை, இராமநாதபுரம்) | பொட்டாசியம் குளோரைட் (புதிய தொழிற்கூடம்) | சி. ஐ.எல்180/80 நாள் 14-7-80 | திட்டம் செயல்படுத்துவது பரிசீலனையில் உள்ளது. |
| 9 திருவாளர்கள் சென்னை சிமெண்ட் லிமிடெட் ராஜபாளையம். | சிமெண்ட் (விரிவுபடுத்துதல்) | சி. ஐ.எல்/260/81 நாள் 3-9-81. | திட்டம் செயல் படுத்துவது பரிசீலனையில் உள்ளது. |
| 10 திருவாளர்கள் தமிழ் நாடு குளோரைட், மதுரை இராமநாதபுரம் மாவட்டம்) | 1. பொட்டாசியம் குளோரேட் 2. சோடியம் குளோரேட் (புதிய தொழிற்சாலை) | சி. ஐ.எல் 398)81 நாள் 31-12-81. | திட்டம் செயல் படுத்துவது பரிசீலனையில் உள்ளது. |



மதுரை இராமநாதபுரம் மாவட்டங்களில் தொழிற்சாலைகள் நிறுவ மைய அரசால் வழங்கப்பட்ட இசைவுக் கடிதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 சி. வி. ஆர். எம் அழகப்ப செட்டியார், கோட்டூர்புரம் (மதுரை) | டி. வி. ரிசிவியர் (புதிய தொழில்சாலை) | 5/78 நாள் 17-1-78 | செயலாக்கப்பட இருக்கின்றது. |
| 2 வைகை. கெமிக்கல் தொழிற்சாலை பிரைவேட் லிமிடெட், மதுரை (சிவகங்கை இராம நாதபுரம்) | பொட்டாசியம் குளோரேடு (புதிய தொழிற்சாலை) | 515/79 நாள்31-12-79 | செயலாக்கப்பட இருக்கின்றது. |
| 3 சரோஜா மில்ஸ், லிமிடெட் தியாகராஜ் மில்ஸ் திருமங்கலம் (மதுரை மாவட்டம்) | பருத்தி நூல் (விரிவுபடுத்தல்) | 531/79 நாள் 31-12-79. | செயலாக்கப்பட இருக்கின்றது. |
| 4 தமிழ்நாடு—இராம நாதபுரம் குளோரேட் லிமிடெட், மதுரை (மதுரை) | 1. பொட்டாசியம் குளோரேட் 2. சோடியம் குளோரேட் (விரிவு படுத்துதல்) | 285/80 நாள் 7-7-80 | திட்டம் செயல் படுத்துவது பரிசீலனையில் உள்ளது. |
| 5 திருவாளர்கள், சென்னை சிமெண்ட், லிமிடெட் ராஜபாளையம் (சாத்தூர்) | போர்ட்லேண்ட் சிமெண்ட் | எல். 1.16/82 | திட்டம் செயல்படுத்துவது பரிசீலனையில் உள்ளது. |

| [1] | [2] | [3] | [4] |
|---|---|---|---|
| 6 திருவாளர்கள் மெட்டல் பவுடர் கம்பெனி லிமிடெட் புதுநகர் (அஞ்சல்) மரவன் குளம் | 1. இரும்புத்தூள் 2. டங்ஸ்டன்தூள் 3. கோபால்ட் தூள் குப்ரஸ் ஆக்ஸைடு (விரிவுபடுத்தல்) | எல்1 121/81 நாள் 25.3-81 503/81 நாள் 31-7-81 711/81 நாள் 23-11-81 | திட்டம் செயல் படுத்துவது பரிசீலனையில் உள்ளது. |
| 7 திருவாளர்கள் சத்நர்ன் ரோடு வேஸ் லிமிடெட் மதுரை (அருப்புக் கோட்டை, இராம நாதபுரம் மாவட்டம்). | எஞ்சின் வால்வு (விரிவுபடுத்துதல்) | 188/81 நாள் 3-4-81 | திட்டம் செயல் படுத்துவது பரிசீல னையில் உள்ளது. |
| 8 திருவாளர்கள் திண்டுக்கல் தோல் நிறைவு, பதனிடும் தொழிற்சலை கூட்டுறவு சங்கம், திண்டுக்கல். | தோல் நிறைவு (விரிவுபடுத்துதல்) | 444/81 நாள் 13–7-81 | திட்டம் செயல் படுத்துவது பரி சீலனையில் உள்ளது |
| 9 திருவாளர்கள் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் சென்னை 2, ஆலங்குளம், இராமநாதபுரம். | ஆஸ்பஸ்டாஸ் அழுத்த குழாய்கள். | 556/81 நாள்17-7-81 | திட்டம் செயல்படுத் துவது பரிசீலனை யில் உள்ளது. |
| 10 திருவாளர்கள் ராமலிங்க மில்ஸ் பிரைவேட் லிமிடெட், அருப்புக் கோட்டை,. | பருத்திநூல் (விரிவாக்கம்) | 794/81 நாள் 31-12-81 | திட்டம் செயல்படுத் துவது பரிசீலனையில் உள்ளது. |



மைய அரசு தொழில் நுட்ப வளர்ச்சி இயக்குநரகம் (டி. ஜீ. டி. டி.) வழங்கியுள்ள சான்றிதழ்

| | | | |
|---|---|---|---|
| 1 தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் டிட்கோ) வாலி (நோக்கம், இராமநாதபுரம் | மெக்னீசியம் உலோகம் (ஆண்டுக்கு) 600 டன்] | டி. ஜீ. டி. டி. பதிவு எண் டி. ஜீ. டி. டி. ஹட்க் யூ/ பி/எஸ்-16/ ஆர்/5379/ இ[17 (11) எஸ்இ(10. நாள்13-2.80 | 1984 ஆம் ஆண்டில் உற்பத்தியை துவங்குமென எதிபார்க்கப் படுகிறது. |

[1982 ஏப்ரல் 3

## இணைப்பு II.

(31 ஆம் பக்கத்தில் இனம் 4 (1) க்கான அடிக்குறிப்பைக் காண்க.)
காண்க)

கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோயில் நகரைச் சுற்றி ஐந்து லெவி
லெவி சோதனைச் சாவடிகள் நிறுவப்பட்டுள்ளன. இவை உரிமம் பெற்ற
**வியாபாரிகளும்** உரிமம் இல்லாத இடைத்தரகர்களும் நெல் கடத்திச் செல்
வதையும் லெவி ஏய்ப்பு செய்வதையும் கண்காணிக்கின்றன. விவசாயிகளிட
மிருந்து லெவி வசூலிக்கப்படவில்லை. சில மொத்த வர்த்தக உரிமம் வைத்
துள்ள வியாபாரிகள் லெவி ஏய்ப்பு செய்வதற்காக தாங்கள் விவசாயிகளிடம்
வாங்கிய சரக்குகளை அவர்களிடமே வைத்திருந்து விவசாயிகளின் இருப்பு
போல் அரசுக்கு காண்பிக்கின்றனர். இதைத் தடுப்பதற்காக சோதனைச்
சாவடிகளில் தீவிரமாக சரக்குகள் சோதனை செய்யப்படுகின்றன. விவசாயி
களிடமிருந்து லெவி எப்போதும் வசூலிக்கப்பட வில்லை. லெவி அமுல்
படுத்தியதை விரும்பாத சில மொத்த வணிகர்கள்தான் விவசாயிகளிடம் லெவி
வசூலிக்கப் படுவதாகக் குறை கூறுகின்றனர்.

## இணைப்பு III

(34 ஆம் பக்கத்தில் இனம் 4 (1) க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

1970-ம் ஆண்டு அரசு சிமெண்ட் விற்பனைக்குக் கொண்டுவரப்பட்டது
முதல் பொது மக்களுக்கு ஸ்டாக்கிஸ்டுகள் மூலமாக சிமெண்ட் விநியோகிக்
கப்பட்டு வந்தது. தமிழ்நாட்டில் 1—1—1979 முதல் சிமெண்ட் பொது
விநியோகம் (Public Distribution System) முறையை தமிழக அரசு
அரசு அமுலுக்கு கொண்டு வந்தது. இந்த திட்டத்தின்படி 1978-ம் ஆண்டு
செப்டம்பரில் சிமெண்ட் உற்பத்தியாளர்கள் பட்டியலில் இருந்த சிமெண்ட்
ஸ்டாக்கிஸ்டுகள் அனைவருக்கும் சிமெண்ட் விநியோக உரிமம் அரசால்
அளிக்கப்பட்டது. அனைத்து ஸ்டாக்கிஸ்டுகளும் அரசின் **அனுமதி பெற்ற**
ஸ்டாக்கிஸ்டுகளாக ஆக்கப்பட்டார்கள். இருப்பினும் அநேக ஸ்டாக்கிஸ்டுகள்
தங்களது காப்புறுதி வைப்பீட்டினை
எடுத்துக் கொள்ளாமல் சம்பந்தப்பட்ட உற்பத்தியாளர்களிடமே தொடர்ந்து திரும்ப
வைத்திருந்தார்கள்.



1982 ஏப்ரல் 3]

2. இந்திய அரசின் சிமெண்ட் விலை நிர்ணயம் மற்றும் விநியோகத்தின்
மீதான கொள்கை 1—3—1982 லிருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்
டுள்ளது. இந்த உத்தரவின்படி சிமெண்ட் உற்பத்தியாளர்கள் உற்பத்தி
திறனில் ( (installed capacity) ) மூன்றில் இரண்டு பங்கு உற்பத்தி
யினை அரசாங்க ஆணைப்படி விநியோகம் செய்து விட்டு அதற்கு மேலாக
உள்ள கூடுதல் உற்பத்தியை அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் விலைக்கு
விற்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். மேற்சொன்ன அரசின் உத்திர
வினைப் பின்பற்றி அனைத்து சிமெண்ட் உற்பத்தியாளர்களும் " நான் லெவி "
( Non levey ) திட்டத்தின் அடிப்படையில் சிமெண்ட்டை பொது
மக்களுக்கு விநியோகம் செய்வதற்கு தங்கள் கொள்கை திட்டங்களை உரு
வாக்கி உள்ளனர்.

3. 1970-ம் ஆண்டில் சிமெண்ட் டன் ஒன்றின் விலை ரூபாய் 197.09 ஆகும்
தற்போது "நான்-லெவி" முறையில் கிடைக்கும் சிமெண்டின் விலை டன்
ஒன்றுக்கு ரூபாய் 1100 ஆகிறது. காப்புறுதி வைப்பீட்டுத் தொகை எதிர்
பார்க்கப்படும் வியாபார அளவை ஒட்டி நிர்ணயிக்கப்படுகிறது. சென்னை
மாநகரத்திற்காக முன்பு வசூலிக்கப்பட்டிருந்த காப்புறுதி வைப்பீட்டுத்
தொகை ரூபாய் 10,000 மும் மற்ற இடங்களுக்கு வசூலிக்கப்பட்ட தொகை
யான ரூபாய் 2,000 மும் தற்போது நடைமுறையில் உள்ள சிமெண்ட் விலை
யினையும் எதிர்பார்க்கப்படும் வியாபார நடவடிக்கைகளையும் ஒப்பிட்டுப்
பார்க்கும் நிலையில் மிகவும் குறைவானதாகக் கருதப்பட்டது. தற்போதுள்ள
சிமெண்ட் விலையையும் எதிர்பார்க்கப்படும் வியாபார நடவடிக்கைகளையும்
கருத்தில் கொண்டு, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் காப்புறுதி வைப்பீட்டுத்
தொகையினைப் பின்வருமாறு மாற்றியுள்ளது.

1. சென்னை மாநகர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் முக்கிய பாகமாக அமைகிற சைதாப்பேட்டை தாலுகாவின் புறநகர் — ரூ. 30,000
2. மாவட்ட தலைமை இடங்கள் மற்றும் நகராட்சி நகரங்கள் — ரூ. 20,000
3. மற்ற இடங்கள் — ரூ. 10,000

4. இந்த வைப்பீட்டுத் தொகைகளுக்கு இந்த நிறுவனம் ஆண்டு ஒன்றுக்கு
12 சதவிகித வட்டியையும் கொடுக்கிறது. இதை சுற்றறிக்கையில் இந்த
நிறுவனம் தெளிவு படுத்தி உள்ளது. சிமெண்ட் விலை அதிகரிப்பு காரணமாக

அனைத்து சிமெண்ட் உற்பத்தியாளர்களும் பல்வேறான காப்புறுதி வைப்பீட்டுத் தொகையினை நிர்ணயித்து உள்ளார்கள். மேற்கண்ட நிறுவனம் கீழ்க்கண்ட விவரங்களையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள்.

5. மைசூர் சிமெண்ட் கம்பெனி மாதம் ஒன்றிற்கு 200 டன் சிமெண்ட் ஒதுக்கீடு செய்வதற்காக ரூபாய் 2 லட்சம் காப்புறுதி வைப்பீட்டுத் தொகையாக நிர்ணயம் செய்துள்ளது. மாதம் ஒன்றுக்கு 150 டன்களை ஒதுக்கீடு செய்வதற்காக ரூபாய் 1.5 லட்சம் அளவை காப்புறுதி வைப்பீட்டுத் தொகையாகவும், 100 டன்களை ஒதுக்கீடு செய்வதற்கு ரூபாய் 1 லட்சம் காப்புறுதி வைப்பீட்டுத் தொகையாகவும் நிர்ணயித்துள்ளது. மாதம் ஒன்றுக்கு 50 டன்கள் ஒதுக்கீடு செய்வதற்கு ரூபாய் 50,000-த்தை குறைந்த அளவு காப்புறுதி வைப்பீட்டுத் தொகையாக நிர்ணயித்து உள்ளது.

6. அதுபோல தமிழ்நாட்டில், இந்தியா சிமெண்ட்ஸ் கம்பெனி, மதுரை, கோயம்புத்தூர், சென்னை ஆகிய இடங்களுக்கு ரூபாய் 30,000 காப்புறுதி வைப்பீட்டுத் தொகையாக வசூலிக்கிறது. மாவட்ட தலைமை இடங்களுக்கு ரூபாய் 20,000 மும், பிற இடங்கள் அனைத்திற்கும், ரூபாய் 10,000 மும் காப்புறுதி வைப்பீட்டுத் தொகையாக நிர்ணயம் செய்து வசூலிக்கிறது.

7. மதராஸ் சிமெண்ட் கம்பெனி காப்புறுதி வைப்பீட்டுத் தொகையினை மதுரைக்கு ரூபாய் 35,000 ஆகவும், திருச்சிக்கு ரூபாய் 30,000 ஆகவும் நிர்ணயித்து இருப்பதாகத் தெரிகிறது. அதுபோல மற்ற சிமெண்ட் உற்பத்தியாளர்களும் பல்வேறு விகிதங்களில் காப்புறுதி வைப்பீட்டுத் தொகையினை நிர்ணயித்துள்ளார்கள். சுருக்கமாக சிமெண்ட் உற்பத்தியாளர்கள் காப்புறுதி வைப்பீட்டுத் தொகையினை அதிகப்படுத்தி உள்ளார்கள்.

8. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தாரால் அனுப்பப்பட்ட காப்புறுதி வைப்பீடு சம்மந்தமான சுற்றறிக்கைக்கு அதனுடைய ஸ்டாக்கிஸ்டுகளிடமிருந்து சாதகமற்ற பதிலோ, மறுப்போ வரவில்லை. ஸ்டாக்கிஸ்களிடமிருந்து பொதுவாக நல்ல முறையில் சாதகமான பதில்களே வந்துள்ளன.



## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

திங்கட்கிழமை, 1982, ஏப்ரல் 5.

பங்குனி 23, துன்மதி, திருவள்ளுவராண்டு—2013.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

### SANDALWOOD OIL.

*249. Q.—DR. T. R. JANARTHANAM (on behalf of THIRU K. RAMAMOORTHY) : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state—

(a) whether the Government have established an industry for extraction of Sandalwood Oil and for the production of Sandalwood Soap, Powder, etc., in the State; and

(b) whether the Government have permitted any Private Sector Undertaking in this regard ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) தமி—கக் காடுகளில் கிடைக்கும் சந்தனக் கட்டைகளைப் பயன்படுத்தி சந்தனத் தைலம் தயாரிக்கும் திட்டம் மட்டுமே அரசிடம் உள்ளது. இந்தத் திட்டத்தை தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் செயலாக்கிக் கொடுக்கும்.

(இ) இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் சவ்வாது மலை, ஏலகிரி மலையில் உள்ள சந்தன மரங்களைப் பயன்படுத்தி சந்தன சோப்புத் தொழிற்சாலை அல்லது சந்தனத் தைலத் தொழிற்சாலை அமைக்கப்படுவதாக பத்திரிகையில் செய்தி வந்தது, அது உண்மையா ? அது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ? அதன் விவரங்களை அறியலாமா ?

[1982 ஏப்ரல் 5

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவரவர்களே, சந்தனத் தைலம் தயாரிக்கும் திட்டம்தான் அரசால் அறிவிக்கப்பட்டு, அதை நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்குப் பிறகு சந்தனத்திலேயிருந்து உப பொருள்கள் தயாரிக்கும் திட்டம் எதுவும் அரசிடமில்லை. இந்தத் தைலத் தொழிற்சாலை உருவாகி, ஆரம்பித்து, அதனுடைய நடைமுறை லாப நஷ்டங்களைப் பார்த்ததற்குப் பிறகுதான் துணைத் தொழில்கள் ஆரம்பிப்பது பற்றி அரசு பரிசீலிக்க இயலும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவரவர்களே, சந்தன மர வளம் காப்பதில் தமிழ்நாடு தான் முன்னணியில் இருக்கிறது. பெங்களூரில் அது அழிந்துவிட்டதென்று சொல்லுகிறார்கள். அதனால் இப்படிப்பட்ட தொழிற்சாலை ஆரம்பிப்பதால், அந்த வளத்தைப் பாதுகாக்க எந்த வகையில் அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** தலைவரவர்களே, இப்போது இந்தியத் துணைக் கண்டத்திலே சந்தன மரங்களை ஓரளவிற்குப் பாதுகாக்கின்ற நிலையில் தமிழகம் மாத்திரமே இருக்கிறது. பக்கத்தில் இருக்கும் கர்நாடக மாநிலத்தில்கூட சந்தனக் காடுகள் அழிக்கப்பட்டு விட்டன என்ற நிலைமை அங்கே தீவிரமான ஆலோசனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் பச்சை மரங்களை எடுத்து எதற்கும் நாம் பயன்படுத்துவதில்லை. 'டெட் டிரீஸ்'—காய்ந்த மரங்களை உலர்ந்து விழுகின்ற நிலையில் இருக்கிற வயதான மரங்களைத்தான் இப்படிப்பட்ட தேவைகளுக்காக எடுத்துக்கொண்டு வருகிறோம். அது ஆண்டு ஒன்றுக்கு சுமார் 1,500 டன் அளவிற்கு இப்போது நம்முடைய காடுகளிலேயிருந்து கிடைத்துக்கொண்டு வருகிறது. ஆகவே முதலிலே 100 டன் கொள்ளளவிலே இந்தத் தொழிற்சாலையைத் துவக்கலாமா என்று திட்டமிடப்பட்டு, பிறகு அது தொழிற்துறையின் மூலம் லாபகரமாக இயங்க முடியாதென்று தெரிந்து, 400 டன் மரம் பயன்படுத்துகிற, கொள்ளளவுள்ள தொழிற்சாலையைத் துவக்கலாமென்று இப்போது திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. ஆகவே நம்முடைய வளர்ந்து வருகிற, காப்பாற்றப்பட வேண்டிய சந்தனக் காட்டை பாதுகாக்கும் அந்த அடிப்படையிலே இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னால் சந்தன மரங்கள் என்பது இயற்கையாகக் காடுகளில் தோன்றி வளர்ந்து வந்தன. இப்போது பண்ணை முறையில், வேளாண்மை முறையில் சந்தனக் காடுகளை உருவாக்கும் முயற்சியிலே வனத்துறை ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.



1982 ஏப்ரல் 5]

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, உத்தேசிக்கப்பட்டுள்ள சந்தனத் தைலத் தொழிற்சாலை எந்தப் பகுதியில் தொடங்கப்பட இருக்கிறது ? அதற்கு எவ்வளவு முதலீடு செய்யும் திட்டமிருக்கிறது ? சந்தன மரங்கள் வளர்க்கும் அந்தப் பணியில் மாவட்டங்கள் எல்லாவற்றையும் கொண்டுவர, அரசு முனைப்புத் திட்டம் ஏதாவது வைத்திருக்கிறதா ? மேலை நாட்டு உதவியுடன் செய்யும் காடு வளர்ப்புத் திட்டத்தில், சந்தன மர வளர்ச்சித் திட்டத்திற்கு தனி ஒதுக்கீடுகள் உண்டா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவரவர்களே, 100 டன் சந்தனக் கட்டைகளைப் பயன்படுத்தும் அந்தத் தொழிற்சாலைக்கு முதலிலே 22.85 லட்சம் ரூபாய் முதலீடாக அனுமதிக்கப்பட்டது. ஆனால் அது நமக்கு அவ்வளவு லாபகரமாக இராதென்று தெரிந்ததற்குப் பிறகு, இப்போது சுமார் 50 லட்சம் ரூபாய்—49.99 லட்சம் ரூபாய் செலவில் 400 டன்னைப் பயன்படுத்தி சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இது திருப்பத்தூர் பகுதியில்தான் அமைக்கப்பட இருக்கிறது. அந்த இடத்தைத் தேர்ந்தெடுப்பதிலேகூட கால தாமதமாகி விட்டது. தண்ணீர் வசதி அதிகமாக இருக்கும் பகுதியைத் தேர்ந்தெடுப்பதிலே கொஞ்சம் காலதாமதமாகிவிட்டது. அதற்குப் பிறகு, சந்தன மரங்கள் எல்லாப் பகுதிகளிலும் வளருகிறதா என்பதை, முதலில் பரீட்சித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எந்தப் பகுதியில் சந்தன மரங்கள் வளருகிறதோ, இயற்கையாக வந்து கொண்டிருக்கிறதோ அந்தப் பகுதிகளிலேதான் வேளாண்மை முறையில் பயிர் செய்து சந்தன மரத்தை வளர்க்கும் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

**திரு. பா. ரா தாமஸ் :** தலைவரவர்களே, சந்தனக் கட்டையிலிருந்து தைலம் எடுக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கும்போது, காடுகளிலே ஏராளமான சந்தனக் கட்டைகள் தேக்கம் அடைந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். மேலும் தமிழகம் பெறும் வருவாயை முழுமையாகப் பெற முடியாமல் மத்திய அரசு தடை விதிப்பதாகச் சொல்லுகிறார்களே, அது உண்மையா ? தைலம் தயாரிக்கத் தேவையான கட்டைகள் போக, மீதியை வெளி நாடுகளுக்கு அனுப்பி, அதன் மூலம் வனத் துறையின் வருமானத்தை அதிகப்படுத்த மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவரவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத சில பகுதிகள் இந்தக் கேள்வியில் இருக்கின்றன என்றாலும், தொடர்பான கேள்வி என்பதாலும் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தலைவர் அனுமதிப்பதாலும் . . .

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்கள் அனுமதிப்பதாலும், தமிழகத்தினுடைய வருவாயை, நிதி நிலையைப் பொறுத்த ஒரு கேள்வி என்பதாலும், நான் இதற்கு விடையளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது நாம் காடுகளிலே வளர்ந்து, சேகரித்த மரங்களை விற்பனை செய்து கொண்டிருக்கிறோம். அதை, மிகப் பெரிய அளவிலே கர்நாடக மாநிலம் வாங்குகிறது. அதைத் தவிர, சித்தூர் பகுதியில்—ஆந்திரப் பகுதியில்—இருக்கும் தைலத் தொழிற்சாலை—தனியார் நிறுவனங்களும், வட மாநிலங்களில் உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் இருக்கிற தைலத் தொழிற்சாலை உரிமையாளர்களும் ஏலத்திலே எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 2 ஆண்டுகளாக வெளிநாட்டு ஏற்றுமதியை மத்திய அரசு தடை விதித்து நிறுத்தியதால், ஆண்டு ஒன்றுக்கு சுமார் 2 கோடியிலிருந்து 3 கோடி ரூபாயை நாம் இழந்து கொண்டிருக்கிறோம். அதைப் பல முறை, மிகத் தெளிவாக மத்திய அரசுக்குச் சொல்லிவிட்டோம். இருந்தாலும், அரசு கொள்கை முடிவெடுத்திருக்கிறதென்று திருப்பித் திருப்பிச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு ஒரு காரணம் கூறப்பட்டது. இந்த மரங்கள், நம்முடைய இந்தியாவிலே கிராமக் கைவினைக் கலைஞர்களுக்குப் பயன்பட வேண்டும்—'கார்விங் இன்டஸ்ட்ரி' என்று அழைக்கப்படும் சிற்பங்கள், சிலைகள் போன்றவை சந்தனத்திலிருந்து தயாரிப்பவர்களுக்கு இந்த மரங்கள் வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுக்குத் தேவையான 100, 200 டன் மரம் தந்துவிடுகிறோமென்று சொல்லி விட்டோம். வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் மரம், சந்தன எண்ணெய் எடுக்க உபயோகிக்கும் மரமல்ல. சந்தன எண்ணெய் எடுக்க உபயோகிக்கும் மரம் 3 ஆம் தர, 4 ஆம் தர குவாலிடிதான். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மரம் பெரிய சைஸ் லாக்—பெரிய மரங்கள். 80, 90 வருடங்கள் வளர்ந்து, மிகப் பெரிய அளவிலே ஒரு டன் கிட்டத்தட்ட 60,000 ரூபாய்க்கு 3 ஆண்டுகளுக்கு முன்னாலே போனது. இந்த ஏற்றுமதியைத் தடை செய்ததால், ஒரு டன் 19,000 ரூபாய்க்கு விலை விழுந்துவிட்டது. இப்போதுதான் 23,000 ரூபாயை மறுபடியும் எட்டிப் பிடித்திருக்கிறோம். சந்தன் எண்ணெய் எடுக்க உபயோகிக்கும் மரங்களுக்கும், வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் மரங்களுக்கும் சம்பந்தமேயில்லை என்பதைத் தெளிவாகச் சொன்னோம். கர்நாடக மாநிலம் மிகப் பெரிய சந்தனத் தைலத் தொழிற்சாலைகளையும், துணைத் தொழில்களையும் உருவாக்கிக்கொண்டு, அவர்கள் காடுகளிலே உள்ள மரங்களை அழித்துவிட்டு, தேவையான மரங்களுக்கு தமிழ் நாட்டை எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு, நீங்கள்





வெளிநாட்டு ஏற்றுமதியை அனுமதித்தால், இங்கே ஏலத்தின் மதிப்பு அதிகரிக்கிறது, நாங்கள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே அதைத் தடை செய்யுங்கள் என்று சொன்னதாகத் தமிழக அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. இது அதிகாரபூர்வமான தகவல் அல்ல. காரணம், சட்டமன்றத்திலே தெரிவிக்கிற காரணத்தாலே, மிகுந்த பொறுப்போடு, எச்சரிக்கையோடு தெரிவிக்கிறேன்.

(முற்பகல் 9-40)

அதனாலே நான் சேலத்தில் கர்நாடக அதிகாரிகள் மட்டத்தில் நடந்த கூட்டத்தில்கூட தெரிவித்தேன். "உங்களுடைய தேவையை எங்களிடத்தில் சொல்லுங்கள். நாமே இதுபற்றிப் பேசி முடிவு செய்வோம்" என்று சொன்னேன். ஏலத்திற்குப் போக வேண்டாம். தேவையில்லாமல் எங்களுடைய எண்ணத்திற்குக் குறுக்கே நிற்க வேண்டாமென்று சொன்னோம். இந்த ஆண்டு ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கையை மத்திய அரசு இன்னும் அறிவிக்கவில்லை. சமீபத்தில் அறிவிக்கிற கொள்கை முடிவிலே அநேகமாக நமக்கு ஓரளவுக்கு முழுமையாக ஏற்றுமதி செய்ய அனுமதிக்கவில்லை என்றாலும்கூட, குறிப்பிட்ட அளவுக்கு வரையறை செய்து, இத்தனை டன் என்கிற ஒரு உறுதியையாவது மத்திய அரசு தரும் என்று எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. க. இராமமூர்த்தி :** எத்தகைய சூழ்நிலைகள் இன்றைய தினம் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். நம்முடைய மாநிலத்தில், நமக்கு என்று சந்தன எண்ணெய், சந்தன பவுடர் போன்றவற்றைத் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் ஏற்படக் காலதாமதம் ஆக காரணம் என்ன? இதுபற்றி ஏற்கெனவே இருந்த ஆட்சிக் காலத்தில் கூட சொல்லப்பட்டது. இன்றைக்கு நம்மிடம் இருக்கின்ற இந்த மூலப் பொருள் இல்லாமல் மற்ற மாநிலங்களில் இந்தத் தொழிலை நடத்த முடியாது. அங்கேயெல்லாம் அவர்கள் தொழிலில் ஆர்வம் காட்டுகிற நிலை இருக்கிறது. இங்கே அம்மாதிரி ஆர்வம் காட்டுகிற நிலை இல்லாமல் இருப்பதற்கு என்ன காரணம்? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 90 சதவிதம் விலை உயர்ந்த அல்லது தரமான உயர்ந்த சந்தன மரங்களிலிருந்து நாம் என்னென்ன பொருள்களை உற்பத்தி செய்ய முடியும்? அந்த வகையில் செய்யப்பட்ட பொருள்களை ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இருக்கிறதா?

[1982 ஏப்ரல் 5

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** முன்னாலே இருந்த அரசு இதற்கு முயற்சி எடுத்ததா என்பதுபற்றித் தெரியாது. ஆனால் இந்த அரசு வந்த தற்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ,நான் இதுபற்றி அறிவித் தார்கள். நான் முன்னரே தெரிவித்ததுபோல், 1980 ஆம் ஆண்டுக்கு முன்னர் 100 டன் சந்தனக் கட்டையைப் பயன்படுத்தி 4½ டன் சந்தன எண்ணெய் எடுக்கலாம் என்றுதான் திட்டம் உருவாக்கப்பட்டது. அப்படி எடுத்தால் அதிலே லாபம் வராது, நஷ்டம் வரும் என்று பின்னாலே நம்முடைய தொழில் துறை நிபுணர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு, 400 டன் சந்தனக் கட்டையைப் பயன்படுத்தி 18 டன் சந்தன எண்ணெயைத் தயாரிக்கின்ற அளவுக்கு திட்டத்தை மாற்றியமைத்து அதற்காக என்று 50 இலட்சம் ரூபாய் முதலீடு செய்தோம். இடம் தேர்ந்தெடுப்பது, இதை அமைக்கும் பொறுப்பை 'டான்சி'யிடம் விடுவது போன்றவற்றால் கால தாமதம் ஆகியது. அதற்குப் பிறகு தொழில் துறை நிபுணர்களைத் தேர்ந் தெடுத்து அவர்களிடம் அதை அமைக்கும் பொறுப்பை ஒப்படைத்து, தொழிற் சாலையைக் கட்டிய பிறகு, அதை வனத் துறையிடம் ஒப்படைக்க வேண்டும் என்கிற வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படவே 3 ஆண்டுகள் தாமதமாகி யுள்ளது. இதற்கிடையில் அரசியல் காரணங்களும் குறுக்கிட்டன. முதலிலே பெரிய தொழிற்சாலையாக அமைக்கப்பட வேண்டுமென்று எண்ணித்தான் அரசு அறிவித்தது. அன்றைக்கு ஆட்சியில் இருந்த ஜனதா அரசு சந்தன எண்ணெய் தொழிற்சாலை என்பது கிராமப்புறத் தொழிற்சாலை, சிறிய தொழில் பற்றியது என்று சொன்னதுடன், இதைப் பெரிய தொழிலாக ஆரம் பிக்கக்கூடாது என்று திடீரென்று அறிவித்தது. இதனுடைய பின்னணி பற்றித் தெரியாது. ஆனால் இதுபற்றி ஒன்று தெரிய வந்தது. இதை நம்பி வட நாட்டிலே பல சந்தன எண்ணெய் தொழிற்சாலைகள் இயங்குகின்றன. அவர்கள் சந்தனக் கட்டையிலிருந்து சந்தன எண்ணெயைத் தயாரித்து, வெளி நாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய சந்தன மரங் கள் இல்லாவிட்டால், அவர்களுடைய தொழில் பாதிக்கும் என்கிற காரணத் தால், அப்படிப்பட்ட உத்தரவு போடப்பட்டது என்றும் தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு தமிழக அரசு, இருக்கிற சட்டத்தைப் பயன்படுத்தி, பெரிய தொழிலாக அல்ல, சிறிய தொழிலாக ஆரம்பிக்கிறோம் என்று சொல்லி, திட்டத்தை மாற்றியது. சிறிய தொழிற்சாலை என்றால், லாபகரமாக நடத்த வாய்ப்பு இல்லையென்று சொன்னார்கள். இதற்குப் பிறகு 400 டன் கொள்ளளவுள்ள, சட்ட திட்டத்திற்கு உட்பட்டு இயந்திரத்தைப் போடுகிற அளவுக்கு, சிறிய தொழிற்சாலை என்பதற்கு வரையறுக்கப்பட்ட மூலதனம் எவ்வளவோ அந்த வகையில் 50 இலட்சத்திற்கு உட்பட்டு திட்டமிட்டு செயல் படுத்துகிறோம். மூன்று ஆண்டு சுணக்கம் என்பதற்கு இன்னொரு காரணம்



1982 ஏப்ரல் 5]

நிதித் துறை. அது ஒரு கேள்வியை எழுப்பியது. இந்த அளவுக்கு தொழிற் சாலையை நாம் எழுப்பினால், இப்போது நாம் மரங்களை விற்று வருகின்ற லாபத்தின் அளவுக்கு பிறகு லாபம் வருமா என்கிற பிரச்சினையை எழுப்பி னார்கள். இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள மற்ற தொழிற்சாலைகளில் இப்போது இந்த மரங்களைப் பயன்படுத்துகிறார்கள். இதற்காக நம் முடைய மரங்களை அவர்களுக்கு விற்கின்ற நிலையில் நமக்கு லாபம் வருகிறது. உத்தரப்பிரதேசம், கர்நாடகம், ஆந்திரம் போன்ற மாநிலங்களி லுள்ளவர்கள் நம்முடைய மரங்களை வாங்குகிறார்கள். நாமே இந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்து, பொருள்களை உற்பத்தி செய்ய ஆரம்பித் தால், அதற்குப் பிறகு லாபம் வரும் என்பது குறித்து உறுதி சொல்ல முடியுமா என்கிற கேள்வியை எழுப்பினார்கள். அந்தக் கேள்விக்கு கொள்கை ரீதியாகவே அரசு முடிவு எடுத்துள்ளது. இலாபம் வருமா என்பது இரண் டாவது கேட்கப்பட வேண்டிய கேள்வி என்று அரசு தெரிவித்தது.

**திரு. க. இராமமூர்த்தி :** நம்முடைய நிதித் துறையா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** ஆம், நம்முடைய நிதித் துறையே தான். நம்முடைய நாட்டில் கிராமப்புறங்களில் இத்தகைய தொழிற்சாலை களை ஏற்படுத்தி அதன் மூலம் வேலை வாய்ப்பை ஏற்படுத்தவும், நமக்குக் கிடைக்கிற மூலப் பொருள்களைப் பயன்படுத்தி சந்தன மரத்தை அடிப்படை யாகக் கொண்டு பல தொழிற்சாலைகளை ஆரம்பிக்க எண்ணி, இப்படிப்பட்ட திட்டங்களை ஆரம்பிக்கிறோம். அதாவது இதைத் தொடர்ந்து பல துணைத் தொழிற்சாலைகளை நாம் ஆரம்பிக்க முடியும். இன்றைக்கு ஓசூரிலுள்ள மூங்கில் குச்சிகளை வாங்கிக்கொண்டு, கர்நாடகத்திலுள்ள பெங்களூருக்குச் சென்று அகர்பத்தி உற்பத்தி செய்கிறார்கள். இவற்றை எல்லாம் கூட்டுறவு இயக்கம் என்கிற வகையில் ஆரம்பிக்க வேண்டுமென்று திட்டம் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. ஏற்றுமதி செய்யப்படும் சந்தன மரம் இருக்கிறதே, அது 'லக்ஸுரியஸ்' என்கிற அடிப்படையில் விலை உயர்ந்த ஒரு மரம். 'கார்விங்' என்று அழைக்கப்படுகிற சில சிற்பங்களை அமைக்க இந்த மரம் பயன்படுத்தப் படுகிறது. பரந்த அளவில் இந்தத் தொழிலை உருவாக்கிவிட முடியாது. இந்தத் தொழிலைப்பற்றித் தெரிந்தவர்கள் தான் இதை உருவாக்க முடியும். உலக அளவில் இதனை உபயோகிப்பவர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவு. அந்த அடிப்படையில் இந்தத் தொழிலை கர்நாடகாவில் அதிகமாகச் செய் கிறார்கள். இங்கேயும் இந்தத் தொழிலைப்பற்றித் தெரிந்தவர்கள் இருப்ப தாகச் சொல்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் மிகக் குறைந்த அளவில் தான் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். சந்தன மரத்தைப் பயன் படுத்தி சிற்பங்கள், கார்விங் தொழிலைச் செய்கிறவர்களின் எண்ணிக்கை நம்

மூட்டிய மாநிலத்தில் குறைவு. ஆனால் தமிழ் நாட்டினுடைய தேவைக்கு
மிக உயர்ந்த அந்தச் சந்தனக் கட்டைகளைத் தர, உத்தரவாதம் அளிக்கத்
தயார் என்று மிகத் தெளிவாகத் தமிழக அரசு தெரிவித்துக் கொள்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : சந்தன எண்ணெய், சோப்பு, பவுடர் போன்ற
வற்றை எல்லாம் தயாரிக்கப் பயன்படுகிற சந்தனக் கட்டைகளைப் பொறுத்த
வரையில், மற்ற மாநிலங்களுக்கு, குறிப்பாக நம்மைச் சுற்றியிருக்கிற மாநிலங்
களுக்கு இங்கிருந்து சந்தனக் கட்டைகள் செல்கின்றன. ஆனால் நம்மிட
மிருந்து அதிகாரபூர்வமாக எந்த அளவுக்கு வாங்குகிறார்களோ அல்லது
ஏலத்தில் எடுக்கிறார்களோ, அதை மட்டும் கொண்டுபோய், அவர்கள் அங்கே
தொழிற்சாலைகளை நடத்த முடியாது. இருக்கிற நிலைமை அப்படி.
ஆகவே சட்டத்திற்குப் புறம்பாக வேறு விதமாக நம்முடைய மாநிலத்திலிருந்து
பெற்றுச் செல்கிறார்கள். நான் சில குழுக்களில் பணியாற்றியவன் என்ற
முறையில் இந்த விவரங்கள் எனக்கு நன்றாகத் தெரிந்து கிடைத்திருப்பவை.
இந்நிலையில் நம்முடைய மாநிலத்தில் இத்தொழிற்சாலையை உருவாக்குவதில்
அவசியமலலாமல காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இடம் தேர்ந்தெடுப்பதி
லிருந்து மற்ற விஷயங்கள் வரை எல்லாவற்றிற்கும் காலதாமதம் ஏற்பட்டிருக்
கிறது. நான் சில குழுக்களில் பணியாற்றியமையால், சம்பந்தப்பட்ட துறை
களிலிருந்து, நம்பத்தகுந்த தகவல்கள் மூலம் எனக்கு விவரங்கள் கிடைத்தன.
ஒரு 'வெஸ்டட் இன்டரஸ்ட்' என்பதைப்போல அதிகார பூர்வமாக விற்பதை
விட, அதிகமாக வேறு விதமாக, சட்டத்திற்குப் புறம்பாக இப்படி அனுப்புகிற
நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள். 'ராக்கெட்' என்று சொல்
கிறார்களே, அதுபோல் தொடர்ச்சியாக இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒரு கேள்விக்கு ஏற்கெனவே 18
நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. க. இராமமூர்த்தி : இப்படி நடப்பதையெல்லாம் தடுக்க வேண்டு
மென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுள்ள நோக்கத்தை மீறு
கின்ற வகையிலே இப்படிச் செய்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
இதிலே காட்டுகின்ற ஆர்வத்தைப் பாராட்டுவதுடன் இந்தத் தொழிற்சாலை
குறைந்தபட்சம் இந்த ஆண்டிலாவது துவங்கப்படும் என்பதற்கான உறுதி
யான அறிவிப்பை வெளியிடுவார்களா ?



மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : காலதாமதம் ஏற்பட்டதற்கான
காரணத்தை விளக்கமாக விவரித்து இந்த அவைக்கும் நாட்டுக்கும் தெரிய
வேண்டுமென்ற அடிப்படையில் தான் நான் கருத்துக்களைத் தெரிவித்தேன்.
இல்லாவிட்டால், சுருக்கமாக இரண்டொரு வார்த்தைகளில் என் பதிலைச்
சொல்லியிருப்பேன். பல்வேறு குழுக்கள் தெரிவித்த கருத்துக்களை நான்
ஏற்கெனவே படித்திருக்கிறேன். அந்தக் குறிப்புகள் இருக்கின்றன. ஆனால்
அந்தத் தொழிற்சாலையைத் துவக்க யாரோ தடையாக இருக்கிறார்கள் என்று
மாண்புமிகு உறுப்பினர் எடுத்துக்கொள்ள வேண்டாம். காடுகளிலிருந்து
சந்தன மரங்களைக் கடத்துவதற்கு சிலர் துணையாக இருக்கிறார்கள். சென்ற
சில ஆண்டுகளாக, குறிப்பாக கடந்த இரண்டு ஆண்டுகளாக, சட்ட திட்டங்
களைக் கடுமையாக்கி இப்படிச் செய்கிறவர்கள் மீது கடுமையான
நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன். எவ்வளவு தான் நாங்கள் தடுத்தாலும், 'கள்வன் பெரிதா? காப்பான்
பெரிதா?' என்று சொல்கிற இலக்கணத்துக்கேற்ப அவர்கள் இதிலே ஈடுபட்டுக்
கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தத் தொழிற்சாலையை உடனடியாக
ஆரம்பிக்க வேண்டுமென்று நாங்கள் 'டான்சி' நிறுவனத்தைக் கேட்டுக்
கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 9-50)

நாம் அரசுத் துறையிலேயிருந்து உத்தரவுகளைப் போட முடியும். ஆனால்
செய்கிறவர்கள் அவர்கள். காரணம் 'டெக்னிக்கல் டிபெக்ட்ஸ்' என்று
சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லும்போது, அதையும் மீறிச் செய்யக்
கூடிய ஆற்றல், அதிகாரம் யாருக்கும் இருக்க முடியாது. இருந்தாலும் அரசு
விரைவிலே கொண்டுவர வேண்டும், அந்தத் தொழிற்சாலை வந்ததற்குப்
பிறகுதான் மற்ற துணைப் பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை
ஆரம்பிக்க முடியும் என்று சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் சொன்ன கருத்தை நானும் வலியுறுத்துகிறேன். ஆனால் திருடுகிற
வர்கள் மாத்திரம் இன்றைக்குத் தடையாக இருக்கிறார்கள் என்று எடுத்துக்
கொள்ள வேண்டாம். எப்போதும் திருடுகிறவர்கள் திருடிக் கொண்டுதான்
இருப்பார்கள். இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள எண்ணெய் தயாரிக்
கும் தொழிற்சாலையை நடத்துபவர்கள்தான் இன்றைக்குப் பெரிய தடை
யாக இருக்கிறார்கள். சந்தன மரம் சம்பந்தப்பட்ட குழுக் கூட்டத்திலே
கூட என்னிடத்திலேயே தெரிவித்தார்கள். "நீங்களே தயாரிக்க ஆரம்
பித்தால், நாங்கள் இழுத்து மூட வேண்டி வரும்" என்று உத்தரப் பிரதேசத்
துக்காரர்களும், கர்நாடக மாநிலத்தவர்களும்கூட எங்களிடம் தெரிவித்தார்
கள். "அப்படி இழுத்து மூடுகிற நோக்கமில்லை, எங்களுடைய பிள்ளை

[1982 ஏப்ரல் 5

களுக்குச் சாப்பாடு போடுகிற முயற்சியை நீங்கள் தடுக்கக் கூடாது, உங்களையும் பார்த்துக் கொள்கிறோம். முதலில் எங்கள் வயிற்றைப் பார்த்துக் கொள்கிறோம்" என்று தெரிவித்தேன். அந்த சக்தி ஒன்றுதான் திருடுகிறவர்களைக் காட்டிலும் இன்றைக்குப் பலமாக இருக்கிறது. மத்திய அரசிலே கூட தங்களுடைய செல்வாக்கைச் செலுத்தியிருக்கிறார்கள் என்ற தகவல் தமிழக அரசுக்குக் கிடைத்திருக்கிறது.

வண்டலூர் விலங்ககம்.

*** 250 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு** செய்தி-அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வண்டலூரில் விலங்குகள் காட்சிப் பூங்கா தொடர்பான பணிகள் துவங்கப்பட்டு விட்டனவா?

(இ) ஆம் எனில், இதற்கான திட்டச் செலவு என்ன?

(உ) இப்பணி எப்பொழுது முடிக்கப்படவிருக்கிறது?

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:** (அ) ஆம்.

(இ) இத்திட்டத்திற்காக மொத்தம் ரூபாய் 300 இலட்சம் செலவிட இருக்கிறது. முதல் கட்டப் பணிகளுக்காக ரூபாய் 105 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் ஜனவரி 1982 வரை மொத்தம் ரூபாய் 32.80 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

(உ) இத்திட்டத்தின் பணிகள் ஐந்து கட்டமாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பணியும் அதன் அதன் காலவரைக்குள் செய்து முடிக்கப்படும். முதல் கட்டப் பணி நடந்து கொண்டிருக்கின்றது. திட்டப் பணிகளனைத்தும் 31—12—1984-க்குள் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இந்தப் பூங்கா எத்தனை ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்கப்படவிருக்கிறது? திறந்தவெளி காட்சிப் பூங்கா இயற்கைச் சூழலில் அமைக்கப்படுமென்று முன்பு தெரிவிக்கப்பட்டது. ஆகவே இந்தியாவின் வேறு சில மாநிலங்களில், இயற்கைச் சூழ்நிலையில் மிருகங்கள் காடுகளில் வாழ்வதைப் போல, பூங்காக்கள் அமைத்திருப்பதைப் போல, இங்கும் அமைக்கப்படுமா? உலகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து மிக முக்கியமான மிருகங்களையும், பறவைகளையும் கொண்டு வந்து வைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



1982 ஏப்ரல் 5]

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இந்தியாவிலே இப்போது ஐதராபாத், டில்லி போன்ற இடங்களில் இருக்கின்ற இத்தகைய விலங்கியல் பூங்காக்களைவிட மிகச் சிறப்பான பூங்காவாக இங்கே அமைக்கப்பட வேண்டும் என்பதுதான் அரசின் திட்டம். அதற்காக முதன் முதலில் 140 ஹெக்டேர் நிலப்பரப்பில் அமைக்க அரசு திட்டமிட்டிருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த இடத்தைப் பார்வையிட்டதற்குப் பிறகு 302 ஹெக்டேர் பரப்பு கொண்டதாக விரிவுபடுத்தி, பக்கத்திலே இருக்கின்ற குன்றுப் பகுதி வரை விரிவாக்க ஆணையிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல, உலகத்திலே இருக்கின்ற அத்தனை விதமான மிருகங்களையும், பறவைகளையும் கொண்டு வந்து வைக்க வேண்டுமென்பது திட்டங்களில் ஒன்று. அதற்காக நம்முடைய அதிகாரிகள் இலண்டன் மாநகரத்திலுள்ள விலங்கியல் பூங்காவை நேரில் பார்த்து, அனுபவத்தைப் பெற்றுக்கொண்டு வந்திருக்கிறார்கள். காட்சிசாலை முடிக்கப்படுகிற நேரத்தில் இன்னும் கொஞ்சம் அதிகமாகச் செய்யலாம். அப்படியானாலும், இந்தியாவிலேயே மிகச் சிறந்த விலங்கியல் பூங்காவாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** ஐந்து கட்டங்களில் இப்பணி நடைபெறுமென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எத்தனையாவது கட்டத்தில் மிருகங்களைக் கொண்டு அமைக்கப்படுகிற பணிகள் நிறைவேற்றப்படுமென்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** முதற்கட்டமாக 'இன்ப்ரா-ஸ்டரக்சர்' என்கிற அடிப்படை அமைப்புகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதைத் தொடர்ந்து சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான வனவிலங்குக் காட்சி சாலையிலிருந்து மிருகங்களை உடனடியாக மாற்ற வேண்டிய நிலை இருக்கிறது. முக்கியமான நீர் யானை போன்றவற்றை உடனடியாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பிறகு மொத்தமாக மரங்களை வளர்ப்பது, இயற்கைச் சூழ்நிலையை கட்டுமான பணிகளின் மூலம் செய்வது போன்றவற்றை முடிக்கின்றபோது, மூன்றாவது கட்டத்திற்கு மேல் சென்று நான்காவது, ஐந்தாவது கட்டங்களில் முழுமையாக மிருகங்கள், பறவைகளைக் கொண்டுவரக்கூடிய சூழ்நிலையை இந்தத் திட்டம் அடையும்.

[1982 ஏப்ரல் 5

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** வெளிநாடுகளிலிருந்து வகை வகையாகக் கொண்டு வரும்போது, எந்த வகையிலே செய்யவிருக்கிறார்கள் ? டான்சானியா விலிருந்து கொண்டு வருவதற்கு திட்டம் உள்ளதா ? அங்கு சென்று பார்த்து வர உறுப்பினர்களையும் சேர்த்துக்கொள்ள அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் என்றால் யாரை ? தங்களையா ?

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் உட்பட அனைவரும் சேர்ந்து அறிந்துவர ஏற்பாடு செய்வார்களா ? அடுத்து மனிதன் மிருகமாக ஆகக் கூடாது என்று உணரும் வகையில் இந்தக் காட்சி சாலை அமைக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** வனத் துறையில் இதற்குப் பொறுப் பேற்றுக் கொண்டிருக்கிற அதிகாரிகள் இலண்டன் மாநகரம் சென்று அங்குள்ள விலங்கியல் காட்சிசாலைகளைப் பார்த்து அறிக்கை தந்திருக்கிறார்கள். உலகத்திலே மிகப் புகழ்பெற்று விளங்குகிற விலங்கியல் பூங்காக்கள் ஆப்ரிக்கா கண்டத்தில் உள்ள டான்சானியாவிலும், கென்யாவிலும் இருக்கின்றன. டான்சானியாவில் உள்ளதுதான் இயற்கைச் சூழ்நிலையில் அமைக்கப்பட்டிருக்கிறது. உலகப் புகழ் பெற்ற அத்தகைய பூங்காக்களையெல்லாம் சென்று பார்க்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதிகாரிகள் போகும்போது அமைச்சரும் உடன் சென்றால் மேலும் பலன் அளிக்கும் என்ற கருத்தை முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஒருவேளை அமைச்சர் போவது என்பது அதிகாரிகளுக்குத் துணையாக இருக்கலாம், திட்டங்களை நிறைவேற்றுகிறபோது பயன் உள்ளதாக அமையலாம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்களை அழைத்துக் கொண்டு போவது என்றால், இப்போது சட்டமன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் உலக சுற்றுப் பயணத்திற்காக திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே இதையும் சேர்த்துக்கொண்டு பார்த்துவிட்டு வந்து, எங்களுக்கு அறிக்கை தந்தால், பலன் உள்ளதாக இருக்கும்.

அடுத்து, மனிதன் மிருகமாக மாறக்கூடாது என்று சொன்னார். ஆனால் இன்றைக்கு உலகத்திலே வளர்ந்து வருகிற தத்துவத்தின்படி, மிருகங்கள் மனிதனைவிட நன்றி உள்ளவைகளாக, எடுத்துக்காட்டுகளாக வாழ்கின்றன. மிருகங்கள் எல்லாம் மாநாடு கூட்டி மனிதர்கள் எங்களை இழிவுபடுத்துகிறார்கள், ஏதற்கெடுத்தாலும் எங்களைக் கேவலப்படுத்துகிறார்கள், மனிதர்களை



14.8.1989

1982 ஏப்ரல் 5]

விட நாங்கள் ஒன்றும் இழிந்தவர்கள் அல்ல, உதாரணத்திற்கு வேண்டுமானாலும் எங்களைத்தான் காட்டுகிறார்கள்—நன்றிக்கு நாய், ஒற்றுமைக்கு காக்காய், உடும்புப் பிடி, வீரத்திற்கு சிங்கம், அழகுக்கு மயில் என்று.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பெரிய ஆராய்ச்சியையே செய்திருக்கிறார் போல் தோன்றுகிறதே.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** விலங்கியலைப் பாதுகாக்க வேண்டும் என்ற பொறுப்பில் இருக்கின்ற அமைச்சர் விலங்குகளைக் காப்பாற்ற வேண்டும். மனிதர்கள் மிருகங்களாக மாறுகிறார்கள் என்று சொல்லுவது சூழ்நிலையையொட்டி வந்திருக்கிற குறிப்பே தவிர, மிருகங்கள் மனிதர்களைவிட சிறந்தவை என்ற தத்துவத்தை உலகம் முழுவதும் எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்கள். நமக்கெல்லாம் இலக்கியம் கற்றுத் தருகிற தலைவர் அவர்கள் உட்பட இதனை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** ஐந்து கட்டங்களில் விலங்குகள் காட்சியகம் அமையும் என்று சொன்னார்கள். முதல் கட்டமாக இப்போது வேலை நடந்திருப்பதாகத் தெரிவித்தார்கள். 302 ஹெக்டேர் நிலப்பரப்பு எடுக்கப் பட்டிருப்பதாகச் சொன்னார்கள். டான்சானியா நாட்டில் 4,800 ஏக்கர் பரப்பில் உள்ளது. அந்த அளவிற்கு இல்லாவிட்டாலும், ஆயிரம் ஹெக்டேர் வரக்கூடிய அளவிற்காவது இதை விரிவுபடுத்த அரசு பரிசீலனை செய்யுமா ? இயற்கையான அமைப்பில் விலங்குகள் வாழ, இயற்கைக் காடு களை உருவாக்க ஐம்பது ஆண்டுகள் ஆகும் என்பது இப்போது வண்டலூரில் நடைபெறுகின்ற பணியைப் பார்த்தால், நமக்கெல்லாம் தெரிகிறது. ஆகவே காடு வளர்க்கும் திட்டத்திற்கு முதல் இடம் கொடுத்து, அதைச் சுற்றி பல மைல் சுற்றளவிற்கு காடு வளர்க்கும் திட்டத்தை வன இலாக்காவிலே எடுத்துக்கொண்டால், அதிலிருந்து பணம் கிடைக்கும், இதிலிருந்தும் தொகை கிடைக்கும். ஆகவே அப்படி விரைவிலே காடுகளை உருவாக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இப்போது நமக்கு இருக்கிற நிலப் பகுதி 302 ஹெக்டேர். ஒரு ஹெக்டேர் என்பது இரண்டரை ஏக்கர். ஆக ஏறக்குறைய 800 ஏக்கர் வரை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்குப் பக்கத்திலே ரிசர்வ் பாரஸ்ட் நிலம் இருக்கிறது. ஆகவே விரிவுபடுத்த நமக்கு உரிமை இருக்கிறது. வன நிலங்களை யாருக்கும் மாற்றக்கூடாது என்று இந்த அரசாங்கச் சட்டம் வந்துவிட்டது. [illegible] மல்லாமல், இன்னொரு கருத்தையும் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். விலங்குகள்

28.6.[illegible]

எல்லாம் பெரிய அடர்ந்த காடுகளில்தான் வாழ்கின்றன என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். நானும் அப்படித்தான் எண்ணிக் கொண்டிருந்தேன். நான் டான்சானியா நாட்டில் பார்த்தேன். மிகப் பெரிய விலங்குகள்கூட, சாதாரண சிறிய புதர்களுக்கிடையில் திறந்த வெளியில் வாழ்கின்றன. அடர்த்தியாக இருள் சூழ்ந்த மரங்கள் தேவையில்லை. சிங்கம், புலி போன்ற விலங்குகள்கூட திறந்த வெளியில் திரிகின்றன. அந்த

(முற்பகல் 10-00)

இடத்தில் நாம் இலட்சக் கணக்கான மரங்களை வைப்பதைத்தான் ஒரு திட்டமாக வைத்துக் கொண்டிருக்கிறோம். அதுதான் முதல் திட்டம். அதனால் இது வனத்துறையில் இருக்கிறது. அந்த இடத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்களையெல்லாம் அழைத்துக்கொண்டுபோய் காட்ட வேண்டும் என்ற திட்டத்தைக்கூடச் சொல்லியிருக்கிறேன். முதல் வேலையாக அங்கே மரங்கள் வளர்க்க வேண்டும். அதுமட்டுமல்ல, பக்கத்திலே, இருக்கிற குன்றின் வெப்பம் மிருகங்களைத் தாக்காமல் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் குன்றின் மேலும்கூட மரங்களை வைக்கும் திட்டமும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்காலிங்கம் அவர்கள் குறிப்பிட்டபடி, மரங்கள் நன்றாக வளர்ந்த நிலையில் சிங்கம் போன்ற மிருகங்கள் அங்கே சுதந்திரமாகத் திரியும். "லயன் சபாரி" என்பதைப் போல இருக்கும். மனிதர்கள் கூண்டுக்குள் இருப்பார்கள், மிருகங்கள் திறந்த வெளியில் திரிந்து கொண்டிருக்கும். அப்படிப்பட்ட திட்டம் எதிர்காலத்தில் தேவைப்பட்டால் விரிவாக்கமும் செய்யப்படலாம். இதற்கான நிதி ஒதுக்கீட்டை எப்போது வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். அடர்ந்த காடுகள் விலங்கியல் பூங்காக்களுக்குத் தேவையில்லை. ஆனால் நிறைய மரங்கள் தேவைப்படுகின்றன. அதுவும் குளிர்தரு மரங்களாக இருந்தால்போதும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள் 251 மற்றும் 252 ஆகியவை ஒரே பொருள்பற்றியவையாக இருப்பதால், இரண்டையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.



## கிராமச் சாலைகள் திட்டம்.

* 251. வினா—— திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் 23—3—1981 அன்று வினா எண் 150-க்கு அளிக்கப்பட்ட விடையினையொட்டி கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நெடுஞ்சாலைத் துறையில் கிராமச் சாலைகள் திட்டப் பணிகளை (Rural Roads Scheme) நிறைவேற்ற, கோட்டப் பொறியாளர் அலுவலகங்கள் எந்தெந்த மாவட்டங்களில் இயங்குகின்றன ?

(இ) எந்தெந்த மாவட்டங்களில் அலுவலகங்கள் ஏற்படுத்தப்படவில்லை ?

(உ) அவ்வலுவலகங்கள் இல்லாத மாவட்டங்களில் அவைகளை ஏற்படுத்த அரசு பரிசீலித்து வருகிறதா ?

(எ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) நெடுஞ்சாலைத் துறையில், கிராமச் சாலைகள் திட்டப் பணிகளை நிறைவேற்ற கீழ்க்கண்ட மாவட்டங்களில், கோட்டப் பொறியாளர் அலுவலகங்கள் இயங்குகின்றன:—

| மாவட்டம். | கோட்டம். |
|---|---|
| 1. வட ஆற்காடு | வேலூர் |
| 2. தென் ஆற்காடு | கடலூர் |
| 3. செங்கல்பட்டு | செங்கல்பட்டு |
| 4. திருச்சி | திருச்சி |
| 5. தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 6. புதுக்கோட்டை | புதுக்கோட்டை |
| 7. மதுரை | மதுரை |
| 8. கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| 9. சேலம் | சேலம் |
| 10. தர்மபுரி | தர்மபுரி |
| 11. பெரியார் | ஈரோடு |
| 12. இராமநாதபுரம் | பரமக்குடி |
| 13. திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 14. கன்னியாகுமரி | நாகர்கோவில். |

[1982 ஏப்ரல் 5

(இ) சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் மட்டும் அலுவலகங்கள் இல்லை.

(உ) மற்றும் (எ) இல்லை—சென்னை மாவட்டத்தில் கிராமச் சாலை வேலைகள் ஏதும் இல்லை. நீலகிரியில் கிராமச் சாலை வேலைகள், தனிக் கோட்டம் அமைக்க போதுமானதாக இல்லை.

* 252 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

நெடுஞ்சாலைத் துறையில் கிராமச் சாலைகள் திட்டத்தின் (Rural Road Scheme) கீழ் சாலைகள் மேம்பாடு செய்யப்படும்போது அச் சாலைகளை தார் சாலைகளாக மேம்பாடு செய்ய, அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: நெடுஞ்சாலைத் துறையில் கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்படும் சாலைகள் அனைத்துமே தார்ச் சாலைகளாகவே மேம்பாடு செய்யப்பட்டு வருகின்றன. நிதிக் குறைவினால் 1—8—1977 முதல் 1—4—1980 வரை தார்ச் சாலைகள் அமைப்பது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. தற்சமயம் கிராமச் சாலைகள் திட்டத்தில் தார்ச் சாலைகளே அமைக்கப்படுகின்றன. இனி வரும் கட்டங்களிலும் தார்ச் சாலைகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: நீலகிரியில் கிராமச் சாலைகளுக்கான கோட்டப் பொறியாளர் அலுவலகம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்குக் காரணம் கிராமப் பகுதிகளில் போதுமான சாலைகள் இல்லை என்றும் தெரிவித்தார்கள். போதுமான சாலை இல்லாவிட்டாலும்கூட மலைப் பகுதிகளில் கிராமப்புறச் சாலைகளைப் போடுவதென்பது மிகவும் கடினமான பணி என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே அறிவார்கள். எனவே இனியாவது அங்கே ஒரு கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ? ஏற்கெனவே கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் கூடுதலாக இரண்டு கண்காணிப்புப் பொறியாளர்கள் பதவிகளை ஏற்படுத்தியதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே அடிப்படையில் கிராமச் சாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் ஒரு தலைமைப் பொறியாளர் பதவியையும் ஏற்படுத்தி அந்தத் திட்டத்தையும் திறமையாகச் செயல்படுத்த அரசு முன்வருமா ?



1982 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், "காட் ரோடு" என்று சொல்லப்படும் மலைப் பாதைச் சாலைகளை அமைப்பதற்கு ஏற்கெனவே திட்டமிருக்கிறது. ஆகவே, நீலகிரி மாவட்டத்திற்குத் தனி கோட்டப் பொறியாளர் தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. என்றாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற யோசனையை அரசு பரிசீலிக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இனி வரும் திட்டங்களில் கிராமச் சாலைகளைத் தார்ச் சாலைகளாக அமைக்க இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி. ஏற்கெனவே கிராமச் சாலைகளைப் பொறுத்த வரையில், அவை W.B.M. Surface என்று சொல்லப்படும் சரளைக் கற்களால் போடப்பட்ட சாலைகளாக இருக்கின்றன. இதனால் அவற்றை ஒவ்வொரு ஆண்டும் சீர் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்தச் சாலைகளில் உள்ள சரளைக் கற்கள் மேலே கிளம்புவதன் காரணமாக அவை ஒவ்வொரு ஆண்டும் வீணாகிப் போய்விடுகின்றன. மெட்டல் சாலை அமைக்க ஒரு கிலோ மீட்டருக்கு சுமார் ரூ. 40,000 செலவாகிறது. இது ஒரு ஆண்டுக்குத்தான் வரக்கூடியது. ஆனால் ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்கு தார்ச் சாலை அமைக்க சுமார் 60,000 ரூபாய் செலவாகிறது. இது 5 ஆண்டுகளுக்குப் பயன்படுகிறது. எனவே ஏற்கெனவே சரளைக் கற்களால் போடப்பட்டு வரும் கிராமச் சாலைகளைத் தார் சாலைகளாக மாற்ற அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கிராமப்புறச் சாலைகள் அனைத்தையும் தார் சாலைகளாகத்தான் போட வேண்டும் என்பது இந்த அரசின் திட்டம். டபிள்யூ. பி. எம் போட்ட பிறகு, அவற்றைத் தார் சாலைகளாகப் போட்டுக் கொண்டிருக்கிறோம். தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பல்வேறு பணிகளில் போடப்பட்ட சாலைகள்கூட ஏற்கெனவே தார் சாலைகளாக மாற்றப்படுவதற்கு திட்டம் இருக்கிறது. பஸ் ரூட் இருக்கிற இடங்களில் இவ்வாறு தார் சாலைகள் போட திட்டமிடப்பட்டிருக்கிறது. இதன் அடிப்படையில் இதுவரை ஏறத்தாழ 6,433 கிலோ மீட்டர் அளவுக்குப் புதிய தார் சாலைகளை அமைத்திருக்கிறோம். அதற்காக ரூபாய் எழுபத்தியாறு கோடி செலவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம். கிராமப்புறச் சாலைகளையெல்லாம் தார்ச் சாலைகளாக ஆக்குவதற்கு இடையிலே ஒரு தற்காலிகமான தடை விதிக்கப்பட்டு, அது நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அம்மாதிரி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட அரசாணை ரத்து

செய்யப்பட்டுவிட்டதா ? அதே காலத்தில் அத்தகைய தற்காலிக ஆணைக்கு தவிர்ப்பு வழங்கி சாலைகள் எவையேனும் போடப்பட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : 1—8—1979 முதல் 1—4—1980 வரை தார்ச் சாலைகள் போடுவதற்கான தற்காலிக தடை விதிக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதற்குப் பின்னால் இப்போது அந்தச் சாலைகளையெல்லாம் தார்ச் சாலைகளாக மாற்ற வேண்டும் என்ற திட்டத்தை மீண்டும் அமுல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதற்குக் காரணம், சென்ற ஆண்டும், அதற்கு முன்ஆண்டும் நமக்குக் கிடைத்த தாரின் அளவு மிகவும் குறைந்து விட்டது. இதனால் தார்ச் சாலைகளைப் போட முடியாமல் இருந்தது. இப்போது தார் தாராளமாகக் கிடைக்கிறது.

## 'தன்னிறைவுத்' திட்டம்

*253 வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் (திரு க. அருணாசலம் சார்பில்) : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் முதல் கட்டமாக எடுத்துக் கொண்ட அறுபத்தியொன்பது வட்டாரங்களுள், எத்தனை தன்னிறைவு அடைந்து உள்ளன ?

(இ) தன்னிறைவு அடையாதவைகளை தன்னிறைவு அடையும்படி செய்ய, அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக எடுத்துக்கொண்ட அறுபத்தியொன்பது வட்டாரங்களும் எடுத்துக்கொண்ட பணிகளை முடித்துள்ளன. நீலகிரி மாவட்டத்திலுள்ள முதற்கட்ட நான்கு ஒன்றியங்களிலும் கூடுதல் பணிகள் எடுத்து செயல்படவும் அரசு அனுமதித்துள்ளது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



## தொழில் வரி.

*254 வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி போன்றவற்றிலிருந்து வசூலிக்கப்படும் தொழில் வரியிலிருந்து ஆசிரியர்களுக்கு விலக்கு அளிக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் செயல்படத் தொடங்கும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் தொழில் புனிதமான தொழில் என்றும், எழுத்தறிவித்தவன் இறைவன் என்றும், கணக்காயர் இல்லாத ஊரில் குடியிருக்கக்கூடாது என்றும் . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது சொற்பொழிவா அல்லது துணைக் கேள்வியா?

திரு. க. மீனாட்சிசுந்தரம்: இவ்வாறு தொடக்கத்திலிருந்தே ஆசிரியர் தொழில்—அது தொழில்கூட அல்ல—தொண்டு என்று சொல்ல வேண்டும்—என்று பாராட்டப்படுகிற காரணத்தால்தான் ஆசிரியர்களுக்கு ஊதியம் என்று வழங்காமல் டீச்சிங் கிராண்ட் என்று தருகிறார்கள். அதைச் சம்பளம் என்று கூட சொல்வதில்லை. எனவே ஆசிரியர் பணியைத் தொண்டாகக் கருதிச் செய்ய வேண்டுமென்பதால், ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், தொழில் வரியிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளித்து, அரசு மிகப் பெரிய பாராட்டு தலைப் பெறுவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆசிரியர்களைப் பொறுத்தவரை, இந்த ஆட்சி வந்த பிறகுதான் பல்வேறு நன்மைகளைச் செய்திருக்கிறது. அதன் காரணமாகப் பல்வேறு பாராட்டுதல்கள் ஆசிரியர்கள் தரப்பிலிருந்து அளிக்கப்பட்டிருக்கின்றன என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்களுக்கு நன்கு தெரியும். ஏற்கெனவே அவர்களைப் போன்றவர்கள் எழுப்பிய கோரிக்கைகளின் அடிப்படையில்தான் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்கள் அனைவரையும் அரசு ஆசிரியர்களாக, அரசு ஊழியர்களாக ஆக்கி இன்றைக்கு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கி

றோம். என்றாலும் தொழில் வரியைப் பொறுத்தவரையில், இதன் மூலமாக நகராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், கிடைக்கிற வருவாய் மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. இது ஏற்கெனவே போடப்பட்ட வரியாகும். அதுதான் வசூலிக்கப்படுகிறது. இப்போது ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிற அதிகமான ஊதியத்திற்கு ஏற்ற வகையில்கூட இது அமையவில்லை. எனவே இப்போது இதைப் பரிசீலிக்காமல் விட்டுவிடுவதே சிறந்ததாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** ஆசிரியர்களுக்கும் தொழில் வரி விதிக்கிற காரணத்தால், அவர்களும் தொழிலாளர்கள் ஆகிறார்கள். எனவே தொழிலாளர்களான அவர்களுக்குத் தொழிற்சங்க உரிமையும், அரசியலில் ஈடுபடுகிற உரிமையும் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தற்போது ஆசிரியர்கள் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## *Panchayat Union Hospital, Mannadimangalam*

* 255 Q. THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether there is any proposal with the Government to take over the Panchayat Union Hospital, Mannadimangalam, Madurai district; and

(b) if so, the stage at which the matter now stands ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே.** (அ) மற்றும் (இ) 19——1979 நாளிட்ட அரசு ஆணை எண் 1656-ல் மன்னடிமங்களம் ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை அரசு ஏற்று நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியத்தால் இதற்கான நன்கொடையைச் செலுத்த முடியாததால், இத்தொகையைச் செலுத்துவதிலிருந்து விதிவிலக்கு அளிக்கலாமா என்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10-10)

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவரவர்களே, 1975-லேகூட 101 ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகள் அரசு மருத்துவ மனைகளாக்க வேண்டி நேரத்தில் முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. போதுமான தொகையை அந்த ஊராட்சி ஒன்றியமோ, மக்களோ கட்ட வேண்டுமென்று கூறுகிறார்கள். ஆனால் கட்டவில்லை என்று சொல்லுகிறார்கள். அவர்கள் எந்த



அளவிற்குத் தொகை கட்ட வேண்டுமென்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா? ஏதாவது விதி விலக்கு அளித்து மருத்துவ மனைத் தேவை அங்கே பூர்த்தி செய்யப்படுமா? ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனையாக இருப்பதால், அதற்கு முன்னுரிமை கொடுத்து, அந்த மக்களுக்கு அந்த மருத்துவ மனை தொண்டாற்றும் அளவிற்கு நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, 25,006 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொன்னதை, பஞ்சாயத்து ஒன்றியம் முதலிலே ஒத்துக்கொண்டார்கள். அதற்குப் பிறகு அதைத் தொடர்ந்து ஞாபகப்படுத்தியும், அவர்கள் கொடுக்கவில்லை. ஆகவேதான் நாம் 'அவுட் ஆஃப் தி வே' சென்று, இந்தத் தொகையைக் கொடுக்கவில்லை என்றாலும், எந்த அளவிற்கு அரசாங்கமே அந்த மருந்தகத்தை ஏற்றுக்கொண்டு, மருத்துவ மனையாக நடத்த வேண்டுமென்பதில் அக்கறை கொண்டிருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். நாம் விதி விலக்கு கொடுத்து, அதை ஏற்றுக்கொள்ளலாமா என்ற அந்த முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். அதுபற்றி டைரக்டருடன் பேசப்பட்டு, டைரக்டர் அவர்கள் பரிந்துரை அனுப்பியிருக்கிறார்கள். பணம் கொடுக்கிற மாதிரியாக இல்லை, ஆகவே விதி விலக்கு கொடுத்து ஏற்றுக்கொள்ளலாமா என்று பரிந்துரை அனுப்பியிருக்கிறார்கள். அதைப் பரிசிலனை செய்துகொண்டிருக்கிறோம். பக்கத்தில் சோழவந்தானில் மருத்துவ மனை நடந்து கொண்டிருக்கிறது.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவரவர்களே, அந்த நிதியை ஊராட்சி ஒன்றியம் உடனடியாகக் கொடுக்க முடியாவிட்டாலும், அதைத் தவணை முறையில் பெற்றுக்கொள்ள வசதியை உருவாக்கி, உடனடியாக அந்த மருத்துவ மனையை ஆரம்பித்தால், அந்த மக்களுக்கு நன்மையாக இருக்கும். அந்த முறையில் சுகாதார அமைச்சரவர்கள் செய்து கொடுப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொஞ்சம் முயற்சி எடுத்துக்கொண்டு, ஊராட்சி ஒன்றியம் தவணை முறையில் கொடுக்கும் நிலையை உருவாக்கினால், எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் அதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமென்பதை வாக்குறுதியாக இந்த நேரத்தில் கொடுக்கிறேன்.

[1982 ஏப்ரல் 5

## மருத்துவப் பல்கலைக்கழகம்.

* 256 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டில் மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) மற்றும் (இ)—இப்பொருள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, அரசினுடைய பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். மருத்துவப் பல்கலைக் கழகம் பற்றி செய்தித் தாள்களில் ஏராளமாக செய்திகள் வருகின்றன. மேலவையில், அமைச்சரவர்கள் இதுகுறித்து விரிவான செய்திகளைச் சொன்னால், பயனுள்ளதாக இருக்கும். மருத்துவப் பல்கலைக் கழகம் அமைப்பது குறித்து மத்திய அரசின் அனுமதியையும், பல்கலைக் கழக மானியக் குழுவின் அனுமதியையும் நம்முடைய அரசு பெற்று விட்டதா ? இந்தப் பல்கலைக் கழகத்தில் மேற்பட்டப் படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு மட்டும் இருக்குமா ? தமிழகத்தில் இருக்கும் அனைத்து மருத்துவக் கல்லூரிகளையும் இணைத்து, செயல்படுத்தப்பட இருக்கிறதா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, அவைகளையெல்லாம் சொல்ல முடியாத காரணத்தால்தான், பரிசீலனையில் இருக்கிறதென்று சொன்னேன். இப்போது கமிட்டி போட ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இன்னும் சில நாட்களில் போடக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த மன்றத்தில்தான் அறிவித்தேன். ஒரு கமிட்டி போட்டால், அந்தக் கமிட்டி, என்னென்ன செய்யலாமென்ற விவரங்களைச் சேகரிக்க சௌகரியமாக இருக்கும். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் மருத்துவப் பல்கலைக் கழகம் இல்லை. ஆகவே புதிதாகப் பல விஷயங்களைச் சேகரிக்க வேண்டியிருக்கிறது. அதற்குப் பிறகுதான், only after creating a format, we can think in terms of creating a University. பூர்வாங்க வேலைகள் நடக்க ஒரு கமிட்டி போட வேண்டும். டாக்டர் இராமமூர்த்தி, டாக்டர் நடராசன், டாக்டர் வேணுகோபால், 2 பேர்கள் சிண்டிகேட்டில் இருக்கிறார்கள், அரசாங்க அதிகாரிகள்—இவர்களைக் கொண்ட கமிட்டி போட்டு, அவர்கள் என்ன பரிந்துரை தருகிறார்களோ அதன் அடிப்படையிலே, இரண்டாம் கட்ட வேலையான பல்கலைக்கழகம் துவங்கக்கூடிய அந்தத் திட்டத்தை மேற்கொள்ளலாம்.



1982 ஏப்ரல் 5]

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவரவர்களே, தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களையும்விட நோய் குறைவாகவும், குளுமையாகவும் உள்ள ஊட்டியில் மருத்துவப் பல்கலைக் கழகத்தை அமைக்கும் எண்ணம் அரசுக்குண்டா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது அருமையான யோசனை. கமிட்டி போட்ட பிறகு, பூர்வாங்க வேலைகள் முடிந்த பிறகு, எங்கே அமைக்கலாம் என்ற கருத்தை எடுத்துக் கொள்ளலாம். உறுப்பினரவர்கள் சொல்வது நல்ல யோசனையாக இருந்தாலும், இதற்குப் பெரிய மருத்துவ மனை தேவை, நிறைய கிளினிகல் மெடிரியல்ஸ் தேவை. அங்கே அது கிடைக்காது. சென்னையிலேதான் கிடைக்கும். அந்தப் பிரச்சினை இப்போது எழாது. ஊட்டி நம்மை வரவேற்கிறது என்பதற்காக மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, உத்தேசிக்கப்பட்டுள்ள பல்கலைக் கழகம் அமைக்கப்படலாமா, வேண்டாமா என்பது குறித்து ஆலோசனை சொல்ல குழு அமைக்கப்பட இருக்கிறதா அல்லது உத்தேசிக்கப்பட்டுள்ள பல்கலைக் கழகம் எத்தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டுமென்றும் அதனுடைய நோக்கம், குறிக்கோள் எப்படி இருக்க வேண்டுமென்றும் ஆலோசனை சொல்ல குழு அமைக்கப்பட இருக்கிறதா ? இயற்கை மருத்துவத்தைப்பற்றி ஆய்வு செய்யவும், காடுகளிலே கிடைக்கும் மூலிகைகள் பற்றி ஆய்வு செய்யவும் வாய்ப்பு ஏற்படுத்துவதை அந்தக் குழு தன் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரியும். சிண்டிகேட்டிலோ, செனட்டிலோ மெம்பராக இருக்கிறார். அண்ணாமலை யூனிவர்சிடியில் இருக்கிறார். அவருக்கு இந்த சமாச்சாரமெல்லாம் தெரியும். இந்த மாதிரி யோசனை, கருத்து, பரிந்துரை ஆகியவற்றை மாண்புமிகு உறுப்பினரவர்கள் எம்.எல்.சி. என்ற முறையில் அந்தக் கமிட்டிக்கு அனுப்பலாம். அந்தக் கமிட்டியில் அந்தக் கருத்துக்கள் ஆராயும் தன்மையில் இருக்கும். எப்படிப்பட்ட யூனிவர்சிடி என்பதுதான் பிரச்சினை. மெடிகல் யூனிவர்சிட்டியைப் பொறுத்தவரையில், யூ. ஜி. சி அவ்வளவு 'பேவரபிள்' ஆக இருப்பதாகத் தெரியவில்லை. பல்வேறு இடங்களிலே அதற்கு

ஆதரவாகப் பேசியதாகத் தெரியவில்லை. அதற்குப் பணம் கேட்கிறார்கள் என்றால், "இல்லை, நீங்களே ஆரம்பித்து விடுங்கள், உதவி செய்வதற்கில்லை" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவைகளை ஆராய்ந்து எந்த அளவிற்கு இருக்கிறதென்பதைப் பார்க்க வேண்டும். இப்படி ஆந்திராவில் ஆரம்பித்தார்கள்.

Report of the Committee on Medical Universities . . . Rural Services, Employment of Doctors அவர்கள் ஒரு கமிட்டியை 1979-ல் போட்டது பற்றி ரிப்போர்ட் இருக்கிறது. இன்னும் அவர்களால் துவங்கப்படவில்லை.

It is not an easy thing to start a University especially of the type of University that we have in view, that is, a Medical University. அதற்குப் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. பல்வேறு வேலைகளைச் செய்தாக வேண்டும். 1979-ல் நடந்து முடிந்தாலும், 3 ஆண்டுகளாக ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆகவே அந்தக் கமிட்டியினுடைய 'பிரேக்மேடிக் அப்ரோச்'—எப்படி இருக்க வேண்டுமென்று ரிப்போர்ட் வந்த பிறகு அதைப்பற்றி யோசிக்கலாம்.

திரு. சி. இராமலிங்கம் : தலைவரவர்களே, ஊட்டியில் பல்கலைக் கழகம் அமைப்பதைவிட, கொடைக்கானலில் அமைத்தால் நன்றாக இருக்கும். இராமாயண காலத்தில், ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையைத் தூக்கிக்கொண்டு வந்தபோது, அங்கே விழுந்துவிட்டதென்றும், அங்கே தேவையான இலைகள், மூலிகைகள் கிடைக்கின்றன என்றும் சொல்லப்படுகிறது. எனவே கொடைக்கானலில் பல்கலைக்கழகம் அமைத்தால், சித்த வைத்தியம், யுனானி வைத்தியம் ஆயுர்வேத வைத்தியம் பற்றி ஆராய நல்ல வாய்ப்புகள் அங்கே இருக்கும். எனவே அங்கே ஏன் அமைக்கக்கூடாதென்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : திருமண நிச்சயதார்த்தம் ஆவதற்குமுன் கல்யாண மண்டபம் தேடுவது போல இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)



## 2. அறிவிப்பு

### பேரவையிலிருந்து செய்தி

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்—

(முற்பகல் 10-20)

(1) 1982 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்தம் தனி விதித்துறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1982).

(2) 1982 ஆம் ஆண்டு பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1982).

(3) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1982).

(4) 1982 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1982).

(5) 1982 ஆம் ஆண்டு வக்ஃப் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 70/1981).

## 3. கவன ஈர்ப்பு.

### (1) மதுரை மாநகராட்சி மின்சாரப் பிரிவில் பணிபுரிந்து வந்த ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளது குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"மதுரை மாநகராட்சி மின்சாரப் பிரிவில் கடந்த ஓராண்டுக்கு மேலாக பணிபுரிந்து வந்த 153 ஊழியர்கள் திடீரென வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதால் அவ்வூழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் பிழைப்புக்கு வழியின்றி அல்லல்படுவது குறித்து".

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அவைமுன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, இந்த ஊழியர்கள் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி தற்காலிகமாக நியமிக்கப்பட்டதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேலை கொடுத்தபோது, 6 மாதங்களுக்கு மட்டும் தான், தற்காலிகமான வேலை தான் என்று தெரிவித்திருந்தால், அவர்கள் இந்த வேலையை நம்பியிருக்க மாட்டார்கள், குடும்பஸ்தர்களாக மாற வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டிருக்காது. அதே நேரத்தில், பின்னால் வேறு பணிகளுக்கு பணியாளர் தேவையிருப்பின் புதிய செயற்குறிப்பை அரசுக்கு அனுப்புமாறு மதுரை மாநகராட்சி ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்பட்டார் என்றும் குறிப்பில் இருக்கிறது. எனவே இந்த வேலையை நம்பியிருந்த ஊழியர்களுடைய அல்லலைப் போக்குகின்ற வகையில் இனிபுதிதாக ஊழியர் களைப் பணியில் சேர்க்கும் நிலை ஏற்பட்டால், ஏற்கெனவே வேலையில் இருந்தவர்களுக்கு முன்னுரிமை அளித்து வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அவர்கள் வேலைக்கு எடுக்கப்படுவார்களா ? இன்னொன்றையும் சொல்கிறேன். 70 பேர் பதவி இறக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் பதவி உயர்வுக்காக வாய்ப்பு ஏற்படும்போது, முன்னுரிமை அளித்து பதவி உயர்வு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : 23—10—1973 அன்று 6 மாதத் திற்கு என்றுதான் இந்தப் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. ஏற்கெனவே இதை நீடித்துக் கொடுக்கின்ற அளவிற்கு உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. ஆனால் 9—5—1981-ல் வெளியிடப்பட்ட ஒரு உத்தரவு மூலம் இவர்கள் 31—3—1981 வரையில் அந்தப் பதவியில் நீடிக்க வழிவகை செய்யப்பட்டது.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு உடல் நலம் சரியில்லை, தொண்டையும் சரியில்லை. ஆகவே அவர்கள் வேறொரு நாள் பதில் சொன்னால் பரவாயில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முடிக்கப் போகிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : அமைச்சர் அவர்கள் நிறைய விளையாடி விட்டு வந்திருக்கிறார்கள்.

---

@ 201—202ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.





மாண்புமிகு மேலவைத் தலைவர் : விளையாட்டுப் பருவம். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இப்படி மதுரை மாநகராட்சியில் அவர்களைத் தொடர்ந்து வேலையில் வைத்திருந்தது தவறு என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் மதுரை மாநகராட்சியிலே இது போன்ற பணியாளர்கள் மீண்டும் எடுத்துக்கொள்ளப்படுகிற நிலை ஏற்பட்டால், அவர் களுக்கு முன்னுரிமை அளித்து வேலைவாய்ப்பு அளிப்பதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்த அறிக்கையிலே 28—2—1982 வரை அவர்கள் பணியில் நீடித்தமைக்கு தவிர்ப்பு வேண்டி விண்ணப்பித்திருப்பதாக இருக்கிறது. அது அரசின் ஆய்வில் உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டிருக் கிறது. ஆய்வில் உள்ள பரிசீலனையை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவந்து அதற்கு ஒப்புதல் அளிக்கும் வகையில் ஆணை பிறப்பிக்கப்படுமா ? அவர்கள் எந்தவிதமான ஊதிய இழப்புக்கோ அல்லது இதர சலுகை இழப்புக்கோ ஆளாகாமல் அரசு ஆவனச் செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏற்கெனவே அரசின் பரிசீலனை யில் இது இருக்கிறது. சீக்கிரமாக இதன்மீது முடிவு எடுக்கப்படும்.

## (2) திருவண்ணாமலை நகராட்சிப் பள்ளிகளில் உரிய தேதியில் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப்படாமை குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"வடாற்காடு மாவட்டம் திருவண்ணாமலை நகரில் உள்ள நகராட்சி நிர்வாகத்தில் உள்ள பள்ளிகளில் (மேல்நிலைப் பள்ளிகள் உட்பட) உரிய தேதியில் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப்படாமல் மிகுந்த காலதாமதம் ஏற்படுவதால் பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் நிலைமை குறித்து".

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

@ 203 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, 1981-82 ஆம் ஆண்டில் எந்தெந்த மாதங்களில் தாமதமாக ஊதியம் தரப்பட்டுள்ளது என்பது குறித்தும், அதற்கான காரணம் குறித்தும் அறிக்கையில் சொல்லப் பட்டிருக்கிறது. அதற்கு முன்பு கூட இப்படிச் செய்வது தொடர்ந்து நடை பெற்றிருக்கிறது. அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒரு மாதத்திற்கான ஊதியம் அந்த மாதத்தினுடைய கடைசி நாளில் தரப்படுகிறது. அதைப் போல நம்முடைய நகராட்சிப் பள்ளிகளில் அதாவது உள்ளாட்சித் துறை யினுடைய நிர்வாகத்தின்கீழ் உள்ள தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர் நிலைப் பள்ளி, மேல் நிலைப் பள்ளி போன்றவைகளில் பணி புரிகின்ற ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுமா ? வருங்காலத்திலாவது அரசுப் பள்ளி களைப் போல் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இதை அரசி னுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்த தற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் ஆசிரியர்களாக இருந் தாலும், நகராட்சிகளில் பணியாற்றக்கூடிய அலுவலர்களாக இருந்தாலும், குறிப்பிட்ட நாளில் சம்பளம் கொடுக்க வேண்டும் என்பதுதான் விதிமுறை. ஆனால் இதுபோன்று ஒருசில இடங்களில் தவறுகள் நடந்திருக்கின்றன. தேவகோட்டைக்கு நான் சென்றிருந்தபோது, அங்கு பணியாற்றிக் கொண் டிருந்த ஆசிரியர்களுக்கு இத்தகைய ஒரு நிலை ஏற்பட்டது என்று என்னை சந்தித்து அவர்கள் புகார் கொடுத்தார்கள். உடனடியாக நான் சென்னைக்கு வந்து 'வெயிஸ் அன்ட் மீன்ஸ்' என்கிற அடிப்படையில் நகராட்சிக்குத் தேவையான கடன் பணத்தைக் கொடுத்து, உடனடியாக ஆசிரியர்களுக்கு ஊதியத்தைப் பட்டுவாடா செய்ய வைத்தோம். அதுபோல் திருவண்ணா மலை நகராட்சியைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்ட வுடன் தனி அதிகாரி, ஆணையாளர் போன்றவர்கள் இந்த அரசுக்கு அது பற்றி எழுதியிருக்க வேண்டும். நகராட்சியின் நிதிநிலை சரியில்லை, ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க இவ்வளவு பணம் கடனாகத் தேவை என்று உடனடியாகக் கடிதம் எழுதியிருக்க வேண்டும். அப்படிக் கேட்டால், நாங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அப்படிக் கேட்காததால் இப்படி சில இடங்களில் தவறுகள் ஏற்பட்டு விட்டன. ஆனால் இனிமேல் தவறுகள் ஏற்படாமல் கண்டிப்பாகப் பார்த்துக் கொள்ளப்படும்





## 4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) 1982 ஆம் ஆண்டு பேறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்தம் தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1982.)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1982 ஆம் ஆண்டு, பேறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்தம் தனி விதித்துறைகள்)@ சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் "
என்று முன்மொழிகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே.

(மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் எழுந்தார்).

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்னுரையாக ஏதாவது சொல்கி றார்களா ? சொல்லலாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே. 1982 ஆம் ஆண்டு பேறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத் திருத்தச் சட்டமுன்வடிவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்கிற இந்த நேரத்தில் ஒரே ஒரு கருத்தை நான் சொல்கிறேன். சென்னையில் இருக்கின்ற தொழில் நுட்ப பல்கலைக் கழகத்திற்கு 'பேறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம்' என்கிற பெயர் சூட்டப்பட்டிருப்பது யாவருக்கும் தெரியும். 1978 ஆம் ஆண்டு சட்டத்திலேயும் இந்தப் பெயர் தான் காணப்படுகிறது. ஆனால் சிற்சில சமயங்களில் அலுவலகக் கடிதங் களிலும், குறிப்புகளிலும், பத்திரிகைகளிலும் இதைப்பற்றிக் குறிப்பிடும் போது 'பி.ஏ.யூ டி', என்று ஆங்கிலத்தில் சுருக்கமாகக் குறிப்பிடுகிறார்கள் இப்பல்கலைக் கழகத்தின் முழுப் பெயரையும் குறிப்பிடுவதில்லை. மேலும் இன்றைக்கு சில இடங்களில் 'அண்ணா இன்ஸ்ட்டியூட்', 'அண்ணா போக்குவரத்துக் கார்ப்பரேஷன்', 'அண்ணா சதுக்கம்' என்றெல்லாம் பெயர் சூட்டப்பட்டுள்ளன. உலகளவில் எல்லோரும் இதன் பெயரைப் பார்த்த உடனேயே புரியும் வகையில் 'பேறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல் பல்கலைக் கழகம்' என்று இருப்பதற்கு பதிலாக 'அண்ணா பல்கலைக்

@ 204—205 ஆம் பக்கங்களில் இணைப்பு III I ஆக அச்சிடப் பட்டுள்ளது.

கழகம்' என்று பெயர் மாற்றம் செய்வதற்கான சட்ட முன்வடிவை அரசு கொண்டு வரலாம் என்று முடிவு செய்தது. அதற்கு 1978 ஆம் ஆண்டு மூலச் சட்டத்தில் உரிய சட்டத் திருத்தம் கொண்டு வரலாம் என்று தீர்மானிக்கப் பட்டது. மேற்கண்ட தீர்மானத்திற்கு செயல்வடிவம் கொடுப்பதற்கான சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவையில் கொண்டு வந்து நிறைவேற்றப் பட்டுள்ளது. இப்போது மேலவையின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டிருக்கும் இந்தப் பெயர் மாற்றம் பற்றிய சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்து நிறை வேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்.—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1982 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்தம் தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

இன்றைக்கு 4 சட்டமுன்வடிவுகள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. இது வெறும் பெயர் மாற்றம் பற்றியது தான். பேசுகிறவர்கள் கருத்தை மட்டும் தான் சொல்ல வேண்டும். இதுபற்றி ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் முன்னுரையில் விவரமாகச் சொல்லிவிட்டார்கள். ஆகவே உறுப்பினர்கள் சுருக்கமாகக் கருத்துக்களைச் சொல்வது பயனுடையதாக இருக்கும்.

(முற்பகல் 10-30)

திரு. க. **மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத்தின் பெயரைச் சுருக்குவதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்ட முன்வடிவின்மீது ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் மிகச் சுருக்கமாகத் தெரிவிக்க விரும்பு கிறேன்.

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகச் சட்டம் என்று இது முன்னமேயே பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பல்கலைக் கழகத் தின் முழுப் பெயரையும் அதிகாரிகளோ, அலுவலர்களோ எழுதுவதற்கும், அல்லது மடல்கள் மூலம் தொடர்பு கொள்ளும்போது குறிப்பிடுவதற்கும் சற்று சோம்பல்படுகிறார்கள் என்பதற்காகவும் அல்லது அந்தப் பல்கலைக் கழகத் தின் பெயரையே சுருக்குகிறார்கள் என்பதற்காகவும் பேரறிஞர் அண்ணா என்றிருப்பதை மாற்றி "அண்ணா" என்று போடவிருப்பதாகச் சொல்லப்



பட்டிருப்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதுவுமில்லாமல் ஆங்கிலத்தில் எழுதும்போது பேரறிஞர் அண்ணா என்றுகூட குறிப்பிடாமல் "பி.ஏ." என்ற ஆங்கில எழுத்துக்களால் குறிப்பிடப் படுவதுபற்றியும் மாண்பு மிகு கல்வியமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். குறிப்பாக, அரசுத் துறையில் பிறப்பிக்கப்படும் ஆணைகளின் உள்நோக்கத்தையும் தெளிந்த சிந்தனையையும் அதிகாரிகள் உணர்ந்துகொள்வதில்லை. தமிழிலேயே கையொப்பமிட வேண்டும் என்று ஒரு அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அப்படிப் பிறப்பிக்கப்பட்ட ஆணையேகூட ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டு, சுற்றுக்கு அனுப்பப்பட்டது. அப்படி தமிழில் கையொப்பமிட வேண்டும் என்ற அரசாணையையே ஆங்கிலத்தில் பிறப்பித்தவர்கள் நம் அதிகாரிகள். அதில் இன்னும் என்ன வேடிக்கை என்றால், மாவட்டத்திலுள்ள அதிகாரிகளே கூட அதுபற்றி ஆங்கிலத்தில் குறிப்பு எழுதி, "Copy circulated to all institutions".
என்று போட்டு அதில் ஏ.ஓ., ஈ.ஓ., என்று கையொப்பமிடுகிற சூழ்நிலைதான் ஏற்பட்டது. ஆக, இவ்வாறு அரசு தமிழில் எழுத வேண்டும் என்று விரும்பி னால்கூட, அதிகாரிகள் இந்த வகையிலே நடந்து கொள்கிறார்கள். 'பேரறிஞர் அண்ணா' என்றிருப்பதை அவர்கள் 'அண்ணா' என்று குறிப்பிடுகிறார்கள். ஆகவே அதற்காக நாங்கள் மாற்றிக் கொள்கிறோம் என்றால்—அண்ணா அவர்களை நாம் இதய தெய்வமாக மதிப்பவர்கள்; அவருக்குள்ள சிறப்பை உலகின் அனைத்து அரங்குகளிலும் விரிவாக உணரச் செய்ய விரும்புகிறவர்கள் என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்—அது சிறப்புடையதாக இருக்காது என்பதை நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மகாத்மா என்றால், அது அண்ணல் காந்தியடிகளைக் குறிக்கும். பெரியார் என்றால் தந்தை ஈ.வே.ரா. அவர்களைக் குறிக்கும். அதைப்போலவே சிலம்புச் செல்வர் என்றால், அது மேலவையின் தலைவராகிய தங்களைக் குறிக்கும். கலைஞர் என்றால் டாக்டர் கலைஞர் அவர்களைத்தான் குறிக்கும். அதைப்போல சிலருக்குச் சில அடைமொழிகள் இருப்பது ஒரு சிறப்பாகும். ஏன் அப்படிப்பட்ட அடைமொழி ஒருவருக்கு வந்தது என்று உலக அரங்கில் உள்ளவர்கள் சிந்திக்கும்போது, எத்தனையோ அறிஞர்கள் நாட்டில் இருந்தா லும், அவர்களிலெல்லாம் பேரறிஞராக அண்ணா அவர்கள் இருந்தார்கள் என்று அவர்கள் உணர்கிறபோது, அவருடைய கொள்கைகள் என்ன அவருடைய நூல்கள் என்ன, அவருடைய கோட்பாடுகள் என்ன, அவரைப்

பின்பற்றுகிறவர்கள் யார் என்பதை மற்றவர்கள் அறிந்து கொள்ள உதவியாக இருக்கும். ஆட்சியில் இருப்பவர்களையும் சரி, எதிர்க் கட்சியில் இருப்பவர்களையும் சரி, அறிந்து கொள்வதற்கு இது உதவியாக அமையும். நமது நாட்டில் சுப்பிரமணியம் என்பவரை சுப்புணி என்றும், இலட்சுமி என்பவரை லக்சி என்றும், கோபாலகிருஷ்ணனை கோபி என்றும் குறிப்பிடுவதைப்போல், சுருக்கத்திற்காகச் சொல்வதாக வேண்டி இப்படி மாற்ற வேண்டும் என்று சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களைப் பேரறிஞர் என்றுதான் குறிப்பிட வேண்டும் பாரதியார் என்றால்கூட, அது அவருடைய பெயர் அல்ல. அவருக்கு வந்த அடைமொழி. அதைப்போலவே பாரதிதாசன் என்பதுகூட பாரதியிடம் பற்று வைத்துக் கொண்டு கவிஞர் அவர்கள் தாமே விரும்பிப் போட்டுக் கொண்ட பெயர் பாரதிதாசன். அவருடைய பெயர் கனகசுப்புரத்தினம் என்பது நம் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். எனவே 'பேரறிஞர் அண்ணா' என்பதைச் சுருக்கி வெறும் 'அண்ணா' என்று மாற்றுவதன் மூலம் அவருடைய சிறப்பு வளருவதற்கான சூழ்நிலையைத் தவிர்க்கிறோம் அல்லது குறைக்கிறோம் என்றுதான் பொருள்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காந்தியடிகளின் முழுப் பெயர் தெரியாதவர்கள்கூட இருக்கிறார்கள். மகாத்மா காந்தியின் முழுப் பெயர் "மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி" என்று தெரியாதவர்கள் பலர் இருக்கிறார்கள். இருந்தாலும் காந்தியடிகள் என்றால், அது அவரைத்தான் குறிக்கும். இந்த நிலையில் "பேரறிஞர் அண்ணா" என்பதை மாற்றி வெறும் "அண்ணா" என்று போடுவோமானால், அது எந்த அண்ணா, என்னுடைய அண்ணாவா. இந்தச் சட்டம் நிறைவேற்றப்படும் காலத்தில் முதலமைச்சராக இருந்தவரின் அண்ணாவா அல்லது இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிற கல்வியமைச்சர் அவர்களின் அண்ணாவா, இல்லை மற்றவர்களின் அண்ணாவா என்று பிற்காலத்தில் சந்தேகம் ஏற்படக்கூடும் சூழ்நிலை வந்துவிடக்கூடாது என்பதற்காக நான் இதனைக் குறிப்பிடுகிறேன் . . .

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது அண்ணா என்று சொல்வதை மாண்புமிகு உறுப்பினர் எந்த அண்ணா என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள் ?





திரு. க. மீனாட்சிசுந்தரம் : இப்போது அண்ணா என்றால் எல்லோரும் பேரறிஞர் அண்ணா அவர்களைத்தான் கருதிக் கொண்டிருக்கிறோம். நம்முடைய இதய தெய்வமான அண்ணா அவர்களைத்தான் கருதிக் கொண்டிருக்கிறோம். ஆனால் நான் சொல்வது பிற்காலத்தில் அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதுதான். அதற்காகத்தான் உதாரணத்திற்குச் சொன்னேன். மகாத்மா காந்தியடிகளின் பெயரை அறியாதவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அதைப்போல பின்னாலே அண்ணாவைத் தெரியாத ஒரு சூழ்நிலை உருவாகி, யாருடைய அண்ணா என்று கேட்கிற நிலை வந்துவிடக்கூடாது என்றுதான் சொல்கிறேன். இந்தக் காலத்தில் இருக்கிற சூழ்நிலையே எப்போதும் இருக்கும் என்று கருத முடியாது. ஆகவே "பேரறிஞர் அண்ணா" என்றிருப்பதுதான் உலகளாவிய பெருமையை அவருக்கு என்றைக்கும் தேடித் தரும். அதுதான் உசிதமாகவும் சிறப்பாகவும் அமையும் என்ற கருத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன். 'பேரறிஞர்' என்ற சொல்லை எந்தக் காரணத்தைக் கொண்டும் விட்டுவிடக்கூடாது என்று என்னுடைய வேண்டுகோளை வலியுறுத்தி அமைகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். 'அண்ணா' என்றால் அது 'பேரறிஞர் அண்ணா' அவர்களைத்தான் குறிப்பிடும். 'காமராஜர்' என்றால் அது பெருந்தலைவர் அவர்களைத்தான் குறிப்பிடும். அதைப் போலவே 'சிலம்புச் செல்வர்' என்றால் மாண்புமிகு தலைவர் டாக்டர் சிவஞானம் அவர்களைத்தான் குறிப்பிடும். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் சொன்னதைத்தான் நான் மாற்றிச் சொல்கிறேன். அவ்வளவுதான். அவர்களுக்குள்ள அடைமொழியே அவர்களை உலகறியச் செய்கிறது. அண்ணா அவர்களை பேரறிஞர் என்று சொன்னால்தான் தெரியும் என்ற அவசியமில்லை. அதைப்போல காமராஜர் அவர்களை பெருந்தலைவர் என்று சொன்னால்தான் அவரைத் தெரியும் என்ற அவசியமில்லை. ஆக, இந்தத் தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அடைமொழிகள் நிலைத்து நின்று யுகம் யுகமாக வரலாற்றில் நீடித்து இருக்கப் போகின்றன.

மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகம் என்பதைச் சுருக்கிச் சொல்லும் போது—ஆங்கிலத்தில் abbreviated form என்பார்கள்—[illegible] ...கையில் P.A.U.T. என்கிறார்கள் [illegible]

திரு. க. மீனாட்சிசுந்தரம் : காமராஜர் என்ற பெயர் பெற்றவர்களெல்லாம் பெருந்தலைவர்களாகிவிட முடியாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் சரித்திரத்தில் ஒரு காமராஜர்தான் பெருந்தலைவர் என்ற அடைமொழிக்குரியவர் என்பதை நாம் உணர வேண்டும். எப்படி ஒரு அண்ணா தான் பேரறிஞர் அண்ணா ஆவார்களோ அப்படிச் சரித்திரத்தில் ஒரு காமராஜர்தான் பெருந்தலைவர் என்று எண்ணப்படுவார். வேறு யாரும் பெருந்தலைவராக ஆகிவிட முடியாது.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். பெரியார் என்று சொல்கிறபோது எந்தப் பெரியார் என்று யாருக்கும் தெரியாது, ஆகவே, பெரியார் ஈ. வெ. ராமசாமி என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. பெரியார் என்றால் பெரியாரைத்தான் அது குறிப்பிடும். அதைப்போல அண்ணா என்றால் அது பேரறிஞர் அண்ணா அவர்களைத்தான் குறிப்பிடும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஆக, இப்படி அந்தப் பல்கலைக் கழகத்தின் முழுப் பெயரையும் சொல்லாமல் இருக்கும் நிலை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். இப்போது எந்த நோக்கத்தோடு இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்படுகிறதோ அதுவே கூட வேறு விதமாகப் போய்விடுமோ என்ற அச்ச உணர்வு எனக்கு உண்டு. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்; அண்ணா யூனிவர்சிடி ஆப் டெக்னாலஜி என்பதைச் சுருக்கினால் ஏ.யூ.டி. என்று ஆகும்; அப்படிச் சொன்னால் அது Association of University Teachers என்பதைக்கூட குறிக்கும்.

(ஒரு குரல் : அண்ணா யூனிவர்சிடிதான், அண்ணா யூனிவர்சிடி ஆப் டெக்னாலஜி என்றல்ல.)

அடுத்து, இன்னொன்றையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். பல்கலைக் கழக நிர்வாகத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்றைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். அந்தப் பல்கலைக் கழகத்தின் முழுப் பெயரையும்தான் எப்போதும் பயன்படுத்த வேண்டும். அது கடிதப் போக்குவரத்தானாலும் சரி, பல்கலைக் கழக சம்பந்தமான அறிவிப்பானாலும் சரி, அல்லது விளம்பரமானாலும் சரி, அங்கெல்லாம் பல்கலைக் கழகத்தின் முழுப் பெயரையும் கண்டிப்பாகப் பயன்படுத்த வேண்டும் என்பதை ஒரு கட்டாய அறிவுரையாக அரசு பல்கலைக் கழகத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தைப் பற்றி ஒன்று கேள்விப்படுகிறேன். அந்தப் பல்கலைக் கழகத்தில் உள்ள மாணவர்களும் ஆசிரியர்களும் தமிழகத்தின் பொறியியல் துறையில் மற்றவர்கள் வியக்கத்தக்க ஆற்றலையும் ஆராய்ச்சி அறிவையும் பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கண்டுபிடிக்கிற பல்வேறு சாதனங்கள்கூட இன்றைக்கு வெளி உலகிற்கு வர முடியாமல், வெளி உலகம் அவற்றைப் பற்றித் தெரிய விடாமல் தடுக்கப்படுகிறது என்று கேள்விப்படுகிறேன். அவர்கள் கண்டுபிடிக்கும் சாதனங்கள், கருவிகள் வெளி உலகிற்குத் தெரியவிடாமல் தடுக்கப்படுகின்றன என்ற செய்தி வருந்தத்தக்கதாகும். அப்படிப்பட்ட மாணவர்களுக்கு பல்கலைக் கழகத்தில் உள்ள செனட், அகடமிக் கவுன்சில் போன்ற அமைப்புகளில் உரிய பிரதிநிதித்துவம் கொடுத்தால், மாணவர்கள் கல்விக் கருத்தையும் தங்கள் ஆற்றலையும் அனுபவத்தையும் அங்கே எடுத்துச் சொல்லி பல்கலைக் கழகம் வளர உறுதுணையாக இருக்க முடியும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

இறுதியாக, அமைச்சர் அவர்களுக்கு மிகப் பணிவோடு ஒரு வேண்டுகோளை விடுக்கிறேன். அண்ணா பல்கலைக் கழகத்திலே ஒரு குறிப்பிட்ட பேராசிரியர் சம்பந்தமாகப் பிரச்சினை இருக்கிறது. அது இந்தச் சட்ட முன்வடிவிற்குத் தொடர்பு இல்லாவிட்டாலும் கூட, அதைப் பற்றி கவனிக்கும்படி அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்: ஏனென்றால், கல்வியமைச்சர் அவர்கள், எப்பேர்பட்ட மனமாச்சரியப் பிரச்சினையாக இருந்தாலும், திறந்த மனதுடன் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளைத் தீர்க்கும் பரந்த மனப்பான்மை படைத்தவர். ஆகவே, இந்தப் பிரச்சினை நீண்ட காலமாக இருக்கிறது. அது பல்கலைக் கழகத்தினுடைய வளர்ச்சியை பாதித்துவிடக் கூடாது என்பதற்காக வேண்டுகோளாகச் சொல்ல விரும்புகிறேன். அந்தப்

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1982 ஏப்ரல் 5

பிரச்சினையைத் தீர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் முயற்சி செய்து பரிகாரம் காண தன்னாலான உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டு சட்ட முன்வடிவை வரவேற்று, அமைகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சிந்தனைச் சிற்பி, செந்தமிழ் சொல்லேர் உழவர் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரை ஏற்கெனவே நம்முடைய உள்ளக் கிடக்கின் அடிப்படையிலே பல்கலைக் கழகத்திற்கு வைத்திருந்தாலும், பல்கலைக் கழகத்திலே "பாட்" "பாட்" (PART) என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள் என்பதாலும், அதை விரும்பி நாம் வைத்தாலும், அதை பிரதிபலிக்காத காரணத்தாலே, இப்போது இந்த மாற்றம் செய்யப் பட்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் என்பதை நாடு அறிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்திலே அவருடைய பெயர் வைக்கப்பட்டிருந்தாலும், அதை முறையாகப் பயன்படுத்தாத காரணத்தாலே, அதைச் செயல்படுத்துவதற்கு இந்த மாற்றம் வந்திருக்கிறது என்பதாலே இதை நான் வரவேற்கிறேன்.

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார், மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்ற பெயர்கள் இருந்தாலும், இராஜாஜி, காந்தி என்ற பெயர்கள்தான் மக்களுக்குப் பிரியமான பெயர்களாக ஆகிவிட்டன. அதைப் போலவே அண்ணா என்ற பெயரும், ஒருவர் வீட்டிலே எத்தனை அண்ணாக்கள் இருந்தாலும் எல்லாவற்றிற்கும் மேலாக "அண்ணாவை" தன் வீட்டிலே ஒருவராகக் கருதிய காரணத்தாலே, குடும்பப் பாசத்தோடு "அண்ணா" என்ற பெயரே முழு நிலைமையை மக்களுக்கு உணர்த்துகிற வகையிலே அமைந்திருக்கிறது. பெயர்களை வைத்துவிடுகிறோம் என்றாலும், அவற்றை முறையாகப் பயன்படுத்தவில்லை என்பதால், நமக்கு வருத்தம் ஏற்படுகிறது. அண்ணா சாலை என்று நாம் அருமையோடு வைத்த பெயரை சில ஏடுகள் உபயோகப்படுத்தாமல், மீண்டும் "மவுண்ட் ரோடு" என்றே போடுவதைப் பார்க்கும்போது, நமக்கு வேதனை ஏற்படுகிறது. அவர்கள் இனியாவது திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1982 ஏப்ரல் 5] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

அண்ணா பல்கலைக் கழகம் அமைந்திருக்கின்ற இடத்திற்கு எதிரே ஆளுநர் மாளிகைக்கருகில் நிறைய இடங்கள் இருக்கின்றன. அங்கே பல்கலைக் கழகத்தில் பணியாற்றுகிறவர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். வெகு தொலைவிலே இருந்து பணியாற்ற வருகிறவர்களுக்குப் பெரும் அவதி ஏற்படுகிறது.

ஒவ்வொரு முறையும் கிண்டி பொறியியல் கல்லூரியில் ஆண்டுதோறும் விஞ்ஞானக் கண்காட்சிகள் நடைபெறுவது வழக்கமாக இருந்தது. சில ஆண்டுகளாக இல்லாமலே இருக்கிறது. இப்போது பல்கலைக் கழகம் அமைந்திருக்கிற சூழ்நிலையில் நிரந்தரமாக விஞ்ஞானக் கண்காட்சி அமைவது பலருக்கு அறிவு புகட்ட துணையாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணாவின் பெருமையில் எல்லோருக்கும் பங்கு இருக்கிறது. ஆனால் மக்கள் அந்தப் பெயரை முழுமையாக அழைக்காத சூழ்நிலையில் "பாட்டுக்கு" வந்த காரணத்தாலே அந்த பாட்டை மாற்றுகிற முயற்சிக்கு ஆதரவைத் தெரிவித்து, அமைகிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த திருத்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், ஒரு கருத்தைத் தெரிவிப்பது கடமையென்று கருதுகிறேன். பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் என்று பெயரிட்டபோது, எவ்வளவு மகிழ்ச்சியோடு நாம் பெயரிட்டோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அண்ணாவினுடைய பெயரை ஒரு பல்கலைக் கழகத்திற்குச் சூட்ட வேண்டுமென்று விரும்பியபோது, நாம் புதிதாகத் துவங்கும் பல்கலைக் கழகத்திற்கு வைக்கவில்லை. மாறாக ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலம் சரித்திரம் படைத்த கல்லூரியோடு வேறு சில கல்லூரிகளை இணைத்து, பல்கலைக் கழகமாக உருவாக்கி, அண்ணாவின் பெயரை அதற்குச் சூட்டினோம். கிண்டி என்ஜினியரிங் கல்லூரி அநேகமாக இந்திய சரித்திரத்திலே இணைந்திருந்த ஒன்று. இந்தியாவினுடைய தலைசிறந்த பொறியியல் வல்லுநர்களில் அநேகமாக இரண்டில் ஒருவராவது கிண்டியிலே படித்தவர்களாக இருப்பார்கள். அப்படி சரித்திரப் பாரம்பரியம் படைத்த கல்விக் கூடத்திற்கு அந்தப் பெயர் வைக்கப்பட்டது. அவ்வளவு பாரம்பரியம் மிக்க, தமிழகத்தின் பெருமைக்குச் சிறப்பான எடுத்துக்காட்டாக விளங்கிய

[திரு. க. இராமமூர்த்தி] [1982 ஏப்ரல் 5

தொழில் நுட்பக் கல்லூரியோடு சில கல்லூரிகளை இணைத்து, அதற்கு அண்ணாவின் பெயரைச் சூட்டி எந்த அளவிற்கு அவரை மதிக்கிறோம். அவர் மீது பற்றும் பாசமும் வைத்திருக்கிறோம், நன்றிக் கடன் செலுத்தியிருக்கிறோம் என்பதைக் காட்டியிருக்கிறோம். அப்படிப் பெயர் வைக்கப்பட்ட அன்றைக்குக் கூட ஒரு சிலர் பலமான எதிர்ப்பு உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள். ஒரு சிலர் இந்தக் கல்லூரியின் பெயரை மாற்ற வேண்டாம், வேறு ஒரு பல்கலைக் கழகத்திற்கு வேண்டுமானால் அவர் பெயரை வைத்துவிட்டு கிண்டி என்ஜினியரிங் கல்லூரியை அண்ணா பல்கலைக் கழகத்தின் ஆளுகைக்கு உட்பட்டதாக ஆக்கலாம் என்று தெரிவித்தார்கள். அதையெல்லாம் தாண்டி நின்று அமைச்சரவை விரும்பியபடி, அல்லது அரசு விரும்பியபடி, இந்தப் பெயரை ஏற்றுக்கொண்டோம். பெயர் வைக்கின்ற உரிமையை ஆளும் கட்சி ஏற்றுக்கொள்ளும்போது, கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்து முடிவிற்கு வர வேண்டும். பேரறிஞர் அண்ணா, அண்ணா, அண்ணாதுரை என்ற பெயரிலே எப்படி அழைத்தாலும், அவரைப் பொறுத்த வரையில், அவருக்கு இருக்கின்ற மரியாதை, புகழ், பாசம் ஆகியவை குறையப் போவதில்லை. தமிழகத்தின் அரசியலில் காலடி எடுத்து வைத்தபோது, வெறும் சி. என். அண்ணாதுரையாகத்தான் வந்தார். அதற்குப் பிறகு மக்கள் மனதிலே நிலைத்து நின்றது தளபதி அண்ணாவாக. அதற்குப் பிறகு தளபதி அண்ணா என்ற பெயர் நினைவிலே இல்லாமல் போகின்ற அளவிற்கு அறிஞர் அண்ணாவாக உயர்ந்தார். அதற்குப் பிறகு வெறும் அண்ணாவாக மாறிவிட்டார். பல பேருக்கு புகழ் ஓங்க, ஓங்க பட்டப் பெயர் கூடுதலாகும். ஆனால் அண்ணா அவர்களைப் பொறுத்த வரையில், அவரது பெயர் சுருங்கிக் கொண்டது. கையெழுத்தைக் கூட அண்ணா என்று போட்டார். அப்படிப் போடுவதுதான் சரி என்று அவரே உரிமையோடு எண்ணுகிற அவசியம் வந்தது. "தம்பிக்கு" என்று பத்திரிகையில் கடிதம் எழுதியபோது, "அண்ணா" என்றுதான் போட்டார். ஆகவே நாம் வைக்கின்ற அடைமொழியால் அவருக்கு என்ன புகழ் வந்தது என்பதல்ல. அடைமொழிகளை, சிறப்புச் சொற்றொடர்களை தலைவர்களின் பெயரோடு இணைத்து பெரிய நிறுவனங்களுக்கு வைக்கும்போது, ஜாக்கிரதையாக இருந்திருக்க வேண்டும். பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகம் என்று இரண்டாண்டுகளுக்கு முன்பு வைத்துவிட்டு இதற்குள் அதை மாற்ற வேண்டிய நிலைமை வருகிறதென்றால், இப்படியெல்லாம் வருமா என்பதைப் பற்றி முன்பே சிந்தித்திருக்க வேண்டும். பெயர் வைக்கும்



1982 ஏப்ரல் 5] [திரு. க. இராமமூர்த்தி]

பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற துறை சிந்தித்திருக்க வேண்டும். என்ன காரணத்தாலே அதையெல்லாம் அவசர அவசரமாகச் செய்கிறார்கள்? அண்ணாவின் பெயரைச் சூட்டுவதிலே யாருக்கும் மறுப்பு இல்லை. ஆனால் இப்படி அவசர அவசரமாகப் பெயர் வைத்திருக்க வேண்டியதில்லை, நிதானமாகச் சிந்தித்து முடிவு எடுத்திருக்கலாம்.

'பேரறிஞர் அண்ணா யூனிவர்சிட்டி ஆஃப் டெக்னாலஜி" என்பதைச் சுருக்கி அழைக்கும்போது "பாட்" (PAUT) என்று வருகிறது என்று சொன்னார்கள். அப்படிச் சுருங்கிய பெயரை அழைப்பதிலே தவறு இல்லை. "பாட்" ( (PAUT) என்று அழைத்தால் அண்ணாவின் பெயர் நிலைக்காது அல்லது விட்டுப் போகும் என்பதல்ல. 'பாட்' (PAUT, என்று பத்திரிகையில் வந்தாலும், அதனுடைய விளக்கம் என்னவென்பதும் வந்தாக வேண்டும். அதிலே படிக்கின்ற மாணவர்கள் கூட "பாட்"-டில் படிக்கிறேன் என்று சொன்னால், அண்ணாவிற்கும், தமிழகத்திற்கும் அவமானம் இல்லை. பிறகு அவனை விசாரித்தால், பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திலே படிக்கிறேன் என்று சொல்லியாக வேண்டும். ஆகவே இதிலே ஆழ்ந்த ஆலோசனை இல்லாமல், பேரறிஞர் அண்ணா என்ற அடைமொழியோடு பெயர் வைத்திருக்க வேண்டியதில்லை. பிறகு இன்றைக்கு அதை நீக்குவதற்காக அவசர அவசரமாகத் திருத்தச் சட்ட முன்வடிவும் வேண்டியதில்லை. நிதானமாகச் செய்திருக்கலாம். பெயர் மாற்றம் செய்வது என்ற முடிவிற்கு அரசு வந்த பிறகு, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய திருத்தத்திலே குறிப்பிட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-50)

(Anna University of Technology) ) அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் என்ற பெயர் இருக்க வேண்டுமென்ற அளவிலே என்னுடைய திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அதற்குக் காரணம் மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசும்போது, 'ஏ. யு. டி.' என்ற அளவில் வந்துவிடும், அப்போது ஒரு தொழிற் சங்கத்தைக் கூடக் குறிக்குமென்று சொன்னார்கள். தொழில் நுட்பக் கல்விக்கூடத்திற்கு அண்ணா அவர்கள் பெயரை வைத்ததால், அதிலே ஒரு சிறப்பு இருந்தது. தொழில் நுட்ப நிலையிலே பல்கலைக் கழகங்கள் எந்த அளவிற்கு ஆராய்ச்சியாளர்களை, திட்டமிடுபவர்களை, தேவையானவர்களை

[திரு. க. இராமமூர்த்தி] [1982 ஏப்ரல் 5

உற்பத்தி செய்கிறது என்பதோடு, தொழில் நுட்பக் கல்வி மிக மிகத் தேவை, அதை விரிவுபடுத்த வேண்டுமென்ற உணர்வு அதிகமாக இருந்ததால், அந்த அறிவியல் துறைக்கு அண்ணா அவர்கள் காட்டிய ஆர்வத்தை வெளிப்படுத்தும் வகையிலே, இந்தத் தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திற்கு அண்ணா அவர்களின் பெயரைச் சூட்டினோம். எத்தனையோ பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. இந்தியாவில் 100 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. கலைக் கல்லூரிகளுக்காக வைத்திருக்கின்ற பல்கலைக் கழகங்கள் 100-க்கு மேலே இருக்கின்றன. ஆனால் தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்கள் மிக மிகக் குறைவானவை. மிக மிகக் குறைவாக இருக்கும் பல்கலைக் கழகங்களிலே சிறந்த பல்கலைக் கழகத்திற்கு அண்ணாவின் பெயரை வைத்திருக்கிறோமென்று, அந்தப் பெயரைப் படிக்கும்போதே தெரிய வேண்டும். அதற்கு 'டெக்னாலஜி' என்ற வார்த்தை இருக்க வேண்டும். I.I.T. என்று சொல்லுகிறோம். அதனால் இந்தியாவிற்கு அவமானமா என்ன? அந்தக் கல்வி நிறுவனத்திற்கு அவமானமா என்ன? இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி என்று வைக்கக்கூடாதா? அதுவல்ல. மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி (Madras Institute of Technology) என்று வைத்திருக்கிறார்கள். (M.I.T.) எவ்வளவு சிறப்பான மாணவர்கள் அங்கே படித்துக் கொண்டிருக்கிறார்கள். வல்லுநர்களாக வெளியே வந்து கொண்டிருக்கிறார்கள். எழுத்துக்களைச் சுருக்கி விடுவதாலே யார் பெயரை வைத்திருக்கிறோமோ அவர் பெயருக்கு அவமரியாதை வந்து விடுமென்றோ, அவர் பெயர் நாளடைவில் மறைந்துவிடுமென்றோ பயம் ஏற்பட வேண்டிய அவசியமில்லை. எனவே 'தொழில் நுட்பப் பல்கலைக் கழகம்' என்று கண்டிப்பாக இருந்தாக வேண்டும். அப்படி இருப்பதுதான் முறை என்று கருதுகிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் இதை ஏற்பார்கள் என்று கருதி, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம்' என்ற அளவிலே இருக்க வேண்டுமே தவிர, 'தொழில் நுட்ப' என்ற வார்த்தையையே எடுத்துவிடுவது அண்ணா அவர்களுக்குச் செய்யும் மரியாதையாகவோ, அவர் கவுரவத்திற்குத் துணை சேர்ப்பதாகவோ அமையாதென்று சொல்லிக் கொள்கிறேன். என்னுடைய திருத்தத்தை அந்த வகையிலேதான் கொடுத்திருக்கிறேன். அவசியம் வருகிறபோது அதை முன்மொழிகிறேன். அப்படி முன்மொழிவதற்கு தலைவரவர்களின் அனுமதி தேவை என்று சொல்லி, என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.



1982 ஏப்ரல் 5]

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவரவர்களே, 1982 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத் திருத்தச் சட்டத்தின்பேரில் சில கருத்துக்களை நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இன்று ஆட்சியிலே இருக்கக்கூடிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்தப் பல்கலைக் கழகத்திற்குப் பெயர் சூட்டுகின்ற நேரத்தில், ஒரு நல்ல நோக்கத்தோடுதான் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் என்று பெயர் சூட்டியது. ஆனால் இன்றைய தினம் அந்தப் பெயரை அழைப்பதிலே இருக்கிற சங்கடங்களை எண்ணிப் பார்த்து, சுருக்கமாக இருக்க வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக, இன்றைக்குப் பெயர் மாற்றம் செய்யப்படுகிறதென்று இங்கே விளக்கத்திலே தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப் பெயர் மாற்றம் என்ற காரணத்தாலே அண்ணாவிற்கு நாம் ஏதோ தவறு செய்கிறோமென்றுகூட கருத மாட்டேன். ஆனால் சுருக்கமாக இருக்க வேண்டுமென்பதால், ஏற்கெனவே சூட்டிய பெயரை இப்போது மாற்ற வேண்டுமா என்பதைத்தான் அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதிலே 'தொழில் நுட்பவியல்' என்ற வார்த்தையை வேண்டுமானால் எடுத்துவிட்டு, இங்கே குறிப்பிட்டுள்ளதுபோல, பாரதிதாசன் பல்கலைக் கழகம் என்பது போன்றோ, தமிழகத்திலே இருக்கக்கூடிய பாரதியார் பல்கலைக் கழகம் என்பது போன்றோ சுருக்கமாகப் பெயர்கள் இருக்க வேண்டுமென்று விரும்பினால், நம்முடைய அண்ணா அவர்களை, பேரறிஞர் அண்ணா என்று நாமெல்லாம் மேடைகளிலே விரும்பி அழைத்தாலும், அறிஞர் அண்ணாதுரை என்று ராஜாஜி அவர்களாலே, அன்போடும், அடக்கத்தோடும் சொல்லப்பட்ட அந்தப் பெயரைக்கூடச் சூட்டலாம். பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் என்று நீட்டிச் சொல்வதற்குப் பதிலாக, சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று அரசாங்கம் கருதுமானால், மொட்டையாக அண்ணா பல்கலைக் கழகம் என்று இருப்பதைவிட, நாமெல்லாம் சின்னஞ்சிறு வயது முதற்கொண்டு உளமார, மனமார மேடைகளிலே அன்போடு அழைத்து வந்த அறிஞர் அண்ணா பல்கலைக் கழகம் என்று சுருக்கமாக வைக்கலாம், அரசாங்கம்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1982 ஏப்ரல் 5

சுருக்கமாக இருக்க வேண்டுமென்று விரும்பினால், 'அறிஞர் அண்ணா பல்கலைக் கழகம்' என்று பெயர் மாற்ற முயற்சிக்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத்திற்கு அண்ணா பல்கலைக் கழகம் என்று பெயர் மாற்றத்தைச் செய்ய வேண்டுமென்று கொண்டு வந்துள்ள சட்ட முன்வடிவின் மீது கருத்துக்களைத் தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் என்பது நாம் அண்ணா அவர்கள் பெயரிலே இருக்க வேண்டுமென்று கருதி, அவர் மீது இருக்கின்ற ஒரு பற்றின் காரணமாகத் தான் வைத்தோம். ஆனால் பழக்கத்திலே பார்க்கும்போது, அவருடைய பெயரைப் பயன்படுத்தாமல், பி. ஏ. யு. டி.—பவுட்—' என்று சொல்லி, அதைப் பழக்கத்திலே வைத்துக் கொண்டிருப்பதால், எதற்காகப் பெயர் வைத்தோமோ அந்தப் பெயர் பழக்கத்தில் வராத நிலையைப் பார்க்கும்போது, நாம் இந்த மாறுதலைச் செய்ய வேண்டுமென்று விரும்பினோம். ஆகவே அண்ணா நகர் என்று வைத்திருப்பதுபோல, அண்ணா டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் என்று வைத்திருப்பதுபோல, இதையும் அண்ணா பல்கலைக் கழகம் என்று வைத்துக் கொண்டால், அந்தப் பெயர் இன்னும் கொஞ்சம் பிரபலமாக வருமென்ற நல்லெண்ணத்தோடுதான் செய்திருக்கிறோம். அதுமட்டுமல்ல: தந்தை பெரியார் டிரான்ஸ்போர்ட் என்று முதலிலே இருந்தது. அதை 'டி. பி. டி.' என்று சொல்ல ஆரம்பித்தார்கள். அதனால் தான் பெரியார் டிரான்ஸ்போர்ட் என்று அதை மாற்றி, அது இப்போது பழக்கத்திலே இருந்து கொண்டிருக்கிறது. நாம் பெரிய தலைவர்களின் பெயர்களை வைக்கும்போது, எந்த உணர்வோடு வைக்கிறோமோ அந்த உணர்வு பழக்கத்திலே இல்லாத நிலை வரும்போது, அதை மாற்ற முயற்சி செய்கிறோம். அந்த வகையிலே இதற்கு ஆதரவு தந்து, நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1982 ஏப்ரல் 5].

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்தம் தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

## *Clause 2.*

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the following amendment :—

"In clause 2 for the words 'The Anna University Act' substitute the words 'the Anna University of Technology Act'.

The amendment was duly seconded.

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு நான் நன்றாகப் புரிந்து கொண்டு, ஏற்றுக்கொண்டிருக்கிறேன் என்றாலும், 'அண்ணா யூனிவர்சிட்டி ஆஃப் டெக்னாலஜி' என்று இருப்பதுதான் பொருத்தமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். போக்குவரத்துக் கழகம் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே அண்ணாமலை யூனிவர்சிட்டி இருக்கிறது. அதுவும் 'ஏ. யூ.' என்று ஆகக்கூடாது. ஆதலால் அண்ணா யூனிவர்சிடி ஆஃப் டெக்னாலஜி என்று சொல்வது பொருத்தமாக இருக்கும். எந்த நோக்கத்திற்காக அந்தப் பல்கலைக் கழகம் இருக்கிறதோ, அந்த நோக்கத்தையும் அது தெளிவுபடுத்தும். ஆகவே நான் சொன்ன இந்த யோசனையை ஏற்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பெரும்பாலும் நாங்கள் சொல்லக்கூடிய யோசனைகளை ஏற்கக்கூடிய வாய்ப்பில்லை. அப்படிப்பட்ட வாய்ப்புகூட வருவதில்லை: இந்த யோசனை நல்ல யோசனை என்பதால், அமைச்சரவர்கள் இதை ஏற்பார்கள் என்று நம்பி, அண்ணா யூனிவர்சிடி ஆஃப் டெக்னாலஜி என்பது பொருத்தமாக இருக்கும், அழகாக இருக்குமென்று கூறி, அமைகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் சொன்ன கருத்தையும், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களின் திருத்தத்தையும் ஆதரித்து, 'அண்ணா யூனிவர்சிடி ஆஃப் டெக்னாலஜி' என்று சொல்லுவது மிகப் பொருத்தமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இதை ஆளுங்கட்சி ஏற்றுக்கொண்டால் பெருந்தன்மையான காரியமாக இருக்கும்.

(முற்பகல் 11-00)

ஆகவே இந்தத் திருத்தத்தை அவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* THIRUMATHI TARA CHERIAN : Hon. Deputy Chairman, not that I am against this Bill. We are calling the Madras University as such and in future, the Government may like to change its name also. It seems to be the life stylt of today to change the names of streets and as far as possible as in countries like U.K. & U.S. the Universities get the names of the place where they are founded like Oxford University, Columbia University, Cambridge University of Londan, M.I.T. etc. University of Madras is over 125 years old and internationally known. This is a versy inmortant question. I want to know whether is is necessary to change such names often and give names of Leaders.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவரவர்களே, இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவின் மீது திருத்தம் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி கொண்டு வந்திருக்கிறார். நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கொண்டு வரவில்லை என்று நான் சொல்லவில்லை. அவர்கள் நல்ல உணர்வோடு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நாங்களும் நல்ல உணர்வோடு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அரசு கொண்டு வந்திருக்கிற முறையைப் பொறுத்த வரையில், கொஞ்சம் ஆழ்ந்து பரிசீலித்து, பல்கலைக் கழகத்தினுடைய யோசனையையெல்லாம் பெற்று அதன் அடிப்படையில் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை நான் சொல்லி, அந்த அடிப்படையில் இந்தத் திருத்தத்தை மாண்புமிகு உறுப்பினர் திரும்பப் பெற்றுக் கொண்டு ஆதரவு தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.



ஆனால் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு கவனத்தில் வைத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : எங்களுடைய கருத்தை அரசு கவனத்தில் வைத்துக்கொள்ளும், பரிசீலனை செய்யும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதால், என்னுடைய திருத்தத்தை நான் வலியுறுத்தவில்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சென்னைப் பல்கலைக் கழகத்தின் பெயரும் மாற்றம் செய்யப்படுமா என்கிற ஐயப்பாட்டை இங்கே தெரிவித்தார்கள். அந்த எண்ணம் சற்றும் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி அவர்களின் திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்தம் தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1982) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்தம் தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1982) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(2) 1982 ஆம் ஆண்டு பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1982)**

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு பத்திரப் பதிவு (தமிழ் நாடு திருத்த) சட்ட முன் வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

* **திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1982 ஆம் ஆண்டு பத்திரப் பதிவு திருத்தச் சட்டமுன்வடிவின் மீது ஒரு கருத்தை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இது தொடர்பாக நான் திருத்தம் கூட தந்திருக்கிறேன். இந்தச் சட்டமுன்வடிவின் நோக்கங்களைப் பற்றி இதிலே சொல்லியிருக்கிறார்கள். இதிலே ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது பத்திரத்தைப் பதிவு செய்கிறபோது, அதை யார் பதிவு செய்கிறாரோ அதாவது வாங்குபவர், விற்பவர் அல்லது ஏற்பவர் இவர்களில் யார் பத்திரத்தைப் பதிவு செய்கிறாரோ, அவர் ஏமாற்றி விட்டதாக இந்தத் துறை பின்னால் கண்டுபிடித்தால், அதற்கான கட்டணத்தை வசூல் செய்வது குறித்து சொல்லியிருக்கிறார்கள். விற்பனை செய்யப்பட்ட சொத்தின் மதிப்பைக் குறைவாகக் காட்டி அதன் அடிப்படையில் கட்டணத்தைக் குறைத்துக் கட்டியிருப்பதாக பின்னால் இந்தத் துறை கண்டுபிடித்தால், அது தொடர்பாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி நாம் அதிகாரிகளிடம் அதிகாரத்தை வழங்கும்போது, ஒன்றை எண்ணிப்பார்க்க வேண்டும். யார் இந்தப் பத்திரத்தைப் பதிவு செய்து கொடுத்தார்களோ அந்த அதிகாரியிடமிருந்து தான் ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட் (Revenue Recovery Act) படி வசூலிக்க வேண்டும். ஆனால் யார் பத்திரத்தைப் பதிவு செய்கிறார்களோ அவர்களிடமிருந்து

206 7 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



ரெவின்யூ ஆக்ட் என்கிற சட்டத்தின்கீழ் அரசுக்கு இவ்வளவு நிலுவைத் தொகை வர வேண்டுமென்று கருதுகிற தொகையை வசூலிக்க வேண்டுமென்ற அளவிலே இந்தச் சட்ட முன்வடிவு அமைந்திருக்கிறது. இதிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள்.

"Notwithstanding anything contained in section 80, if after the registration of a document it is found that the fee payable under this Act in relation to that document has not been paid or has been insufficiently paid, such fee or the deficit as the case may be may, on a certificate of the registering officer, be recovered from the person who presented such document for registration under section 32 as an arrear of land revenue."

இது பற்றி ஒன்றைச் சொல்கிறேன். இதிலே எது நடந்தாலும், அது யார் பத்திரத்தை பதிவு செய்வதற்குப் பொறுப்பாக இருக்கிறாரோ அந்த அதிகாரியினுடைய துணையில்லாமல் நடைபெற முடியாது. இந்த அதிகாரி தன்னுடைய கடமையைச் சரிவரச் செய்யாமல் தவறும்போது தான், இப்படிப்பட்ட தவறான காரியம் நடக்க முடியும். "கட்ட வேண்டிய கட்டணத்தைச் செலுத்தவில்லையென்றால்" என்கிற வார்த்தை வருகிறது. அதுபோல் "குறைத்துக் கட்டியிருந்தால்" என்கிற வார்த்தையும் வருகிறது. இந்த இரண்டும் அங்கே பொறுப்பில் இருக்கின்ற அதிகாரியின் துணையில்லாமல் நடைபெற முடியாது. குறிப்பிட்ட பத்திரத்தைப் பதிவு செய்ய வேண்டுமென்றால், அதற்கு இவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டுமென்று அறிவிக்க வேண்டிய பொறுப்பில் உள்ளவர் அந்த அதிகாரி. அப்படி அவர் அறிவிக்காத நிலையில் அல்லது அறிவிக்காமலே அதைப்பற்றித் தெரிந்தவர்கள் இவ்வளவு தான் கட்ட வேண்டி வரும் என்று நினைத்து, அதற்குரிய கட்டணத்தைக் கட்டினால், அதைச் சரிபார்க்கும் பொறுப்பும் அந்த அதிகாரியிடம் தான் இருக்கிறது. அவர்கள் இருப்பது பத்திரத்தைப் பதிவு செய்ய மட்டுமல்ல, கட்டணம் சரியாகக் கட்டப்பட்டிருக்கிறதா என்பதையும் பார்க்கத்தான் அவர்கள் இருக்கிறார்கள். இந்தத் தலையாயப் பணி தான் அவருக்குள்ள முக்கியமான கடமை. அந்தக் கடமையிலிருந்து அவர் தவறினால் தான், சிக்கல் மற்றும் தொல்லை ஏற்படுகிறது. அல்லது அரசுக்கு வர வேண்டிய வருவாய் குறைந்துவிடுகிற நிலையும், பின்னால் அதைக் கண்டுபிடித்தால், பத்திரத்தை 'பிரசன்ட்' செய்த நாளில் யார் 'பிரசன்ட்' செய்தார்களோ அவர்களிடமிருந்து ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட்-ன் கீழ் வசூல் செய்வது போன்ற நிலைமைகளும் வருகின்றன. நிலைமை இவ்வாறு

[திரு. க. இராமமூர்த்தி] [1982 ஏப்ரல் 5

இருக்கும்போது, தவறு செய்ய காரணமாக இருந்த அதிகாரிகள் மீது இந்தச் சட்ட முன்வடிவைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்க, வசூல் செய்ய வழிவகை இருந்தால், நான் இதனை வரவேற்றிருப்பேன். பத்திரத்தைப் பதிவு செய்யும்போது, பல பேர் தங்களுக்கு இருக்கின்ற அவசியத்தின் பேரில், நிர்பந்தத்தின் பேரில் அவசரமாகச் செய்கிறார்கள். வசதியுள்ளவர் ஒருவர் விற்பது என்பது வேறு. ஆனால் வசதியில்லாத நிலையில் இருக்கிற ஒரு ஏழை தன்னுடைய வாழ்க்கைக்கு மிகவும் அவசியம், தேவை என்கிற நிலையில், தன்னுடைய சொத்தை விற்கிறான். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறபோது, சொத்தை விற்று தன்னுடைய கடனை அடைத்து விடுகிறான் ஒரு ஏழை. அவனை மீண்டும் கண்டுபிடித்து அவனிடமிருந்து நிலுவைக் கட்டணத்தை வாங்குகின்ற நிலை வரும்போது, அவனிடமிருந்து வசூல் செய்கின்ற அளவுக்கு ஏதாவது இருக்க வேண்டுமே. ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட்-ன் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லும்போது, அதைச் செலுத்தக்கூடிய வசதியுடையவனாக அவன் இருக்க வேண்டும். அது இல்லாமல் ஏழ்மையில் இருப்பவன் அவனுடைய கடனை அடைக்க விற்கின்ற நிலை வரும்போது, விற்ற பிறகு கடனையெல்லாம் ஒழித்து விட்டு ஒன்றும் இல்லாத நிலையில் இருப்பான். அவனிடமிருந்து ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட்-ன் கீழ் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்வது சரிதானா? அதிகாரிகள் செய்த தவறுக்காக நாட்டு மக்கள் மீது நடவடிக்கை எடுப்பது நியாயம் தானா? தவறு செய்த அதிகாரிகள் மீது இந்தத் துறை என்ன நடவடிக்கை எடுக்கிறது? இதற்குக் காரணமாக இருந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாமா? இதுபற்றி ஒன்றும் சொல்லவில்லையே. தவறு செய்யும் அரசு அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுபற்றி 'சைலன்ட்' (silent) ஆக இருப்பது சரிதானா? அவர் மீது நடவடிக்கை எடுக்கும் நிலைமையை இந்த அரசு உருவாக்க வேண்டும். பத்திரம் பதிவு செய்யப்பட்டபோது குறித்த கட்டணத்தைச் செலுத்தாமல் பதிவு செய்திருக்கிறார்கள் என்பதை எப்போதாவது கண்டுபிடித்தால், 'பிரசன்ட்' செய்யப்பட்ட நேரத்தில் பத்திரப் பதிவு அதிகாரியாக யார் இருந்தார்களோ அவர்களிடமிருந்து நிலுவைக் கட்டணத்தை வசூலிக்க வேண்டுமென்ற முறையில் சட்டத் திருத்தம் கொண்டுவந்திருக்க வேண்டும். இந்த அடிப்படையில்தான் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். தவறை அரசு அதிகாரிகள் செய்ய, தவறைச் செய்யாத பாமர மக்களைத் தண்டிப்பது சரியில்லை. என்னுடைய கருத்தின் அடிப்படையில் மீண்டும் இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கோரி அமர்கிறேன்.



1982 ஏப்ரல் 5]

(முற்பகல் 11-10)

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று, ஒருசில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்திரங்களைப் பதிவு செய்யும்போது, கட்டணத்தை ஏமாற்றுகிறவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கும் நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதுவரை அப்படிக் குறைவான கட்டணத்தைக் கட்டி பத்திரங்களைப் பதிவு செய்து கொண்டால், அந்தக் கட்டணத்தை எப்படி வசூலிப்பது என்பதில் சிக்கலான நிலைமை இருந்து வந்தது. அந்த நிலையை மாற்றி ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட்டின் கீழ் அதை வசூலிக்க வேண்டும் என்ற வகையில் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். இப்படி கட்டணத்தை ஏமாற்றுகிறவர்களிடமிருந்து அதை அரசு வசூலித்தாக வேண்டும் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இங்கே ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். இப்படிக் குறைவான கட்டணத்தைச் செலுத்தி பத்திரப் பதிவு செய்துகொள்வதற்கு அடிப்படையில் உள்ள காரணம் வாங்குகிறவர்கள், விற்பவர்கள் என்பது மட்டுமல்லாமல் அதிகாரிகளும்தான் என்பதைச் சுட்டிக்காட்டி, பெரும்பாலும் அதிகாரிகள்தான் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அவர் எந்தக் கருத்தைச் சொன்னாலும், அதை எதிர்க்க வேண்டும் அல்லது மறுக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறவனல்ல நான். அவர் வேண்டுமானால் அந்த நோக்கத்தோடு இருக்கக்கூடும். சில கருத்துக்கள் இங்கே சொல்லப்படும்போது, அதைச் சொல்கிறவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்பதைப் பார்க்க வேண்டும் என்பதை பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களுக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை. எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் அவ்வாறு தவறு செய்யும் அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்ன கருத்து ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய கருத்து என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக நிலத்தை விற்கிறவர்கள்—அவர்கள் எப்படிப்பட்ட நிலையில் இருந்தாலும்—குறைந்த செலவில் முடித்துக்கொள்ள வேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறார்கள். அதைப்போலவே வாங்குகிறவர்களும்கூட குறைந்த செலவில் முடித்துவிட வேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள். ஆனால் அரசு அதிகாரிகளைப் பொறுத்தவரையில், இவ்வாறு குறைவான கட்டணத்

தைச் செலுத்தி பதிவு செய்கிறவர்களைக் கண்டு பிடிக்க வேண்டும் அல்லது அவர்களைக் கண்காணிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்படக்கூடிய வர்களாக இருக்க வேண்டும். பதிவு செய்யும் அதிகாரிகளைப் பொறுத்த வரையில், அரசு சில வரையறைகளை, விதிமுறைகளை வைத்திருக்கிறது. அவர்கள் அந்தக் குறிப்பிட்ட வரையறைகளுக்குட்பட்டு பத்திரங்களைப் பதிவு செய்கிறார்கள். அதை விட்டுவிட்டுச் செய்கிற நிலை பொதுவாக வருவ தில்லை. ஆனால் இதற்கெல்லாம் ஏதாவது ஒரு கணிக்கை முறை, கண் காணிப்பு முறை இருக்கிறதா என்றால், யாராவது இவற்றை ஆடிட் செய்யும் போது அல்லது இவைகளைப்பற்றி புகார்கள் வந்து விசாரிக்கும்போதுதான் கண்டுபிடிக்க முடிகிற நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டதற்குத் துணையாக ஒரு சம்பவத் தைக் குறிப்பிட விரும்புகிறேன். சென்னை நகரில் உள்ள மயிலை லஸ் கார்னரில்—இராயப்பேட்டை. ஹைரோட்டில்—ஒரு பெரிய காலியிடம் இருக் கிறது. அந்த இடத்தை ஒருவர் விற்பனை செய்து அதைப் பத்திரப் பதிவு அலுவலகத்தில் ரூ. 12½ லட்சத்திற்கு வேல்யுவேஷன் போட்டு விற்கிறார். சட்டப்படி எந்த அளவுக்கு வேல்யுவேஷன் போடப்பட வேண்டுமோ அந்த அளவுக்குப் போட்டு அந்தச் சொத்தை ரூ. 12½ லட்சத்திற்கு அவர் விற் கிறார். பத்திரப் பதிவுத் துறை அதிகாரிகளும் அதைப் பதிவு செய்கிறார்கள். ஆனால் அந்த இடத்தில் இருக்கிறவர்களும், மற்றவர்களும், பத்திரத்தைப் பதிவு செய்த அதிகாரிகளுக்கும் மற்ற அரசு அதிகாரிகளுக்கும் எழுத்து மூலமாக ஒன்றைத் தெரிவிக்கிறார்கள். "நாங்கள் அந்த இடத்தை ரூ. 34 லட்சத்திற்கு எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். அங்கே இருக்கிற எங்களை மீறி அந்த இடம் விற்பனை செய்யப்படுகிறது. எங்களையெல் லாம் ஏமாற்றி அது விற்கப்பட்டுவிட்டது. அதற்குக் குறைவான கட்டணம் செலுத்தப்பட்டிருக்கிறது." இப்படி பல்வேறு புகார்களைச் சொல்லி அங்கே இருப்பவர்கள் அரசு அதிகாரிகளுக்கு எழுதியிருக்கிறார்கள். இந்தச் சம்பவத்தில் பத்திரப் பதிவு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க முடியுமா அல்லது விற்றவர் மீதுதான் நடவடிக்கை எடுக்க முடியுமா அல்லது வாங்கியவர் மீதுதான் நடவடிக்கை எடுக்க முடியுமா? இன்றையதினம் இது ஒரு பெரிய பிரச்சினையாக அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து கொண்டிருக் கிறது. எதற்காகச் சொல்கிறேன் என்றால், இப்படிப்பட்ட நிலை வரும் போது, நாம் மிகவும் கண்காணிப்பாக இருக்க வேண்டியிருக்கிறது. இப்படிச் சட்டத்தின் அருமையான நோக்கங்கள் கூட ஏமாற்றப்பட்டு செய்யப்படுகிற காரியங்கள் என்றைக்காவது கண்டுபிடிக்கப்பட்டால், அதை வசூல் செய்ய





வழிவகை செய்ய வேண்டும் என்ற முறையில் இன்றையதினம் ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட்டின் கீழ் தொகையை வசூல் செய்ய வேண்டும் என்ற முறையில் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப் பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, "என்றைக்காவது விற்றவர் காலமான பிறகு வசூல் செய்ய முடியுமா?" என்று கேட்டார்கள். அதற்காகத்தான் அரசு இதை ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட்டின் கீழ் வசூல் செய்ய வேண்டும் என்று போட்டிருக்கிறது. இந்தத் தொகையை அப்படிப் பட்டவரிடம் வசூலிக்க முடியாது என்றால், அதைப்பற்றி அங்கே இருக்கிற ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அல்லது தாசில்தார் அளவிலேயே இது வசூலிக்கப்பட முடியாது என்ற அறிக்கை தரப்பட்டு அதோடு போய்விடும் என்றுதான் நம்பு கிறேன். எனவே ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட்டின் கீழ் வசூலிப்பதாகச் சொல்லப்படுவது வரவேற்கத் தக்கது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

இன்றைக்குச் சாதாரணமாக காலி மனைகளை வாங்குகிறார்கள். அதற்குப் பிறகு அந்தக் காலி மனையில் ஒரு லட்சம் ரூபாய் செலவில் ஒரு கட்டிடம் கட்டுகிறார்கள். ஆனால் அதை விற்கும்போது, காலியிடம் மற்றும் கட்டிடத் திற்கான மதிப்பைப்போட்டு, அதற்கான பத்திரப் பதிவுத் தொகை கட்ட வேண்டும் என்று சட்டமிருக்கிறது. இதைச் சொல்லும்போது, அரசின் கவனத்திற்கு இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். யார் கட்டிடம் கட்டுவதாக இருந்தாலும் சரி, அரசுத் துறைகளில் பல்வேறு அதிகாரிகளிடமிருந்து அனுமதி வாங்கித்தான் கட்டுகிறார்கள். எனவே அப்படிக் கட்டும்போதும் அதற்கான வேல்யுவேஷனையும் பத்திரப் பதிவு அலு வலகத்தில் பதிவு செய்ய வேண்டும் என்ற முறையைக் கொண்டுவர வேண்டும். அரசுத் துறையில் அதற்கான சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு வந்தால்தான் அதைப் பதிவு செய்ய முடியும் என்று ஒரு முறையை உருவாக்க வேண்டும். அப்போதுதான் இடத்தைப்பற்றியும் கட்டிடத்தைப்பற்றியும் முழுமையான 'வேல்யுவேஷன்' தெரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இப்படி ஒரு சாதாரண ஏழை 4 சென்ட் நிலத்தை விற்றால்கூட, அவன் அதற்காக பத்திரப் பதிவுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியிருக்கிறது. ஆனால் லட்ச ரூபாய்க்கும் அதிகமான மதிப்புள்ள லாரி, கார் போன்றவற்றை திடீர் திடீரென்று விற்கிறார்கள். அதற்கு எந்தவிதமான பதிவுக் கட்டண மும் வசூலிக்கப்படுவதில்லை. திடீரென்று லாரியின் சொந்தக்காரர் மாறி

[திரு. எஸ். ஆர். இராதா] [1982 ஏப்ரல் 5

விடுகிறார், பெயர் மாறிவிடுகிறது, இடம் மாறிவிடுகிறது. இப்படி எல்லாமே மாறிவிடுகின்றன. இதற்காக அவர்கள் எந்த விதமான கட்டணமும் செலுத்தத் தேவையில்லை. ஆனால் ரூ 2,000 பெறுமானமுள்ள நியமாக இருந்தாலும், அதை விற்பதென்றால், அவர்கள் அதற்கான கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்பதை நான் இங்கே அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இதற்கெல்லாம் அரசு தகுந்த வழிவகை காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்கிற அதே நோக்கில் புதிய முனைப் போடு பல்வேறு பத்திரப் பதிவு அலுவலகங்களைத் துவங்கி, ஏழை எளிய மக்கள் சுலபமாகப் பத்திரப் பதிவு செய்து கொள்வதற்காக உதவி செய்ய வேண்டும் என்ற முற்போக்கான எண்ணத்தோடு அரசு இதில் விரிவான பரிசீலனை செய்து உரிய வழிவகைகளைக் காண வேண்டும் என்று சொல்லி, அமைகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவையில் விவாதிக்கப்படுகிற பத்திரப் பதிவுச் சட்ட திருத்த மசோதாவின் மீது எனது கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

பொதுவாகப் பத்திரங்களைப் பதிவு செய்யும்போது, வாங்குகிற சொத்தின் விலையை மிகக் குறைவாகக் காட்டித்தான் பதிவு செய்து கொள்கிறார்கள். அதுதான் நாட்டில் எல்லா இடங்களிலும் இருக்கிற நிலை. அதற்கு விதிவிலக்கே இல்லை. இதன் காரணமாக அரசாங்கத்திற்கு நியாயமான முறையில் வர வேண்டிய "ரிஜிஸ்டிரேஷன் பீஸ்" வந்து சேருவதில்லை. இதன் மூலம் அரசாங்கம் எடுக்கிற நல்ல பணிகளுக்குக் குந்தகம் ஏற்படுகிறது. அதை முறைப்படுத்துவதற்காகத்தான் இன்றைய தினம் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். இந்தச் சட்டத்தின் நோக்கம் மிகவும் நல்லதாக இருந்தால்கூட, அரசு இதை எப்படி நிறைவேற்றப்போகிறது என்பதையும் நான் சிந்திக்க வேண்டும். மவுண்ட் ரோடில் ரூ. 5 அல்லது 7 லட்சத்திற்குக் குறைவாக ஒரு கிரவுண்டு நிலத்தை வாங்க முடியாது. . .

**திரு. ஜேப்பியார் :** அது மவுண்ட் ரோடு அல்ல. அண்ணா சாலை என்று அதன் பெயர் மாற்றப்பட்டது, 5, 6 ஆண்டுகள் ஆகிவிட்டன.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு உறுப்பினருக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆங்கிலம் படித்த தவறு காரணமாக இப்படி வந்துவிட்டது. அதைத் திருத்தியதற்கு நன்றி



1982 ஏப்ரல் 5]

**திரு. ப. மாணிக்கம் :** இது ஆங்கிலத்தால் ஏற்பட்ட கோளாறு அல்ல. பொதுவாக பழைய விஷயங்கள் மனதில் ஆழமாகப் பதிந்து விடுவதால் ஏற்படுகிற நிலையே தவிர, இது ஆங்கிலத்தின் கோளாறு அல்ல.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அதுவும் ஏற்றுக் கொள்ளக்கூடியதுதான். நமக்குப் பிறகு வருகிற இளைஞர்களுக்கு இத்தகைய தவறு ஏற்படாது. நாமெல்லாம் பழைய தலைமுறையைச் சார்ந்தவர்கள். நமக்கு இன்றைக்கும் கிலோ மீட்டர் என்றால் தெரிவதில்லை. மைல் என்றால்தான் புரிகிறது. இளைஞர்களிடத்தில் போய் 'மைல்' என்றால் அது எங்கே இருக்கிறது? கட்டில் இருக்கிறதா என்று கேட்பார்கள். அந்த அளவுக்கு மாறியிருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

இன்று சென்னை நகரில் அண்ணா சாலையில் ஒரு கிரவுண்டு நிலம் வாங்குவது என்றால் ரூ. 7 லட்சத்திற்குக் குறைவாக வாங்க முடியாது. அப்படியிருந்தாலும் அந்தச் சொத்து மதிப்பு காட்டுகிறபோது, ரூ. 1 லட்சம் அல்லது 2 லட்சத்திற்கு மேல் காட்டப்படுவதில்லை. ஒருவரும் பத்திரப் பதிவின் போது ரூ. 1 அல்லது 2 லட்சத்திற்கு மேல் காட்டுவதில்லை. அப்படிப்பட்ட நிலைமை இருப்பதை தவிர்க்க அரசு சிந்திக்க வேண்டியது அவசியம் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

இதில் இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது. பத்திரப் பதிவுக்காக நிர்ணயிக்கப்படும் கட்டண விகிதம் மிகவும் உயர்ந்ததாக இருந்தால், அதைத் தவிர்க்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவது இயற்கைதான். இன்றைய தினம் நிலத்தின் அல்லது சொத்தின் மதிப்பு மிக அதிகமான அளவுக்கு உயர்ந்திருக்கிறது. அண்ணா சாலையில் 7,000 ரூபாய் விற்ற கிரவுண்ட் இன்றைக்கு ரூ. 7 லட்சம் விற்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு நாம் கட்டண விகிதத்தைத் திருத்தியமைக்க வேண்டிய நிலைக்கு வந்திருக்கிறோம். ஆனால் கட்டண விகிதம் அதிகமாக இருப்பதாலேயே பலர் ஏய்க்க விரும்புகிறார்கள் அல்லது அதைத் தவிர்க்க விரும்புகிறார்கள்.

(முற்பகல் 11-20)

ஆகவே அந்த வரி ஏய்ப்பிற்குத் தூண்டப்படுகிறார்கள். அப்படிச் செய்வது கூட முறையாகக் கருதப்படுகிறது. இதைப்பற்றிப் பேசுகிற எல்லோரும் அப்படித்தான் கருதுகிறார்கள். நானே வாங்கினால் கூட, குறைத்துப் போட முடியுமா பார் என்று சொல்லக் கூடிய நிலை இருக்கிறது. அந்த நிலையைத் தவிர்க்க என்ன செய்ய வேண்டுமென்று சிந்திக்க வேண்டும்.

அப்படிச் சிந்தித்தால், ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட் நம் கண் முன் வருகிறது. ஆனால் அது சரியான பாதையல்ல. 1864 ஆம் ஆண்டில் ஈஸ்ட் இந்தியா கம்பெனி ஆளுகிறபோது கொண்டு வந்த சட்டம், ரெவின்யூ ரெக்கவரி சட்டம். அந்தச் சட்டத்தை வாங்கிப் பார்த்தேன். அதிலே

"Received the assent of the Governor on the 5th May 1864 and the Governor-General on 28th June 1864 ".

என்று இருக்கிறது. அந்தச் சட்டத்தை நாம் வெள்ளைக்காரன் போன பிறகும் வைத்துக்கொண்டு, மாற்ற முடியாமல் இருக்கிறோம். எந்தச் சூழ் நிலையில் இந்தச் சட்டம் வந்தது என்பதைப் பார்க்க வேண்டும். அவர்கள் இந்திய மண்ணுக்குள் நுழைந்து, நாட்டை ஆளுகின்றவர்களிடத்திலே இருந்த பூசலைப் பயன்படுத்தி, கொஞ்சம் கொஞ்சமாக தன்னிடத்திலே ஏற்றுக்கொள் ளும்போது, " அந்நியர்களுக்கு ஏன் வரி கொடுக்க வேண்டும் ? வான் பொழி கிறது, நிலம் விளைகிறது, நீ ஏன் கிஸ்தி கேட்கிறாய் " என்ற உணர்வு உச்ச கட்டத்திலே வந்தபோது, அந்த உணர்வை அடக்க வந்ததுதான் அந்தச் சட்டம். இந்த நாட்டு மக்களிடத்திலே வரிப் பணத்தை வாங்கி சமுதாய நலப் பணிகளுக்காக அரசு பயன்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு வந்த சட்டமல்ல அது. ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட் என்ற பெயரை மாற்ற வேண்டும், அந்த உணர்வை மாற்ற வேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத் திலே—அடிக்கடி நான் கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் போகிறேன் என்று குறை சொல்லுவார்கள். மாண்புமிகு உறுப்பினர் குறுக்கிட எழுந்து கொண் கிறார். இருந்தாலும் கன்னியாகுமரி மாவட்டம் வரலாற்றுப் பின்னணியைக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** கன்னியாகுமரி அவருக்கும் எல்லோருக்கும் விருப்பமானது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அந்தப் பகுதி தமிழ் நாட்டோடு முதலில் இருந் தது. பாண்டிய நாட்டுப் பகுதியாக இருந்தது. பாண்டிய ஆட்சி இடைக் காலத்திலே அழிந்துபோனபோது, மதுரையையே காப்பாற்றத் திண்டாடும் போது, 150 மைல்களுக்கு அப்பால் உள்ள கன்னியாகுமரியைப் பாதுகாக்க முடியாது என்ற சூழ்நிலை ஏற்பட்டவுடனே, அங்கே இருக்கக் கூடிய, இப் போது நாஞ்சில் நாடு என்று சொல்லக் கூடிய பகுதியைச் சேர்ந்த எங்கள் முன்னோர்கள் சுதந்திரக் குடியாராக 'டிக்ளேர்' பண்ணியிருந்தார்கள். வடச்சேர் சந்தைமேட்டில் பார்லிமென்ட் கூடி குடியரசாக 'டிக்ளேர்'





பண்ணியிருந்தார்கள். அதற்குப் பிறகு, அது சிறிய பகுதியாகையால் எங்களால் ஆட்சி செய்ய முடிய வில்லை, நாங்களாகவே திருவிதாங்கூர் மன்ன ரோடு சேர்ந்துகொள்கிறோம் என்று சொன்னோம். திரு. இராகவ ஐயர் எழுதிய ஸ்டேட் மானுவலைப் பார்த்தால் தெரியும். அப்போது அவர்கள் எங்கள் பகுதியில் தில வரி வாங்கும்போது, மணியங்கச்சேரி என்று சொல்லு வார்கள். கிராம மணியம் வாங்குவார்கள். இன்னுமொரு பகுதியிலே பிரவர்த்திகாரச்சேகர் என்று சொல்லுவார்கள். பிரவர்த்திக்காரர் என்றால் one who acts வரி கிடைக்கவில்லையென்றால் அவர் நட வடிக்கை எடுப்பார். நாங்களே திருவிதாங்கூர் மன்னரோடு சேர்ந்ததால் எங்கள் பகுதியிலே கேள்வி கச்சேரி பகுதி என்று சொல்லுவார்கள். அதாவது கேட்டாலே கொடுப்பார்கள் என்பது. அந்த அளவிற்கு கன்னியாகுமரி மாவட்டத்துக்காரர்கள் law abiding citizens ஒரு வரலாற்றிலே சட்டத்தினுடைய பெயர், ஒரு அலுவலகத்தினுடைய பெயர், தன்னைத்தானே இணைத்துக் கொண்டிருக்கிறது. எங்கள் பகுதியில் மணியக்கச்சேரியும் இல்லாமல், பிரவர்த்திகச்சேரியும் இல்லாமல் கேள்விகச் சேரியாக இருந்தது. கேட்டால் கொடுப்பார்கள் என்ற முறை சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பே அந்தப் பகுதியிலே நடைமுறைப்படுத்தப்பட்டது என் றால், சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகளுக்குப் பிறகும் ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட் இருந்தால் அது சரியா ? ஆகவே அந்தப் பெயரை மாற்ற வேண்டும் பெயரை மாற்ற வேண்டுமென்ற சிந்தனையில் சுதந்திர உணர்வு வர வேண் டாமா என்று கேட்டுக்கொள்வதில் தவறு இல்லையென்ற சிந்தனையோட் டத்தை நான் தெரிவிக்கிறேன்.

ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின் கீழ் இதைக் கொண்டுவரக்கூடாது என்பது என்னுடைய ஆசை. ஏனென்றால், இது ஒரு கடுமையான சட்டம். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள், " இதை ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின் கீழ் கொண்டு வந்தால் வில்லேஜ் ஆபீசர்கள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் வசூல் செய்ய முடியாது, ஆகவே தள்ளுபடி செய்ய வாய்ப் புக் கிடைக்கும் " என்று நல்ல நோக்கத்திலே சொன்னார்கள். ஆனால் சட்டத்திலே அப்படி இல்லை. படை பட்டாளம் போய், " கட்டபொம் மனைக் கைது செய்து தூக்கில் போட்டது போல" வசூல் செய்யும் முறை வைத்திருப்பதால், இதை இந்தச் சட்டத்தின் கீழ் கொண்டு வருவது தவறு. பத்திரப் பதிவிலிருந்து வருவாய் அதிகமாகக் கிடைக்க வேண்டும் என்பதிலே ஒத்துக்கொள்கிறேன் என்றாலும், அதை ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின் கீழ் கொண்டு வருவது தவறு.

[திரு. ம. சங்காலிங்கம்] [1982 ஏப்ரல் 5

இன்னும் அடிமை உணர்வோடு வரி வசூலிப்பதிலே போக வேண்டிய
உணர்வு இல்லை. நாட்டு மக்களே உணர்ந்து பத்திரப் பதிவுக் கட்டணத்
தைக் குறைவில்லாமல் கட்டுகிற சூழ்நிலையை நம்முடைய சட்ட அமைப்பு
களில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு
உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பத்திரப் பதிவு செய்கிறவர்கள்,
அதாவது வாங்குகிறவர்கள்தான் பிரசண்ட் பண்ண வேண்டியிருக்கிறது, அவர்
களிடம்தான் வசூல் செய்ய வேண்டுமென்று வருகிறது என்று குறிப்
பிட்டார்கள்.

*திரு. க. இராமமூர்த்தி : பழைய காலத்திலே விற்பனை பேசும்போது,
'இதை நீ செய், அதை நான் ஏற்கிறேன்' என்று முதலிலேயே பேசி ஒத்துக்
கொள்வார்கள். ஆனால் இப்போது வாங்கியவர்கள்தான் 'பிரசண்ட்' செய்
வது வழக்கமாக இருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : வாங்குகிறவர்கள் அவர்களுக்கு லாபம் வர
வேண்டுமென்று நினைக்கிறார்கள். அவர்கள் வாங்கும் மதிப்பைக் குறைக்க
வேண்டுமென்று கருதுவதில்லை. ஆனால் அதிகாரிகள் உடந்தை இல்லாமல்
இதை அவர்கள் செய்ய முடியாது. இந்த விதத்தில் உடந்தையாக இருக்
கின்ற அதிகாரிகள் மீது என்ன தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது என்பது
தெரியவில்லை. பத்திரப் பதிவு குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது
என்று சான்றிதழ் கொடுத்தால்தான், நடவடிக்கை எடுக்க முடியும். அப்படி
உடந்தையாக இருந்த அதிகாரி நீக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படிப்பட்ட
நிலையிலே முழு அளவிலே சட்டத் திருத்தம் வேண்டும். இப்போது அப்படி
இல்லை. எதாவது ஒரு வழக்கிலே தோல்வி அடைந்த உடனே திருத்த
முயற்சிப்பது சரியல்ல. அது செருப்புக்கேற்ற கால் என்பதைப் போல
ஆகும். காலுக்கேற்ற செருப்பாக மாற்ற வேண்டும். இந்த நிலையிலே
விரிவாக பத்திரப் பதிவுச் சட்டத்தை நாம் மாற்ற வேண்டும்.

அரசு நல்ல முறையில் வசூல் செய்ய வேண்டுமென்றால், ரெவின்யூ ரெக்க
வரி ஆக்டை இதிலே பயன்படுத்தக்கூடாது. அதை வேறு பல காரியங்
களுக்குப் பயன்படுத்தலாம். நில வரியையே ரத்து செய்ய வேண்டுமென்ற
சிந்தனையோட்டம் இந்த இருபதாம் நூற்றாண்டிலே, அதுவும் 1980-க்குப்
பிறகு இருக்கிறது. இதிலே அரசுக்குக் குறைந்த வருவாய்தான் வருகிறது
வேறு பல வழிகளிலே அதிகமான வருவாய் வருகிறது என்று கருதப்படுகிறது,
ஆகவே ரெவின்யூ ரெக்கவரி ஆக்டை இதற்குப் பயன்படுத்தத் தேவையில்லை



1982 ஏப்ரல் 5] [திரு. ம. சங்கரலிங்கம்]

என்பதைச் சொல்லி, இந்த உணர்வுகளோடு இதை ஒத்துக்கொண்டாலும்
கூட, ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின் கீழ் இதைக் கொண்டுவருவதை எதிர்க்
கிறேன் என்று சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத்
தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு சட்டமுன்வடிவின் மீது மாண்புமிகு
உறுப்பினர்கள் பலர் நல்ல ஆக்க பூர்வமான கருத்துக்களை நல்கியிருக்
கிறார்கள். குறிப்பாக 1968 ஆம் ஆண்டு, இன்றைக்குக் கொண்டு வந்திருக்
கின்ற சட்ட முன்வடிவினுடைய பயன்களை நடைமுறைக்குக் கொண்டு வர
வேண்டுமென்ற நோக்கத்தோடு, ஏற்கெனவே திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்
கிறது. ஆனால் கொண்டுவரப்பட்ட அந்தத் திருத்தத்தில் முழுமையாக
அன்றைய தினம் சில அம்சங்கள் சேர்க்கப்படாத காரணத்தாலே, விடப்பட்டு,
அந்த அம்சங்களை முழுமையாகப் பெற்று 1968 ஆவது ஆண்டில் உருவாக்கப்
பட்ட திருத்தத்தினுடைய பயனை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற
நோக்கத்தோடு இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவை அரசு கொண்டு
வந்திருக்கிறது.

(முற்பகல் 11-30)

1968-ல் திருத்தப்பட்டுள்ள கட்டண வித்தியாசத்தை வசூல் செய்ய வழி
வகை சட்டத்தில் இருக்கிறது. The party has to pay, but the
Government have no power to collect அன்றைக்கே, பத்திரம் பதிவு
செய்தவர் குறைவாகக் கட்டிவிட்டு, அது கண்டு பிடிக்கப்பட்டால், கொடுக்கப்
பட வேண்டுமென்ற விதிகள் 1968-ல் விரிவாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால்
கொடுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டதே தவிர, அரசாங்கம்
அதை வற்புறுத்தும் வகையில் அதற்கு அதிகாரம் lacunae in the
provisions என்று அன்றைக்கிருந்த நிலைமையைத் திருத்தத்தான் இந்தச்
சட்ட முன்வடிவை இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். குறிப்பாக,
இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பேசுகின்றபோது, ஒரு
கருத்தை மையமாக வைத்துக்கொண்டு, சில விவரங்களை அரசுத்
தரப்பில் விளக்கக் கேட்டார்கள். குறிப்பாக அதிகாரிகள் செய்யும் தவறு
களுக்கு எப்படிப் பத்திரம் பதிய வருபவர் பொறுப்பாவார்கள், தவறு
செய்த அதிகாரிமீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது அல்லது ஏன்
அவர்கள் எச்சரிக்கையாக இருந்து, விழிப்பாக இருந்து பத்திரம் பதிவு
செய்யும்போதே ஏன் உரிய கட்டணம் வாங்கக்கூடாது. அப்படி வாங்காதது
அவர் குறைதானே, அப்படி அவர்கள் வாங்காததற்கு, பதிவு செய்ய

வருபவர்கள் மீது பின்னாலே அந்தச் சுமையைப் போடக்கூடாதென்று சொன்னார்கள். இதற்குப் பின்னாலே இருக்கிற யதார்த்தபூர்வமான விவரம் என்னவென்றால், குறிப்பாக பத்திரப் பதிவு செய்யும் நேரத்தில், பத்திரப் பதிவு செய்கின்ற அலுவலர்கள், அங்கே இருக்கிற 'கெய்ட்லைன்ஸ்'படி 'மார்க்கெட் வேல்யூ' அங்காடி மதிப்பைப் பார்த்து, பதிவு செய்யும் அதிகாரம்தான் இருக்கிறது. அதிகம், குறைவு என்று சொல்கிற அதிகாரம் அந்த அதிகாரிகளுக்கு இல்லை, அதற்கு சட்டம் இடம் கொடுக்க வில்லை. ரூபாய் ஒரு லட்சத்திற்கு எழுதி, அவர்கள் பதிவு செய்கின்ற நேரத்தில், ஒரு லட்சத்திற்குத் தேவைப்பட்ட 'ரெஜிஸ்டிரேஷன் ஃபீ' அவர்களிடமிருந்து வாங்க முடியும். அவர்கள் குறைவாக மதிப்பிட்டிருக்கிறார்கள் என்றால், பதிவு செய்து கொடுக்காமல், மேலே ஆர்.டி.ஓ. விற்கு 'ரெஃபர்' செய்யலா மென்றும், செக்ஷன் 47(ஏ) ன்கீழ் அப்படி 'ரெஃபர்'செய்து, அதற்குப் பிறகு முடிவு செய்து, அதிகம் கேட்க வேண்டும். 1-½ லட்சம் ரூபாய் மதிப்பு என்று முடிவு செய்தால், 50 ஆயிரம் ரூபாய் அதிகமாக இருக்கிறதே, அதற்குப் பெறுகிற வாய்ப்பு பின்னாலேதான் ஏற்படுகிறது. ஏனென்றால் பதிவு செய் யும்போது, அது தெரியாது. அந்த அதிகாரம் அவர்களுக்கு இல்லை. அந்த லக்குனாவைப் போக்கும் முறையில், 1908 ஆம் ஆண்டு பொதுச் சட்டம் 78 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்டுள்ள கட்டணப் பட்டியல்—'டேபிள் ஆப் பீஸ்'—1(பி)-ல், ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பின்கீழ் மட்டுமே ஆவணத்தைத் தாக்கல் செய்யும் நேரத்தில் பதிவுக் கட்டணம் பெறப்படுகிறது. ஆனால் இந்த ஆவணம், அங்காடி மதிப்பை—மார்க்கெட் வேல்யூ—நிர்ணயிப் பதற்காக, முத்திரைச் சட்டப் பிரிவு—ஸ்டாம்ப் ஆக்ட்—படி. 47(ஏ)ன்கீழ், கோட்டாட்சித் தலைவர்—ஆர்.டி.ஓ—க்கு அனுப்பப்பட்டு, அவரால் மதிப்பு உயர்த்தப்படும் நேரத்தில், அந்த உயர் மதிப்பின்கீழ் பதிவுக் கட்டணம் வசூலிக்க பொதுச் சட்டம், கட்டணப் பட்டியலில் 1968 ஆம் ஆண்டு திருத்தத் தைக் கொண்டு வந்தோம். அந்த அதிகாரத்தை இந்த மன்றமே கொடுத்தது. ஆனால் அரசாங்கத்திற்கு அதை வசூல் செய்யும் அதிகாரம் இல்லாமல், குறை யாக இருந்ததால், அந்த வெற்றிடத்தை, அந்தக் குறையைப் போக்க இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. குறிப்பாக 4, 5 ஆண்டுகளாக இந்தச் சட்டத்திலே இருக்கிற குறை போக்கப்படாததால், அரசைப் பொறுத்தவரை யில், ஆண்டு ஒன்றுக்கு 3 லட்சம் ரூபாய் அளவிற்கு நஷ்டம் ஏற்படுகிற நிலை மைகள் உருவாகியிருக்கின்றன. இப்படி வருவாய் ஆதாரத்தை, மக்களுக்குத் துன்பம் இல்லாமல் நியாயமாகச் சர்க்காருக்குக் கிடைக்க வேண்டிய வரு வாயைப் பெறும் வகையிலே தான் இந்தச் சிறு திருத்தம் வருகிறது. குறிப்





பாக மாண்புமிகு உறுப்பினர் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், திரு. இராம மூர்த்தி அவர்களும் சொல்லுகின்ற நேரத்தில் ஒரு கருத்தைச் சொன்னார்கள். பதிவு செய்கின்ற அதிகாரிகள் இன்றையதினம் தவறு செய்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க, 'டிசிப்ளினரி ஆக்ஷன்' எடுக்க வாய்ப்பு இருக்கிறது. சில அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அவர்களை அறி யாமல், இன்றைக்கு இருக்கும் சிஸ்டம் காரணமாக ஏற்படும் அந்தக் குறை பாடுகள், தவறுகளுக்கு அவர்களைப் பொறுப்பாக்குவது இயற்கையாகாது, நியாயமாகாது என்று சொல்லித்தான், இந்தப் புதிய முறையைக் கொண்டு வந்திருக்கிறோம்.

ரெவின்யூ ரெக்கவரி ஆக்டைப்பற்றி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவ ரவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர் களும் சொன்னார்கள். இன்றையதினம் வசூல் செய்வதற்கு ஒரு வழி முறை யாக அதை ஏற்றியிருக்கிறோமே தவிர, வேறல்ல என்பதைச் சொல்லிக்கொள் கிறேன். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, 1968 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட ஒரு சட்டத்தின் பலகீனத்தைப் போக்குவதற்கு, ஒரு குறையைப் போக்குவதற்கு The party has to pay, but the Government have no power to collect என்ற வகையிலே, அவர்கள் செலுத்த வேண்டுமென்ற கட்டாயம் இருந்தாலும் கூட, செலுத்த வேண்டிய அந்தக் கட்டணத்தைப் பெறுவதற்கு அரசாங்கத்திற்கு ஒரு வாய்ப்பு இல்லாமல், உரிமை இல்லாமல், அதிகாரம் இல்லாமல் இருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பெற, அந்தக் குறைப்பாட்டை நீக்குவதற்கு இது கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, பத்திரப் பதிவு (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the following amendment :—

"In clause 2 in the proposed section 80 A (1), delete the rest of the words after the words 'under section 32' and add the following :

'from the officer who effected the concerned registration either jointly or individually'."

The amendment was duly seconded.

* திரு. க. இராமமூர்த்தி : துணைத் தலைவரவர்களே. மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு தெளிவான விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். நான் என்னுடைய திருத்தத்தின் மூலமாக ஒரு கருத்தை அவர்கள் பரிசீலனைக்கு வைக்க விரும்பினேன். மாண்புமிகு அமைச்சரவர்கள், இந்தத் திருத்தம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறதென்று தெளிவு படுத்தியிருக்கிறார்கள். அதாவது மார்க்கெட் வேல்யூ என்று பத்திரப் பதிவுத் துறையிலே என்ன நிர்ணயம் செய்திருக்கிறார்களோ, அதற்குக் குறைவாக மதிப்பீடு செய்து, யாராவது பத்திரப் பதிவு செய்திருந்தால், இடையிலே நின்று போகிற அந்த வேல்யூவிற்கு மட்டும்தான் பொருந்துமென்று தெரிவித்திருக்கிறார்கள். சட்ட முன்வடிவின் அடிப்படையிலே, அந்தத் திருத்தத்தைப் பார்த்தபோது, இது பொதுவாகவே மார்க்கெட் வேல்யூவைக் கடந்து, விற்பனையாகிற அல்லது வாங்குகிற எதற்கும் பொருந்துமென்ற அச்ச உணர்வுதான் ஏற்பட்டது. அது இல்லை என்று சொல்லும்போது, ஓரளவிற்கு இந்தத் திருத்தத்தின் அவசியம்கூட, நோக்கம்கூட அமைச்சரவர்களுடைய பதிலுரையிலேயிருந்து நிறைவேறுகிறதென்று நான் கருதுகிறேன். ஆகவே இதிலே ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட்—இது ரொம்ப 'அவுட்மோடட்' outmoded கடுமையான நடவடிக்கை எடுக்கிற நிலை வரும்போது, 'ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தலாம். எனவே இந்த ஆட்சியில் அவ்வளவு கடுமையான நடவடிக்கை எடுத்துத்தான் வசூலிக்க வேண்டிய நிர்பந்தம் இருக்கிறதென்ற உணர்வை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டாமென்பதால், அதுபற்றி உடனடியாகப் பரிசீலனை செய்யவில்லை என்றாலும், அவசியம் பரிசீலனை செய்யும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற கருத்தை என்னுடைய திருத்தத்தின் மூலம் தெரிவித்து, அமைகிறேன்.



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர்களே, பொதுவாகப் பத்திரம் பதிவு செய்ய வருபவர்கள், அது கோட்டாட்சித் தலைவருக்கு அனுப்பப்படும்போதே, இதைக் கொடுக்க வேண்டுமென்ற உணர்வோடு இருக்கிறார்கள். கட்டாயமாகத் திணிக்கப்படுவது என்ற வாதங்கள் டேர்ம்ஸ் ஆஃப் ரெபரன்சில் வருகிறது. தாமாகச் செலுத்திவிடுகிறார்கள். ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின் கீழ் வசூலிக்க வேண்டுமென்ற அவசியம் பல நேரங்களில் ஏற்படுவதில்லை. பலர், பல நேரங்களில் செலுத்தியிருக்கிறார்கள் என்பதுதான் இந்தத் துறையின் அனுபவம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. மாணிக்கம் : துணைத் தலைவரவர்களே, 'ஹாரஸ் மெண்ட்' இல்லாமல் இருப்பதற்கான முறையிலே, ஏதாவது விதி சேர்க்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அரசினுடைய நோக்கம் 'ஹாரஸ்மெண்ட்' இல்லாமல் செய்வதுதான், இதில் மட்டுமல்ல. எல்லாச் சட்டங்களிலும்தான்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் தம்முடைய திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறாரா, வலியுறுத்துகிறாரா ?

திரு. க. இராமமூர்த்தி : துணைத் தலைவரவர்களே, நான் என்னுடைய திருத்தத்தை வலியுறுத்தவில்லை.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

(முற்பகல் 11-40)

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால், நிறைவேற்றப்பட்ட, 1982ஆம் ஆண்டு பத்திரப் பதிவு (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1982) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்,

**1982 ஆம் ஆண்டு பத்திரப் பதிவு (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1982)**

[1982 ஏப்ரல் 5

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, பத்திரப் பதிவு (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1982) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(3) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1982)**

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்ட முன் வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு, உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இருவர் திருத்தத் தீர்மானம் தந்திருக்கிறார்கள். திரு. எ. ஆர். தாமோதரன் அவையில் இல்லை. திரு. இராமமூர்த்தி.

*THIRU K. RAMAMOORTHY : Sir, I move that the Tamil Nadu Manual Workers (Regulation of Employment and Conditions of Work) Bill, 1982 (L. A. Bill No. 23/1982), as passed by the Assembly be referred to a Select Committee of this House consisting of nine Members."

The amendment was duly seconded.

---

@ 208-225 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1982 ஏப்ரல் 5]

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவரவர்களே,

**திரு. ஆ. நல்லசிவன் :** இந்தச் சட்டமுன்வடிவும் இதற்கு அடுத்த 1982 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் திருத்தச் சட்ட முன்வடிவும் பொதுவாக தொழிலாளர் நலன் பற்றியதாக இருப்பதால், இரண்டையும் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம். இரண்டின் மீதும் பொதுவாகக் கருத்துக்களைத் தெரிவித்துவிட்டு நிறைவேற்றும்போது, தனித் தனியாக நிறைவேற்றலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லும்போது, இரண்டு சட்டமுன்வடிவுகளின் மீதும் கருத்துக்களைப் பொதுவாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்கள் இரண்டு சட்ட முன்வடிவுகளின் மீதும் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பிறகு தனித் தனியாக நிறைவேற்றலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவரவர்களே, 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவின் காலத்திலே நான் உரையை முடிக்க விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவிலே 17 வது பக்கத்திலே, 18வது பத்தியிலே "சிறுவர்களை வேலைக்கு அமர்த்தத் தடை" என்று ஒரு தலைப்பிருக்கிறது. அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள யாதொரு வேலைக்கும் சிறுவர்கள் எடுக்கப்படவோ அங்கீகரிக்கப்படவோ கூடாது என்று இருக்கிறது. பொதுவாக நம்முடைய நாட்டிலே வறுமையில் வாடுகிறவர்களுடைய எண்ணிக்கை மிக மிக அதிகமாக இருக்கிறது. இதிலே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பிட்ட வேலைகளுக்கு மட்டுமல்ல, பல்வேறு பணிகளிலே இன்றைக்கு சிறுவர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். கல்வி வயதுடைய, பள்ளி வயதுடைய சிறுவர்கள் உட்பட பல சிறுவர்கள் தொழிற்சாலைகளில் பணியாற்றுகிறார்கள். உணவு விடுதிகளிலே பணியாற்றுகிறார்கள். சில கடற்கரையில் சுண்டல் விற்க அவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். அலுவலகங்களிலும் பயன்படுத்துகிறார்கள். விவசாயக் கூலியாகவும் பயன்படுத்துகிறார்கள். இப்படி சிறுவர்களை பல்வேறு தொழில்களில் ஈடுபடுத்துவதால், அவர்களுடைய வருங்காலப் படிப்பு, வாழ்வு பாதிக்கப்படுகிறது. அவர்கள் கல்வியறிவை வளர்த்துக் கொள்கிற சூழ்நிலை இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே இந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்களுக்கு

மட்டுமல்லாமல், வேறு எந்தத் தொழில்களிலும் கல்வி வயதுடைய, பள்ளி வயதுடைய சிறுவர்களை ஈடுபடுத்தக் கூடாது என்கிற முறையில் சட்டம் அமைகின்ற வகையில் புதிய சட்டங்கள் கொண்டு வந்து சிறுவர்களின் வருங்கால வாழ்வு சிறப்பாக அமைய அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்போது தான் நம்முடைய நாடு முன்னேறும்.

அடுத்து, நான் இரண்டு பிரிவினர்பற்றிப் பேச விரும்புகிறேன். முதலில் மீனவர்கள்பற்றிப் பேச முற்படுகிறேன். இன்றைக்கு மீனவர்கள் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். கட்டு மர, நாட்டுப்படகு மீனவர்கள் தங்களுடைய கோரிக்கையை அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அனுதாபத்தோடு அவர்களுடைய கோரிக்கையை நம்முடைய அரசு சற்று கேட்டு உரிய நடவடிக்கையை எடுத்திருக்கும் என்றாலும் கூட, தொடர்ந்து அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் நாடு கட்டுமர மீனவர்கள் தொழில் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் பல சேதாரங்களுக்கு ஆளாகிறார்கள். புயல், வெள்ளம் போன்ற தாக்குதல்களுக்கு அவர்கள் பல நேரங்களில் ஆளாகிறார்கள். இதனால் பெரும்பாலான மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அப்படி புயல், வெள்ளத்தால் பாதிப்புக்கு உள்ளாகும்போது, அவர்களுடைய தொழில் கருவிகளும் பாதிக்கப்படுகின்றன. அவர்களுடைய குடிசைகள் பாதிக்கப்பட்டால், அதற்குரிய நஷ்ட ஈட்டுத் தொகையை அரசு வழங்க முன்வர வேண்டுமென்று நான் இந்த சமயத்தில் வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புயல், வெள்ளம் வருகின்றபோது, அவர்கள் மீன் பிடிக்க போகக் கூடாது என்று அவர்களுடைய உயிர் பாதுகாப்பு கருதி அரசு அறிவிப்பைத் தருகிறது. ஆனால் அவர்கள் தினந்தோறும் மீன்பிடிக்கும் தொழிலைச் செய்து தங்களுடைய வயிற்றினைக் கழுவ வேண்டிய சூழ்நிலையில் இருப்பதால், வறுமையில் அவர்கள் இருக்கிற காரணத்தால், இயற்கையின் பாதிப்பு காரணமாக அவர்கள் வேலையில்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், அந்தமாதிரி நேரத்தில் அவர்களுக்கு உதவி அளிக்கும் வகையில் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட சிறு தொகையை அளித்து அவர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்ற அரசு முன்வர வேண்டும்.



அடுத்து, மீனவர்கள் வெள்ளம், புயல் வருகிற நேரத்தில் பாதிக்கப்படுகிறார்கள். அதுகுறித்து வானொலி மூலம் அறிவிப்பு தருகிறது அரசு. அவர்கள் வசிக்கிற குப்பங்களில் வானொலி போன்ற வசதிகள் இல்லாததால், அவர்கள் அதுபற்றி அறிந்துகொள்ளக் கூடிய வாய்ப்பு இல்லை. ஆகவே அவர்கள் வாழ்கிற குப்பங்கள்தோறும் வானொலிப் பெட்டிகளை அமைக்கிற முயற்சியில் அரசு ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பொதுவாக சென்னை போன்ற துறைமுகங்களிலே, அதனைச் சார்ந்து புதிதாகக் கட்டப்படுகின்ற மீன்பிடி துறைமுகங்களிலே தேவைப்படுகின்ற ஊழியர்களை நியமிக்கிறபோது, பெரும்பாலும் மீனவ சமூகத்திலுள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய அரசு இதுகுறித்து மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய முன்வர வேண்டும்.

அடுத்து, அரசு ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறது. அதாவது விசைப் படகு எந்த எல்லைக்குள் செல்லலாம் என்பதுபற்றி 27—9—1979 அன்று ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறது. அப்படி இருந்தாலும் கூட, விசைப் படகு வைத்திருக்கிறவர்கள் அந்தக் குறிப்பிட்ட எல்லைக்கு அப்பாலும் நுழைகிறார்கள். இதனால் நாட்டுப் படகு வைத்திருக்கிற மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஆணையில் சொல்லப்பட்டிருப்பதை சட்ட ரீதியாக அமுல்படுத்துகின்ற வகையில் நடவடிக்கை எடுக்க முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விசைப் படகுக்காரர்கள் தொழில் செய்யும் நேரத்தை காலை 6½ மணியிலிருந்து மாலை 6 மணிவரை என்கிற வகையில் நிர்ணயம் செய்து அந்தச் சட்டத்திற்குள் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

அடுத்து, ஆதி திராவிட மக்களுக்கும் மலைவாழ் மக்களுக்கும் கட்டித் தருவது போல் மீனவ குடும்பங்கள் எந்த நேரத்திலும் ஆபத்தில் இருப்பதால், இவர்களுக்கும் தீ பிடிக்காத வீடுகளைச் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் அவர்களுக்கு புயல் வெள்ளத்தால் ஏற்படுகிற சேதங்களிலிருந்து பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1982 ஏப்ரல் 5

அடுத்து, அவர்களுக்குக் குடிநீர் வசதி, அஞ்சல் வசதி, போக்குவரத்து வசதி போன்ற முக்கியமான சில வாழ்க்கை வசதிகளைச் செய்து தர இந்த அரசு முயற்சிக்க வேண்டும்.

அடுத்து, மீனவர்கள் இன்றைக்கு பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் வாழ்க்கை நிலையில் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள். வாழ்க்கைத் தரத்தில் தாழ்த்தப்பட்ட நிலையில் இருக்கும் மீனவர்களுக்கு தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய சலுகைகளைக் கொடுத்தால், நிச்சயம் அவர்கள் சமுதாயம் முன்னேற வாய்ப்பு உண்டாகும். அதை அவர்கள் விரும்புகிற காரணத்தால், அவர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு முயற்சிக்க வேண்டும்.

அடுத்து, மீனவர்களுடைய முதுமையின் காரணமாக அல்லது உடல் ஊனமுற்றதன் காரணமாக மீன் பிடிக்கச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டால், அவர்களுக்கு அரசு ஓய்வூதியம் தர வேண்டும். விவசாயத் தொழிலாளி, அனாதைகள் போன்றவர்களுக்கு அரசு ஓய்வூதியம் வழங்குவது போல், இவர்களுக்கும் ஓய்வூதியம் என்கிற வகையில் உதவி அளிக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இராமேஸ்வரத்தில் விசைப் படகுக்காரர்கள் இருக்கிறார்கள். இலங்கை நேவிக்காரர்களுடைய தொல்லையின் காரணமாக கச்சத்தீவையொட்டி நம்முடைய மீனவர்கள் மீன் பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதோடு டீசல் விலை ஏற்றத்தின் காரணமாகவும், மீன் விலை குறைவு காரணமாகவும் இன்றையதினம் மீனவர்கள் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற கடன்

(முற்பகல் 11-50)

தொகையை திரும்ப வசூலிக்கும் பணியில் இன்றையதினம் அரசு ஈடுபட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் அசலையோ வட்டியையோ கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். அரசுக் கடன் மட்டுமல்ல, அவர்கள் மற்றவர்களிடம் கடன் வாங்கித்தான் மடி, கயிறு, பலகை போன்றவற்றை வாங்கி அவர்களுக்கும் வட்டி செலுத்த வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். டீசல் விலையேற்றம் மிகவும் அதிகமாக இருக்கிற காரணத்தால், அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு பல்வேறு காரணங்களாலும்



1982 ஏப்ரல் 5] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

மீனவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், அவர்கள் அரசாங்கத்திலிருந்து பெற்ற கடன்களைப் பொறுத்தவரை, அவற்றிற்கான வட்டியை ரத்து செய்து உதவிட வேண்டும் என்று அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் பெரிய படகுகளுக்கு டீசல் வரி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதே அடிப்படையில் விசைப்படகுக்காரர்களுக்கும் டீசலுக்கான வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, வட்டியாக வசூலித்த பணத்தை அசலில் கழித்து மேலும் தொடர்ந்து வட்டி போடாமல் படகின் பெருமானத் தொகையை மட்டும் வசூலிக்க அரசு கருணை உள்ளத்தோடு முன்வர வேண்டும் என்ற வேண்டுகோளையும் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

படகுக்கு ஆண்டுதோறும் இவ்வளவு கட்ட வேண்டும் என்று தவணை விதித்திருப்பதோடு, அந்த அளவுக்குக் காப்பீட்டுத் தொகையும் கட்ட வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிக் கட்டி வருவதை ஆண்டின் இறுதியில் கணக்குப் பார்த்தால், வட்டியும் காப்பீட்டுத் தொகையும்தான் கட்டப்பட்டிருக்கிறதே தவிர, அசல் செலுத்தப்படாத நிலைதான் இருக்கிறது. எனவே மீனவர்கள் பாதிக்கப்படுகிற இந்த நிலையை அரசு கருணையோடு கவனித்து அவர்களுக்கெல்லாம் உற்சாகம் அளிக்கிற வகையில் வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமேஸ்வரம் தீவில் வாழுகிற மீனவர்களில் 95 சதவிகிதத்தினர் குடிசைகளில்தான் வாழ்கிறார்கள். இராமேஸ்வரம் தீவில் வாழ்கிற மீனவர்களுக்கு இதுவரை இலவச வீடுகளோ அல்லது தவணை முறை வீடுகளோ கட்டிக் கொடுக்கப்படவில்லை. கடந்த ஆண்டில் மட்டும் 15 சிறிய மற்றும் பெரிய தீவிபத்துக்கள் அங்கே ஏற்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக மீனவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட மீனவர்களுக்கு வீட்டு வசதி வாரியம் ஒன்றை அமைத்து, அவர்களுக்குத் தவணை முறையில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

சலவைத் தொழிலாளர்களைப்பற்றியும் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்களோ கோபித்துக்கொள்ள மாட்டார்கள் என்றுதான் கருதுகிறேன். அவர்கள் உலக அரசியல் தெரிந்தவர்கள். உலக அரசியல் சிந்தனை மிக்க அவர்களின் உள்ளத்தில் இதுபோன்ற சிந்தனையும் வர வேண்டும் என்ற கருத்தில்தான் நான் இதை இந்த மாமன்றத்தில் தெரிவிக்கிறேன்.

பொதுவாக டி.வி.எஸ். அல்லது அசோக் லேலண்டு அல்லது தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் தங்களுக்கு உரிமை வேண்டும் என்று போராடுகிறார்கள். அவர்கள் 8 மணி நேரம் நெற்றி வியர்வை நிலத்தில் விழ பாடுபடுகிறார்கள். இவர்கள் உழைத்தால் தான், இந்த நாட்டில் பொருளாதாரம் உயரும் என்ற தத்துவத்தைச் சொல்லி, அங்கே உழைப்பவர்களுக்கு ஏற்ற ஊதியம் தரப்பட வேண்டும், அப்படியில்லை என்றால் போராட வேண்டும் என்ற தத்துவம் தற்போது மேலோங்கியிருக்கிறது.

டி.வி.எஸ்-ல் வேலை செய்கிற தொழிலாளியாக இருந்தாலும், சரி, வேறு எந்த நிறுவனத்தில் வேலை செய்யும் தொழிலாளியாக இருந்தாலும் சரி, அவர்களுக்கெல்லாம் காலில் மிதியடிகூட இல்லாமல் தலையில் சோறு சுமந்து கொண்டு வந்து, அவர்களுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் சாப்பாடு கொடுக்க வேண்டும் என்று ஓடோடி வருகிற தாய் இருக்கிறாளே அவள் தொழிலாளி. டி.வி.எஸ்ஸிலும் மற்ற இடத்திலும் பணியாற்றுகிற தொழிலாளிகள் தங்களுக்கு 20 சதவீதம் அல்லது 30 சதவீதம் போனஸ் வேண்டும் என்று குரல் கொடுக்கும்போது அவர்கள் ஆர்கனைஸ்டு லேபராக இருக்கிற காரணத்தால், இத்தகைய குரல் கொடுக்கும்போது, அதை நாம் நியாயம் என்று சொல்லுகிறோம். அப்படி ஆயிரம் இரண்டாயிரம் ரூபாய் போனஸ் வாங்குகிற அந்தத் தொழிலாளிகள்—தங்களுக்குச் சாதம் சுமந்து கொண்டு ஓடோடி வருகிற தொழிலாளிக்கு—அந்தத் தாய்க்கு—அவர் சாப்பாடு உரிய நேரத்தில் கொண்டு வந்து கொடுத்தால்தான், அதைப் சாப்பிட்டுவிட்டு உடல் உறுதியாக இருந்து உழைக்க முடியும் என்று நினைக்கிற அந்தத் தொழிலாளிகள்—என்றைக்காவது போனஸ் தர வேண்டும் என்று எண்ணிப் பார்த்ததுண்டா? இத்தகைய சிந்தனையோட்டம் தொழிற் சங்கத் தலைவர்களுக்காவது வந்ததுண்டா? ஆர்கனைஸ்டு லேபருக்கு போனஸ் தர வேண்டும் என்று போராடுகிற இந்தத் தலைவர்கள் சாப்பாடு தூக்கி வரும் அந்தத் தாய்க்கு போனஸ் தர வேண்டும் என்று எண்ணிப் பார்த்ததாவது உண்டா? ஒரு இடத்தில் அவர்கள் தொழிலாளர்களாக இருந்தாலும், இன்னொரு இடத்தில் அவர்கள் முதலாளிகளாகத்தான் இருக்கிறார்கள்.



**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** அவர்கள் ஒரு சங்கம் வைத்திருக்கிறார்களா?

**திரு. ஜேப்பியார் :** அவர்கள் தொழிற் சங்கம் இல்லாமல் இருக்கிற காரணத்தால்தான், அத்தகைய மேன்யுவல் லேபர் என்று சொல்லப்படுகிற அன்ஆர்கனைஸ்டு லேபருக்காக இன்றைக்கு இந்த அரசு சட்டம் கொண்டு வந்து அமைக்க இருக்கிறது. அந்த வகையில் இந்த அரசுக்குத்தான் அந்தப் பெருமை சேரும்.

எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், உலக அரசியல் பேசும் தலைவர்கள், உலக ஆராய்ச்சி செய்யும் தலைவர்கள் இதைப்பற்றியும் சிந்திக்க வேண்டாமா? ஒருவர் ஒரு வீட்டைக் கட்டுகிறார் என்றால், உண்மையில் அந்த வீட்டைக் கட்டுவது கொல்லத்து வேலை செய்யும் தொழிலாளர்கள்தான். அவர்களுக்கெல்லாம் இன்றையதினம் பாதுகாப்பு தர வேண்டும் என்று எல்லோரும் பேசுகிறோம். ரூ. 2,000 அல்லது 3,000 ஊதியம் பெறுகிற ஒருவர் ரூ. 2 அல்லது 3 லட்சம் ரூபாய் செலவில் ஒரு வீடு கட்டுகிறார் என்றால், அந்த வீட்டைப் பொறுத்தவரையில், அவர் ஒரு முதலாளி. 2 லட்சம் ரூபாய்க்கு அங்கே வேலை நடைபெறுகிறது. இவர்கள் என்னிடம் 3 மாதம் வேலை செய்தார்கள், ஆகவே இவர்களுக்கு 20 சதவீதம் போனஸ் தருகிறேன் என்று யாராவது கொடுக்க முன்வந்தார்களா? வீட்டைக் கட்டுகிற யாராவது அப்படிச் சொன்னதுண்டா?

**திரு. ஆ. நல்லசிவன் :** அன் ஆர்கனைஸ்டு லேபருக்கு போனஸ் தருவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் குறிப்பிடுகிறார். இப்போது அவர்களுக்கு போனஸ் தரப்பட வேண்டும் என்று இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறதா? இந்த அரசு கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்ட முன்வடிவில் அத்தகைய வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜேப்பியார் :** இப்போது முதலில் பாதுகாப்பு தருகிறோம். இதற்குப் பிறகு கண்டிப்பாக அந்தப் பிரச்சினை இடம் பெறும் என்று சொல்லிக்கொள்

(நண்பகல் 12-00)

கிறேன். ஏனென்றால் சங்கம் வைத்திருப்பதாலே அவர்களுடைய உரிமை மட்டும்தான் முதன்மைப்படுகிறது. சங்கம் இல்லாதவர்களுக்கு முதன்மை இல்லையென்ற கவலை நிறைய இருக்கிறது. இதை எத்தனையோ இடங்

க்ளிலே பார்க்கிறோம். ஒரு தொழிற்சாலையாக இருக்கட்டும் அல்லது வேறு அலுவலகமாக இருக்கட்டும். அங்கே 100 பேர் வேலை செய்கிறார்கள் என்றால், தொழிற் சங்கம் வைத்திருப்பவர்களுக்குத்தான் முதன்மை தரப்படுகிறது. நானே கூட தொழிற் சங்கத் தலைவனாக இருக்கிறேன். போராட்டம் என்று சொல்லும்போது, நானே கூட சில நேரங்களில் ஒதுங்கி வந்திருக்கிறேன். போராட்டம் என்று சொல்லும் போது, கோரிக்கையை வாதாடிப் பெறலாம் என்ற தத்துவத்தை வைத்து நானாகவே வெளியேறியிருக்கிறேன். என்னை தொழிலாளர்களின் தலைவராகக் கருதவில்லை என்று கூட வாதிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் மீனவர்களைப் பற்றிப் பேசினார்கள். நூற்றுக்கு 99 பேர் சொந்தமாகத் தொழில் செய்கிறார்கள், ஐந்தாறு சதவீதம் பேர்தான் சில இடங்களில் கூலிக்கு வேலை செய்கிறார்கள், தாங்களாகவே சொந்தமாக மீன் பிடிக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்கு, புயல் வெள்ளக் காலத்திலே பாதுகாப்புத் தர வேண்டுமென்று அவர் சொன்னது நியாயமாகப் படுகிறது. கூலிக்காக வேலை செய்த காலம் மாறி சொந்தமாகக் கட்டுமரம் வைத்துத் தொழில் செய்வது தமிழகத்திலே இருக்கிறது. அன்-ஆர்கனைஸ்ட் லேபர் என்று சொல்லும்போது, புள்ளிவிவரத்தை அரசு தந்திருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, "நான் கூட பல தொழிற் சங்கங்களுக்குத் தலைவராக இருக்கிறேன், போராட்டம் என்று வரும்போது ஒதுங்குகிறேன்" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் சொன்னார்கள். ஜனநாயக முறைப்படி உள்ள சங்கத்தினுடைய பொதுக் குழுவினுடைய முடிவிற்கு மாறாக வெளியே வருகிறார்களா அல்லது அவர்களைச் சமாதானப்படுத்தி வாதாடினாலே போதும், போராட்டம் வேண்டாம் என்று சொல்லி ஒதுங்குகிறார்களா ?

**திரு. ஜேப்பியார் :** இதற்கு நான் விளக்கம் தந்தாக வேண்டும். தொழிற் சங்க முறையிலேகூட சில நேரத்தில் தூக்கி எறியபபட்டவர்கள், ஒரு சங்கம் வளர்கிறது, அதன் மூலமாக நாம் வளர முடியும் என்று கருதி, சில இடங்களில் தவறு செய்கிறவர்கள் இங்கே உட்கார்ந்து தலைமை தாங்க முற்படுகிற போது, பேச்சுக்கள் வெற்றிபெறுகிற சூழ்நிலை உருவாகிறபோது, சில குழப்பங்கள் ஏற்படுகின்றன. தவறு செய்ததன் காரணமாக தூக்கி எறியப்பட்டால், இங்கே வருவது, இங்கே தாண்டுவது என்ற நிலைமை வருகிறபோது தான்.



(மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி எழுந்தார்.)

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** மாண்புமிகு உறுப்பினர்கள் தயவு செய்து குறுக்கிடாமல் இருந்தால் நல்லது. ஒவ்வொருவருக்கும் 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. குறுக்கிட்டு பதில் சொல்வதில் நேரம் போகிறது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** குறுக்கீடு என்று சொன்னால், திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசியதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் பேசினால், அப்போது குறுக்கீடு செய்யலாம். ஆனால் அவர் பேசுவதற்கு விளக்கம் கொடுக்க எந்த விதிமுறையும் இல்லை என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி :** மாற்றுத் தலைவர் அவர்களே, சுவை சேர்க்கும் என்பதற்காக, குறிப்பிட்ட பிரச்சினைபற்றிச் சொல்லும்போது, அது தொடர்பாக விளக்கம் கொடுக்க யாருக்கும் உரிமை இருக்கிறது. அதுதான் மரபு. நான் பேசும்போது நிறைய நேரம் இருக்கிறது, அப்போது நான் கேட்கிறேன்.

**திரு. ஜேப்பியார் :** மாற்றுத் தலைவர் அவர்களே, குறுக்கீடு இல்லாமல் பேசுவதற்கு ஒத்துழைத்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். உடல் உழைப்பு மூலதனமாக உள்ள நபர்களுக்கு பாதுகாப்புத் தருவதற்காக. . .

* **திரு. க. இராமமூர்த்தி :** On a point of order
"மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் பேசும்போது, "இங்கே" என்று குறிப்பிட்டார்கள். "தொழிற் சங்கத் தலைவர்கள் தூக்கி எறியப்படுகிறபோது இங்கே வருகிறார்கள். இங்கிருந்து தூக்கி எறியப்படுகிறபோது தொழிற்சங்கத்திற்குச் செல்கிறார்கள்" என்று சொன்னார்கள். இங்கே என்றால் இந்த அவையைக் குறிப்பிடுகிறதா ? இந்த அவையில் உள்ள உறுப்பினரைக் குறிப்பிடுகிறார்கள் என்றால், இங்கேயுள்ள உறுப்பினர்களுடைய தனிப்பட்ட நடவடிக்கைபற்றிக் களங்கம் கற்பித்துப் பேசக்கூடாது என்ற மரபை உருவாக்கியிருக்கிறோம், ஆகவே இதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** மாண்புமிகு உறுப்பினருக்கு இன்னும் இரண்டு நிமிடங்கள்தான் இருக்கின்றன.

**திரு. ஜேப்பியார் :** பாயின்ட் ஆஃப் ஆர்டரா அல்லது பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷனா ? 'இங்கே' என்பது, நான் தலைமை தாங்கியிருக்கின்ற சங்கம். 'இங்கே' என்பது இந்த சபையல்ல, நான் தலைமை தாங்கியிருக்கின்ற தொழிற் சங்கம். இது பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன், நாட் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள்கூட பல குறைபாடுகளைப்பற்றிச் சொன்னார்கள். நாளைய சமுதாயத்திற்கு என்ன செய்ய வேண்டுமென்ற அறிவுரைகளை முதுமை வாய்ந்த பெரிய கட்சியில் இருப்பவர்கள் அரசுக்குச் சொன்னால், உண்மையிலேயே அரசு அதைப்பற்றிச் சிந்திக்கலாம். ஆனால் இருக்கின்ற பிரச்சினைகளைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் தலைவர் கூட ஒரு முறை சொன்னார்கள். அன்-ஆர்கனைஸ்ட் லேபர் எல்லாம் ஒன்றாகத் திரண்டு எழுந்தால், அவர்களுக்கு பதில் சொல்லுவது யார், தலைமை தாங்குவது யார் என்ற கேள்வியைக் கேட்டபோது, வேண்டுமென்றே தொழிலாளர்களுக்கு விரோதமாகச் செயல்படுகிறார்கள், இவர்கள் எல்லாம் தொழிலாளர் நல உரிமைகளைத் தடுக்கிறார்களே என்ற குற்றச்சாட்டு வெளியே வந்தது. இப்போது அவையிலும் வருகிறது. இதையெல்லாம் சிந்தித்த பிறகு, புரட்சித் தலைவர் ஆட்சியை ஏற்றதற்குப் பிறகுதான் கூர்ப்பார்வையைக் கொண்டு, இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்ட முன்வந்திருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கானவர்கள் தூக்கி எறியப்படுகிறார்கள். காலையில் ஆறு, ஏழு மணிக்கு வருகிறார்கள், சாயங்காலம் ஐந்து மணிக்குப் போகிறார்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் உத்தரவாதம் இருக்கிறதா என்றால், இல்லை. அவர்களுக்கு எத்தனை நாளைக்கு வேலை இருக்கிறது ? அவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டால், யார் தொழிலைத் தருவது ? அவர்கள் எங்கே போய் கூலி உயர்வு கேட்பது ? சில தனி நபர்கள்— காண்ட்ராக்டர்கள் தங்களுடைய வேலையை முடித்துக்கொண்டு அவர்களை அப்படியே விட்டுவிட்டுப் போகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து, அவர்களையெல்லாம் ஒன்றாக இணைத்து, அவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டாலும், உடலுக்கு ஊனம் ஏற்பட்டாலும், வேலை இல்லாத காலங்களில் சோர்ந்திருந்தாலும், அவர்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் தருகிற நல்ல எண்ணத்தோடு, அன்-ஆர்கனைஸ்ட் லேபருக்கு பாதுகாப்புத் தருகின்ற வகையிலே இந்த நல்ல சட்ட முன்வடிவைக் கொண்டு வருகிறார்கள். இதனை எல்லோரும் வரவேற்க வேண்டும்.





[மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை]

ஒவ்வொரு தொழிலாளி வீட்டிலும் வீடு பெருக்குகிறவன் இருக்கிறான். அவனும் ஒரு தொழிலாளிதான். அந்தத் தொழிலாளி ஒரு ஐந்து ரூபாய் சம்பளம் அதிகமாகக் கேட்கும்போது, அவனுக்கு வேலை இல்லையென்று சர்வசாதாரணமாகச் சொல்கிறோம். தொழிற்சாலைகளில் வேலை இல்லையென்றால், "சிந்தாபாத்" என்கிறோம். ஆனால் நம்முடைய வீட்டில் உள்ள வேலைக்காரன் ஐந்து ரூபாய் கேட்கும்போது, அவனுக்கு வேலையில்லை, நாளைக்கு வா என்று மிகச் சாதாரணமாகப் பேசும் நிலைமை இருக்கிறது. நமக்கு வேலை இல்லையென்று சொல்லுகிறபோது, கொடியைத் தூக்குகிறோம். "சிந்தாபாத்" என்கிறோம். கோட்டைக்கு ஊர்வலம் வருகிறோம். ஆகவே 'அன்-ஆர்கனைஸ்ட்' என்று சொல்லக்கூடிய இவர்களுக்கு இந்தத் தொழிலாளர்களே முதலாளிகளாக மாறுகிறார்கள். சவரம் செய்கிற பெற்று வருகிறான் என்றால், அவனிடத்திலே வேலை செய்யும் தொழிலாளிகளான சலவைத் தொழிலாளி, முடி வெட்டுகிற தொழிலாளி, ஆகியவர்களுக்கு மேலும் ஒரு ஐந்து ரூபாய் கொடுக்கிற நிலைமை இன்று நம்மிடையே இல்லை

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டார் என்று நினைக்கிறேன். நல்ல காரியம். நம்முடைய வீட்டில் உள்ள தொழிலாளி ஐந்து ரூபாய் அதிகமாகக் கேட்கும்போது, "நீ வேலை சரியாகச் செய்யவில்லை, வெளியே போ" என்று சொல்லக்கூடிய மனநிலை நம்மிடையே இருக்கும்போது, நாமும் தொழிற் சங்கங்களுக்குத் தலைமை தாங்குகிறோம், தொழிலாளர்களுக்காகப் போராடுகிறோம். ஆனால் அந்த அன்-ஆர்கனைஸ்ட் தொழிலாளர்களுக்குப் போராட ஆள் இல்லை, வாதாட ஆள் இல்லை. அப்படிப்பட்டவர்களுடைய வாழ்க்கையில் மறுமலர்ச்சியை உருவாக்க புரட்சித் தலைவர் பாதுகாப்பான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார். இதை வரவேற்று அமைகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன்பு இரண்டு சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. சட்டமுன்வடிவு எண் 23, 24 ஆகியவைகள் இருக்கின்றன. சட்டமுன்வடிவு 23, தமிழ் நாட்டிலே உள்ள அன்-ஆர்கனைஸ்ட் லேபருக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்கின்றது. அந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். அந்தச் சட்ட முன்வடிவைப்பற்றிப் பேசுவதற்கு முன்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் பேசியதைப் பார்க்கும்

போது, அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற நோக்கத்தையே சந்தேகப்படும்படியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்-ஆர்கனைஸ்ட் லேபர், ஆர்கனைஸ்ட் லேபரைப் போல உரிமைகளை அனுபவிக்காமல் இருக்கிறார்கள் என்பது உண்மை. கடுமையாகச் சுரண்டப்படுகிறார்கள் என்பதால், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்படுகிறது என்றால், பரவாயில்லை. இந்தச் சட்ட முன்வடிவின் மீது பேசுகின்றபோது கூட, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அன்-ஆர்கனைஸ்ட் லேபரை ஆர்கனைஸ்ட் லேபருக்கு எதிராக நிறுத்துவதுபோலப் பேசுவது மிகவும் வருத்தமாக இருக்கிறது. அரசாங்கத்தின் நோக்கம் அது என்று நான் நினைக்கவில்லை. திரு. ஜேப்பியார் அவர்கள் பேசும்போது, ஆர்கனைஸ்ட் லேபருக்குச் சாப்பாடு சுமக்கிறவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்

(பிற்பகல் 12-10)

என்று சொன்னார். ஆர்கனைஸ்டு லேபருக்கு முடி வெட்டுகிறவன் பாதிக்கப்படுகிறான் என்று சொல்லும்போது, சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகளுக்குப் பிறகும் சோறு சுமந்துதான் ஒரு தாய் வாழ வேண்டுமென்ற சமூகப் பொருளாதார அமைப்பு இருக்கிறதே, அதை மாற்றினால்தான், இந்தப் பிரச்சினை தீருமென்று பார்க்காமல், அன்-ஆர்கனைஸ்டு லேபர் பிரச்சினைக்கு ஆர்கனைஸ்டு லேபர்தான் காரணம்; இவர்கள் 400, 500 ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள், அவர்களுக்குத் தர மாட்டேன் என்கிறார்கள், எனவே அவர்களுக்குத் தர நாங்கள் முயற்சி செய்கிறோமென்று சொல்லும்போது, தயவு செய்து அன்-ஆர்கனைஸ்டு லேபரை ஆர்கனைஸ்டு லேபருக்கு எதிராக நிறுத்தும் பழக்கம் வேண்டாம். அன்-ஆர்கனைஸ்டு லேபரைப்பற்றிப் பேசும்போது, ஆர்கனைஸ்டு லேபரைப்பற்றிப் பேச வேண்டாம். ஆர்கனைஸ்டு லேபர், அன்-ஆர்கனைஸ்டு லேபரை ஆதரிக்க முயற்சிக்கிறார்கள். அன்-ஆர்கனைஸ்டு லேபருக்காக கைத்தறித் துறையில் வேலை செய்கிறோம், பீடித் தொழிலில் வேலை செய்கிறோம். சி.பி.ஐ. வேலை செய்கிறது. எனவே அன்-ஆர்கனைஸ்டு லேபருக்கு இல்லை என்று சொல்வது சரியல்ல. அன்-ஆர்கனைஸ்டு லேபர் பிரச்சினை அடிப்படை சமூகப் பொருளாதாரத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறது என்று பார்க்காமல், அவர்களைக் கொண்டு வந்து, ஆர்கனைஸ்டு லேபருக்கு எதிராக நிறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.



23 வது சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், அதை நாங்கள் வரவேற்கிறோம். ரொம்ப நாட்களாக அன்-ஆர்கனைஸ்டு லேபர் தங்களுக்கு இப்படி ஒரு பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டதை, இப்போது இந்த மசோதா மூலம் செய்வதைக் கண்டு சந்தோஷப்படுகிறேன். கான்ட்ராக்ட் முறைகளினாலும், ஏற்கெனவே உள்ள சட்டங்களை நிர்வாகங்கள் புறக்கணிப்பதாலும், குறைந்த கூலி கொடுத்தும், இவர்கள் கடுமையாகச் சுரண்டப்படுகிறார்கள். எனவே இவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்றும், ஏற்கெனவே உள்ள பல தொழிலாளர் நலச் சட்டங்கள் இவர்களுக்கும் பொருந்த வேண்டுமென்று அரசு இவர்களுக்கும் கொண்டு வந்திருப்பதை வரவேற்கிறோம், பாராட்டுகிறோம்.

குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது, பாதுகாப்பு இன்மை, போதிய சம்பளமின்மை, விபத்து ஏற்பட்டால் நஷ்ட ஈடு இன்மை இதுபோன்ற பல கஷ்டங்களிலிருந்து நிவாரணம் கிடைக்க எடுக்கப்பட்டுள்ள முயற்சி பாராட்டுக்குரியது. வேலை நிலைமைகளிலும், வாழ்க்கை நிலைமைகளிலும் அபிவிருத்தி காண வந்துள்ள இந்த மசோதாவை வரவேற்கிறேன். ஒரு காலத்திலே போடப்பட்ட கமிட்டியிலே நான் இருந்ததாக ஞாபகம் இருக்கிறது. அப்போது பேசியிருக்கிறேன். அதை அமுல் நடத்த முயற்சி செய்யும்போது, பல சிரமங்கள் ஏற்படுமென்பது அரசுக்குத் தெரியும். அன்-ஆர்கனைஸ்டு லேபர் பரவலாக இருப்பதால், இவர்களுக்கு நன்மைகள் கிடைக்க முயற்சி செய்யும்போது, அந்த முயற்சி தோல்வியடையச் செய்ய நிர்வாகம் முயற்சி செய்யும் நிலைமை இருக்கிறது. அரசாங்கம் இதை அமுல்படுத்தும்போது, எங்களுடைய இயக்கம் தொழிலாளர் நலத் துறையுடனும், அரசுடனும் பரிபூரணமாக ஒத்துழைக்கும். அமுல் நடத்தும்போது ஏற்படும் அனுபவத்தின் அடிப்படையில் அரசு செய்திருக்கிற விதிகளையெல்லாம் மறுபரிசீலனை செய்ய நாங்களும் ஒத்துழைப்போமென்று கூறி, பொதுவாக இந்த மசோதாவின் நோக்கம் அன்-ஆர்கனைஸ்டு செக்டருக்கு உதவி செய்வதாக அமைந்திருக்கிறது என்று கூறுவதோடு, அப்படி உதவி செய்யும் முதல் சட்டம் என்ற முறையிலே இதை வரவேற்கிறேன். இதில் எந்த விதமான ரிசர்வேஷனும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் சொன்னது சந்தேகத்தைக் கிளப்பினாலும், அரசாங்கத்தைப்பற்றி நான் சந்தேகிக்கவில்லை. இதை அமுல் நடத்த அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு நாங்கள் ஒத்துழைப்பு தருவோமென்று கூறிக் கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : மாண்புமிகு உறுப்பினர் ஒன்றை கவனிக்க வேண்டும். இன்னும் 7 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். ஆளுக்கு 5 நிமிடங்கள்தான் என்று தலைவர் அவர்கள் எழுதி வைத்துப் போயிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் இதுவரை 12 நிமிடங்களுக்கு மேலாகப் பேசிக் கொண்டிருக்கிறார். எனவே ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : சலவைத் தொழிலாளர்கள் தமிழ் நாட்டில் மொத்தம் 2 லட்சத்திற்கு இருக்கிறார்கள். அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் நிலையையும் இந்த அரசு பரிவோடு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் அனைவரும் வறுமைக் கோட்டிற்கும் கீழே வாழ்கிறார்கள். எனவே அவர்கள் அனைவரையும் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றும், அவர்களுக்குக் கல்விச் சலுகை வேலை வாய்ப்பில் சலுகை போன்றவற்றை அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலமெங்கும் பல்வேறு மாவட்டங்களிலும் சலவைத் துறைகளை கட்டித் தருவதற்காக இந்த அரசு பணத்தை ஒதுக்கியிருந்தாலும், அதிகாரிகளுடைய மெத்தனம் காரணமாக, பல்வேறு பகுதிகளில் அந்தச் சலவைத் துறைகளைக் கட்டாமல் இருக்கிறார்கள். இதன் காரணமாகவும் சலவைத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதால், அந்தத் திட்டத்தை அரசு விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

4—1—1979-ல் சலவைத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. அந்தக் குழு தனது அறிக்கையைத் தந்துவிட்டதா? அரசு அந்த அறிக்கையை ஏற்றுக் கொண்டுவிட்டதா அல்லது அதை அமுல்படுத்தியதா அல்லது அறிக்கை வராமலேயே இருக்கிறதா என்பதெல்லாம் ஒன்றும் தெரியாமல் இருக்கின்றன. எனவே இதைக்குறித்தும் அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சலவைத் தொழிலாளர்கள் லாண்டரி வைக்கவும், அவர்களின் தொழிலை அபிவிருத்தி செய்யவும் குறைந்த பட்ச வட்டியில் கடன் வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதோடு அவர்களுக்கெல்லாம் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சமுதாயத்தில் மிகவும் பின் தங்கிய



நிலையில் இருக்கும் அவர்களின் நிலைமையை அரசு மிகவும் பரிவோடு கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது சலவைத் தொழிலாளர்கள் போன்றவர்களுக்கெல்லாம் மேலவையில் பிரதிநிதித்துவம் அளித்து அவர்களைக் கௌரவப் படுத்தினார்கள். அதன் மூலம் அவர்களுடைய குறைகளை நீக்க வாய்ப்பளித்தார்கள். அதைப்போல சலவைத் தொழிலாளர்களுக்கும், சவரத் தொழிலாளர்களுக்கும் இந்த ஆட்சியிலும் இம்மன்றத்தில் பிரதிநிதித்துவம் அளிக்கத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜேப்பியார் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிற வகையில் ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து இன்றையதினம் ஒரு மிகப் பெரிய சாதனையைச் செய்ய இருக்கிற அரசை நான் வெகுவாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதையொட்டி நான் சில கருத்துக்களை எடுத்துச் சொல்லும் போது, அவர்களைக் கேட்கிற தொழிற் சங்க வாதிகள் ஒருவேளை ஆத்திரப் படக் கூடும் என்றாலும்கூட, நான் அவற்றையெல்லாம் இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் சென்ற தேர்தல் காலத்தில் மிகவும் தைரியமாக ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். இதன் காரணமாக வாக்குகள் சிதறிப் போய்விடுமோ அல்லது கிடைக்காமல் போய்விடுமோ என்பதைப்பற்றிக்கூட கவலைப்படாமல், தேர்தல் நேரத்தில் ஒரு கருத்தைச் சொன்னார்கள். "இந்த நாட்டில் கல் உடைப்பவர்களுக்கும், வண்டி இழுப்பவர்களுக்கும், பாரம் சுமப்பவர்களுக்கும் யார் பதில் சொல்வது?" என்று கேட்டுவிட்டு இவர்களுக்கெல்லாம் யார் உத்தரவாதம் தருவது என்றும் கேட்டார்கள். இதன் காரணமாக ஏற்கெனவே ஆர்கனைஸ்டு முறையில் இருக்கும் தொழிலாளர்கள் தங்கள் வாக்குகளை மாற்றிப் போட்டுவிடுவார்கள் அல்லது தங்கள் கட்சிக்குப் போட மாட்டார்கள் என்பதைப்பற்றியெல்லாம்கூட கவலைப்படாமல் அன்றையதினம் மிகப் பெரிய தத்துவத்தைத் தெரிவித்தார்கள். இதைப்பற்றி வேறு யாராவது கவலைப் பட்டதுண்டா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். இதைச் சொல்லும் போது, தொழிற் சங்க வாதியான திரு. நல்லசிவன் அவர்களோ, மாண்புமிகு

[திரு. ஆ. நல்லசிவன்]

[1982 ஏப்ரல் 5

அடுத்து, சட்டமுன்வடிவு எண் 24. இதுதான் ஒரு தகராறுக்குரிய சட்ட
முன்வடிவு. இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையிலும், இதைச்
சட்டமாக அமுல் நடத்தினால், தொழிலாளர்கள் எப்படி பாதிக்கப்படுவார்கள்
என்பதை தொழிலாளியின் கண்ணோட்டத்தில் சொல்ல விரும்புகிறேன்.
அரசைப் பொறுத்தவரையில், இரண்டு பேரையும் சமரசப்படுத்தி, உற்பத்தியை
நடத்திக்கொண்டு போவது என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பார்கள்
முதலாளிகள் அவர்கள் நோக்கில் பார்ப்பார்கள். நான் ஒரு தொழிலாளியின்
கண்ணோட்டத்தில் எப்படிப் பார்க்கிறேன் என்பதைச் சொல்ல விரும்பு
கிறேன். ஏற்கெனவே இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்டில் 10(ஏ)ன்கீழ் ஒரு
தொழில் தகராறு ஏற்பட்டு வேலை நிறுத்தம் நடந்துகொண்டிருந்தாலும்,
நடக்காவிட்டாலும், அந்தப் பிரச்சினையை தொழில் நீதி மன்றத்திற்குவிட
அதிகாரம் அரசாங்கத்தின் கையில் இருக்கிறது. இப்போது அரசாங்கம்
10(பி) என்ற புதிய ஷரத்தைச் சேர்த்து, அதன்கீழ் புதிய அதிகாரம் கோரு
கிறது. அந்த அதிகாரத்தின் மூலம் தொழிலாளியைப் பாதிக்கிற அம்சம்
என்ன என்பதையும், தொழிலாளியைப் பாதிக்காமலேயே தொழிலாளர்கள்
தரப்பிலிருந்து பிரச்சினையைத் தீர்க்க முடியாதா என்பதையும் அரசு பார்க்க
வேண்டுமென்ற முறையிலும் சில வாதங்களைச் சொல்ல விரும்புகிறேன்.
10(பி)-ல் என்ன சொல்லுகிறார்கள் என்றால், தொழில் தகராறை, தொழில்
நீதி மன்றத்திற்கு விட்ட பிறகும் ஸ்டிரைக் தொடர்ந்தால், ஆலை மூடியிருந்
தால், அந்த ஆலையைத் திறந்து ஓட்டவைக்க ஸ்டிரைக்கைத் தடை செய்ய
லாம் அல்லது மூடியிருப்பதைத் தடை செய்யலாம் என்பதுதான். இதை
யாராவது மீறினால், அவர்களுக்கு ஒரு வருட அதிகபட்சத் தண்டனையும்,
வரையறையில்லாத அபராதமும்—எவ்வளவு வேண்டுமானாலும் போடலாம்—
போட அதிகாரம் இதிலே பெறப்படுகிறது. ஒரு வருஷ தண்டனையும், அதிக
மான அபராதமும் விதிக்கும் அதிகாரமும் யாருக்கு எதிராக நடைமுறையில்
பயன்படுத்தப்படுமென்பதை அனுபவத்தின் காரணமாகச் சொல்ல விரும்பு
கிறேன். உதாரணத்திற்குச் சொல்கிறேன். வேலை நிறுத்தத்தைத் தடை
செய்கிறார்கள். தடை செய்த பிறகும் வேலை நிறுத்தம் செய்தால், வேலை
நிறுத்தம் செய்யும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒவ்வொரு ஆண்டு அதிக
பட்சத் தண்டனை கொடுக்கலாம், வரையறையில்லாமல் அபராதம் போட
லாம். 500 ரூபாய், 1000 ரூபாய் என்றுகூட இல்லை. எவ்வளவு வேண்டு
மானாலும் அபராதம் போடலாம். இதனால் வேலை நிறுத்தம் செய்யும்
தொழிலாளி பாதிக்கப்படுவான். இப்போது ஒரு கேள்வி வருகிறது. இது



1982 ஏப்ரல் 5] [திரு. ஆ. நல்லசிவன்]

இரண்டு பேருக்கும் பொருந்தும், ஸ்டிரைக் பண்ணுகிறவர்களுக்கும் பொருந்தும், 'க்ளோஷர்' பண்ணுகிறவர்களுக்கும் பொருந்தும், சட்டத்தை நாங்கள் சமமாகத்தான் வைத்திருக்கிறோமென்று சொல்லுவார்கள். இரண்டு பேரையும் சமமாகக் கருதுவதே சரியில்லை என்று கூறுகிறவர்கள் நாங்கள். உழைப்புச் சக்தியைத் தவிர வேறு எதுவுமில்லாத இந்த மக்கள் பொருளாதார ரீதியில் பலவீனமானவர்கள். அரசு பல்வேறு பிரச்சினைகளில் பலவீனமானவர்களுக்கு அதிகச் சலுகை காட்ட, அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்களே, ஒரு தொழிலாளி, பொருளாதார ரீதியில் பலவீனமாக இருக்கும் போது, இரண்டு பேருக்கும் சமமாகச் சட்டத்தைக் கொண்டுவருவது சரியாகாது. இது சரியான சட்டம் என்று சொல்லும்போது, முதலாளி பேக்டரியை 'க்ளோஸ்' பண்ணுவதைத் தடுத்து நிறுத்த, மூடியிருப்பதைத் தவிர்க்க உத்தரவு பிறப்பிக்க அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறார்கள். 'க்ளோஷர்' என்ற வார்த்தைக்கு ஒரு அர்த்தம் இருக்கிறது. ஒரு ஆலையை மூட, திறக்க எனக்கு அடிப்படை உரிமை இருக்கிறது, ஒரு ஆலையைத் திறந்து ஓட்டத்தான் வேண்டுமென்று வற்புறுத்தக் கூடாது, ஆரம்பிக்க எப்படி உரிமை இருக்கிறதோ அதைப்போல மூடவும் உரிமை இருக்கிறது என்று சுப்ரீம் கோர்ட் உத்தரவை வாங்கியிருக்கிறார்கள். ஆகவே 'க்ளோஷர்' என்று போடும்போது, அவர்கள் சட்டத்தை மீறினாலும் தப்பித்துவிடுவார்கள். கோர்ட்டுக்குப் போய், 'க்ளோஷர்' பண்ணக்கூடாதென்று சொல்ல அரசுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது ; திறக்க அதிகாரம் இருக்கும்போது 'க்ளோஸ்' பண்ண அதிகாரம் இருக்கிறது, ஆகவே 'க்ளோஸ்' பண்ணியிருக்கிறேன், என்னைத் தண்டிக்கக்கூடாது என்று உயர்நீதி மன்றத் தீர்ப்பின் அடிப்படையிலே தப்பிவிடுவார்கள். 'க்ளோஷர்' என்பதற்குப் பதிலாக 'லாக்-அவுட்' என்று போடாமல் விட்டு விட்டார்கள். லாக்-அவுட் என்று போட்டாலும், லாக்-அவுட் பண்ணி, 'க்ளோஷர்' என்று சொல்லுவார்கள்! இதுதான் அனுபவம். லாக்-அவுட்டைத் தடை செய்ய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. நம்முடைய நாட்டிலே மூடிவிட அடிப்படை உரிமை இருக்கிறதென்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு இருக்கிறது. ஆகவே லாக்-அவுட் என்று போட்டாலே, அவர்கள் அப்படிச் செய்வார்கள். 'க்ளோஷர்' என்று போடுகிறார்கள். சட்டத்திலிருந்து அவர்கள் தப்பிவிடுவார்கள். இதிலே கவனம் இல்லாமல் போட்டிருக்கிறார்கள். உங்கள் ஆர்க்யுமென்ட்படி பார்த்தாலும், லாக்-அவுட் என்று போட்டிருக்க வேண்டும். லாக்-அவுட் என்றாலே, சட்டத்திலிருந்து தப்ப 'க்ளோஷர்' என்று அவர்கள் அறிவிப்பார்கள்.

அடுத்து இன்னொன்று. அரசு உத்தரவு போட்டு ஸ்டிரைக், லாக்-அவுட்டைத் தடை பண்ணும்போது, இடைக்கால நிவாரணமாக தொழிலாளர்களுக்குப் பணம் கொடுக்க ஏற்பாடு இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். அப்படி 10(பி)-ன் கீழ் ஸ்டிரைக், லாக்-அவுட்டைத் தடை செய்யும்போது, இடைக்கால நிவாரணத்தைப் பணமாகக் கொடுக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. அப்படி கொடுக்கலாம், அரசு விரும்பினால் கொடுக்கலாம். தொழிலுக்குத் கொடுக்க சக்தியில்லை என்று அதிகாரிகள் தவறாகக் கணித்தால் அல்லது இடைக்கால நிவாரணம் கொடுக்க வேண்டிய அளவிற்கு தொழிலாளர்கள் பாதிக்கப்படவில்லை என்று அரசு கருதினால், இடைக்கால நிவாரணம் கொடுக்காமலேயே, ஸ்டிரைக்கைத் தடை செய்யலாமென்ற நிலை இருக்கிறது. அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்தச் சட்டத்தின் சாதனையைப் பற்றிச் சொல்லும் போது இடைக்கால நிவாரணம் தொழிலாளர்களுக்குக் கொடுக்க அரசு உத்தரவிட அதிகாரம் என்று சொல்லுகிறார்களே, அப்படி கட்டாயம் கொடுக்க வேண்டுமென்று இல்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நிவாரணம் கொடுத்தாலும், 6 மாதத்திற்குள் தொழில் நீதி மன்றத்தில் கேஸ் நடந்து முடிந்தால் தான் கிடைக்கும். 6 மாதங்களுக்கு மேலே வழக்கு நடந்தால், அதற்குப் பிறகு அரசு உத்தரவிடக்கூடிய நிவாரணம் தொடர்ந்து கிடைக்காது.

(பிற்பகல் 12-20)

முதலாளியும், தொழிலாளியும் கோர்ட்டுக்குப் போய்விட்டு அதன்பிறகு இரு தரப்பாரும் நியாயம் பெற வேண்டிய நிலை இருக்கிறது. அதற்கு மேலும் ஏன் ஸ்டிரைக் பண்ணுகிறார்கள் என்றெல்லாம் விவாதம் வரலாம். ஒரு சாதாரண கேஸ் டிரிபியூனலுக்குப் போகிறது. கீழ்க் கோட்டுக்குப் போன பிறகு அங்கு முதலாளிக்குச் சாதகமாக இல்லாவிட்டால், ஹைகோர்ட்டுக்கு ரிட் அப்பீலுக்குப் போகிறது. அங்கும் அவர்களுக்குச் சாதகமாக இல்லாவிட்டால் ரிட் பென்சுக்குப் போகிறது. அங்கும் சாதகமாக இல்லாவிட்டால், சுப்ரீம் கோர்ட்டுக்கு ரிட் அப்பீலுக்குப் போகிறது. அங்கும் முதலாளிக்கு பாதகமாகத் தீர்ப்பு வருகிறது என்றால், சுப்ரீம் கோர்ட்டு பென்சுக்குப் போகிறது. சாதாரணமாக ஓரிடத்தில் நடக்கிற ஒரு தகராறு கூட சுப்ரீம் கோர்ட்டு வரை போவது சரிதானா? மாண்புமிகு அமைச்சர் ஒரு காலத்தில் தொழிற் சங்க வாதியாக இருந்தவர். இதனால் தொழிலாளிக்கு எவ்வளவு தொல்லைகள் ஏற்படும் என்பதும் அவருக்கு நன்றாகத் தெரியும். இப்படி



கோர்ட்டுக்குப் போய் பல ஆண்டுகள் அது இழுத்தடிக்கப்பட்டால், அவனுடைய நிலைமை என்ன ஆகும்? கட்டாயமாக வருகின்ற மத்தியஸ்தத்தை, தொழில் கோர்ட்டை நாங்கள் ஏற்றுக்கொள்ளாததற்குக் காரணம் இது தான். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தொழிற் சங்க வாதியாக இருந்தவர் என்கிற அடிப்படையில் நான் அவர்களை ஒன்று கேட்கிறேன். வேலை நிறுத்தத்தைப் பயன்படுத்தி போரத்தின் மூலம் இவ்வளவு பெற முடியுமா என்று சிந்திக்கிற நிலைமைகள் ஏற்பட்டுவிடக் கூடாது. 'கையில் இருக்கிற ஒரு பறவை புதரில் இருக்கிற இரண்டு பறவைகளை விட நிச்சயமானது' என்கிற அடிப்படையில், தொழிலாளர்கள் மாண்டு போனால் கூட, அவனுக்கு நியாயம் கிடைக்காது என்கிற நிலை இதனால் வருகிறது. அன்றாடம் ஏதாவது கிடைத்தால்தான், அவன் குடும்பம் வாழ முடியும் என்கிற நிலையில் இருக்கும் அவன் சுப்ரீம் கோர்ட் வரை போகிறான் என்றால், அதுவும் 4 ஆண்டுகள் 5 ஆண்டுகள் என்று ஆனால், அவன் நிலை என்ன ஆகும்? அவன் சுப்ரீம் கோர்ட் வரை போய் அங்கே காத்திருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். நான் இதைக் கேட்கக் காரணம் இருக்கிறது. சட்டத்திற்குக் கட்டுப்பட மாட்டோம், நடுநிலைத் தீர்ப்புக்குக் கட்டுப்பட மாட்டோம் என்கிற நிலையில் இருந்து கொண்டு நான் இதைச் சொல்லவில்லை. ஆனால் தொழிலாளர் பிரச்சினை பல ஆண்டுகளாகக் கோர்ட்டுகளில் இழுத்தடிக்கப்படுகிறது.

அடுத்து, ஸ்டிரைக் என்றால் உற்பத்தி பாதிக்கப்படும் என்று இன்றைக்குச் சொல்கிறார்கள். ஸ்டிரைக் என்றால் நிச்சயம் உற்பத்தி பாதிக்கத்தான் செய்யும். வர்க்கப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த நாட்டிலே ஸ்டிரைக் நடக்காமல் இருக்குமா? உற்பத்தி பாதிக்கப்படும் என்று மத்திய அரசும் மாநிலங்களில் இருக்கக்கூடிய அரசுகளும் இன்றைக்குக் கூறுகின்றன. நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்றால், ஏன் கான்ஸ்டிட்யூஷனில் 'ஸ்டிரைக் கூடாது' என்று சொல்லவில்லை என்பதைத்தான். இதைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும் மத்திய அரசு, மாநில அரசுகள் உட்பட. எல்லாத் தொழிற்சாலைகளிலுமே ஸ்டிரைக் பண்ணுகிற உரிமை தொழிலாளர்களுக்கு இருக்க வேண்டுமென்று தான் கான்ஸ்டிட்யூஷன் சொல்கிறது என்பதை இதிலிருந்து அறிந்து கொள்ளலாம். உழைப்பது தவிர அவர்களுக்கு வேறு உரிமை ஒன்றுமில்லை என்று இப்போது சொல்வது நியாயம் தானா? உழைப்பது மட்டும் தான் தொழிலாளர் கடமை, உரிமை ஒன்றுமில்லை என்று நம்முடைய அரசியல்

[திரு. ஆ. நல்லசிவன்] [1982 ஏப்ரல் 5

சட்டத்திலேயே சொல்லவில்லையே. இன்று வேலை செய்தால் தான் அவன் குடும்பம் நாளை சாப்பிட முடியும் என்கிற நிலைமையில் இந்த ஏழைத் தொழிலாளி இருக்கிறான் என்பதற்காக அவனுக்கு ஸ்டிரைக் செய்யும் உரிமை கிடையாது, வேறு எந்த உரிமையும் கிடையாது என்று சொல்லப்படும் வாதம் சரிதானா? உற்பத்தி என்று சொல்லும்போது, அங்கே ஸ்டிரைக் வந்தால், நிச்சயம் உற்பத்தி பாதிக்கப்படும் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று தான். அப்படி என்றால் இதை அரசியல் சட்டத்தில் ஏன் இன்னும் அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள்? இதற்குப் பதில் சொல்ல வேண்டும். ஸ்டிரைக் செய்ய தொழிலாளிக்கு உரிமை இருக்கிறது. ஆனால் மாநில அரசு தனக்கு இருக்கிற அதிகாரத்தை அவனுக்கு எதிராகப் பயன்படுத்துகிறது? இன்றைக்கு அவன் பல கோர்ட்டுகளுக்கு, ரிட்டுகளுக்கு, பெஞ்சுகளுக்கு எல்லாம் அலைந்து நான்கைந்து ஆண்டுகள் காத்திருந்து, அதன் பிறகு அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது.

நான் இந்த அரசுக்கு என்ன சொல்கிறேன் என்றால் வெஸ்ட் பெங்காலில் 5 வருடக் காலம் கம்யூனிஸ்ட் கட்சி நடத்தியபோது என்ன நிலைமை, அதற்கு முன்பு என்ன நிலைமை இருந்தது போன்ற விஷயங்களை இந்த அரசு 'ஸ்டடி' பண்ணி 'கம்பேர்' பண்ண வேண்டும். அப்படி 'கம்பேர்' பண்ணினால், நிச்சயம் இப்போது தொழில் தகராறுகள் குறைவாக இருக்கின்றன என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். இன்றைக்கு தொழிலாளர்கள் அதிகமான அளவு சலுகைகளை பெறத் தக்க அளவில் ஒரு பெரிய சாதனையையே செய்திருக்கிறார்கள். இது குறித்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் லேபர் டிபார்ட்மென்ட் மூலம் ஆய்வு நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு பல விஷயங்களில் நம் மாநிலம் முன்னேறியிருப்பதாகச் சொல்கிறார்கள். இதுபற்றி இன்னொரு ஆர்கியூமென்ட் கூட இருக்கிறது. சில சமயங்களில் ஸ்டிரைக்கை ஆரம்பித்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். முதலாளிகள் இறங்கி வரத் தயாராக இல்லை. இப்படி மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இதே அவையில் ஒரு கருத்தைச் சொல்லிவிட்டு மேலும் ஒரு உதாரணத்தைச் சொன்னார்கள். 'ஏறியவர்கள் பிறகு இறங்க முடியாமல் வழி தேடுகிறார்கள்' என்கிற முறையில் ஒரு அடிப்படை இல்லாமல் ஸ்டிரைக் நடத்துகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், அப்படி



1982 ஏப்ரல் 5] [திரு ஆ. நல்லசிவன்]

தொழிலாளர்கள் ஸ்டிரைக் நடத்துகிறபோது, தொழிலாளியால் ஸ்டிரைக்கைத் தாக்குப் பிடிக்க முடியவில்லையென்றால், 10 (ஏ)-ன் கீழ் அவர்களுக்கு டிபான்சைத் தந்தால் போதும். ஆனால் 10 (பி) யின் கீழ் தடை என்கிற விஷயத்திற்குப் போனால் தான், அவர்களுடைய உரிமை பாதிக்கப்படுகிறது. ஆகவே நடைமுறையில் நாம் என்ன தான் விளக்கம் சொன்னாலும், இந்த ஷரத்து தொழிலாளர்களின் வேலை நிறுத்த உரிமையை வெகுவாகப் பறித்து விடும்.

அடுத்து, நம்முடைய அரசு இன்றைக்கு நாட்டிலே தொழிலாளர்கள் போராடக் கூடாது, வாதாட வேண்டும் என்று சொல்கிறது. எந்த ஒரு ஸ்டிரைக்கையும் அரசுக்கு எதிரானதாக அரசு கருதுகிறது. வேலை நிறுத்த உரிமை தொழிலாளர்களுக்கு உண்டு என்றால், அதற்கு நேர் எதிராக நம்முடைய அரசு செயல்படுகிறது. நான் கேட்க விரும்புவது, தொழிலாளர்களின் உரிமைகளுக்காக அவர்கள் போராட வேண்டிய அவசியமில்லை என்று சொல்வது சரிதானா? வேலை நிறுத்த உரிமை என்பது அரசியல் சட்டத்திலேயே அங்கீகரிக்கப்பட்ட ஒன்று. இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று. வேலை நிறுத்தம் செய்வதைத் தடை செய்கிற அதிகாரத்தை மத்திய அரசே கூட இன்னும் பயன்படுத்தவில்லை. அப்படி இருக்க, நம்முடைய மாநில அரசு இதைக் கொண்டு வருவது முறைதானா? இப்படி ஒரு திருத்தச் சட்ட முன்வடிவு கொண்டு வந்து, வேலை நிறுத்தத்தைத் தடுத்து, அதன் பிறகு பேரம் பேசுகின்ற நிலைமை வருவதும் தொழிலாளர்களின் உரிமையைப் பறிப்பதும், பிடுங்குவதும் சரிதானா? அதன் மூலம் அவர்கள் பல ஆண்டுகள் கோர்ட்டுகளுக்குப் போய் அலைந்து காத்திருக்க வேண்டிய அவசியம் தேவை தானா? மத்திய அரசு இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால் இன்டியா லேபர் மத்தியில் கோபம் ஏற்படும் வகையில் என் நடந்துகொள்ள வேண்டுமென்ற உணர்வின் அடிப்படையில் கொண்டு வரவில்லை. இன்றைக்கு இந்த அரசு தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்வதைத் தடை செய்யக்கூடிய அளவில் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது. அதுவும் தொழிலாளர்களுக்கு இழப்பீடு ஒன்றும் கொடுக்காமல் இப்படிக் கொண்டு வருவது எந்தவிதத்திலும் பொருத்தமில்லை.

இன்றைக்கு 'ஆர்கனைஸ்ட் லேபர்' என்று சொல்லி அவர்களுக்குச் சில சலுகைகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் 'அன்-ஆர்கனைஸ்ட் லேபர்' எல்லாம் 'ஆர்கனைஸ்ட் லேபர்' ஆகி, அப்படிப்பட்ட நிலையில்

அவர்கள் ஸ்டிரைக் செய்வதைத் தடை செய்தால், அதனால் பல வர்க்கப் போராட்டம் ஏற்பட்டுவிடும். இன்றைக்கு அரசில் இருப்பவர்கள் செல்வாக்கில், உயரத்தில் இருப்பதால், இதையெல்லாம் உணரவில்லை என்று நான் கருதுகிறேன். உழைக்கும் மக்கள் தான் என்றைக்கும் கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள். 'அன்-ஆர்கனைஸ்ட் லேபர்' எல்லாம் 'ஆர்கனைஸ்ட் லேபர்' ஆக ஆகும்போது, நிலைமை வேறு. ஆனால் இப்போது இப்படிப்பட்ட ஒரு நிலைமைக்கு அரசு வந்திருக்கக் கூடாது. இதன் இழிவை ஒருகால் தொழிற் சங்கத்தில் இருப்பவர்களால் தான் உணர முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருகாலத்தில் தொழிற் சங்கத்தில் இருந்தவர்கள். அவர்களே, இதைப்பற்றி நன்றாக உணர்ந்தவர்களே, இதைக் கொண்டு வந்திருப்பதால்தான், நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன், இது சரியில்லை. இது தமிழ் நாட்டு உழைப்பாளர்களை இந்தச் சட்ட முன்வடிவின் மூலம் மக்கள் மத்தியிலிருந்து தனிமைப்படுத்திவிடும். மத்திய அரசு கூட இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டுவர முன்வரவில்லை. ஆகவே இந்த அரசு கொண்டு வந்திருக்கும் இந்தச் சட்ட முன்வடிவை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, L.A. Bill No. 23/1982, the Tamil Nadu Manual Workers (Regulation of Employment and Conditions of Work) Bill is not really a Bill, as the honourable Member Thiru Jeppiyar pointed out, only for the organised sector. I think the real purpose of the Bill is to introduce de-casualisation of labour in various employments. It is a very important Bill as many sections of the House have requested that some sort of a Bill should be brought forward to protect employment in certain scheduled employments. But my worry is that in bringing forth this Bill, the Hon. Minister has ignored all conventions in the sense that this is the first Bill of its kind being introduced in Tamil Nadu.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: சட்ட முன்வடிவு நன் நிறைவேறும் வரை அவையின் அனுமதியுடன் அவையின் நேரம் நீட்டிக்கப் படுகிறது.



THIRU A. R. DAMODARAN: It is an enabling Bill which will enable the Government to notify any employment as noted in the schedules. This being such an important Bill I would have infinitely preferred the Hon. Minister to have referred this to a Select Committee, not with the intention of blocking this enabling measure, but to see whether there are any other enactments in other States which are close parallels to this Bill, to study it in depth and to examine every clause in depth because I believe that it will have tremendous repercussions in Tamil Nadu. For example, one such measure which was introduced by the Government of India, called the Dock Workers (Regulation of Employment) Act, 1948, is really one of the measures which could have been passed as such an enabling measure. It is for that reason that I gave notice of a motion that this be referred to a Select Committee. Frankly, I do think that the present policy of the Government in rushing through such measures in the Legislature without adequate debate and without receiving adequate representations from the various sectors involved may involve the Government themselves in difficulties at a later date. I hope that, eventhough this measure may not be referred to a Select Committee, other measures which are introduced under this enabling measure will be referred to Select Committees because we require widespread public opinion to be reflected in such measures.

Sir, many of the provisions of this Bill have been lifted from Acts in other States and new provisions have also been introduced which require detailed examination and scrutiny. One of the most remarkable features of this Bill is the sweeping powers of notification which have been given in the Bill which indicates an excessive delegation of power which is not warranted in the circumstances. In my opinion, such extensive powers of notification given to the Government will lead not only to use but also to abuse of powers and it is also an encroachment on legislative authority. For example, in this Bill, in clause 1, sub-clause (3), it has been stated that this Bill shall come into force on such date as the State Government may by notification appoint and that different dates may be appointed for different

areas, for different employments and for different provisions of the Act. I would have liked the Hon. Minister to explain this. I do not know whether he has already done it by way of an explanatory statement or whether he has merely introduced the Bill. I was not here when he moved the Bill and I am sorry I was not here. But, I think we are entitled to know what is the meaning of this enactment which says that he could have it for different areas—to have it on different dates is accepted in various enactments—and for different employments and also for different provisions of the Act. In other words, I presume that he can introduce it in a part of Madras City and say that it will not apply to another part of Madras City also. If that is my understanding, then, I do not think this power could be given to the Government at all. It should remain with the Legislature. I wish the Hon. the Minister for Law and Co-operation had been here. When we studied the Co-operative Societies Act in the Joint Select Committee, it was made very clear that many of the rules and notifications made under the Act were contrary to the provisions of the Act and many Members felt that such extraordinary power should not be given to the Government.

Sir, the clauses relating to the composition of the Board, the Advisory Committees, etc., are all general clauses contained in the Dock Workers (Regulation of Employment) Act. In fact, many of the clauses, as I said, have been taken from this Act. But. one new addition is that, under sections 20, 21, 22 and 23, the Government have made many other enactments applicable to such scheduled employments which they can notify. I believe, that while the Minimum Wages Act is applicable even today to shops and establishments, where organised labour does not exist, I am unable to understand why a special section is required to include it in this Bill. I agree that the Workmen's Compensation Act is required, particularly as my hon. Friend pointed out, for the building construction workers. But, going through the schedule, I find that powers have been taken in relation to employment in connection with loading, unloading, stacking, packing, carrying, weighing, measuring or such other manual work including work preparatory or incidental to such operations.





I think, the Hon. Minister has been too ambitious in trying to introduce into this schedule all those employments, which, I know, he may not be able to implement without bringing a legislation. Even if he brings any legislation, I would like to remind him that in the case of the Provident Fund Act, the Employees' State Insurance Act, the Bonus Act, etc., the Central Government have taken care to see that originally when they introduced the enactments, they said that it would apply to only factories and establishments where more than 50 persons were employed. Here the Hon. Minister says that he is going to make it applicable to markets, shops, depots, and shandies—an impossibility. Is he going to have de-casualisation of labour in the case of lorries being unloaded in Kothwal Market? Is he going to de-casualise all these workers? If he is going to say that they shall register themselves with a particular Board and that they will be called upon and employed in such operations, then I would like to tell him that he is introducing far greater danger in the field of industrial relations than what is existing today. On the one hand, may hon. Friend talked of organised labour holding the society to ransom. I will not comment on that philosophy excepting to say . . . . .

THE HON. THIRU S. RAGHAVANANDAM: The hon. Member has never said that organised sections are holding the society to ransom. He has never said so.

THIRU A. R. DAMODARAN: The hon. Member was saying that the organised sector among the workers were getting more recognition and the consumers were suffering. My understanding was like that and Thiru Nallasivan will also agree with me. I am not commenting on that philosophy and I will leave it to both of them.

THE HON. THIRU S. RAGHAVANANDAM: It is not in that way. What he said was that the organised labour should also take care of the unorganised persons who bring them meals. They should also extend their sympathy to the unorganised workers who bring meals to them. He said that in good faith.

[1982 ஏப்ரல் 5

THIRU A. R. DAMODARAN : I hope the Hon. Minister who has been a leader of trade union will be able to extend this to his domestic servants. We will pay only Rs. 50 to our cooks and we do not bother about them at all.

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு சட்டம் கொண்டுவருவது பற்றி அரசு பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. ப. மாணிக்கம் : 'Good faith' என்பது கண்ணோட்டத்தில் அமைந்ததா அல்லது அந்தரத்தில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலையில் சுமந்து சோறு கொண்டு வருகிற தொழிலாளர்களுக்கும் போனஸ் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் சொன்னார். அதுதான் நல்லெண்ணம்.

THIRU A. R. DAMODARAN : Sir, unlike the Hon. Minister, I do not agree that it should be extended to domestic workers. If the Government want to achieve this, they want to achieve something in two years which cannot be achieved even in a decade and the Government will not only fail miserably but will introduce far-reaching consequences in society. If at all the Government pass any enactment, it should be restricted to employments where more than 50 labourers are employed. The implementation machinery is not available with the Government. If you say that every sector is going to be brought under scheduled employments, it will lead to a situation such as the one that existed in Kerala in respect of the 'attimari' workers where the lorries could not be unloaded and the entire society was put to certain difficulties because of the pressure-tactics that were followed. I agree that there are certain industries like the construction industry where more than fifty people . . . .

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கேரளத்தில் இருக்கிற "லோடிங் அண்டு அன்லோடிங்" தொழிலாளர்கள் ஒரு சங்கம் வைத்துக்கொண்டு, விலைவாசி ஏற்றத்திற்கு



1982 ஏப்ரல் 5] [திரு ஆ. நல்லசிவன்]

உரிய வகையில் தாங்கள் கண்ணியமாக வாழ்க்கை நடத்த தங்களுக்குச் சம்பளம் தர வேண்டும் என்று போராட்டம் நடத்தியது தவறு என்று குறிப்பிடுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

THIRU G. SWAMINATHAN : Having come after a recent visit to Kerala, may I say that the earning of an 'attimari' worker there is round about Rs. 4,000 per month? So, the professors and others following other professions are now grumbling that their salaries are much less than the earnings of 'attimari' workers.

(பிற்பகல் 12-40)

திரு. ஆ. நல்லசிவன் : துணைத் தலைவர் அவர்களே, ஆர்கியூமெண்டுக்காகப் பேசுகின்றபோது, கேரளாவிலே இருக்கின்ற அட்டிமாரி ஒர்க்கர்ஸ் நான்காயிரம் ரூபாய் சம்பாதிக்கிறார்கள் என்று சொன்னால், பிறகு எல்லோரும் அப்படி மாறிவிடலாமா என்று தோன்றும். அந்த 'எக்ஸ்ட்ரீம்' லெவலுக்குக் கொண்டு போவது சரியல்ல. அட்டிமாரி தொழிலாளர்கள் அதிகமாக வாங்குகிறார்கள் என்பது சரி. ஆனால் நான்காயிரம் ரூபாய் சம்பாதிக்கிறார்கள் என்பது 'கன்விக்ஷன்' ஏற்படுத்துவது மாதிரி தெரியவில்லை.

THIRU G. SWAMINATHAN : Sir, the earning of an 'attimari' worker there is between Rs. 150 and Rs. 200 per day. That is what they say. Most of the people there want to become 'attimari' workers. But they could not do so because work is not available there.

THIRU A. R. DAMODARAN : We need not go as far as the 'attimari' workers. In fact, in Cuddalore, today, to unload one cement lorry, four persons charge Rs. 30, and they clear the ten tonnes in one hour. If they work for about eight hours in a day, you can imagine what four workers will make per day. Whether it is large or small depends upon the opinion of the Members and what type of political philosophy they have. But, my point is this.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :* மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மாதிரியே ஒரு நாளைக்கு 500 ரூபாய் சம்பாதிப்பதாக வைத்துக் கொள்வோம். வியாதி வந்து ஒரு மாதம் படுக்கையில் படுத்துவிட்டால், அவருக்கு 'புரொடெக்ஷன்' கிடையாது. அதைக் கொடுப்பதுதான் இந்தச் சட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

*திரு. ஆ. நல்லசிவன் :* எவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்பதை மட்டும் பொறுத்ததல்ல இது. சிமெண்ட் கொண்டு வந்து விற்பனை செய்கிறார்கள் என்றால், அதிலே லாபம் எவ்வளவு என்பதைப் பார்க்க வேண்டும். அட்டிமாரி தொழிலாளர்களுக்கு நிறைய கொடுக்க முடிகிறதென்றால், அவர்களால் எப்படிக் கொடுக்க முடிகிறது? சிமெண்ட் வியாபாரம் செய்பவர்களுக்கு எவ்வளவு மார்ஜின் கிடைக்கிறது என்பதைப் பார்த்து அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும்.

THIRU A. R. DAMODARAN : This we will argue, because if we go into the profitability of each trade, it will be very difficult to pinpoint what I am trying to pinpoint. If both my hon. Friends keep on talking of organising unorganised labour from agricultural labour down to every other sector in our country, we will reach a situation where the person who will suffer most is neither the trader nor the trade-unionist but the consumer. If today the consumer is being fleeced in every section and if today steel, cement, fertiliser and everything is being sold at such high prices, please remember that ultimately the burden of the cost of all the Employees' State Insurance. Workmen's Insurance, etc.—I am not saying that it should not be done but you should be prepared to face this fact—will have to be borne by the consumer.

*திரு. ஆ. நல்லசிவன் :* துணைத் தலைவர் அவர்களே, பொருள்களுடைய விலை அதனால் உயர்ந்து கொண்டு போகின்றது என்று சொல்லுகிறார்கள். தொழிலாளி அதிகமாகச் சம்பளம் வாங்குவதால் தான் விலை ஏறுகிறது என்று சொல்லுகிறார். அப்படியானால் சென்ட்ரல் கவர்ண்மெண்ட் சாமான்களுக்கு வரியைப் போடும்போது, என்ன அடிப்படையிலே போடுகிறார்கள்? அப்போது எந்த கிரீவென்சும் இல்லாமல், முணுமுணுக்காமல் கொடுக்கிறார்களே! தொழிலாளி வாழ்க்கைச்



செலவைச் சமாளிப்பதற்காக சம்பளம் கேட்கும்போதுதானா சிமெண்ட் விலை கூடுதலுக்குக் காரணமாகிறது? அது நியாயமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

THIRU A. R. DAMODARAN : I am sorry. I did not say that. I am equally against all excise duties. But, labour costs are also a component of the ultimate production-cost. If you take paddy, for example, 35 per cent of the cost of production of paddy goes towards labour-cost. If you want Rs. 15 to be paid as the minimum wage for agricultural labour and to give the agricultural labourer various benefits like bonus, Employees' State Insurance, Medical Insurance, etc., I am willing. But you must be prepared to give Rs. 160 per quintal of paddy. You cannot squeeze the producer and say, 'You should continue to get only Rs. 115 and please the Hon Minister by giving Rs. 40/- per quintal as labour-benefits'. It goes against all economic wisdom. That is why I want to point out that while I welcome all your provisions, please bear in mind that every one of these benefits that you are going to give to labour will ultimately rest on the consumer. Sixty per cent of the consumers in Tamil Nadu are, according to the Government's own classification below the destitute line. How are the Government going to provide . . . . .

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :* நான் ஒரு எக்கானமிஸ்ட் அல்ல. ஊதிய உயர்வினால் எந்தத் துறை பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஒரே ஒரு விளக்கம் சொன்னால், நான் பதில் சொல்ல உதவியாக இருக்கும்.

THIRU A. R. DAMODARAN : The Government themselves are refusing to grant increased pay to their own Government servants. The Government are against the increase of pay to their Government servants on the ground that they will not be able to look after the persons who are in the destitute sector. The Government can use that argument as an employer. Why not the other employers use that argument? I do not understand the logic. The Government say that taxes will be increased, if an increase of Rs. 10 is given to their 7½ lakh employees. I

am only saying that in every industry, the labour cost is also an important component. While I do not object to the inclusion of certain schedule employments, the Government must restrict it to establishments employing 50 or 100 persons. If it is to apply to establishments employing 10 or 15 persons, the Government will never be able to implement it. I only wish to point out that when important measures like this are considered, it would be better if they are referred to Select Committees because many of the provisions require some revision. For example, when an Inspector gives a notice under section 17, a reply is required to be given within 7 days. This is impossible for any management to furnish. I do not think we can furnish a reply within 7 days because it requires consultation. There is no point in fixing such a short time-limit. This is one of the defects I wish to point out. I am not going into it in detail. If the Bill is referred to a Select Committee, we will go into it clause by clause. I think the Labour Minister told us that the Hon. the Chief Minister was very much interested in this legislation. It has become a habit that when the Chief Minister is interested in some legislation, immediately the Ministers jump at it. The other day the Hon. the Labour Minister said that he would jump at it because the order had been given. What is to happen to all of us in the Legislature if both of them frame an Act like this in consultation with three or four bureaucrats and see that the legislation is passed in 15 or 20 minutes ? I do not think it is fair to the Legislature and I end with the plea that we must refer such important measures to the Select Committee. Thank you.

திரு. ப. மாணிக்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இரண்டு சட்ட முன்வடிவுகள், சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, நம் முன் வந்திருக்கின்றன. சட்ட முன்வடிவு 23/1982-ன் நோக்கம் நல்ல நோக்கம், வரவேற்கக்கூடியதுதான். ஆனால் இதை நிறைவேற்றுவதிலே ஏராளமான சிரமங்கள் இருக்கின்றன. எடுத்த எடுப்பிலேயே சொல்லுகிறேன், நோக்கத்தைப் பாராட்டுகிறேன், நோக்கத்தைப் பற்றிக் கேள்வி கேட்கவில்லை. இந்தியாவில் எடுக்கப்படும் நடவடிக்கைகளின் நோக்கத்தைப் பாராட்டுவதாக இருந்தால், இந்திய மக்கள் யாருக்கும்



பிரச்சினைகளே இருக்க முடியாது. அவ்வளவு நல்ல நோக்கத்தோடு பல காரியங்கள் நடந்திருக்கின்றன. நல்ல நோக்கத்தோடு நிறைவேற்றத் தானோ என்னவோ மக்களுடைய ஏழ்மை, துன்பம் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. நல்ல நோக்கத்தினுடைய விளைவு இதுதானோ என்னவோ !

இத்தகைய சட்ட முன்வடிவுகளை அரசு கொண்டுவரும்போது, இதனுடைய நோக்கத்தை நிறைவேற்ற என்ன வழிவகை செய்ய வேண்டும் என்பதிலே சிறிது விழிப்பும், நிதானமும் காட்ட வேண்டும். இதிலே அளவிற்கு மீறி உற்சாகம் காட்டுவதால், சிறிய அளவிலே தொழில் செய்யக் கூடியவர்களுக்கு நிர்ப்பந்தம், சங்கடம் வரக்கூடிய ஆபத்து இதிலே உள்ள விதிகளில் அமைந்திருக்கின்றன. ஆகவேதான் உஷார் தன்மை தேவையென்று சொல்லுகிறேன். இதிலே இரண்டு, மூன்று அம்சங்களை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவது அவசியம் என்று கருதுகிறேன்.

பிரிவு 18-ல் குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதைத் தடை செய்வது சம்பந்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது "no child shall be required or allowed to work in scheduled employment" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது இது மிகப் பரந்த நோக்கம் என்பதை இப்போதும் சொல்லலாம், இரண்டாயிரம் ஆண்டு ஆனாலும் சொல்லலாம், நூறு ஆண்டுகள் கழித்தும் சொல்லலாம். ஆனால் நடப்பிலே குழந்தைகள் வேலை செய்கிறார்கள் நம்முடைய மாநிலத்தில் குழந்தைகள் உழைப்பு பற்றி ஓர் அறிக்கையை திரு. ஹர்பன் சிங் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதைப் படிக்க முயற்சி எடுத்தேன், ஆனால் கிடைக்கவில்லை. அதைப் படித்துத்தான் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதல்ல. குறிப்பாக சிவகாசியில் பட்டாசுத் தொழிற்சாலைகள், தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் வேலை செய்த எத்தனை குழந்தைகளின் உயிர் போயிருக்கிறது என்ற விவரங்களை அறிந்திருக்கிறோம். இன்னும் பல இடங்களிலே குழந்தைகள் உடல் உழைப்பிலே ஈடுபடுத்தப்படுகிறார்கள். இது ஒரு சமூகப் பிரச்சினை. அவர்கள் குழந்தைகளை எப்படி நடத்துகிறார்கள் என்பது வேறு

(பிற்பகல் 12-50)

பிரச்சினை. ஆனால் அவர்கள் ஏன் வேலைக்கு வருகிறார்கள் என்பது சமூகப் பிரச்சினையாக இருக்கிறது. சில பகுதிகளில் அந்தக் குழந்தைகள் உழைத்துத்தான் அந்தக் குடும்பங்கள் வாழ வேண்டுமென்ற நிலை இருக்கிறது.

எனவேதான், அரசினுடைய நிலையைக் கேட்டால், அரசு நடுநிலை வகிக்கிறதென்று சொல்லுவார்கள். முதலாளிக்கும், தொழிலாளிக்கும் நடுவிலே இருப்பதுதான் அரசின் நிலை என்று விளக்கம் வரும். ஆனால் குழந்தைகள் விஷயத்திலே அரசு வெளியிட்ட அறிக்கையைக் கூட பார்ப்பதற்கு அவை உறுப்பினர்களுக்கு வாய்ப்பில்லை. ஒருமுறை நான் கேட்டபோது, அறிக்கையின் சுருக்கம் தரப்படுமென்றுதான் சொல்லப்பட்டது. ஆனால் அறிக்கை எங்களுக்குக் கிடைக்கவில்லை. அந்த அறிக்கை, அரசு அதிகாரி சமர்ப்பித்த அறிக்கை. அவை உறுப்பினர்கள் அதைப் படிக்க வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நூலகத்தில் அதைப் படிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதில் கொடுத்துள்ள பல யோசனைகளை நிறைவேற்றுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறதென்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பல்வேறு பகுதிகள் போடப்பட்டிருக்கின்றன. நான் சில விஷயங்களுக்குப் பதில் சொல்ல விரும்பாவிட்டாலும் வாதத்தில் ஒன்றிரண்டு கிளப்பப்பட்டிருக்கின்றன. நம்முடைய அமைச்சரவர்கள் ஒரு விளக்கம் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் நல்ல நோக்கத்தில் சொன்னார்கள். அது நல்ல நோக்கமென்பதை ஏற்கிறேன், அங்கீகரிக்கிறேன், மனதாரப் பாராட்டுகிறேன். எந்த நோக்கமானாலும், அதற்கு அடிப்படை வேண்டாமா ? நோக்கத்திற்கு அடிப்படை வேண்டும். நல்ல அடிப்படை என்று சொல்லும்போது, ஒரு உதாரணம், டி.வி.எஸ்., லேலண்ட் போன்ற தொழிற்சாலையில் வேலை செய்யும் உயர் சம்பளத்தை வாங்கக்கூடிய தொழிலாளி அவனுக்கு உணவு சுமந்துவரும் வயதான தாய்க்கு போனஸ் தருவது பற்றி சிந்திக்கவில்லை என்று சொன்னார்கள். நல்ல எண்ணம். வடலூர் இராமலிங்க அடிகள் இதைப்பற்றி, நன்றாக அழகாகப் பாடியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் பேசும்போது, இராமலிங்க அடிகள் கருத்து மாதிரி . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** பாட்டைக்கூட இரண்டு வரி சொன்னால் நன்றாக இருக்கும்.

**திரு. ப. மாணிக்கம் :** தலைவரவர்களே, பாட்டை பிறகு பாடலாம். இப்போது பாட நேரமில்லை. எனவே நல்ல எண்ணத்திலே சொன்னார் அவர். அதனால் உணவு சுமக்கும் தாய்மார்கள் துன்பப்படுகிறார்கள் என்று சொன்னார்கள்.



தொழிலாளர்களை அடித்து நொறுக்கும்போது கொஞ்சம் மனம் வாடக் கூடாதா ? ஊர்வலம் போகிற தொழிலாளர்களின் மண்டை பிளக்கும்போது—ஊர்வலம் சரியோ, தப்போ—அப்படிப் பாடியிருந்தால், இராமலிங்க அடிகள் மாதிரி வாழ்கிறார் என்று சொல்லலாம். இது ஒன்றுக்கு மாத்திரம் தாய்மார்கள். தாய்மார்களுக்கு போனஸ் தர வேண்டும், சம்பளம் கூட்ட வேண்டுமென்று நாங்கள் சொல்லத் தயார். சொல்லுகிறோம். சிலர் கொடுக்கிறார்கள். எல்லோரும் போனஸ் தருவதில்லை. அவர்கள் சங்கம் வைக்காததால்தான் போனஸ் இல்லை என்றல்ல. அன் ஆர்கனைஸ்ட் லேபர் சங்கத்தைத் தமிழ் நாட்டில், இன்னும் சொல்லப்போனால் இந்தியாவில், துவக்கியவர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சிங்காரவேலுச் செட்டியார், சென்னையைச் சேர்ந்தவர். அவர்கள் அன்ஆர்கனைஸ்டு லேபருக்கு வேலை செய்திருக்கிறார்கள். அவர் பெயராலே ஒரு போட் கட்டும் நிலையம்தான் இருக்கிறது, பர்ஸ்ட் லைன் பீச்சிலே. பலர் அவரை மறந்திருக்கலாம். வரலாற்றில் அவருக்கு இடமுண்டு. அன்ஆர்கனைஸ்டு லேபருக்குத் தொழிற் சங்கம் ஆரம்பித்தார். எனவே அவரை எல்லோரும் சொந்தம் கொண்டாடலாம், கம்யூனிஸ்ட் சொந்தம் கொண்டாடலாம், காங்கிரஸ் சொந்தம் கொண்டாடலாம். தொழிலாளர்கள் சொந்தம் கொண்டாடலாம். நமக்கு சொந்த பந்தங்கள் ரொம்ப அதிகம். இதுபோன்று அன்ஆர்கனைஸ்டு லேபருக்கு பல முயற்சிகள் செய்யப்பட்டன. தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட் இயக்கத்தைக் கட்டி வளர்த்த காலஞ்சென்ற ஜீவானந்தம் அவர்கள்கூட, இன்னும் பழைய காலத்தில் ஸ்ரீனிவாசன் போன்றவர்கள் எல்லாம் மூக்குப்பொடித் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள், பனை மரம் ஏறுவோர் ஆகியோர்களுக்குச் சங்கம் வைத்துப் போராடினார்கள். தமிழ் நாட்டில் பனை மரத் தொழிலாளர்களும், மூக்குப் பொடித் தொழிலாளர்களும் போராட்டம் முதலில் நடத்தினார்கள். ஆனால் அன்ஆர்கனைஸ்டு லேபருக்கு சட்டம் வேண்டுமென்று சொல்லும்போது, பகுதி பகுதியாகப் போட்டிருக்கிறோம். இப்போது முழுமையாகக் கொண்டு வந்திருக்கிறோமென்றாலும்கூட, திரும்பவும் சொல்கிறேன், நல்ல சட்டமாக இருந்தாலும், நோக்கம் மாத்திரம் நன்றாக இருந்தால், பயன்படாது. இதை நிறைவேற்றுவதிலே அரசு உதவிகரமான நிலையிலே இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் லேபர் காஸ்ட் அதிகரிக்குமென்று சொன்னார்கள். அது வேறு பிரச்சினை. இதை எப்படி நிறைவேற்றலாம் ? இன்னொரு கோணத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஒன்றைக் கிளப்பிவிட்டுப்

[திரு. ப. மாணிக்கம்] [1982 ஏப்ரல் 5

போய்விட்டார்கள். அத்திமாரி ஒர்க்கர்சுக்கு 4,000 ரூபாய் சம்பளம் என்று சொன்னார்கள். எப்போதுமே வாதத்திற்கு எதிர்வாதம் உண்டு. நல்லதிற்கும் எதிர்வாதம் உண்டு. வாதம் என்ற அடிப்படையிலே பேராசிரியர்கள் கூட 2,000, 4,000 ரூபாய் வாங்கவில்லை என்று சொல்வதில் பிரயோசனமில்லை. கொத்தவால் சாவடியில் நல்ல கூலி கிடைக்கிறது. இதே கூலி எல்லா இடங்களிலும் கிடைக்காது. கொத்தவால் சாவடியில் கிடைக்கும், பரமக்குடியில் கிடைக்காது. மதுரையில் கிடைக்கலாம், மற்ற ஊர்களில் கிடைக்காது. இதிலே ஒழுங்கு முறையை ஏற்படுத்த அரசு முயற்சித்தால் நல்லதுதான். தொழிலாளர்கள் தங்கள் இஷ்டம்போல் அராஜகம் பண்ண வேண்டுமென்பது என்னுடைய நிலையும் அல்ல, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் நிலையும் அல்ல, நான் அறிந்தவரையில். தொழிலாளர்கள் அராஜகத்தை நாங்கள் சார்ந்துள்ள இயக்கம் என்றைக்கும் ஆதரிக்கவில்லை. அதனால் எங்கள் நிலை, அராஜகத்திற்கு உதவும் நிலை என்று யாரும் கருதக்கூடாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டத்தை நிறைவேற்றும்போது, சலவைத் தொழிலாளி சம்பந்தமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அது சொந்த, சுய தொழிலாக இருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய சலுகைகள் என்பது வேறு. இதிலே குறிப்பாக மீன்பிடித் தொழிலில், தோணி படகு கட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு உத்தரவாதமில்லாமல் இருக்கிறது. மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்க்கை ஆபத்தானது. சில நிவாரணங்களை அரசு அறிவித்திருக்கிறது. கோர்ட் தீர்ப்புகளைக்கூட மீறும் சக்திகளிடமிருந்து மீன்பிடித் தொழிலாளரைக் காக்கின்ற முறையில், அரசு தலையிட இந்தச் சட்டத்திலே இடமில்லை. இருந்தாலும், அவர்களைப் பாதுகாக்க என்ன நடவடிக்கை என்பதில் அரசு ஸ்தூலமாக முயற்சிக்க வேண்டும். மேலும் சட்டத்தைக் காட்டி சாதாரண, நடுத்தரமானவர்களை அச்சுறுத்தும் நிலைமைக்குச் செல்லக்கூடாது. அதற்கு மேலாக தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச பலன் கிடைக்கும் முறையில் அதை தொழிலாளர் நல இலாக்கா செயல்படுத்தக்கூடிய முறையில் இருக்க வேண்டுமே தவிர, அதற்கு மாறாக சட்டத்தைக் காட்டி அவர்கள் வருமானத்தைத் தேடிக்கொள்ளும் நிலைமை இருக்கக்கூடாது. தொழிலாளர்கள் நன்மையைவிட, அதை நிறைவேற்றும் சில அதிகாரிகளுக்கு நன்மை இருக்கிறது. கடந்த காலத்தில் 'ஷாப் ஆக்ட்' அப்படித்தான் இருந்தது.



1982 ஏப்ரல் 5] [திரு. ப. மாணிக்கம்]

அடுத்து, 24 ஆம் எண் சட்ட முன்வடிவு. மத்திய சட்டத்திற்கு 2 திருத்தங்கள் என்று சொல்வதைவிட, 2 இன்செர்ஷன்ஸ் என்று சொல்ல வேண்டும். இதில் ஒரேயொரு அம்சம்தான் சொல்ல விரும்புகிறேன். 'கம்பல்சரி ஆர்பிட்ரேஷன்'—வார்த்தை 'கட்டாயம்' என்று போடாவிட்டாலும், அரசு அதைச் செய்யலாம். ஒரு காலத்தில் 'ஆர்பிட்ரேஷன்' வேண்டுமென்று தொழிற் சங்க இயக்கம் கேட்டது வாஸ்தவம். அதில் ஏற்பட்ட அனுபவம் பெரும்பாலும் தொழிலாளர்களுக்குப் பாதகமாகப் போய்விட்டது. பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, இதிலே என்ன சொல்லப்படுகிறது? தொழில் துறையில் அமைதி வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அதற்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அமைதி காக்க வேண்டுமென்று சொல்லும்போது, ஒரு தரப்பாக, தொழிலாளர்களை நிர்பந்திக்கக்கூடிய வகையிலேதான் சட்டம் இதுவரை செயல் பட்டிருக்கிறதே தவிர, பல இடங்களிலே நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தும் முறையில் இல்லை. மத்திய அரசு ஒரு அவசரச் சட்டம் போட்டது. அது நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தவில்லை. சட்டத்தைக் கொண்டு வருகிறோமென்று மத்திய அரசு சார்பாக பிரதமர் அவர்களே வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இன்னும் வரவில்லை. இந்தச் சூழ்நிலையிலே மத்தியச் சட்டத்திற்கு இப்படி அவசரத் திருத்தம் கொண்டு வந்து, நடைமுறையில் தொழில் அமைதி காக்க வேண்டுமென்று விரும்புகிற அரசின் நோக்கம் நல்லதாக இருக்கலாம். ஆனால் இதுவரையில் தமிழ் நாட்டில் தொழிலாளர்களுடைய பல்வேறு பிரச்சினைகள்—சாதாரணத் தமிழ் வார்த்தையில் சொல்வதென்றால் மொங்கான் அடிக்கப்படுகிறது—தீர்க்கப்படவில்லை. அப்படிப்பட்ட நிலையில் இது வருவது இன்னும் தொழிலாளர்களை முடமாக்குவதற்குத்தான் உதவும். இன்றைக்கு சாத்தியமாக இருக்கலாம். சாதாரண பிரச்சினைகளைத் தீர்க்காமல், அமைதி என்ற பெயரில் குணமாக்குவது, நாளைக்குக் கொந்தளிப்பாக மாறக்கூடாதென்பதை எடுத்துக்காட்டி, இந்தச் சட்டத்திலே இந்தத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டாமென்று கேட்டு, அமைகிறேன்.

(பிற்பகல் 1-00)

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசுத் தரப்பிலேயிருந்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற 'சங்கம் வைத்துச் செயல்பட முடியாத நிலையில் இருப்பவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பது'

என்பது பற்றிய சட்ட முன்வடிவின்மீது இரண்டொரு கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட ஒரு நோக்கத்திற்காக இந்தச் சட்ட முன்வடிவு வந்ததற்காக முழுமையாக வரவேற்கிறேன். நல்ல நோக்கங்களுக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை இங்கு கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் நல்ல நோக்கங்களை நான் வரவேற்கின்ற அதே நேரத்தில், இந்தச் சட்ட முன்வடிவின் அடிப்படையிலே செய்திருக்க வேண்டிய அல்லது இது நிறைவேறிய பிறகு காரியங்கள் செய்ய முற்படும்போது இதில் சில சிக்கல்கள் இருப்பதை உணர்ந்து அதன் அடிப்படையில் செய்யப்பட வேண்டிய சில கருத்துக்களை இந்த நேரத்தில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். இதனுடைய 'பேக்கிரவுன்ட்' பற்றி, இது என்ன அவசியத்திற்காகக் கொண்டுவரப்படுகிறது என்பதுபற்றி இங்கே சொன்னார்கள். இந்த அவையிலோ, பேரவையிலோ அல்லது இரண்டு அவைகளிலுமோ தொழிலாளர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். அதோடு மட்டுமல்ல. சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்து பலமுறை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்கூட இப்படி ஒரு சட்டம் இல்லாத நிலையைக் குறிப்பிட்டு, தன்னுடைய கவலையைத் தெரிவித்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் பின்னணியாகக் கொண்டு அரசு ஒரு குழுவை அமைத்திருக்கிறது. அந்தக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில்தான் இந்தச் சட்ட முன்வடிவு வந்திருக்கிறது

The State Government constituted a committee to go into the living conditions of the workers in unorganised industries like Beedi Industry, Road Construction and Building operations. என்பது பற்றி எல்லாம் கூட சொல்லியிருக்கிறார்கள். இந்தக் குழுவில் இடம் பெற்றவர்கள் இந்த அவையில் உள்ளவர்களா இல்லை பேரவையில் உள்ளவர்களா எந்த அடிப்படையில் இந்தக் குழு அமைக்கப்பட்டது என்பது எனக்குத் தெரியாது. இந்த இரண்டுமே தெரியாது என்பதோடு மட்டுமல்லாமல், இந்தக் குழு என்னென்ன பரிந்துரைகளைச் செய்தது என்பதும் தெரியாது. எனக்கு மட்டுமல்ல, இந்த அவையில் இருக்கிற உறுப்பினர்கள் யாருக்கும் தெரியாது. இந்தக் குழுவின் கண்டுபிடிப்புகள் என்ன என்பதுபற்றியும் தெரியாது. எந்தெந்தச் சூழ்நிலைகளில்



எந்தெந்தப் பரிந்துரைகளை அக்குழுவினர் செய்திருக்கிறார்கள் என்பது பற்றிய விவரங்களை அவையில் வைத்திருக்க வேண்டாமா? அதுபற்றிய விவரங்களை வைக்காமலே அரசு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறது. இச்சட்ட முன்வடிவு கொண்டுவரப்படுவதற்கு ஆதாரமாக குழுவைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். குழுவை நியமிப்பது என்பது அரசின் அதிகாரத்திற்கு உட்பட்ட ஒன்று. அந்தக் குழு தந்திருக்கிற பரிந்துரைகளைப் பற்றிய தகவலைத் தராமல் இதுபற்றி விவாதிக்க வேண்டிய சூழ்நிலை எங்களுக்கெல்லாம் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் குழுவின் சிபாரிசுகள்பற்றிய தகவல்கள் எங்களுக்கு மிக மிக அவசியம் தேவை. ஆகவே இதை ஒரு பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்பது அவசியமான ஒன்று. இது மறுக்க முடியாத உண்மை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒப்புக்கொள்வார்கள். இந்தச் சட்டம் எப்படி செயல்படும் என்பதைப்பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இரண்டாவது பிரிவிலே 'அன்ஆர்க்னைஸ்ட் லேபர்' unorganised labour பற்றி, 'சைல்ட் லேபர்' Child Labour பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இச்சட்ட முன்வடிவை நிறைவேற்றிவிட்டு, இதனைச் செயல்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முந்திரித் தொழிற்சாலைகளில் பணியாற்றுகிற, லைசன்ஸ்ட் இன்டஸ்ட்ரீசில் பணியாற்றுகிற 'சைல்ட் லேபர்' பற்றிய பிரச்சினை முடிந்துவிட்டதா என்று நான் கேட்கிறேன். அந்த இன்டஸ்ட்ரீசில் அவர்கள் கிடையாதா? சிவகாசியில் லைசன்ஸ்ட் இன்டஸ்ட்ரீசில் பணியாற்றுகிற 'சைல்ட் லேபர்' பற்றி மட்டும்தான் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** போர்டு பெயரை ரெஜிஸ்டர் பண்ண வேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள வயதிற்குள், டெபனிஷனுக்குள் இருந்தால்தான், அவர்களுக்கு வேலை கிடைக்கும். ரெஜிஸ்டர் பண்ணாவிட்டால், அத்தகையவர்கள் வேலை பெற வாய்ப்பு இல்லை.

**திரு. க. இராமமூர்த்தி:** அப்படி என்றால் விபத்து நடந்து குழந்தைகள் செத்ததாகத் தகவல் வந்ததே, அது எப்படி நடைபெற்றது? லேபர் டிப்பார்ட்மென்டில், சட்டத்தை ஏமாற்ற நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. அதனால் தான் ஏமாற்ற முடிந்தவர்கள் ஏமாற்றுகிறார்கள். அப்படிச் செய்வதை அரசாங்கம் தடுக்க முடியவில்லை. ஆர்கனைஸ்ட் இன்டஸ்ட்ரீசில், லைசன்ஸ்ட் இன்டஸ்ட்ரீசில் அதாவும் தொழிலாளர் நல அதிகாரிகளுடைய மூக்
 கன்சா

ணிப்பில் இருக்கிற இன்டஸ்ட்ரீசில்கூட, மிகப் பெரிய தொழிற்சாலைகளில்கூட, மிக அதிகமாகப் பணம் படைத்தவர்களுடைய தொழிற்சாலைகளில்கூட, அதிகார பூர்வமாக இச்சட்டம் செயல்பட முடியவில்லை. இதை நான் ஒரு குற்றச்சாட்டாகச் சொல்வதாக தயவுசெய்து யாரும் கருத வேண்டாம். அதி லேயே இந்த நிலைமை இருக்கும்போது, இதில் மட்டும் எப்படி சட்டம் முழுமை யாகச் செயல்பட முடியும்? இதையெல்லாம் பரிசீலனை செய்து, தீவிரமாக அலசிப் பார்த்து, ஆய்ந்தறிய வேண்டும். அரசுக்கு, இச்சட்ட முன்வடிவுக்கு, நாங்களெல்லாம் துணை நிற்கின்ற அளவில் எதை எதையெல்லாம் சேர்க்கலாம், எதை எதை யெல்லாம் சேர்ப்பதன் மூலம் விரும்பத்தகாத செயல்களையெல்லாம் தவிர்க்கலாம் என்கிற ஆலோசனைகளைப் பெற இதனைப் பொறுக்குக் குழு வுக்கு அனுப்ப வேண்டும். இது ஒன்றும் நடக்காத நிலையில் இது எப்படி முழுமை பெற்ற சட்ட முன்வடிவாக இருக்க முடியும்? ஆகவே இச்சட்ட முன் வடிவை முழுமைப்படுத்த வேண்டும். இதனை முழுமைப்படுத்தி செயல்படுத்த வேண்டுமென்ற அளவிலே ஒன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதனைப் பொறுத்தவரையிலும், இது எந்தெந்தப் பகுதிக்கு, எந்தெந்த நேரத்திலே எப்படி எப்படி அமுல்படுத்தப்பட இருக்கிறது என்பதற்கான அதிகாரத்தையெல்லாம் அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இப்படி இதற்கான அதிகாரத்தை அரசு ஏற்றுக்கொண்டிருப்பது தேவையான ஒன்று. ஆனால் நான் ஒன்று சொல்கிறேன். இதனுடைய தேவைகள், அவசியங்கள், நோக் கங்கள் பற்றி நாம் பார்க்கும்போது, 50 பேரா அல்லது அதற்கு அதிகமா அல்லது அதற்குக் குறைவா என்பதல்ல பிரச்சினை. வேலை பார்க்கிறவர்கள் —தொழிற் சங்கம் வைத்து நடத்த இயலாத நிலையில் இருப்பவர்கள்—எண் ணிக்கை இல்லாததால் சங்கம் வைக்கின்ற உரிமை இல்லாமல் இருப்பவர்கள்— இப்படிப்பட்ட உழைக்கின்ற தொழிலாளர்களுக்கெல்லாம் நியாயமான ஊதியம் தரப்பட வேண்டும். அதோடு எதிர்பாராத காரணத்தால், உழைக்கின்ற தொழி லாளர்கள் அல்லலுறுகின்றபோது, அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்புகள் இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் சில பகுதிகளில் ஒருவித அணுகு முறையைக் கையாள வேண்டும். ஆனால் பொதுவாக இச்சட்ட முன்வடிவு எல்லாத் தொழிலாளர்களுக்கும் சட்டப்படி பாதுகாப்பு தருகிற வகையில் அமைய வேண்டும். அதே நேரத்தில் வீடுகளிலே பணியாற்றுகின்ற தொழி லாளர்கள் என்கிற நிலைக்கு வருகிறபோது, அவர்களுக்கு எப்படிப்பட்ட பாது காப்புகள் இருக்க வேண்டும் என்பதற்கேற்ப விதிகளை அரசாங்கம் வகுக்க



வேண்டும். அதை விட்டுவிட்டு, தொழிற்சாலைகளில் பணியாற்றுகிற தொழி லாளர்களுக்கு அதிகமாகச் சம்பளம் வேண்டுமென்று கேட்கிறாய்,—உன் னுடைய வீட்டுத் தொழிலாளர்களுக்கு எவ்வளவு ஊதியம் தருகிறாய் என்கிற அடிப்படையில் ஊதியத்தை நிர்ணயிப்பது என்கிற நிலை வரும்போது, நிலைமை என்னவாகும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இன்றைக்கு மாதம் 100 ரூபாய் வருமானம் வர முடியாத நிலையில் இருக்கிறவர்கள்கூட வீட்டிலே வேலை செய்ய ஆள் வைத்துக்கொள்கிறார்கள். இன்றைக்கு இருக் கிற சமுதாய அமைப்பிலே தாங்களாகவே எல்லாக் காரியங்களையும் எவரும் செய்துவிட முடியாத நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் அந்தத் தொழிலாளர்களுக்கும் இப்படிப்பட்ட ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும், பணிப் பாதுகாப்பு தர வேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் நாம் முழுமையாக விவாதிக்காமல், ஒரு முடிவுக்கு வந்துவிட முடியாது. ஆகவே, இதைப் பொறுத்தவரையில், மனிதாபிமான பிரச்சினைகளும், சமுதாயப் பிரச்சினை களும், பொருளாதாரப் பிரச்சினைகளும் இருக்கின்றன. இதனுடைய பல்வேறு பிரிவுகள், நோக்கங்கள் அவசியமானவை, தேவையானவை. அதே நேரத்தில் இந்தச் சமுதாயத்தில் சில பகுதிகளில் விளையாட்டாக இதனைக் கொண்டு வருவதன் மூலம் ஏற்படுகிற விபரீதங்களைப்பற்றியும் அறியாமல் இருந்துவிடக் கூடாது. அதைப்பற்றித் தெரியாமல் அமுல்படுத்துகிற ஆர்வத்தைக் காட்டி விடக் கூடாது. இப்போது இதனை நிறைவேற்றிவிட்டு, சட்டத்தையும் அமுல் படுத்தத் தொடங்கிவிட்டு, அதற்குப் பிறகு அடுத்த ஆண்டு இன்னொரு திருத்தம் கொண்டு வரலாம். அப்போது "நாங்கள் இப்படி நடக்கும் என்று நினைக்கவில்லை" என்று சொல்லாத அளவில் இப்போதே இதனை முழுமை பெற்ற ஒரு சட்ட முன்வடிவாக அமைக்க வேண்டும். (மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணி அடித்தார்) என்னுடைய திருத்தத்தைப்பற்றி மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி: தேவையானால் நாளை விவாதிக்கலாம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நாளை அரசு விடுமுறை நாள்.

திரு. க. இராமமூர்த்தி: நாளை என்றால் அடுத்து அவை கூடுகிற நாள். இதிலே 13-வது பிரிவிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு என்று ஒரு போர்டு அமைக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"*Proceedings presumed to be good and valid.*—No act or proceedings of the Board shall be questioned or invalidated merely by reason of any vacancy in its membership or by reason of any defect in the constitution thereof."

(பிற்பகல் 1-10)

Even in the initial stage you are afraid of the Constitution of the Board. இதற்கென்று ஒரு போர்டு அமைக்கிறார்கள். அந்த அந்த போர்டு நடவடிக்கையை மேற்கொள்கிறது. அதில் ஐந்து பேர் அல்லது ஏழு பேர் நியமிக்கப்பட்டும் சிலர் இல்லாமல் இருக்கிற நிலை வரலாம். ஒருவர் இராஜினாமா செய்துவிடலாம் அல்லது அவருடைய இராஜினாமா ஏற்றுக் கொள்ளப்படாத நிலை இருக்கலாம். அல்லது ஒருவர் திடீரென்று இறந்து விடலாம். அல்லது சிலர் கமிட்டி கூட்டத்திற்கே வராமல் இருக்கலாம். அந்த நேரத்தில் அந்த போர்டு எடுக்கிற முடிவுகள் சரியான முடிவுகள்தான் என்று தெரிவித்தால், அதில் நியாயம் இருக்கிறது. ஆனால் "By reason of any defect in its constitution" என்று சொல்லுகிறபோது சட்டப்படி அந்த போர்டு அமைந்த விதமே தவறாக இருக்கும்போது அல்லது தகுதியற்ற ஒருவர் அதில் நியமனம் பெற்றிருந்தாலும், அவர் ஒரு தீர்ப்பு தந்தால் அல்லது அவர் சேர்ந்து ஒரு முடிவெடுத்தால், அது செல்லுபடியாகும் என்கிற வகையில் பாதுகாப்பாக ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்தால், இது எதற்காக என்றுதான் எனக்குப் புரியவில்லை. அந்த போர்டில் நியாயமே நடக்காது என்று தீர்மானம் செய்துவிட்டு இப்படிக் கொண்டு வருகிறார்களா? அது எப்படி நியாயமாகும்?

**திரு. எஸ். இராகவானந்தம்:** மினிமம் வேஜஸ் ஆக்ட்-படி கூட அந்தக் குழுவில் தொழிலாளர்கள் சார்பாக இருவரும், முதலாளிகள் சார்பாக இருவரும் மற்றுமொருவரும் இடம் பெறுகிறார்கள். அதில் முதலாளிகள் சார்பாகவோ அல்லது தொழிலாளிகள் சார்பாகவோ வராமல் போய்விட்டு, அங்கே ஒரு முடிவெடுத்துவிட்டால் அது செல்லாது என்று தீர்ப்பளித்து வந்தோம். இந்த நிலையில் போனால் எந்தக் காலத்திலும் மினிமம் வேஜஸ் நிர்ணயிக்கவே முடியாது. நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்றுதான் தற்போது செக்ஷன் 9 (எ) என்று கொண்டு வந்தோம். அதில் இதே வாக்கியங்களைத் தான் சேர்த்திருக்கிறோம், நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்ற



நல்ல உள்ளத்தோடு இவற்றைச் செய்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களே இதை வரவேற்றிருக்கிறார். இதில் நாங்கள் இருவரும் ஒத்துப் போயிருக்கிறோம். அதை மாண்புமிகு உறுப்பினர் பாராட்ட வேண்டும். இப்படிப்பட்ட ஷரத்துக்கள் இருப்பது மிகத் தேவையானது என்பதை மாண்புமிகு உறுப்பினர் ஒப்புக்கொள்வார் என்று நம்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களும் தானும் ஒப்புக்கொண்டுவிட்டோம், நீங்கள் குறுக்கே நிற்கலாமா என்றார்கள். இது எப்படி நியாயம் என்றுதான் எனக்குப் புரியவில்லை. This is most insulting. The Government should not come with a constitution, its proceedings must be validated. provision saying that even if the Board is defective in its very ஒரு அரசு அத்தகைய வேண்டுகோளோடு ஒரு சட்டத்தை நிறைவேற்றுவது என்பது தவறாகப் போய்விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். As a lawyer, I can say it is an insult to the very makers of the Act. இந்தச் சட்டம் நாளைக்கு நீதிமன்றத்திற்குப் போகலாம்—போக வேண்டும் என்று சொல்லவில்லை. அப்படிப் போகிற நிலை வந்தால், அங்கே இருப்பவர்கள் எங்களைப் பார்த்துச் சிரிப்பார்கள். "இப்படி ஒரு சட்டம் நிறைவேறுவதற்கு நீங்களெல்லாம் துணையாகத்தானே இருந்தீர்கள்" என்று சிரிப்பார்கள். எனவே இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 26-வது பிரிவுக்கு வரும்போது கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது:—

"The Government may, at any time, appoint any person to investigate or enquire into the working of any Board or Scheme and submit a report to the Government in that behalf."

இதில் ஒரு குழு அமைக்கப்படுகிறது. அந்தக் குழு எடுத்த நடவடிக்கை பற்றி அல்லது அந்தக் குழு செயல்படுகிற முறைபற்றி அரசாங்கத்திற்குப் பல்வேறு முறையீடுகள் வரலாம். அப்படி முறையீடுகள் வரும்போது அந்தக் குழு செய்த முடிவுகளைப்பற்றிப் பரிசீலனை செய்வதற்கு அல்லது விசாரணை செய்வதற்கு அல்லது அதன்மீது மேல் நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்குப்

பரிபூரண அதிகாரம் இருக்க வேண்டும் என்பதில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் அந்தக் குழுவின் முடிவைப்பற்றிப் பரிசீலிக்க அல்லது விசாரிக்க அரசாங்கம் யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம் என்ற அதிகாரம் கேட்கப்படுகிறதே, அதுதான் எப்படி நியாயம் என்று கேட்க விரும்புகிறேன். இப்படி ஒரு சட்ட பூர்வமான அதிகாரத்தை அரசாங்கம் கேட்கிறது. ஆனால் அதற்கு யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம் என்றால், இது ஒரு அரசியல் நடவடிக்கையாகத்தான் இருக்குமே தவிர, வேறு எதுவுமில்லை. இது ஒரு நியாயமற்ற நடவடிக்கையாக இருக்கும். தொழிலாளர் நலச் சட்டங்களைப்பற்றிய விவரம் அறியாத ஒருவர்கூட அரசாங்கத்தால் இந்த போர்டுக்கு நியமிக்கப்படக் கூடிய சூழ்நிலை உருவாகும். எனவே இந்தச் சட்டப் பிரிவு தொழிலாளர்களுக்கு நன்மை செய்கிற நோக்கத்தோடு கூடிய ஒரு பிரிவு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். This is a very dangerous enactment.

இன்றையதினம் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சராக இருப்பவர் இதைத் தவறாகப் பயன்படுத்த மாட்டார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆனால் இது அவரோடு முடிகிற சட்டமல்ல. இந்தச் சட்ட முன்வடிவு நிறைவேறினால், பிறகு எந்த அரசு வந்தாலும், இந்தச் சட்டத்தின் அடிப்படையில்தான் நடவடிக்கை எடுக்க முடியும்.

எனவே இதைச் சிபாரிசு செய்த குழுவில் இதற்கு என்ன காரணம் சொன்னார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. தொழிலாளர் துறையில் இதைப் பற்றி விசாரிக்கக்கூடிய தகுதி படைத்த அதிகாரிகளே இல்லாமல் போய் விட்டார்களா அல்லது அங்கே பற்றாக்குறை ஏற்பட்டுவிட்டதா என்று எனக்குப் புரியவில்லை. எனவே இந்தச் சட்டப் பிரிவைப் பொறுத்தவரையில், மிகவும் பயங்கரமான ஒன்று என்பதை மீண்டும் எடுத்துச் சொல்லக் கட்டமைப்பட்டிருக்கிறேன். 26-வது பிரிவைப் பொறுத்தவரையில், மிகவும் பாதுகாப்போடு அணுக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எந்த வகையில் பார்த்தாலும், இது ஒரு தேவையற்ற பிரிவு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்து, 30-வது பிரிவில் ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது.

"Save as otherwise expressly provided in this Act, any person who contravenes any of the provisions of this Act or any rule made thereunder shall on conviction be punished with fine which may extend to five hundred rupees, and in case of continued contravention thereof, with an additional fine which may extend to one hundred rupees per day for every day during which such contravention continues."

இது கொஞ்சம்கூட நியாயமல்லாத, நீதியில்லாத ஒரு பிரிவு என்பதைச் சொல்ல விரும்புகிறேன். காரணம் ஆர்கனைஸ்டு செக்டாரில் இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட் எவ்வளவு என்பது உங்களுக்குத் தெரியும். அதில் முதலீடு செய்தவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும். அதே நேரத்தில் 'அன்ஆர்கனைஸ்டு' என்பதில் யார் யார் வருகிறார்கள் என்பதும் தெரியும். பில்டிங் காண்ட்ராக்ட் எடுப்பவர்கள்கூட அதில் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் குறிப்பிட்டபடி, வீட்டில் வேலை செய்யும் தொழிலாளிக்குக்கூட அதிகமான கூலி வேண்டும், போனஸ் வேண்டும். அவர்களெல்லாம் இந்தப் பிரிவில்தான் வருகிறார்கள். அப்படி வரும்போது, அதில் தண்டனைக்குள்ளாவோரைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படலாம் என்று சொல்கிறோம். அதுவும் ரூ. 500 அபராதம் விதிக்கப்படலாம் என்று சொல்கிறோம். அதற்குப் பிறகு தொடர்ந்து தவறு செய்தால், நாள் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் அபராதம் விதிக்கலாம் என்று இந்தப் பிரிவில் சொல்லியிருக்கிறோம் என்றால், அவருடைய சொத்தையெல்லாம் எடுத்துக்கொள்ளப் போகிறோமா என்று எனக்குப் புரியவில்லை. அதில் ஒரு டிஸ்கிரீஷன் கூட அல்ல. நீதி மன்றங்களில் கொலை செய்தால்கூட, டிஸ்கிரீஷன் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். குற்றம் எப்படி நிரூபிக்கப்பட வேண்டும் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. நீதிமன்றத்தில் . . .

(ஒரு குரல் : நீதிமன்றத்தில் எப்படி கொலை செய்ய முடியும்)

நீதிமன்றத்தில் எப்படி கொலை நடக்கும்? அங்கே நடப்பது வேறு வகை கொலை. வெளியே கொலை செய்தால், அங்கே வழக்கு நடக்கும். இதைத் தான் குறிப்பிட்டேன்.

[1982 ஏப்ரல் 5

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வந்த சந்தேகம், நீதிமன்றத்தில் எப்படி கொலை நடக்கும் என்பதுதான் . . .

திரு. க. இராமமூர்த்தி : நீதிமன்றத்தில் மனிதக் கொலை நடக்காது. அங்கே நடப்பது வேறு கொலை. எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்றால், இதில் ஒரு 'டிஸ்கிரிஷன்' இல்லாமல் இருக்கிறது. நாம் மதுவிலக்கைப் பொறுத்தவரையில், குற்றம் செய்தவரை நாடு கடத்துவோம் அல்லது ஊரை விட்டே வெளியேற்றுவோம் என்றெல்லாம்கூடச் சொன்னோம். அதில் கூட 'டிஸ்கிரீஷன்' இருந்தது. எனவே இந்த அரசின் கண்ணோட்டத்தில் 'அன்ஆர்கனைஸ்டு லேபர்' என்று நினைக்கும்போது, அவர்களை வைத்திருப்பவர்கள் எல்லாம் பெரிய பணம் படைத்தவர்கள் என்ற நினைப்பு இருக்கிறதா ?

(பிற்பகல் 1.20)

அல்லது சாதாரண அளவிலே இரண்டு ஏக்கர் நிலம் உள்ளவர்களிடம் 'அன ஆர்கனைஸ்ட் லேபர்' வேலை செய்தால், அவர்களுக்குப் பாதுகாப்புத் தரப் போகிறோமா, இல்லையா ? ஆள் வைத்து வேலை வாங்குபவர்களுக்கு டிஸ்கிரீஷனரி பவர் இருக்கக் கூடாது என்றால், அவர்கள் எப்படி நடவடிக்கை எடுப்பது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசியதைக் கவனித்திருப்பார் என்று நினைக்கிறேன். லேபர் கோர்ட், ஐகோர்ட், சுப்ரீம் கோர்ட் என்று செல்வதால் ஐந்தாண்டுகள், பத்தாண்டுகள் தொழிலாளர்கள் அவதிப்படுகிறார்கள், அவர்களுக்கு என்ன செய்யப் போகிறார்கள் என்று கேட்டார்கள். அதற்குத்தான் இது பதில். எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் தங்களுடைய உடல் உழைப்பை மட்டும் நம்பியிருக்கும் தொழிலாளர்களுக்கு என்ன பாதுகாப்புத் தரப்போகிறார்கள் என்று கேட்டால், ஒரு நாள் மீறினாலும், அவர்களுக்குப் பாதுகாப்பு ஏற்படும். ஆகவே அதிலே அதிக நேரம் செலவு செய்யாமல், வேறு பேச வேண்டும். ஏனென்றால் இப்போதே நேரம் 1-20 மணியாகிறது.



1982 ஏப்ரல் 5]

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு இங்கே இல்லாதது என்னுடைய துர்பாக்கியம். ஓர்க்கர்ஸ், ஓர்க்கர்சிடம் வேலை செய்கிற ஓர்க்கர்ஸ் ஆகிய இந்த இரண்டு பேருக்கும் பாதுகாப்பு வேண்டுமா, இல்லையா ? யாரை யாருக்கு (against) அகெய்ன்ஸ்டாக விடுகிறார்கள் அதனாலே We must have discretion. தண்டனையை நிர்ணயிக்கும்போது, ஒழுங்கு முறை இருக்க வேண்டும். அப்படியில்லாமல் இதுதான் தண்டனை என்று நிர்ணயித்ததன் மூலமாக உரிய முறையில் பரிசீலனை செய்யத் தவறியிருக்கிறோம். அவசரத்தில் இதைத்தான் என்னால் கண்டுபிடிக்க முடிந்தது. மேலும் கண்டுபிடிக்க நேரம் இல்லை. ஆர்கனைஸ்ட் லேபரைவிட 'அன்-ஆர்கனைஸ்ட் லேபர்' பெருமளவிற்கு அதிகம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் பலமுறை இங்கே உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக சட்ட முன்வடிவை அவசர அவசரமாக, பேசக் கூட நேரமில்லாத வகையிலே நிறைவேற்றுவதைவிட, காலையிலே கொடுத்து உடனே நிறைவேற்றுவதைவிட், நிதானமாகப் பரிசீலித்து இதை நிறைவேற்றுவதற்காக இதைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி அதன் ஆலோசனையின் அடிப்படையிலே முழுமையான சட்ட முன்வடிவைக் கொண்டுவர தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று சொல்லி அமைகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற நிலையிலே புதிய சட்ட முன்வடிவை அரசு கொண்டு வந்திருக்கிறது. அதை நான் உண்மையிலேயே வரவேற்கிறேன். அந்தச் சட்டத்தினுடைய விளைவுகள் நன்மையாக இருக்க வேண்டும், நல்லமுறையிலே உடல் உழைப்பு உழைக்கின்ற தொழிலாளர்களுக்கு நன்மை கொண்டு சேர்க்க வேண்டுமென்று விழைகிறோம். அதே நேரத்தில் நன்மையைக் கொண்டுவரக்கூடிய இந்தச் சட்டத்தை அமுல்படுத்துகிறவர்கள் எவ்வளவு அக்கறையோடும், நல்ல எண்ணத்தோடும் அமுல்படுத்த வேண்டும் என்பதைப்பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். உண்மையிலேயே உடல் உழைப்பு ஊழியர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது என்பதை சட்டத்தால் மாத்திரம் செய்ய முடியுமா என்பது எனக்கு ஐயப்பாடாகவே இருக்கிறது. இந்தச் சட்டம் வருவதன்மூலம், அவர்

களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது என்பதை அவர்களே உணரச் செய்ய முடிகிறது. ஆனால் மற்றவர்கள் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற மனதை, உணர்வைப் பெறுவதன் மூலமாகத்தான் இதைச் செய்ய முடியும்.

1942 முதல் 1945 வரை கம்யூனிஸ்ட் இயக்கத்தினுடைய பெருந்தலைவர் களுள் ஒருவராக விளங்கிய தோழர் ஜீவா அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தை விட்டு, அதாவது பூதப்பாண்டியை விட்டு வெளியே வரக்கூடாது என்று சட்டம் போட்டிருந்த காலத்திலே, கன்னியாகுமரி மாவட்டத்திலே இருந்த அன்-ஆர்கனைஸ்ட் தொழிலாளர்களை ஒற்றுமைப்படுத்தி அவர் களுடைய உணர்வைத் தட்டியெழுப்பிய பணி அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாக இருந்தது. அவர் நடத்திய அரசியல் வகுப்பில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தத்துவ வகுப்பிலே, மாணவனாக இருந்த காலத்திலே கலந்து கொண்டவன் என்ற நிலையிலிருந்து பார்க்கும்போது, வெறும் சட்டத்தால் மாத்திரம் நாட்டிலுள்ள தொழிலாளர்களைப் பாதுகாக்க முடியாது, அவர்களை வைத்து வேலை வாங்குகிறவர்கள் மனதிலே அவர்களும் மனிதர்கள் என்ற உணர்வு உருவானால்தான் முடியும் என்பதை உணர் கிறேன். ஆகவே அத்தகைய உணர்வை உணர்த்த வேண்டிய பொறுப்பு எல்லாத் தரப்பிற்கும் இருக்கிறது என்பதை உணர்ந்து, அதில் வெற்றி கண்டால்தான் நம் நோக்கம் நிறைவேற முடியும் என்பதைச் சொல்லுகிறேன். அதைச் சுட்டிக் காட்டுகிற நிலையிலேதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் ஆர்கனைஸ்ட் லேபராக இருந்து பலன் அடைகிறவர்கள், அவர்களிடத்திலே, வேலை பார்க்கிற அன்-ஆர்கனைஸ்ட் ஊழியர்களுக்கு உதவ வேண்டுமென்ற நிலையை உணர வேண்டுமென்று பேசினார் என்று நம்புகிறேன்.

இப்போது எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. இராமமூர்த்தி அவர்கள், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. மாணிக்கம் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இவ்வளவு சட்டப் பாதுகாப்பு இருந்தும்கூட 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படு கிறார்கள். சிறுவர்களை வேலை வாங்குகிறார்கள், தொழிலாளர் நல அதிகாரிகள் இதைத் தெரிந்தே அனுமதிக்கிறார்கள் என்று கூறினார்கள். அப்படி இல்லையென்று இங்கே வந்து பேசினாலும், விபத்து நடைபெறுகிற போது அகப்பட்டுக்கொண்டு, "தவறாக நடந்திருக்கிறது, அந்த அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று சொல்லுகிற நிலை நாட்டிலே



இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. சிறுவர்கள், சிறுமியர்களை வேலைக்கு அமர்த்தக்கூடாது என்று சட்டத்திலே இருந்தாலும்கூட, ஆலைத் தொழில் விதியைப் பின்பற்றி ஆலையை நடத்துவதாக இருந்தாலுங்கூட, இன்றைக்குக் கூட கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய முந்திரி ஆலைகளைச் சுற்றிப் பார்த்தால், பத்து, பன்னிரண்டு வயதுக் குழந்தைகள் கையில் முந்திரிக் கொட்டையினுடைய பால் பட்டு, சூடு பட்டு, தோல் உரிந் திருக்கின்ற நிலையை நாம் பார்க்கலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** துணைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி சட்டமன்றப் பேரவையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர்கள் சொன்னதை மனதிலே வைத்து, அதற்கு வேண்டிய பாதுகாப்புச் சாதனங்களை முதலாளிகள் கொடுத்திருக்கிறார்களா என்பதைப் பார்த்து ரிப்போர்ட் அனுப்பும்படி நேற்றைய முன்தினம் ஆணையிடப் பட்டிருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** ஆணையை அனுப்பலாம். ஆணை அனுப்ப வில்லை, தக்க நடவடிக்கை எடுக்கவில்லையென்று நான் சொல்ல வரவில்லை. இந்த ஆலைகளைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கின்றபோதே, நான் இந்த அவையில் எப்படி குழந்தை களுடைய கைகள் புண்பட்டிருக்கின்றன என்பதற்காக படத்தைக் கொண்டு வந்து காட்டி, அதற்குப் பிறகு அவர்கள் சட்டம் போட்டதற்குப் பிறகும் ஆளும் கட்சி உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர்கள் சொல்லுகிற நிலைமை தான் இன்றைக்கும் இருக்கிறது என்றால், சட்டங்களை அமல்படுத்துகிற அதிகாரிகள் தொழிலாளர் நல பாதுகாப்புச் சட்டங்களை, அவர்களைப் பாது காப்பதற்காகப் பயன்படுத்துகிறார்களா அல்லது அதை வைத்துக்கொண்டு ஆலை அதிபர்களிடத்திலே பேரம் பேச பயன்படுத்துகிறார்களா அல்லது ஏதாவது வாங்கப் பயன்படுத்துகிறார்களா என்பதை மாத்திரம் சிந்திக்கப் பார்க்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆகவே சட்டத்தின் நோக்கத்தை வரவேற்கிறேன். இதை அமல்படுத்துகிற முயற்சியில் முதன்முதலாக ஈடுபட்டிருப்பதால், முதலிலே வெற்றிபெற வாழ்த்துகிறேன். இதை விரிவாக ஆராய்வதற்காக செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அப்படி அனுப்புவதாக இருந்தால் அது நான் வரவேற்கத்தக்கதுதான். அனுப்பாமல் இருந்தாலும், அமல்படுத்துகிற நோக்கில் இருக்கக்கூடிய விதிகளை வகுக்கும்போது, [illegible] ஆலோசனைக்

குழுவை அமைத்து, அதில் இந்த அவை உறுப்பினர்களையும், அந்த அவை உறுப்பினர்களையும் கலந்து ஆலோசித்து நடத்திச் சென்றால், நாங்கள் அவ்வப்போது கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு முனைய ஒரு வாய்ப்புக் கிடைக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் நாட்டிலுள்ள ஏழையெளிய அன்-ஆர்கனைஸ்ட் ஊழியர்கள் தங்களுடைய வாழ்வை உயர்த்திக் கொள்ள வழிவகை வரவேண்டுமென்ற ஆர்வத்தோடு இதை வரவேற்கிறேன்.

அடுத்த சட்டத்தைப் பொறுத்தவரையில், மத்தியச் சட்டத்திற்குத் திருத்தச் சட்டம் என்ற நிலையிலே அதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் நடுநிலைமையோடிருந்து, தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது, முதலாளிகளும் கதவடைப்பு செய்யக்கூடாது என்ற விதியைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை அமுல்படுத்துகிறபோது, நலிந்த தொழிலாளர்கள் பக்கத்திலே அரசு இருக்க வேண்டும். ஆலை அதிபர்கள் கதவடைக்கக்கூடாது என்று சொல்ல வேண்டுமே தவிர, தொழிலாளர்கள் தங்களுடைய நிலைமைக் கேற்ப தொழிற் சங்கங்கள் நடத்தி, அந்தச் சங்கத்தின் வழி வேலை நிறுத்தம் என்ற ஆயுதத்தைக்காட்டி உரிமையைப் பெறுவதில் குறுக்கே நிற்கக்கூடாது. அப்படியில்லாமல் இருந்தால், " அப்பம் பங்கு வைத்த கதை " மாதிரி ஆகிவிடும் என்பதால், அரசின் சக்தி, அதிகாரம் எல்லாம் நலிந்தவர்கள்பால் இருக்க வேண்டுமென்ற நிலையில், "கதவடைப்பு கூடாது" என்று மாத்திரம் சட்டத் திருத்தத்திலே நிறுத்திக்கொண்டால், போதுமானது.

(பிற்பகல் 1-30)

தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது அநீதியான காரணத்தால் இருந்தால், அது வெற்றி பெறாது. அதற்கு சட்டத்திலே ஒரு திருத்தம் தேவையில்லை. அரசு நலிந்தவர் பக்கம் நிற்க வேண்டுமென்ற உணர்வை உணர்த்த வாய்ப்பு இருந்தால், ஒரு பகுதியை இணைத்து, வேலைநிறுத்தத்தைச் சேர்க்காமல்—கதவடைப்பு கூடாதென்று மாத்திரம் இருத்தல், நல்லதென்று கூறி, அமைகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, இப்போதே பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சொல்கிறேன். நாளை மறுநாள் சொல்லலாம் என்று சொன்னாலும் அன்று சொல்கிறேன். எப்போது வேண்டுமானாலும் சொல்கிறேன்.

திரு. ஏ. ஆர். தாமோதரன்: அமைச்சரவர்கள் விவரமாக அரை மணி நேரம் பேசினால் நல்லது. எனவே மறுநாளே வைத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : என்ன சொன்னாலும் ஏற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் 7—4—1982 புதன் கிழமை மாலை 4-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-31)

5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders*

151. Notification issued with G.O. Ms. No. 349, Prohibition and Excise, dated the 10th December 1981 regarding an amendment to the Tamil Nadu Arrack (Retail Shops) Rules, 1981. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

152. Notification issued with G.O. Ms. No. 361, Prohibition and Excise, dated the 15th December 1981 regarding an amendment to the Tamil Nadu Arrack (Retail Shops) Rules, 1981. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

153. Notification issued with G.O. Ms. No. 97, Home, dated the 18th January 1982. regarding an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

154. Notification issued with G.O. Ms. No. 126, Prohibition and Excise, dated the 20th July 1981 regarding an amendment to the Tamil Nadu Arrack (Manufacture) Rules, 1981. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

155. Notification issued with G.O. Ms. No. 362, Prohibition and Excise, dated the 15th December 1982 regarding an amendment to the Tamil Nadu Arrack and Toddy (Personal Permit) Rules, 1981. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

156. Notification issued with G.O. Ms. No. 253, Housing and Urban Development, dated the 10th April 1981 regarding the new rules called the Tamil Nadu Slum Clearance Board Officers' and Servants' Conduct Rules, 1981. [Laid on the table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971).]

157. Notification issued with G.O. Ms. No. 179, Housing and Urban Development, dated the 13th March 1981 regarding certain amendments to the Tamil Nadu Slum Clearance Board Service Rules, 1972. [Laid on the table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971).]

158. Notification issued with G.O. Ms. No. 329, Housisg and Urban Development, dated the 12th May 1981 regarding certain amendments to the Tamil Nadu Slum Clearance Board Non-Technical Subordinate Service Rules, 1972. [Laid on the table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971).]

### *B. Reports, Notifications and Other Papers.*

*Nil.*



## இணைப்பு I

*[114ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)*

*மதுரையில் 1981 சனவரித் திங்களில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி மின் ஒளி அமைப்பு தெரு விளக்குகள் அமைத்தல் போன்ற பணிகளுக்காக மதுரை மாநகராட்சி மொத்தமாக ரூ. 37 இலட்சம் செலவிட முடிவு செய்தது. இப்பணிகளை குறுகிய கால அளவில் முடிப்பதற்காக தற்காலிகமாக சில புதிய பதவிகளை ஆறு மாதங்களுக்குத் தோற்றுவிக்க அனுமதிக்குமாறு மதுரை மாநகராட்சி அரசைக் கேட்டுக் கொண்டது. இக்கோரிக்கையை அரசு ஆய்வு செய்து, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, ஆணை எண். 1699, நாள் 23—10—1979-ல் கீழ்க்கண்ட புதிய பதவிகளை தோற்றுவிக்க ஆறு மாத காலத்திற்கு மட்டும் அனுமதி அளித்து ஆணையிட்டது :—*

| | |
|---|---|
| *(1) உதவிக் கோட்டப்பொறியாளர்* | 1 |
| *(2) இளநிலை உதவி மின் பொறியாளர்* | 4 |
| *(3) இளநிலை உதவியாளர்* | 2 |
| *(4) பதிவு எழுத்தர்* | 4 |
| *(5) லைன் இன்ஸ்பெக்டர்* | 4 |
| *(6) லைன் மேன்* | 12 |
| *(7) ஹெல்ப்பர்* | 16 |
| *(8) தினக்கூலி* | 224 |
| *(9) அலுவலக உதவிபுரிபவர்* | 1 |
| | 268 |

*ஆறு மாதங்கள் முடிந்த பின்னரும், மதுரை மாநகராட்சி இப்பதவிகளை கலைக்காமல் மீண்டும் 31—3—1981 வரை தொடர்ந்து நீடிக்க அரசை அனுமதி வேண்டியது. அரசு இக்கோரிக்கையை ஏற்காமல் உடனடியாகக் கலைத்துவிடுமாறும், கலைத்துவிடும் தேதிவரை இப்பதவிகளை நீடிக்கவும் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை ஆணை எண் 965, நாள் 9—5—1981-ல் உத்தரவிட்டது. இந்த ஆணை கிடைத்தவுடன் எல்லா தற்காலிக பதவிகளையும் கலைத்திருக்க வேண்டும். ஆனால் மதுரை*

மாநகராட்சி அரசின் ஆணைப்படி செயற்படாமல் வேறு பணிகளுக்கென இப்பணியாளர்களை தொடர்ந்து நீடிக்க அரசினை மீண்டும் அணுகியது. அரசு இக்கோரிக்கையை நன்கு ஆய்வு செய்தது. இப்பதவிகள் குறுகிய ஆறு மாத காலத்திற்கே அரசு அனுமதித்தது. உலகத் தமிழ் மாநாடு முடிந்த பின்னரும் இப்பதவிகளை நீடிக்க அரசு விரும்பவில்லை. ஆகையால் கடந்த 1981 ஆம் ஆண்டு நவம்பர் 24 ஆம் நாள் இப்பதவிகளை உடனே கலைத்து விடுமாறு ஆணையிட்டது. வேறு பணிகளுக்கு பணியாளர் தேவையிருப்பின் புதிய செயற்குறிப்பை அரசுக்கு அனுப்புமாறு மதுரை மாநகராட்சியின் ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

மதுரை மாநகராட்சி, அரசின் ஆணையை ஏற்றுக்கொண்டு மேலே குறிப்பிடப்பட்டுள்ள 268 பணியிடங்களை 1—3—1982 முதல் கலைத்துவிட்டது. இதன் விளைவாகவும் வேறு பணியிடங்கள் இல்லாத காரணத்தாலும் மதுரையின் திட்டத்தில் உள்ள 70 பணியாளர்கள் பதவி இறக்கம் செய்யப்பட்டனர். மேலும், உலகத் தமிழ் மாநாட்டிற்கென தற்காலிகமாக அமர்த்தப்பட்ட 176 தினக்கூலித் தொழிலாளர்களும் 1—3—1982 முதல் பணி இழந்தனர். இவர்கள் எல்லோரையும் 28—2—1982 வரை பதவியில் நீடித்தமைக்கு பின்னேற்பு கோரி மதுரை மாநகராட்சி அரசிற்குக் கோரிக்கை வைத்துள்ளது. இது அரசின் ஆய்வில் உள்ளது.



## இணைப்பு II

[115 ஆம் பக்கத்தில் இனம் 3(2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

திருவண்ணாமலை நகராட்சியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஏப்ரல் 1981, அக்டோபர் 1981, டிசம்பர் 1981, ஜனவரி 1982 மற்றும் பிப்ரவரி 1982 தவிர மற்ற மாதங்களுக்கான ஊதியம் உரிய தேதிகளில் தரப்பட்டுள்ளது. மேற்கண்ட ஐந்து மாதங்களில் நிதி பற்றாக்குறை காரணமாக ஆசிரியர்களுக்கு உரிய தேதிகளில் ஊதியம் அளிக்க இயலவில்லை. எனவே, வரியினங்களிலிருந்து பெறப்பட்ட வருமானம் மற்றும் அரசு மானியம், கேளிக்கை வரியிலிருந்து நகராட்சிக்கு வரவேண்டிய வருமானம் இவற்றைப் பெற்று ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டதில் சில நாட்கள் மட்டுமே காலதாமதமாகியது.

## இணைப்பு III

[117 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### L.A.BILL No. 10 OF 1982.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Perarignar Anna University of Technology Act,* 1978.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-third Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Perarignar Anna University of Technology (Amendment and Special Provisions) Act, 1982.

(2) It shall come into force at once.

2. *Amendment of section* 1, *Tamil Nadu Act* 30 *of* 1978.—In sub-section (1) of section 1 of the Perarignar Anna University of Technology Act, 1978 (Tamil Nadu Act 30 of 1978) (hereinafter referred to as the principal Act), for the expression "the Perarignar Anna University of Technology Act", the expression "the Anna University Act" shall be substituted.

3. *Amendment of section* 3, *Tamil Nadu Act* 30 *of* 1978.—In section 3 of the principal Act, in sub-section (1), for the expression "by the name of Perarignar Anna University of Technology" the expression "by the name of Anna University" shall be substituted.

4. *Substitution of the expression "Anna University" for the expression "Perarignar Anna University of Technology" in Tamil Nadu Act* 30 *of* 1978.—Throughout the principal Act, except in sub-section (1) of section 1 and sub-section (1) of section 3, for the expression "Perarignar Anna University of Technology" wherever it occurs, the expression "Anna University" shall be substituted.



5. *Construction of references to "Perarignar Anna University of Technology" and "Perarignar Anna University of Technology Act".*—References to "Perarignar Anna University of Technology" and "Perarignar Anna University of Technology Act" in any Act or in any rule, notification, proceeding, order, regulation, by-law or other instrument made or issued under such Act or "statutes", "ordinances" and "regulations" made or continued in force under the principal Act shll be construed as references to "Anna University" and "Anna University Act" respectively.

6. *Legal proceedings.*—Where immediately before the commencement of this Act any legal proceedings are pending to which the "Perarignar Anna University of Technology" is a party, the "Anna University" shall be deemed to be substituted for the "Perarignar Anna University of Technology" in those proceedings.

## இணைப்பு IV

[134ம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### L.A. BILL No. 16 OF 1982.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Registration Act,* 1908, *in its Application to the State of Tamil Nadu.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-third Year of the Republic of India as follows :—

1. *Short title, extent and commencement.*—(1) This Act may be called the Registration (Tamil Nadu Amendment) Act, 1982.

(2) It extends to the whole of the State of Tamil Nadu.

(3) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Insertion of new section* 80-*A in Central Act XVI of* 1908.—After section 80 of the Registration Act, 1908 (Central Act XVI of 1908) (hereinafter referred to as the principal Act), the following section shall be inserted, namely :—

" 80-*A. Recovery of deficit registration fee.*—(1) Notwithstanding anything contained in section 80, if, after the registration of a document, it is found that the fee payable under this Act in relation to that document has not been paid or has been insufficiently paid, such fee for or the deficit, as the cast may be, may, on a certificate of the registering officer, be recovered from the person who presented such document for registration under section 32, as an arrear of land revenue :

Provided that no such certificate shall be granted unless due enquiry is made and such person is given an opportunity of being heard :

Provided further that no such inquiry shall be commenced after the expiry of such period, after the dae of the registration of the document, as may be prescribed.



(2) The certificate of the registering officer under sub-section (1) shall, subject only to appeal under sub-section (3), be final and shall not be called in question in any Court or before any authority.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : சிதம்பரம் மாநகராட்சியின் வருமானத்தை அதிகரிக்க திரையரங்கம் மற்றும் நீச்சல் குளம் போன்றவை அமைப்பது குறித்து அரசு பரிசீலனை செய்வதாக ஒரு செய்தியைப் பார்த்தேன். அப்படிப்பட்ட பரிசீலனை பற்றிய திட்டம் எதுவும் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சிதம்பரம் நகராட்சிக்கு உள்ளே அண்ணா கலையரங்கு என்ற ஒரு திறந்த வெளி கலையரங்கு—மிகப் பெரிய ஒரு இடம் சரியாகப் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. அந்தக் கலையரங்கை ஒரு முழு திரைப்படக் கலையரங்கமாக மாற்றியமைக்க வசதியான இடமாக அது இருக்கிறது. அந்த அரங்கு ஒரு திரைப்பட அரங்கமாக மாற்றி கட்டப்படுமானால், நகராட்சியின் வருமானம் அதிகரிக்கும். அந்த நகரத்திலே திருமண மண்டபங்கள் இல்லாதது மிகப்பெரிய ஒரு குறையாக இருக்கிறது. இதைக் கட்டினால் அந்தத் தேவையையும் பூர்த்தி செய்யலாம். ஆகவே, இந்தக் கருத்துக்களை கவனத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏற்கெனவே ஒரு திட்டம் இருந்தது. அங்கே ஒரு திரையரங்கம் கட்ட வேண்டும், நீச்சல் குளம் ஒன்று அமைக்க வேண்டும் என்ற அளவில் இருந்தது. ஆனால் அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை. ஒருங்கிணைப்பு நகர முன்னேற்றக் குழுவினால் இந்தத் திட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. நகராட்சியைப் பொறுத்தவரையில், இந்தத் திரையரங்கைக் கட்டும் அளவிற்கு பண வசதியில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இவைகளைக் கட்டுவதைக் காட்டிலும் கடைகளைக் கட்டி அவற்றை வாடகைக்கு விட்டால், அதன் மூலம் வருமானத்தை மேலும் அதிகரிக்கலாம் என்ற யோசனையும் இருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : கடைகளை அதிகமாகக் கட்டுவதன் மூலமாக வருமானத்தைப் பெருக்கலாம் சிதம்பரத்திலே மிகவும் முக்கியமான வீதிகள், சன்னதிகள் இருக்கின்றன. அவைகளிலே இருக்கும் கடைகள் மிகவும் நெருக்கமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. பாதைகளிலே நடப்பவர்களுக்குக் கூட வசதியில்லாமல் மிகவும் நெரிசலாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல கடைகள் அமைக்கும்போது, பெட்டிக் கடைகளை அமைத்து வேலையில்லாத இளைஞர்களுக்குக் கொடுத்து அதன் மூலமாக வருமானத்தைப் பெருக்க வாய்ப்பு அளிக்கலாம். இது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா ?



1982 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அப்படிப்பட்ட கடைகளை அதிகமாக வைப்பது போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருக்கும். 'ஹைலி ஹேண்டிக்கேப்ட்' என்று சொல்பவர்களுக்கு அதுபோன்ற கடைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எல்லாவற்றுக்கும் இப்படிப்பட்ட கடைகளை வைக்க வேண்டும் என்று ஆரம்பித்தால், இந்தக் கடைகள் எல்லாம் வீதியிலேதான் இருக்கக்கூடிய நிலைமை வரும். ஆகவே, உத்தேசிக்கப்பட்டுள்ள கடைகளைக் கட்டும்போது, போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் கட்டும் திட்டம் செயல்படுத்தப்படும்.

## படகு விபத்து.

* 262 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) படகுப் போக்குவரத்து விதிமுறைகள் மீறப்பட்டதால், சேலம் மாவட்டம் திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியப் பகுதியில், அண்மையில் ஏற்பட்ட படகு விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) 15 பேர் உயிரிழந்தனர்.

(இ) அரசு ஆணை எண். 1363, ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை. நாள் 31—7—1981-ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளைக் கடுமையாகக் கடைப்பிடிக்கும்படி சேலம் மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இதுபோன்ற ஒரு விபத்து சேலம் மாவட்டத்தில் பரமத்தி-வேலூருக்கு அருகில் ஒரு கிராமத்திலே நடந்து திருமணத்திற்குச் சென்ற குழுவினர் பலர் உயிரிழந்தனர். அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள்கூட இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து பேசினார்கள். அதற்குப் பிறகு இந்த விபத்து நடந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ஆணையை சரிவரச் செயல்படுத்தாமல், முறைப்படி அனுபவம் இல்லாதவர்கள், வயது குறைந்தவர்கள், சிறுவர்கள், படகு ஓட்டுவதிலே திறமை இல்லாதவர்கள் போன்றவர்களை வைத்து படகை ஓட்டுவதால்தான் இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படுகின்றன. குறைந்த கூலிக்கு அவர்கள் வருகின்றார்கள் என்பதற்காக ஆசைப்பட்டு அவர்களை நியமித்து ஓட்டுவதன் காரணமாக இப்படிப்பட்ட விபத்துக்கள் நடக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த

அரசாணையைக் கடுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று நடவடிக்கை எடுப்பார்களா ? மேலும் உயிரிழந்தவர்களுக்கு அரசின் சார்பிலே இழப்பீட்டுத் தொகை தரப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** கடந்த 20—7—1981 அன்று திருச்செங்கோடு ஒன்றியத்தில் மௌசி கிராமத்தில் இரவு 7 மணிக்கு காவிரி ஆற்றில் ஏற்பட்ட படகு விபத்தில் சுமார் 15 பேர் உயிரிழந்தனர். இத்தகைய படகு விபத்துக்களைத் தவிர்க்க கடந்த 31—7—1981 அன்று ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் மூலமாகச் சில விதிமுறைகள் அந்தப் பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு சுமார் 10 விதிமுறைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. காலை ஆறு மணியிலிருந்து மாலை 6 மணிவரைதான் படகுகள், தோணிகள் விடப்பட வேண்டும். தோணிகளின் விட்டம் எட்டு அடிக்குக் குறையாமல் இருக்க வேண்டும். ஒரு படகில் 10 பேர் மட்டும்தான் பயணம் செய்ய அனுமதிக்கப்படவேண்டும். பயணிகளையும் பிராணிகளையும் ஓரே படகில் ஏற்றக்கூடாது. சுமைகள் எடுத்துச் செல்வதானால், 1800 பவுண்டு அல்லது அதற்குக் குறைந்ததான எடையுள்ளதாக இருக்க வேண்டும். வானிலை சாதாரணமாக இருக்கும்போது, படகை இருவர் கையாள வேண்டும். வெள்ளப் பெருக்குக் காலங்களில் படகை மேலாண்மை செய்ய மேலும் ஒருவர் தேவைப்படும். உள் குத்தகை (சப் லீஸ்) அனுமதிக்கப்பட மாட்டாது. ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்டவர்கள் தோணித் துறையையும் கால நிலையையும் ஆய்வு செய்ய (செக் அப்) வேண்டும். ஊராட்சி ஒன்றிய ஆணையரோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவரோ தோணியின் நிலையையும் ஆய்வு செய்து சரிபார்த்ததாக ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஆட்சியருக்கு அறிவிக்க வேண்டும். இப்படி 10 விதிமுறைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த விபத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு எவ்வளவு பணம் மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்பட்டது என்பதுபற்றிய குறிப்பு என்னிடம் இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** படகுகளில் மக்களை ஏற்றிச் செல்லும்போது, சில பகுதிகளில் இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படுவது நமது கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன. எனவே படகுப் போக்குவரத்து அவசியம் என்று கருதுகிற எல்லா இடங்களிலும் விபத்துக்களைத் தவிர்க்கும் வகையில் அரசு விரைவாகப் பாலங்கள் கட்டும் முயற்சிகளை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** அப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் பாலம் கட்டுவது என்றால், அதற்கு எவ்வளவு கோடி பணம் தேவைப்படும் என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். காவிரி ஆற்றின் குறுக்கே ஒரு





பாலம் கட்டுவதென்றாலும் சுமார் 1 அல்லது 2 கோடி ரூபாய்க்கு மேல் ஆகும். அந்தப் பகுதிகளில் பல்வேறு கிராமங்கள் இருக்கின்றன. எனவே ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பாலம் கட்டுவது என்று விரும்பினால் பல கோடி ரூபாய்கள் செலவாகும் என்பதால் அது முடியாத காரியம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம்:** இது சேலம் மாவட்டத்தில் ஏற்பட்ட இரண்டாவது படகு விபத்து. உள்ளாட்சித் துறை என்னதான் விதிமுறைகளைச் சொல்லி அவற்றைக் கண்டிப்பாக அமுல்படுத்த வேண்டும் என்று சொன்னாலும், இதைக் குத்தகைக்கு எடுக்கக்கூடியவர்கள் மிகவும் அனுபவம் குறைந்த இளம் பிள்ளைகளை வைத்து படகோட்டும் முயற்சியில் ஈடுபடுவதால், இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறத்தான் செய்யும். எனவே காவிரி ஆற்றில் திருச்செங்கோடு பகுதியிலும், வேலூர் பகுதியில் சோழகிராமணி பகுதியிலும் உள்ள மக்கள் இக்கரையிலிருந்து அக்கரைக்குக் கண்டிப்பாகச் செல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது எனவே இத்தகைய விபத்துக்களை நிரந்தரமாகத் தடுக்கும் வகையில் உள்ளாட்சித் துறை, ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒன்றிரண்டு விசைப் படகுகளை அளித்து அந்தப் பகுதிகளில் விட வேண்டும் என்றும் நாட்டுப் படகு கூடாது என்றும் சொல்லும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** அதுபோன்ற உத்தேசம் இல்லை. என்னிடம் உள்ள குறிப்பிலும் அப்படிப்பட்ட உத்தேசம் இருப்பதாகத் தெரியவில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** பெரும்பான்மையான படகு விபத்துக்கள் இரவு நேரத்தில்தான் ஏற்படுகின்றன. அப்போதுதான் தோணிகள் ஒன்றோடொன்று மோதிக்கொள்கின்றன என்று சொல்லப்படுகிறது. எனவே பாரதியார் பாடிய வகையில் "பாட்டிசைத்துக் கொண்டே தோணிகளையும், படகுகளையும் விட்டால்" விபத்துக்கள் ஏற்படாது என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** அதற்குச் சேர நன்னாட்டிளம் பெண்கள் தேவை. அப்படி இருந்தால்தான் பாரதியின் கனவு நினைவாகும். அப்படிப்பட்ட நிலை இப்போதில்லை.

**திரு. சி. இராமலிங்கம்:** அந்தப் பகுதிகளில் அதிகமான விபத்துக்கள் நடைபெறுகின்றன என்றும் அங்கெல்லாம் பாலங்களைக் கட்ட கோடிக்கணக்கான ரூபாய் செலவாகும் என்றும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

எனவே அங்கெல்லாம் வடநாட்டில் இருப்பதைப்போல் ஊஞ்சல் அல்லது தொங்குபாலம் அமைத்து மக்களுக்கு வசதி செய்து கொடுக்கும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** ஊஞ்சல் பாலம் அமைப்பது பயங்கரமான நிலையை உருவாக்கும். அது இயற்கைக்கு விரோதமாக இருக்கும். அதுவுமில்லாமல் நாம் தற்போது விஞ்ஞான யுகத்தில் இருந்து கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் ஊஞ்சல் பாலம் கட்டுவது என்பது நாம் மீண்டும் பழைய முறைக்கே தாவிவிடுவோமோ என்ற எண்ணத்தைத் தான் ஏற்படுத்தும். எனவே அந்த நிலை தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## பாரதியார் நூற்றாண்டு விழா.

* 263 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பாரதியார் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட, தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் நிதி உதவி அளிக்க அரசு முடிவெடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவிற்கான செலவை ஊராட்சி ஒன்றியங்களின் பொது நிதியிலிருந்து ஏற்றுக்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது.

(இ) இவ்விழாவிற்காக ஒவ்வோர் ஒன்றியமும் ரூ. 1,000 செலவு செய்யலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள தொகையினைக் கொண்டு விழாவை நடத்துவதற்கு ஏதாவது குறிப்பிட்ட தேதிகளை அரசு சொல்லியிருக்கிறதா? இது வரை எத்தனை ஒன்றியங்களில் அவ்வாறு விழாக்கள் நடத்தப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** ஊராட்சி ஒன்றியங்களில் மட்டுமல்லாமல், நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் மற்றும் மாவட்டத் தலைநகர்களிலும் பாரதியார் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட வேண்டும் என்ற





பெரிய திட்டம் போட்டு செயல்படுத்திக்கொண்டு வருகிறோம். ஓராண்டுக் காலத்தில் ஒவ்வொரு நாளும் ஒரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு நிகழ்ச்சியாக நடத்தப்பட வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம். தமிழகத்தில் மொத்தம் 378 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. ஓராண்டிற்கு 365 நாட்கள் இருக்கின்றன. எனவே குறைந்தது ஒரு ஒன்றியத்திலாவது இந்த நிகழ்ச்சி நடக்க வேண்டும் என்ற முறையில் ஒவ்வொரு நாளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கடந்த டிசம்பர் மாதம் 12 ஆம் தேதியிலிருந்து கணக்குப் பார்த்தால், எத்தனை நாட்கள் வருகின்றனவோ அத்தனை விழாக்கள் நடைபெற்றிருக்கின்றன என்று எடுத்துக்கொள்ளலாம். அப்படி விழா நடைபெறும்போது, அந்தப் பகுதியில் புதிய கட்டிடங்கள் இருந்தால், அந்தக் கட்டிடங்களுக்கு பாரதியார் நூற்றாண்டு நினைவுக் கட்டிடம் என்ற பெயர் வைக்க வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டிருக்கிறது.

**திரு. சி. இராமலிங்கம்:** பாரதியார் விழாவை ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் நடத்துகின்றார்களா அல்லது கல்வி இலாக்கா நடத்துகிறதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** ஊராட்சி ஒன்றியங்களில் நடத்தப்படும் நிகழ்ச்சிகள் ஊராட்சி ஒன்றிய ஆணையர்களால் நடத்தப்படுகின்றன. அதைப்போலவே நகராட்சி மன்றப் பகுதிகளில் நகராட்சி ஆணையர்களாலும் மாநகராட்சிப் பகுதிகளில் மாநகராட்சி ஆணையர்களாலும் இந்நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** பாரதியார் விழா நடத்துவதுபற்றி அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்ட குறிப்பு பற்றியும் நடைபெறுகிற நிகழ்ச்சிகள்பற்றியும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்ட குறிப்புகளில் அந்தந்தத் தொகுதிகளில் இருக்கிற சட்டமன்ற மேலவை மற்றும் பேரவை உறுப்பினர்களைக் கட்டாயமாக அழைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறதா? அல்லது வேறு முறையில் இன்னின்னாரைத்தான் அழைக்க வேண்டும் என்று அரசு பட்டியல் ஏதேனும் தந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** இந்த விழா நாள் முழுவதுமாக நடைபெற வேண்டும். அதில் பட்டி மன்றம், கருத்தரங்குகள், கவிதைப் போட்டி ஆகியவைகளையும் வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதோடு அந்தப் பகுதியில் இருக்கிற தமிழ் அறிஞர்கள் மற்றும் தமிழ்ப்புலமை பெற்றவர்கள் ஆகியோரையும் சட்டமன்றப் பேரவை,

[திரு. ப. குழந்தைவேலு] [1982 ஏப்ரல் 7]

மேலவை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் வரவழைத்து கலந்து கொள்ளும்படி செய்ய வேண்டுமென்றும் அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப் பட்டிருக்கின்றன.

**இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தனிப்பள்ளி.**

* 264. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கென தனியாகப் பள்ளி ஆரம்பிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) மதுரை மாவட்டத்தில் இளம்பிள்ளை வாதத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஏழைக் குழந்தைகளுக்கென 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் முதல் சமூகநலத் துறையின்கீழ் ஒரு தனி பள்ளிக்கூடம் செயல்பட்டு வருகிறது.

(இ) இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட 5 வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் குழந்தைகளுக்கு பொதுக் கல்வி போதிக்கப்படுகிறது. 1-வது வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை வகுப்புகள் உள்ளன. ஒவ்வொரு பிள்ளைக்கும் அரசு உணவுக்காக மாதம் ரூ. 36 செலவு செய்கிறது. இவர்களுக்கு இதைத்தவிர உடை, மருத்துவக் கருவிகள், தங்குமிடம் அனைத்தும் இலவசமாகவே வழங்கப்படுகின்றன.

(பிற்பகல் 4-30)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில், இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட 7 குழந்தைகளுக்காக பள்ளி நடைபெறுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மாநிலம் முழுவதும் இவ்வாறு இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுடைய எண்ணிக்கைக்கேற்ப, இதுபோன்ற சிறப்புப் பள்ளிகளை அனைத்து மாவட்டங்களிலும் நடத்துகின்ற கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: 1981 ஆம் ஆண்டுதான் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பள்ளி ஆரம்பித்திருக்கிறோம். இனிமேல் நிதிநிலையைப் பொறுத்து எந்தெந்த மாவட்டத்தில் ஆரம்பிக்க வேண்டுமோ அதைப்பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும்.



1982 ஏப்ரல் 7]

திரு. பா. ரா. தாமஸ் : மதுரை மாவட்டத்தில் உள்ள இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்கு பல்வேறு விதமான பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தக் குழந்தைகளை சிறப்பாக, சரியாக வளர்க்க வேண்டுமென்றால்,—பாதுகாக்க வேண்டுமென்றால், போதுமான நிதி வசதி தேவை. இப்போது ஒவ்வொரு பிள்ளைக்கும் மாதம் 36 ரூபாய் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுகூட போதாது. இந்த உதவித் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று அங்கு உள்ளவர்கள் சொல்கிறார்கள். ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்கப்படும் உதவித் தொகையை அதிகப்படுத்திக் கொடுத்தால்தான், அவர்களைப் பராமரிக்கவும், சத்துணவைக் கொடுக்கவும், நல்ல பயிற்சி கொடுக்க, அவர்களை சுகப்படுத்தவும் நல்ல நிலை உருவாகும். அந்த முறையிலே இந்த உதவித் தொகையை அதிகப்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: உணவுக்காக மட்டும் மாதம் 36 ரூபாய் கொடுக்கிறோம். உடை இலவசமாக வழங்குகிறோம், தங்கும் இடம் இலவசமாக வழங்குகிறோம், மருத்துவ வசதி இலவசமாக வழங்குகிறோம். இவை எல்லாவற்றையும் கூட்டிப் பார்த்தால். அதிகமாக இருக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. உரிமைப் பிரச்சினை.

**சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அங்கீகாரம் பெறாத சங்கங்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் அனுப்பும் கடிதங்களுக்கு பதில் அனுப்பத் தேவையில்லை என்ற ஆணை குறித்து.**

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திருவாளர்கள் க. மீனாட்சிசுந்தரம் மற்றும் செ. முத்துசாமி ஆகியோர் கல்வித்துறை செயலாளர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோர் மீது ஓர் உரிமைப் பிரச்சினையை மேலவையில் 19—3—1982 அன்று எழுப்பினார்கள். அதன் மீது மாண்புமிகு கல்வி அமைச்சர் தனது கருத்தினைத் தெரிவித்ததுடன் எனது தீர்ப்பினை பின்னர் வழங்குவதாகக் கூறியிருந்தேன்.

நான் இது குறித்து பிரச்சினைக்குரிய அரசுத் துறைக் கடிதத்தைப் பார்த்தேன். பத்தி இரண்டில் பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, மற்றும் தொழிற்கல்வி சார்ந்த ஆசிரியர்களின் பணி நிலைமை சம்பந்தமான அனைத்து ஆணைகளின் நகலினை ஆசிரியர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1982 ஏப்ரல் 7

உறுப்பினர்களுக்கு தகவலுக்காக அனுப்பி வைக்க வேண்டுமென்று 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் வெளியிடப்பட்ட அரசாணையில் ஆணையிடப் பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

பத்தி மூன்றில் சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அங்கீகாரம் பெறாத சங்கங்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் அனுப்பும் கடிதங்களுக்கு அவர்கள் அங்கீகரிக்கப்படாத ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் பதில் அனுப்பத் தேவையில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அக்கடிதங்களின் மீது வெளியிடப்படும் முடிவான ஆணைகளைப் பொறுத்தமட்டில் பத்தி இரண்டில் குறிப்பிட்டுள்ள ஆணைகளின்படி செயல் படவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதிலிருந்து பார்க்கும்போது ஆசிரியர்கள் பணி நிலைமை சம்பந்தமான எல்லாவிதமான பொது ஆணைகளின் (மந்தண ஆணைகள் தவிர) நகல்களும், அரசு அங்கீகாரம் பெறாத சங்கங்கள் கொடுத்த கடிதமாயினும் அதன்மீது எடுத்த முடிவான ஆணைகளை ஆசிரியர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் யாவருக்கும் அனுப்ப வேண்டு மென்பது தெளிவாகிறது. இதன் மூலம் ஆசிரியர்-தொகுதி பிரதிநிதிகளைப் புறக்கணிப்பது அரசின் நோக்கமல்ல என்பதும் புலனாகின்றது.

'மே' பாராளுமன்ற நடைமுறை நூலின்படி, "ஒரு செயல் அல்லது விடுபாடு அவையின் நடவடிக்கைக்குத் தடையாக அல்லது இடையூறாக இருந் தாலும், அல்லது அத்தகைய அவையின் ஒரு உறுப்பினர் அல்லது அதிகாரி தனது கடமையைச் செய்வதில் அது தடையாக அல்லது இடையூறாக இருந்தாலும், அல்லது அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவையை அவமதிப்பதாகும் என்று ஆகும்" என்று கூறப்பட்டுள்ளது. இந்த உரிமை, உறுப்பினர்கள் இந்த அவையின் உறுப்பினர் என்ற முறையில் அவையின் கடமைகளை ஆற்றும்போதுதான் அவர்களுக்கு உண்டு.

அரசியல் அமைப்புச் சட்டம் 194 (3)-வது பிரிவின் கீழ் அவை உறுப்பினர் என்ற முறையில் சில சிறப்புரிமைகள் உள்ளன. ஆனால் அவை ஆசிரியர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் என்ற வகையில் அவர் பிறிதொரு அமைப்பில் வகிக்கும் பதவிக்கும் பொருந்த வேண்டுமென்று கூறுவது பொருத்தமாகாது.

உரிமைப் பிரச்சினை எழுப்பிய இரண்டு உறுப்பினர்களுக்கும் பதிலளித்துப் பேசிய மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், அவை உறுப்பினர்கள் என்ற நிலையிலுள்ள ஆசிரியர் பிரதிநிதிகளைப் புறக்கணிக்கும் நோக்கம் அரசுக்கோ.



1982 ஏப்ரல் 7] [மேலவைத் தலைவர்]

கல்வித் துறை அதிகாரிகளுக்கோ இல்லையென்பதைத் தெளிவாக்கி யிருக்கிறார்கள். எனவே, இதில் உரிமை மீறல் ஏதும் இல்லை எனத் தீர்ப்பளிக்கிறேன்.

பொதுவாக சட்டமன்ற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட ஆணைகளைப் பிறப்பிக்கும்போது, அரசும், அரசு அலுவலர்களும் சற்று கவனமாக இருப்பது நல்லது. அவர்கள் தெந்தோ, தெரியாமலோ சட்டமன்ற உறுப்பி னர்களின் மனதைப் புண்படுத்தும் வகையில் ஆணைக்கான வார்த்தைகளை அமைத்துவிட்டார்கள் என்ற எண்ணம் உறுப்பினர்களுக்கு ஏற்படுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

3. அறிவிப்புகள்.

(1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் 8-4-1982 அன்று காலை 9.30 மணிக்குக் கூடலாம் என்றும் அப்போது அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

(2) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு எதிர் பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவை ஆய்விற்கு எடுத்துக் கொள்வதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(3) பேரவையிலிருந்து செய்திகள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறை வேற்றப்பட்ட அரசியலமைப்புச் சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

(1) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1982).

(2) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1982).

பேரவையிலிருந்து சய்திகள்— தாடர்ச்சி

(3) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1982).

சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :

(1) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1982).

(2) 1982 ஆம் ஆண்டு மாகாண சிறு வழக்கு நீதி மன்றங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1982).

(3) 1982 ஆம் ஆண்டு சென்னை மாநகர சிவில் வழக்கு நீதிமன்றம், மாநிலச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் (திருத்த) ரத்துச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1982.)

(4) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1982).

(5) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1981).

**4. கவன ஈர்ப்பு.**

(1) சொத்து விற்பனை, சொத்து மாற்றம் அல்லது சொத்து பிரிவினை, அதுபோன்ற ஏனைய நடவடிக்கை தொடர்பான ஆவணங்களைப் பதிவுத் துறை நிர்ணயித்த மதிப்பீட்டு முறைகள் திருத்தியமைத்ததாலும், அதிகாரிகள் மனம்போனபடி நடப்பதாலும் பொதுமக்கள் அடையும் பேரிடர்பாடு குறித்து.

THIRU A. R. DAMODARAN : Sir, I wish to call the attention of the Honorable the Minister for Rural Industries to a matter of urgent public importance, namely, the revised valuation guidelines fixed by the Revenue|Registration Department for registration of



documents involving sale, transfer or partition and other such transactions and the tremendous hardship caused to the general public because of the increase in valuation arbitrarily ordered by the authorities and the necessity to reduce the same.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மேலவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய அறிக்கை @ சபையில் வைக்கப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODRAN : Sir, in his statement, the Hon. Minister has stated that complaints about the present revision have been received only in a few cases and that no complaints have been received in a majority of the districts. While I do not wish to controvert what has been stated in the statement, may I ask the Hon. Minister whether he will call for a report from all the districts as to how many cases have been referred to Revenue Divisional Officers, involving disputes regarding the registration of documents, in which case he would get a much better picture of how much hardship is being caused to the public?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல ஆர்.டி.ஓ. அவர்களிடமிருந்து அப்படி எத்தனை மனுக்கள் வந்திருக்கின்றன, அதன் மீது எப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதுபற்றி நிச்சயமாக அரசு கேட்டு துரிதமாகப் பைசல் செய்யும்.

THIRU A. R. DAMODARAN : Sir may I also bring to the attention of the Hon. Minister that these Revenue Divisional Officers are not able to complete this work at all? In this sphare, he may also ask and find out for how many motions the documents are kept pending in the offices of the Revenue Divisional Officers any without any decision being given. If thhey are being delayed, the Hon. Minister mav examine whether some other procedure can be evolved to short-circuit the process so that the disputes can be speedily settled.

(பிற்பகல் 4.40)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் கவனத்தில் கொள்ளப்பட்டு துரிதமாக்கப்படும்.

---

@312, 314 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(2) குமரி மாவட்டம் தோவாளை தாலுகா தாழக்குடி-பூதப்பாண்டி ரோடு, வீரநாராயண மங்கலத்திலிருந்து நாகர்கோவில் சென்னை செல்லும் தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும் ரோடு மற்றும் இறச்சகுளம்-தாழக்குடி செல்லும் ரோடு தொடர்ந்து பல காலம் பழுது பார்க்கப் படாமல் இருப்பதால் பஸ் போக்குவரத்து பாதிக்கப்படுவது குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"குமரி மாவட்டம் தோவாளை தாலுகா தாழக்குடி-பூதப்பாண்டி ரோடு, வீரநாராயண மங்கலத்திலிருந்து நாகர்கோவில் சென்னை செல்லும் தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும் ரோடு மற்றும் இறச்சகுளம்-தாழக்குடி செல்லும் ரோடு தொடர்ந்து பல காலம் பழுது பார்க்கப்படாமல் இருப்பதால் பஸ் போக்குவரத்து பாதிக்கப்படுவது குறித்து."

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் 4 பிரிவுகளாகப் போடப்பட்டு, ஒவ்வொரு சாலையைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். சாலைகள் எல்லாம் பழுது பட்டிருக்கின்றன என்பதை ஒப்புக்கொண்டு இப்போது வேலைகள் எல்லாம் துரிதமாக நடைபெறுகின்றன என்று சொல்லப்படுகிறது. கடந்த 6, 7 மாதங்களாக இந்தச் சாலைகள் போக்குவரத்திற்கே பயன்படுத்த முடியாத நிலையில், வண்டிகள் போகமுடியாத நிலையில் இருந்தன. அவைகளை யெல்லாம் தனியாக கவனித்து அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா? அதோடு பிரிவு 2ல் வீரநாராயண மங்கலம்-தாழக்குடி ரோடு என்று சொல்லப் பட்டிருக்கிறது. நான் வீரநாராயண மங்கலத்திலிருந்து நாகர்கோவில் சென்னை செல்லும் தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும் ரோடு என்றுதான் கேட்டிருந்தேன். அவர்கள் வேறு ஒரு ரோட்டைப் பற்றிச் சொல்லியிருக் கிறார்கள். வீரநாராயண மங்கலம்-தாழக்குடி ரோடு என்று சொல்வது, இறச்சகுளம்-தாழக்குடி ரோட்டினுடைய ஒரு பகுதி. ஆகவே அதுவும் தவறுதலாக நமக்குக் கொடுத்திருக்கின்ற தகவல். இதையும் அரசு பரிசீலனை செய்ய வேண்டும். வீரநாராயண மங்கலத்திலிருந்து நாகர்கோவில்-சென்னை செல்லும் தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும் ரோடுபற்றி இங்கே ஒன்றும்

@ 314-316 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



குமரி மாவட்டம் தோவாளை தாலுக்கா தாழைக்குடி—பூதப் பாண்டி ரோடு, வீர நாராயண பஸ்நிலத்திலிருந்து நாகர் கோவில்-சென்னை செல்லும் தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும் ரோடு மற்றும் இறச்சகுளம்-தாழைக்குடி செல்லும் ரோடு தொடர்ந்து பல காலம் பழுது பார்க்கப் படாமல் இருப்பதால் பஸ் போக்குவரத்து பாதிக்கப் படுவது குறித்து.



சொல்லவில்லை. அதிலே சைக்கிளில்கூட ஆள் போக முடியாத நிலை இருக்கிறது. மாட்டு வண்டியிலேகூட போகமுடியாத நிலை இருக்கிறது. ஆகவே அதையும் அரசு கவனிக்க முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, வீரநாராயண மங்கலத்திலிருந்து நாகர்கோவில்-சென்னை செல்லும் தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும் ரோடு என்று சொன்னால், அதையும் உடனடியாக கவனிக்கலாம். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அந்த தேசிய நெடுஞ்சாலை பழுதுபட்டிருக்கிறது என்று சொல்கின்றார்கள். இது ஒரு இதர மாவட்ட தார் ரோடாக இருந்துகொண்டிருக்கிறது. அது உடனடியாகக் கவனிக்கப்படும்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இனிமேல் எப்போதாவது கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகின்றபோது அப்போது திடீரென்று ஒரு விதமான அறிவிப்பும் இல்லாமல் இந்த 3 சாலைகளையும் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அந்த சமாதானக் கமிட்டியில் சேர்த்துவிட்டால் வந்துவிடுகிறார்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிற வேகத்தில் அங்கு வேலைகள் நடக்கவில்லை. அவர்கள் அதைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டும். அந்தப் பகுதி விவசாயிகள் வாழ்கின்ற பகுதி. அவர்கள் நெல், உரம் இவைகள் எல்லாம் கொண்டுபோக வேண்டிய பகுதியாகும் அவைகளைப் பார்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்துவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இதிலே தாழக்குடி-பூதப்பாண்டி ரோடு மட்டும்தான் இன்னும் போக்குவரத்திற்குக்கூட சரியில்லாமல் மோசமாக இருக்கிறது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பாக்கி இருக்கக்கூடிய சாலையெல்லாம் கடந்த 6—12—1982க்கு முன்னாலே பாரமரிக்கப்பட்டிருப் பதாக நாம் இங்கே அறிக்கை கொடுத்திருக்கிறோம். அதிலேகூட மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதைப் போல எனக்கும் சந்தேகம்

இருக்கிறது. ஏனென்று சொன்னால், நாம் எல்லாம் நேரிலே பார்ப்பதில்லை என்ற எண்ணத்தின் அடிப்படையிலே இப்படி என்னிடத்திலே கொடுக்கப் பட்டிருக்கலாம். ஆகவே அவர்கள் சொல்வதுபோன்று இருந்தால் நான் திருநெல்வேலிக்கு வருகின்ற நேரத்தில் கன்னியாகுமரிக்கும் வந்து நேரில் பார்த்து உடனடியாக ஆகவேண்டியதைச் செய்வேன்.

## 5. அரசின் தீர்மானங்கள்.

### 1953 ஆம் ஆண்டு எஸ்டேட்டுத் தீர்வைச் சட்டத்திற்கு திருத்தம் குறித்து.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

" அரசியலமைப்புச் சட்டத்தின் 252 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) பகுதியின்படி, தமிழ்நாடு சட்டமன்ற இரு அவைகளிலும் நிறைவேறிய ஒரு தீர்மானத்தை ஒட்டி, வேளாண்மை நிலம் குறித்த எஸ்டேட்டுத் தீர்வை நாடாளுமன்றம் நிறைவேற்றிய 1953 ஆம் ஆண்டு எஸ்டேட்டுத் தீர்வைச் சட்டத்தின்படி (மத்திய சட்டம் 34:1953) தமிழ்நாடு மாநிலத்தில் இப்போது முறைப்படுத்தப்படுகிறது என்பதாலும் ;

கீழே சொல்லியுள்ளவை வேளாண்மை நிலம் குறித்த எஸ்டேட்டுத் தீர்வைக்குத் தொடர்புள்ள வரையில் அவை நாடாளுமன்றத்தில் சட்டமொன்று இயற்றுவதால் தமிழ்நாடு மாநிலத்தில் முறைப்படுத்தப்பட வேண்டும் என்பதும், அதற்காக மேற்சொன்ன சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதும் விரும்பத்தக்கது என இம்மேலவைக்கும் தோன்றுகிறபடியாலும் :—

( ) எஸ்டேட்டுத் தீர்வைக்குரிய விலக்கு வரையறையை ரூ. 50,000 லிருந்து ரூ. 1,50,000க்கு உயர்த்துதல் ; சொத்து மதிப்பு ரூ. 1,50,001 இல் இருந்து ரூ. 2,00,000 வரையிலமைந்த முதல்படி நிலையில் 10 சதவீத எஸ்டேட்டு தீர்வைக்கு வகை செய்தல் ;



(ii) கூட்டுறவு வீட்டுவசதிச் சங்க வீடு கட்டும் திட்டத்தின் கீழ் அச் சங்க உறுப்பினர் ஒருவருக்குக் கட்டிடம் அல்லது அதன் ஒரு பகுதி ஒதுக்கப் பட்டால் அல்லது குத்தகைக்கு விடப்பட்டால், அவ்வுறுப்பினர், அக்கட்டிடத்தின் அல்லது அதன் ஒரு பகுதியின் உடைமையாளர் என்று கருதப்பட வேண்டும் என்பதற்கு வகை செய்தல் ;

(iii) இறந்தவருக்குச் சொந்தமாயிருந்த குடியிருப்பு வீடு அல்லது அதன் ஒரு பகுதி, 1957 ஆம் ஆண்டு செல்வ வரிச் சட்டத்தின் (மத்திய சட்டம் 27/1957) அடிப்படையில் மதிப்பிடப்பட்டவாறே இது குறித்தும் மதிப்பிடப்படும்.

ஆகவே இப்போது, அரசியலமைப்புச் சட்டத்தின் 252ஆம் பிரிவுக்கிணங்க இம்மேலவை, 1953ம் ஆண்டு எஸ்டேட்டுத் தீர்வைச் சட்டம் (மத்தியச் சட்டம் 34/1953) மேலே சொல்லியவற்றிற்கு 1981 மார்ச்சு 1 ஆம் தேதியிலிருந்து வகை செய்ய நாடாளுமன்றத்தால் திருத்தப்படலாம் என்று இதனால் தீர்மானிக்கிறது "

என்று முன்மொழிகிறேன்.

THIRU G. VASANTHA PAI : On a point of order, Sir. I think that items (ii) and (iii) cannot relate to agricultural land. Will the Hon. Chairman please note that items (ii) and (iii) mentioned in the Resolution moved by the Hcn. the Minister for Revenue cannot relate to agricultural land because they obviously relate to buildings?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் பதில் பேச்சிலே பதில் கிடைக்குமே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு

திரு. ஏ. ஆர். தாமோதரன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீர்மானம் என்னவென்றே சொல்லவில்லையே.

மாண்புமிகு மேலவைத் தலைவர் . அமைச்சர் அவர்கள் தீர்மானத்தைப் படித்து விடலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அது இரண்டு பக்கங்கள் இருக்கின்றன. எஸ்டேட் டியூட்டியை மத்திய சர்க்கார் அதிகப்படுத்தியிருக்கிறது. அதைப்பற்றிச் சொல்லவேண்டுமென்றால் எஸ்டேட் டியூட்டி உரிய விதிவிலக்கு வரையறை ரூ. 50,000-லிருந்து ரூ. 1,50,000க்கு உயர்த்தப் பட்டிருக்கிறது. முதலிலே ரூ. 50,000 என்று இருந்ததால், அவர்களுக்கு வரி இருந்தது. இப்போது அது ரூ. 1,50,000 என்று இருக்க வேண்டி இருக்கிறது. சொத்து மதிப்பு ரூ. 1,50,000-லிருந்து ரூ. 2,00,000 ஆக ஆகியிருக்கிறது. இப்படிப்பட்ட தீர்மானங்கள்தான் இருக்கின்றன. இன்றைக்கு மத்தியப்

போராக திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். அப்படிக் கொண்டு வததால் எஸ்டேட் டியூட்டி செலுத்துபவருக்கு நன்மைதான் பயக்கிறது. டியூட்டியிலே லோயர் ஆக இருந்த மதிப்பை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். அதற்கு நம்முடைய மாநில அரசு அனுமதி வழங்குவதைத் தவிர வேறு ஒன்றுமில்லை. அவர்கள் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதைத் தவிர, வேறு ஒன்றுமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI: May I now raise the point of order, Sir? Because the Hon. Minister is referring only to item (i), will he delete items (ii) and (iii)? They do not relate to agricultural land at all.

The Hon. THIRU S. D. SOMASUNDARAM: This has to go to the Council of States. Then, the hon. Member can speak of the matter in Parliament.

THIRU G. VASANTHA PAI: But the Hon. Minister has raised it here and he has asked us to approve of it. Why should we speak of it there? The Resolution has been moved in this House and it says, "And whereas it appears to this Council to be desirable that the matters set out below in so far as they relate to estate duty in respect of agricultural land should be regulated..................." Items (ii) and (iii) do not relate to agricultural land at all.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவைமுன் உள்ள பிரச்சினை:

"அரசியலமைப்புச் சட்டத்தின் 252 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) பகுதியின்படி தமிழ்நாடு சட்டமன்ற இரு அவைகளிலும் நிறைவேறிய தீர்மானத்தை ஒட்டி, வேளாண்மை நிலம் குறித்த எஸ்டேட்டுத் தீர்வை நாடாளுமன்றம் நிறைவேற்றிய 1953 ஆம் ஆண்டு எஸ்டேட்டுத் தீர்வைச் சட்டத்தின்படி (மத்திய சட்டம் 34/1953) தமிழ்நாடு மாநிலத்தில் இப்போது முறைப்படுத்தப்படுகிறது என்பதாலும்;

கீழே சொல்லியுள்ளவை வேளாண்மை நிலம் குறித்த எஸ்டேட்டுத் தீர்வைக்குத் தொடர்புள்ள வரையில் அவை நாடாளுமன்றத்தில் சட்டமொன்று இயற்றுவதால் தமிழ்நாடு மாநிலத்தில் முறைப்படுத்தப்பட வேண்டும் என்பதும் அதற்காக மேற்சொன்ன சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதும் விரும்பத்தக்கது என இம்மேலவைக்கும் தோன்றுகிறபடியாலும்:—



(i) எஸ்டேட்டுத் தீர்வைக்குரிய விலக்கு வரையறையை ரூ. 50,000 லிருந்து ரூ. 1,50,000க்கு உயர்த்துதல்; சொத்து மதிப்பு ரூ. 1,50,001 இல் இருந்து ரூ. 2,00,000 வரையிலமைந்த முதல்படி நிலையில் 10 சதவீத எஸ்டேட்டு தீர்வைக்கு வகை செய்தல்;

(ii) கூட்டுறவு வீட்டுவசதிச் சங்க வீடுகட்டும் திட்டத்தின்கீழ் அச்சங்க உறுப்பினர் ஒருவருக்குக் கட்டிடம் அல்லது அதன் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டால் அல்லது குத்தகைக்கு விடப்பட்டால், அவ்வுறுப்பினர், அக்கட்டிடத்தின் அல்லது அதன் ஒரு பகுதியின் உரிமையாளர் என்று கருதப்பட வேண்டும் என்பதற்கு வகை செய்தல்;

(iii) இறந்தவருக்குச் சொந்தமாயிருந்த குடியிருப்பு வீடு அல்லது அதன் ஒரு பகுதி, 1957 ஆம் ஆண்டு செல்வ வரிச் சட்டத்தின் (மத்திய சட்டம் 27/1957) அடிப்படையில் மதிப்பிட்டவாறே இது குறித்தும் மதிப்பிடப்படும்.

ஆகவே, இப்போது, அரசியலமைப்புச் சட்டத்தின் 252 ஆம் பிரிவுக்கிணங்க, இம்மேலவை, 1953 ஆம் ஆண்டு எஸ்டேட்டுத் தீர்வைச் சட்டம் (மத்திய சட்டம் 34/1953) மேலே சொல்லியவற்றிற்கு 1961 மார்ச்சு 1 ஆம் தேதியிலிருந்து வகை செய்ய நாடாளுமன்றத்தால் திருத்தப்படலாம் என்று இதனால் தீர்மானிக்கிறது".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 6. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1982)—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த விவாதத்திலே கலந்து கொண்டு அரிய பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அதில் எந்தச் சட்ட முன்வடிவுக்கு எதிர்ப்பே இருக்காது என்று நான் கருதினேனோ அதிலே எதிர்ப்பு இருந்தது எனக்கு உண்மையாகவே ஆச்சரியமாக இருந்தது. ஆங்கிலத்தில் சொல்லவேண்டுமென்றால் I was shocked to my heels அந்த அளவுக்கு அதிர்ச்சி ஏற்பட்டுவிட்டது. அதைப்பற்றி இறுதியாகப் பேசுகிறபோது சொல்கிறேன். இந்த உடலுழைப்புத் தொழிலாளர்கள் பற்றி சட்ட

முன்வடிவைக் கொண்டு வருவதற்கு, இதைப்பற்றிப் பரிசீலனை செய்ய குழு அமைப்பது என்பதைப் பற்றி அறிந்துகொள்ளவும் மாண்புமிகு அங்கத்தினர்கள் ஆசைப்படுகிறார்கள்.

The Committee to go into the living conditions of the workers in unorganised industries like Beedi industry in Tamil Nadu.

என்று ஆகிவிட்ட காரணத்தினாலே, இந்தக் கமிட்டியினுடைய பரிந்துரை அந்த அளவுக்கு உபயோகப்படவில்லை.

unorganised Industries like Beedi industry என்று அவர்கள் அலசிப் பார்த்திருக்கிறார்கள். திரு. பார்த்தசாரதி என்ற ஜாயிண்ட் கமிஷனர் அவர்கள் தலைவராக இருந்து 1975 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பரிந்துரை கொடுத்திருக்கிறார்கள். நமக்குப் பொருத்தமாக இதில் எடுத்துக் கொள்ளக்கூடியது. Amelioration of un-organised labour is a part of the Government's total responsibility towards welfare of labour. A stage has been reached where it is trying to enforce the laws that are already on the Statute Book. The Government may have to go all out to improve the legislative coverage over areas and labour force that have not yet been brought within their compass. It is in this context that the Committee feels the desirability of the Government moving in the direction of providing certain minimum conditions of employment by legislation for unorganised labour and supplement them by other welfare measures.

என்ற அளவிலே அவர்கள் சொல்லியிருக்கிறார்களே தவிர, சட்டம் எந்தெந்த வகையிலே அமையவேண்டுமென்று அதிகமான விளக்கம் இல்லை. அடுத்த 'ஆப்சர்வேஷன்' பற்றி எடுத்துச் சொல்லியிருப்பது இந்தப் பரிந்துரைதான்.

"A legislation to ensure certain minimum conditions of employment to the organised workers with a view to protect them against the ills of unemployment or under-employment by means of guaranteeing minimum employment for 20 days in a month or in the alternative for guaranteeing payment of half the minimum wage for that period."

(பிற்பகல் 4-50)

இதுதான் அவர்களுடைய பரிந்துரை. ஆனால் இவை மட்டும் போதாது என்று, இதையும் மனதிலே வைத்து, மகாராட்டிரத்தில் உள்ள சட்டத்தையும்





குஜராத்தில் உள்ள சட்டத்தையும் ஆந்திராவில் உள்ள சட்டத்தையும் பரிசீலனை செய்து இந்த அரசு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறதென்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருமே 'சைல்ட் லேபர்' பற்றிப் பேசினார்கள். 18 ஆம் விதியில் குழந்தைகளை வேலைக்கு அமர்த்தக் கூடாதென்று இருப்பதாலும், 16 வயது முடியாதவர்கள் என்று சொல்லியிருப்பதாலும், அதைப்பற்றி அபிப்பிராயம் தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களுக்கு முன்னதாகப் பேசிய திரு. இராமமூர்த்தி அவர்கள் இதைப்பற்றிச் சொன்ன காரணத்தால், பாரதப் பிரதமர் இதைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறார் என்று சொன்னால், அவருக்கு அது மிகப் பிடித்தமாக இருக்குமென்பதால், பாரதப் பிரதமர் சொல்லியிருப்பதால், அது எல்லோருக்கும் உதவும் என்பதால், சொல்கிறேன். இந்தப் பிராபளம் பற்றி பாரதப் பிரதமர் அவர்கள் சொல்லும்போது,

"This is a socio-economic problem and so deprivation of the livelihood of the children by drastic measures would not solve the problem. The Government should strive to make the living and working conditions of such persons more comfortable and healthy and improve educational facilities as also the economic condition".

என்று சொல்லியிருக்கிறார்கள். இதுதான் பிரைம் மினிஸ்டர் சொன்னது.

This Government (State Government) had already taken steps in this direction to tackle the problem of child labour in a cabinet decision

ஒரு கேபினட் கூட்டத்தில் திரு. ஹரிபன்சிங் அவர்கள் பரிந்துரையை வைத்து, இந்த அரசு சில முடிவுகளை எடுத்திருக்கிறது. அதில் முக்கியமான நான்கைச் சொல்லுவது என் கடமை என்று கருதுகிறேன்.

1. That the provisions of the Act relating to the employment of children may be strictly enforced.

2. That immediate action be taken to shift operation to the villages where the children reside by putting up work sheds in villages by employees or by co-operative societies.

3. That a comprehensive scheme be worked out with sufficient incentives to attend schools and give them education side by side with their work wherever possible.

4. That the minimum wages be revised with a view to increase the earning capacity of workers and that the board under the chairmanship of the Collector of Ramanthapuram with representation to employers and labour unions be constituted to ensure welfare measures to children employed in the factories and co-ordinate the activities of the various agencies involved in the problem of child labour

என்று கேபினட் முடிவெடுத்திருக்கிறது. அந்த முடிவிற்கேற்ப இராமநாதபுரம் கலெக்டர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசின் கருத்துக்கேற்ப ஸ்டேட் லெவல் போர்ட், குழந்தைகளுடைய பிரச்சினையைத் தீர்க்க பரிசீலனை செய்வதற்காக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின் தலைவராக நான் பணியாற்றுகிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லுகிற நிலையிலேயிருந்து பார்க்கிறபோது, அவர்களுடைய சட்டமுன்வடிவு 18வது பிரிவிலே,

"Prohibition of employment of children: No child shall be required or allowed to work in any scheduled employment"

என்பது முழுமையான அழுத்தத்தோடு கடைப்பிடிப்பது மாநில அரசு என்று பொருள் கொள்ளலாமா? இவ்வளவு திட்டவட்டமாக இல்லாமல், எலாஸ்டிக்காகக் கொண்டு வந்தால், சட்டத்தை மீறும் நிலைமை ஏற்படாது. அதைத் தவிர்த்திருக்கலாமே.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு மேலவை உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் நன்றாக ஆங்கிலம் தெரிந்தவர்கள். வழக்கறிஞர். "This is a Social Economic Problem" என்று இந்தப் பிரச்சினை பற்றி அவர்கள் பேசும்போது நான் இருந்தேன். டெல்லியில், பிரதமர் பேசும்போது இருந்தேன் எச்சரிக்கையாக 'டீல்' பண்ண வேண்டுமென்பதைத்தான் அவர்கள் சொன்னார்கள். எந்தெந்தக் குழந்தைகள் 16 வயதிற்குள் வேலை செய்கிறார்கள் என்று 80,000 போலீஸ் காரரையும் அனுப்பி, கண்டுபிடித்து, அத்தனை குழந்தைகளையும் சிறையில் வைத்தால், பல குடும்பங்கள் பட்டினி கிடக்கும் நிலைமை ஏற்படும்.



To increase the earning capacity of the workers—I mean parents பெற்றோர்களுடைய வருவாயை அதிகரிக்க வேண்டும். பள்ளியும் வேலை செய்யும் இடமும் அருகில் வர வேண்டும். மிக எச்சரிக்கையோடு, நிதானமாக, புத்திசாலித்தனமாக, வம்பை விலைக்கு வாங்காமல், சில குடும்பங்களைப் பட்டினி போடாமல் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை என்பதை உணர்வார்கள்.

This is a ticklish problem which should be handled dexterously. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள், நல்ல ஆங்கிலம் என்று இதை வரவேற்பார்கள் என்று நினைக்கிறேன். துணைத் தலைவரவர்களும் இதை ரசிப்பார்கள். துணைத் தலைவர் அவர்களுக்கும் ஆங்கிலம் தெரியும். அவர்களும் ரசிப்பார்கள். குழந்தைகள் பிரச்சினைபற்றி எல்லோரும் சொன்னதால் இதைச் சொன்னேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள்கூட அதைப்பற்றித்தான் எடுத்துச் சொன்னார்கள். அடுத்து, வீடு கட்டித் தருவதுபற்றிப் பேசினார்கள். வீடு கட்டித் தர வாய்ப்பு இருக்கிறது. அதைப் பின்னால் சொல்கிறேன். போனஸ உண்டா இதில் இல்லையே என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசினார்கள். அவர்கள், இந்தச் சட்டத்தைப் பார்த்துவிட்டு, அப்படிச் சொன்னது சரிதான். இதிலே என்னென்ன இருக்க வேண்டுமென்று சொல்லும்போது, ஊதிய விகிதங்கள், பணி நேரம், மகப்பேறு உதவி, மிகை நேர ஊதியம், ஊதியத்துடன் கூடிய விடுப்பு, பணிக்கொடை அளிக்க வகை செய்தல், வார, ஏனைய விடுமுறைகள் தொடர்பான நிபந்தனைகள் அவ்விடுமுறைகளுக்குரிய சம்பளம் ஆகியவை உட்பட உடலுழைப்புத் தொழிலாளர்களின் வேலையையும், அத்தகைய வேலையின் வரம்பு, நிபந்தனைகள் ஆகியவற்றை முறைப்படுத்த வகை செய்தல் என்று இருப்பதால், மிக நியாயமாக திரு. நல்லசிவன் அவர்கள் போனசுக்கு வழி இருக்கிறதா என்று கேட்டார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். நியமிக்கப்படுகிற போர்ட் ஊதியத்தை நிர்ணயித்து வாங்கும்போது, 10 பர்சென்ட், 5 பர்சன்ட் extra money for general purpose; for miscellaneous purpose. என்று வைத்து அந்தத் தொகையைப் பண்ட்டாக வைத்துக் கொள்வதற்கும் அதிலிருந்து பல்வேறு தொழிலாளர்களுக்கு உதவி செய்யவும், போனஸ் கொடுக்கவும் போர்டுக்கு அதிகாரம் இருக்கிறது, ஒரு தொழிலாளருக்கு ஊதியம்

[திரு. எஸ். இராகவானந்தம்] [1982 எப்ரல் 7

ó ரூபாய் 10 காசு என்றால், 10 காசை 'மிஸ்செலேனியஸ' என்று தொழிலாளர் நல பண்ட் என்று வசூல் செய்ய போர்டுக்கு அதிகாரம் இருக்கிறது. அதை போனசாகத் தருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். இது அவர்களுக்கு மகிழ்ச்சியூட்டும். தொழிலாளர்களுக்குப் பாடு பட்டு வருகிறவர்கள் என்ற முறையிலும், என்னோடு பல போராட்டங்களில் சேர்ந்து போராடியவர்கள் என்பதாலும், இரண்டு பேரும், ஒன்றாகப் பணி யாற்றியவர்கள்; அதோடு உயிரோடு இருக்கிறோம் என்ற மகிழ்ச்சியில் இதைச் சொல்கிறேன். சண்டை போடுவார்கள், ஒருவர் போய்விடுவார், ஒருவர் இருப்பார். இரண்டு பேரும் இருக்கிறோம். அவர் எதிர்க் கட்சியில் இருக்கலாம். நான் ஆளுங் கட்சியில் இருக்கலாம். அவரைப் பார்க்கும்போது பல்வேறு போராட்டங்களில் நாங்கள் ஒன்றாக நின்று போராடிய சம்பவங்கள் எல்லாம், சினிமாவில் சொல்வார்களே பிளாஷ்-பேக் என்று, அதைப் போல நினைவிற்கு வருகின்றன. போனஸ் தரப்படுமென்ற நல்ல செய்தியை மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள் கிறேன்.

இம்ப்ளிமென்டேஷன் மெஷினரி பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோ தரன் அவர்கள் சொன்னார்கள். ஆய்வாளர்களைப் போட்டுக்கொள்ள போர்டுக்கு அதிகாரம் இருக்கிறதென்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது அடுத்த சட்ட முன்வடிவைப் பற்றிச் சொன்னார்கள். அதைப் பற்றிப் பின்னால் பேசுகிறேன். திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது 1 (3) பற்றிச் சொன்னார்கள். எந்த ஏரியாவில் வேண்டுமானாலும் எந்த நேரத்தில் வேண்டுமானாலும், அரசு—விரும்பும் நேரத்தில்—அமல்படுத்தலாம்.

Section 1 (4) and (5)—Sales Promotion Conditions of Service Act, 1976.

Section 1 (3) of the Employment Exchanges Compulsory Notification of Vacancies Act, 1959

Beedi and Cigar Workers Conditions of Employment Act. 1966



1982 ஏப்ரல் 7] [திரு. எஸ். இராகவானந்தம்]

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 5.00)

என்று எந்தெந்த நேரத்திலே எப்படி எப்படி அமுல்படுத்த வேண்டுமோ அப்படி அப்படி ஆங்காங்கு அமுல்படுத்தலாம் என்கிற அடிப்படையில் சட்டத் திலே அதற்குரிய வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஒரு 'எனேபிளிங் புரவிசன்' என்ற முறையில் இந்தச் சட்டத்திலே வழிவகை செய்திருக் கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களும் திரு. இராமமூர்த்தி அவர்களும் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கும் இப்போதே பதில் சொல்லிவிடலாம் என்று நினைக்கிறேன். பிறகு எழுந்து இன்னின்ன திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம், அமைச்சருடைய கருத்து என்ன என்று கேட்பார்கள். ஆகவே இப்போதே பதில் சொல்லிவிடுகிறேன். இதனை 'செலக்ட் கமிட்டி'க்கு விட வேண்டுமென்று சொல்லியிருக் கிறார்கள். ஏற்கெனவே பேரவையிலே இது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. எல்லாக் கட்சிகளின் சார்பாகவும் தொழிற் சங்கத் தலைவர்களையெல்லாம் வைத்து இதுபற்றி ஏற்கெனவே விவாதித்திருப்பதால், இதனை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் வலியுறுத்த மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். அடுத்து,

"Clause 13" by reason of any defect in the constitution thereof." The intention is that any defect in filling up the vacancy or in the constitution of the Board should not invalidate the proceedings taken by the Board. This is the usual provision found in all Statutes and therefore. I am compelled to have it here also." என்று இருக்கிறது.

அந்த வகையில் சட்டத்தைப் போடவில்லையென்றால், அவர்களுக்குப் பாது காப்பு இருக்காது. பாதுகாப்பு இல்லையென்றால், சட்டத்தைச் செயல்படுத்த முடியாது. 'பெர்சன்' என்பதற்கு பதில் 'ஆபீசர்' என்று போட வேண்டு மென்று சொல்கிறார்கள். ஆபீசர் என்று போட்டால் ஆபீசரை மட்டும் தான் போட முடியும். 'பெர்சன்' என்று இருந்தால் யாரை வேண்டுமானாலும் போடலாம். லேபர் டிப்பார்ட்மென்ட் என்று வைத்துவிட்டால் 'லிமிடெட் ஸ்கோப்' ஆகி விடும். 'வைடர் ஸ்கோப்' இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் 'எனி பெர்சன்' என்று போட்டிருக்கிறோம்.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1982 எப்ரல் 7

அடுத்து, 'பனிஷ்மென்ட்' பற்றிக் குறிப்பிட்டார்கள். பிரிவு 26 என்று நினைக்கிறேன். அதைப் படித்துப் பார்த்தால், ஒன்றைத் தெரிந்துகொள்ளலாம். தண்டனையைப் பொறுததவரையில் '500 ரூபாய் வரையில் அபராதம் விதிக்கலாம்' என்று தான் இருக்கிறது. 'அப்பர் லிமிட்' தான் இது. அதாவது 5 ரூபாய் கூட போடலாம். சில சட்டங்களைப் பொறுத்தவரையில், உறுப்பினர்கள் பார்த்திருக்கலாம், 25 ரூபாய் வரையில் அபராதம் விதிக்கப்படும் என்று இருக்கும். அதுபோல் இங்கேயும் அதிகபட்சம் 500 ரூபாய் என்று தான் இருக்கிறது. தொடர்ந்து விதியை மீறினால, அவ்வாறு தொடர்ந்து விதியை மீறும் ஒவ்வொரு நாளைக்கு 100 ரூபாய் வரையிலும் அபராதம் விதிக்கலாம் என்று சட்டத்திலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் நான் சொன்னதை ஏற்றுக்கொள்வார்கள் என கருதுகிறேன். இந்தச் சட்டத்தைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், இங்கே சட்டம் நிறைவேறிய பிறகு ஒரு ஸ்கீம் தயாராக முடியுமா என்று அவர் கேட்டார். என்னென்ன இதிலே இருக்க வேண்டுமோ அந்த எல்லா அம்சங்களும் இதிலே இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். என்னென்ன 'புரவைட்' பண்ண வேண்டும் என்பது பற்றி 3-வது கிளாசில் இருக்கிறது. ஊதிய விகிதங்கள், விடுகள், மகப்பேறு, குறைந்தபட்ச ஊதிய விகிதம் என்கிற அடிப்படையில் 10 திட்டங்களுக்கு மேல் அதிலே குறிப்பிடப் பட்டிருக்கின்றன. இந்த ஸ்கிமை அரசே தயார் செய்யும். இதுதான் முக்கியமாக மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது. எங்கெங்கு 'கான்சிர்கேசன் ஆப் ஒர்க்கர்ஸ்' இருக்கிறார்களோ அங்கேயெல்லாம் அரசு போர்டை அமைக்கும். அதுமட்டுமல்லாமல் 'கான்ஸ்டிட்யூஷன்' பற்றி அதிலே இருக்கிறது. உதாரணத்திற்கு கொத்தவால் சாவடியில் அப்படிப்பட்ட ஒரு போர்டை அமைக்கலாம். ஒரு தொழிலுக்கு ஒன்று வீதம் அமைக்கலாம். ஒரு இடத்தில் வாழைக்காய் சுமக்கிறவர்களுக்கு என்று ஒரு போர்டு வைக்கலாம். இன்னொரு இடத்தில் நெல் மூட்டை தூக்குபவர்களுக்கு என்று ஒரு போர்டு அமைக்கலாம். அதுபோல் பஸ் ஸ்டாண்டில் இருந்து பெரிய பெட்டிகளைத் தூக்கிச் செல்கிறார்களே அவர்களுக்காக ஒரு போர்டு அமைக்கலாம். இப்படி தனித்தனி இடங்களில் தனித்தனி தொழில்களுக்கு தனித்தனியாக போர்டுகளை அமைக்கலாம். இன்றைக்கு இம்மாதிரி மதுரையில் அமைக்க வழிவகை இருக்கிறது. கோயம்புத்தூரில் அமைக்கலாம். இப்படி பல்வேறு ஊர்களில், பல்வேறு இடங்களில் ..ந்த போர்டை அமைக்கலாம். ஒரே இடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட



1982 எப்ரல் 7] [திரு. எஸ். இராகவானந்தம்]

போர்டுகள் இருக்கும். அதுதான் யாருக்கும் தொல்லையில்லாமல் இருக்கும். இந்த போர்டுகளில் தொழிலாளர்கள் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும். 16 வயதிற்கு மேற்பட்டவர்களுடைய பெயர்களைத்தான பதிவு செய்வார்கள். 16 வயதிற்கு உட்பட்டவர்களைப் பதிவு செய்ய மாட்டார்கள். ஏதாவது நிறுவனத்திற்கு ஆட்கள் தேவைப்பட்டால் அவர்கள் இந்த போர்டைத்தான் கேட்க வேண்டும். போர்டிலிருந்து 16 வயதிற்கு மேற்பட்டு பெயர்களைப் பதிவு செய்திருப்பவர்களின் பெயர்களை நிறுவனத்திற்கு அனுப்புவார்கள். போர்டில் பெயரைப் பதிவு செய்யாதவர்களுக்கு வேலை கிடைக்காது. போர்டிலிருந்து அனுப்புகிறவர்களைத்தான் வேலைக்கு எடுக்க வேண்டும். இதனால் வேலைக்கு வருகிற தொழிலாளர்களுடைய வேலைக்கு ஒரு உத்தரவாதம் தரப்படுகிறது. அவர்களுடைய பணிக்குப் பாதுகாப்பு தரப்படுகிறது. போர்டு இந்தத் தொழிலாளர்களுக்கு ஊதியம் மற்றும் பணிப் பாதுகாப்புகள் கிடைக்க உறுதியளிக்கிறது.

அன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, ஒன்றைச் சொன்னார்கள். மூட்டை சுமக்கக்கூடியவர்கள் நாள் ஒன்றுக்கு 50 ரூபாய் கூட சம்பாதிக்கிறார்களென்று சொன்னார்கள். 50 ரூபாய் நாள் ஒன்றுக்கு சம்பாதிக்கலாம். ஆனால் ஒரு வாரம் வேலை செய்துவிட்டு அவர் படுத்து விடுகிறார். மேற்கொண்டு வேலை செய்ய முடியவில்லை. அவருடைய குடும்பத்தின் கதி என்ன ஆகும்? நிம்மோனியா, டி.பி. போன்ற வியாதிகள் அவர்களுக்குக் கட்டாயம் வரும். அதுபோல் இரண்டு மாதம் மூன்று மாதம் படுக்கிற வியாதிகள் எல்லாம்கூட அவர்களுக்கு வருகிறது. அப்படி அந்தத் தொழிலாளி படுத்துவிட்டால், அவனுடைய குடும்பத்தின் கதி என்னவாகும்? யார் அந்தக் குடும்பத்தைப் பாதுகாப்பது? இன்னும் சொல்லப்போனால், நாள் ஒன்றுக்கு அவன் 100 ரூபாய் சம்பாதிப்பதாகக் கூட வைத்துக்கொள்வோம். ஆனால் எவ்வளவு நாள் அப்படி சம்பாதிக்க முடியும்? ஏதோ கொஞ்சம் நாள் அவ்வாறு சம்பாதிக்க முடியும். அவனுக்கு இ.எஸ்.ஐ., மெடிக்கல் கேர் இன்னும் இதுபோன்று மற்ற தொழிலாளர்களுக்கு இருக்கின்ற சலுகைகள் இல்லை. அவர்கள் வேலை செய்துகொண்டிருக்கும்போது, ஏதாவது நோய் வந்தால், அவர்களுடைய குடும்பம் நாசம் ஆகிவிடும். அவனுடைய வீட்டில் நகை, 'வெசல்' ஒன்றும் இருக்காது. ஆகவே இப்படிப் பட்டவர்களுடைய நல்வாழ்வை மனதில் கொண்டுதான் இந்த அரசு இத் திட்டத்தை அமுல்படுத்த போர்டை அமைக்க இருக்கிறது. இந்த போர்டு

அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு எவ்வளவோ நல்ல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால் அவைகள் எல்லாவற்றையும் விட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய மகுடத்தில் மாணிக்கமாகப் பொறிக்கப் படத்தக்க அளவுக்கு ஒரு அடிஷனல் மாணிக்கமாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்த வகையில் இதுகுறித்து நாமெல்லாம் மகிழ்ச்சி அடைகிறோம். எந்தப் பிரிவுத் தொழி லாளர்கள் எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை ஆண்டவனே என்று முறை யிட்டு என்றைக்கு புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வருவார் என்று ஏங்கிக் கொண்டிருந்தார்களோ அவர்களுடைய கனவு இன்றைக்கு நனவாகும் வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் இதை நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் மூலம். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அடியேனுக்கு அந்த பாக்கியம் கிடைத்தது. எத்தனை போர்டுகள் வேண்டுமானாலும், எந்தெந்த இடத்தில் வேண்டுமானாலும் அமைக்கலாம். அதன் மூலம் எந்த நேரத்தில் பாதுகாப்பு வேண்டுமோ அந்த நேரத்தில் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும். இந்தவகையில் லட்சம் லட்சமாகப் பணம் சம்பாதிக்கக் கூடிய இடங்கள் கூட இருக்கின்றன.

THIRU A. R. DAMODARAN : One clarification. I think in fairness, the Honourable Minister should clarify that a Board can be formed only for a scheduled industry in one place and that a Board cannot be common to 5 scheduled industries in the same place.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** ஒவ்வொரு ஷெட்யூல் இன்டஸ்ட்ரீசுக்கும் ஒரு போர்டு என்றால் சென்னையிலே ஒரு ஷெட்யூல் இன்டஸ்ட்ரிக்கு ஒரு போர்டுதான் இருக்க வேண்டும் என்பதல்ல. '**மோர் தேன்**' ஒன்று கூட இருக்கலாம். ஷெட்யூலில் இருப்பதற்கு மேலாக **இன்னும்** சேர்த்துக்கொள்ள அரசுக்கு அதிகாரம் உண்டு. இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்லியுள்ளதை தற்சமயம் அரசு ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமைகள் வரலாம். இப்போது தான் முதன் முதலாக இப்படிப்பட்ட ஒரு



திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அருள்கூர்ந்து மாண்புமிகு உறுப் பினர்கள் திருத்தத்தை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி வாபஸ் பெறுவதன் மூலம் நாமும் இப்படி ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்ற உறுதுணையாக இருந்திருக்கிறோம் என்று **நாம்** மறையும் காலத்தில் இது நம் நினைவுக்கு வந்து, அதன் மூலம் மகிழ்ச்சியுடன் கண்ணை மூடக்கூடிய நிலைக்கு ஆளாவோம். ஆக, இந்த நல்ல சட்ட முன்வடிவு நிறைவேற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரின் ஒத்துழைப்பும் வேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அது தான் என்னுடைய ஆசை.

திரு. க. இராமமூர்த்தி : எங்களுடைய ஆசை 'மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீக்கிரம் கண்ணை மூடக் கூடாது' என்பது தான். அவர் கண்ணை மூடுவதாகச் சொல்லிவிட்டு எங்களையும் கூட அல்லவா கண்ணை மூடச் சொல்கிறார். (சிரிப்பு)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இன்னும் 50 வருடம் கழித்து தான் அவர் கண்ணை மூடுவார். பயப்பட வேண்டாம். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** வள்ளுவர் சொன்னதைப்போல் 'எப்போதாவது ஒருநாள் நாம் போய்த்தான் ஆக வேண்டும்'. நான் சொல்வது இறுதியாகக் கண்ணை மூடுகிற நாள் வருகிறபோது, என் வாழ் நாளில் இப்படி ஒரு நல்ல சட்டம் வந்தது, அதை நிறைவேற்ற நானும் உறு துணையாக இருந்திருக்கிறேன் என்கிற பசுமையான மகிழ்ச்சியுடன் கூடிய நினைவுடன் கண்ணை மூட வேண்டும். இந்தச் சட்டம் வர மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உறுதுணையாக இருந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் இராமமூர்த்தி, நல்லசிவன், தாமோதரன் போன்றவர்கள் எல்லாம் நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக் கிறார்கள். ஆசிரியர் பிரதிநிதிகள் இதுகுறித்துப் பேசமாட்டார்கள் என்று நான் எண்ணிக்கொண்டிருந்தேன். அவர்களும் இதன்மீது தங்களுடைய

(பிற்பகல் 5—10)

கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சேர்ந்து இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆய்வாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர் அனைவர் பார்க்க 'செக்' பண்ணி ரிப்போர்ட் அனுப்பும் அதிகாரம் பெற்றி ருக்கிறார். போர்டு சரியாக இயங்கவில்லை என்று சொன்னால் 'டிஸ்மிஸ்'

செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களுக்குச் சில 'அப்ரெஹென்ஷன்' உண்டு. இருக்காது என்று நான் சொல்லவில்லை. இது வந்தால் என்னவாகுமோ என்ற பய உணர்ச்சி மக்களுக்கு வந்தால், அதை நிவர்த்தி செய்யவும் வழி இருக்கிறது. இதையெல்லாம் செய்வதற்கு ஆலோசனை சொல்ல ஸ்டேட் லெவலில் ஒரு அட்வைசரி போர்ட் இருக்கிறது. அதிலே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இடம் இருக்கிறது. எனவே யார் யார் இந்த விவாதத்திலே கலந்துகொண்டு திறமையாகப் பேசி இந்தச் சட்டம் வருவதற்கு உதவியாக இருந்தார்களோ அவர்களுக்கெல்லாம் அந்த போர்டிலே இருக்க இடம் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதுதான் சாலச்சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன். இது 'கலக்டிவ் என்டவர்'. அதனால்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பல குழுக்கள் வருகின்றன. அந்தக் குழுக்களிலே இடம்பெற வேண்டும் என்று சொன்னால்—அது பதவிக்காக அல்ல—ஜனங்களுக்குச் சேவை செய்வதற்காக. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்களுக்குத் தேவையான நிலம் இருக்கிறது, வக்கீல் தொழில் இருக்கிறது. அவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தாலே தேவையான பணம் வரும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். நான் இரயில்வே தொழிற் சங்கத் தலைவராக இருந்தபோது—கடலூர் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தபோது—1953-லே மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பார்க்கச் சென்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகப் பெரிய பணக்காரர். அவரைப்போய்ப் பார்க்க வேண்டும் என்றால் காத்து இருந்துதான் பார்க்க வேண்டும். அவரைப்போய்ப் பார்ப்பதே பெருமை. 1953-லே அவரைப் போய்ப் பார்த்து நான் இரயில்வே தொழிற் சங்கத் தலைவர், நாங்கள் மாநாடு நடத்துகிறோம். அதற்குப் பண உதவி தர வேண்டும் என்று கேட்டபோது உடனடியாக 50 ரூபாய் எடுத்துக் கொடுத்தார். இது நடந்தது 1963-லே இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிதி ஒன்றும் தருவதாகத் தெரியவில்லை. எனவே அந்த அளவிலே

THIRU A. R. DAMODARAN: Sir, the Hon. Minister Thiru Raghavanandam might have been in a position in 1953 to expect Rs. 50 from me. In 1982, A. R. Damodaran has to expect Rs. 50 from Thiru Raghavanandam.



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த நிலைக்கு நலிந்து விடக்கூடாது என்பதுதான் எனது ஆசை. ஏனென்றால் ஏதாவது நன்கொடை வேண்டும் என்று நான் வரக்கூடிய நிலை வரும். எனவே, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் என்ன சொல்லவேண்டும் என்று கருதினேனோ அதைச் சொல்லியிருக்கிறேன். அவர்களெல்லாம் இங்கு வந்திருப்பது மக்களுக்கு சேவை செய்ய மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன எதிர் பார்த்தார்களோ அதை நான் சொல்லிவிட்டேன் என்று கருதுகிறேன். எனக்கு வருத்தம் கொடுக்கக்கூடியது எல்லாம் மாண்புமிகு சகோதரர் திரு. நல்லசிவன் அவர்களும், திரு. மாணிக்கம் அவர்களும் 24-வது பில்லை எதிர்த்தது தான். முதலில் ஒரு கருத்து சி. பி. எம். ஆல் சொல்லப்பட்டது; அதனால் அப்போது சட்டத்தை நிறுத்தி வைத்துவிட்டோம். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது கேரளத்தில் 'கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆஃப் இந்தியா'. அவர்கள் கொண்டு வந்த அந்த பில்லை அப்படியே வாங்கிக் கொண்டு வந்து 'கேரளா' என்பதற்குப் பதிலாக 'தமிழ்நாடு' என்று மாற்றிய தவறைத் தவிர, நாங்கள் ஒன்றும் செய்யவில்லை. அதை மாற்றித் தான் ஆக வேண்டும். 'கேரளா ஸ்டேட்' என்பதை 'தமிழ் நாடு' என்று மாற்றினோம். அதை விட்டுவிட்டு ஒரு 'கமா'வையாவது மாற்றினால், சட்டத்திலுள்ள சாராம்சம் மாறிவிட்டது என்று சொல்லி விடுவார்களோ என்று நினைத்து, அதைக்கூட மாற்றவில்லை. இது இன்றையதினம் கேரளத்தில் சட்டமாக இருக்கிறது. ஆனால் சி. பி. எம். ஏற்றுக்கொள்ளவில்லை. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசினேன். அவர்கள் ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்ட்-லே வையுங்கள் என்று சொன்னார்கள். ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் தொழிற் சங்கம் இருக்கிறது. ஏ.ஐ.டி.யூ.சி., ஐ.என்.டி.யூ.சி., சி.ஐ.டி.யு., எச்.எம்.எஸ். ஏ.பி'பி. டி.பிஎஃப், என்ற வகையிலே தொழிற் சங்கங்கள் இருக்கின்றன. ஆகவே இந்த ஸ்லாப்-லே வைத்து இதைப்பற்றி முடிவு எடுங்கள் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். அங்கே இது வந்தபோது, திரு. கோபு அவர்கள்தான் நல்ல முறையில் பேசினார்கள். அவர் ஒரு நல்ல தொழிற்சங்கத் தலைவர், சி.பி.எம். சார்பாக திரு. கார்மேகம் அவர்கள் இருந்தார்கள்.

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட திரு. கோபு அவர்களிடம் இன்று காலை உடனடியாகப் பேசினேன். அவர்கள் ஒரு பகுதிக்கு உடன்பட்டார். இன்னொரு பகுதிக்கு உடன்படவில்லை.

அவரை மேற்கோள் காட்டும்போது, அவர் உடன்படாத விஷயங்களைச் சொல்லும்போது இந்த விஷயங்களில் அவர் உடன்படவில்லை என்று சொல்லாமல், அவரை மேற்கோள் காட்டுவது சரியல்ல. மேலும் அவர் இந்த அவையிலே இல்லை.

திரு. ஆ. நல்லசிவன் : இந்தக் குறிப்பிட்ட மசோதாவை 'சிலாபிலே' சி.ஐ.டி.யூ. ஏற்றுக்கொண்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது இந்த 'ஸ்லாப்' சம்பந்தமாக, 8—11—1981 ஆம் நாளன்று அந்தக் கூட்டத்திற்கு ஒரு அஜண்டாவை அனுப்பியிருந்தார்கள். அதிலே 4 முதல் 8 வரையிலான அம்சங்களுக்கு நோட்ஸ் அனுப்பவில்லை. பின்னர் அனுப்பப்படும் என்று சொன்னார்கள். பின்னர் அந்தக் கூட்டத்திலே 'நோட்ஸ்' கொடுத்து அதைப் பார்த்த பிறகு திரு. கார்மேகம் அதை எதிர்த்திருக்கிறார்கள். ஆட்சேபித்திருக்கிறார்கள் நான் அவர் வந்த பின்னர் கேட்டேன். ஆனால் மினிட்ஸ்லே

"The Employees representatives welcomed the proposal for enacting a Legislation on the lines of Kerala Legislation"

என்று

இருக்கிறது. அதை நான் ஆட்சேபனை செய்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன். அவர்களுக்குக் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன். சி.ஐ.டி.யு. அன்றைக்கும் ஏற்கவில்லை. இன்றைக்கும் ஏற்கவில்லை. இந்த 'பில்' பேரவையிலே வந்தபோது, அந்த பில்லை ஆட்சேபித்தபோது, இதுபோன்று வெஸ்ட் பெங்கால் கவர்ண்மென்ட் மீண்டும் கொண்டு வந்திருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறி, அவர்கள் அப்படியே கொண்டு வந்திருந்தாலும், அதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேச, பின்னர் வெஸ்ட் பெங்கால் அரசுக்கு எழுதிக் கேட்டு, அவர்கள் "இப்படிப்பட்ட ஒரு சட்டம் கொண்டுவரவில்லை" என்று சொல்லி பதில் எழுத, அந்த ஸ்டேட்மென்ட் பேரவையிலே கொண்டுவரப்பட்டபோது வெஸ்ட் பெங்கால் கவர்ண்மென்ட் மீது தவறான தகவல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார் என்றும் அதை உரிமைக் குழுவுக்கு விடவேண்டும் என்றும் அங்கே விவாதம் நடந்திருக்கிறது. மேலும், நான் பேரவையிலே உறுப்பினராக இருந்தபோது, பேரவையிலே இதுபற்றிய பில் கொண்டு வந்தபோது, நான் எதிர்த்திருக்கிறேன். நாமிழகத்திலே பூராவும் இதை எதிர்த்திருக்கிறோம். 'இது கொத்தடிமை' என்ற அளவிலே கூட பிரச்சாரம்



செய்திருக்கிறோம். இவ்வளவும் செய்த பிறகு, சிஐடியூ ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று சொல்வது எப்படிப் பொருத்தமாகும்? திரு. கார்மேகம் அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்படி அவைக் குறிப்பிலே எழுதவேண்டும் என்று இப்படி குறிப்பிடுகிறார். நான அதிகாரபூர்வமாகச் சொல்கிறேன், நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை.

மாண்புமிகு எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்று சொல்லிவிட்டார். அந்தக் கூட்டத்திற்கு நான் தான் தலைமை தாங்கினேன். எனக்கு வயதுதான் 64 ஆனதேயொழிய, உடம்பு, 'மெம்ரி' இவையெல்லாம் இன்னும் கெட்டுப்போகவில்லை. எனக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது.

"Employees' representatives welcomed this proposal for enacting a legislation on the lines of Kerala Legislation to empower the appropriate Government to issue directions in an industrial dispute—pending settlement of industrial dispute"

நான் சரியாகச் சொல்கிறேன், எனக்கு ரைட்டிலே திரு. கோபு அவர்கள் உட்கார்ந்திருந்தார், அதற்கு அடுத்து. திரு கார்மேகம் அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். I distinctly remember. வேலை நிறுத்தத்தைத் தடை செய்வதற்கு சட்டம் கொண்டு வந்ததாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். ஆனால் புரட்சித் தலைவர் ஆட்சி என்பது, இதற்கு முன்னால் பேசிய சட்ட முன்வடிவு அதாவது களைப் பாதுகாக்க ஒரு சட்டம் கொண்டு வந்த அரசு, திடீரென்று வேலை நிறுத்தத்தைத் தடைசெய்ய ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்று சொல்வதுதான் எனக்கு மிகவும் கவலையளிப்பதாக இருக்கிறது. நான் இதைப் படிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அருள்கூர்ந்து இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5—20)

செக்ஷன் 10-பி-ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் :

"Where an industrial dispute has been referred by the State Government to a labour court or Tribunal under sub-section (1) of section 10................."

ஆக, இது ஏற்கெனவே இருக்கிற அதிகாரம். சட்டப்படி ஒரு தொழில் தகராறு எப்போது கோர்ட்டுக்கு அனுப்பப்படுகிறதோ அப்போது . . .

.........in the opinion of the State Government it is necessary or expedient to do so, for securing public safety or convenience or the maintenance of public order or supply and services essential to the life of the community or for maintaining employment or industrial peace in the establishment concerning which such reference has been made, they may by general or special order make provision..................

இதுவரை வழக்கு மன்றத்திற்கு அனுப்புகிற அதிகாரம் மட்டும்தான் இருந்தது. இப்படி அனுப்பும்போது இதுவரை ஒன்றும் செய்ய முடியாது.

The following issues are referred for adjudication Nos. 1, 2, 3 etc.,

எனவே இப்போது அரசாங்கம் கேட்கும் அதிகாரம், வேலை நிறுத்தத்தைத் தடை செய்வதற்காக அல்ல. கோர்ட்டுக்கு ஒரு இன்டஸ்டிரியல் டிஸ்பியூட்டை அனுப்பும்போது, அந்தத் தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணம் கொடுக்கும் அதிகாரத்தைத்தான் இந்த அரசு இதன் மூலம் பெறுகிறது.

"...to make provision for requiring the employers or workmen or Court to observe such terms and conditions of the employment as may be specified in the order or as may be determined in accordance with the order including payment of money by the employer to any person who is or has been a workman."

This is the crux of the problem. இதுவரை Right from the Prime Minister down to this humble self Raghavanandam, the Labour Minister

எங்களுக்கு இருக்கிற அதிகாரம் என்னவென்றால் ஒரு பிரச்சினையை, இஷ்யூவை, டிமாண்டை வழக்கு மன்றத்துக்கு அனுப்பலாம். அந்த அளவுக்குத்தான் அதிகாரம் இருக்கிறது. மானேஜ்மென்டைப் பார்த்து, நீங்கள் இரண்டு பேரை சஸ்பென்ட் செய்திருக்கிறீர்கள். அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அல்லது நான்கு பேரை 'டிஸ்மிஸ்' செய்திருக்கிறீர்கள். அவர்களை சஸ்பெண்டு செய்து விசாரிக்க வேண்டும், 3 ரூபாய்தான் ஊதிய உயர்வு தருவேன் என்று சொல்கிறீர்கள் இன்னும் அதிகமாகத் தர வேண்டும் என்று சொல்லிவிட்டு இந்த இஷ்யூசை 'ரேபர்' செய்யலாம்.



ஆனால் இப்போது அப்படி வழக்கு மன்றத்திற்கு அனுப்பும்போது, இடையிலே சில சலுகைகளை தொழிலாளர்களுக்குக் கொடுக்க, அல்லது சில டைரெக்ஷன் களைக் கொடுக்கும் அதிகாரத்தைத்தான் இந்த அரசு சட்ட முன்வடிவின் மூலம் பெறுகிறது.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் எழுந்தார்.)

நான் இன்னும் வாக்கியத்தையே முடிக்கவில்லையே. நிலைமை இப்படி இருக்கும்போது வேலை நிறுத்தத்தைத் தடை செய்வதற்காக இதைக் கொண்டு வருகிறீர்கள் என்று எப்படிச் சொல்கிறார்கள் என்றுதான் எனக்குப் புரியவில்லை. வேலை நிறுத்தத்தைத் தடை செய்ய புதிய சட்டம் தேவை யில்லை. அது ஏற்கெனவே பழைய சட்டத்தில் 10 (B)யில் இருக்கிறது. ஒரு வழக்கை கோர்ட்டுக்கு அனுப்பிவிட்டு ஸ்டிரைக்கைத தடை செய்யலாம் என்பதற்கான அதிகாரம் இன்டஸ்டிரியல் டிஸ்பியூட் ஆக்ட்டில் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவாகளே, வேலை நிறுத்தத்தைத் தடை செய்ய வேண்டும் என்று சொல்லுகிற வார்த்தைகள் இங்கே இல்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இதில் இருக்கிற பிரச்சினை என்ன என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இதை நான் அன்றைக்கே சொன்னேன் ஒரு பிரச்சினையை கோர்ட்டுக்கு விட்டுவிட்ட பிறகு அந்தப் பிரச்சினையில் கோர்ட்டின் தீர்ப்பு அல்லது நியாயம் கிடைக்க 8 ஆண்டுகள் அல்லது 10 ஆண்டுகள் ஆகின்றன. இந்த நிலையில் காலதாமதம் ஆகிறபோது, தொழிலாளர்கள் போராடிப் பெறுகிற சந்தர்ப்பம் இருந்தால், வேலை நிறுத்தம் செய்து, நிர்வாகத்தை பிரஷரைஸ் செய்வதன் மூலம் தொழிலாளர்களின் 'பார்கெயினிங் பவர்' மூலம் ஒரு உடன்பாடு ஏற்படுவதற்கு இப்போது ஒரு வழி இருக்கிறது. கோர்ட்டுக்கு வந்துவிட்டால் சில சமயங்களில் சுப்ரீம் கோர்ட் வரை சென்று தீர்ப்பு பெறுவதற்குள் பத்து வருஷம் கடந்து விடுகிறது. கோர்ட்டுக்குப் போய்விட்ட பிறகு தொழி லாளர்கள் நிர்வாகத்திற்கு எதிரான ஒரு போராட்டம் நடத்தினால், அதன் காரணமாக சில நாட்கள் நிர்வாகம் மூடிக்கிடக்கிற நிலை ஏற்பட்டால், அதன் விளைவாக ஏற்படுகிற நட்டத்தைக் கணக்கில் கொண்டு எப்படியாவது பேசி பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று நிர்வாகம் நினைக்க வழி இருக்கிறது. இப்போது புதிய சட்டத்தின்படி அந்த வசதியில்லை. இப்போது

இடைக்கால நிவாரணம் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று சொல்வதை நான் மறுக்கவில்லை. ஆனால் வேலை நிறுத்தம் செய்வதற்கு வழியில்லை. . .

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. இன்னும் 7 சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. மேலும் 6-30 மணிக்கு பேரவைத் தலைவர் மாண்புமிகு உறுப்பினர்களை அழைத்திருக்கிறார்கள். எனவே எவ்வளவு விரைவில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைத்து சட்ட முன்வடிவுகளை நிறைவேற்ற முன்வருகிறார்களோ அந்த அளவுக்கு நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இது முக்கியமான விஷயம். எனவே தயவுசெய்து இதில் என்னைக் கட்டுப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர்களுடைய நன்மையைப் பறிக்கிற வகையில் ஒரு சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று வாதாடுகிறபோது, அப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்கிறவர்களைத் திருப்தி செய்து, எங்களுடைய நோக்கம் அதுவல்ல என்று சொல்லியாக வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசும்போது திராவிட முன்னேற்றக் கழகம் 'ஸ்லேப் "ல் என்ன நிலை எடுத்ததோ அதையொட்டித்தான் இங்கே கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே செக்ஷன் 10 (3)ல் ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது :

"Where an industrial dispute has been referred to a Board, Labour Court, Tribunal or National Tribunal under this section, the appropriate Government may by order prohibit the continuance of any strike or lock-out in connection with such dispute which may be in existence on the date of the reference."

இப்படி ஏற்கெனவே இருக்கிறது. இதைப்பற்றி இரவு 10 மணி ஆனாலும் நான் பேசத் தயாராக இருக்கிறேன். அதுமட்டுமல்ல, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், I want to carry the House with me.

இந்த அரசு தவறான கொள்கையை மேற்கொண்டிருக்கவில்லை. வேலை நிறுத்தத்தைத் தடை செய்ய இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறதாகச் சொல்லப்படுவதைப் பொறுத்தவரையில், அது சரியல்ல. வேலை நிறுத்தத்தைத் தடை செய்யும் அதிகாரம் அரசுக்கு ஏற்கெனவே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் நாளைக்கு என்னைப் பார்த்து, " என்ன மிஸ்டர் இராகவானந்தம் இந்த நிர்வாகத்தில் 2 தொழிலாளர்களைப் பழி வாங்குகிற வகையில் டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள். அவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளச் சொல்லுங்கள்" என்று கேட்டால், நான் என்ன செய்ய முடியும்? அந்த வழக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பலாம் என்று சொல்ல முடியும், அவ்வளவுதான். இப்போது அப்படிப்பட்ட நிலையில்லை.



Now that is not the case. I can give directions, "The two dismissed workers should be re-instated immediately". The case will be referred for adjudication. The validity of the direction will be decided by the Labour Court or Industrial Tribunal or the Board, as the case may be. I am assuming power.

இந்த வாசகம் அழகான ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

"Where an industrial dispute has been referred by the State Government to a Labour Court or a Tribunal under sub-section (1) of section 10 and if, in the opinion of the State Government, it is necessary or expedient so to do for securing the public safety or services essential to the life of the community or for maintaing employment or industrial peace in the establishment concerning which such reference has been made, they may, by general or special order, make provision; (a) for requiring employers or workmen or both to observe such terms and conditions of employment as may be specified in the order or as may be determined in accordance with the order including payment of money by the employer to any person who is or has been a workman"—it means a dismissed workman.

All these days I tell you that though I am Minister, I do not have the power to give Rs. 10 wage increase to a worker. I can only cringe or beg of the management to give increase.

10 ரூபாய் அதிகமாகக் கொடுங்கள் என்று நிர்வாகத்தைப் பார்த்து நான் சொன்னால் உடனே அவர் என்னைப் பார்த்து

'You will drive me out of business'

என்று சொல்லிவிட்டு எழுந்து போய்விடுவார்.

THIRU A. R. DAMODARAN : What is it that prevents the management from going to Court on the basis of the Government's directions?

[1982 ஏப்ரல் 7

(பிற்பகல் 5-30)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாற்றுத் தலைவர் அவர்களே. கோர்ட்டுக்கு அனுப்பிவிட்டேன், இந்தச் சலுகைகளைத் தருகிறேன் என்றால் it is a simultaneous one. When it is referred it is a simultaneous one.

கோர்ட் பார்த்து அரசாங்கம் கொடுத்தது சரியில்லை என்று சொல்லும் அதிகாரம் அவர்களுக்கு இருக்கிறது.

அதற்கடுத்தாற்போல்,

" for requiring not to close or remain closed and to work or continue to work on such terms and conditions as may be specified in the order "

என்று இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள், குளோஷர் அவர்கள் செய்யலாம், அது அவர்களுடைய உரிமை, சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்ல உரிமை இருக்கிறது. அதை நாம் தடை செய்ய முடியாது என்றார். இந்த குறிப்பிட்ட தேதியில் தொழிற்சாலையைத் திறக்க வேண்டுமென்று நான் '(டைரக்ஷன்)' கொடுக்கிறேன் என்றால், அப்படிக் கொடுத்தது தவறு என்று அவர்கள் வாதாடட்டும். அப்படி வாதாடினால், அரசு செய்தது சரியில்லை என்று சுப்ரீம் கோர்ட் சொல்லலாம், ஐகோர்ட் சொல்லலாம், லேபர் கோர்ட் சொல்லலாம்). ஆனால் தொழிற்சாலையை மூடுவதைத் தடுக்கும் அதிகாரத்தை அரசு எடுத்துக்கொள்கிறது. ஆனால் அரசு ஆணையிட்டது சரியா இல்லையா என்பதைக் கோர்ட் தீர்மானிக்கும். இது நல்ல காரியம் என்று சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இந்த நல்ல காரியத்தை எதிர்ப்பதா என்று எண்ணி நேற்று முழுவதும் எனக்குத் தூக்கம் வரவில்லை. இதுநாள்வரை இல்லாத அதிகாரத்தை அரசு இப்போது பெறும்போது திரு. நல்லசிவன் போன்றவர்கள் எதிர்க்கிறார்கள் என்றால், அவரை எப்படி 'கன்வின்ஸ்' பண்ணுவது என்று பிளான் போட்டு 'கன்வின்ஸ்' பண்ணத் தயாராக வந்திருக்கிறேன். எவ்வளவு நேரம் ஆனாலும் இதிலே நாங்கள் இரண்டு பேரும் 'கன்வின்ஸ்' ஆக வேண்டும்.





'இன்டரிம் ரெலிப்' கொடுப்பதன் காரணமாக ஸ்டிரைக்கைத் தடை செய்ய வேண்டுமென்பதல்ல பொருள்

" for requiring any public utility service not to close or remain closed and to work or continue to work on such terms and conditions as may be specified in the order;"

முதலிலே கண்டிஷனைச் சொல்லிவிட்டு ஸ்டிரைக்கைத் தடை செய்யாமலே விட்டுவிடலாம்.

எதையெதைச் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் விரும்புகிறதோ அதைச் செய்யாமல், அரசாங்கத்தின் ஆணையை மீறி செயல்பட்டால், அப்போது பிரிவு 29-ல் இருக்கிறது என்று திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னார்கள். இதே உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள், அவர்களுடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், " அந்த முதலாளி தவறு செய்கிறார், அவரைப் பிடித்து ஜெயிலில் போடமாட்டேன் என்கிறார்களே அரசினர், அது ஏன் ? " என்று கேட்டார்கள். அதற்காக இப்போது சட்டம் வந்திருக்கிறபோது, இந்தச் சட்டம் கடுமையாக இருக்கிறது, பட்டாண்டாக இருக்கிறது என்றால், நான் என்ன சொல்லுவது !

For a term which shall not be less than 6 months but which may extend to one year with fine or both

ஆர் ஆப்ஷன் என்று அல்ல—ஜெயிலுக்கும் போக வேண்டும், பைனும் தர வேண்டும்—அல்லது இரண்டையும் ஏற்க வேண்டும். ஆனால் தவறு செய்தவர்கள் ஜெயிலுக்குப் போகத்தான் வேண்டும்.

இப்போது வேலை நிறுத்தத்தை நிறுத்துங்கள் என்று டைரக்ஷன் கொடுக்கிறோம். அப்படி நாம் கொடுக்கக்கூடிய டைரக்ஷனை மீறிவிட்ட காரணத்தாலே, அவர்கள் ஜெயிலுக்குப் போக வேண்டியதில்லை. அதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும். அரசாங்கம் வேலை நிறுத்தத்தை உடனடியாக நிறுத்துங்கள் என்று டைரக்ஷன் கொடுக்கிறபோது, உடனே வேலை நிறுத்தத்தை நிறுத்தாமல் தொடர்ந்து வேலை நிறுத்தத்தைச் செய்கிறார்கள் என்றால், உடனே 6 மாதத்திற்கு அவர்களை உள்ளே தள்ள முடியாது. இது பிரிவு 29-ன் கீழ் வருகிறது.

வேலை நிறுத்தத்தை நிறுத்துங்கள், சலுகையைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று ஆணை போடுகிறோம். லாக்-அவுட்டை 'லிப்ட்' செய்ய வேண்டும், குளோஷரை எடுக்க வேண்டும், தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று முதலாளிகளுக்குச் சொல்லுகிறோம். அவர்கள் அதை

மீறினால் உடனே போலீஸ்காரர்களைக் கூப்பிட்டு, "அரசாணையை மீறி விட்டார்கள், ஆறு மாதங்களுக்கு உள்ளே தள்ளுங்கள்" என்று சொல்ல முடியாது அதற்கு மேலே கவனமாக யோசனை செய்து பிரிவு 29-ஐ 'இன்வோக்' பண்ணி பிராசிகியூட் பண்ணினால்தான், அவர்கள் சிறைக் குள்ளே போக வேண்டிய நிலை வரும். நாங்கள் ரொம்ப ஜாக்கிரதையாகச் செய்வோம் என்று இந்த நேரத்தில் உறுதிமொழி தருகிறேன். இந்தச் சட்டத் திலுள்ள இந்தப் பிரிவுகளை 'இன்வோக்' பண்ணும்போது சரியாகச் செய்வோம். டைரக்ஷன் கொடுக்கும்போது கன்சிலியேட்டரி டாக்டிக்ஸ் பயன்படுத்தி, பெரும்பான்மையாக தொழிலாளர்களும், முதலாளிகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவிலே பார்த்துச் செய்வோம். மற்றவர்கள் கேட்க முடியாத நிலையிலே டைரக்ஷன் தரமாட்டோம். அந்த அளவிலே ஜூடிஷி யலாக திங்க் பண்ணி—முதலாளிகள் 100 ரூபாய் தருகிறேன் என்று சொல்லும் போது, தொழிலாளர்கள் 200 ரூபாய் வேண்டுமென்று கேட்கும்போது, அரசாங்கம் ரூபாய் 190 என்று வைத்தால் சரியாக இருக்காது—வையா மீடியாவாக 130 ரூபாய் 140 ரூபாய் என்றும் டிஸ்மிஸ் செய்தவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், டிஸ்மிஸ் பண்ண வர்களை சஸ்பெண்ட் செய்ய வேண்டும் என்றும் சஸ்பெண்ட் பண்ணவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வையா மீடியா பாலிசி வைத்துக்கொண்டு ஸ்ட்ரைக்கைத் தடை செய்யாமல் இருக்கலாம். அப்படிச் செய்வதன் மூலமாக தொழில் அமைதியைக் கொண்டு வரலாம். தொழிற் சங்கத் தலைவர்கள் "எப்படியாவது பத்து ரூபாயாவது வாங்கிக் கொடுங்கள்" என்று கேட்டால் வாங்கிக் கொடுக்கலாம், இரண்டு தோழர்கள் வேலைக்கு வரவேண்டுமென்று எல்.எம்.டபிள்யூவில் திரு. இரமணி அவர்கள் கேட்ட போது, சிரமப்பட்டு வாங்கிக் கொடுத்தேன். சிரமப்பட்டு வாங்கிக் கொடுத்தேன்—அதைப்போல எப்போதும் முடியாது.

தொழிலாளர்களுக்கு நன்மை செய்வதற்கு வேண்டிய அதிகாரத்தை இந்தச் சட்டத்தின் மூலமாக அரசாங்கத்திற்குப் பெறவும், தொழிற்சாலைகளை தொடர்ந்து மூடி தொழிலாளர்கள் வயிற்றில் அடிப்பதைத் தடுக்கவும் இந்தச் சட்ட முன்வடிவு வழி வகுக்கிறதே தவிர வேலை நிறுத்தத்தைத் தடை செய்கிற சட்ட முன்வடிவு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு ஏற்கெனவே பிரிவு 10 (3) இருக்கிறது. இந்த அரசாங்கம் கடந்த ஆண்டுக் காலத்திலே எந்த ஸ்ட்ரைக்கையும் தடை செய்யவில்லை. எதற்காக அப்படி தடை செய்யவில்லை என்றால், வேலை நிறுத்தத்தைத் தடை செய்யக்



கூடிய அரசுக்கு தொழிலாளர்களுக்கு வேண்டிய சலுகையைப் பெற்றுத் தரக்கூடிய அதிகாரம் இல்லை என்பதுதான். அந்த அதிகாரம் இல்லாதபோது வேலை நிறுத்தத்தைத் தடை செய்ய புரட்சித் தலைவருடைய அரசாங்கம் கருதவில்லை. இந்த அரசாங்கம் நல்ல அரசாங்கமாக இருக்க விரும்புகிறது. எனவே கடந்த நான்காண்டுக் காலத்திலே நடந்து கொண்டிருந்த எந்த வேலை நிறுத்தத்தையும் இந்த அரசு தடை செய்யவில்லை என்பதைப் பெருமையோடு சொல்லுகிறேன். இப்போது அதிகாரத்தைப் பெற்றிருக் கிறோம். வேலை நிறுத்தத்தைத் தடை செய்யும் அதிகாரத்தை அல்ல. அதை என்றைக்கும் செய்யலாம் இப்போதுள்ள சட்டப் பிரிவுகளை வைத்துக் கொண்டு. நாங்கள் பெறுகிற அதிகாரம் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யவும், தொழிற்சாலைகளைத் திறந்து வைக்கவும்தான் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்ட நேரம் பதில் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. நான் விளக்கம் கேட்கும்போது, எனக்குள்ள லிமிட்டுக்கு உட்பட்டு கேட்க விரும்பு கிறேன். ஏற்கெனவே வேலை நிறுத்தத்தைத் தடை செய்ய அதிகாரம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டார்கள். ஆனால் இதுவரை உபயோகப்படுத்தவில்லை என்றும் சொன்னார்கள். தொழிலாளி களுக்குக் கடைசி ஆயுதமாக இருக்கும் வேலை நிறுத்தம் என்ற ஆயுதத்தை அவர்கள் கஷ்டப்பட்டு உபயோகப்படுத்தும் நேரத்தில் அதை அரசு தடை செய்தால், தொழிலாளர்களுக்கு உள்ள உரிமையை அரசு பறிக்கிறதே என்று தொழிலாளர்கள் கேட்பார்கள் என்பதாலே அரசு உபயோகப்படுத்தவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது சரி. இப்போது 'ரெபர்' பண்ணும்போது தொழிலாளர்கள் கோர்ட்டுக்குப் போய் பத்து வருஷம், எட்டு வருடம் என்று இழுத்தடிப்பதால் தொழிலாளர்களுக்குப் பலன் கிடைக்கும் நிலை இல்லை. ரெபர் பண்ண பிறகு தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் பண்ணி, முதலாளிகள் நிர்ப்பந்தத்திற்கு உள்ளானால் தாக்குப் பிடிக்க முடியாது என்று தன்னுடைய நிலையிலிருந்து இறங்கி வர வாய்ப்பு இருக்கிறது. பத்து வருஷம் காத்திராமல் இரண்டு, மூன்று மாதங்களில் முதலாளிகளுக்கு ஏற் படும் நஷ்டம் காரணமாக அவர்கள் இறங்கும் நிலைமை இருக்கிறது. ஆகவே அந்த கடைசி ஆயுதமான வேலை நிறுத்தத்தைத் தடை செய்வது சரியா ?

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** மாண்புமிகு உறுப்பினர் கேள்வி மட்டும் கேட்கலாம். நீண்ட பேச்சாகப் பேசக்கூடாது.

*திரு. ஆ. நல்லசிவன் :* மாற்றுத் தலைவர் அவர்களே, நான் விளக்கம் கேட்கும்போது என்னை மட்டும் தடை செய்வது சரியா?

*மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :* தடை செய்யவில்லை. விளக்கம்தான்.

(பிற்பகல் 5-40)

*திரு. ஆ. நல்லசிவன் :* அதிலே ஒரு விஷயம் சொல்ல நான் விரும்புவது என்னவென்றால், இந்த நிவாரணம் பற்றிச் சொல்வது என்னவென்றால், இந்த ஆக்ட்படி இந்த நிவாரணம் என்பது 6 மாதம் என்று இருக்கிறது. ஆனாலும் கோர்ட்டிலே 8 வருடம், 10 வருடம் என்று போகின்றபோது, இந்த 6 மாதம் முடிந்தபிறகு, இந்த நிவாரணம் தேவையில்லை என்று அரசு முடிவு செய்யுமானால், திரும்பவும் அந்த நிவாரணம் வேண்டுமென்று தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் செய்யவேண்டியதாகத்தான் இருக்கும். "Six month from the date of Tribunal's award or whichever is earlier என்று இருக்கிறது. கோர்ட்டில் 8 வருடம், 10 வருடம் என்றும், பிறகு சுப்ரீம் கோர்ட்டுக்கு என்றும் போகாமல் இருப்பதில்லை. இந்த அளவில் 6 மாதம் நிவாரணம் என்று சொல்கிறார்கள் அந்த நேரத்தில் இந்த ஸ்ட்ரைக்கைக் கைவிடும்படி நிர்ப்பந்தம் செய்வதற்கு வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. ஆக இதிலே ஒரு நிவாரணம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :* நானும் பேசுகிறேன். அங்கத்தினர் அவர்களும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இரண்டு பேர்களும் பேசிக் கொண்டிருந்தால் எப்படி முடியும்?

*மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :* அங்கத்தினர் அவர்கள் விளக்கம் சொல்லக்கூடாது. விளக்கம் கேட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள்தானே பதில் சொல்ல வேண்டும்.

*திரு. ஆ. நல்லசிவன் :* மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்த நிலைமைகள் ஏன் தெரியாமல் போய்விட்டது என்று நினைக்கிறேன்.

*மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :* மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவர் அவர்களே, விவாதத்தில் அங்கத்தினர்கள் பங்கு கொள்வதுபோல அமைச்சர் பதில் சொல்லும்போது, பேசிவிட முடியாது. காரணம் அங்கத்தினர் அவர்கள் பேசும்போது அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதற்கு அவர்கள் இப்போது பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஏதாவது சந்தேகம் இருந்தால் அதைக் கேட்க வேண்டும். ஒருவரை



ஒருவர் 'கன்வின்ஸ்' பண்ணுவது என்பது முடியாது. அப்படி என்றால் இரவு அல்ல, 2 நாட்கள் பேசினாலும் நாங்களும் ஒத்துக்கொள்ளப் போவதில்லை. காரணம் இது ஒரு 'ஐடியலாஜிகல் பிராப்ளம்'. ஏதோ ஒருவரை ஒருவர் கன்வின்ஸ் பண்ணுவதாக நினைத்துக் கொண்டு போய்க்கொண்டிருந்தால், மற்ற பில்களை நிறைவேற்றுவது என்பது முடியாது. இரண்டொரு சந்தேகங்கள் கேட்கலாம். அதற்கு அவர்கள் பதில் சொல்லலாம். அத்தோடு நிறைவேற்றி விட்டு போகவேண்டியதுதான்.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :* மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் சொல்கின்றேன். ஸ்ட்ரைக்கைத் தடை செய்யும் நோக்கத்தோடு இந்த அரசு இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வரவில்லை. அப்படி தடைசெய்து கொண்டே இந்த அரசு இருக்காது என்பதைக்கூட உறுதியோடு சொல்கிறேன். அந்த உறுதிமொழியைத் தர அரசு தயாராக இருக்கிறது. இதுவரை எத்தனை எச்சரிக்கையோடு இருந்தோமோ அந்த மாதிரி எச்சரிக்கையாகத்தான் இருப்போம். But we want ammunition in our armoury அப்படி நாங்கள் இருக்க வேண்டும் என்று கருதுகிறோம். ஆனால் முக்கியமான நோக்கம் தொழிலாளர்களுக்கு அந்த நிவாரணம் கொடுக்க வேண்டுமென்பதுதான். பல நேரங்களில் அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் என்னிடம் வருகிறார்கள். 'அண்ணே, இனிமேல் ஸ்ட்ரைக் நீடிக்காது' என்று சொல்வார்கள். மாண்புமிகு திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய நீண்ட போராட்டச் சக்தியைக் குறைக்க மாட்டோம். குறைப்பது என்பது இல்லை. நிச்சயமாகக் குறைக்க மாட்டோம். தொழிலாளர்கள் என்னிடம் வந்து 4 மாதங்கள் தயாராக இருக்கிறோம் என்று சொல்லும்போது, திடீரென்று தடை செய்துவிட்டு உள்ளே அவர்களைப் போக வேண்டும் என்று சொல்ல மாட்டோம். அப்பேர்ப்பட்ட காரியத்திலே இந்த அரசு ஈடுபடாது. அதையெல்லாம் அரசு யோசனை செய்யும். ஒரு நேரத்தில் இனி தாங்காது. ஒரு ஸ்ட்ரேட்டஜீ வந்து, 'வித்ட்ரா' செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது. சில நேரங்களில் தொழிற் சங்கத் தலைவர்களே அப்படிச் செய்தாக வேண்டும் என்ற நிலை வருகிறது. அப்படியும் அவர்கள் முடிவெடுப்பதுண்டு. நீண்ட போராட்டம் அபாயத்திலே முடிவதுண்டு. இவைகள் எல்லாவற்றையும் மனதிலே கொண்டு தான் இந்த அரசு முடிவு எடுக்கும். எங்களுடைய புரட்சித் தலைவர் வேலை நிறுத்தத்தை இந்தச் சட்டத்தின் மூலமாக தடை செய்துவிட வேண்டும் என்பதற்காக இதைக் கொண்டு வரவில்லை. உரிமையை எடுத்துவிட வேண்டு மென்பதற்காக அல்ல. தொழிலாளர்களுக்கு அதிகச் சலுகைகளைக் கொடுக்க

[திரு. எஸ். இராகவாநந்தம்] [1982 ஏப்ரல் 7

வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் கொண்டு வரப்படுகிறது. தொழிற் சாலைகள் அதிக நாட்களுக்கு மூடியில்லாமல் பார்த்துக் கொள்வதற்காகத் தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னதுபோல், 6 மாதம் தான் அமுலில் இருக்கும். கோர்ட் தீர்ப்புக்கு முன்னதாக இருக்கிறதே என்றார்கள். அந்தக் கோர்ட்டு தீர்ப்பு முன்னதாக வருவதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும். இது மட்டுமல்லாமல், மத்திய அரசும் சில சட்டங்களைக் கொண்டுவர இருக் கிறது. யாரையாவது வேலை நீக்கம் செய்துவிட்டு அவர்களை வேலையில் எடுத்துக்கொள்ளாவிட்டால், அவர்கள் அப்பீலுக்குப் போவார்கள் என்றால், அந்த கேஸ் முடிகின்ற வரைக்கும் அந்தத் தொழிலாளர்களுக்கு 75 சதவிகிதம் ஊதியம் கொடுக்க வேண்டும் என்று வர இருக்கிறது. இதை இரண்டு நாட் களுக்கு முன்னதாகக்கூட அறிந்திருக்கலாம். அந்த அளவிலேகூட அந்தச் சட்டத்தை, ஐ. டீ. ஆக்டைத் திருத்துவதாக தொழிலாளர்கள் நல அமைச்சர் கள் மகாநாட்டில் முடிவு எடுத்திருக்கிறோம் அந்தச் சட்டமும் வரப்போகிறது. மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இருந்திருந்தால், ரொம்ப 'அப்ரிசியேட்' பண்ணியிருப்பார்கள். மாநில அரசும் மத்திய அரசும் போட்டி போட்டுக்கொண்டு தொழிலாளர்களுக்கு நன்மையைச் செய்து கொண்டு வருகிறோம். நேற்று முன்தினம்கூட இன்னும் 12 திருத்தங்கள் கொண்டு வருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திருத்தங் களும் சேர்த்து வரும்போது, There will be complete protection for the working class. அதை நாம் உணர வேண்டும். வீக்கர் செக்‌ஷன்களுக்கு உதவி செய்யத்தான் இந்த அரசு இருக்கிறது. முதலாளிகளை எதிர்த்துப் போராடக்கூடிய, சற்று போதுமான சக்தி இல்லாதவர்களைக் காப்பாற்றுவதற்காகத்தான் இந்த அரசு இருக்கிறது. அதை நாங்கள் நிரூபித்துக் காட்டியிருக்கிறோம். தொடர்ந்து நிரூபித்துக் காட்டுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே தான் வளர்ச்சி, மற்ற அம்சங்களிலே தொழிற்சாலைகள் தொடர்ந்து மூடியில்லாமல் பார்த்துக்கொள்வது என்பதையும் கருத்தில்கொண்டு இந்தச் சட்டத்தை மிக எச்சரிக்கையாக அமுல்படுத்துவோம் என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் திருத்தத்தை திரும்பப் பெறுகின்றாரா அல்லது வலியுறுத்துகின்றாரா என்று தெரிய வேண்டும். அவர் அவையில் இல்லை.

(திரு. ஏ. ஆர். தாமோதரன் எழுந்தார்).



1982 ஏப்ரல் 7]

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** அங்கத்தினர் திரு. ஏ. ஆர் தாமோதரன் அவர்கள் திருத்தம் இதிலே கொடுக்கவில்லை.

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, அவர் ஏற் கெனவே அமெண்ட்மெண்ட் மூவ் பண்ணியிருக்கிறார் என்று கருதுகிறேன். செகண்ட்டும் பண்ணியாகி விட்டது. அவர் ஏன் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** அவர் வற்புறுத்தவில்லை என்று சொல்ல வேண்டும் அல்லவா? வற்புறுத்துகின்றாரா இல்லையா என்று சொல்ல வேண்டும். அவர் அவையிலே இல்லை. ஆதலால் திருத்தம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனை களையும் முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

நிர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 12 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

**பிரிவு 13.**

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் அவையில் இல்லை. ஆதலால் பிரிவு 13 முதல் 25 வரையில் திருத்தங்கள் எதுவும் முன்மொழியப் பெறவில்லை.

பிரிவுகள் 13 முதல் 25 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

(மாண்புமிகு திரு. க. இராமமூர்த்தி அவைக்கு வந்தார்).

**பிரிவு 26.**

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** மாண்புமிகு அங்கத்தினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் பிரிவு 26-ல் அவருடைய திருத்தத்தை முன் மொழிவார்கள்.

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the following amendment :—

"In clause 26, for the words 'any person' substitute the words 'an Officer of Labour Department'".

THIRU A. R. DAMODARAN : I second it.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இதற்குரிய காரணங்களை பேசும்போதே சொல்லியிருக்கிறேன்.

The word 'person' has wider scope and includes an Officer of the Labour Department also. Therefore I oppose the amendment.

*** திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருந்தாலும்கூட, ஒரு இரண்டு வார்த்தை பேசிவிட்டு, பிறகு பதில் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். அப்படித்தான் நான் நினைத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பழக்கத்தின் காரணமாக இப்படி போடப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதுபோல் தொழிலாளர் துறையினுடைய அதிகாரிகள் அல்லது தொடர்பு உடையவர்கள் யாரையாவது வேண்டுமானாலும் போடுவதற்கு வாய்ப்பு இருக்கின்ற வகையிலேதான் 'any person', என்று ஒரு வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று கருத்துத் தெரிவித்தார்கள். ஆனால் இந்த 'any person' என்பது con't be extended to a non-official or not? துறையோடு தொடர்புடையவர்கள் தவிர மற்றவர்கள் இதிலே கொண்டுவரப்படமாட்டார்களா? இந்த 'any person' என்ற எக்ஸ்பிரஷன் காரணமாக Non-officials தடை செய்யப்படுமா என்பதற்கு எனக்குப் பதில் கிடைக்கவில்லை. ஆகவேதான் திருத்தத்தை முன்மொழிகிறேன். ஆனால் அப்படித் தடை வராது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேச்சு அமைந்திருக்கிறதாக நான் கொள்கிறேன். ஆனால் எதுவாக இருந்தபோதிலும்கூட, இந்தச் சட்ட முன்வடிவில் இருக்கின்ற தவறு என்னவெனில் வழிவழியாக தவறு நடக்கிறது, ஆகவே அது ccd f ca ion கோடிபிகேஷனிலே இருக்கிறது என்றாலும்கூட, அதிலே மாற்றம் கண்டுபிடிக்கின்றபோது, அதை ஏற்றுக்கொள்வதுதான் முறை. மாற்றுவதற்கு இடம் கொடுக்கிறபோது,



அந்த கோடிபிகேஷனிலே இருக்கின்ற நிலைமையை மாற்றி புதுமைக்கு இடம் கொடுக்கின்ற அளவிலே இந்தத் திருத்தம் தேவைப்படுகிறது என்று சொல்கின்றேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அரசு அதை எதிர்ப்பதற்குரிய காரணத்தைச் சொல்லியிருக்கிறேன். இந்தச் சட்டம் முதன்முதலாக அமுலுக்கு வருகிறது. இதைச் செயல்படுத்திப் பார்க்கிறபோது, மாண்புமிகு அங்கத்தினர்கள் பலர் சொன்ன ஆலோசனைகளை மனதில் கொண்டு, என்னென்ன திருத்தங்கள் தேவைப்படுமோ அந்தத் திருத்தங்களைக் கொண்டு வந்துவிடலாம். இப்போது அங்கத்தினர்கள் சொன்ன திருத்தத்தை உதாசினம் செய்துவிட்டோம் என்று அர்த்தமில்லை. It gets its due weight இது முதன் முதலாகக் கொண்டு வருகின்ற காரணத்தினாலே, பின்பு என்னென்ன மாற்றங்கள் கொண்டு வரலாம் என்பதைப்பற்றிக் கலந்து பேசிச் செய்யலாம் என்று சொல்லி, இந்தப் பிரிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** எற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த போர்டிலே அதைப் பரிசீலனை செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வாக்குறுதியின் அடிப்படையிலே இந்தத் திருத்தத்தை நான் வலியுறுத்தவில்லை.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவுகள் 26 முதல் 29 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**பிரிவு 30.**

THIRU K RAMAMOORTHY: Sir, I may be permitted not to move the amendment.

பிரிவுகள் 30 முதல் 32 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

[1982 ஏப்ரல் 7

(பிற்பகல் 5-50)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1982) நிறைவேற்றப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1982) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(2) 1982 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ் நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1982).**

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டமுன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 316 318ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1982 ஏப்ரல் 7]

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, தொழில் தகராறுகள் (தமிழ் நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, தொழில் தகராறுகள் (தமிழ் நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1982) நிறைவேற்றப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, தொழில் தகராறுகள் (தமிழ் நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1982) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவை[illegible]விற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### (3) 1982 ஆம் ஆண்டு வக்ஃபு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 70/1982).

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு வக்ஃபு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 70/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : முன் மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு வக்ஃபு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 70/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இப்போது இங்கே அவையினுடைய மேலான ஆதரவைப் பெறக் கொண்டுவரப்பட்டிருக்கும் சட்ட முன்வடிவின் அடிப்படை நோக்கம், 1959 ஆம் ஆண்டு பொது வக்ஃபுகள் (காலவரையறையை நீட்டித்தல்) சட்டம் (மத்தியச் சட்டம் 29/1959) சில நேர்வுகளில் பொது வக்ஃபுகளின் ஒரு பகுதியாக உள்ள இயங்காச் சொத்தின் சுவாதீனத்தை மீட்பதற்குரிய வழக்குகளுக்கான காலவரையறையை நீட்டிக்கிறது. ஆனால் பொது வக்ஃபுகளின் நிதிகளையும், அந்த வக்ஃபுகளின் வாடகையையும் ஆதாயத்தையும் வசூலிப்பதற்குரிய வழக்குகளுக்கான காலவரையறையை நீட்டிக்க இது வகை செய்யவில்லை. அந்தக் குறைபாட்டைப் போக்கத்தான் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். இதற்கு முன்பு ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்த போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். அந்த அடிப்படையிலே ரீஜினல் கமிட்டி அமைப்பது பற்றி அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. மத்திய வக்ஃப் சட்டத்தை மாற்றி அமைப்பதன் மூலமாக அதைச் செய்யலாமா அல்லது இப்போது நாம் ஏதாவது

@ 318 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.





ஒரு கமிட்டி அமைத்தால் அது அட்வைசரி நேச்சராகத்தான் இருக்குமே தவிர, அவர்கள் அங்கேயே தீர்ப்பு அளிக்கக்கூடிய அமைப்பாக இராது. அப்படி 2 முரணபாடுகள் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டும். கமிட்டி அமைக்க வேண்டுமென்பதிலே அரசுக்குக் கருத்து வேறுபாடு இல்லை. சட்டபூர்வமாகவும், அதிகார பூர்வமாகவும் இருந்தால், நாம் நினைக்கக்கூடிய அளவிற்கு வழக்குகளை எளிதாகத் தீர்க்க வாய்ப்பு இருக்கும். அதை அரசு பரிசிலித்துக் கொண்டிருக்கிறது. அதில் வேறுபட்ட கருத்து அரசுக்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இதை ஆதரித்து, நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU J. M. MIAKHAN : Mr. Vice-Chairman, Sir, this Bill that has come before the House is only an enabling Bill which seeks just to remove some anomalies in the Act and, therefore, I welcome it. But, I also wish to add that it is very inadequate because it does not cover all the provisions that are required to make the Act more perfect. On previous occasions also I have made representations in this august House that the Wakf Board has to be reorganised, that regional Boards with separate powers have to be appointed and that some provision has to be made to expedite the cases. Sir, justice delayed is justice denied. That is why I requested the Hon. Minister for Wakfs, on a previous occasion, to bring before both the Houses a legislation containing all the required provisions. I am sorry to note that only a portion of the provisions has been brought forward now. Of course, the present Bill is a desirable one. I am not opposing this Bill because it seeks to remove the difficulties experienced by the Wakf Board in getting back the lands that have been in possession of certain people for long periods. It seeks to remove the limitation on the holding of the Wakf properties. Therefore, it is a desirable Bill. I welcome this particular Bill and there is no doubt about it. But, I wish to mention here again that this is not adequate. The Hon. Minister should have bestowed more attention and brought in a more comprehensive Bill to cover the entire ambit of the affairs of the Wakf Board. Such a comprehensive Bill will not only benefit the Muslim community but will benefit all the people of Tamil Nadu. The benefits derived from the Wakfs do not accrue only to the Muslims. People belonging to other communities also derive the benefits. For example, the Wakf Board is running a College at Madurai There, the Muslims are not but only beneficiaries the people of Tamil Nadu, in general, are benefited by that College. The expenditure on that College is borne only by the

Wakf Board and we are only happy about it. There are hundreds and hundreds of Wakfs which are not properly run. If they are enabled to function properly, they will definitely confer more benefits on the community at large than only on the Muslims. If the various disputes are settled and if the anomalies are removed the Wakfs can function properly. Therefore, I request the Hon. Minister to bring, at least within a short while, another comprehensive Bill to remove all the anomalies and to see that the Wakf Board functions properly. With these words, I support this Bill and request the Hon. Minsiter to go ahead with the Bill. Thank you.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நான் இது குறித்து அதிகமாகச் சொல்ல வேண்டாமென்று கருதினேன். திருப்பித் திருப்பிக் கேட்பதால் சொல்கிறேன். வழக்குகளை நீட்டிக்கும் நோக்கம் அரசுக்கில்லை. யாருக்குமில்லை. வக்ஃப் செய்யப்பட்டுவிட்டது என்றால் அது இறைவன் சொத்துதான். in the name of Allah, வக்ஃப் செய்யப்படுகிறது. ஆண்டவன் பெயரிலே வக்ஃப் செய்யப்பட்ட சொத்துக்களையே வழக்கு மன்றத்திற்குக் கொண்டு வரும் மனோநிலையில் உள்ளவர்கள் எப்படி ஒத்துழைப்புத் தருவார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் ஆண்டவனுக்குப் பயப்படாதவர்கள், அரசுக்கும் சட்டத்திற்கும் பயந்து விடுவார்களா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கூடுமானவரையில் தவறான உணர்வுகளை வளர்க்காமல், அவர்களிடம் பதமாகச் சொல்லித்தான் சிலவற்றைத் தீர்க்க வேண்டியிருக்கிறது. வழக்குகள் யாருக்குள்ளே நடக்கின்றன ? ஒரு முத்தாவள்ளியை நீக்க வேண்டுமென்றும், அவர் சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்துகிறார் என்றும் இன்னொரு முஸ்லீம் வழக்கு போடுகிறார். பொதுச் சொத்தில் நாம் எவ்வளவு நியாயமாக நடக்க வேண்டுமென்ற அச்ச உணர்வு, இறை அச்சம், இருந்தால், இந்தக் குறையே வராது. அதையும் நாம் சொல்ல வேண்டியிருக்கிறது. வெறும் வழக்குகள் மூலம் இவைகளைத் தீர்த்துவிட முடியுமென்று கருதவில்லை. அவர்களாக மனம் மாறி தீர்க்க வேண்டிய நிலைமை இருக்கிறது. பல்லாயிரக் கணக்கான வழக்குகள் இருக்கின்றன. வக்ஃப் போர்ட் எந்த அளவிற்கு அதிலே ஈடுபட முடியும் என்பதைப் பார்க்க வேண்டும். எல்லா வழக்குகளையும் வக்ஃப் போர்டே நடத்த வேண்டுமென்று சொன்னால், முடியாது. சில நேரங்களில் வக்ஃப் போர்ட் சார்பாக சிலரை நியமிக்கிறோம். அவர்கள் உரிய காலத்தில், ஆஜராவதில்லை அதற்குக் காரணம், வழக்கை



எதிர்த்து நடத்துகிறவர்கள் அவர்களைச் சரி செய்து விடுகிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். எனவே என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். ஒன் மேன் கமிஷன் சிபாரிசுகளைக்கூட முழுமைப் படுத்தி, புதுச் சட்டம் கொண்டு வரலாமா என்பது அரசின் யோசனையில் இருக்கிறது.

(பிற்பகல் 6-00)

நிச்சயமாக வழக்குகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். எதுவும் சட்டப்படி இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் ரிஸீவர் என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அட்வைசரியாக இருந்தால் உரிய பலன் கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ஆகவே இதுகுறித்து உரிய முறையில் நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு வக்ஃபு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 70/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாற்றுத் தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு வக்ஃபு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 70/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

[1982 ஏப்ரல் 7

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, வக்ஃபு (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 70/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

5. அரசின் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(2) அலுவல் வரிசையில் மாற்றம் குறித்து.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாற்றுத் தலைவரவர்களே,

"மேலவை விதி 23 (1)-ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள அரசின் சட்ட முன்வடிவுகளில் கீழ்க்கண்ட நான்கு சட்ட முன்வடிவுகளும் இனம் 4க்கு முன்னதாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

1. தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1982)

2. தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1981)

3. தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1982)

4. தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1982)" என்று முன்மொழிகிறேன்.

மற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): அவை முன் உள்ள பிரச்சினை—

"மேலவை விதி 23 (1)-ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள அரசின் சட்ட முன்வடிவுகளில் கீழ்க்கண்ட நான்கு சட்ட முன்வடிவுகளும் இனம் 4-க்கு முன்னதாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்



1982 ஏப்ரல் 7] (மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம்)

1. தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1982)

2. தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1981)

3. தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1982)

4. தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1982)"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

6. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(4) தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1982.)

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாற்றுத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1982) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 29/1982) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

---

@ 319–320 ஆம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1982 ஏப்ரல் 7

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாற்றுத் தலைவரவர்களே, தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவின் மீது ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் குறிப்பிட்டு முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எதிர்பாராச் செலவு என்கின்ற வகையில் இதற்கு முன்பே எதிர்பார்த்து செய்திருக்க வேண்டிய சில செலவுகள் விடுபட்டிருப்பதை நான் குறிப்பிட்டு ஒன்றிரண்டை மட்டும் நான் நினைவூட்ட விரும்புகிறேன். குடும்பக் கார்டு கணக்கெடுக்கின்ற பணியிலே இப்போது ஆசிரியப் பெருமக்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். இது ஒரு தேசியப் பணி. இதற்கு உழைப்பு மிக மிக அவசியம். இதை எல்லோரும் உணர்வார்கள். கிராமப் பகுதிகளில் இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு குடும்பக் கார்டு ஒன்றுக்கு 15 காசு என்றும் நகர்ப் பகுதிகளில் இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு குடும்ப கார்டு ஒன்றுக்கு 35 காசு என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு கிராமப் பகுதிகளில் ஆசிரியர்கள் கணக்கெடுக்கச் சென்றிருக்கக் கூடிய நேரத்தில் விவசாயப் பெருங்குடி மக்கள் வீட்டில் இருக்க மாட்டார்கள். இதன் காரணமாக ஆசிரியர்கள் குறைந்தது 4 அல்லது 5 தடவை போக வேண்டியிருக்கும். இது மிகவும் சிரமமான பணியாக இருப்பதால், இந்தத் தொகையை உயர்த்தித் தர அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். அதற்கான தொகையை இந்த எதிர்பாரா செலவினத்தில் சேர்க்க வழிவகை செய்ய வேண்டும். குடும்பங்களில் இந்தக் கார்டுகளை வழங்கும்போது குடும்பக் கார்டு ஒன்றுக்கு 2 ரூபாய் வீதம் வசூலிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த 2 ரூபாயை 3 ரூபாயாக ஆக்கினால்கூட பரவாயில்லை. அப்படியாவது 100 குடும்ப கார்டுகளைக் கணக்கெடுக்கின்ற ஒருவருக்குக் குறைந்த பட்சம் 50 ரூபாய் வழங்க வேண்டும். அந்த வகையில் ஒரு குடும்ப கார்டுக்கு 50 பைசா வீதம் நிர்ணயிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 1973 ஆம் ஆண்டு கணக்கெடுத்த ஆசிரியர்களுக்கு கீழையூர், மாயுரம், திருவாரூர், நாகை போன்ற பகுதிகளில் எல்லாம் அதற்கான ஊதியம் இன்னும் வழங்கப்படவில்லை. இப்போது புதிய குடும்பக் கார்டு கணக்கெடுப்புப் பணியில் நாங்கள் ஈடுபடமாட்டோம் என்று அவர்கள் அறிவித்தார்கள். பிறகு அரசு அதிகாரிகள் அளித்த உறுதிமொழின் பேரில் இப்பணியில் ஆசிரியர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்தப் பணத்தை உடனே வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1982 ஏப்ரல் 7] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

அடுத்து, தேர்வுப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுகுறித்து ஒன்றைச் சொல்கிறேன். தேர்வுப் பணியைப் பொறுத்தவரையில், எஸ். எஸ். எல். சி. தேர்வு என்றும் பிளஸ் 2 என்றும் தேர்வுகள் நடைபெறுகின்றன. எஸ். எஸ். எல். சி. தேர்வுப் பணிக்கு வழங்கப்படுகின்ற தொகையைவிட பிளஸ் 2 தேர்வுப் பணியில் மேற்பார்வையாளராகப் பணியாற்றுபவர்களுக்கு அதிகத் தொகை வழங்கப்படுகிறது. தலைமை மேற்பார்வையாளராக எஸ். எஸ். எல். சி. தேர்வுக்கு பணியாற்றுபவர்களுக்கு 6 ரூபாய் வழங்கப்படுகிறது. ஆனால் பிளஸ் 2 தேர்வுக்குப் பணியாற்றுபவர்களுக்கு 10 ரூபாய் வழங்கப்படுகிறது. கூடுதல் தலைமை மேற்பார்வையாளராக எஸ். எஸ். எல். சி. தேர்வுக்குப் பணியாற்றுபவர்களுக்கு ரூபாய் 6 வழங்கப்படுகிறது. ஆனால் பிளஸ் 2 தேர்வுக்குப் பணியாற்றுபவர்களுக்கு ரூபாய் 10 வழங்கப்படுகிறது. தேர்வு கூடுதல் மேற்பார்வையாளர்களாக எஸ். எஸ். எல். சி. தேர்வின்போது பணியாற்றுபவர்களுக்கு 4 ரூபாய் வழங்கப்படுகிறது. ஆனால் பிளஸ் 2 தேர்வின்போது பணியாற்றுபவர்களுக்கு 6 ரூபாய் வழங்கப்படுகிறது. அதுபோல் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வின்போது பணியாற்றுகின்ற எழுத்தர்களுக்கு 2 ரூபாய் வழங்கப்படுகிறது. பிளஸ் 2 தேர்வின்போது பணியாற்றுகின்ற எழுத்தர்களுக்கு ரூபாய் 4 தரப்படுகிறது. அதுபோல் வாட்டர் மேன் ஆக பணியாற்றுபவர்களுக்கு அதிலே 1 ரூபாயும் இதிலே 2 ரூபாயும் தரப்படுகிறது. பியூனுக்கு அதிலே 1 ரூபாயும் இதிலே 2 ரூபாயும் தரப்படுகிறது. ஆனால் துறைத் தலைவர்களாக, டிப்பார்ட்மெண்ட் ஆபிசர்ஸ் ஆகப் பணியாற்றுபவர்களுக்கு, தேர்வு நடைபெறுவதற்கு 2 மணி நேரத்திற்கு முன்னாலே வந்து பணியாற்றுபவர்களுக்கு இந்த இரண்டு தேர்வுகளின்போதும் 6 ரூபாய்தான் வழங்கப்படுகிறது. இரண்டு இடத்திலேயும் 6 ரூபாய் என்று இவர்களுக்கு வழங்கப்படுவதை 10 ரூபாயாக உயர்த்த அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டு இந்தச் சட்ட முன்வடிவின் மீது அதிக நேரம் எடுத்துப் பேச வழிவகை இல்லாததால் இந்த அளவோடு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாற்றுத் தலைவரவர்களே, இங்கே ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல் அதிகமாக நிதி ஒதுக்கீடு பற்றிய பிரச்சினையைப் பொறுத்தவரையில், 30 கோடி ரூபாய் என்பதற்குப் பதிலாக 50 கோடி ரூபாய் எதிர்பாராச் செலவு என்கிற அடிப்படையில் செலவு ஏற்பட்டிருக்கிறது. 1974-75 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 295.42 கோடி ரூபாய் அளவுக்கு நிதி நிலை அறிக்கையின் மாத்த வருவாய் இருக்கையிலேயே இப்படிப்பட்ட செலவு 20 கோடி ரூபாயாக இருந்தது. 30 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. ஆனால் இன்றைக்கு நம்முடைய மொத்தத் தொகை நிதிநிலை அறிக்கையில் 2,130 கோடி ரூபாய் அளவுக்கு

இருக்கையில் 30 கோடி ரூபாயிலிருந்து 50 கோடி ரூபாய் வரைதான் உயர்ந்திருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சில குறைபாடுகளை எல்லாம் நிவர்த்திக்கும் வகையிலும், சிலவற்றைப் பரிசீலித்து வேறு விதமாக நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலும் தான் இப்படி தொகை உயர்ந்து போகின்ற நிலை வருகிறது என்பதைத் தெரிவித்து, இந்த மன்றம் இதனை ஏற்று நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1982) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாற்றுத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1982) திருப்பி அனுப்பப் பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1982) திருப்பி அனுப்பப் பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.



## (5) தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1981).

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாற்றுத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1982ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 67/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

***திரு. க. இராமமூர்த்தி :** மாற்றுத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவிலே ஒரே ஒரு கருத்தை மட்டும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பரிசீலனைக்கு வைக்கிறேன். குடியிருப்புதாரர்களைப் பொறுத்த வரையில், ஒரு வார்த்தை சொல்லப்பட்டிருக்கிறது. "3-வது பிரிவில் என்ன சொல்லப்பட்டிருப்பினும் 3-வது பிரிவின்கீழ் குடியிருப்பு அல்லது மேல் கட்டடத்தின் உரிமை நிலை பெற்றுள்ள குடியிருப்பு அனுபோகதாரர்" என்பதற்குப் பதிலாக 3ஆம் பிரிவில் அல்லது 3-ஏ பிரிவில் என்ன சொல்லப்பட்டிருப்பினும், 3ஆம் பிரிவின்கீழ் குடியிருப்பு அல்லது மேல் கட்டிடத்தின் உரிமை நிலை பெற்றுள்ள அல்லது 3-ஏ பிரிவின்கீழ் குடியிருப்பு உரிமை நிலை பெற்றுள்ளதாகக் கருதப்பட்டுள்ள குடியிருப்பு அனுபோகதாரர் எனக் கொள்ள வேண்டும்' என்கிற திருத்தம் இது ஒரு சாதாரண திருத்தம்.

@ 320-324ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. க. இராமமூர்த்தி] [1982 ஏப்ரல் 7

(பிற்பகல் 6-10)

சட்ட முன்வடிவின் இந்தப் பிரிவின் நோக்கத்தைப் பொறுத்தவரையில், நான் குறை சொல்லவில்லை. பினாமியாக அல்லது மற்றவர்களுக்காக வேண்டி இர்வலாகக் குடியிருப்பவர் 10 ஆண்டு காலத்திற்குப் பிறகு அவர்களே அதை அனுபவிக்க வேண்டும் என்ற நிலை இருந்தாலும், கொஞ்ச காலம் வைத்திருந்து விட்டு, நிலச்சுவாந்தார்களுக்கு அல்லது வேறு சிலருக்குக் கொடுத்துவிட்டுச் செல்வது என்பது பல இடங்களிலே இருப்பதால், அதைத் தவிர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். எப்படி இருந்தபோதிலும், யாருக்கு (Assigne) 'அசையின்' பண்ணுகிறோமோ அவர்களில் பினாமியாக அந்த நிலத்தை விற்றிருப்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவுதான். இதுபோன்ற ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எவ்வளவு பேர் 10 ஆண்டுகளுக்கு உள்ளாக விற்றிருக்கிறார்கள் என்று கேட்டபோது, அவர்கள் சொன்ன பதிலிலிருந்து மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது. ஆனால் இந்தத் திருத்தத்தின் விளைவாக, குடியிருப்பு மனையின் மீது கட்டப்பட்டிருக்கும் (Super structure) ஸ்ட்டிரச்சரையும் அரசாங்கம் கைக்கொள்ள வேண்டும் என்ற வகையிலே தான் வருகிறது. அந்த ஏழை விவசாயிகள் உடனடியாக இல்லாவிட்டாலும், பல மாதங்களாக தாங்கள் உழைப்பில் கிடைத்த பணத்தை அதற்கு என்று செலவு செய்து பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து அந்த வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். அப்படிக் கட்டியவர்கள் மற்றவர்களுக்கு அந்த வீட்டை விற்கும் நிலை வரும்போது, சூப்பர்ஸ்ட்டிரக்சருக்கு யாரும் பணம் கொடுத்து அவர்களைக் கட்டச் சொல்லவில்லை அதுமட்டுமல்ல, குடியிருக்கும் ஏழை விவசாயி கொஞ்சம் கொஞ்சமாக தன்னுடைய உழைப்பை முதலீடாக வைத்து அதைக் கட்டுகிறான். ஆகவே, அவர்கள் தங்களுக்கு முடியாத, தங்களுக்கு இயலாத காலங்களிலே விலைக்குக் கொடுக்கும் நிலை வரும்போது, அந்த சூப்பர்ஸ்ட்டிரக்சரை அரசாங்கமே எடுத்துக்கொண்டால், அவனுக்கு ஒரு காம்பன்சேஷன் கொடுக்கும் அளவிலோ அல்லது உரிய வகையிலே ஒரு மதிப்பீட்டுத் தொகை கொடுக்கும் வகையிலோ தக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற கருத்தை முன்வைத்து, அமைகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : இந்தத் திருத்த மசோதா திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுவந்த சட்டத்தினுடைய உண்மையான நோக்கத்தை யாராவது தோற்கடிக்க நினைத்தால், அவர்களை ஏமாற்றும் நிலையிலே ஒரு சட்டத் திருத்தம் வேண்டும் என்று கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று நினைக்



1982 ஏப்ரல் 7] [திரு. ம. சங்கரலிங்கம்]

கிறேன். 1971-லே ஏழை விவசாயி குடியிருப்பு நிலத்தைப் பெற்று, அவனுடைய உழைப்பால் குடியிருப்பு வீட்டை அமைத்திருந்தால், அந்த இடம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் பெரும் நிலச்சுவாந்தார்கள் இடையிலே வாழும் விவசாயி 1971-லே வந்த சட்டத் திருத்தத்தின்படி குடியிருப்பு நிலத்தைப் பெற்றிருந்தாலும்கூட, நிலச்சுவாந்தார்கள் மத்தியிலே அவர்களுடைய பல்வேறு ஆதிக்கச் சக்திக்குள் இருக்கும்போது, 5 ஆண்டு அல்லது 7 ஆண்டு காலத்திற்குப் பிறகு, 'எனக்கு விலைக்குத் தந்ததாக எழுதிக் கொடு' என்று அவர்கள் கேட்டு இவர்கள் எழுதிக் கொடுக்கிறார்கள். அப்போது பினாமி வருகிறது. அப்படி எழுதிக்கொடுத்தால், அது அரசுக்கு வந்துவிடும் என்று வைத்தால், அப்படி எழுதிக் கொடுக்கமாட்டார்கள் என்று கருதி இது வந்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன். விவசாயிகளுக்கு அவர்கள் குடியிருக்கும் நிலத்தைக் காலி செய்து சொந்தமாக்கிக் கொடுக்கும் 1971ஆம் ஆண்டு சட்டத்தை முழுமையாக்கும் சட்டத் திருத்தமாக இருப்பதால், இதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் அரசுக்கு ஒரு ஆலோசனையும் சொல்கிறேன். சில இடங்களிலே பினாமி டிரான்சாக்ஷன்கள் நடப்பதை இந்தச் சட்டத் திருத்தம் நிறுத்திவிடும். நிலச்சுவாந்தார்கள், இந்த விவசாயிகளிடம் இருக்கும் 4 சென்ட் அல்லது 5 சென்ட் நிலத்தைத் திரும்பவும் ஒரு விலையாதாரமாக வாங்கிக்கொண்டாலும், பின்னர் அது அரசாங்கத்திற்குத்தான் போகும் என்ற நிலைமை இருப்பதால், நிலச் சுவாந்தார்கள் ஏழை விவசாயிகளை வற்புறுத்த மாட்டார்கள். ஆனால் சில இடங்களிலே ஏழை விவசாயிகளாக இருப்பவர்கள், அரசினிடத்திலே இருந்து நிலம் பெற்று அதிலே வீடு கட்டிக்கொண்டு வாழும்போது, தன்னுடைய குடும்பத்திலே ஏற்படும் பல்வேறு நெருக்கடியின் காரணமாக, நோய் காரணமாக, அல்லது தன்னுடைய குழந்தை நல்ல முறையில் படிக்க வேண்டும் என்பதற்காக, தன்னுடைய குழந்தையை தொழில் நுட்பக் கல்லூரியிலே சேர்த்துப் படிக்க வைக்க வேண்டும் என்ற ஆசையின் காரணமாக அல்லது வேறு பல குடும்பச் சூழ்நிலையின் காரணமாக அந்த நிலத்தை விற்க வேண்டும் என்ற நிலைக்கு வந்திருக்கும்போது, இந்தச் சட்டம் அதற்குத் தடையாக இருக்கிறது. இந்திய நாட்டின் பொருளாதார நிலையைப் பார்க்கும்போது, நாளைக்கு நம்மிடத்திலே இருக்கும் ஒரு பொருளை விற்றால், ரூபாய் 5 ஆயிரம் கிடைக்கும் என்றாலும், இன்றைக்கு அந்த விவசாயியினுடைய குடும்பத்திலே ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைச் சமாளிக்க அந்தப் பொருளை 2 ஆயிரம் ரூபாய்க்கு விற்க அவன் தயாராக இருக்கிறான். நாளைக்கு பையனுக்கு பீஸ் கட்டவில்லை என்று சொன்னால், அட்மிஷன் இல்லை. இந்த அளவிலே நடக்கும் 'ஜென்யூன் டிரான்சாக்ஷன்கள்' இருக்கின்றன. பினாமி டிரான்

சாக்ஷன் தடுக்கப்பட வேண்டும் என்பதுதான் நம்முடைய நோக்கம். ஆனால் இப்படிப்பட்ட நேரங்களில் அவனுக்கு ஜென்யூன் டிரான்சாக்ஷன் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் வந்து விடுகிறது. அப்படிப்பட்ட நேரங்களிலே அவனுக்கு அரசு கைகொடுக்க வேண்டும். இந்தச் சட்டப்படி அரசுச் சட்டத்தின்படி நிலம் யாருக்குச் சொந்தம் ஆக்கப்பட்டதோ அவர்கள் அந்த இருப்பிடத்தை, அந்த வீட்டோடு இருக்கும் நிலத்தை தன்னுடைய குடும்பத்திலே ஏற்பட்ட ஒரு நெருக்கடியைச் சமாளிக்க அல்லது ஒரு நல்ல காரியத்தைச் செய்து முடிக்க ஏற்படும் செலவைச் சரிக்கட்ட டிரான்சாக்ஷன் செய்யும் நிலை ஏற்பட்டால், அரசே அதை வாங்கிக்கொள்ளக்கூடிய ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதுபற்றி—இந்தச் சட்ட முன்வடிவிலே இல்லாவிட்டாலும்—சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏழை விவசாயி அவனுடைய மனைவிக்கு உடல் நலம் இல்லாமல், குழந்தைகளுக்கு உடல் நலம் இல்லாமல் மருத்துவ மனையிலே இருந்து 2 ஆயிரம், 3 ஆயிரம் ரூபாய் செலவழிக்கும் நிலை இருக்கிறது. தன்னுடைய மனைவி இல்லாமல், குழந்தை இல்லாமல் தன்னுடைய வீட்டை மட்டும் வைத்துக் கொண்டிருப்பதால், எந்தவிதமான பயனும் இல்லை. ஆகவே, இந்த வகையிலே அரசு கைகொடுக்கும் நிலையிலே உரிய திருத்தத்திற்கு அடுத்த சட்டமன்றத் தொடரிலேயாவது வழிவகை செய்து ஏழை விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்டத் திருத்தத்தை ஆதரித்து அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இராமமூர்த்தி அவர்களும், திரு. சங்கரலிங்கம் அவர்களும் ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் முழுமையாக ஆதரித்தார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். சில திருத்தங்களைச் செய்தால் நல்லது என்று சொல்லும்போது, அங்கே இருக்கிற ஏழை விவசாயி நிலமே இல்லாததால்தான் அங்கே இருக்கிறான், அப்படிப்பட்டவர்களுக்குச் சங்கடமான காலங்களிலே என்ன உதவி செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் சொன்னார்கள். அப்படி அவர்களுக்கு எதிர்பாராச் செலவு வரும்போது, நிலத்தை விற்று தன்னுடைய குழந்தையை அல்லது மனைவியைக் காப்பாற்ற வேண்டும் என்ற சூழ்நிலை வரும்போது என்ன செய்வது என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வி. அதற்கு உடனடியாக பதில் சொல்ல முடியாது. அந்தக் கேள்வி நியாயமானது. 1971 ஆம் ஆண்டு கொண்டு வந்த சட்டமும், 10 ஆண்டுகளுக்குள் அவர்கள் விற்கக்கூடாது, அடமானம் செய்யவோ மாற்றம் செய்யவோ கூடாது என்ற வகையில்தான் 1971-லேயும்



கொண்டு வரப்பட்டது. 10 ஆண்டுகளுக்குள் செய்துவிட்டால் என்ன செய்வது என்று தடுக்க வழிவகை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னார்கள்—இப்படி பினாமியாக வாங்குவதைத் தடுத்து நிறுத்த உதவியாக இருக்கும் என்று சொன்னார்கள். நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆங்கிலத்திலே சூப்பர்ஸ்ட்ரக்சர் என்று போடும்போது, தமிழிலே உள்ள அர்த்தமே மேலே உள்ள கட்டுமானம் என்பதுதான். சாதாரணமாக விவசாயி என்ன செய்கிறான் என்று சொன்னால், அவனுக்கென்று எந்தவிதமான நிலமும் இல்லை—மிராசுதார்களுடைய நிலத்திலே தான் குடிசை போட்டுக்கொண்டிருக்கிறான். அவர்கள் குறைந்த கூலிக்கு அந்த மிராசுதாரருக்கு வேலை செய்யாவிட்டால், அந்தக் குடிசையைப் பிரித்து எறிந்து விடுகிறார்கள் தஞ்சாவூரில்தான் இந்த நிலைமை அதிகமாக இருக்கிறது. தங்களுடைய நிலத்திலே குடியிருக்கும் விவசாயி குறைந்த கூலிக்கு தனக்கு வேலைக்கு வரவேண்டும், இல்லாவிட்டால் குடிசையைப் பிரித்து எறிந்து விடுகிறார்கள்.

(பிற்பகல் 6-20)

குறைந்த கூலிக்கு வரவில்லை என்றால், இத்தகைய முறைகளை அன்றைய தினம் நிலச்சுவான்தார்கள் கையாண்டார்கள். அதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றுதான் 1971 ஆம் ஆண்டு அப்போது நான் சார்ந்திருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்தில் இது கொண்டுவரப்பட்டது. அதிலும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில்தான் இது அமுல்படுத்தப்பட்டது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்கு தெரியும். இதைச் சொல்லுகிறபோது, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஒன்றுமே செய்யவில்லையா என்று கேட்கலாம். அவர்களும் செய்தார்கள். குடியிருப்புகளை உடமையாக்குவதற்கு முன்பாக 1961 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன், குடியிருப்பவர்களை அந்த இடத்திலிருந்து வெளியேற்றுவதைத் தடுக்கவும், அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவும் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அப்போதிருந்தே தொடர்ந்து வரும் ஆட்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக நல்ல முற்போக்கான கருத்துக்களைத்தான் அமுல்படுத்திக் கொண்டு வந்திருக்கின்றன. எனவே இந்த நிலையில் இந்தச் சட்ட முன்வடிவை **நிறைவேற்றித்தர** வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப்

பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவுற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 4.

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the following amendment :—

" In clause 4 delete the words ' or superstructure ' and ' or the superstructure ' wherever they occur."

திரு. பி. முனுசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : மாண்புமிகு உறுப்பினர் திரு இராமமூர்த்தி அவர்கள் தமது திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறாரா அல்லது வலியுறுத்துகிறாரா?

THIRU K. RAMAMOORTHY : Sir, in view of the concern made known by the Hon. Minister, I am not pressing my amendment.

திருத்தம், அவையின் அனுமதியோடு, திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 4, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 5 முதல் 8, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,



" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1981) நிறைவேற்றப்பட வேண்டும்."

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1981) நிறைவேற்றப்பட வேண்டும் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(6) தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1982).**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1982) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "
என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1982) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

* THIRU A. R. DAMODARAN : Sir, I am sure the Hon. Minister will be happy to pass a Bill which will give him 36 crores of rupees in exactly five minutes. Nonetheless I have to

@ 325-328 ஆம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[Thiru A. R. Damodaran] [1982 ஏப்ரல் 7

state what I want to mention. At present the exemption limit for general sales tax is only Rs. 50,000 as turnover for a dealer and as I have requested, I would plead that the exemption limit should be increased to at least Rs. one lakh, because at present on a turnover of Rs. 4,150 per month a dealer has to pay sales tax. In view of inflation and in view of what the Hon. the Leader of the House himself has explained as to why he wanted the Contingency Fund to be raised from Rs. 30 crores to Rs. 50 crores, this problem affects even the traders also and I request the Government to kindly consider this plea.

Regarding multi-point levy, I believe representations have been made by trade to the Government regarding this levy and according to the statistics only 16 per cent of the total sales tax revenue is from multi-point levy. It may be 18 per cent or 20 per cent and I do not know the exact figure. At present the Government are getting a revenue of about Rs. 64 or 70 crores under multi-point levy at 4 per cent. When the Hon. Minister raised it to 5 per cent, it means that general consumers will have to pay an additional 16 to 20 crores of rupees per annum by this increase from 4 per cent to 5 per cent. I am moving an amendment and I will speak on that later. My request is—and this is the plea that has been made by the trade—that contant efforts should be made to remove as many items as possible from the multi-point levy to the single point. In 1974 Thiru Sadiq Pasha was the Minister for Sales Tax and he is remembered with gratitude by the trade because, he took 51 items away from multi-point levy and put them on to single point. I am sure the present Revenue Minister will also be remembered with gratitude by the trade if instead of increasing the multi-point tax from 4 per cent to 5 per cent, he removes many of these items from multi-point and puts them under single point levy.

Regarding the other levy, I feel that the Government has committed a mistake in increasing the levy on cement from 10 per cent to 12 per cent. They did it before the control system went out. Now that the free-sale quota has been released, the price of cement itself has gone up from Rs. 28 to Rs. 34 as far as the levy cement is concerned and from Rs. 28 to nearly Rs. 57 as far as the free-sale cement is concerned. There was no necessity to increase the percentage of levy. I have given notice of an



1982 ஏப்ரல் 7] [Thiru A. R. Damodaran]

amendment in this regard. I request that it be reduced. I hope that the Hon. Minister will consider this because his revenue is bound to increase even at 10 per cent in view of the increase in the price of cement. Sir, cement is used by everybody. It is used not merely by the rich people but it is used by the lower middle-class, middle-class, etc. Everybody who wants to construct a house or to repair a house uses cement. Therefore, I am sure that the Hon. Minister will review this.

As far as the tax on liquor is concerned, I think that it is a very dangerous tax that the Hon. Minister has introduced. I come from a part where smuggling of liquor is a constant practice and that is Cuddalore. I am just across the border from Pondicherry. Everyday there are basket-loads of bottles being brought from Pondicherry area to Cuddalore and being consumed. The raising of tax on liquor will only increase the amount of smuggling that goes on in the borders and will increase the revenues of the illicit operators in the liquor trade. It is not desirable that we should encourage it. In fact, even when Prohibition was removed, I informed the Government that they should keep the excise levy as low as possible so that smuggling would not be encouraged. I hope that this point also will be considered by the Hon. Minister because in course of time I think the Government will realise that too much of malpractice is likely to occur. It is not with the intention of encouraging the liquor-trade or the consumption of liquor that I am pleading for a lower rate of tax but it is only to see that the Government revenues are safeguarded. These are the few things that I wanted to mention. Thank you.

திரு. க. இராமமூர்த்தி : மான்புமிகு மேலவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு பிரச்சினையைக் குறித்து மட்டும் நான் இந்தச் சட்ட முன்வடிவின்மீது மான்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

கெரசின் எண்ணெய்க்கான வரியைக் குறைத்திருக்கிறார்கள். நல்லது. இதைக் குறிப்பிடும்போது இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பல இடங்களில் நீதிமன்றத் தீர்ப்புகள் அமுல்படுத்தப்படாத நிலை இந்தத் துறையில் இருக்கிறது. உயர்நீதி மன்றத்தின் 'டைரக்ஷன்கள்' கூட அமுல்படுத்தப்படவில்லை என்பதை வருத்தத்

(Directions)

தோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவோடு நெருங்கிய தொடர்பில்லை என்றாலும் இங்கே அதைக் குறிப்பிடுவது அவசியம் என்றுதான் கருதுகிறேன். இது எங்கள் மாவட்டத்தில் நடைபெற்றிருக்கிறது. எங்கள் மாவட்டத்தில் அதிலும் குறிப்பாக எங்கள் திண்டிவனத்தில் சில குறிப்பிட்ட நபர்களுக்கு கெரசின் வழங்குவதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அது முறையல்ல என்று பாதிக்கப்பட்டவர்கள் உயர்நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனு போட்டார்கள். அதன் மீது நீதிபதி திரு. இராமசாமி அவர்களும், நீதிபதி திரு. செங்கோட்டுவேலன் அவர்களும் தீர்ப்பளித்திருக்கிறார்கள். நான் அதில் கடைசி பாராவில் உள்ள டைரெக்ஷனை மட்டும் படிக்க விரும்புகிறேன் :

"In the result, we allow the Writ Petitions and direct the Government to revoke the instructions issued to the wholesalers not to supply kerosene to the Petitioners in these Writ Petitions as above. There is no order as to costs in this case."

உடனடியாக அவர்களுக்குத் தடையேதுமின்றி கொடுக்க வேண்டும் என்று நீதிமன்றத்தின் தீர்ப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. தீர்ப்பு தந்து 3, 4 மாதங்களாகின்றன. ஆனால் இந்த உத்தரவு துறையில் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. இன்னும் அமுல்படுத்தப்படவேயில்லை. அதிகாரிகள் என்னதான் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. கெரசின் விலையை உயர்த்துவது என்பதும், குறைப்பது என்பதும் வேறு விஷயம்.

(பிற்பகல் 6-30)

ஆனால் வியாபாரிகள் நீதிமன்றம் சென்று அவர்கள் பெற்றிருக்கிற தீர்ப்பாணை கேட்பாரின்றி கிடக்கிறது. மதிக்கப்படாமல் இருக்கிறது. அதாவது the directions of the Court are not honoured by the Government. நீதிமன்றத்தினுடைய செயல்முறைக்கு களங்கம் இருக்கக் கூடாது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதை நிறைவேற்றும் அதிகாரிகள் இதுபோன்ற நிலைமையில் இல்லாமல், வரட்டு ஜம்பம் இல்லாமல் செயல்படுவதற்குத் துணை புரிய வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வருவதற்குக் காரணம், அவர்களுடைய துறை தொடர்பு உடையவர்கள் குறைந்தபட்சம் இது போன்ற காரியங்களில் ஈடுபடாமல் இருக்க வேண்டும் அரசாங்கத்திற்கு உள்ள மதிப்பைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான். "நான் சொன்னதை



மீறி கோர்ட்டுக்குப் போய் தீர்ப்பு வாங்கி வந்தால் நான் மதிப்பேனா" என்று அதிகாரிகள் சொன்னால் அரசாங்கத்தினுடைய மதிப்பைக் காப்பாற்ற முடியாத நீதிமன்றத்தினுடைய கௌரவம் காப்பாற்றப்படவில்லை என்ற நிலைமை ஏற்பட்டு விடும். ஆகவேதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டு, அமர்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த பொது விற்பனை வரி சட்டத் திருத்த மசோதாவின் மீது எனது கருத்தைச் சொல்லுவதற்கு முன்னால், நிதி ஒதுக்கீடு மசோதா, நிதிநிலை அறிக்கை ஆகியவைகள் இந்தக் கூட்டத் தொடரிலே வந்தபோதே இவைகளை நாங்கள் வன்மையாக எதிர்த்திருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதையொட்டித்தான் இந்தத் திருத்தச் சட்டம் வந்திருக்கிறது. 4 சதவீதத்திலிருந்து ஐந்து சதவீதமாக பொது விற்பனை வரியை உயர்த்துகிறபோது பொதுமக்கள் எப்படி பாதிக்கப்படுவார்கள் என்பதையெல்லாம் பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே நாங்கள் விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அப்போது பதில் அளித்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், அவைகள் கவனத்திலே கொள்ளப்படும் என்று சொன்னதால், இத்தகைய மசோதா வராது என்று நினைத்துக் கொண்டிருந்தோம்.

உதாரணத்திற்காகச் சொல்வதாக இருந்தால், அந்நிய நாட்டு மது வகைகளுக்குப் போட்டிருக்கக்கூடிய விற்பனை வரியை 25 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்துவதால் நம்முடைய வருவாய் எப்படி பாதிக்கப்படும் என்பதை புள்ளிவிவரத்தோடு பாண்டிச்சேரியில் எத்தனை சதவீதம் இருக்கிறது, கர்நாடகாவில் எத்தனை சதவீதம் இருக்கிறது; கேரளாவில் எத்தனை சதவீதம் இருக்கிறது, ஆந்திராவில் எத்தனை சதவீதம் இருக்கிறது என்பதையெல்லாம் தெளிவாகச் சொல்லி, எப்படி ஒரு கேசை அங்கிருந்து இங்கே கொண்டு வந்தால் எவ்வளவு ரூபாய் வித்தியாசம் இருக்கிறது என்பதையெல்லாம் குறிப்பிட்டுக் காட்டினோம். அப்போது பதில் அளித்த மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், அவ்வளவு வேறுபாடுகள் இருக்குமானால் உண்மையிலேயே நம்முடைய நாட்டுக்கு வரவேண்டிய வரிப் பணம் வராமல் போய், கேரளாவிலிருந்தும், கர்நாடகாவிலிருந்தும், ஆந்திராவிலிருந்தும் பாண்டிச்சேரியிலிருந்தும் அந்நிய நாட்டு மது வகைகள் கள்ளக்கடத்தல் மூலம் கொண்டு வரப்படும் என்ற நிலை இருக்குமானால் கவனிக்கலாம் என்று சொன்னார்கள். ஆகவே இந்த வரியைக் குறைப்பார்கள் என்று நாங்கள் நம்பியிருந்தோம். அதைப் போலவே சிமெண்ட், மற்ற பொருள்கள் ஆகிய

வற்றையெல்லாம் நாங்கள் குறிப்பிட்டுச் சொன்னபோது, அவர் தன்னுடைய பதிலுரையில் இவைகள் எல்லாம் கருத்திற் கொள்ளப்படும் என்று தெரிவித்தார்கள். ஆனால் இன்று வந்திருக்கக்கூடிய மசோதாவைப் பார்க்கும்போது, பட்டு நூலுக்குப் போட்டிருந்த வரியை நீக்கியதைத் தவிர மற்றவைகள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. பட்டு நூலுக்குப் போட்ட வரியை விட்டிருப்பதற்காக நான் பாராட்டுகிறேன். பட்டுத் தொழிலைச் சேர்ந்தவர்கள் முறையிட்டதைப் போல, நாங்கள் இந்த மன்றத்திலேயிருந்து முறையீடு செய்தோம். ஆனால் நாங்கள் சொன்னதை கவனிக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. ஆகவே கூடுதல் வரி விதிப்பைப் பற்றி நாங்கள் பட்ஜெட் கூட்டத் தொடரில் சொன்ன கருத்துக்களுக்கேற்ப வரியைக் குறைக்காததன் காரணமாக இதை வன்மையாகக் கண்டிக்கிறோம். அரசு இப்போது தன்னுடைய பெரும்பான்மை பலத்தால் இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றினாலும் நாட்டின் நலன் கருதி அதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு இதை எதிர்க்கிறேன் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மேலவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு பற்றி மாண்புமிகு உறுப்பினர் தங்களுடைய கருத்துக்களையெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு எ. ஆர். தாமோதரன் அவர்கள் ஃபாரின் லிக்கர் பற்றி குறிப்பிட்டார்கள். அதிலே இரண்டு வகை, ஒன்று இந்தியன் மேட் ஃபாரின் லிக்கர், மற்றொன்று ஃபாரின் லிக்கர் ஆகிய இரண்டையும் சேர்த்துச் சொன்னார்கள் என்று கருதுகிறேன். அதற்கு அதிகமான வரியைப் போட்டிருக்கிறீர்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட மதுவைக் குடிக்கிறவர்கள் எல்லாம் வசதிக்காரர்கள், அவர்கள் கொடுத்தால் என்ன என்ற பொதுவான எண்ணத்திலேதான் நாம் வரியைப் போட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் அவர்கள் சொன்ன கருத்தை நான் ஆராயக் கடமைப்பட்டிருக்கிறேன். வரி போட்டிருக்கிறார்களே, அதைக் குறைக்க வேண்டும் என்ற கருத்தில் அவர் சொல்லவில்லை. இப்படியெல்லாம் வரி போடுவதாலே கள்ளக் கடத்தலிலே அதிகமாக வருவதால் நமக்கு நியாயமாக வர வேண்டிய வருவாய் வராது. ஆகவே, ஆராய வேண்டுமென்ற கருத்திலே, நல்லெண்ணத்திலே சொல்லியிருக்கிறார்கள் என்று எடுத்துக் கொள்கிறேன். கள்ளக் கடத்தல் வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள். அருகிலுள்ள பாண்டிச்சேரியிலிருந்து மிக அதிகமாக வந்து கொண்டிருக்கின்றன என்று தெரிவித்தார்கள். பாண்டிச்சேரியிலிருந்து வருகிறதா என்பதை ஆராயச் சொல்லியிருக்கிறேன். அப்படி அதிகமாக



வருகிறபோது, உண்மையிலேயே கள்ளக்கடத்தல் அதிகமாக இருக்கிறது, அரசுக்கு வர வேண்டிய வருவாய் குறைகிறது அல்லது வருவாய் கூடவில்லை என்று ஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட்டால் இதை நான் மறு பரிசீலனை செய்வேன் என்பதை இந்த மன்றத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசுக்கு வர வேண்டிய வருவாய் குறைகிறதென்றால் அதை ஆராய வேண்டியது அரசினுடைய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு முனை வரி, பலமுனை வரி பற்றியெல்லாம் சொன்னார்கள். அதைப் பற்றி நான் பல முறை இங்கேயே சொல்லியிருக்கிறேன். ஆகவே அதிகமான பணம் வரவில்லை என்பதும், ஒரு முனை வரியில் எந்தெந்த பொருள்களைப் போடுகிறோம் என்பதும் உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். இதை முன்பே தெரிவித்திருக்கிறேன். பொருள்கள் உற்பத்தி பாயின்ட், பங்கீட்டு இடம் ஆகியவை தெளிவாக உள்ள பொருள்களின் மீது மட்டும் ஒருமுனை வரியை விதிக்க முடியும். அப்படி இல்லாத இடத்திலே பலமுனை வரியைப் போடுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் பலமுனை வரி இருப்பதால்தான் சிறிய வியாபாரிகள் 50 ஆயிரத்திற்குள் உள்ளவர்கள் வரி கொடுக்காமல் இருப்பதற்கும், கணக்கு காட்டாமல் இருப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. இப்போது ரூபாய் ஒரு இலட்சம் வரைக்கும் காம்பவுண்டிங் சிஸ்டம் பயன்படுத்தப்படுகிறது. இன்றைக்கு அரசுக்கு வருகிற வருவாயில் 90 சதவீதம் ஒருமுனை வரியிலும் 10 சதவீதம் பலமுனை வரியிலும் வருகிறது. எந்தெந்த இடங்களிலே செய்ய முடியுமோ அதையெல்லாம் அரசு ஆய்ந்து, முடிந்தால் அதைத் செய்யத் தயாராக இருக்கிறது இந்த அரசு.

மாண்புமிகு உறுப்பினர் மற்றொன்றையும் சொன்னார்கள். சிமெண்ட் பற்றி சொன்னார்கள். 50 ஆயிரம் ரூபாய் வரைக்கும் வியாபாரிகள் வரி செலுத்த வேண்டியதில்லை. ஒரு இலட்சம் என்று அந்த லிமிட்டை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதுவும் இந்த அரசின் கவனத்திலே இருக்கிறது. அதை செய்யக்கூடியது என்று இந்த அரசு கருதினால் அதை விரைவிலே செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிமெண்டுக்கு முதலிலேயே போட்டு வெளியே வந்துவிட்டது. சிமெண்ட் பொறுத்த வரைக்கும் அதிகமாக விலை ஏறியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இருந்தாலும் அதைப்பற்றி முன்பே போடப்பட்டது. சிமெண்ட் எப்படி வருகிறது என்பதைப் பற்றி அரசு யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதிகமான வரியைப் போட்டிருக்கிறார்கள் என்று மட்டும் சொல்லியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் ஆராய்ந்து கூடிய வரையில் தனித்தனியாகப் பரிசிலனை செய்யத் தயாராக இருக்கிறேன். நான் சட்டமன்றத்திலேயே சொல்லியிருக்கிறேன். நத்திங் ஈஸ் பர்மனென்ட். எந்த நேரத்திலும் மாறும். மாற்ற வேண்டியதுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரி விதிப்பில் மட்டும் என்று இல்லாமல் எல்லாவற்றிலும் அடிக்கடி அன்றைக்கு இருக்கின்ற நிலைமைக்கு ஏற்றவாறு, சமுதாய நிலைமைக்கு ஏற்றவாறு, எப்படி வியாபாரம் நடக்கிறது என்பதைப் பார்த்து அதைச் செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன். இதிலே பேசியவர்கள் எல்லாம் பொதுவாகவே பேசியிருக்கிறார்கள். ஆகவே நானும் பொதுவாகவே கருத்தைச் சொல்லியிருக்கிறேன் என்று சொல்லி இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று சொல்லி என்னுடைய கருத்தை முடித்துக் கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்)** : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1982) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

(பிற்பகல் 6.40)

பிரிவு 2.

THIRU A. R. DAMODARAN: Sir, I move the following recommendation:—

"In clause 2 for the words 'five per cent' substitute the words "four and a quarter per cent".

I recommend that the rate be reduced from 5 per cent to 4½ per cent. In view of the Hon. Minister's explanation that only 10 per cent of the revenues come from this. I am sure he is in a very co-operative mood to accept this amendment also.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்)** : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் திருத்தத்தை வலியுறுத்துகின்றார்களா?

**திரு. ஏ. ஆர். தாமோதரன்** : வலியுறுத்துகிறேன்.





**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்)** : அவை முன் உள்ள பிரச்சினை :

"In clause 2, for the words "five per cent" substitute the words "four and a quarter per cent".

பரிந்துரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 3.

THIRU A. R. DAMODARAN : Sir, I move the following recommendation—

"In clause 3, for the words "five per cent" substitute the words "four and a quarter per cent".

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்)** : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் திருத்தத்தை வலியுறுத்துகின்றார்களா ?

**திரு. ஏ. ஆர். தாமோதரன்** : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்கின்றார்களா ?

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்)** : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை.

**திரு. ஏ. ஆர். தாமோதரன்** : நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்)** : அவை முன் உள்ள பிரச்சினை :

"In clause 3, for the words "five per cent", substitute the words "four and a quarter per cent"

பரிந்துரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 4.

THIRU A. R. DAMODARAN: Sir, I move the following recommendation:—

"In clause 4 (*d*) for the figures "12" substitute the figure "6".

Delete clause 4 (f)

In clause (4) (*f*) for the figures "10" substitute the figure "5" that for cement, instead of 12 per cent it be reduced to 6 per cent, delete clause 4 (*f*) and in clause 4(*j*) for the figures '10' substitute the figure '5'".

[Thiru A. A. Damodaran] [1982 ஏப்ரல் 7

I think I should read it out...........They have altered the figures. This amendment does not read as I have given it. The amendment has not come as I have given it.

அது என்ன புரொடெக்ட் என்று சொல்லவில்லை. சாக்லெட், பிஸ்கேட், டாபி போன்ற பொருள்கள் என்று சொன்னால்தான் புரியும். Biscuits, toffees, chocolates, confectionary, butter, ghee இவை களுக்கெல்லாம் 10 பர்சென்ட் என்று இருப்பதை 5 பர்சென்ட் ஆக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். அதை சொன்னால் இப்போது எவ்வளவு வரவேற்கிறார்கள். அதுமாதிரிதான் சிமெண்ட்டும், பாரின் லிக்கர்க்கு 50 பர்சென்ட் என்று இருப்பதை 25 பர்சென்ட் என்று குறைக்க வேண்டும்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அவருடைய திருத்தங்களை வற்புறுத்துகின்றார்களா ?

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** நான் வலியுறுத்துகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** அவை முன் உள்ள பிரச்சினை :

"In clause 4 (*d*) for the figures "12" substitute the figure "6".

Delete clause 4 (*f*).

In clause 4 (*f*) for the figures "10" substitute the figure '5'

பரிந்துரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

மற்ற பிரிவுகளுக்குப் பரிந்துரை ஏதுமில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1982) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம்



1982 ஏப்ரல் 7] [மாற்றுத் தலைவர் திரு. சி இராமலிங்கம்]

ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1982) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(7) தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1982).

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1982) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1982) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

பரிந்துரை ஏதுமில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1982) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 322-336 ஆம் பக்கங்களில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1982) திருப்பி அனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளைக் காலை 9—30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-45)

8. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

*A. Statutory Rules and Orders.*

159. Ninth Annual Report of the Tamil Nadu Dairy Development Corporation Limited for the year 1981.(Tamil and English). [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

*B. Reports, Notifications and Other Papers.*

* 179. The Tamil Nadu Kudiyiruppu Laws (Amendment) Bill. 1982 (L.A. Bill No. 67 of 1981), as passed by the Assembly.

£ 180. The Tamil Nadu Panchayats (Validation of Local Cess Surcharge) Bill, 1982 (L.A. Bill No. 25 of 1982), as passed by the Assembly.

* Circulated to all M.L.Cs. on 3rd April 1982.

£ Circulated to all M.L.Cs. on 5th April 1982.



£ 181. The Indian Partnership (Tamil Nadu Amendment) Bill, 1982 (L.A. Bill No. 27 of 1982), as passed by the Assembly.

£ 182. The Tamil Nadu Contingency Fund (Second Amendment) Bill, 1982 (L.A. Bill No. 29 of 1982), as passed by the Assembly.

£ 183. The Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1982 (L.A. Bill No. 30 of 1982), as passed by the Assembly.

£ Circulated to all M.L.Cs. on 5th April 1982.

## இணைப்பு I.

(247 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின்படி விற்பனை செய்யப்படும் சொத்தின் சந்தை மதிப்பிற்கேற்றவாறு முத்திரை தீர்வை செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு விற்பனை செய்யப்படும் சொத்தின் வெளி சந்தை மதிப்பு பத்திரத்தில் சரியாக காட்டப்படவில்லையென பத்திரப்பதிவு அலுவலர் கருதினால் அந்த சொத்தின் உண்மையான சந்தை விலையை நிர்ணயிக்குமாறு முத்திரைத்தாள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட "கலெக்டருக்கு (கோட்டாட்சியாளர் அவர்களுக்கு) வேண்டுகோள் விடுவிக்க அச்சட்டத்தின் 47—ஏ1 பிரிவு பத்திரப் பதிவு அலுவலருக்கு அதிகாரம் அளிக்கிறது. கலெக்டர் அந்த நிலம் அல்லது வீட்டின் உண்மையான சந்தை மதிப்பை நிர்ணயித்து அதற்கேற்ப செலுத்த வேண்டிய அதிகப்படி முத்திரைத் தீர்வை ஏதேனும் இருந்தால் அதனை வசூலிப்பார். கலெக்டரின் உத்தரவினை எதிர்த்து சென்னையைத் தவிர மற்ற மாவட்டங்களில் துணை நீதி மன்றத்திற்கும், சென்னை நகரில் உரிமையியல் நீதி மன்றத்திலும் மேல் முறையீடு செய்து கொள்ளவும் அச்சட்டப் பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது. பத்திரப் பதிவு அலுவலரின் அதிகார எல்லைக்கு உட்பட்ட ஒவ்வொரு நிலம் அல்லது சொத்தின் அன்றாட விலை விவரத்தை அறிவது அவருக்குக் கடினம் என்பதாலும், பத்திரப் பதிவு அலுவலர் தன் விருப்பப்படி சொத்தின் சந்தை மதிப்பை நிர்ணயிப்பதைத் தவிர்க்கவும் முதன் முதலாக 1968ஆம் ஆண்டில் ஒவ்வொரு நிலம் அல்லது சொத்தின் விலை விவரங்கள் கொண்ட வழிகாட்டி முறைகள் கொண்ட பதிவேடுகள் வருவாய்த் துறை அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு பத்திரப் பதிவாளருக்கும் வழங்கப்பட்டன.

பொதுவாக வாழ்க்கைத் தரம் உயர்ந்ததினாலும், சொத்துக்களின் மதிப்பில் படிப்படியாக ஏற்றம் இருந்ததாலும் அந்த வழிகாட்டி முறைகள் 1971லும், பின்னர் 1980லும் திருத்தப்பட்டன. 1980ல் திருத்தப்பட்ட வழிகாட்டி முறைகள் 1—9—1981 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

1980ல் இந்த வழிகாட்டி முறைகளை திருத்துவதற்கு முன்னர் இப்பணிக்கென நியமிக்கப்பட்ட அலுவலர்கள் ஒவ்வொரு கிராமத்தையும் பார்வையிட்டு, வருவாய்த் துறை, உள்ளாட்சித் துறை ஆகியவற்றின் அலுவலர்களையும் நன்கு விசாரித்து, பின்னரே ஒவ்வொரு புலத்தின் சந்தை விலையையும் நிர்ணயித்தனர்.



புலங்களின் விற்பனை விவரங்கள் இல்லாத இனங்களில் 1971ஆம் ஆண்டு இருந்த விலைக்கு மேல் ஆண்டு ஒன்றுக்கு 5 சத விகிதம் உயர்வு இருக்கலாம் என்ற உத்தேசத்தில் தற்போதைய விலை நிர்ணயம் செய்யப்பட்டது. இந்த அடிப்படையில் பொதுவாக 1981ல் உள்ள விலை மதிப்பு 1971ல் இருந்ததைவிட சுமார் 1½ பங்கு இருக்கலாம் என கருதப்பட்டது எனினும் ஒரு நிலத்தின் சர்வே எண்ணில் ஏதேனும் ஒரு பாகம் விற்கப்பட்டிருந்தால் அந்த விலை விவரங்கள் அந்த நிலத்தின் மற்ற பாகங்களுக்கும் ஏற்கப்பட்டு அதே விலை மதிப்பு அந்த சர்வே என் முழுவதற்கும் நிர்ணயிக்கப்பட்டது. ஒரு விவசாய நிலத்தின் ஒரு பகுதி வீட்டு மனையாக மாற்றப்பட்டு விற்கப்பட்டிருந்தால், அந்த சர்வே எண்ணின் மற்ற பகுதிகளும் வீட்டு மனையாக கருதப்பட்டு இதற்கேற்ப விலை நிர்ணயிக்கப்படுகிறது. பொதுவாக தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை மதிப்பு சந்தை விலைக்கு ஒத்துள்ளது.

இந்த வழிகாட்டி முறைகளில் குறித்த சொத்து மதிப்பை ஏற்க பொது மக்கள் கட்டாயப்படுத்தப்படுவதில்லை. பொதுமக்கள் இந்த வழிகாட்டிகளில் குறித்த விலை மதிப்பை ஒப்புக்கொள்ளாத போதிலும், பத்திரங்கள் பதிவுக்கு ஏற்கப்பட்டு, அந்தப் பத்திரத்தில் குறித்த மதிப்பின் அடிப்படையில் முத்திரை தீர்வை ஏற்கப்படுகிறது. அந்தப் பத்திரத்தில் குறித்த விலைக்கும் வழிகாட்டி முறைப் பதிவேட்டில் குறித்த விலை மதிப்பிற்கும் ஏற்ப விதிக்கப்படக் கூடிய அதிகப்படி முத்திரைத் தீர்வை ரூபாய் 50க்குள் இருந்தால் அதனை வசூலிக்கத் தேவையில்லை என ஆணையிடப்பட்டுள்ளது. இவ்விரண்டு விலை மதிப்பு வித்தியாசத்திற்கும் ஏற்ப செலுத்த வேண்டிய அதிகப்படி முத்திரைத் தீர்வை ரூபாய் 50-க்கு அதிகமானால் அந்த ஆவணம் சந்தை விலை நிர்ணயிக்க கலெக்டருக்கு அனுப்பப்படும். கலெக்டர் அந்தப் புலத்தை பார்வையிட்டு, தற்காலிகமாக விலை நிர்ணயம் செய்து அதனை அந்த பத்திரம் பதிவு செய்பவருக்கு தெரிவித்து அவரது மறுப்பினை நேரிலும் எழுத்து மூலமாகவும் கேட்டு அதன் பின்னரே தனது இறுதியான முடிவை அறிவிப்பார். அரசுக்கு சட்டப்பூர்வமாக செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை சரியாக செலுத்தப் படுகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதே வழிகாட்டி முறை பதிவேடுகளின் பலனாகும்.

தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள வழிகாட்டி முறை பதிவேட்டில் குறித்த விலை மதிப்பு மிகுந்த அல்லல் கொடுப்பதாக உள்ளது என்ற குற்றச்சாட்டு சில இனங்களில் மட்டுமே வந்துள்ளது. தக்க விசாரணைக்கு பின் இந்த இடர் பாடுகள் உண்மையானவையே எனக் கண்ட இனங்களில் தக்க மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. பெரியார் மாவட்டம் ஈரோடு நகரத்தில் இந்த வழி காட்டி முறையில் குறித்த மதிப்பீடு மிக அதிகமாகவும் உண்மை நிலைக்கு

ஒவ்வாததாகவும் உள்ளது என்ற குற்றச்சாட்டு அந்நகரத்திலுள்ள பொது மக்களிடமிருந்து அரசுக்கு வந்துள்ளது. இது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது. பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு சில ஆவணங்கள் உண்மையான சந்தை விலை மதிப்பு நிர்ணயம் செய்ய கலெக்டருக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவரது அறிக்கை வந்த பின்னர் இது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும். பெரும்பாலான மாவட்டங்களிலிருந்து இது குறித்து மறுப்பு ஏதும் வரவில்லை பொதுவான விசாரணையில் இந்த மதிப்பேடுகள் உண்மை நிலையைக் காட்டுவனவாகவே உள்ளன எனவும் அநேகமாக எல்லா இடங்களிலும் இவை உண்மை நிலவரத்தை விட சற்றுக் குறைவாகவே உள்ளன எனத் தெரிய வருகிறது. இதற்கு மேலும் குறைத்தால் அரசுக்குச் சேர வேண்டிய முத்திரைத் தீர்வையில் பெரிய இழப்பு ஏற்பட நேரிடும்.

வழிகாட்டி முறை பதிவேடுகளில் குறித்த விலை மதிப்புகள் பற்றி ஈரோடு நகரத்தில் இரண்டு ரிட் மனுக்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த ரிட் மனுக்கள் உயர்நீதி மன்றத்தின் கவனத்தில் உள்ளன. இந்த ரிட் மனுவின்பாற்பட்ட வேறொரு மனுவில் "பத்திரம் பதிவு செய்த பொது மக்கள் பத்திரத்தை உடனடியாகப் பெற விரும்பினால், வழிகாட்டி முறைப் பதிவேட்டில் குறித்த விலை மதிப்பிற்கேற்ற முத்திரைத் தீர்வையினை தனது மறுப்புடன் செலுத்தி கலெக்டருக்கு மனு செய்துகொள்ள அனுமதிக்கலாம் எனவும், அந்த இனங்களில் கலெக்டர் நிர்ணயிக்கும் விலை மதிப்பு வழிகாட்டி முறை பதிவேட்டில் குறித்த விலை மதிப்பினைவிடக் குறைவாக இருக்குமானால் பத்திரம் பதிவு செய்தவர் ஏற்கெனவே செலுத்திய அதிகப்படி முத்திரைத் தீர்வையை கலெக்டர் ஆணை தெரிவித்த 60 நாட்களுக்குள் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்" என்று உயர் நீதிமன்றம் அளித்த யோசனையை அரசு ஏற்று ஆணைகள் பிறப்பித்துள்ளது.

## இணைப்பு II

(248 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

திரு. எம். சங்கரலிங்கம், எம். எல். சி. அவர்களின் மேற்கூறிய கவன ஈர்ப்புத் தீர்மானத்தை ஒட்டி, நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறை தலைமைப் பொறியாளருடனும், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் அவர்களுடனும், அரசு கலந்து ஆலோசித்தது. அதன்படி தற்போதைய நிலவரங்கள் பின்வருமாறு :



(1) தாழக்குடி–பூதப்பாண்டி ரோடு (கி. மீ. 5/0—8/2) : இது அரசு
இதர மாவட்ட சாலையாகும். இதன் நீளம் 3.2 கி. மீ. ஆகும். இது தார்ச்
சாலையாகும். இதில் பேருந்து போக்குவரத்து எதுவும் இல்லை. இச்சாலை
இப்போது நல்ல நிலைமையில் இல்லை. சாலையின் பக்கத்தில் தண்ணீர்
குழாய்கள் செல்வதற்காக குழிகள் தோண்டப்பட்டுள்ளன. சாலையிலிருந்து
மண் சரிவால் நிலைமை மோசமாக உள்ளது. பாதையைச் செப்பனிடுமாறு
நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறை தலைமைப் பொறியாளருக்கு அறி
வுறுத்தப்பட்டுள்ளது. இப்பணி முடிந்தவுடன் பேருந்துப் பணி தொடரப்
படும்.

(2) வீரநாராயணமங்கலம்-தாழக்குடி ரோடு) (கி. மீ. 3/6—5/0):
இதன் நீளம் 1.4 கி. மீ. ஆகும். இது ஒரு அரசு இதர மாவட்ட தார்ச் சாலை
யாகும். இது பேருந்து செல்லும் சாலையாகும். இதில் மழை காரணமாக
சாலையின் தளம் பழுதடைந்திருந்தது. சுமார் ஒரு மாதம் இதில் பேருந்து
போக்குவரத்து இல்லாமல் இருந்தது. தற்போது சாலை பழுது பார்க்கப்
பட்டு நல்ல நிலையில் உள்ளது. 6—2—1982லிருந்து பேருந்து போக்கு
வரத்து நடைபெற்று வருகிறது.

(3) தோவாளை–தாழக்குடி சாலை (கி. மீ. 0/0—5/6) : இச்சாலை
யின் நீளம் 5.6 கி. மீ. ஆகும். இதில் கி. மீ. 0/0—2/4 வரை தோவாளை
ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஒன்றியச் சாலையாகும். இது தார்ச்
சாலை. இது பேருந்து மார்க்கம் இல்லை. இதில் குழிகள் போன்றவை
நிரப்பப்படும் பணி தோவாளை ஊராட்சி ஒன்றியத்தால் செய்யப்பட்டு
வருகிறது. இப்பணி இன்னும் இரண்டு வாரங்களில் முடிவடையும். கி. மீ.
2/4—5/6 வரை அரசு இதர மாவட்டச் சாலையாகும். இத் தார்ச் சாலை
நல்ல நிலையில் உள்ளது. பேருந்து போக்குவரத்து தொடர்ந்து நடைபெற்று
வருகிறது.

(4) இறச்சகுளம்–தாழக்குடி ரோடு (கி. மீ. 0/0—1/7) : இதன் நீளம்
1.7 கி. மீ. ஆகும். இது ஓர் அரசு இதர மாவட்ட தார்ச் சாலையாகும்
மழையின் காரணமாக சாலை பழுதடைந்து உள்ளது. இந்தச் சாலையில்
பேருந்து போக்குவரத்து சுமார் ஒரு மாதம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.
இந்தச் சாலையில் குழிகள் எல்லாம் மூடப்பட்டு தற்போது பேருந்து போக்கு
வரத்து 6—2—1982 முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

2. மேற்கூறிய இனம் ஒன்றில் கூறப்பட்ட சாலைகள் தவிர ஏனைய சாலை
கள் அனைத்தும் நல்ல நிலைமையில் உள்ளன. 6—2—1982-லிருந்து
பேருந்து போக்குவரத்து நடைபெற்று வருகிறது. கூடிய விரைவில் இனம்

(1)-ல் கூறப்பட்ட சாலை பழுது பார்க்கும் பணி முடிந்து பேருந்து பணி தொடங்கப்படும். தற்பொழுது பேருந்து பணி கிடைக்காத தூரம் ஒரு கிலோ மீட்டர் மட்டுமே. இருப்பினும் நடக்கும் தூரத்தில்தான் வெவ்வேறு பகுதிகளுக்கு மற்ற பேருந்துப் பணிகள் உள்ளன.

## இணைப்பு III

(56 ஆம் பக்கத்தில் இனம் 6 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

## L.A. BILL No. 24 OF 1982.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Industrial Disputes Act,* 1947, *in its application to the State of Tamil Nadu.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-third Year of the Republic of India as follows:—

1. *Short title, extent and commencement.*—(1) This Act may be called the Industrial Disputes (Tamil Nadu Amendment) Act, 1982.

(2) It extends to the whole of the State of Tamil Nadu.

(3) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Insertion of new section 10-B in Central Act XIV* of 1947.—After section 10-A of the Industrial Disputes Act, 1947 (Central Act [IV of 1947) (hereinafter referred to as the principal Act), the following section shall be inserted, namely :—

" 10-B. *Power to issue order regarding terms and conditions of service pending settlement of disputes.*—(1) where an industrial dispute has been referred by the State Government to a Labour Court or a Tribunal under sub-section (1) of section 10 and if, in the opinion of the State Government it is necessary or expedient so to do for scheme the public safety or convience or the maintenance of public order or supplies and services essential to the life of the community or for maintaining employment or industrial



peace in the establishment concerning which such reference has been made, they may, by general or special order, make provision,—

(*a*) for requiring employers or workmen or both to observe such terms and conditions of employment as may be specified in the order or as may be determined in accordance with the order, including payment of money by the employer to any person who is or has been a workman;

(*b*) for requiring any public utility service not to close or remain closed and to work or continue to work on such terms and conditions as may be specified in the order; and

இதைச் செய்கிறோம். ஆனால் சேட்டலைட் என்ற அடிப்படையில் பார்த்
தால், சேலத்தில் ஆயிரம், இரண்டாயிரம் அடிகளுக்குக் கீழே கூட ஆறுபோல
நீர் ஓட்டம் ஓடுவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஸ்வீடன், டென்மார்க்
போன்றவை இதற்குப் பெயர் பெற்றவை. எல்லாவற்றையும் விட ஸ்வீடன்
முன்னோடியாக இருக்கிறது. இப்போது குழாய்க் கிணறுகள் கழகத்திற்குத்
தலைவரைப் போட்டிருக்கிறோம். அவர்கள் ஸ்வீடனுக்குச் சென்று பார்த்து
வந்திருக்கிறார்கள். அந்த அளவில் கோவையிலும் ஆயிரம் அடி ஆழத்திற்குக்
கீழேயுள்ள நீரை மேலே கொண்டு வரலாம். ஆனால் மொத்தமாக அந்தத்
தண்ணீரைச் சேமித்து எல்லோருக்கும் கொடுப்பது என்பது குழாய்க் கிணறு
கள் கழகத்தால் செய்ய முடியாத ஒன்று.

திரு. பா. ரா. தாமஸ் : முகவை மாவட்டத்தில் திருப்பத்தூரில் ஆழ் குழாய்
போட்டுப் பார்த்ததில் அதிலிருந்து தண்ணீர் கொப்பளித்து வருவதாகச்
சொன்னார்கள். பொதுவாக இம்மாதிரி வருகின்ற தண்ணீரைப் பயன்படுத்த
அரசிடம் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அப்படி இருந்தால், ஓடிப்
போய்ப் பார்த்து, கொப்பளிக்கும் தண்ணீரை 'ஆர்டிசியன் வெல்லில் இருந்து
காம்பிரிஹென்சிவ் ஸ்கீம் முறையில்' அதைப் பயன்படுத்த ஏற்பாடு செய்யலாம்.
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றிக் குறிப்பிட்டுத் தெரிவித்தால்,
அரசுக்குப் பெரிய உதவி செய்வதாக இருக்கும்.

ப்க். கிணறுகள் கழகத்தை

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமி ப்திருக்கிறது? இதற்கான அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், இப்படி இருப்பது ன் விலை அதிகம் என்று பெரிய வரப்பிரசாதம். ஆனால் இந்தக் கழகத்தின் பணியை ன் வாங்கியிருக்கிறது? சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்காவது இருந்தால் அதை நாம் பயன்படுத்தலாம். கிழக்கு இ ந நிறைவேற்ற கோஸ்டல் ஏரியா என்ற அடிப்படையில் அங்கு ரோட்டரி செ யில் வந்து தேவை. அந்த வகையில் மேலாகக் கிடைக்கிற தண்ணீரை நாம் விவச அரசு திற்குப் பயன்படுத்துவது பற்றி யோசிக்கலாம். அத்

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. தி

(குறிப்பு.—ஓர் உரையின் துவக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

(முற்பகல் 9-50)

**2. உரிமைப் பிரச்சினைகள்.**

**(1) அண்ணா நாளிதழ் மீது திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் 3—3—1982 அன்று எழுப்பிய உரிமைப் பிரச்சினை குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அண்ணா நாளிதழ் மீது திரு. ஆற்காடு நா. வீராசாமி, எம். எல். சி. அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினையை 3—3—1982 அன்று எழுப்பினார்கள்.

இதுகுறித்து உரிய பத்திரிகைக்கு எழுதிக்கேட்டு பிறகு எனது தீர்ப்பினை அளிப்பதாகக் கூறியிருந்தேன்.

இப்பிரச்சினை குறித்து அண்ணா பத்திரிகைக்கு எழுதிக் கேட்டதில் பத்திரிகை ஆசிரியரிடமிருந்து கீழ்க்கண்ட பதில் கிடைக்கப் பெற்றுள்ளது.

"மார்ச் முதல் தேதியன்று மேலவையில் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசிய பேச்சினைத் தொடர்ந்து எழுப்பப்பட்டுள்ள உரிமைப் பிரச்சினை பற்றி குறிப்பிட்டு இருக்கிறீர்கள்.

திரு. வீராசாமி அவர்கள் எழுப்பிய ஐயத்திற்கு அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் அளித்த விளக்கத்தோடு அந்தப் பிரச்சினை முடிந்து விட்டதாகக் கருதி அந்த அளவில் பிரசுரம் செய்துவிட்டோம்.

ஆனால், அமைச்சர் திரு. பொன்னையன் அளித்த விளக்கத்திற்குப் பிறகும் அந்தப் பிரச்சினை பற்றி திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசிய விவரம் அந்த நேரத்தில் கிடைக்கவில்லை.





மாநில தெ தற்கு ஒரு காரணம் எங்கள் தொலைபேசி எதிர்பாராதவிதமாக பயன்படு மக் ந்துவிட்டது. இந்தச் சூழ்நிலையால் அந்தச் செய்தியின் தொடர்புகள் கழக நா ப்பெறாத நிலை ஏற்பட்டது.

முடிவு செய்

தொலை தூரத்தில் இருந்து தொலைபேசி மூலம் செய்திகள் பெறப்பட்டு டாநகிறது. இந்த நிலைமையால் அந்தத் தவறு ஏற்பட்டுவிட்டது.

வா

இனி இப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்படாத வண்ணம் கவனத்துடன் கவனித்து செயல்படுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேர்ந்த தவறுக்கு வருந்துகிறோம்."

'அண்ணா' நாளிதழ் ஆசிரியர் இனி இப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்படாத வண்ணம் கவனத்துடன் கவனித்து செயல்படுவோம் எனவும் நேர்ந்த தவறுக்கு வருந்துகிறோம் எனவும் தெரிவித்திருப்பதால் மேற்கொண்டு இப்பிரச்சினை மீது நடவடிக்கை ஏதும் தேவையில்லை என தீர்ப்பளிக்கிறேன்.

**(2) திரு. காடுவெட்டி கண்ணப்பன் அவர்கள் மேலவையில் 5—3—1982 அன்று மாலை முரசு பத்திரிகையின் மீது கொடுத்த உரிமைப் பிரச்சினை குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரு. காடுவெட்டி கண்ணப்பன், எம். எல். சி. அவர்கள் மேலவையில் 5—3—1982 அன்று மாலை முரசு பத்திரிகையின் மீது ஓர் உரிமைப் பிரச்சினையினை எழுப்பினார்கள். அதற்கு உரிய பத்திரிகைக்கு எழுதி விளக்கம் கிடைத்த பிறகு தீர்ப்பு பின்னர் வழங்கப்படுமென மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் கூறினார்கள்.

'மாலை முரசு' பத்திரிகை ஆசிரியருக்கு எழுதிக் கேட்டதில் அவர் கீழ்க்கண்ட விளக்கம் அளித்துள்ளார்கள் :

"ஒரு செய்திக்குப் பொருத்தமான தலையங்கள் கொடுப்பது பத்திரிகைகளின் பொது மரபாகும். தலையங்கம் சுருக்கமாகவும், திட்டவட்டமாகவும் இருக்கவேண்டுமென்பதால், செய்தியில் காணப்படும் குறிப்பிட்ட சொற்களை தலையங்கத்திலும் குறிப்பிட வேண்டிய தேவையில்லை.

வழக்கமாக பத்திரிகைக் குறிப்பு எடுக்கும்போது, சம்பந்தப்பட்ட பத்திரிகைப் பதிப்பு பணியாளர் எழுதிக் கொடுக்கும் செய்தியின் பேரில் தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உரைக்கும் தலையங்கம் கொடுக்கப்பட்டது. அமைச்சரின் உரை பற்றிய முழுச் செய்தியும் தலையங்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளதேயன்றி, திரு. காடுவெட்டி கண்ணப்பன் குறிப்பிட்டது

போல், தனிச் சொற்றொடர் எதுவும் குறிப்பிடப்படவில்லை. மாண்புமிகு அமைச்சரின் உரையைப் பொறுத்த வரையில், வெளியிடப்பட்ட செய்தியில் எதையும் திரித்தோ தவறாகவோ கூறவில்லை.

சட்டமன்ற மேலவை நடவடிக்கையை தவறாக வெளியிடும் தீய நோக்கம் எதுவும் எமக்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்".

ஆசிரியர் அளித்துள்ள விளக்கம் எனக்கு மனநிறைவைத் தரவில்லை. ஆயினும் அவையின் மதிப்பையும், கண்ணியத்தையும் மனதில் கொண்டு இதில் மேல்நடவடிக்கை தேவையில்லை என்று கருதி, மாலை முரசு ஆசிரியரும் இனிமேல் இவ்வாறு அவை நடவடிக்கைகளுக்கு வேறு பொருள்படும்படி தலைப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தி, இதை முடிக்கிறேன்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டத்தில் புயல் காற்றாலும் பெருமழையாலும் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் குறித்து.**

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த 26—3—1982 ஆம் தேதி அடித்த பெரும் சூறாவளிக் காற்றாலும், பெரும் மழையாலும் சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டத்திலுள்ள மோகனூர், பாலப்பட்டி, இடையாறு, வேலூர், பொத்தனூர், பாண்டமங்கலம் ஆகிய பகுதிகளில் 26—3—1982 ஆம் நாள் அடித்த அந்தப் புயலாலும் பெரும் மழையாலும் பல இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமானம் உள்ள வாழை மரங்கள் சேதமடைந்து விவசாயிகள் சொல்லொணாத் துயருக்கு ஆளாகியிருக்கிறார்கள். மேலும் விவசாயம் செய்ய முடியாத நிலையிலே இருக்கிறார்கள். அவர்கள் மீண்டும் பயிர் செய்ய அரசு அவர்களுக்குப் பண உதவியும், நிவாரண உதவியும் அளிக்க வேண்டும். அப்படி நிவாரணம் அளித்து அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் சேதத்தினை மதிப்பீடு செய்து நஷ்டஈடு அளிக்க வேண்டும் என்ற கருத்துபற்றி விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிய இசைவு கோரும்போது, 26—3—1982 ஆம் தேதியன்று அடித்த புயலாலும் பெரும் மழையாலும் அந்தப் பகுதியிலே சுமார் 50 இலட்சம் ரூபாய் மதிப்பு உள்ள விவசாயப் பொருள்களுக்கு, குறிப்பாக வாழை மரங்களுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்குள்ள விவசாயிகள் குறிப்பாக வாழை மரங்களைத்தான் பயிர் செய்கிறார்கள். அந்தப் பெரும் காற்றாலும், மழையாலும் பல்லாயிரக்கணக்கான ரூபாய்



பெறுமானம் உள்ள வாழை மரங்கள் சாய்ந்து பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப் பயிர் செய்வதற்கு அந்த விவசாயிகள் கூட்டுறவு அல்லது வணிக வங்கிகளிலிருந்து பெரும்பாலும் கடன்களைப் பெற்றுத்தான் பயிர் செய்கிறார்கள். அப்படிச் செய்யப்பட்ட அந்தப் பயிர்தான் இந்த அளவுக்குச் சேதமடைந்திருக்கிறது. ஆகவே, ஏற்பட்டுவிட்ட இந்த நஷ்டத்திற்கு அரசு உதவி அளிக்க வேண்டும் என்பதோடு, கடன் வசூலிப்பதைப் பொறுத்தவரையில், அவர்களுக்குத் தவணை முறை மீண்டும் அதிகப்படுத்தித் தரவேண்டும் என்பது பற்றிய கருத்துக்களையெல்லாம் விவாதிப்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இப்பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டத்தில் உள்ள மோகனூர், பாலப்பட்டி, இடையாறு, வேலூர், பொத்தனூர், பாண்டமங்கலம் ஆகிய பகுதிகளில் 26—3—1982-ல் வீசிய சூறாவளிக் காற்றினால் சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் வாழைக்குச் சேதம் ஏற்பட்டு, அதன் மதிப்பு ரூபாய் 50 இலட்சம் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. நாமக்கல் கோட்டாட்சியர் சம்பந்தப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்து சேதத்தின் தன்மையையும் மதிப்பீட்டையும், நிவாரணம் அளிப்பதைப் பற்றியும் அறிக்கை தர மாவட்ட ஆட்சியாளர் கேட்டுள்ளார். சேதத்தைப் பற்றிய மாவட்ட ஆட்சியாளரின் முழு அறிக்கை பெற்ற பின்னர் அளிக்கப்பட வேண்டிய நிவாரணம்பற்றி அரசு ஆய்வு செய்யும். ஏற்கெனவே திருச்சி மாவட்டத்தின் சில பகுதிகளில் இதுபோன்ற சேதம் ஏற்பட்டுள்ளது. அவர்களுக்குக் கூட்டுறவுக் கடனைத் தள்ளி வைக்கவும் மேலும் 1 ஏக்கருக்கு 500 ரூபாய் என்ற அளவிலே நிவாரணம் அளிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. அந்த வகையிலேயும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போலவும், முழுமையான விவரமும் பெற்ற பிறகு, இதுபோன்ற உதவியளிக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதால், இதுபற்றி இந்த அவையின் நடவடிக்கையை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் இப்பொருள் குறித்து இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று கருதி, என் அனுமதியை மறுக்கிறேன்.

## 4. அறிவிப்புகள்.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆளுநர் அவர்கள் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள் :—

(1) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

(2) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்ட முன்வடிவு.

### (2) பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

1. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பைச் செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1982).

2. 1982 ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1982).

3. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1982).

4. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1982).

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்-கால்நடைப் பாதுகாப்பு சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1982) ஆய்வு செய்வதற்காக 24 உறுப்பினர்கள் அடங்கிய 16 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், 8 சட்டமன்ற மேலவை



உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைப்பதற்கு 7—4—1982 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நகலை அனுப்பி, மேற்படி கூட்டாய்வுக் குழுவில் பணியாற்றுமாறு கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்ற தகவலை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :—

1. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்
2. திரு. எஸ். பழனிச்சாமி
3. திரு. எம். பிச்சை
4. திரு. ஏ. பாலுச்சாமி
5. திரு. சி. குப்புசாமி
6. திரு. டி. மாரிமுத்து
7. திரு. பி. கலியமூர்த்தி
8. திரு. ஆர். எஸ். முனிரத்தினம்
9. திரு. சு. பாலன்
10. திரு. ஜே. எஸ். ராசு
11. திரு. எல். பலராமன்
12. திருமதி டி. யசோதா
13. திரு. எம். அம்பிகாபதி
14. திரு. என். சங்கரய்யா
15. திரு. ஜி. மூர்த்தி
16. டாக்டர் சவுரிராஜன்.

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பத்திரிக்கைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1982) ஆய்வு செய்வதற்காக 24 உறுப்பினர்கள் அடங்கிய (16 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், 8 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைப்பதற்கு 7—4—1982 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நகலை அனுப்பி,

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1982 ஏப்ரல் 8

மேற்படி கூட்டாய்வுக் குழுவில் பணியாற்றுமாறு கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்ற தகவலை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :—

1. திரு. கா. கோபாலகிருஷ்ணன்
2. திரு. ஜே. சி. டி. பிரபாகரன்
3. திரு. க. பாலசுப்ரமணியன்
4. திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்
5. திரு. மா. சின்னராஜ்
6. திரு. கோ. விசுவநாதன்
7. டாக்டர் கோ. சமரசம்
8. திரு. ஆர். ரங்கசாமி
9. திரு. கே. எம். சுப்பிரமணியம்
10. திரு. எம். ஆறுமுகம்
11. திரு. கே. ரமணி
12. திரு. கே. எம். தங்கமணி
13. திரு. எல். பலராமன்
14. திரு. துரைமுருகன்
15. திரு. என். வி. என். சோமு
16. திரு. பி. நெடுமாறன்.

(முற்பகல் 10-00)

5. கவன ஈர்ப்பு.

**(1) அறுவடைக்குக் காத்திருக்கும் கரும்பிற்குக் கட்டுபடியாகக்கூடிய விலை இல்லையாதலால், வெல்லம் விலை குறைந்தவிட்டபடியால், விவசாயிகள் படும் இன்னல் குறித்து.**

**திரு. வி. வி. வி. ஆனந்தம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன் :

"அறுவடைக்குக் காத்திருக்கும் கரும்பிற்குக் கட்டுபடியாகக்கூடிய விலை இல்லையாதலால், வெல்லம் விலை குறைந்துவிட்டபடியால், விவசாயிகள் படும் இன்னல் குறித்து."



1982 ஏப்ரல் 8]

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வி. வி. வி. ஆனந்தம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கரும்பிற்குக் குறைவாக விலை நிர்ணயம் செய்திருந்தாலும்கூட, மாநில அரசு விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலையைத் தர வேண்டுமென்று அதிகப்படுத்தி விலையை நிர்ணயித்திருக்கிறது என்றும், அதாவது 8.5 சதவீதம் சர்க்கரை சத்துள்ள கரும்பிற்குக் குறைந்தபட்ச விலையாக டன்னுக்கு ரூ. 165 நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்றும், அதற்கு மேலும் டன் ஒன்றுக்கு ரூ. 10 கரும்புக்குக் கிடைக்கும் என்றும், ஆகவே இது விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலை என்றும் விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே நான் அதற்குள் போக விரும்பவில்லை.

ஆனால், கரும்பாலைகளுக்குக் கரும்பை 'சப்ளை' செய்யாமல், அதாவது கரும்பாலைகளோடு பதிவு செய்து கொள்ளாத விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் கரும்பைக் கொண்டு வெல்லம் உற்பத்தி செய்கிறார்கள். அந்த வெல்லத்திற்குக் கட்டுபடியாகக்கூடிய விலை கிடைக்கவில்லை. வெல்லம் உற்பத்தி செய்வதற்கு, கரும்பு வெட்டுக்கூலி, கரும்பு பிழியும்கூலி, வெல்லம் காய்ச்சும் கூலி இப்படி எல்லாவற்றையும் கணக்குப் போட்டால், ஒரு குவிண்டாலுக்கு ரூ. 150 செலவாகிறது. ஆனால் இன்றைக்கு வெல்லமே குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 130 அல்லது ரூ. 150 என்ற விலையில்தான் விற்கப் படுகிறது. இப்படி கட்டுபடியாகாத விலை இருப்பதன் காரணமாக, கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் எப்போதும் தொடர்ந்து பருவமழை பொழிவதில்லை. முறையாகப் பருவ மழை பெய்தால்தான், நல்ல விளைச்சல் காண முடியும். அப்படியே நல்ல விளைச்சல் கண்டாலும் இப்படி விலை மிகவும் குறைவாகப் போய்விட்டால், விவசாயிகள் தாங்கள் வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்தவோ, குடும்பத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவோ முடியாத நிலை ஏற்படுகிறது . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் விளக்கம் கேட்க வேண்டுமே தவிர, வேறெதுவும் அல்ல என்பதுதான் விதி. இப்படி நீட்டிக்கொண்டே போனால் எப்படி ?

---

@ 430—431 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. வி. வி. வி. ஆனந்தம் : எனவே விவசாயிகளுடைய அவல நிலையைப் போக்கும் வகையில், நமது மாநில அரசு மத்திய அரசோடு தொடர்புகொண்டு பெருமளவுக்கு வெளிநாடுகளுக்கு வெல்லத்தை ஏற்றுமதி செய்வதற்கு முன்வருமா ? அதோடு மாநில அரசே வெல்லத்தைக் கொள்முதல் செய்யவும் அதற்குக் குறைந்தபட்ச விலையை நிர்ணயம் செய்யவும் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : அரசே கொள்முதல் செய்வதற்கு வழியில்லை. மத்திய அரசைக் கேட்டுக்கொண்டு வெல்லத்தைப் பெருமளவில் ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்று அரசு பரிசீலனை செய்யும்.

(2) குமரி மாவட்டம் தோவாளை வட்டம் சந்தைவிளை தோப்பூரில் கட்டப்பட்ட மேல் நிலைத் தண்ணீர்த் தொட்டி இன்னும் பயன்படுத்தப்படாமல் இருப்பது குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

"குமரி மாவட்டம் தோவாளை தாலுக்கா, சந்தைவிளை தோப்பூரில் கட்டப்பட்ட மேல் நிலைத் தண்ணீர்த் தொட்டி, இன்னும் பயன்படுத்தப்படாமல் இருப்பது குறித்து."

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தோவாளை ஒன்றியத்திலுள்ள கனகமூலம் குடியிருப்பு, பார்வதிபுதூர் மற்றும் சந்தைவிளை (தோப்பூர்) கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ. 3,60,657 செலவில் கட்டி முடிக்கப்பட்டது. தற்போது மேற்படி வாரியத்தால் செயல்முறை ஓட்டம் பார்க்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஒரு வாரத்திற்குள் பொது மக்களின் உபயோகத்திற்காக தாழைக்குடி பேரூராட்சிக்குத் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஒப்படைக்கப் படுமென்று நாகர்கோயிலிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இன்னும் ஒரு வாரத்தில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. ம. சங்கரலிங்கம் : இந்தத் திட்டம் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ரூ. 3,60,657 செலவில் கட்டப்பட்டு வேலை முடிக்கப்பட்டு மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. இப்போதுதான் வெள்ளோட்டம் நடை பெறுகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கட்டி முடிப்பதற்கே இரண்டாண்டுகள்தான் ஆயின. ஆனால் வெள்ளோட்டம் விடுவதற்கு எதற்காக மூன்று ஆண்டுகள் ஆயிற்று என்று எனக்குப் புரியவில்லை. குடிநீர் வடிகால் வாரியம் ஏன் உரிய காலத்தில் ஊராட்சி ஒன்றியத்திடம் இதை ஒப்படைக்க வில்லை ? இதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்திற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதிலே சில 'டெக்னிகல் டிபெக்ட்ஸ்' இருந்த காரணத்தால் அவைகளெல்லாம் மீண்டும் பழுதுபார்க்கப்பட்டு நல்ல நிலைக்குக் கொண்டு வரப்பட்டிருக் கின்றன. ஆகவே சீக்கிரமாக இது நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) ஆதிதிராவிட நலத்துறை பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கட்கு ஈராண்டு பயிற்சிக்காக 1—6—1981 முதல் அரசால் அளிக்கப்பட்ட கூடுதல் ஊதிய உயர்வு, 1—10—1981 முதல் இயல்பாக அளிக்கப்பட வேண்டிய ஆண்டு ஊதிய உயர்வு அளிக்கப்படாத நிலையில் ஆசிரியர்கள் படும் அல்லல் குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன் :

"மாநிலமெங்குமுள்ள ஆதி திராவிட நலத்துறை பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கட்கு ஈராண்டு பயிற்சிக்காக 1—6—1981 முதல் அரசால் அளிக்கப்பட்ட கூடுதல் ஊதிய உயர்வு, 1—10—1981 முதல் இயல்பாக அளிக்கப்பட வேண்டிய ஆண்டு ஊதிய உயர்வு அளிக்கப்படாத நிலையில் ஆசிரியர்கள் படும் அல்லல் குறித்து."

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

---

@ 431—432 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** கல்வித் துறை 11—8—1981-ல் ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறது. 1—6—1981 முதல் கூடுதல் ஊதிய உயர்வு அளிக்க வேண்டுமென்று அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அந்த அரசாணையையொட்டி ஆதி திராவிடர் நலத்துறை 23—1—1982 வரை எந்த மேல் நடவடிக்கையும் எடுக்காமல் விட்டுவிட்டு, அதற்குப் பிறகு ஐந்து மாதம் கழித்து, அதற்கு நிதியுதவி தேவை என்று சொல்லி செயலகத்திற்கு எழுதிக் கேட்டிருக்கிறார்கள்.

அதற்குப் பிறகு ஒரு மாதம் கழித்து, செயலகத்திலிருந்து அதற்கான ஆணை 6—2—1982-ல் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பிறப்பிக்கப்பட்ட பிறகும்கூட, இங்கே வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் "இனி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, 1—6—1981-ல் தர வேண்டியதை 11—8—1981-ல் ஆணை பிறப்பித்திருந்தும், கடந்த எட்டு மாதமாகக் காலதாமதம் செய்யப்பட்டு இன்னும் அது அமுலுக்கு வரவில்லை என்பது அறிக்கையிலிருந்தே தெரிய வருகிறது. எனவே இப்படிப்பட்ட மெத்தனமான போக்கைத் தவிர்க்கும் வகையில் இனியாவது உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையின் மூலமாகப் பிறப்பிக்கப்படும் ஆணைகள் ஆதி திராவிடர் நலத்துறைப் பள்ளிகளுக்கும் பொருந்தும் என்று ஏற்கெனவே அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல் இது எதிர்பாராத செலவாக இருக்கிற காரணத்தால், அரசினுடைய முன் அனுமதியைப் பெற வேண்டிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களை அரசு பரிசீலனை செய்து, இனி வரும் ஆண்டுகளில் இதுபோன்ற காலதாமதம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்த அறிவிப்புக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் வேறொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பிட்ட பணத்தைப் பட்டுவாடா செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட தலைப்பின்கீழ் பணம் ஒதுக்கப் படுகிறது. அந்தத் தலைப்பின்கீழ் பணம் தீர்ந்துவிடும் என்பதை முன் கூட்டியே எதிர்பார்த்து அதற்குரிய காலத்தில், மூன்று மாதங்களுக்கு முன்பே,



தேவையான தொகையை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அப்படி எடுக்காத காரணத்தால்—இதை நானே சென்று பார்த்து எடுத்துச் சொன்ன பிறகுதான்—அதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்க ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இனி இவ்வாறு உரிய தலைப்புகளில் தேவையான பணம் இருக்கிறதா என்பதைக் கண்டறிந்து, முன்கூட்டியே பணத்தை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று துறைக்கு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்துவாரா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** அரசு அதைப் பரிசீலித்து ஆவன செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 6. அரசின் சட்ட முன்வடிவுகள்.

**(1) தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1982).**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றையதினம் ஏழு சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. இன்று கடைசிநாள். நாளையிலிருந்து நமக்கு ஓய்வு என்பது தெரியும்.

@ 432—435ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1982 ஏப்ரல் 8

எனவே நேரத்தைச் சுருக்கி அமைச்சர்களும் உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நேற்றையதினம் அனைவரும் ஒத்துழைத்து நேரத்தோடு எல்லாவற்றையும் முடிக்க உதவியிருக்கிறீர்கள். இந்தச் சட்ட முன்வடிவுகளில் பேச வேண்டாம் என்று நான் சொல்ல முன்வரவில்லை. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்ற தமிழ் மரபைக் காப்பாற்றும் வகையில் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவினுடைய நோக்கத்தைப் பற்றி, "காரணங்களும் நோக்கங்களும்" என்பதிலே சொல்லியிருக்கிறார்கள். வேலை நிறுத்தங்களின்போதும், கிளர்ச்சிகளின் போதும் பொதுச் சொத்துக்களுக்கு ஏற்படும் நஷ்டங்களைத் தவிர்க்க, பொதுச் சொத்துக்களுக்கு நஷ்டம் ஏற்படுத்துபவர்களுக்கு அதிகமான தண்டனையும், அபராதமும் விதிக்கும் நோக்கத்தோடு இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. பொது மக்கள் நடத்தக்கூடிய பல போராட்டங்களில் சில சமயங்களில் இந்த மாதிரி நடப்பதுண்டு. இப்படி நடப்பதைப்பற்றிச் சொல்லும்போது, அப்படி நடக்கிற சம்பவங்களுக்கு வக்காலத்து வாங்கிப் பேசுவதாகக் கருதிவிடக் கூடாது.

குறிப்பாகச் சொல்லப் போனால், சமீப காலத்திலே நடைபெறக்கூடிய ஆர்கனைஸ்ட் ஒர்க்கிங் கிளாஸ் மூவ்மென்டைப் பார்த்தால், வன்முறைச் சம்பவங்கள் நடப்பதில்லை. ஆனால் குறிப்பிட்ட பிரச்சினைகள் மீது வேலை நிறுத்தங்கள் ஏற்படுகிறபோது, முதலாளிகள் அல்லது அரசு விட்டுக்கொடுக்கவில்லையென்றால் இதா பொதுமக்களின் ஆதரவைத் திரட்ட போராட்டம் போன்றவைகளை நடத்துகிறார்கள். சாதாரணமாக உள்ள பொது மக்களும், அன்-ஆர்கனைஸ்டாக இருக்கின்ற பொது மக்களும், தங்களுடைய வாழ்க்கையில் சிலபல பிரச்சினைகளில் அதிருப்தி ஏற்படும்போது, இத்தகைய சம்பவங்கள் நடைபெறுவதைப் பார்க்கிறோம்.

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை நடத்துபவர்களைப்பற்றி அரசு குறிப்பிடும் போது, "கலகக்காரர்கள்" என்று தமிழில் குறிப்பிட்டிருக்கிறது. அரசுக்கு எதிராக பலாத்கார ரீதியாகப் போராடுகிறவர்கள்தான் கலகக்காரர்கள். ஆனால் ஆங்கிலத்தில் "மிஸ்கிரியண்ட்ஸ்— (miscreants) என்று போட்டிருக்கிறார்கள். இந்த மாதிரி போராட்டங்களில் சில மிஸ்கிரியண்டை மட்டும்



1982 ஏப்ரல் 8] (Thiru A. R. Damodaran)

because I have always held the view that violence should not be resorted to in such matters—, it must be remembered that even a stone thrown can kill a person as a bullet, though the hon. Member Thiru Nallasivan may say, 'What does it matter if a stone is thrown?' It is also stated 'any other material and I believe in one place, the bouquet thrown had caused the loss of eye-sight to a person.' Even if we throw only flowers, we can be accused if it is intended to injure and we will get into trouble. While I fully support the Bill I would like to express that even previously I have pleaded that there are some troublesome areas where we know that violence would occur. For example, in Poonamallee High Road, there is a particular place, where the buses are stopped and I do not want to mention the exact place and we must take steps to prevent such things happening. If the Government want to take adequate steps, our police force must be equipped with modern equipment and with modern photographic equipment, because, the Government will have to identify the proper persons and should not depend upon the mere evidence of a police constable. I would like to say that the laws of evidence should be properly observed. I quite agree with the fears expressed by the hon. Members that we are so distrustful of the police that all of us are apprehensive that this may be used against ordinary citizens also. I would, however, plead that in modern circumstances where political differences boil over into agitations which do take a violent form, there is a definite necessity for the State to see that the ordinary consumer and the ordinary passenger in the bus are protected. We have so many incidents happening not only in our State, but in other States, where fish-plates are removed and where on the highways bombs are placed to blow up bridges. I would plead that this cannot be attributed entirely to economic circumstances as the hon. Member Thiru Nallasivan of the CPM has pleaded. To plead so is an easy way out. Sir, while economic circumstances are there, if we say that such violent agitations can be performed only because our people are finding it difficult in view of inflation, there can be no law and order in any State, there can be no established Government and all that we would be having is anarchy or Revolutionary Committees, both of which we do not desire. I would only plead with the Hon. the Law Minister that this enactment should be impartially given effect to.

Sir, the only clause which I would like the Hon. Minister to relax a little in clause 4 in which he has said that no person accused or convicted of an offence punishable under section 2 or section 3 shall, if in custody, be released on bail or on his own bond unless the prosecution has been given an opportunity to oppose the application for such release. Sir, I can understand your opposing bail when a person is convicted and goes on appeal. But, if a person is accused of stone-throwing and if half a dozen people are roped in by the Police, why should this clause be used to prevent those people from going on bail? When dealing with student-agitations, there may be half a dozen students who may be responsible for throwing stones. There may also be half a dozen innocent by-standers and if they can be involved and if you insist that bail applications cannot be granted by the Court unless the Police or the Prosecution accepts them, what will happen? We know the classic method of delaying such bail applications because the person is often remanded to custody for 15 days or 30 days. I would plead that this particular clause be looked into and that bail applications should not be opposed unless the offence is very serious and unless there is absolute photographic evidence that a person has been involved in an incident of violence.

I would end by supporting this Bill but also expressing the hope that it will be implemented in an impartial manner without giving room for any complaint of political favouritism or otherwise. Thank you.

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, அரசு, அரசு சார்புடைய அல்லது பொது நிறுவனங்களுடைய சொத்துக்களுக்குச் சேதம் வராமல் தடுப்பதற்கும் அல்லது சேதம் வந்தால் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும் வகை செய்யும் வகையிலே சட்டமுன்வடிவு கொண்டுவரப் பட்டிருக்கிறது. 1981-லே இது வருவதற்கான காரணம், சமீப காலத்திலே நடந்துள்ள சில நிகழ்ச்சிகளிலே அரசுப் பேருந்துகள் பாதிக்கப்பட்டிருக் கின்றன என்ற உண்மைதான். எனவே பொதுச் சொத்துக்கள் பாதிகாக்கப் பட வேண்டுமென்பதிலே கருத்து வேறுபாடு கிடையாது. இந்தச் சட்ட முன் வடிவு வருகிற சூழ்நிலையையும், இதற்குத் தரக் கூடிய தண்டனைகளையும் பார்க்கும்போது, ஏற்கெனவே உள்ள சட்டங்கள் 'போதுமானதாக இல்லை என்ற கருத்தில், இது கொண்டு வரப்பட்டிருக்கிறது: ஏற்கெனவே இருக்கும்



சட்டங்கள் போதுமானதாக இல்லை என்ற கருத்தில் இது கொண்டுவரப்பட்ட தறகான காரணங்கள், இப்போதுள்ள சூழ்நிலைதான். இந்தியாவில் ஒரு கொந்தளிப்பான நிலை, தமிழ் நாட்டில் மட்டுமல்ல, எல்லா மாநிலங்களிலும் இருக்கிறது. இதற்கு முன்னால் இந்தியாவிலே இதுமாதிரி வளர்ந்து வந்த சூழ்நிலை உண்டு. வன்முறையைப் பற்றிப் பல கருத்துக்கள் கூறப்படுகின்றன. 1905 லே வங்காளத்தைப் பிரித்தபோது, மக்கள் கிளர்ந்து எழுந்தார்கள். அதிலிருந்து 1926, 1927 வரையிலும் அன்றைக்கு இருந்த பிரிட்டிஷ் அரசு போட்ட சட்டங்கள் கடுமையான சட்டங்கள். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், அன்றைக்கு இருந்தது அந்நிய அரசு என்பது உண்மை. அன்றைக்கு ஏன் கிளர்ச்சி ஏற்பட்டது? அப்போதே விவசாயிகள் கஷ்டப்பட்டார்கள். அப்போதும் ஏழ்மை இருந்தது. இப்போதும் பார்க்கிறோம். விவசாயிகள், தொழிலாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். வாழ்க்கை நிலை பாதிக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல. வெறும் பொருளாதாரக் காரணம் மட்டுமல்ல, ஜனநாயக உரிமைகளைக்கூட இழந்து வருகிறார்கள். இந்திய சமுதாயத்தில் ஒரு ஓய் வற்ற நிலை இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் பதட்ட நிலை வளரு கிறது. அதனால்தான் பல மாநிலங்களில் இப்படிப்பட்ட கிளர்ச்சிகள் நடக் கின்றன. எந்த ஆட்சி நடந்தாலும், இப்படிப்பட்ட பிரச்சினை அவர்களை எதிர்நோக்கியிருக்கிறது. இதிலே கொடுத்திருக்கும் நிபந்தனைகளைப் பார்த் தால், சொத்துக்களைப் பாதுகாப்பதைவிட நடைமுறையில் இந்தச் சட்டத்தை நிறைவேற்றும்போது என்ன நடக்கும் என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்

(முற்பகல் 10-40)

பினர் திரு. நல்லசிவன் சொன்னார்: ஆங்கிலத்தில் 'மிஸ்கிரியன்ட்ஸ்' என்றும் தமிழில் கலகக்காரர்கள் என்றும் சொன்னார்கள். ஆனால் விஷமக்காரர்கள் என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். கலகக்காரர்கள் என்பது வேறு. கலகம் செய்ய ஒவ்வொரு நாட்டிலும் இன்றைக்கு உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** குறும்புத்தனம் அல்லது சேட்டை என்று சொல்லலாம்.

**திரு. ப. மாணிக்கம் :** குறும்புத்தனத்தில் நாசம் இருக்காது, ஆனால் விஷமத்தனம் செய்வதில் நாசம் இருக்கும். சேட்டை என்கிற வார்த்தையை திருநெல்வேலியில் சொல்வார்கள். குறும்புக்கும் சேட்டைக்கும் பொருத்த முண்டு. விஷமக்காரர்களைத் தடுக்கும் நோக்கம் இந்தச் சட்டத்தில் இருக் கிறது. ஆனால் காவல் துறையைப் பொறுத்தவரையில், இந்த விஷயத்தைப்

பொறுத்தவரையில், அதன் அணுகுமுறையில் தவறுகள் செய்வதை நாம் பார்த்திருக்கிறோம். உண்மையான குற்றவாளிகள் தப்பித்துக்கொள்வார்கள். ஆனால் குற்றத்திற்குச் சம்பந்தமே இல்லாத சாதாரண அப்பாவி மக்களைப் பிடித்துக்கொள்வார்கள். இந்தி எதிர்ப்பு கிளர்ச்சியாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்த ஒரு கிளர்ச்சியாக இருந்தாலும் சரி, நாம் இதைப் பார்த்திருக்கிறோம். குற்றத்தைச் செய்தவர்கள் தப்பித்துக்கொள்வார்கள். கூட்டத்தில் மாட்டிக்கொள்கிற சாதாரண அப்பாவியைப் போலீசார் பிடித்துவிடுவார்கள். 'ரேன்டம்' செய்கிறோம் என்று சொல்வார்கள். அப்படிச் சொல்லிவிட்டு கிடைத்தவனைப் பிடித்துவிடுவார்கள். ஆறுமுகநேரியில் நடைபெற்ற சம்பவத்தின்போது கூட இப்படித்தான் நடந்தது. இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது கூட இப்படித்தான் நடந்தது. செய்தது ஒருவன். ஆனால் சுடப்பட்டு இறந்தவன் வேறொருவன். மாண்புமிகு தலைவரவர்களுக்கு இதுபற்றி பல விஷயங்கள் தெரியும். வ.உ.சி.-யைச் சிறையில் போட்டார்கள். ஆனால் பல சாதாரண மக்கள் தான் அதனால் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். 'மிஸ்கிரியன்ட்ஸ்' என்பதற்குப் பதிலாக அப்பாவிகள் தான் பாதிக்கப்படுவார்கள். அரசு வேடிக்கை பார்ப்பதற்காக இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறது என்று நான் சொல்லவில்லை. இப்படிச் சட்டம் கொண்டு வருவதன் மூலம் சாதாரண அப்பாவி மக்கள் மாட்டிக்கொள்ள, குற்றம் செய்யாத அவர்கள் குற்றவாளிகளாக ஆக்கப்பட வாய்ப்பிருக்கிறது. ஆகவே இந்தச் சட்டம் அவசியமில்லை என்கிற கருத்தைக் கூறி அமைகிறேன்.

செல்வி ஆ. லீலாவதி: மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொதுச் சொத்து அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல் பற்றிய சட்டமுன்வடிவின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்கிறேன். நான் ஒரு சம்பவத்தை நேரில் பார்த்திருக்கிறேன். கல்லூரி மாணவர்கள் ஒருநாள் நான் நின்றுகொண்டிருந்த இடத்திற்கு அருகில் நின்றுகொண்டிருந்த ஒரு பஸ்சுக்கு அருகே வந்தார்கள். அவர்கள் கையில் பெட்ரோல் போன்ற பொருள்களை எடுத்து வந்திருந்தார்கள். வந்தவர்கள் பஸ்சில் உள்ள சீட் நார் எல்லாவற்றையும் கிழித்து பெட்ரோலை ஊற்றி அதை ஒரு விளையாட்டாகக் கருதி, கொளுத்திவிட்டார்கள். இம்மாதிரி சட்டம் கொண்டு வருவது இப்படி ஒரு கூட்டமாகக் கூடி, விளையாட்டாக நினைத்து, ஏதோ ஒரு பெரிய காரியத்தைச் செய்துவிட்டதாகக் கருதி பஸ்ஸைக் கொளுத்துவது போன்ற செயல்களைத் தடுக்க உதவும். இனிமேல் தூண்டுபவர்களுக்கு உறுதுணையாக, விளையாட்டாகச்





செய்யும் இச்செயல்களைச் செய்ய மாணவர்கள் முன்வர மாட்டார்கள். இந்தச் சட்டத்தினால் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பு கிடைக்கிறது. பொதுவாக, பேருந்துகள் சென்று கொண்டிருக்கும்போது, மட மட என்று பேருந்தை அடிக்கிறார்கள். பெண்களும் குழந்தைகளும் பொதுவாக மெதுவாக இறங்குவார்கள். இப்படிப்பட்ட செயல்களைச் செய்வதால், அவர்கள் தான் ரொம்பவும் பாதிக்கப்படுகிறார்கள். இந்தச் சட்டம் ஒருவகையில் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் வரப்பிரசாதம் அளிப்பதாக அமைந்திருக்கிறது.

அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் ஒன்றை இங்கே குறிப்பிட்டார். ஆசிரியர்கள் அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக வேண்டித்தான் போராட்டங்களில் இறங்குகிறார்கள். அரசுக்கு எதிராக பொலிடிக்கலாக அவர்கள் எந்தவிதப் போராட்டங்களிலும் இறங்குவது கிடையாது. ஆசிரியர்கள் நான்-பொலிடிக்கலைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தங்கள் கோரிக்கைகள் குறித்து அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காகத்தான் போராட்டங்களில் இறங்குவார்கள். தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை நிவர்த்தி பண்ண வேண்டும் என்பதற்காகத்தான் போராட்டங்களில் இறங்குகிறார்கள். அம்மாதிரி போராட்டங்களில் ஈடுபட்டால், 'நோ ஒர்க்—நோ பே' என்கிற ஆணையை அரசு பிறப்பித்திருக்கிறது. அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். சாதாரணமாக ஆசிரியர்கள் போராடினால், அவர்கள் கலகக்காரர்கள் அல்லது மிஸ்கிரியன்ட்ஸ் என்கிற வகையில் எடுத்துக்கொள்ளக் கூடாது. ஆனால் அரசின் பொதுச் சொத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் ஏதாவது நடவடிக்கையில் யாராவது ஈடுபட்டால், அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து ஆட்சேபனை இல்லை என்பதை நான் கூறி, அமர்கிறேன்.

THIRU J. M. MIAKHAN: Sir, regarding L.A. Bill No. 13 of 1982, there are no two opinions that public property should not be destroyed and there are no two opinions that hardearned money of the people should not be wasted. But this Bill is likely to be misused because we cannot implement it properly. Unless we have got a very efficient police administration and detective machinery it is very difficult to find who the culprits are. In any processior there will always be two sides. It is not necessarily true tha people who go on strike and who go in procession alone wil indulge in such atrocities. It may be that are some people some rowdy elements and some black sheep who want to [illegible]

(Thiru J. M. Miakhan) [1982 ஏப்ரல் 8

trouble and they may indulge in such things and try to put the blame on the people in procession or the people who go on strike. Definitely it will work against them. Unless we have got a foolproof way of finding out who the miscreants are, it is very dangerous to invest the Government with such powers. There are no two opinions that public property should not be destroyed. If there is absolute proof that A and B are responsible for setting fire to a bus or for destruction of this building or that building, definitely we have no objection to taking them to task and the Government may imprison them, fine them and collect the amount of loss caused by them. But, merely on suspicion, to prevent the happening of these things, if the Government arrest some pepole on suspicion and are not going to allow them to go on bail, it is not proper. I think that this Bill has not been framed properly. It has to be framed properly. I oppose this Bill in its present form and I request the Government to withdraw the Bill if possible.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொதுச் சொத்து அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல் பற்றிய சட்ட முன்வடிவை நான் முழு மனதோடு ஆதரிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அரசு கொண்டு வந்திருக்கிற இச்சட்ட முன்வடிவு மிக மிகத் தேவையான ஒன்று என்பதோடு மட்டுமல்லாமல், தமிழகத்து மக்கள் பெரிதும் உணர்ந்திருக்கின்ற உணர்வுகளின் எதிரொலியாக இச் சட்ட முன் வடிவு வந்திருப்பதாகவும் நான் கருதுகிறேன். இச்சட்ட முன்வடிவின் பிரிவுகளிலே எனக்கு மாறுபாடுகள் இருக்கலாம். அல்லது. தண்டனை முறைகளிலே எனக்கு வேறுபாடு இருக்கலாம். ஆனால் இன்றைக்கு தமிழகத்து மக்கள் எப்படி உணர்கிறார்கள் என்கிற உணர்வின் அடிப்படையிலே மாறுபாடு கிடையாது. அதை இன்றைக்கு இந்த அரசு உணர்ந்து, புரிந்து கொண்டு அதன் அடிப்படையில் இதனைக் கொண்டு வந்திருப்பதாக நான் கருதுகிறேன்.

மாண்புமிகு தலைவர்வர்களே, தங்களுடைய தலைமையில் தான் இப்படிப் பட்ட ஒரு சட்டம் நிறைவேற இருக்கிறது. மிகப் பெரிய போராட்டங்களை யெல்லாம் அரசுக்கு எதிராக தாங்களே தலைமையேற்று கடந்த காலத்திலே நடத்தியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராக.



1982 ஏப்ரல் 8]

திரு. க. இராமமூர்த்தி : காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராக என்று நான் கருத மாட்டேன், சில நேரங்களில் தாங்கள் கூறிய கருத்துக்களை காங்கிரஸ் ஆட்சி சரியாகப் புரிந்துகொள்ளாத காரணத்தால், அதை காங்கிரஸ் புரிந்து கொள்ள வேண்டுமென்ற உரிமையோடு தாங்கள் போராட்டங்களை நடத்தியதாக நான் கருதுகிறேன். இன்றைக்கு ஒன்றைப் பெருமையோடு எண்ணிப் பார்க்க முடிகிறது. அரசியல் கட்சிகள் பொதுமக்களைத் திரட்டி மிகப் பெரிய போராட்டங்களை, ஆர்ப்பாட்டங்களை, நடவடிக்கைகளையெல்லாம் மேற்கொள்ளும்போது, எந்த அளவுக்கு அதன் தலைவர்களுக்கு அதிலே பொறுப்பிருக்கிறது, கடமை இருக்கிறது என்பதை கடந்த காலத்திலே நாம்

(முற்பகல் 10-50)

கண்டோம். எனக்கு நினைவு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள்கூட என்னோடு தனியே பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். காந்தியடிகள் விடுதலை இயக்கப் போராட்டத்தை நடத்திய போது, அவர் நடத்திய போராட்டத்தின் விளைவாக, அந்தப் போராட்டத்திலே ஈடுபட்டவர்கள், ஏதாவது ஒரு நேரத்திலே, ஏதாவது ஒரு காலகட்டத்திலே அவர்களை அறியாமல் வன்முறைச் செயல்களிலே ஈடுபட்டபோது, அந்தச் செயல்களின் விளைவுகள் விபரீதமாக மாறியபோது, எப்படி நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை நான் நினைவுபடுத்துவது இந்த நேரத்தில் மிகவும் நல்லது என்று கருதுகிறேன். காந்தியடிகள் உப்பு சத்தியாக்கிரகம், சைளரி- சைளரா போராட்டத்தின்போது, காவல் துறையைச் சார்ந்த ஒரு இன்ஸ் பெக்டர் அல்லது சப்-இன்ஸ்பெக்டர் அந்தப் போராட்டத்திலே ஈடுபட்டவர் கள் இடையிலே ஏற்பட்ட மோதலின் காரணமாக உயிரோடு தீயில் எரிக்கப் பட்டபோது, தன்னுடைய எந்த நிலைமையையும் பார்க்காமல் அடுத்த நிமிடமே 'போராட்டத்தை நிறுத்துகிறேன்', எப்போது என்னுடைய தொண் டர்கள் என்னுடைய கட்டளைகளுக்கு மாறாக நடந்தார்களோ அதற்குப் பிறகு இந்தப் போராட்டம் தேவையில்லை என்று அறிவிக்கும் துணிவும் தைரியமும் அன்றைக்கு அந்தத் தலைமைக்கு இருந்தது. அதைப் போலவே, பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய தலைமையிலே எனக்குப் பணி யாற்றும் வாய்ப்பு கிடைத்தது. காங்கிரஸ் கட்சி எதிர்க் கட்சியாக இந்த காங்கிரஸ் கட்சியின் மாநிலச் செயலாளராக நான் பணியாற்றும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஒரு முறை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு எதிராக, அப்போது இருந்த மத்திய ஆட்சிக்கு எதிராக பெரிய அளவிலே நாடு தழுவிய போராட்டத்தை நடத்த வேண்டும் என்று கேட்டு அதற்கு அனுமதி அளித்தார்கள். ஆனால் அதற்கு முன்னதாக 6 மாத காலம் இந்தப் போராட்

[திரு. க. இராமமூர்த்தி] [1982 எப்ரல் 8

டம் எப்படி நடத்தப்பட வேண்டும் என்பது பற்றிய முறைகளைச் சொல்லி மிகத் தெளிவாக, திட்டவட்டமாக இந்தப் போராட்டம் நடக்கும்போது, எங்கேயாவது, எந்த ஒரு இடத்திலேயாவது வன்முறை தலை தூக்கினால், இந்தப் போராட்டம் தோல்வியுற்றது என்றுதான் நான் கருதுவேன், உடனடியாக எனக்கும் அந்தப் போராட்டத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று அறிவிப்பேன் என்று பெருந்தலைவர் காமராசர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். அதைப்போலவே நாங்கள் நடத்திய அறப் போராட்டம் மாநிலம் முழுவதும் வெற்றி பெற்றது. ஆனால் வட ஆற்காடு மாவட்டத்திலே இரண்டு இடங்களிலே அந்தப் போராட்டம் வன்முறையாக மாறி ஒரு இடத்திலே துப்பாக்கிப் பிரயோகமும் நடைபெற்றது. உடனே அந்த மாவட்டத்திலே போராட்டத்தை நிறுத்தியதோடு மட்டுமல்ல, அதற்குப் பிறகு அந்த மாவட்டத்தைச் சார்ந்த காங்கிரஸ்காரர்கள் அவரைப் பார்க்க எறத்தாழ மூன்று மாத காலமாயிற்று. அதைப்போலவே ஒரு கட்டுப்பாட்டோடு கொண்டு செல்லும் தலைமை வேண்டும். நாம் எப்போதும் கோரிக்கைகளுக்காக, அல்லது நோக்கங்களுக்காகப் போராட வேண்டும் என்ற பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகிறோமே தவிர, நமக்குப் பின்னே வருகின்றவர்கள் செய்யும் காரியங்களுக்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்வதில்லை. பெருந்தலைவர் காமராசர் அவர்களுக்குப் பெரிய அளவிலே அவர்களுடைய பிறந்தநாள் விழா எடுத்து, அந்த ஊர்வலம் எப்படிப் போக வேண்டும் என்று நாங்கள் காவல் துறையின் அனுமதி கேட்ட போது, அது அண்ணா சாலை வழியாகப் போகக்கூடாது, அண்ணா சாலையிலே சாந்தி தியேட்டரிலே நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் படமும், பக்கத்திலே இருக்கும் பிளாசா தியேட்டரிலே முதல்வர் திரு. எம்ஜிஆர் அவர்களின் படமும் ஓடிக் கொண்டிருக்கிறது, ஊர்வலத்திலே போகின்றவர்கள் கல் எறிவார்கள், கலவரம் ஏற்பட சாத்தியக் கூறுகள் இருக்கின்றன, ஆகவே, அந்த வழியாகப் போக கூடாது என்று காவல் துறையினர் அனுமதி மறுத்தார்கள். நாங்கள் எப்படியும் அந்த வழியேதான் போவோம், இது எங்களுக்கு ஒரு கௌரவப் பிரச்சினை என்று முடிவு எடுத்தபோது, காவல் துறையினர் பெருந்தலைவர் காமராசர் அவர்களைத் தனியே சந்தித்து நிலைமைகளை எடுத்துச் சொல்லி அவரை சம்மதிக்க வைத்து விட்டார்கள். அதற்குப் பிறகு நாங்கள் சொன்னபோது, ஊர்வலத்தில் எந்தவிதமான அசம்பாவிதமும் ஏற்படாது என்று அதற்கு நீங்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டு அந்த ஊர்வலத்தை நடத்திக்காட்ட உங்களுக்குத் தைரியம் இருக்கிறதா என்று எங்களைக் கேட்டபோது நாங்கள் அதை ஏற்றுக்கொண்டோம். பின்னர் ஊர்வலம் சென்று அன்று மாலை ஊர்வலம் முடிந்து கடற்கரையிலே விழா நடந்தது. ஆனால், விழாவிற்குக் கூட வர இயலாத வகையிலே நானும், திரு. நெடுமாறன் அவர்களும், காலம் சென்ற சின்ன அண்ணாமலை



1982 எப்ரல் 8] [திரு. ஆ. நல்லசிவன்]

தனிமைப்படுத்திச் செய்ய முடியாது. மக்களுக்கே கோபம் இருக்கிறபோது, அவர்கள் இப்படிப்பட்ட சம்பவங்களில் ஈடுபடுகிறபோது, அவர்களையெல்லாம் அரசு தண்டிக்க ஆரம்பித்தால், சாதாரண பொதுமக்களை தண்டிக்கும் சட்டமாகத்தான் இது இருக்கும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

1942 ஆம் ஆண்டில் நடந்த போராட்டத்தை இப்போது ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அப்போது குறிப்பிட்ட கட்டத்திலே அரசாங்கத்தின் மீது மக்களுக்கு ஏற்பட்ட கோபத்தாலே அது போராட்டமாக மாறியது. அந்தப் போராட்டம் யாராலும் தூண்டப்படவில்லை. மக்களுக்குள்ள கோபம்தான் போராட்டமாக மாறியது. இதைச் சொல்லும்போது, இது வெள்ளைக்காரர்கள் ஆட்சியில் நடந்த சம்பவம், அதை ஒப்பிடலாமா என்று கேட்கலாம்.

நம்முடைய நாடு சுதந்திரம் பெற்று 18 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தித் திணிப்பு ஏற்பட்டபோது, ஒரு கலவரம் நடந்தது. அதை யாரும் தூண்டவில்லை. தமிழக மக்களிடத்திலே, இந்தி மொழி திணிக்கப்படுமோ என்று இருந்த பயத்தின் காரணமாக அந்தப் போராட்டம் நடந்தது. திட்டமிட்டு யாரும் உருவாக்கிக் கொடுக்காதபோது, மக்களுடைய ஆத்திரத்திலே ஏற்பட்ட விளைவு அது. அதற்குப் பிறகு இந்தியைத் திணிக்கமாட்டோம் என்று அரசு அறிவித்தபோது, இந்தப் போராட்டம் நின்று போயிற்று. அந்தப் போராட்டங்களில் ஈடுபட்டவர்களுக்குக் கூட கணிசமான பாராட்டுரைகளும், அவர்களுடைய குடும்பங்களுக்கு உதவி வழங்குவதையும் நாம் பார்க்கிறோம். இப்படி சுதந்திரம் அடைந்த 17 ஆண்டுகளுக்குப் பிறகு குறிப்பிட்ட பிரச்சினையில் மக்களுக்கு ஏற்பட்ட அதிருப்தியின் காரணமாக போராட்டம் வந்ததைப் பார்க்கிறோம். அப்படி மக்கள் போராட்டங்களில் ஈடுபடுகிறபோது, போராட்ட முறையை மக்கள் தேர்ந்தெடுப்பதற்குரிய மூல காரணம் என்ன என்பதை ஆராய்வதை விட்டுவிட்டு, அவர்களையெல்லாம் சிறைக்குள்ளே தள்ளி தண்டிப்பது என்பது சரியல்ல என்று நினைக்கிறேன்.

1965 ஆம் ஆண்டிலே நாட்டிலே பெரிய அதிருப்தி நிலவியிருந்தது. சில இடங்களில் மத்திய அரசின் மீதும், சில இடங்களில் மாநில அரசின் மீதும் அதிருப்தி இருந்தது. விலைவாசி உயர்வாலும், வேலை வாய்ப்பின்மையாலும் இப்போது மிகப் பெரிய அதிருப்தி இருக்கிறது. ஆகவே அது பல ரூபங்களில் வெடிப்பதைப் பார்க்கிறோம். அப்படி வெடிக்கிறபோது, போராட்டங்களில் ஈடுபடுகிறபோது, சில சமயங்களில் இப்படிப்பட்ட காரியங்களில் பொது மக்கள் ஈடுபடுவதைப் பார்க்கிறோம். போலீசின் லாக்-அப்பில் உள்ள ஒருவர் [illegible] என்பதால், போராட்டம் ஏற்படுவதை சில சமயங்களில்

பார்க்கிறோம். போலீஸ் அதிகாரிகள் சரிவரத் திருத்தப்படாததன் காரணமாக அவர்கள் தவறாக நடந்த செயல்களைப் பற்றி பல நீதி விசாரணைகளில் தீர்ப்புகள் வந்திருக்கின்றன. இப்படி சில சமயங்களில் மக்களுக்கு ஏற்படக்கூடிய கோபத்தின் காரணமாக சில நிகழ்ச்சிகள் நடைபெறும்போது, மூல காரணத்தை ஆராயாமல் தண்டனை கொடுப்பது என்பதும், அதுவும் அனைவருக்கும் தண்டனை கொடுக்க முடியாது என்பதாலே அதிலே சில பேருக்கு தண்டனை கொடுக்க அரசு முயற்சிப்பதும் சரியல்ல.

பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுகிறபோது, சாதாரண மக்களுக்காக உபயோகப்படுத்துகிற மோட்டார் வாகனங்கள், அரசு சொத்துக்கள் மீது சேதம் விளைவிக்கிற எண்ணம் பொது மக்களுக்கு ஏன் ஏற்படுகிறது என்பதை ஆராய வேண்டும். சமூகப் பொருளாதாரச் சூழ்நிலையில் மக்கள் கிளர்ச்சிகளில் ஈடுபடும்போது, அவற்றையெல்லாம் பொய் கேஸ்கள் போடுவதன் மூலமும், அடக்குமுறை மூலமும், சிறைத் தண்டனை மூலமும் ஒழித்து விடலாம் என்று கருதுவது சரியல்ல. அப்படி ஒழித்துவிட முடியாது. அப்படி ஒழித்துவிட முடியும் என்று எந்தச் சரித்திரமாவது காட்டுகிறதா? ஆகவே மூல காரணங்களைப் போக்க முயற்சி செய்ய வேண்டும்.

இந்த மாதிரி சம்பவங்கள் வரும்போது, நடவடிக்கை எடுக்க வேறு சட்டங்கள் இருக்கின்றன என்பதை இந்தச் சட்ட முன்வடிவின் 'சேவிங் கிளாஸ்' ஏழில் அரசே குறிப்பிட்டிருக்கிறது. ஏற்கெனவே இப்படிப்பட்ட நடைமுறைகளைக் கட்டுப்படுத்த சட்டங்கள் இருக்கின்றன, ஆகவே அவற்றுக்குப் பாதகம் இல்லாமல் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்படுகின்றது என்று அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள். வழக்குகள் தவிர, துறை ரீதியாக நடவடிக்கை 'இனிஷியேட்' செய்வதாக இருந்தாலும், அதற்கும் பாதகம் இல்லாமல் தண்டனை தரப்படும் என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட அதிகாரம் ஏற்கெனவே அரசாங்கத்திற்கு இருக்கிறது. அவைகளை விட்டுவிட்டு, இப்போது புதிதாக அதிகாரங்களை மேற்கொள்வது சரியல்ல.

1944, 1945, 1946 ஆகிய ஆண்டுகளில் கூட இந்திய விடுதலை சைனியத் தலைவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டுமென்று நடந்த போராட்டத்தை நாம் அறிவோம். அப்படிப்பட்ட கலவரம் நடந்தது அப்போது. அதற்கு முன்பும் நடந்திருக்கிறது. அப்போது வெள்ளைக்காரர்கள் கூட்டு



அபராதத்தைப் போட்டார்கள். இந்த அரசு அப்படி "கூட்டு அபராதம்" என்று சொல்லாமல், யார் யார் கலந்து கொள்கிறார்களோ அவர்கள் அத்தனை பேருக்கும் அபராதம் போடலாம் என்று சொல்லியிருக்கிறது. மக்களே இப்படி ஈடுபடுகிறார்கள் என்றால், அதற்கான மூல காரணம் என்னவென்பதை ஆராய்வதற்குப் பதில், இப்படி கூட்டு அபராதம் விதிப்பது, அதிகமான தண்டனையாக ஐந்து வருஷம் சிறைக்குள் தள்ளுவது என்பது—இப்படி அடக்கு முறையின் மூலமாக அடக்கிவிட முடியும் என்று நினைக்கிறார்கள். அப்படி செய்வதன் மூலமாக இந்த அரசைத் தனிப்படுத்தும் ஆபத்து இருக்கிறது.

நாட்டிலே இந்தக் கிளர்ச்சிகள் "டிஸ்டார்ட்டெட் ஃபார்மில்" நடக்கின்றன. இதற்கான மூல காரணங்களை அறியாமல் அடக்கு முறையின் மூலமாக அடக்கிவிடலாம் என்று நினைப்பது சரியல்ல.

1978 ஆம் ஆண்டிலே சில பிரச்சினைகள் காரணமாக தமிழ் நாடு முழுவதும் எதிர்க் கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து கண்டனம் தெரிவிக்கும் வகையில் அர்த்தால் நடைபெற்றபோது, 16—10—1978 அன்று நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் ஒன்றைக் கூறினார்கள். "பஸ்கள் மீது கல் எறிவது என்பது பஸ்களில் உள்ள பிரயாணிகளைக் கொலை செய்வதற்கான முயற்சி" என்று கருதி அரசு சட்டங்களைக் கொண்டுவர வேண்டும் என்று பேசினார்கள். அது சரியல்ல. அவர் சொன்ன அந்த யோசனையை மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு சட்டத் திருத்தமாகக் கொண்டு வருவது சரியல்ல என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

கடைசியாக, இந்தச் சம்பவங்களில் கல் எறிவது என்பதைப் பொறுத்த வரையில், வெள்ளைக்காரர்கள் ஒரு அணுகு முறையைக் கையாளுவார்கள். கூட்டத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம், தடியடிப் பிரயோகம் நடத்துவதற்காக போலீஸ்காரர்களே சில பேரைத் தூண்டிவிட்டு மக்களை அடிக்கப் பயன்படுத்துவார்கள். இப்போதும் அந்த மாதிரியாக இருக்கிறதா என்றால், இருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம் * * *

(முற்பகல் 10-20)

ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்திலே இருந்ததுபோன்று இருக்கிறது. ஆகவே இந்த நேரத்தில் இப்படிப்பட்ட அதிகாரங்களை நாம் ஜாக்கிரதையாகப் பயன்படுத்துவோம் என்று சொன்னாலும், ஜனாதிபதி ஆட்சி வருகின்ற காலத்திலே அல்லது வேறு . . .

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேசுகின்றபோது * * * அப்படி அவைக் குறிப்பிலே வரவேண்டுமா என்பதை பார்த்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அங்கத்தினர் அவர்கள் டி. எஸ். பி. என்று சொன்னார்கள். அது இருந்தால் நன்றாக இருக்குமா ?

**திரு. ஆ. நல்லசிவன் :** அவர்களே சொன்னார்கள். அப்படிச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** போலீஸ் தரப்பிலே சொல்லப்பட்டது என்று சொல்லிவிடுங்களேன்.

**திரு. ப. மாணிக்கம் :** போலீஸ் தரப்பிலே என்று சொல்லப்பட்டதாக இருந்தாலும், அது ஏட்டிலே இருந்தால், அது அவர்களுக்குச் சிக்கல்களை உருவாக்கும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முழுமையும் நீக்கிவிடுவது நல்லது.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அதில் ஒரு பகுதியை எடுத்துவிடலாம். அந்த குற்றச்சாட்டு என்ற மாதிரி இருக்கும் பகுதியையே எடுத்துவிடலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அந்த போலீஸ் தரப்பு என்று சொன்ன பகுதி, டி.எஸ்.பி. பற்றி சொன்ன பகுதி நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசலாம்; அவர்கள் ஒரு ஆசிரியர்கள் பிரதிநிதி. அவர்கள் எல்லாவற்றிலும் பேச வேண்டும் என்று ஆசைப்படுகின்றார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1982-ஆம் ஆண்டு பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்ட முன்வடிவின் மீது சில கருத்துக்களைச் சொல்ல நான் விழைகிறேன். இதிலே காரண நோக்கத்தைப் பார்க்கிறேன்: "வேலை நிறுத்தங்களின்போதும் பிற போராட்டங்களின்போதும் கலகக்காரர்கள் அல்லது பொதுப் போக்குவரத்து வண்டிகளுக்கும், பிற பொதுச் சொத்துக்களுக்கும் தீ வைத்தும் மற்றபடி சேதம் விளைவித்தும், அவ்வண்டிகளில் பயணம் செய்யும்போது மக்கள் மீது கற்களை வீசியும் நாச வேலை

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



களில் ஈடுபடுகின்றனர் என்பதைக் காண்கிறோம். அத்தகைய நாச வேலைகளை முனைப்பாகத் தடுக்கும் நோக்குடன், சட்டத்தைக் கடுமையாக்க வேண்டியது அவசியமெனக் கருதப்படுகிறது. அதைத் தடுக்கும் நோக்கத்துடன் இந்தச் சட்ட முன் வடிவு கொண்டுவரப்படுகிறது என்று இதிலே அரசுத் தரப்பிலே காரண நோக்கம் சொல்லப்படுகிறது. அந்தக் காரண நோக்கத்தைப் பொறுத்தவரையில், அதை எதிர்ப்பது என்பது என்னுடைய நோக்கம் அல்ல. அது தேவையானதுதான். என்றாலும், எங்களைப் போன்று இருக்கின்ற ஆசிரியர்கள், ஆசிரியர்கள் இயக்கங்கள் இவைகள் போராட்டங்கள் நடத்துகின்ற காலத்திலே இந்தச் சட்டம் வேறு விதமான காரணங்களுக்கு வாய்ப்பாக அமையும் என்று நான் கருதுகிறேன். ஆசிரியர்கள் பிரிதிநிதிகள் என்ற அளவில் சொல்கிறேன். ஆசிரியர்கள் சங்கம் நடத்துகின்ற வேலைநிறுத்தம், உண்ணாவிரதப் போராட்டம் மற்ற போராட்டங்கள் இவைகளில் சமூக விரோதிகள் வேண்டுமென்றே தவறான செயல்களைச் செய்துவிட்டு, அந்த நிர்வாகிகளைக் குறிப்பிட்டு விட்டுவிடுவார்கள். இப்படிப்பட்ட இந்தச் சட்டத்தை நான் எதிர்க்க விரும்புகிறேன்.

ஏற்கெனவே மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இதுபோன்ற நடவடிக்கைகளிலே ஈடுபடுகின்ற சமூகவிரோதிகளைத் தண்டிக்க வேறு சில சட்டங்கள் இருந்தாலும், இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதன் மூலமாக அரசே ஒரு சில வேண்டாத அமைப்புகளை, வேண்டாத ஆசிரியர்கள் சங்கங்களைப் பழி வாங்குவதற்காகக் கொண்டு வருகின்ற சட்ட முன்வடிவாக கருதவேண்டியிருக்கிறது. இதை நாங்கள் பல்வேறு நிலைகளிலே சுட்டிக்காட்டியிருக்கிறோம். அரசு வேண்டாத சங்கத்தின் மீது வேண்டாத நடவடிக்கையை எடுக்கிறது. வேறுவிதமான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. பொதுவாக வேண்டியவர்கள் என்றால் சலுகையும், எதிர்த் தரப்பிலே இருக்கின்றார்கள் என்றால், அவர்களிடம் ஒரு பாகுபாடான முறையில், ஒரு விதமான முறையில் இருக்கின்றார்கள். மற்ற சம்பவங்களில், பல போராட்டங்களில் அப்படி நடந்திருக்கின்றது. பல சந்தர்ப்பங்களிலே சொல்லியிருக்கிறோம். இதுவரை நாங்கள் அப்படிச் செய்யவில்லை என்று அரசுத் தரப்பிலேயிருந்து பதில் வரவில்லை. இப்போது உண்ணாவிரதம் கூடாது, வேலை செய்யவில்லை என்றால் 'நோ பே, நோ ஓர்க்' என்று சொல்கிறார்கள். இப்போது வேலை நிறுத்தம் செய்யக்கூடாது என்று பல்வேறு ஆணைகள், அரசு ஆணைகள் பிறப்பித்து அதைத் தடை செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்துவிட்ட பிறகு,

போராட்டங்கள் எப்படி நடத்துவது? எங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்த வேறு வழி என்னதான் இருக்கிறது? அப்படிப் போராட்டம் நடத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டு, சிறைத் தண்டனைக்குத் தயாராகவும் இருக்கிறார்கள். அந்த நேரத்திலே யாரோ கல் எறிந்தார்கள். இது போன்ற சம்பவத்தை ஆதாரமாக வைத்துச் சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு பிரச்சினையைச் சுட்டிக்காட்டிப் பேசினார்கள். அவர்கள் சொன்னார்கள். "வேலூருக்குச் சென்றிருந்தேன். ஆசிரியர்கள் போராடினார்கள். அப்போது அவர்களை அழைத்து வைத்துப் பேசினேன். ஆசிரியர்கள் கூடவா போராட்டத்தில் ஈடுபடுகின்றார்கள் என்று கேட்டேன். அதற்கு அவர்கள், நாங்கள் இதுவரையிலும் பஸ் மீது கல் எறியவில்லை என்று சொன்னார்கள்" என்று குறிப்பிட்டுவிட்டு, 'ஆசிரியர்கள் கூட கல் எறியவேண்டுமா' என்று இங்கே கேட்டார்கள். அதற்கு நான் ஆசிரியர்கள் போராட்டத்திலே இதுவரையிலே கல் எறிந்ததாக வரலாறே கிடையாது என்று சொன்னேன். அதை மறுத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் எதுவும் சொல்லவில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டது, ஆசிரியர்கள் கல் எறிந்தார்கள் என்பதற்காக அல்ல. இப்படிப்பட்ட போராட்டங்கள் பரவிக் கொண்டிருக்கிறதே என்றுதான் குறிப்பிட்டார்கள். அதையே வேறு பொருள்பட மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நேரங்களிலேகூட கல் எறிதலே இல்லாமல் நடத்திவரக்கூடிய தூய்மையான இயக்கத்தில்கூட, இப்படி கல் எறிகின்ற சம்பவங்களிலே வேண்டுமென்றே ஒரு சிலரால் கல் எறியப்படுகின்ற நிலை உருவாக்கப்பட்டு, அதற்குப் பின்னாலே எங்கள் மீது பழி சுமத்துகின்ற அளவுக்கு வாய்ப்பாக இந்தச் சட்டம் அமையும். அதைத்தான் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே 6 திங்கள் முதல் 5 ஆண்டு வரை தண்டனை என்று சொல்லக்கூடிய அளவுக்கு இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. தேர்தல் நேரத்திலே இந்தச் சம்பவங்களை உருவாக்கி, தேர்தலிலேகூட நிற்க முடியாமல் செய்துவிட முடியும். ஆகவே இந்தச் சட்ட முன்வடிவைப் பழி வாங்குவதற்காகவே கொண்டு வந்ததாக நான் கருதுகிறேன். அது மட்டு



மல்ல. கல் எறிவதில் ஈடுபடுவது என்பது மட்டுமல்ல. தூண்டுதல், ஊக்குவித்தல், உதவுதல் என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு டாக்டர் கூட கல் எறிவதிலே ஈடுபட்டவர்க்குச் சிகிச்சை அளிக்கலாம். அதுகூட ஒரு உதவிதான். ஆகவே 'உதவினால்' என்று சொல்வது சரியல்ல. பக்கத்திலே இருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தால்கூட, உதவினார் என்று சொல்ல முடியுமா?

(டாக்டர் இரா. சனார்த்தனம் எழுந்தார்)

மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் விளக்கம் சொல்வார்கள். டாக்டர் அவர்கள் அமைச்சராக ஆன பிறகு சொல்லலாம்.

ஆகவே கல் எடுத்துக் கொடுத்ததாகச் சொல்வார்கள். அப்படிச் சொன்னதற்காக, யார் மீது வேண்டுமானாலும் இந்தச் சட்டம் பாயலாம். பக்கத்திலே இருந்து எடு என்று சொன்னதாக, அதாவது ஹேஷ்யமாக யார் மீது வேண்டுமானாலும் சொல்லலாம். அப்படிச் சொல்லும்போது, அவர் மீது இந்தச் சட்டம் பாயும் என்ற காரணத்தினாலேயே, இந்தச் சட்ட முன்வடிவை எதிர்க்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவு ஜனநாயகத்திற்கு எதிரான, புறம்பான, நம் நாட்டிற்குத் தேவையில்லாத ஒன்று. ஏற்கெனவே உள்ள விதிகளை அமுல்படுத்துங்கள் என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை வன்மையாகக் கண்டித்து, எதிர்த்து, அமைகிறேன்.

* **Thiru A. R. DAMODARAN:** Sir, I have opposed in the past the Preventive Detention Bill because it removes certain essential fundamental rights which the citizens have. But, in regard to this Bill, I must differ from my hon. colleagues who have expressed their opinion that this is likely to be misused against political parties. While this fear has been legitimately expressed in respect of other measures, this is an enactment where the laws of evidence need to be observed and whoever commits mischief against public properties is liable to be hauled up in a Court of Law and, subject to the laws of evidence, is liable to be punished for varying terms of imprisonment.

Sir, all of us who do not belong to political parties have faced violence from many political parties including the Party which rules today. I am making this statement as a non-politician because whenever there is a difference of opinion between two political parties, there is a determined effort made to disrupt the normal

life of ordinary citizens who do not wish to be involved in such political matters. I would like to remind the hon. Member Thiru Nallasivan that in West Bengal a determined effort was made to embarrass the ruling Party which incidentally happens to be the CPM and the CPM had to resort to Police action to see that law and order was maintained. Any Party which seeks to rule should enforce the law impartially and fearlessly and it is from that point of view that I rise to support this measure.

(முற்பகல் 10-30)

In 1977, when we had some demonstrations between the AIADMK and the DMK, in Cuddalore, a procession was led by certain AIADMK persons who smashed all the glass-windows in the bazaar and, following that, the DMK Party came with lathis led by their leaders and south to create mayhem in the bazaar area. The ordinary businessmen and traders had no protection and when they complained to the Police, the Police were singularly inactive. In that respect, I agree with the hon. Member Thiru Nallasivan who has expressed today the fear of all of us that somehow or other the Police are becoming more and more politically involved in various aspects of agitation. It is this fear of police partiality that has led some Members to attack this measure on the ground that it would be invoked against teachers. The hon. Member Thiru Meenakshisundaram has expressed a fear although he has said that teachers would never throw stones. I do not think they well get involved in this because violence is not their creed. But I would like to stress that if the Government really want to implement this Act, then the Government must do it in an impartial and fearless manner, without bothering about the political affiliations of these miscreants or anti-social elements. I am probably expressing a very idealistic point of view because no Government is really able to implement a law in such an impartial fashion. I would, however, point out that significantly enough, no mention has been made about private property and I presume that we can continue throwing stones and brick-bats against private property and against private industrial undertakings. This prohibition does not apply to private property but applies only to public property. Where there is a deliberate attempt to stop buses on the highways and create a mayhem. Whether it is due to strike or other altations-and I am not bothered



அவர்களும் மொத்தம் மூன்று பேரும் ஜீப்பிலே இரண்டு மூன்று மணி நேரம்
சுற்றி வந்து ஊர்வலம் நடந்து முடியும் வரையிலே அங்கே எந்தவிதமான
ஒருசிறு அசம்பாவிதமும் நடக்காமல் பார்த்துக்கொண்டிருந்தோம்.
எங்களுடைய தலைமை எப்படி செயல்பட்டது என்பதை நான்
இப்போது எண்ணிப்பார்க்கிறேன். இன்றைக்குக் காலம் மாறியிருக்
கிறது. இதுபோன்ற வன்முறைச் சம்பவங்களால் அரசு சொத்துக்கு இழப்பு
வருகிறது. அரசு சொத்து என்று சொன்னாலே அது பொதுமக்களின்
சொத்துதான். பொதுமக்களுக்கு அவதி தரும் வகையிலேயும், அரசு சொத்
துக்கும், பொதுமக்களின் சொத்துக்கும் பெரும் சேதம் விளைவிக்கும் ஒன்றாக
இன்றைக்கு இந்தப் போராட்டங்கள் இருக்கின்றன. மாண்புமிகு போக்கு
வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள், இதிலே மிகப்பெரிய
கேஷ்வாலிடி (Casuality) பஸ் தான். ஒரு சாதாரண சம்பவத்திற்குக் கூட
பஸ்களைக் கொளுத்தும் நிலைமை இப்போது இருக்கிறது. பஸ்களைக்
கொளுத்துவது என்பது சாதாரணமான சம்பவமாகிவிட்டது. எங்கே, எப்படிப்
பட்ட அவசியத்தை, நிலைமையை உண்டாக்கலாம் என்று எண்ணிச் செயல்
படும் போக்கு இருக்கும்போது, நாமும் அந்த நிலைமைகளையெல்லாம்
உணர்ந்திருக்கிறோம். அதற்கு தக்க நடவடிக்கை எடுக்க இருக்கிறோம்
என்பது வரவேற்கத் தக்க ஒன்றுதான். கடந்த காலத்திலே அவர்கள் செய்
தார்கள், இவர்கள் செய்தார்கள் என்று எந்த அரசியல் கட்சி மீதும் நான்
குற்றம்சாட்ட விரும்பவில்லை. ஆனால் நாம் எல்லோரும் இதை உணர
வேண்டிய அவசியம் வந்துவிட்டது. அந்த உணர்வையே இந்தச் சட்டமுன்
வடிவு காட்டுகிறது. ஓரேயொரு கருத்தை இந்தச் சட்டத்தைச் செயல்
படுத்தும்போது அரசு பின்பற்ற வேண்டும். பல நேரங்களிலே இதுபோன்ற
சம்பவங்கள் எதனாலே ஏற்படுகின்றன என்பதை நாம் எண்ணிப் பார்க்க
வேண்டும். சென்னையிலே பலமுறை காவல் நிலையங்கள் சூறையாடப்பட்
டிருக்கின்றன. அப்படி சூறையாடப்பட்டபோது, அதுசம்பந்தமாக எடுக்கப்
பட்டிருக்கும் சட்டபூர்வமான நடவடிக்கை என்ன? அந்தக் குற்றங்களில்
ஈடுபட்டவர்கள் எப்படி தப்ப முடிகிறது? அப்படி தப்ப முடிகிறபோது,
காவல் துறையினரால் கைது செய்யப்பட்டவர்கள், ரிமான்ட்டுக்கு அழைத்துச்
செல்பவர்கள், இவர்கள் மீது எல்லாம் என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப்
பட்டிருக்கின்றன ஓரிடத்திலே இந்தக் குற்றம் நடந்து அதற்கு இன்ன இன்ன
தண்டனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், இன்னொரு
இடத்திலேயும் அந்தக் குற்றத்தைச் செய்யக்கூடாது என்ற அச்ச உணர்வு
வரும். ஆனால் இப்போது இருக்கும் நிலைமை என்ன? காவல் நிலையத்
தைத் தாக்கியதன் விளைவாக இன்னாருக்கு இதுபோன்ற கடுமையான

தண்டனை கிடைத்தது என்பன போன்ற எந்த விவரமும் இதுவரையிலே பத்திரிகையிலே வந்ததில்லை. அப்படி தண்டனை கிடைக்காததன் காரணமாக, இப்படியெல்லாம் செய்தாலும், எந்தவிதமான தண்டனையும் கிடைக்காது என்ற உணர்வும் தைரியமும்தான் அவர்களுக்கு வருகிறது. ஏதாவது ஒரு கோரிக்கையை வைத்து போராட்டம் நடத்தும்போது, அவர்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை என்று சொன்னால், இப்படித்தான் செய்ய வேண்டும் என்று பஸ்ஸைக் கொளுத்துகிறார்கள். போலீஸ்காரர் ஒரு கண்டக்டர் அல்லது டிரைவரை அடிக்கிறார் என்று சொன்னால், 4, 5, 6 மணி நேரம் ரோட்டில் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் பஸ்களை நிறுத்தி வைத்து, வேறு எந்த விதமான கார்களும், பஸ்களும் கூட போக முடியாத சூழ்நிலையை உருவாக்கி அதன்மூலம் நஷ்டத்தையும் ஏற்படுத்துகிறார்கள். இதனால் அரசுக்கும் பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. இதற்கு மூலகாரணமாக இருப்பவர்கள் காவல் துறையினர். பல நேரங்களிலே முறையாக நடவடிக்கை எடுப்பதில்லை. எனக்கும் அந்த அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. அது நடந்து ரொம்ப நாளாகிவிட்டதால், அதைச் சொல்வதில் தப்பு இல்லை என்று நான் நினைக்கிறேன். நான் கடலூரிலே இருந்து வரும்போது, என்னை போலீஸ் ஸ்டேஷனுக்கு கூப்பிட்டுப்போய் உட்கார வைத்தார்கள். அவர்களுக்கே என்ன செய்வது என்று தெரியவில்லை. அப்போது போலீஸ் ஸ்டேஷனிலே இருந்து கேட்கிறார், 'யாருமே இல்லை, காரிலே எம்.எல்.சி. மட்டும்தான் இருக்கிறார், அவரை அரஸ்ட் பண்ண வேண்டுமா வேண்டாமா' என்று constable கேட்கிறார். 'யாருமே இல்லையா, இரு இரு சொல்கிறேன்' என்று பதில் வருகிறது. பின்னர் 'இல்லையென்றால் அவரிடத்திலே பேசுகிறீர்களா?' என்று சொன்னபோது, 'அவரிடத்திலே வேண்டாம். அவருக்கு சோடா வாங்கிக் கொடுத்து உட்கார வையுங்கள்' என்று பதில் வருகிறது. என்னை 'அரஸ்ட்' பண்ணி ரிமான்ட்லே வையுங்கள் அல்லது வெளியே விடுங்கள் என்று சொன்னபோது, அதைக் கேட்டுக்கொண்டிருந்த பொதுமக்கள், 'சார், போலீஸ் ஸ்டேஷனிலே இவர்கள் இப்படியெல்லாம் கேட்டால், பதில் சொல்லமாட்டார்கள்' என்று சொல்லி அந்த மக்கள் வெளியே போய் ரோட்டிலே நிற்கும் நிலை வந்து, அதன் காரணமாக ஒரு அரை மணி நேரத்திற்குள்ளாக இந்தப் பக்கம் 100 பஸ், அந்தப் பக்கம் 100 பஸ் நிற்கும் நிலை வந்து, பின்னர் எனக்கே கூட பயம் வந்துவிட்டது. இதற்கு மேலே ஏதேனும் விபரீதமாக

(முற்பகல் 11-00)

நடந்துவிட்டால் இதற்கு இராமமூர்த்திதான் காரணம் என்று வந்துவிடுமே என்ற அச்ச உணர்வு எனக்கு வந்துவிட்டது. எனவே எப்படியாவது பிரச்சினை தீர்ந்தால்போதும் என்று நான் செயல்பட வேண்டி ஏற்பட்டது.



அதற்குப் பிறகு அரசாங்கத்திற்கு அங்கேயுள்ளவர்கள் என்ன தகவல் கொடுக்கிறார்கள், அரசாங்கம் யாரை நம்புகிறது, எந்தத் தகவலை நம்புகிறது என்ற விவரத்திற்குள் நான் போக விரும்பவில்லை. இப்படி சம்பவங்கள் எந்த அளவுக்கு ஆங்காங்கே வெடிக்கின்றன என்பதற்காக நான் இதைக் குறிப்பிடுகிறேன். அப்படித்தான் அன்றையதினம் பிரசிடென்சி கல்லூரியில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த வழியாகத்தான் நான் தினமும் வீட்டிற்குப் போகிறேன். ஒரு நாள் கல்லூரியில் தேர்தலையொட்டி ஒரு சம்பவம் நடைபெற்றுவிட்டது. ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டார்கள். ஆனால் அதற்கு அடுத்த நாள் நான் அந்த வழியாக வரும்போது பார்த்தால், அநேகமாக அவ்வளவு கண்ணாடிகளுமே நொறுக்கப்பட்டிருந்தன. நான் படித்த கல்லூரிதான். அந்த அளவுக்கு எல்லாப் பிரிவினரிடமும் ஒரு உணர்வு, ஒரு தைரியம் வந்திருக்கிறது. தாங்கள் தைரியமாகச் செயல்பட முடியும் என்ற உணர்வு அவர்களுக்கு வந்திருக்கிறது. காரணம் காவல் துறை அதிகாரிகள் முறையாகச் செயல்படவில்லை அல்லது துணிந்து செயல்படவில்லை அல்லது தைரியமாகச் செயல்படவில்லை. அதுமட்டுமல்ல, இத்தகைய சம்பவங்களுக்குப் பின்னணியிலே இருப்பவர்கள் மீதும், தவறு செய்தவர்கள் மீதும் சரியான நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை, அவர்களெல்லாம் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள் என்ற நிலை ஏற்படுவதில்லை. இதன் காரணமாக நாட்டு மக்களிடையே தைரியம் ஏற்படுகிறது. எனவே இதை அரசு பரிசீலிக்க வேண்டும் என்ற கட்டாயம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்ற காரணத்தால், நான் இதை வரவேற்கிறேன். சில பிரிவுகளைப் பொறுத்தவரையில், தண்டனை மிக அதிகமான அளவுக்குக் கடுமையாக இருக்கிறது என்பதைக் குறித்து நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். எனவே அப்போது அதைப் பற்றிப் பேசிக்கொள்கிறேன் என்று சொல்லிக்கொண்டு, பொதுவாக இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கத்தையும், உணர்வையும் நான் மதிக்கிறேன், வரவேற்கிறேன் என்று சொல்லி, என்னுடைய கட்சியின் சார்பில் வரவேற்று அமைகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன் கொண்டு வரப்பட்டிருக்கும் 1982 ஆம் ஆண்டு பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்ட முன்வடிவின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என் கருத்துக்களை எடுத்து வைக்க விழைகிறேன்.

பொதுச் சொத்துக்கள் என்பவை நாட்டினுடைய சொத்துக்கள், இந்த நாட்டுப் பொதுமக்களின் சொத்துக்கள் என்ற நினைவில் அவை அனைத்தும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவை, அவைகள் அழிக்கப்படுவது தவிர்க்கப் பட வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமிருக்க முடியாது: அத்தகைய உணர்வோடு பொதுச் சொத்துக்களை அழிக்கும் செயல்களைத் தடுக்க இந்த நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளும் எல்லா நல்ல மனிதர்களும் பணியாற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் அத்தகைய நிலையை இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக நாம் உருவாக்க முடியுமா என்ற வினாவை மட்டும் நான் எழுப்ப விரும்புகிறேன்.

நாகர்கோயிலில் டாக்டர் சிவராமன் என்ற ஒருவர் இருக்கிறார். அவர் லண்டனில் எப்.ஆர்.சி.எஸ். படித்துப் பட்டம் பெற்றவர். 25 ஆண்டுகளுக்கு முன்னால் லண்டனில் தங்கி எப்.ஆர்.சி.எஸ். படித்துக் கொண்டிருந்தார். மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு அவரை நன்றாகத் தெரியும். அவர் அங்கே நடைபெற்ற சம்பவத்தை ஒருமுறை குறிப்பிட்டார்: அவர் லண்டனில் தங்கியிருந்த இடத்திற்கு அருகே ஒரு மோட்டார் வாகனப் போக்குவரத்து நிறுவனம் இருந்தது. அந்த நிறுவனத்தில் ஸ்டிரைக் நடந்து கொண்டிருந்ததாம். சுமார் 2½ மாதம் தொடர்ந்து வேலை நிறுத்தம் நடந்ததாம். ஆனால் தினந்தோறும் காலையில் இவர் அறையிலிருந்து அந்தத் தொழிற்சாலையைப் பார்க்கும்போது, அங்கே உள்ள தொழிலாளர்கள் சுமார் 150, 200 பஸ்களுக்கு மேல் உள்ள அந்த நிறுவனத்தின் தொழிலாளர்கள் அதிலும் குறிப்பாக டிரைவர்கள் தினமும் காலையில் நிறுவனத்திற்குள் வந்து அங்கேயிருக்கிற பஸ்களையெல்லாம் சுத்தமாகத் துடைத்து ஸ்டார்ட் செய்து, என்ஜின்களை ரேஸ் செய்து, ஒழுங்காக இருக்கிறதா என்று பார்த்து விட்டு, அதற்குப் பிறகே அவர்கள் அந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தார்களாம். அதாவது காலை 9 மணிக்கு வேலை நிறுத்தம் தொடங்க வேண்டுமென்றால், காலை 8½ மணிக்கெல்லாம் இந்த வேலையைப் பார்த்து ஒழுங்காக இருக்கிறது என்று தெரிந்த பிறகுதான், வேலை நிறுத்தத்தில் போய் கலந்து கொண்டார்களாம். நான்கு, ஐந்து நாட்கள் இதைத் தொடர்ந்து பார்த்த இவருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. என்னடா வேலை நிறுத்தம் என்றால். அடிப்பார்கள், உடைப்பார்கள் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறோம். இந்தத் தொழிலாளர்கள் என்னடா என்றால், இப்படி நடந்துகொள்கிறார்களே என்று அதிசயப்பட்டு, அவர்களைப் பார்த்து, "என் இப்படி நடந்து கொள்கிறீர்கள்? என்று கேட்டாராம். எங்களுடைய பிரச்சினை சம்பள உயர்வைப் பற்றியது. போனஸ் வழங்குவதைப்பற்றியது. இந்த பஸ்களை வைத்துதான்



பெற வேண்டியது இது. பஸ்களையே ஒழித்துவிட்டால், அதற்குப் பிறகு எதை வைத்துக்கொண்டு நாங்கள் வாழ்வது? இந்தக் கம்பெனியின் சொத்தே பஸ்கள்தாம். எனவே பஸ்களைச் சரியாக வைத்துக் கொண்டால்தான், எங்கள் வாழ்வே இருக்க முடியும். எனவேதான் காலையில் வந்து பஸ்களையெல்லாம் 'ஸ்டார்ட்' செய்து பார்த்துவிட்டு, பிறகு வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறோம். காலையில் தினமும் என்ஜினை 'ஸ்டார்ட்' செய்யவில்லை என்றால் 'பேட்டரி' வீக்காகப் போய்விடும். எனவே கம்பெனிக்கு நட்டம் வராதபடி நாங்கள் பார்த்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். கம்பெனியின் சொத்துக்களை ஒழிக்கக்கூடாது. "கம்பெனிக்கு நாங்கள் இப்போது வருவாய் தேடித் தரவில்லையே தவிர, கம்பெனிகளின் சொத்துக்கு நாங்கள் எந்த வகையிலும் சேதத்தை உருவாக்க விரும்பவில்லை" என்று சொன்னார்களாம். அந்த அளவுக்கு அங்கே இருக்கிற மக்களுடைய உணர்வு வளர்ந்திருக்கிறது. அதைப் பார்த்த அந்த டாக்டர் அவர்களைப் பாராட்டிவிட்டு வந்திருக்கிறார்.

இப்படி பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு இந்த நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் வர வேண்டும். அதற்கு மக்களிடத்தில் நல்ல மன நிலைதான் தேவையே தவிர, இப்படிப்பட்ட சட்டங்கள் அல்ல என்பதை நாம் முதலில் உணர வேண்டும். இந்திய நாட்டின் விடுதலைக்குப் பிறகு, இன்னும் சொல்லப்போனால் 1942 ஆம் ஆண்டுக்குப் பிறகு 1982 ஆம் ஆண்டு வரை அத்தகைய உணர்வு நாட்டு மக்களிடத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறதா என்பதுதான் முக்கியமான கேள்வி. இதற்கு எல்லா அரசியல் கட்சிகளும், எல்லா சமுதாய அமைப்புகளும், நாட்டில் இருக்கிற ஒவ்வொரு அறிவு படைத்தவரும், தங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் இத்தகைய உணர்வை இந்த நாட்டு மக்களுக்கு உணர்த்தி அவர்களை நல்ல நிலைக்குக் கொண்டுவர நாம் தவறிவிட்டோம். அப்படித் தவறி விட்டோம் என்பதை ஒப்புக்கொள்ளும் வகையில்தான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இதே கருத்தினைத்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. நல்லசிவன் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஆர்கனைஸ்டு லேபர் போராட்டத்தில் ஈடுபடும்போது, இத்தகைய வன்முறைகளில் ஈடுபடுவதில்லை. வன்முறைச் செயல்கள் ஏற்பட்டு, பொதுச் சொத்துக்களுக்கு எங்காவது சேதம் அல்லது நாசம் ஏற்படுத்தப்படுகிறது என்றால், அதற்கு வேறு பல காரணங்கள் உண்டு என்றும், பொதுவாக சமூக காரணங்களால், உணர்ச்சி

வயப்படுகிற சம்பவங்களின் காரணமாக ஏற்படும் போராட்டங்களில்தான் இத்தகைய வன்முறை நிகழ்ச்சிகள் அதிகமாக ஏற்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். அது உண்மை. உணர்ச்சி வசப்படக்கூடிய சம்பவங்கள் ஏற்படாமல் சமூகத்தில் பார்த்துக்கொள்ள வேண்டியது நம்முடைய பொறுப்பாகும். இதில் ஒவ்வொருவருக்கும் பங்கிருக்கிறது. அரசுக்குப் பெரும் பகுதி பங்கிருக்கிறது. அரசுக்கு என்று நான் சொல்லும்போது, வெறும் ஆளும் கட்சியை மட்டும் மனதில் கொண்டு சொல்லவில்லை. சமுதாயத்தில் இருக்கிற அனைத்துக் கட்சிகளும் அமைப்புகளும் இதில் பெரும் பங்கு வகிக்க வேண்டியிருக்கின்றன.

1942 ஆம் ஆண்டு இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது ஏற்பட்ட அழிவுகள் கொஞ்ச நஞ்சமல்ல. அவை அனைத்திற்கும் நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று அன்றையதினம் பண்டித நேரு அவர்கள் சொன்னார். இந்தியா விடுதலை பெற்ற பிறகு, பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் இயங்கிய திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு போராட்டத்தில் ஈடுபட்டது. அது போராட்டத்தைத் தூண்டவில்லை. தமிழகத்தில் உள்ள மக்களே கொதித்தெழுந்து ஈடுபட்டார்கள். அப்போது திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்து வைத்த மொழிக் கொள்கையை நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டு இந்தித் திணிப்புக்கு எதிராகப் போராடினார்கள். அதன் விளைவாக நாடே கொந்தளித்தது. பல்வேறு விதமான வன்முறைச் செயல்கள் நடைபெற்றன. அப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகத் தெளிவாக ஒன்றைக் குறிப்பிட்டார். ஏற்பட்டுவிட்ட விளைவுகளுக்கு நானே பொறுப்பேற்கிறேன். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் இத்தகைய வன்முறைகளை ஆதரிக்கவில்லை. இத்தகைய வன்முறைகளில் ஈடுபடுவோர், சொத்துக்களுக்கு நாசத்தை உண்டாக்குவோர் என்னைப் பின்பற்றுவோர் அல்ல. என்னுடைய தம்பிகள் அப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட மாட்டார்கள். எனவே இந்தச் செயலை யார் செய்தாலும், நான் அதை வன்மையாகக் கண்டிக்கிறேன் என்று மிகத் தெளிவாக அறிக்கைவிட்டார். இப்படி உணர்ச்சி வயப்பட்ட சிலர் பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கிறார்கள்.

அதைப் போலவே எல்லோருக்கும் தெரிந்த சம்பவம் ஒன்று: திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து 1972 ஆம் ஆண்டில் ஒரு பிளவு ஏற்பட்டபோது, பலர் உணர்ச்சி வயப்பட்டார்கள். அவர்களை யாரும் தூண்டவில்லை. யாராவது அவர்களைத் தூண்டிவிட்டார்கள் என்று சொன்னால், அது தவறாகும். அப்படி சில பிரச்சினைகளில் மக்கள் உணர்ச்சி வசப்படுகிறபோது, என்ன நடக்கிறது என்று யாருக்கும் தெரிவதில்லை. அப்படிப்பட்ட உணர்ச்சி



வசப்படும் சம்பவங்கள் நடைபெறாமல்தான் நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அப்படியும் மீறி சில சம்பவங்கள் நடைபெற்றுவிட்டால், அவற்றைத் தணிக்க எல்லாத் துறையைச் சார்ந்தவர்களும் அதில் முனைப்போடு ஈடுபட வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

இந்த ஒரு சட்டத்தால் இதைத் தடுத்து நிறுத்திவிட முடியும் என்று யாராவது நினைத்தால், அது ஏமாந்துவிடும் செயலாகும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லுவது என்னுடைய கடமையென்று கருதுகிறேன்.

இதிலே இன்னுமொரு சிக்கல் இருக்கிறது. கிளர்ச்சிகளிலேதான் பொதுச் சொத்துக்கு நாசம் ஏற்படுகிறது. இதை ஆங்கிலத்திலே "மிஸ்கிரியண்ட்ஸ்" என்று சொல்லியிருக்கிறார்கள், தமிழிலே கலகக்காரர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். தவறு செய்கிறவர்கள் அல்லது தீமை செய்கிறவர்கள் திடீரென்று நாசத்தை விளைவித்து விடுகிறார்கள் என்பதுதான் சரியான பொருளாக இருக்கும், கலகக்காரர்கள் என்பது சரியல்ல. கலகக்காரர்கள் என்று சொல்லுகிறபோது, இராணுவப் புரட்சி ஏற்பட்டு 'கூப்' நடைபெறுவதைப் போன்று திட்டமிட்டுச் செய்பவர்களைத்தான் கலகக்காரர்கள் என்று சொல்லலாம். அந்தச் சொல்லை இந்த இடத்திலே கொண்டு போய் வைத்து அச்சொல்லிற்கு இருக்கும் கடுமையான பொருளை எளிதாக்கிவிடக்கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள். இது அப்படியல்ல. சிலர் உணர்ச்சி வயப்பட்டு சில நாசத்தை விளைவித்து விடுகிறார்கள். அதைத் தவிர்க்க கொஞ்சம் பேரை சந்தேகப்பட்டு பிடிக்கிறார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் கூடியிருக்கக்கூடிய பெருங் கூட்டத்திலே, மக்கள் மத்தியிலே இருக்கின்ற உணர்ச்சியைப் பயன்படுத்திக்கொண்டு, சில சமூக விரோதிகள் தப்பைச் செய்துவிடலாம் என்று நினைக்கிறார்கள். பல கிளர்ச்சிகளில் அப்படித்தான் நடக்கின்றன.

இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே வந்து பார்த்தார்கள். இப்போது அங்கே அமைதியாக இருக்கிறது. அவர் எடுத்த அந்த முயற்சிக்காக, பாராட்டுகிறேன். அதே நேரத்தில் அந்தப் பகுதியிலுள்ள எல்லாத் தரப்பினரும் ஒத்துழைத்து அந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அங்கே நடந்த சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்கள் ஈடுபட்டதைவிட சமூகவிரோதிகளின் ஈடுபாடுகள் அதிகம். ஒரு கலவரம் நடக்கிறதென்றால், அதிலே நாசப்படுத்தி தனக்கு விரோதமாக உள்ளவர்களின் கடைகளை தாக்குவதும், அதிலே உள்ள பொருள்களைத் தூக்கிக்கொண்டு வீட்டிற்கு வருவதும் போன்ற செயல்களை சமூக விரோதி

கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அத்தகைய சமூக விரோதிகளை அந்தக் கூட்டத்திலேயிருந்து பிரித்து அவர்களுக்குத் தண்டனை அளிக்க முயற்சி செய்வதாக இருந்தால், எப்படி அவர்களைப் பெருங் கூட்டத்திலிருந்து கண்டு பிடித்து தனிமைப்படுத்த முடியும்? குற்றவாளிகளுக்கு ஐந்தாண்டுகள் சிறைத் தண்டனை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்களைக் கண்டுபிடித்து நீதிமன்றத்திலே நிறுத்தினால்தானே, நீதிமன்றம் தண்டனை கொடுக்க முடியும்? சந்தேகத்தின் சார்பு குற்றவாளிகளுக்குச் சார்பாக இருக்கிறது. பல்லாயிரம் பேருக்கு மத்தியிலே ஒருவரை மட்டும் பிடித்து அவர் மீது கேஸ் போடுவதென்றால் எப்படி? இத்தகைய சம்பவங்கள் நடை பெறும்போது, சமூக விரோத சக்திகளைத் தனிமைப்படுத்தும் முயற்சி அரசாங்கத்திடம் இருக்கிறது. அது அரசாங்க இயந்திரத்தின் பொறுப்பு, காவல் துறையின் பொறுப்பு. ஆனால் அவர்கள் அப்படிச் செய்யத் தவறி விடுகிறார்கள். சமூக விரோதிகள் நுழைந்துவிடுகிறார்கள், அவர்களுடைய கை ஓங்கிவிடுகிறது. அவர்களுக்கும் காவல் துறையினருக்கும் கூட தொடர்பு இருக்குமோ என்ற ஐயப்பாடு ஏற்படுகிற அளவிற்கு சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இந்தச் சட்ட முன்வடிவால் எந்தவித பலனும் ஏற்படப் போவதில்லை. ஒருவேளை சில நேரங்களில் அரசியல் காழ்ப் புணர்ச்சியோடு பயன்படுத்த சிலர் கையில் அதிகாரங்கள் கொடுக்கப்படு கின்றனவா என்ற ஐயப்பாடு இருப்பதால், இப்படிப்பட்ட ஒரு சட்ட முன்வடிவு நமக்குத் தேவைதானா என்பதைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இத்தகைய சமூக விரோதிகளைக் கட்டுப்படுத்த, தனிமைப்படுத்த, அவர் களுக்கு தண்டனை வழங்க பல கடுமையான சட்டங்கள் ஏற்கெனவே இருக் கின்றன. அதையே பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றபோது, இப் போது இதையும் கொண்டுவருவது எப்படி இருக்கிறதென்றால், ஏற்கெனவே கையில் பிஸ்டல், துப்பாக்கி வைத்துக்கொண்டு, அதைப் பயன்படுத்தாமல் இப்போது மேலும் மிஷின் கன்னை வாங்கி வைத்துக்கொள்வதைப் போல இருக்கிறது. ஆகவே ஏற்கெனவே உள்ளதைக் கொண்டு கட்டுப்படுத்தத் தெரியவில்லை என்று சொல்லும்போது, மேலும் மிஷின் கன்னை வாங்கிக் கொள்வது என்பது ஒருவேளை மேலும் ஒன்று இருக்கிறது என்று இருக்க லாமே தவிர, வேறு ஒன்றுமல்ல. ஒருவேளை இதைப் பயன்படுத்தும்போது இதனுடைய விளைவுகள் மிகவும் மோசமாக இருக்காதா என்பதைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இந்தச் சட்ட முன்வடிவை சட்டமன்றப் பேரவையிலே ஏற்கெனவே நிறை வேற்றி விட்டோம், ஆகவே இங்கேயும் நிறைவேற்றுவதுதான் மரபு என்று நினைக்காமல், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதிலிருந்தே இங்கே ஒரு அசாதாரணமான நிலை இருக்கிறதோ என்று மற்றவர்கள் எண்ணக் கூடும். இப்படிப்பட்டதொரு சட்டம் காங்கிரஸ் ஆட்சி செய்யும் கொள்ளைக் கூட்டத்தார் இருக்கும் மாநிலங் களில் கூட இல்லையென்று கருதுகிறேன். நான் அறிந்த வரையிலே, அப்படி யில்லை என்று கருதுகிறேன். ஆகவே இந்தச் சட்டங்கள் தேவையில்லை, இதை வைத்துக்கொண்டு அடக்கவும் முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதை நிறைவேற்றுவதன் மூலம், ஒரு பெரிய சூழ்நிலை இருப்ப தாக பிறருக்கு அறிவிக்கிற அவல நிலை இருக்கிறது என்பதை உணர்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், 'நான்-பெய்லபிள் அஃபென்ஸ்' என்று போட் டிருக்கிறார்கள். எப்போதுமே ஒரு கலவரம் நடக்கும்போது, சமூக விரோதி கள், தீமை விளைவிப்பவர்கள் ரொம்பவும் ஜாக்கிரதையாக இருப்பார்கள். போலீஸ் வந்தவுடனே அவர்கள் ஓடி விடுவார்கள். அகப்பட்டுக்கொள்பவர்கள் அப்பாவிகள்தான். அப்படிப்பட்டவர்களைப் பிடித்துக்கொண்டு போய் 'நான்-பெய்லபிள் அஃபென்ஸ்' என்று சொல்லி, ஐந்து வருஷத்திற்கு சிறைக் குள் தள்ளுவது என்ற தண்டனையைப் பயன்படுத்த வேண்டுமா என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே இந்தச் சட்டம் தேவையற்றது. இதன் மூலம் நாம் எதிர்பார்க்கும் பலன் கிடைக்கப் போவதில்லை. இந்தச் சட்டத்தை சட்டங்களின் வரிசையில் தொகுத்து வைத்துக்கொள்வதன் மூலமாக ஒரு அசாதாரண நிலைமை இருப்பதாக பிறர் எண்ண வாய்ப்பு இருக்கிறது என்ப தாலும், அப்படியே நிறைவேற்றப்பட்டாலும் ஏதாவது ஒரு சூழ்நிலையில் காழ்ப்புணர்ச்சியோடு செயல்படக் கூடிய அளவிற்கு இந்த அதிகாரங்கள் வழிவகை செய்யும் என்பதாலும், அதனால் சமுதாயத்தில் கேடு விளையும், நன்மை பயக்காது என்பதாலும், இதை வன்மையாக எதிர்த்து அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகிய வற்றைத் தடுத்தல்) சட்ட முன்வடிவை மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரித் தும், ஆலோசனைகள் நல்கியும், அதற்கு மாறான கருத்தைச் சொல்லியும் தங்களது கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள், இந்தச் சட்டம் பொது மக்களுக்கு எதிராக நடைமுறைப்படுத்தப்பட்டுவிடுமோ என்ற தனது அச்சத்தை அவர்கள் பேசுகின்றபோது தெரிவித்தார்கள். அடக்குமுறைச் சட்டமாகக் கூட இது நடைமுறைப்படுத்தப்பட்டுவிடும், தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், சாதாரண மக்களுக்கும் இது பாதிப்பாக அமைந்துவிடும் என்ற அச்சத்தையும் சொன்னார்கள். நான் அரசின் சார்பிலே இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, போராட்டங்கள் நடத்தக் கூடாது என்ற நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட சட்டம் அல்ல இது, இந்த அரசைப் பொறுத்த வரைக்கும், போராட்டங்கள்—தார்மீகப் போராட்டங்கள், உரிமைப் போராட்டம் கண்டிப்பாக நடத்தலாம். ஆனால் மாணவர்களாக என்பதிலே கொள்கை வழியில் இந்த அரசுக்கும் நம்பிக்கை உண்டு. ஏழைகள், இன்னல்களில் உள்ள மக்கள் என்னென்ன உரிமைகளைப் பெற வேண்டுமோ அந்த உரிமைகளுக்காக, விதிகளுக்குட்பட்டு, தார்மீக முறையில், உரிமைப் போராட்டம் கண்டிப்பாக நடத்தலாம். ஆனால் மாணவர்களாக இருந்தாலும் சரி, தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, விவசாயிகளாக இருந்தாலும் சரி, அத்தகைய தார்மீகப் போராட்டத்திலே அவர்கள் ஈடுபடுகிறபோது அவர்களையும் மீறி, அவர்களையும் அறியாமல் அவர்களுடைய நல்ல நோக்கத்தோடு கூடிய தார்மீகப் போராட்டத்திற்குக் களங்கம் ஏற்படுத்தக் கூடிய அளவிற்கு விஷமிகள்—மிஸ்கிரியண்ட்ஸ் இதிலே ஈடுபட்டு பொதுச் சொத்துக்கு சேதம் ஏற்படுத்த முயலுகிறபோது, பிரச்சினை திசை திருப்பப்பட்டுவிடுகிறது. தொழிலாளர்கள் போராட்டத்திலே ஈடுபடுகிறபோது, வன்முறை நோக்கோடு ஈடுபடுகிறார்கள் என்று இந்த அரசு ஒருபோதும் சொல்லியது, எண்ணியது இல்லை. போராட்டத்தைப் பயன்படுத்தி சில சந்தர்ப்பவாதிகள், சுயநலமிகள் ஆதாயம் தேடுவதற்காக, போராட்டத்தின் நல்ல நோக்கத்திற்குக் களங்கம் ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு தீய வன்செயல்களில் ஈடுபடும்போது, போராட்டத்தின் புனிதத் தன்மை கெட்டுவிடக்கூடிய சூழ்நிலை உருவாகிறது. அதைத் தடுக்க வேண்டியதுபற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கிலாந்தில் நடந்ததை உதாரணமாகச் சுட்டிக்காட்டினார்கள். தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, விவசாயிகளாக இருந்தாலும் சரி, மாணவர்களாக இருந்தாலும் சரி, அரசுக்குச் சொந்தமான பொதுச் சொத்தையும், தனியாருக்குச் சொந்தமான சொத்தையும் பேணிக் காத்து போராட்டத்திலே ஈடுபட்டு தங்களது கோரிக்கைகளிலும் வெற்றி அடைய வேண்டுமென்ற நோக்கோடு அனைவரும் ஈடுபட வேண்டுமென்றும், அப்படி ஈடுபடக்கூடிய அளவிற்கு பிரச்சாரத்தின் மூலமாகச் செய்ய வேண்டும் என்றும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தை அரசு ஏற்கிறது.



ஆனாலும் கூட அதிகப்படியாக மக்கள் தொகையுள்ள நம்முடைய நாட்டில், சுயநலமிகள் ஆங்காங்கு தலையிட்டு போராட்டத்தின் புனிதத் தன்மையைக் கெடுக்கக் கூடிய அளவிற்கு, சேதம் விளைவிக்கிற அளவிற்கு, போராட்டத்தில் ஈடுபடுகிறவர்களுக்குக் களங்கத்தை ஏற்படுத்துகிற அளவிற்கு ஈடுபடுவதால், அத்தகைய மிஸ்கிரியண்டுகளுக்கு எதிராக இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறதே ஒழிய, கண்டிப்பாக தொழிலாளர்களுக்கு எதிராக அல்ல, விவசாயிகளுக்கு எதிராக அல்ல, மாணவர்களுக்கு எதிராக அல்ல, ஆசிரியர்களுக்கு, எதிராக அல்ல என்பதை நான் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொல்கின்றபோது இன்னும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். பொருளாதாரப் பிரச்சினைகள், மேலோங்கி இருக்கின்ற நமது பகுதியில் அவ்வப்போது போராட்டங்கள் ஏற்படுவது இயற்கைதான் என்று சொன்னார்கள். அதை நான் மறுக்கவில்லை. போராட்டங்களை, அதுவும் வறுமைப் பிணி என்ற ஒரு பிணி ஏற்பட்டுவிடுமேயானால், போராட்டத்தை யாருமே கண்டிப்பாகத் தூண்டிவிடவேண்டுமென்ற அவசியமில்லை. பசிக் கொடுமை வந்துவிட்டால், பசி நோயினால் வாடுகின்றவர்கள் கண்டிப்பாக முன்வந்து எத்தகைய புரட்சியிலும் போராட்டத்திலும் ஈடுபட்டுவிடுவார்கள். அதையும் நான் மறுக்கவில்லை. ஆனாலும் தார்மீகப் போராட்டங்கள் என்று நடைபெறுகின்ற போதெல்லாம்கூட, வெளியிலே இருந்து போராட்டத்திற்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லாதவர்கள், போராட்டக் கோரிக்கைகளுக்கும் சம்பந்தம், தொடர்பு இல்லாதவர்கள் கூட இது போன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு பொதுச் சொத்துக்குச் சேதம் ஏற்படுத்துகின்றபோது, அந்தப் போராட்டமே முறையானதா, சரியானதா என்று கேட்கின்ற அளவுக்கு நிலைமைகள் ஏற்பட்டுவிடுகின்ற காரணத்தினாலேயே, கேரள மாநிலத்தில்கூட, இந்த நிலைமை ஏற்பட்டு, அங்கே 1978 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் தேதியில் ஒரு அவசரச் சட்டமாகவே இதைக் கொண்டு வந்தார்கள். இதுபோன்று போராட்டங்கள் ஏற்படுகின்றபோது, தொழிலாளர்கள், உழைக்கும் வர்க்கம் நேர்மையான முறையிலே தார்மீகமாக கோரிக்கை வைத்து போராட்டம் செய்கின்றபோது, அதிலே வன்முறையாளர்கள் ஈடுபட்டு, வன்முறைகள் செய்து, இந்தப் போராட்டம் செய்பவர்கள் வன்முறையில் ஈடுபடுகின்றார்கள் என்ற ஒரு உணர்வை உருவாக்கி விடுகின்றார்கள். இந்த உணர்வை வெளியிலே இருப்பவர்கள் தூண்டிவிடுகிறார்கள். சுயநலம் காரணமாக ஈடுபடுகின்ற சுயநலமிகள் பொதுச் சொத்துக்களுக்குச் சேதத்தை

ஏற்படுத்தி விட்டு உழைக்கும் வர்க்கத்தினர் போராட்டத்தில் ஈடுபடும்போது, இந்தமாதிரி களங்கத்தை ஏற்படுத்திவிடுகின்றார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் 1978 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் தேதி கேரள மாநிலத்திலே, இதுமாதிரி ஒரு சட்டத்தை அவசரச் சட்டமாகவே கொண்டு வந்திருக்கிறார்கள். அதே போன்று குறைந்த பட்ச தண்டனை 6 மாதம் இருக்க வேண்டும் என்று கொண்டு வந்திருக்கிறோம். அங்கே வந்ததைப் பார்த்துத்தான், அந்த அடிப்படையிலே தான் தற்போது இந்தச் சட்ட முன் வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதனைச் சுட்டிக்காட்டக் காரணம், உழைக்கும் வர்க்கத்தின் போராட்டத்தைப் பேணுவதற்குப் பதிலாக, அவர்களுக்கு எதிராக அடக்குமுறைகளை ஏவிவிட்டு, அவர்களுடைய உரிமைகளை நசுக்குவது என்பது கூடாது என்ற உணர்வுகளை மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்களும், திரு. மாணிக்கம் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அதற்காக நான் சொல்கிறேன். இந்த அரசு உழைக்கும் வர்க்கத்தின் தார்மீகப் போராட்டங்களை ஆதரிக்கும், வேண்டிய ஆதரவை என்றுமே வழங்கும். அரசு அப்படிச் செயல்படும் என்பதற்காகத்தான் நான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் பேசுகின்றபோது, மேலும் ஒன்றைச் சொன்னார்கள். உண்மைக் குற்றவாளிகள் தப்பித்துவிடுகின்றார்கள் என்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும் சொன்னார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் பேசுகின்ற போது, சுட்டிக்காட்டினார்கள். இது போன்ற போராட்டம் நடைபெறுகின்ற போது, அதிகப்படியான எண்ணிக்கையில் மக்கள் கலந்துகொள்கின்றபோது, வன்முறையாளர்கள் அதிலே தலையிட்டு, தவறுகளைச் செய்துவிட்டுத் தப்பித்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுவிடுகிறது. 'இன்னோசென்ட் பீபிள்', அப்பாவி மக்கள் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டுவிடுவார்கள் என்றும் சொன்னார்கள். அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கவில்லை, நடக்காது என்று கூட நான் சொல்லவில்லை. ஆனால் அத்தகைய நிகழ்ச்சிகள் நடக்கக்கூடாது என்பதில் இந்த அரசும் அக்கறையோடு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, அதை மனதில் வைத்துக்கொண்டுதான் சொன்னார்கள். 'When there is clinching evidence, photographic evidence' இதுபோன்ற பிரச்சினைகளில், நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதில் யார் ஈடுபடுகிறார்கள் என்பதற்கு 'போட்டோகிராபிக் எவிடேன்ஸ்' முதற்கொண்டு எடுத்திருக்கின்ற போது



தான், நாம் அதிலே ஈடுபட வேண்டுமென்று சொன்னார்கள். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றபோது, உண்மையாகவே வன்முறையில் ஈடுபட்டவர்கள் என்பதற்கு ஆதாரம் இல்லாமல் இது நடைமுறைப்படுத்தப்படாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதை அனுமதிக்காது என்பதை அரசின் சார்பிலே சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் செல்வி லீலாவதி அவர்கள் பேசுகின்றபோது, மாணவர்கள் சிலர் அவர்கள் கண்ணில் பார்க்கின்ற அளவுக்கு, அவர்கள் ஐந்து நிமிடங்களில் பேருந்தினுடைய சீட்டிலே தீயை வைத்து, அந்தப் பேருந்து எரிந்திருக்கிறது. அவர்கள் அதை விளையாட்டுத்தனமாகவே செய்திருக்கிறார்கள், அந்தச் செயலில் ஈடுபட்டு பொருட்சேதத்தினை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று சுட்டிக் காட்டினார்கள். இந்த குறிப்பிட்ட சட்ட முன்வடிவு வருவதற்கு முன் ஏற்கெனவே சட்டங்கள் இருக்கின்றன. இல்லை என்று நான் சொல்லவில்லை. இந்திய பீனல் கோடைப் பொறுத்தவரை, ஏற்கெனவே பிரிவு 427 முதல் 440 வரையில் இதுபோன்ற குற்றங்களைத் தடுக்க சட்டங்கள் இருக்கின்றன. ஆனாலும்கூட அந்தச் சட்டங்கள் எந்த அளவுக்கு நீதிமன்றத்தில் தவறு செய்கின்றவர்களுக்கு தண்டனை பெற்றுத் தருகின்றன என்பதைக் கூட நாம் கண்டிப்பாக அறிவோம் என்று நம்புகிறேன். அந்தச் சட்டத்தில் மினிமம் பனிஷ்மெண்ட் என்ன என்பதுபற்றி குறிப்பிடப்படாமல் இருக்கிறது. "with punishment or fine" என்று இருக்கின்றது. அந்தக் காரணத்தினால் கிட்டத்தட்ட ரூபாய் 10 அல்லது ரூபாய் 15 என்று, ஃபைன் போட்டுவிடுகின்றார்கள். பல கட்டங்களில் அவர்கள் விடுவிக்கப்படுகின்றார்கள். இந்த நிலைமைகள் இருக்கின்ற காரணத்தினால், இதுபோன்ற தவறுகளைச் செய்துவிட்டாலும், ஃபைன் தானே, ரூபாய் 10, ரூபாய் 15 தானே என்று சொல்லி, கட்டிவிட்டு வந்துவிடலாம் என்ற நம்பிக்கையோடு தொடர்ந்து இதுபோன்ற பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கின்ற செயலில் ஈடுபடுகின்றார்கள் என்று சொல்கின்றார்கள். அந்தத் தகவல்கூட அரசுக்கு வந்திருக்கிறது. அது போக்குவரத்துத் துறையாக இருந்தாலும் சரி, பேருந்துகளாக இருந்தாலும் சரி, விவசாயிகள் போராட்டத்தில் பாலம் போன்று உள்ள பொதுச் சொத்துக்களெல்லாம் விஷமிகளால் தகர்க்கப்படுகின்றன. பல நேரங்களிலே விவசாயிகள்கூட அதிலே தொடர்பே இல்லாமல் இருந்தும் கூட, விஷமிகள் இதுபோன்ற காரியங்களில் ஈடுபடுகின்றார்கள். அதற்காகத்தான் இந்த அரசு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் உட்பட பேசுகிறபோது, காவல்

துறையினர் இந்தச் சட்டத்தை தவறாக, பாரபட்சமாகப் பயன்படுத்திவிடக் கூடாது என்று சொன்னார்கள். கண்டிப்பாக அரசு அதில் கண்ணுங்கருத்து மாக இருக்கும் என்ற உறுதியினைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசுகிற போது 'Do it impartially without considering political affiliations' என்று சொன்னார்கள். அதைக் கண்டிப்பாக இந்த அரசு மனதில் கொண்டு செயல்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசுகின்றபோது, இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து அதேநேரத்தில் காவல் துறையைச் சார்ந்தவர்கள் மிகக் கவனமாக நடக்க வேண்டுமென்று ஒரு கருத்தினைச் சொல்லியிருக்கிறார்கள், இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற நேரத்தில், காவல் துறையினர் மிக எச்சரிக்கையாக குற்றவாளிகளைப் பிடிக்கின்ற பணியிலேதான் ஈடுபடவேண்டுமே தவிர, மற்ற வழியில் தவறான நடவடிக்கையில் ஈடுபடமாட்டார்கள் என்ற உறுதிமொழியை அரசின் சார்பில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பெரியவர் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்கின்றபோது, இங்கிலாந்திலே, பேருந்துத் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபடுகின்றபோது, அந்தப் பேருந்துக்கும் பாதுகாப்பைத் தந்துகொண்டுதான் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள் என்றார்கள். பொதுச் சொத்துக்குப் பாதுகாப்பு கொடுக்கிறார்கள். தங்களுக்கு வாழ்வளிக்கின்ற பொதுச் சொத்துக்குப் பாதுகாப்பு என்ற உணர்வோடு அவர்கள் செயல்படுகின்றார்கள். அப்போது வெளியிலிருந்து விஷமிகள் வந்து பொதுச் சொத்துக்களுக்கு நாசம் விளைவிக்கக் கூடிய நிலைமைகள் ஏற்பட்டுவிடாது. காவல் துறையினர் முன்கூட்டியே கண்டிப்பாகத் தடுத்தாக வேண்டும். அரசும் முன்கூட்டியே 'பிரிவெண்ட்டிவ் ஆக்ஷன்' எடுக்க வேண்டுமென்பதை அரசு சார்பில் நான் ஒத்துக்கொள்கிறேன். தார்மீகப் போராட்டத்தில் ஈடுபடுகின்றவர்களுக்குக்கூட ஒத்துழைப்பு வழங்க அரசு கண்டிப்பாக வழிவகைகள் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சில அமெண்ட்மெண்டுகள் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். அந்த அமெண்ட்மெண்டுகளைப் பொறுத்தவரைக்கும், அதிலே இந்தத் தொகையைப் பொறுத்தவரைக்கும் குறைந்த பட்சம் ரூபாய் 100 "to the amount of one hundred rupees or upwards" என்பதை



நீக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்தியன் பீனல் கோடிலே இருக்கின்ற பல பிரிவுகள் 427 லிருந்து கிட்டத்தட்ட 440 பிரிவுகள் வரைக்கும் இருக்கின்றன. அங்கே ரூபாய் 50 பெருமானமுள்ள சொத்துக்குச் சேதம் ஏற்பட்டாலே அதற்குத் தண்டனை உண்டு என்று இருக்கிறது. அதை ரூபாய் 50 லிருந்து அப்வேர்டாக ஆக்கி ரூபாய் 100 என்று உயர்த்தியிருக்கின்றோம். ஏற்கெனவே ஐ.பி.சி. யில் ரூபாய் 50 என்று இருப்பதால், அதற்கு மாற்றம் தேவையில்லை என்று சொல்கிறேன். அதுபோலவே "less than six months but which may extend to five years and with fine'; என்பதை சப்ஸ்ட்டிட்யூட் 'more than one year' என்று மாற்ற வேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அது கூட கேரளத்திலே உள்ள அவசரச் சட்டத்தை மட்டும் அடிப்படையாக வைத்துக்கொண்டு போடவில்லை. ஏற்கெனவே ஐ.பி.சி. யில் 427 வது பிரிவிலே 2 ஆண்டுகள் என்று இருக்கிறது. 429, 430, 431, 432 ஆகிய ஐ.பி.சி. பிரிவுகளிலே பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கின்றபோது உச்ச கட்டமாக 5 ஆண்டு காலம் தண்டனை விதிக்கலாம் என்று இருக்கிறது. 433, 435 பிரிவுகளில் இது போன்ற பொதுச்

(முற்பகல் 11-30)

சொத்துக்களுக்கு அல்லது உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடுகிறவர்களுக்கு 7 ஆண்டுக்காலம் தண்டனை என்றும், 436, 437, 438, 439 ஆகிய பிரிவுகளில் 10 ஆண்டுக்காலம் தண்டனை என்றும் இருக்கிற காரணத்தால், ஏற்கெனவே ஐ.பி.சி. ல் இருப்பதால், இதைக் குறைக்க வேண்டாமென்று நான் கருதுகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசும்போது, "unless prosecution has been given an opportunity to oppose the application for such release' என்ற (notice provision) ஐ நீக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி (notice provision) இருப்பதால், பல நேரங்களில் காலதாமதம் ஏற்பட்டு, (innocent people) கூட சில நாட்கள் சிறையில் அதிகமாக இருக்க வேண்டிய நிலை இருக்குமென்று கருதுகிறார்கள் என்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும் அதைத்தான் சொன்னார்கள். இந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்தும்போது, பிரச்சினைகள் வந்தால், இதைப்பற்றி அரசு மறுபரிசிலனை செய்யுமென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களுக்கும், திரு. இராமமூர்த்தி அவர்களுக்கும் நான் அரசின் சார்பாகச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, முக்கியமான (amendment) கொடுத்திருப்பது, "In clause 6, for the words "Chief Judicial Magistrate" substitute the words "Judicial II Class Magistrates" என்பதாகும், அதிலே தண்டனை காரணமாகத்தான் அந்தப் பிரிவு அப்படி போடப்பட்டிருக்கிறது; அதிலே குறிப்பாக செகன்ட் கிளாஸ் மேஜிஸ்டிரேட்டுகளிடம் இதை விடுவது சட்ட ரீதியாக இயலாத காரியம். அதுமட்டுமல்லாமல் கிரிமினல் ப்ரோசீஜர் கோடில் 29 ஆம் பிரிவில் யார், யார் எந்தெந்த நீதி மன்றம், எத்தகைய வழக்குகளை விசாரிக்கலாமென்று இருக்கிறது. —

"The Court of a Chief Metropolitan Magistrate shall have the powers of the Court of a Chief Judicial Magistrate and that of a Metropolitan Magistrate, the powers of the Court of a Magistrate of the first class. The Court of a Chief Judicial Magistrate may pass any sentence authorised by law except a sentence of death or of imprisonment for life or imprisonment for a term exceeding seven years. The Court of a Magistrate of the second class may pass a sentence of imprisonment for a term not exceeding one year"

என்று கிரிமினல் ப்ரோசீஜர் கோடில் இருப்பதால், சட்டத்திற்கு உட்பட்டுதான் கொண்டுவரப்பட்டிருக்கிறதென்று சொல்லி, புரட்சித் தலைவர் அவர்கள் அரசைப் பொறுத்தவரையில், அரசியல் நோக்கோடு, ஆகாதவர்கள், வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற பாகுபாடோடு இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தாது என்ற உறுதியைச் சொல்லி, தொழிலாளர்கள், உழைக்கும் வர்க்கத்தினர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு எதிராகக் கொண்டுவருகிற சட்டமல்ல இது, அவர்களுடைய நியாயமான போராட்டத்தில் வெளி ஆட்கள் ஈடுபட்டு, அவர்கள் போராட்டத்தின் புனிதத் தன்மைக்குக் களங்கம் ஏற்படக்கூடாதென்பதற்காகத்தான் அவர்களைத் தடுக்க கொண்டுவரும் சட்ட முன்வடிவு என்று சொல்லி, இதை ஏற்க வேண்டுகிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** தலைவரவர்களே, அப்பாவிகளைத் தண்டிக்கக்கூடிய சட்டம் என்பதால், இது நிறைவேறுவதை ஆட்சேபித்து நான் வெளிநடப்பு செய்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் வெளி நடப்பு செய்தார்)

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, இந்தச் சட்டம் உண்மையில் அரசியல் பழி வாங்குவதற்குப் பயன்பட வாய்ப்பு இருப்பதாலும், நிரபராதிகளுக்கே பெரும்பான்மையாகத் தண்டனை வாங்கிக்கொடுக்கும் சூழ்நிலையை





உருவாக்குவதாலும், இதை நாங்கள் வன்மையாக எடுத்துச் சொல்லியும், அதை அமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்ளாததற்கு எங்கள் கண்டனத்தைத் தெரிவித்து, வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தார்கள்.)

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவரவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு சட்டமானால் மக்கள் இயக்கத்திற்கு எதிராகப் பயன்படும் ஆபத்து இருப்பதால், அதை ஆட்சேபித்து வெளி நடப்பு செய்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் வெளி நடப்பு செய்தார்)

**Thiru J. M. MIAKHAN :** I feel that this Bill is liable to be used against the public also, besides the miscreants. So, I also join in the walk-out.

(மாண்புமிகு உறுப்பினர் வெளிநடப்பு செய்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

**THIRU K. RAMAMOORTHY:** Sir, I move the following amendment:—

"In clause 2 (i) delete the words 'to the amount of one hundred rupees or upwards'

In clause 2 (iv) delete the words 'to the amount of one hundred rupees or upwards', and for the words 'less than six months but which may extend to five years and with fine', substiute the words 'more than one year'

THIRU A. J. Doss seconded the amendment.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே கருத்துக்களைச் சொல்லிவிட்டார்கள். அமைச்சர் அவர்களும் பதில் சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு ஒன்று சொல்லுகிறேன். எனக்கும் ஒரு ஆலோசனை. திருத்தங்களை முன்மொழிந்து பேசும்போது பதில் சொல்லலாமே, இடையிலே ஏன் சொல்ல வேண்டுமென்று. உறுப்பினரவர்கள் முதலிலேயே திருத்தங்களைப் பற்றிச் சொல்லிவிட்டதால், அமைச்சரவர்களும் பதில் கொடுத்ததால், விவாதம் முடியட்டும் என்று தான் அனுமதித்தேன். இப்போது ஒவ்வொரு பிரிவிற்கும் திருத்தத்தை முன்மொழிந்து, உறுப்பினரவர்கள் பேசி, அமைச்சர் பதில் சொல்ல சந்தர்ப்ப மில்லை என்பதை நினைவில் கொண்டு, உறுப்பினரவர்கள் பேச வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி** : தலைவரவர்களே, 2 ஆம் பிரிவிற்கும், 6 ஆம் பிரிவிற்கும் நான் கொடுத்துள்ள திருத்தங்களின் அடிப்படையில் ஒன்றைத் தெளிவாக்க வேண்டுமென்று கருதுகிறேன். அமைச்சரவர்கள் அந்தத் திருத்தத்தை என் ஏற்க முடியவில்லை என்பதற்குக் காரணம் சொல்லும் போது, தண்டனைக் காலம் அதிகமாக இருப்பதால், Judicial Second Class Magistrate அதிகார வரம்பிற்குள் வாரதென்று தெரிவித்தார்கள். அதனால்தான் தண்டனைக் காலத்தைக் குறைக்க வேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதிலே ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அதிகமான தண்டனையை ஐ.பி.சி.-படி கொடுக்க முடியும். அதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இதற்காக தனியாகச் சட்டம் கொண்டு வரும்போது தண்டனைக் காலம் முறையாக இருக்க வேண்டும். தண்டனைக் காலம் உண்மையிலேயே பயமுறுத்துவதாக இருக்க வேண்டும். ஐந்து ஆண்டுக் காலம் என்று போட்டு, அந்த அடிப்படையிலே தண்டனை வருமென்பது எதிர்பார்க்க முடியாத ஒன்று. இரண்டாவதாக, கடுமையான தண்டனை விதிக்கும்போது, ஒரு சங்கடம் என்னவென்றால், வழக்குகளே பதிவாக வில்லை. அந்தக் காரணத்தையும் எண்ணிப் பார்க்க வேண்டும். மூன்றாவதாக, வழக்குகள் போடும்போது, 100, 150, 200 என்ற அளவில் குற்றவாளிகள் பட்டியல் நீள வாய்ப்புகள் இருக்கும். அந்த முறையில் குற்றங்கள் நடைபெறும். சீஃப் ஜுடீஷியல் மேஜிஸ்டிரேட் கோர்ட்டில் நடைபெறுமென்று இருப்பதால், அந்தக் கோர்ட்டில் ஒரு வேலையும் நடக்காது. அந்த வழக்கு என்றைக்கு விசாரணை என்று சொல்லுங்கள், அன்றைக்கு 300 பேர் சோறு கட்டிக்கொண்டு போவதும் மிகுந்த பணச் செலவிற்குப் பிறகு திரும்பி வரும் நிலைமையும்தான் ஏற்படும். அதை மாற்ற வேண்டுமென்றால் you must



localise. குற்றத்தையும் பிரித்துவிட்டு, வழக்கு பதிய வைத்து, எப்படியும் தப்பித்து வருவதென்றால், இந்தச் சட்டம் நிறைவேற முடியாத நிலைமை ஏற்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான்-பெயிலபிள் செக்ஷனை மாற்றுவதைப் பொறுத்தவரையில் அமைச்சரவர்களின் கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். என்னுடைய திருத்தத்தின் அடிப்படையிலே அதைப் பரிசீலிக்கிறேன் என்று சொன்னதால், என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சில அரசியல் போராட்டங்களில் இது போன்ற விளைவுகள் வருமென்று எதிர்பார்க்கிறேன். அப்போது இதனால் வேண்டுமென்றே சில தவறுகளைச் செய்ய அல்லது கொஞ்சம் பிகு பண்ணிக் கொள்ள வழி வகை இருக்கும். ஒன்று, அரசியல் ரீதியான மனமாச்சரியங் களும், இரண்டு, லஞ்ச ஊழல் தலை விரித்தாட வாய்ப்பும் ஏற்படும். இதைத் தவிர்க்க வேண்டுமானால், இதைப் பரிசீலனை செய்ய வேண்டும். அதை அமைச்சரவர்கள் பரிசீலனை செய்ய இருப்பதற்காக நன்றி கூறி, திருத்தத்தை ஏற்றுக்கொண்டால் நல்லது, இல்லையென்றால் பரிசீலனை செய்தால் நல்ல தென்று கூறி, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : தலைவர்வர்களே, ஒரு திருத்ததை அரசு பரிசீலிக்கும். சீஃப் மெட்ரோபாலிடன் மேஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு வரும்போது, வழக்குகள் தேங்கும் நிலை ஏற்படுமென்ற மாண்புமிகு உறுப்பினரவர்களின் எண்ணத்தை ஏற்றுக்கொள்கிறேன். நடைமுறையில் இந்தப் பிரச்சினையை எப்படித் திர்க்கலாமென்பதை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினரவர்கள் தன்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா, திரும்பப் பெறுகிறாரா ?

**திரு. க. இராமமூர்த்தி** : தலைவரவர்களே, என்னுடைய திருத்தத்தை நான் வலியுறுத்தவில்லை.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3.

THIRU K. RAMAMOORTHY: Sir, I move the following amendment:

" In clause 3 for the words ' shall not be less than six months but which may extend to five years with fine ' substitute the words ' may extend to six months '

In clause 3, in the proviso, for the words 'six months' substitute the words 'one month'"

THIRU A. J. Doss seconded the amendment.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா, திரும்பப் பெறுகிறாரா ?

THIRU K. RAMAMOORTHY: I do not press my amendment.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 3, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 4.

THIRU K. RAMAMOORTHY: Sir, I move the following amendment:—

"In clause 4, for the words 'No person' substitute the word "Persons" and delete the words 'unless the prosecution has been given an opportunity to oppose the application for such release'.

Thiru A. J. Doss seconded the amendment.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா, திரும்பப் பெறுகிறாரா ?

THIRU K. RAMAMOORTHY: Sir, I do not press my amendment.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 4, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(முற்பகல் 11-40)

பிரிவு 5, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 6.

THIRU K. RAMAMOORTHY: Sir, I move the following amendment:—

"In clause 6, for the words "Chief Judicial Magistrate", substitute the words "Judicial II Class Magistrate".



Thiru A. J. Doss seconded the amendment.

THIRU K. RAMAMOORTHY: I do not press my amendment.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 6, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 7, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1982) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1982) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) 1982 ஆம் ஆண்டு மாகாண சிறு வழக்கு நீதிமன்றங்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1982).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, மாகாண சிறு வழக்கு நீதிமன்றங்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 435, 436 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, மாகாண சிறு வழக்கு நீதிமன்றங்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

* Thiru A. R. DAMODARAN : Sir, almost four Bills are being introduced. While welcoming the Bills, I would like to mention to the Hon. the Law Minister that while we have increased the number of courts in Tamil Nadu to a substantial extent and even in South Arcot district over the past four or five years, Sub-Courts have been opened in Chidambaram, Vridhachalam, Tindivanam and Villupuram and there are two Sub-Courts in Cuddalore, many of the revisionary powers of the District Courts have been removed because of the recent amendments to the Code of Civil Procedure. In Cuddalore itself, where there are two Sub-Courts, in March 1982 from the list that I have obtained from the Court, it is found that many appeals pertaining to 1981 have been heard and all the Sub-Courts are closing at 12 or 12-30 p.m. everyday without any case pending before them. This is causing considerable difficulties not only in the operation of the Courts but to 250 or 300 advocates. While I have no objection to the new Sub-Courts that are being opened at Villupuram and other places, I would request that the proposal to bifurcate the Accidents Claims Tribunal which, I believe, is pending before the Government may be kept in abeyance, because even the advocates have to be given time to adjust themselves to the loss of cases that have been caused by the opening of these new courts. I would, therefore, plead that the Accidents Claims Tribunal should not be bifurcated. I would also plead that the powers of revision of the District Courts in all matters where appeal is not provided for in the Code of Civil Procedure be restored to the District Courts in view of the lack of cases.

Number two, the power of revision of the District Courts in all execution proceedings where appeal is not provided for under section 47, C.P.C., which was recently amended might also be restored to the District Courts. The power of revision of the District Courts may also be restored in the case of orders of the Rent Controller, where the people have now to come to the High



Court, spending a lot of money. I request the Hon. the Law Minister to consider these matters and see that wherever possible, the revisionary powers are restored to the District Courts.

The other thing is that in a recent amendment of the Essential Commodities Act, the power is now vested in the officers of the Secretariat, about three or four of them including the Food Secretary, and the power of the District Court has been removed in the case of an order of confiscation. I believe, by way of an amendment carried out by the Government of India and implemented in some States. I have made a series of complaints about the implementation of the Essential Commodities Act and how arbitrarily some of the officers are acting under these Acts. I will even quote from the judgment on a Writ Petition which the Hon. Minister would like to know. We do not expect justice from members of the Executive who will be invested with judicial powers in this particular regard. You may give appellate powers, etc., to the District Revenue Officer and then to the Civil Supplies Commissioner and then to the Food Secretary. But, where confiscation of essential commodities has been ordered due to some investigative findings, I would request that the District Court should continue to have the powers to review these under the Essential Commodities Act also.

Sir, this is all that I have to say on this Bill. About the Writ Petition, I have one more thing to say which I shall say when the Hon. Minister moves the other Bill. I only request the Hon. Minister to consider these representations and to implement whatever is feasible in the interests of keeping our Sub-Courts fully occupied. Thank you.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : 1887 ஆம் ஆண்டே புராவின்சியல் ஸ்மால் காசஸ் கோர்ட்ஸ் ஆக்ட் என்கிற சட்டத்தின் கீழ் சென்னை மாநகரம் நீங்கலாக ஏனைய பகுதிகளிலிருந்து வருகிற சிறு வழக்குகளை எல்லாம் 24-வது பிரிவிலே சொல்லியுள்ளது போலவும், மீதமுள்ள எல்லா வழக்குகளைப் பொறுத்தவரையிலும், உச்ச நீதிமன்றத்திற்கு மட்டும்தான் ரெவிசன் செய்கிற அதிகாரம் இருந்ததால், தனிப்பட்ட வகையில் மக்கள் சிறு சிறு வழக்குகளின் தீர்ப்பைக் காண சென்னைக்கு உயர்நீதிமன்றத்தை நோக்கி வர வேண்டிய நிலை இருந்தது. இதன் காரணமாக சாதாரண ஏழையெளிய மக்களுக்கு ஏராளமான பணச் செலவு ஏற்பட்டது. இதை மாற்றி இந்த

[திரு. சி. பொன்னையன்] [1982 ஏப்ரல் 8

'ரெவிஷனல் பவ்வர்' என்று சொல்லப்படுகின்ற ஆய்வு அதிகாரத்தை உயர் நீதிமன்றத்திடமிருந்து எடுத்து அந்தந்த மாவட்டத்தில் இருக்கிற மாவட்ட நீதிமன்றங்களுக்குத் தர வேண்டுமென்ற அடிப்படையில் மாவட்ட நீதிபதிகள் தாங்களாகவோ அல்லது பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து வரப்பெற்ற மனுக்கள் மூலமாகவோ அதை மறு ஆய்வு செய்யலாம் என்கிற முறையில் அவர்களுக்கு இதனைச் சொல்வதன் மூலம் மாவட்ட அளவிலே, தாலுக்கா அளவிலே இருக்கின்ற சாதாரண மக்களுக்குப் பணியை வரையறுக்கப் பார்க்கிற ஒரு நல்ல சட்ட முன்வடிவை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. இதனை இந்த அவை ஏற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் பேசுகிறபோது, மோட்டார் ஆக்சிடென்ட் கிளெய்ம்ஸ் டிரிபியூனல் பற்றிச் சொன்னார். கோர்ட்டுகளில் வேலை குறைந்து விட்டது, ஆகவே நிறுத்தி வைத்திருந்த ரென்ட் கன்ட்ரோலைப் பொறுத்தவரையில், மாவட்ட அளவில் வைக்க வேண்டுமென்று சொன்னார். எசன்சியல் கமாடிட்டிசின் கான்பிஸ்கேசன்-ஐ பொறுத்த வரையில், தீர்மானிக்கின்ற அதிகாரத்தை அரசுச் செயலாளரிடம் கொடுப்பதற்கு பதில் மாவட்ட நீதிமன்றங்களுக்குத் தர வேண்டுமென்ற கருத்தினைச் சொன்னார். அவற்றையெல்லாம் பரிசீலித்து, அதனுடைய தன்மையின் அடிப்படையில் அரசு முடிவு எடுக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, மாகாண சிறு வழக்கு நீதிமன்றங்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.



1982 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, மாகாண சிறு வழக்கு நீதிமன்றங்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1982) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, மாகாண சிறு வழக்கு நீதிமன்றங்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1982) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) 1982 ஆம் ஆண்டு சென்னை மாநகர சிவில் வழக்கு நீதிமன்றம், மாநிலச் சிறு வழக்கு நீதி மன்றங்கள் (திருத்த) ரத்துச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1982).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, சென்னை மாநகர சிவில் வழக்கு நீதிமன்றம், மாநிலச் சிறு வழக்கு நீதி மன்றங்கள் (திருத்த) ரத்துச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, சென்னை மாநகர சிவில் வழக்கு நீதிமன்றம், மாநிலச் சிறு வழக்கு நீதி மன்றங்கள் (திருத்த) ரத்துச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

@ 436—437 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, சென்னை மாநகர சிவில் வழக்கு நீதிமன்றம், மாநிலச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் (திருத்த) ரத்துச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1982) நிறைவேற்றப்பட வேண்டும் "
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, சென்னை மாநகர சிவில் வழக்கு நீதிமன்றம், மாநிலச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் (திருத்த) ரத்துச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1982) நிறைவேற்றப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(முற்பகல் 11-50)

**(4) தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1982).**

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ",
என்று முன்மொழிகிறேன்.

---

@ 437–438 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.





மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

THIRU A. R. DAMODARAN : Sir, this Bill seeks to raise the fees for Writ Appeal from the present Rs. 100 to Rs. 200. Sir, Writs and Writ Appeals under Article 226 of the Constitution are the only remedies left to ordinary citizens to claim against arbitrary actions of the Government. While I agree that the cost of implementing justice may have gone up and that the fees should be increased, may I bring to the notice of the Hon. the Law Minister, because this is a matter that is vitally connected with his Department, that many Writs and Writ Appeals on which decisions are given by the High Court are not implemented by the officers of the Departments of the Government of Tamil Nadu. Only two weeks ago, there was a case in which the Secretary of the Industries Department had been fined Rs. 2,000 for contempt of Court. I would like to bring to the notice of the Hon. Minister what the hon. Member Thiru Ramamoorthy mentioned yesterday where a similar contempt is still occurring in a Writ Appeal that has been decided by the High Court of Madras in 1981. This pertains to Writ Appeal Nos. 14 and 15 of 1981 and Writ Petitions 332 to 345 and 391 to 404 of 1981. This is a case where 30 petitioners from Tindivanam taluk who are retail dealers of kerosene had petitioned the High Court for justice and the High Court has given Judgment. I will read only the last paragraph of the Judgment: " In the result, we allow the Writ Petitions and direct the Government to revoke the instructions issued to the wholesalers not to supply kerosene to the petitioners in these Writ Petitions as above ". This order was passed on December 1, 1981 and till the 31st of March 1982, neither the Secretary of the Department nor the Collector of the district has issued any instructions to revoke the instructions already given. May I point out that if you want citizens to observe the due process of law, it is absolutely necessary that the Government themselves should follow the instructions given by the High Court, especially in Writ Appeals. I will give the Hon. Minister a copy of the Judgment

(Thiru A. R. Damodaran) [1982 ஏப்ரல் 8

on the Writ Appeal and request that he may give necessary instructions to the Department to deal expeditiously in this matter. Otherwise, they might be hauled up for contempt of Court. May I also request the Law Department to monitor constantly the decisions in Writ Appeals and in Writ Petitions and to ensure that action is taken by the respective Departments. It is possible that it is not brought to the notice of the Law Department. Perhaps, some standing instructions are required that in respect of every Writ Petition and Writ Appeal, the Judgment should be communicated, within a matter of five days, to the Hon. the Law Minister so that he may decide whether an appeal should be filed in the Supreme Court or whether the instructions of the High Court should be carried out. This will ensure compliance with the instructions given by the High Court. Thank you.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 100 ரூபாய் என உயர்நீதிமன்ற ரிட் மனுக்களுக்கு இருந்துவந்த அந்தத் தொகை தற்போது 200 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. 100 ரூபாய் என இருந்தது 200 ரூபாய் என உயர்த்தப்படும்போது—
the erosion into the value of money also was taken into account என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். நீதிமன்றச் செலவு ஒரு பக்கம். அது மட்டுமல்ல, 'வெக்சேஷஸ் ரிட் பெட்டிஷன்ஸ்' எல்லாம் அதிகமான அளவிலே வந்து 'பென்டன்சி ஆஃப் கேசஸ்' நீதிமன்றங்களிலே அதிகமாக இருக்கும் நிலைமையைப் போக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசுகிறபோது, "நீதிமன்றங்கள் அளிக்கும் தீர்ப்பை நடைமுறைப் படுத்துவதில் காலதாமதம் இருக்கக்கூடாது. That would lead to contempt of Court." என்ற தன்னுடைய கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்தை அரசு கண்டிப்பாக ஒத்துக்கொள்கிறது. தொழில் துறையைச் சேர்ந்த செயலாளர் மீது 'கன்டெம்ட்' என்று சொல்லி 2,000 ரூபாய் தண்டனை கொடுக்கப்பட்டதை எதிர்த்து 'அப்பீல்' செய்து 'ஸ்டே' வாங்கப்பட்டிருக்கிறது. நீதிமன்றங்கள் எந்தத் தீர்ப்பை அளித்தாலும், அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். 'அப்பீல்' என்று சொன்னால் உடனடியாக அப்பீல் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை அரசு ஏற்கிறது. அதை ஒரு நல்ல



1982 ஏப்ரல் 8] [திரு. சி. பொன்னையன்]

ஆலோசனையாகவும் சொல்லியிருக்கிறார்கள். இன்டஸ்ட்ரீஸ் டிப்பார்ட்மென்ட்டாக இருந்தாலும் அல்லது எக்சைஸ் டிப்பார்ட்மென்ட்டாக இருந்தாலும், அல்லது சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மென்ட்டாக இருந்தாலும், எந்த உத்தரவாக இருந்தாலும், அது தீர்ப்பானவுடன் உடனடியாக ஒரு மூன்று அல்லது நான்கு தினத்திற்குள் அது சட்டத்துறைக்கு வந்து, அதன்மீது முடிவு எடுத்து அதன்மீது மேல்முறையீடு வேண்டுமா அல்லது கன்டெம்ப்ட் என்று வராத அளவிலே செயல்படுத்தலாமா என்ற வகையிலே ஒரு மானிட்டர் செல் இருக்க வேண்டும் என்பது மிகவும் அவசியம்; அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லி இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 2 மற்றும் 3, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1982) நிறைவேற்றப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1982) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

7. அரசின் தீர்மானம்.

அலுவல் வரிசையில் மாறுதல் குறித்து.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்ற மேலவை விதி 21 (3)-ன்படி, இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றுள்ள சட்ட முன்வடிவுகளில் 6 மற்றும் 7 இனங்களாக இருக்கும் சட்ட முன்வடிவு எண் 21/1982 மற்றும் 31/1982 இப்போது எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்ற மேலவை விதி 21 (3)-ன்படி, இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றுள்ள சட்ட முன்வடிவுகளில் 6 மற்றும் 7 இனங்களாக இருக்கும் சட்ட முன்வடிவு எண் 21/1982 மற்றும் 31/1982 இப்போது எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சட்ட முன்வடிவு எண்கள் 21/1982 மற்றும் 31/1982 இப்போது எடுத்துக்கொள்ளப்படும்.

6. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

**(5) தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்-கால்நடைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1982).**

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

" தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்-கால்நடைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1982) ஆய்வு செய்வதற்காக 24 உறுப்பினர்கள் அடங்கிய (16 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், 8 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க, சட்டப் பேரவைக்கு,



மேலவை தனது இசைவைத் தெரிவிக்கின்றது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள் :—

1. திரு. எஸ். ஆர். இராதா
2. திரு. நீலநாராயணன்
3. திரு. ஆ. நல்லசிவன்
4. திரு. கே. அருணாசலம்
5. திரு. பி. முனுசாமி
6. திருமதி சீதாதேவி கிருஷ்ணசாமி
7. திரு. ஓ. எஸ். துரைசாமி
8. செல்வி ஆ. லீலாவதி "

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்-கால்நடைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1982) ஆய்வு செய்வதற்காக 24 உறுப்பினர்கள் அடங்கிய (16 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், 8 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க, சட்டப் பேரவைக்கு, மேலவை தனது இசைவைத் தெரிவிக்கின்றது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள் :—

1. திரு. எஸ். ஆர். இராதா
2. திரு. நீலநாராயணன்
3. திரு. ஆ. நல்லசிவன்
4. திரு. கே. அருணாசலம்
5. திரு. பி. முனுசாமி
6. திருமதி சீதாதேவி கிருஷ்ணசாமி
7. திரு. ஓ. எஸ். துரைசாமி
8. செல்வி ஆ. லீலாவதி "

**தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.**

(நண்பகல் 12-00)

**(6) தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1982).**

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

" தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1982) ஆய்வு செய்வதற்காக 24 உறுப்பினர்கள் அடங்கிய (16 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், 8 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க, சட்டப் பேரவைக்கு மேலவை தனது இசைவைத் தெரிவிக்கின்றது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் :—

1. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்
2. திரு. ம. சங்கரலிங்கம்
3. திரு. க. இராமமூர்த்தி
4. டாக்டர் இரா. சனார்த்தனம்
5. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்
6. திரு. சி. இராமலிங்கம்
7. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்
8. திரு. ஜே. எம். மியாகான் "

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

" தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1982) ஆய்வு செய்வதற்காக 24 உறுப்பினர்கள் அடங்கிய (16 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், 8 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு



ஒன்றை அமைக்க, சட்டப் பேரவைக்கு மேலவை தனது இசைவைத் தெரிவிக்கின்றது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் :—

1. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்
2. திரு. ம. சங்கரலிங்கம்
3. திரு. க. இராமமூர்த்தி
4. டாக்டர் இரா. சனார்த்தனம்
5. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்
6. திரு. சி. இராமலிங்கம்
7. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்
8. திரு. ஜே. எம். மியாகான் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(7) தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல் வரி விதிப்பைச் செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1982).**

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1982 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பைச் செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பைச் செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

---

@ 438–439 ஆம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவு, இரண்டு ரிட் மனுக்களின் மூலம் அறிவுறுத்தப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் 1971 ஆம் ஆண்டுக்குப் பின்னால் உள்ளூர் செஸ் வரிக்கு மேல் வரி—சர்சார்ஜ் விதித்ததைச் செல்திறனாக்கும் சட்ட முன்வடிவாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக அரசுக்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். உள்ளூர் வரிக்கு மேல் சர்சார்ஜ் போடுவது மூன்று தடவைக்கு மேல் போனால் ஒன்று அதை நீக்க வேண்டும் அல்லது அதை செஸ் உடன் சேர்க்க வேண்டும். அப்படிப்பட்ட விதிமுறைகளை மேற்கொள்வது நலமாக இருக்கும் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். சர்சார்ஜை நீட்டிக் கொண்டே போவது என்பது நல்லதல்ல. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்கு, ஒரு குறிப்பிட்ட திட்டத்தை நிறைவேற்ற உள்ளூர் வரிக்கு மேல் சர்சார்ஜ் போடுகிறோம். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அது செயல்படுத்தப்பட்ட பிறகு அல்லது ஒரு குறிப்பிட்ட திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, இது மேலும் தேவை என்று கருதினால், அதை வரியோடு இணைத்துக்கொள்ள வேண்டுமே தவிர, சர்சார்ஜ் என்ற முறையில் அதை நீடித்துக் கொண்டே போவது முறையல்ல. இது வரிவிதிப்பு முறைக்கே பாதகமானது. சர்சார்ஜ் விதிப்பது என்பது நிரந்தரமாக இருக்கக்கூடாது. 1971-லிருந்து பார்த்தால் இப்போது 11 ஆண்டாகிறது. எனவே அதை இன்னும் நீடித்துக்கொண்டிருப்பது சரியல்ல. இப்போது நான் இந்தச் சட்ட முன்வடிவை எதிர்க்கவில்லை. முன்னால் விதித்ததைச் செல்திறனாக்குகிறோம். அவ்வளவுதான். இருந்தாலும் இனிமேல் வரி விதிப்புக் கொள்கையில் இருக்கிற "ரேஷனல்" தன்மையைப் பின்பற்ற வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பைச் செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.



பிரிவுகள் 2 மற்றும் 3 அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பைச் செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1982) நிறைவேற்றப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பைச் செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1982) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### (8) 1982 ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1982).

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1982 ஆம் ஆண்டு, இந்தியக் கூட்டாண்மை (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 439—441 ஆம் பக்கங்களில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1982 ஏப்ரல் 8

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1982 ஆம் ஆண்டு, இந்தியக் கூட்டாண்மை (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு** : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1982 ஆம் ஆண்டு, இந்தியக் கூட்டாண்மை (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1982) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1982 ஆம் ஆண்டு, இந்தியக் கூட்டாண்மை (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1982) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



1982 ஏப்ரல் 8]

**(9) தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1982).**

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது** : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

* Thiru A. R. DAMODARAN : Sir, while I welcome all the provisions of this Bill, may I make a plea for some special assistance to the legislators like library facilities in the Legislature? We have in our library many thousands of books. Perhaps the Hon. Ministers call for the books from the Library and they do not have a chance of going to the library. But I have to go to the Library, because we have no rooms here. I would plead with the Hon. Minister that we require better furniture in the Library. If the Hon. Minister visits the Lok Sabha Library, he will find that there are several cubicles where members can sit and write and special desks are provided so that they may refer to the books. I would plead with him that these facilities should be introduced here. It would not cost very much. I do not think it would cost more than Rs. 20,000. Fourteen or fifteen special cubicles may be provided so that we may write in privacy and have good writing facilities.

Number two, I would also plead that the library could be air-conditioned so that Members may work there and only those who are interested in reading should be allowed in the library and there should be absolute silence. These rules may also be implemented.

---

@ 107-109 ஆம் பக்கங்களில் இணைப்பு X ஆக அச்சிடப்பட்டுள்ளது.

Regarding the lobby of the Legislative Council, our lobby is extremely shabby and I think even if you search throughout India, you will not find a shabbier lobby than the one we have here. Even the upholstery is torn and if we sit, our pant is likely to be torn. I would request the Hon. Minister to provide these small facilities also to provide a table fan outside in the garden lobby so that we may sit out there and we need not sweat so much.

One other facility I would request the Government is this Nowadays petrol has become very expensive. May I plead with the Hon. Minister to approach the Government of India—Industries Minister—with a request to give us some diesel cars on a quota basis? We are not asking for any subsidy and we are prepared to pay the full cost. I would request the Hon. Minister to provide diesel cars which are now provided only for taxis, to hon. Members with the stipulation that they should not be sold during the period of their membership of the Legislature, because, I think Members of the Legislature should not be accused of making this a business. As long as we are Members of the Legislature a condition can be imposed that the car should not be sold and when one ceases to be a member one can sell the car. This one special facility I would request because at present we are running into petrol bills for Rs. 1,500 to Rs. 2,000 a month and this can be reduced to Rs. 500 or Rs. 600. This will not involve any expenditure for the Government. I would request the Hon. the Leader of House to consider this so that he may do something for us.

(பிற்பகல் 12-10)

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். அதோடு மாண்புமிகு முன்னவர் அவர்களின் பரிசீலனைக்காக ஒரு சிலவற்றை மட்டும் வைக்க விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்படுகின்ற இரயில்வே பயணச் சீட்டுக்களைப் பொறுத்த வரையில், 50 பைசா பெறுமானமுள்ள பயணச் சீட்டுக்கள் சேர்த்துக் கொடுக்கப்படுகின்றன. அதற்கு ஒரு மரியாதையே கிடையாது. அதைக் கொடுத்தனுப்பினால், அதைத் தவிர மற்றவைகளைத்தான் டிக்கெட் கவுண்டர்களில் எடுத்துக்கொள்கிறார்கள், செல்லுபடியாகாமலே, பயன்படுத்த முடியாமலே அவை நின்று போகின்றன. ஆகவே ஐம்பது பைசா பெறுமான



முள்ள டிக்கட்டுகளை முழுவதுமாக விட்டுவிடலாம், அல்லது மிகக் குறைவான அளவிலே கொடுக்கின்ற வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில நேரங்களில் கடைசி நிமிடத்தில் பயணத்தை ரத்து செய்ய வேண்டிய அவசியம் வருகிறபோது, ஏற்கெனவே ரிசர்வ் செய்யப்பட்டு டிக்கட்டுகள் வாங்கிவிட்ட நிலையிலே, வீணாகும் நிலைமை பலருக்கு ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய சொந்த அனுபவத்திலேயே பார்த்திருக்கிறேன். யாருக்கும் பயன்படாமல் அரசாங்கப் பணம் வீணாவதால் செல்லுபடி ஆகின்ற அளவிலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு வேண்டுகோள், நம்முடைய சட்டமன்ற மேலவைத் துறையில் தனி செல் வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் அரசோடு தொடர்பு கொள்ளும்போது, அல்லது பல்வேறு பணி தொடர்பான பல காரியங்களுக்காக பல்வேறு துறைகளோடு தொடர்புகொள்ளும்போது, கடிதம் எழுதும்போது பதில்களைச் சுலபமாகப் பெற வழிவகை செய்ய வேண்டும். துறையிலுள்ள அலுவலர்களைக் கேட்டவுடனே, செக்ரட்டரியிடம் சொல்லுங்கள், அவரிடம் சொல்லுங்கள், இவரிடம் சொல்லுங்கள் என்று சொல்லுகிற முறை இல்லாமல், கேட்டவுடனே வாங்கிக் கொடுக்க அதற்காக "ஸ்பெஷல் செல்" மாதிரி ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'பெர்ஸனல் செல்' இருந்தால் இன்னுமொரு சௌகரியம் இருக்கும். பல நேரங்களில் உறுப்பினர்கள் துறைகளுக்குக் கடிதம் எழுதும்போது, சில குறைகள், கோரிக்கைகள், தவறுகள் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி எழுதும் போது, பதில் வர பல மாதங்கள், பல நாட்கள் ஆகின்றன. அப்போது நாம் என்ன எழுதினோம் என்பதே மறந்து போகிறது. சில நேரங்களில் பதில் வராமலே போகிறது. அவசியம் என்று எழுதினால், கவனிப்பதில்லை. இவற்றையெல்லாம் தவிர்க்கிற வகையிலே "பெர்சனல் செல்" இந்தப் பொறுப்புக்களை எடுத்துக்கொள்ளலாம். உரிய காலத்திலே பதில் வரவில்லையென்றால், உடனடியாக அனுப்புங்கள் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பதில் வாங்கித்தருகிற அளவிற்கு ஒரு லையசன் ஆபிசர் என்ற அளவிலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை ஏற்படுத்த மாண்புமிகு முன்னவர் அவர்கள் துணை புரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

லைப்ரரியைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொல்லிய கருத்துக்களைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று தெரிவித்து அமைகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், துணைத் தலைவர் ஆகியவர்களுக்குள்ள செயல்களை திறமையாகச் செய்வதற்குரிய வசதிகளை ஏற்படுத்தக் கூடிய இந்த மசோதாவின் மீது எனது கருத்துக்களை எடுத்துச் சொல்ல விழைகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பணிகளைச் சீரிய முறையில் செய்வதற்கு இன்னும் சில சூழ்நிலைகளை உருவாக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்து. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, நூல் நிலையத்தை விரிவுபடுத்த வேண்டும். இப்போதுள்ள அதே இடம் போதுமானதல்ல. அதை விரிவுபடுத்தி, நூல் நிலையத்தில், லைப்ரரி சையன்ஸ் படித்த உதவியாளர்களைப் போட வேண்டும். ரிசர்ச் விங்கை ஏற்படுத்த வேண்டும். நமக்குப் பக்கத்திலேயே சென்னைப் பல்கலைக் கழகம் இருக்கிறது. அங்கே ஆராய்ச்சி செய்கிறவர்களில் ஒரு ஏழெட்டு பேர் இங்கே வந்து இரண்டு மூன்று மாதங்களுக்கு ஆராய்ச்சி செய்யக் கூடிய நிலையை ஏற்படுத்தினால், அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் களுக்கு உதவி பண்ணுவதற்கும், எந்தெந்த இடங்களில் எந்தெந்தப் புத்தகங்கள் இருக்கின்றன என்று எடுத்து உதவுவதற்கும், சில விவரங்களைத் தெரிவிப்பதற்கும் உதவியாக இருக்கும். பாராளுமன்ற நூலகத்தைப் பார்த்தால், காலையில் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு, அதற்கான விவரத்தை அந்த நூலகத்தில் கேட்டால், ஒரு மணி நேரத்திற்குள் அப்படிப்பட்ட சம்பவங்கள் எங்கெங்கு நடந்தன, எப்போது எப்போது நடந்தன, அதன் மீது என்ன முடிவுகள் எடுக்கப்பட்டன, இந்தியா முழுவதும் அந்தமாதிரி நடந்த சம்பவங்கள் ஆகியவற்றையெல்லாம் தொகுத்து அவர்கள் தருகிறார்கள். அந்த அளவிற்கு வேண்டிய தகவல்களை எடுக்கிற அளவிற்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அங்கே ரிசர்ச் விங் இருக்கின்றது. நம்மால் அப்படி பணம் செலவு செய்ய முடியாவிட்டாலும், பல்கலைக் கழகத்திலுள்ள ரிசர்ச் விங்கில் உள்ளவர்கள், அங்கே மூன்று ஆண்டுகளுக்குப் படித்தாலும், கடைசியில் ஒரு ஆறு மாதத்திற்கு இங்கே வந்து ரிசர்ச் செய்ய வேண்டுமென்று சொன்னால், நாம் அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள முடியும், சட்டமன்றத் துறையைப் பற்றி அவர்கள் அறிய வாய்ப்பும் கிடைக்கும். ஆகவே இதற்காக மூன்று, நான்கு எக்ஸ்பர்ட்டுகளைப் போட வேண்டுமென்பதல்ல. ரிசர்ச் விங்கிலுள்ள ஒரு தலைவரை வைத்துக்கொண்டு மேலும் மற்ற மாணவர்களை வைத்துக்கொண்டே இதைச் செய்யலாம். அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, இப்படிப்பட்ட மசோதாக்கள் வருகிறபோது, இந்தத் துறை செக்ரட்டரியிடம் கேட்டாலே மசோதாக்கள் கிடைக்கின்றன என்றாலும், மசோதாக்கள் வரும் இரண்டு நாளைக்கு முன்பே அது சம்பந்தமான எல்லா ரிக்கார்டுகளையும் நூலகத்திலே வைத்திருந்தால், அவற்றையெல்லாம் படித்து விட்டு நல்ல முறையில் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கும். ஏனென்றால், ஒரு நாள் சட்டமன்றம் கூடினாலும், எவ்வளவு ரூபாய் அதற்காகச் செலவாகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். வீணாகச் செலவு செய்கிறார்கள் என்ற உணர்வு நாட்டு மக்களிடையே வருமானால், ஜனநாயகமே தோல்வியாக மாறும். அப்படி வராமலிருக்க சட்டமன்ற உறுப்பினர்கள் நல்ல முறையிலே படித்து ஆராய்ந்து தெளிந்த கருத்தைச் சொல்லுகிற நிலையை உருவாக்குவது மிகவும் தேவையாகும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இந்த மன்றத்தினுடைய லாபியைப்பற்றிச் சொன்னார்கள். எங்களுக்குப் பின்னால் உள்ள பகுதியில் உள்ள இருக்கைகள் ஐந்தாறு சரியாக இல்லை, காரணம் கேட்டால், எலி என்று சொன்னார்கள். இப்போது நாடு முழுவதும் எலியால் பெரிய ஆபத்து இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் டிரஷரி பெஞ்சைச் சேர்ந்தவர்களுடைய பகுதியிலே எலி ஒன்றும் செய்வதில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தலைவருடைய சேர் பாதுகாப்பாக இருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : தங்களுடைய சேர் பாதுகாப்பாக இருப்பதற்காக எங்களுக்கு மகிழ்ச்சி. எங்கள் பகுதியில் எலி கடித்து பஞ்சு வெளியே வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா இந்தப் பக்கம் வராததால் அவருக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** என்னுடைய எடை குறைவாக இருப்பதால், சேர் பாதுகாப்பாக இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : ஆகவே அதைச் சீர்செய்து வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொகுதிகளில் சென்று உறுப்பினர்கள் பணிபுரிய பல வசதிகளைப் பெருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமக்கென்று தொகுதியில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகுதி இருந்தாலும், மேலவையிலே உறுப்பினராக வந்தால், தமிழ் நாடு முழுவதும்

தன் தொகுதி என்று கருதி தொண்டாற்ற வேண்டியிருக்கிறது என்பதாலே கடமையும், பொறுப்பும் கூடுதலாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே டைப்ரைட்டர்களை கன்செஷன் ரேட்டில் கொடுக்க வேண்டிய ஏற்பாட்டைச் செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கார். 1979 ஆம் ஆண்டில், டீசல் கார் வேண்டுமென்று பஜாஜ் கம்பெனிக்கு எழுதி, அதனுடைய நகலை போக்குவரத்துத் துறை அமைச்சரிடமும் கொடுத்தேன். அதே மாதிரி சிவராஜ் கம்பெனிக்கு எழுதிய கடிதத்தின் நகலையும் அவரிடம் கொடுத்தேன். ஆனால் எனக்கு இன்று வரை டீசல் கார் வரவில்லை. நான் கேட்டது விலைக்குத்தான். பிரையாரிட்டி கோட்டாவில் கேட்டபோதும் கிடைக்கவில்லை. ஆகவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பிரையாரிட்டி கோட்டாவில் டீசல் கார் வழங்குவதற்காக மத்திய அரசோடும், பெரிய கம்பெனிகளோடும் பேசி வாங்கிக் கொடுத்தால் நலமாக இருக்கும். தொகுதிக்கு ஒரு முறை செல்வதற்குப் பதிலாக இரண்டு தடவை போகலாம். ஓர் ஊரில் கலவரம், குழப்பம் ஏற்பட்டால், அங்குச் சென்று தொண்டு செய்யவேண்டிய நிலை வந்தால், காரில் சென்றால் ஒரு முறைதான் செல்ல முடியும். டீசல் காராக இருந்தால் இரண்டு, மூன்று முறை செல்லலாம். இப்போதெல்லாம் போகாமலே ஃபோன் மூலமாகக் கேட்கும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அத்தகைய வசதியையும் செய்து தர வேண்டும்.

இரயில் வண்டிகளில் இருக்கைகளுக்கான எமெர்ஜென்சி கோட்டா என்று இருந்தது. திடீரென்று இன்றைக்குப் போக வேண்டிய நிலைமை ஏற்பட்டால், துறையில் எழுதிக் கொடுத்தால், அந்த இருக்கைகளை ஒதுக்குவார்கள். அதில் மினிஸ்டர்களுக்கு முதல் பிரஃபரன்ஸ் என்றும் அதற்கடுத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பிரஃபரன்ஸ் என்றும் இருந்தது. இப்போது அந்த நிலைமை இல்லை. சட்டமன்ற மேலவையிலேயே இதைப் பிரச்சினையாக கிளப்பியபோது, மாண்புமிகு முன்னவர் அவர்கள், மத்திய அரசோடு தொடர்பு கொண்டு ஆவன செய்வதாகச் சொன்னார்கள். ஆகவே உடனடியாகத் தலையிட்டு அந்த வசதியை மீண்டும் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

3,000 ரூபாயாக, ரூ. 2,000 ரூ. 2,500 என்று இருந்ததை டிரெயின் டிக்கட்டுக்கு என்று உயர்த்திக்கொடுத்திருக்கிறார்கள், எல்லாப் பகுதிகளுக்கும் சென்று அங்கத்தினர் சுற்றிப்பார்த்து வருவதற்காகக் கொடுத்திருக்கிறார்கள். நாம் எடுத்துக்கொள்கின்ற அந்தப் பயணத்தை நடைமுறைப்படுத்த முடிய



வில்லை என்றால், அதை ரத்து செய்கின்றபோது, அதற்கு ஈடான கன்செஷன் கூப்பன்களைத் திருப்பித் தரவேண்டும். அவைகள் அரசுக்குத் திரும்பி வந்து விடுகின்றன என்று நினைக்கிறேன். ரெயில்வேயிலே கேன்சல் பண்ணினாலும் கூட, அது அரசுக்குத் திரும்பி வந்துவிடுகிறது என்று எண்ணுகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு உறுப்பினர்கள் அங்கே கொடுத்தால்தான் மீண்டும் அரசுக்குத் திரும்பி வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** அப்படித்தான் கொடுத்திருக்கிறேன். மூன்று தடவைகள் திருப்பிக் கொடுத்திருக்கிறேன். கேன்சல் பண்ணுவதற்கு முன்னாலே எழுதிக் கொடுத்து சரண்டர் பண்ணி எழுதிக் கொடுத்து, லேட்டர் டேட்டிலே அதை எனக்கு மாற்றிக்கொடுக்கும்படி கேட்டிருக்கிறேன். அப்படித் தரவில்லை. அப்படி டிக்கெட் வாங்காமல் கவர்ன்மெண்டுக்குத் திரும்பி வந்தால், எந்த அளவுக்குப் பணம் திரும்பி வருகிறதோ அந்த அளவுக்குள்ள பணம் மாத்திரம் திரும்பத் தரக்கூடிய வசதியை அரசு செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கெள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் இப்போது கொடுத்திருக்கின்ற வீடுகள் பற்றிச் சொல்லிக்கொள்கிறேன். இதற்கு முன்னாலேயேகூட நான் சொல்லியிருக்கிறேன். ஒரு கட்டுப்பாடான இடமாக இருக்க வேண்டும். ரஷ்யா நாட்டிலே பிரைம் மினிஸ்டர், பிரிசிடென்ட் எல்லோருமே பக்கத்து பக்கத்து அறையிலே இருக்கிறார்கள். ஒரு அறைக்குப் பக்கத்து அறையிலே இருக்கிறார்கள். பிரைம் மினிஸ்டர் ஒரு அறையில் இருக்கிறார் என்றால், பக்கத்தில் உள்ள அறையில் பிரைவேட் செக்ரட்டரி, அதற்கு அடுத்த அறையில் செக்குரிட்டி கார்ட் என்று இப்படி பக்கத்தில் பக்கத்தில் அறைகள் இருக்கின்றன. அதற்கடுத்தாற்போல் தான் அமைச்சர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இங்கே பெரிய வளாகத்தையே வைத்திருக்கிறார்கள். கவர்னரைப்பற்றி நான் இங்கே சொல்வது தப்பு என்றால் விட்டுவிடுங்கள். அந்த இட வசதி மிகக் குறைவாக இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் பிளாட்ஸ் போலக் கொடுக்க வேண்டும். அதாவது டெல்லியிலே இருப்பது மாதிரி இருக்கலாம். தனித்தனி வீடாக இருந்தால் நல்லது. சில வீட்டிலே சத்தம் கேட்கின்றது. அதுகூடப் பரவாயில்லை. நான் யாரையும் குறை சொல்வதாக நினைத்துக்கொள்ளக்கூடாது. அடுத்த ரூமிலே இருப்பவர்கள் ஒத்துழைக்கா விட்டால் என்ன செய்ய முடியும்? இன்றைக்கு நைட்டே படித்து விடலாம் என்று இருந்து கொண்டிருப்போம். அப்போது இப்படி நிலைமைகள்

இருந்தால், என்ன செய்ய முடியும் ? படிக்க முடியாது. அதற்காக பக்கத்திலே இருப்பவர்களிடம் தகராறு பண்ண முடியாது. தனித்தனியாக வீடுகள் அமைகின்ற முறையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** வாடகைக்குத்தானே வீடு கேட்கிறார்கள், சொந்தத்திற்குக் கேட்கிறார்களா ?

**திரு. ம. சங்கரலிங்கம் :** சட்டசபைக் கூட்டம் நடக்கின்றநேரத்தில் வாடகை கிடையாது. மற்ற நேரங்களிலே வாடகை உண்டு. நம் நாட்டிலே இருக்கின்ற பல் பிரச்சினை பற்றி, சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் கடிதம் எழுதினால், அந்தக் கடிதத்திற்கு அமைச்சர் அவர்களே பதில் எழுதுவது கொஞ்சம் நல்லது என்று நினைக்கிறேன். ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தரத்தை உயர்த்திக் கொள்வதாக நினைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் வந்துவிடும். இந்தப் பிரச்சினையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்த்து, சட்டமன்ற உறுப்பினர் சொல்லியிருக்கிறார், ஆகவே இதைப் பார்த்துச் செய்யுங்கள் என்று சொன்னால், அதற்கு செக்ரட்டரி நோட் போட்டு அது கடைசியிலே செக்ஷன் ஆபிசர் லெவலிலே பதில் வருகிறது. அவர் கையெழுத்துப்போட்டு, அதுவும் ' ஃபார் ' என்று போட்டு வருகிறது. அமைச்சர் அவர்கள் நேரில், அந்த லெட்டர்சுக்கு பதில் டைப் பண்ணிக்கொண்டு வாருங்கள் என்று சொன்னால் நல்லது. தப்பு இருந்தால் அமைச்சர் கையெழுத்து போட மாட்டார்கள் என்று எச்சரிக்கையாக இருப்பார்கள். எச்சரிக்கையாக பதில் எழுதுவார்கள். பாராளுமன்றத்தில் இருக்கின்ற, இவ்வளவு பெரிய துணைக் கண்டத்திலேயுள்ள, மத்திய அமைச்சர்கள்கூட பதில் அனுப்புகிறார்கள். சாதாரணமான இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் கடிதம் எழுதியிருக்கிறேன். திருவாந்திரம் டிவிஷன் ரெயில்வே பற்றி அவருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். திரு. கமலாபதி திரிபாதி அவர்களுக்கு எழுதியிருந்தேன். அதற்கு அவரே பதில் எழுதினார்கள். அவர் போன பிறகு, அந்தப் பிரச்சினை தீரவில்லை. அதற்கு பிறகு திரு. கேதார் பாண்டே அவர்கள் வந்தபிறகு அவர் ரிப்ளை பண்ணியிருக்கிறார்கள். "இதற்கு முன்இருந்தவர் பிரிடிசெசார் அவர்கள் உங்களுக்குப் பதில் எழுதியிருக்கிறார்கள். அதுபற்றித் தெரிவிக்கிறேன்' என்று சொல்லி எழுதியிருக்கிறார்கள். "டியர் மிஸ்டர் சங்கரலிங்கம்" என்று சொல்லிவிட்டு எழுதியிருக்கிறார்கள்.



அப்படியானால், அந்தப் பிரச்சினை எந்த அளவுக்கு முக்கியமானதாக எடுத்துக்கொள்ளப்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஒரு அமைச்சருக்கு எழுதினால், அது ஒரு முக்கியமான பிரச்சினையாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். ஜனநாயக ரீதியிலே நாட்டிலே 234 பேர்கள் இருக்கின்றார்கள். இங்கே ஓர் அமைப்பு. ஆக மொத்தம் முந்நூறு பேர்கள் வரையில் இருக்கிறோம். அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்களையும் சேர்த்துக்கொண்டால், முந்நூற்று சில்லரை பேர்கள் அளவுக்கு வரும். இவ்வளவு பேர்களும் சேர்ந்து ஒரு பிரச்சினையைச் சொல்கின்றபோது, அதை முக்கியமானதாகக் கவனத்தில்கொண்டு அவரே பதில் எழுதி அனுப்பினால், அந்தப் பிரச்சினை விரைவில் தீரும் என்ற அளவிலே அதைக் கவனித்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு மேலவையினுடைய பரிசீலனைக்கு இங்கே வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பொதுவாக இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்றாலும், அதையொட்டி மேலும் செய்ய வேண்டிய சில விஷயங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஒரு முக்கியமான விஷயம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும், திரு. இராமமூர்த்தி அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்களும் பொதுவாகவே ஒரு ஒத்த கருத்தினைச் சொல்லியிருக்கிறார்கள். லைப்ரரியைப் பொறுத்த வரையிலும் அதை நவீனப்படுத்த வேண்டும், பெரிய அளவுக்குச் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது உடனடியாகச் செய்ய வேண்டியது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் இதைப்பற்றிப் பேசி எந்த அளவுக்கு நவீனப்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு நவீனப்படுத்த வேண்டும். ஏர் கண்டிஷன் செய்ய வேண்டுமென்பதுகூட நல்லதுதான். ஏர் கண்டிஷன் வசதி இருந்து உள்ளே வந்துவிட்டோமே என்பதற்காகவாது படிக்கக்கூடிய சூழ்நிலை வந்துவிடும், படிக்கத் தூண்டும். இப்போது படிக்கக்கூடிய ஆர்வமே போய்க் கொண்டிருக்கின்றது என்பதைப் பார்க்கிறோம். சாதாரணமாக இப்போது வருகின்ற பத்திரிகைகள் எல்லாம் லைட் ரீடிங் பத்திரிகையாகத்தான் இருக்கின்றன. அந்தப் பத்திரிக்கைகள்தான் அதிகமாக விற்பனையாகின்றன.

பரபரப்பு இருக்கிறது, விஷயத்திற்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அந்த விஷயங்களை கவனமாகப் பரிசீலிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு படிக்க வேண்டும். அந்த நிலை இப்போது வளரவில்லை என்பதை சமீபத்திலே பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதை மாற்றியமைக்க வேண்டுமென்ற நிலைமைகள் இருக்கின்றன. நூலகங்கள் பெரிய அளவிலே செயல்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் சட்டமன்ற நூலகம் அனைத்து வசதிகளையும் பெற்றிருக்க வேண்டும் என்று சொல்கின்றார்கள். அதை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. நிச்சயமாக கவனிக்கப்படும் என்றும், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயணச் சீட்டுபற்றி ஒரு கருத்தை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். உறுப்பினர்கள் கொண்டு போய் அங்கே கொடுத்து விடுகிறார்கள். அதற்குப் பிறகு என்னவாயிற்று என்று நமக்கே தெரியாமல் இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படித் திருப்பிவிட்டால், நமக்கு 75 பர்சென்ட் திரும்ப பணமாக வருகிறது. அதைத் திரும்ப பயணச் சீட்டாக உறுப்பினர்களுக்குக் கொடுத்துவிடலாம். 75 சதவிகிதம்தான் கொடுக்க முடியும்.

**திரு. ப. மாணிக்கம் :** அப்படி ரத்து செய்தால் 10 பர்சென்ட் தான் அவர்கள் குறைக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** ரத்து செய்வது என்பது கடைசி நேரத்திலேதான் செய்கிறார்கள். அதிகபட்சம் 75 சதவிகிதம் என்று வைத்துக் கொள்ளலாம். சிலருக்கு 80 சதவிகிதம் என்று திரும்ப வரும். அந்த அளவுக்கேகூட கொடுப்பதாக வைத்துக்கொள்ளலாம். எண்பது சதவிகிதம் திரும்பக் கொடுப்பதாக இருந்தால், அந்த அளவுக்கு பயணச் சீட்டையும் கொடுத்துவிடுவது என்று வைக்கலாம். அந்தக் கருத்தை கவனத்தில் வைத்துக்கொண்டு அதற்கு ஏற்பாடு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** இப்போது 50 பைசா டிக்கெட்டுகூட கொடுக்கிறார்கள். இந்தியாவிலே எங்கே போனாலும் எதற்கு 50 பைசா டிக்கெட்டு என்று கேலி பண்ணுகிறார்கள்? அந்த 50 பைசா டிக்கெட்டை எடுத்து விடலாம்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** ஏற்கெனவே அந்த டிக்கட்டுகள் வழங்கப்பட்டுவிட்டன. அந்த 50 பைசா டிக்கெட்டுக்களை எடுத்துவிட்டு, ஒரு ரூபாய் டிக்கெட்டுக்களாக மாற்றலாம். மாண்புமிகு உறுப்பினர்



திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் டீசல் கார் பற்றிச் சொன்னார்கள். டீசல் கார் அவசியம் தான். உறுப்பினர்களுக்குச் சலுகை தந்து முன் உரிமை கொடுத்து கார் கிடைக்கச் செய்ய வேண்டும். அது குறித்து போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும் கலந்து பேசி அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அதை எடுக்கும் என்று சொல்லிக்கொண்டு, பொதுவாக இந்தச் சட்ட முன்வடிவை ஏற்று நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1982 ஆம் ஆண்டு, சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1982) நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1982) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் நடவடிக்கைகள் முடியும் வரை, அவையின் அனுமதியுடன் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(10) தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1982).

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

திரு. ஆ. நல்லசிவன் : தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். இதிலே தொழிலாளிகள் இரண்டு ரூபாயும், முதலாளிகள் நான்கு ரூபாயும், அரசு இரண்டு ரூபாயும் கொடுத்து சேர்க்கப்படும் பணத்திலிருந்து தொழிலாளர்களுக்குப் பல நன்மைகளைச் செய்ய ஏற்கெனவே உள்ள சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படுகிறது. தொழிலாளர்கள் ஒரு ரூபாய் என்று கொடுத்து வந்ததை, இரண்டு ரூபாயாக உயர்த்தாமல் இருந்திருக்கலாம். முதலாளிகள் தரப்பில் கூட்டியதோடும், அரசுத் தரப்பில் உயர்த்தியிருப்பதோடும் நிறுத்தியிருக்கலாம் என்பது என் அபிப்பிராயம். இருந்தாலும் இதன் காரணமாக அதிகமாகத் தொகை சேர்வதால், வரவேற்கிறேன்.

வெல்பேர் போர்ட் சார்பிலே செலவழிக்கப்படும் செலவுகளைப் பொறுத்தவரையிலும், ஒரு கருத்து சொல்ல விரும்புகிறேன். இந்தப் பணத்தை நிர்வாகம் செய்ய போர்டுக்கு பவர் இருக்கிறது. அதில் தொழிற்

@ 441–443 ஆம் பக்கங்களில் இணைப்பு IX ஆக அச்சிடப்பட்டுள்ளது.



சங்கப் பிரதிநிதிகள், தொழிலாளர் பிரதிநிதிகள், முதலாளிகளின் பிரதிநிதிகள், அரசின் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். வெல்பேர் போர்ட் எப்படிச் செலவு செய்வது என்ற விஷயமாக வரும்போது, மெஜாரிட்டி முடிவுப்படி செலவு செய்ய வேண்டுமென்பதற்கு மாறாக, இப்படித்தான் செலவு செய்ய வேண்டுமென்று கவர்ன்மென்ட் டைரக்டிவ் கொடுக்கலாமென்று கேட்டிருக்கிறார்கள். அது சரியல்ல. அரசின் சட்டங்களைப் பரிசீலனை செய்து, அதில் என்னென்ன திருத்தங்களைக் கொண்டு வரலாமென்று சிபாரிசு செய்ய கமிட்டி இருக்கிறது. அதிலுள்ள தொழிற் சங்கப் பிரதிநிதிகளும், முதலாளிகளின் பிரதிநிதிகளும் ஒத்துக்கொள்கிறார்கள். செலவை, மெஜாரிட்டி முடிவின்படி செய்ய வேண்டுமென்று அவர்கள் சொல்லுகிறார்கள். அரசுத் தரப்பில், அதை ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள். இப்போதுதான் அரசுத் தரப்பில் இரண்டு ரூபாய் கொடுக்கிறார்கள். முன்பு தொழிலாளிகளும், முதலாளிகளும் கொடுப்பதை எப்படிச் செலவு செய்வது என்பதற்கு போர்ட் இருந்தது. அதில் மெஜாரிட்டி முடிவை ஏற்க வேண்டுமென்று அவர்கள் சொல்லும்போது, அதை அரசு ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. இப்போது இரண்டு ரூபாய் அரசு தருகிறது. அரசு மெஜாரிட்டி முடிவை ஏற்காமல், நாங்கள் சொல்வதைத்தான் கேட்க வேண்டுமென்று சொல்லுவது ஜனநாயகத்திற்கு எப்படிப் பொருந்தும்? சாதாரணமாக தொழிற் சங்கப் பிரதிநிதிகள், முதலாளிகள் ஏகோபித்து தீர்மானம் நிறைவேற்றினால், அரசு அதை ஒத்துக்கொள்ளும். இந்த விஷயத்தில் அரசு ஒத்துக்கொள்ளவில்லை. எனவே மெஜாரிட்டி முடிவுப்படி செலவு செய்ய வேண்டும் என்றும், அரசு டைரக்டிவ்வை போர்ட் கேட்க வேண்டுமென்று இருப்பதை எடுக்க வேண்டுமென்றும் கேட்டு, சட்ட முன்வடிவை ஆதரித்து, அமைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்ன கருத்து பற்றி ஒன்று சொல்ல ஆசைப் படுகிறேன். அவர் சொன்னது 20-வது விதி.

" The Government may give the Board such directions as in their opinion are necessary or expedient in connection with the expenditure from the fund or for carrying out the purposes of the Act and it shall be the duty of the Board to comply with such directions."

இந்தச் சட்டம் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்ததல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். இருக்கிற சட்டத்தில் எந்தெந்த மாற்றங்களைக் கொண்டுவர

வேண்டுமென்று இந்த அரசு கருதுகிறதோ, அதையெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம். உறுப்பினர்களும் வரவேற்றார்கள். அந்த வகையிலே 1972 ஆம் ஆண்டு கொண்டு வந்த சட்டத்தில் தொழிலாளர்கள் ஆண்டுக்கு ஒரு ரூபாயும், முதலாளிகள் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு ரூபாயும் கொடுக்க வேண்டுமென்று இருந்தது. அதை இரண்டு ரூபாய், நான்கு ரூபாய் ஆக்க வேண்டுமென்று லேபர் வெல்பேர் கமிட்டியிலே வைத்துதான், அதை இரண்டு ரூபாய், நான்கு ரூபாய் என்று உயர்த்தினோம். அதையொட்டித்தான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்படுகிறது. இதைப்பற்றி முதல்வரவர்களிடத்தில் கோப்பை அனுப்பியபோது, அவர்கள் தொழிலாளர்கள் சார்பாக அரசே ஒவ்வொரு தொழிலாளிக்கும் இரண்டு ரூபாய் கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அதுகுறித்தும் திருத்தம் கொண்டுவந்திருக்கிறோம். இந்தச் சட்டம் 10 ஆண்டுகளாக இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பொருத்தமாகச் சொன்னதுபோல, இதில் அரசின் பங்கு எதுவுமில்லையென்று இருந்தது. இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே ஒவ்வொரு தொழிலாளிக்கும் இரண்டு ரூபாய் கொடுக்கிறோமென்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் மேற்கு வங்கம் பற்றியெல்லாம் விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அது நல்ல யோசனை. We do not consider ourselves to be the repository of all knowledge பெரிய அறிவுக் களஞ்சியம் என்று நாங்கள் நினைத்துக்கொள்வதில்லை. சிலது தெரியும், செய்வோம். மற்ற மாநிலங்களில் எது எது நல்லது . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களே மறந்திருப்பார் போல இருக்கிறது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** எது எது நல்லது என்று பார்த்து கொண்டு வருவோம். அவர்கள் சொன்னதை வரவேற்கிறோம். அந்த மாநிலத்திலிருந்து நாம் எப்படி அவற்றைக் கற்க வேண்டுமோ அதைப்போல நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்துள்ள கட்சியைச் சேர்ந்தவர்களும், இந்த அரசு மற்ற மாநிலங்களில் இல்லாத எதையெதைச் செய்திருக்கிறதென்பதைப் பார்த்து, அவற்றை மற்ற மாநிலங்களிலும் கொண்டுவர முயற்சி செய்வது வரவேற்கக்கூடிய அம்சம் என்பது நான் விரும்பக்கூடிய காரியம் என்பதால், இந்த ஆக்ட் மேற்கு வங்கத்தில் இல்லை . . .



**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவரவர்களே, மேற்கு வங்கத்தில் இது இருக்கிறது. சர்க்கார் கான்ட்ரிபியூஷனாக ஒரு ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அது அமுலில் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, என்னிடத்தில் இருக்கிற புள்ளிவிவரப்படி இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொள்கிறேன். மேற்கு வங்கத்தில் அப்படி இருந்தால், என்னுடைய வார்த்தைகளைத் திருத்திக்கொள்கிறேன். ஒரு ரூபாய் தருகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அவர்களுடன் டெலக்ஸ் மூலமாகப் பேசி, ஒரு ரூபாய் என்பதை இரண்டு ரூபாயாக மாற்ற வேண்டிய ஏற்பாடுகளை அவர்கள் செய்வார்கள் என்று கருதுகிறேன். அதுமட்டுமல்ல. கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு சட்டம் கொண்டுவந்தோம். அது மேற்கு வங்கத்தில் இல்லை. அந்தச் சட்டத்திற்கு விதி முறைகள் வரவில்லை என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்தார்கள். நியாயமான கோரிக்கை. ரூல்ஸ் இல்லாமல் எல்லா விதிகளையும் செயல்படுத்த முடியாது. அது அனுப்பப்பட்டுவிட்டது. அச்சு கோத்துக்கொண்டிருக்கிறார்கள். அநேகமாக 12 ஆம் தேதி வெளியிடப்படுமென்று நம்புகிறேன். ஹேன்ட்லூம் ஒர்க்கர்சுக்கு விதிகளைப் போட்டிருக்கிறோம். இது மேற்கு வங்கத்திலும் கேரளாவிலும் எப்படி வரப்போகிறதோ தெரியவில்லை. எந்த இடத்திலிருந்தும் இதைக் கொண்டு வரலாம். ஆளும் கட்சியாக இருந்தாலும் கொண்டு வரலாம். எதிர்க் கட்சியாக இருந்தாலும் கொண்டுவரலாம். புரட்சித் தலைவர் ஆட்சியைப் பாருங்கள், அங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்—நல்லதென்றால் எங்கே வேண்டுமானாலும் சொல்லலாம்—22 மாநிலங்களில் தமிழ்நாடு தான் கொண்டு வந்திருக்கிறது, அவர்தான் சிறப்பாகச் செய்கிறார் என்று அங்கே உள்ள தோழர்களிடம் சொல்லி, பேசச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் உரையை சீக்கிரம் முடிவிற்குக் கொண்டுவர வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, 12-37 தான் ஆகிறது. இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். அருள்கூர்ந்து அனுமதியுங்கள்.

இரண்டு, மூன்று கட்சிகள் போட்டி போட்டுக்கொண்டு நல்லது செய்கிறார்கள். இன்டஸ்டிரியல் டிஸ்பியூட் ஆக்டில் திருத்தம் கொண்டு வருகிறார்கள் மத்திய அரசினர். எனவே 'ஹெல்தி காம்படிஷன்' மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் ; மாநில அரசுக்கும் மாநில அரசுக்கும்

[திரு. எஸ். இராகவானந்தம்] [1982 ஏப்ரல் 8

நடக்கிறது. 'ஹெல்தி காம்படிஷன்' இல்லையென்றால் நாடு முன்னேறாது. நாங்களும் தெரிந்துகொள்ளத் தயாராக இருக்கிறோம். மற்ற மாநிலங்களில் செய்யாதவற்றைச் செய்து நாம் நல்ல பெயர் வாங்கும்போது, மற்ற மாநிலங்களில் உள்ளவர்களும் அந்தப் பெயரை வாங்க வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை. குஜராத்தில் 50 காசு தொழிலாளியும், ஒரு ரூபாய் முதலாளியும் போடுகிறார்கள் ; கேரளாவில் ஒரு ரூபாய் தொழிலாளி, இரண்டு ரூபாய் முதலாளி ; அரசு இன்னும் தாவில்லை. எனவே தேர்தலை ஒட்டி மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மராட்டிய மாநிலத்தில் தொழிலாளி ஒரு ரூபாய், முதலாளி மூன்று ரூபாய், அரசாங்கம் இரண்டு ரூபாய் ; கர்நாடகத்தில் தொழிலாளி ஒரு ரூபாய், முதலாளி இரண்டு ரூபாய், அரசாங்கம் ஒரு ரூபாய் ; டெல்லி தொழிலாளி 50 காசு, முதலாளி ஒரு ரூபாய், அரசாங்கம் ஒரு ரூபாய் ; தமிழ் நாட்டில் தொழிலாளி இரண்டு ரூபாய், முதலாளி நான்கு ரூபாய், அரசாங்கம் இரண்டு ரூபாய் என்று கொடுக்கிறார்கள். பதினைந்து லட்சம் ரூபாய் இந்த அரசுக்கு இதனால் அதிகமாகச் செலவாகிறது. அதைப் பொருட்படுத்தவில்லை . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதனால் ஆதரிக்க வேண்டும் . . .

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** 20 ஆம் விதி பற்றிச் சொன்னார்கள். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இதற்கு முந்தைய அரசாங்கம் கொண்டுவந்த எல்லாமே தவறு என்று சொல்லவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்போது

(பிற்பகல் 12-40)

என்னால் மிகவும் மதிக்கப்படக்கூடிய, பாரம்பரியம் உள்ள மாண்புமிகு திரு. என்.வி.என். அவர்கள் காலத்தில் இது கொண்டு வரப்பட்டது என்பதால், அவர்கள் இதைப்பற்றி என்ன எண்ணத்தோடு கொண்டு வந்திருப்பார்கள் என்பதையும் நாங்கள் பரிசீலித்தோம். அவர்கள் செய்தது சரி என்று அரசுக்கு பட்டதால் தான் இந்த செக்ஷனை வைத்திருக்கிறோம் என்பதைச் சொல்லி இதை அவை நிறைவேற்றித்தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".



1982 ஏப்ரல் 8]

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1982) நிறைவேற்றப்பட வேண்டும் " என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1982) நிறைவேற்றப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (3) நடப்பு கூட்டத் தொடரில் நடைபெற்ற அவை அலுவல்கள் குறித்த சில விவரங்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவைக்கு இந்தக் கூட்டத் தொடரின் அவை அலுவல்கள் குறித்த சில விவரங்களை அறிவிக்க விரும்புகிறேன்.

| | |
|---|---|
| 1. மேலவை நடைபெற்ற நாட்கள் | 37 |
| 2. மேலவை நடைபெற்ற நேரம் | 139 மணி 33 நிமிடங்கள் |
| 3. நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவுகள் | 37 |
| 4. கூட்டாய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்ட சட்டமுன்வடிவுகள் | 2 |
| 5. கவன ஈர்ப்புத் தீர்மானங்களின் மீது அளிக்கப்பட்ட அறிக்கைகள் | 59 |

## அறிவிப்புகள்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 6. | அவையில் முன்மொழியப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்கள் | 1 |
| 7. | அவையில் எழுப்பப்பட்ட உரிமைச் பிரச்சினைகள் | 5 |
| 8. | ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பங்குகொண்ட உறுப்பினர்கள் | 28 |
| 9. | நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தில் பங்கு கொண்ட உறுப்பினர்கள் | 31 |
| 10. | அவையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புகள் | 8 |
| 11. | கொள்கை விளக்கக் குறிப்புகள் மீதான விவாதத்தில் பங்கு கொண்ட உறுப்பினர்கள் | 47 |
| 12. | விடையளிக்கப்பட்ட வினாக்கள் (உடுக்குறியிட்டவை) | 267 |
| 13. | குறுகிய கால் வினா | 1 |
| 14. | அவைமுன் வைக்கப்பட்ட உடுக்குறியிடாத வினாக்கள் | 8 |
| 15. | கேட்கப்பட்ட துணை வினாக்கள் | 837 |
| 16. | ஆற்றிய உரைகள் எண்ணிக்கை (7—4—1982 முடிய) | 441 |
| 17. | அவைக்கு அளிக்கப்பட்ட குழுக்களின் அறிக்கை | 1 |
| 18. | விவாதிக்கப்பட்ட தனி உறுப்பினர் தீர்மானம் | ஒன்றுமில்லை |
| 19. | விவாதிக்கப்பட்ட தனி உறுப்பினர் சட்டமுன்வடிவு | 1 |
| 20. | பார்வையாளர்கள் எண்ணிக்கை | 1688 |
| 21. | விதி 82-ன் கீழ் அமைச்சரின் அறிக்கை | 4 |
| 22. | அச்சுக்கு அனுப்பப்பட்ட நடவடிக்கை குறிப்பின் பக்கங்கள் (7—4—1982) முடிய). | 7,385 |

உறுப்பினர்களே, இந்தத் தொடர் கூட்டத்தை மாண்புமிகு அமைச்சர்களும் உறுப்பினர்களும் சிறப்பாக, வெற்றிகரமாக நடத்தக்கூடிய அளவிற்கு ஒத்துழைத்ததற்காக அனைவரையும் பாராட்டுகிறேன். அனைவருக்கும் என்னுடைய நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற மேலவைச் செயலாளர் உள்ளிட்டு மேலவைத் துறை அதிகாரிகள் மற்றும் மேலவைத் துறை நிருபர்கள் கொடுத்த ஒத்துழைப்பிற்காக அவர்களையும் பாராட்டுகிறேன்.



செய்தி பத்திரிகை நிருபர்களுக்கும், இந்த அவையின் நடவடிக்கைகளை ஒலி மூலமும், ஒளி மூலமும் பரப்பி உதவிய வானொலி நிறுவனத்திற்கும், தொலைக்காட்சி நிறுவனத்திற்கும் நம் அவையின் சார்பிலே பாராட்டுதலையும் நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீண்டும் கூடுவோமாக.

மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்படுகிறது.

பின்னர், அவை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-44)

### 8. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

160. Notification issued with G.O. Ps. No. 151, Commercial Taxes and Religious Endowments, dated the 6th February 1982 regarding exemption from payment of sales tax on sale of goods made by Burma Repatriates, Tiruchirappalli and exemption from registration for a period of six months or till the completion of shopping centre in Singaratope at Tiruchirappalli whichever is earlier. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

161. Notification issued with G.O. Ps. No. 147, Commercial Taxes and Religious Endowments, dated the 5th February 1982 regarding authorisation of officers for filing complaints. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

162. Audit Report of the Tamil Nadu Water Supply and Drainage Board for the years 1973-74, 1974-75, 1975-76, 1976-77 and 1977-78 (English). [Laid on the table of the House under section 47 of the Tamil Nadu Water Supply and Drainage Board Act, 1970 (Tamil Nadu Act 4 of 1971).]

[1982 ஏப்ரல் 8

## B. Reports, Notifications and Other Papers.

* 184. The Tamil Nadu Payment of Salaries (Second Amendment) Bill, 1982 (L.A. Bill No. 33 of 1982), as passed by the Assembly.

* 185. The Tamil Nadu Labour Welfare Fund (Amendment) Bill, 1982 (L.A. Bill No. 32 of 1982), as passed by the Assembly.

£ 186. The Tamil Nadu Entertainments Tax (Amendment) Bill, 1982 (L.A. Bill No. 34 of 1982), as passed by the Assembly.

## இணைப்பு I.

*[353 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]*

*1980-81 ஆம் ஆண்டில் கரும்பிற்கு நிர்ணயித்த விலையான டன் ஒன்றிற்கு ரூ. 130 என்பதையே 1981-82 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கும் 8.5 சதவிகிதம் சர்க்கரைச் சத்துள்ள கரும்பிற்கு குறைந்தபட்ச விலையாக மத்திய அரசு நிர்ணயித்தது. ஆயினும் இவ்விலை கரும்பு விவசாயிகளுக்கு கட்டுப்படியாகவில்லை என எழுந்த முறையீடுகளின்பேரில், ஆதாயமான விலையை கரும்பிற்கு அளிக்கவேண்டுமென்ற நோக்கத்தில் தமிழ்நாடு அரசு கரும்பிற்கு டன் ஒன்றிற்கு (8.5 சதவீத சர்க்கரை சத்துக்கு) ரூ. 165 என்ற விலையினை கொடுக்க சர்க்கரை ஆலைகளை அறிவுறுத்தியது.*

*2. இவ்விதம் டன்னுக்கு ரூ. 165 விலை நிர்ணயித்தபோதிலும், மேலும் விலை உயர்த்திக்கொடுக்குமாறு கோரி முறையீடுகள் அரசுக்கு வரப்பெற்றன. கரும்பிற்கான விலை சர்க்கரை ஆலைகளில் கொடுக்கக்கூடிய திறன் முதலியவைகளை அரசு பரிசீலித்து, ஆலைகள் அரசுக்குச் செலுத்தும் கரும்பு கொள்முதல் வரியிலிருந்து, கரும்பை அரவைக்கு ஆலைக்குக் கொண்டுவரும் விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ. 10 வீதம் அளிக்க ஆணையிட்டுள்ளது. எனவே 1981-82 ஆம் ஆண்டில் 8.5 சதவீத சர்க்கரைச் சத்துள்ள கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ. 165 விலையும், அத்துடன் கொள்முதல் வரியிலிருந்து ரூ. 10-ம் கரும்பின் விலையாகக் கிடைக்கும். இது தற்போதைய நிலையில் கட்டுபடியாகக்கூடிய விலையேயாகும். இதற்கு மேலும் விலையாக அளிக்க ஆலைக்கு இயலாது.*

---

* Circulated to all M.L.Cs. on 7th April 1982.
£ Laid on the table of the House on 7th April 1982.



*1982 ஏப்ரல் 8]*

*3. தமிழ்நாட்டில் 1980-81 ஆம் ஆண்டில் சுமார் 1.36 இலட்சம் ஹெக்டேரில் கரும்பு பயிரிடப்பட்டு சுமார் 135 இலட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்யப்பட்டது. இதில் சர்க்கரை ஆலைகள் 49.54 இலட்சம் டன் கரும்பினை அரவை செய்தன. ஆனால் 1981-82 ஆம் ஆண்டில் கரும்பு பயிரிடப்பட்ட பரப்பளவு சுமார் 1.72 இலட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இதிலிருந்து சுமார் 190 இலட்சம் டன்கள் கரும்பு உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவாக, உற்பத்தியாகும் கரும்பில் 35 முதல் 40 சதவீத அளவே சர்க்கரை ஆலைகள் அரவை செய்கின்றன. 1981-82 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் சுமார் 64.24 இலட்சம் டன்கள் கரும்பு அரவை செய்யுமென முதலில் மதிப்பிடப்பட்டது. இருப்பினும் நடப்பு ஆண்டில் சாதகமான பருவ நிலையின் காரணமாக கரும்பு விளைச்சல் அதிகரித்திருப்பதால், ஆலைகளால் அரவை செய்யப்படவேண்டிய பதிவு கரும்பின் அளவும் உயர்ந்துள்ளது. இதனால் நடப்பு ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் சுமார் 70 இலட்சம் டன்கள் கரும்பு அரவை செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் ஆலைகள் அரவை செய்யும் காலமும் நீடிக்கும். சாதாரணமாக ஏப்ரல், மே மாதங்களில் முடிவடையும் அரவைப் பருவம், ஆலைகள் அதிக அளவு பதிவு கரும்பை அரவை செய்யவேண்டிய கட்டாயத்தில் உள்ளதால், ஜூன், ஜூலை வரை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கோடைக்காலம் தொடங்கியவுடன், ஆலைகள் அரவை செய்யும்போது, சர்க்கரைக் கட்டுமானம் பெருமளவு குறையும். இருப்பினும் கரும்பு விவசாயிகள் பயன்பெறும்பொருட்டு ஆலைகள் அரவைக் காலத்தை நீடிக்கும்.*

*இச்சூழ்நிலையில் பதிவில்லா கரும்பையும் பெருமளவில் எடுத்து அரவை செய்ய ஆலைகளால் இயலாமல் உள்ளது. இப்பதிவில்லாக் கரும்பு வெல்லம் தயாரிப்பதற்கென்றே பயிரிடப்பட்டதாகும். வெல்ல விலைக் குறைவினால் ஏற்பட்டுள்ள நிலைமை மாற்றவேண்டுமேயானால், வெல்லம் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படவேண்டும். இதற்கு மத்திய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமேயானால், இந்நிலையில் முன்னேற்றம் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.*

## இணைப்பு II.

*[355 ஆம் பக்கத்தில் இனம் 5 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]*

*11—8—1981 நாளிட்ட கல்வித்துறையின் அரசாணை எண் 1760-இல் அரசுத்துறைகள், உள்ளாட்சி நிறுவனங்கள், நிதியுதவி பெறும் தனியார் நிறுவனங்கள் நடத்தும் தொடக்கநிலை, நடுநிலை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் இளநிலை, இடைநிலை ஆசிரியர்களுக்கு*

அவர்கள் பெற்றிருக்கும் ஆசிரியர் பயிற்சிக்காக அவர்கள் பெற்று வரும் சம்பள விகிதத்தில் ஒரு கூடுதல் ஊதிய உயர்வு வழங்கவேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வுத்தரவு 1—6—1981 முதற்கொண்டே நடைமுறைக்கு வரும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வாணை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நடத்தும் பள்ளிகளுக்கும் பொருந்தும். எனவே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படவேண்டிய ஊதிய உயர்வுக்காக 23—1—1982 நாளிட்ட தனது மடலில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் "288. சமூகப் பாதுகாப்பும் நலன்களும்" என்ற தலைப்பின்கீழ் மூன்று இலட்சத்தை அரசின் எதிர்பாராச் செலவின நிதியில் (Contingency Fund) இருந்து முன்பணமாக அளிக்கும்படி கேட்டிருந்தார். அதனை ஏற்று நிதித் துறையின் 6—2—1982 தேதியிட்ட அரசாணை எண் 117-ல் ரூ. மூன்று இலட்சங்கள் அனுமதித்து அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, இனி இந்த ஆணையின் அடிப்படையில், ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு விரைவில் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2. உறுப்பினர் 1—10—1981 முதல் இயல்பாக ஆசிரியர்களுக்குத் தரப்பட வேண்டிய ஊதிய உயர்வும் அளிக்கப்படவில்லை என்று கூறியுள்ளார். இது குறித்து அரசு மட்டத்தில் ஆணை எதுவும் பிறப்பிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. விதிமுறைகளின்படி இந்த ஊதிய உயர்வு ஆண்டுக்கு ஒருமுறை அளிக்கப்படவேண்டும். எனினும் உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை கருத்தில் கொண்டு 1—10—1981 முதல் இயல்பாக ஆசிரியர்களுக்கு அளிக்கப் படவேண்டிய ஆண்டு ஊதிய உயர்வுகளை உடனடியாக அளிக்க நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## இணைப்பு III.

*[357 ஆம் பக்கத்தில் இனம் 6 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]*

L.A. Bill No. 13 of 1982.

(As passed by the Assembly.)

*A Bill to provide for punishments for certain acts in respect of the public property and the public in the State of Tamil Nadu.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-third Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Public Property (Prevention of Destruction and Loss) Act, 1982.

(2) It shall come into force at once.



2. *Punishment for committing mischief in respect of public property or machinery.*—Whoever—

(i) commits mischief by doing any act in respect of any public property whether movable or immovable or machinery and thereby causes loss or damage to the amount of one hundred rupees or upwards, or

(ii) commits mischief by doing any act which causes or which he knows to be likely to cause a diminution of the supply of water to the public or to any person for any purpose or an inundation of, or obstruction to, any public drainage, or

(iii) commits mischief by doing any act which renders any public road, bridge, navigable channel, natural or artificial, impassable or less safe for travelling or conveying property, or

(iv) commits mischief by fire or any explosive substance intending to cause or knowing it to be likely that he will thereby cause damage to any public property whether movable or immovable or machinery to the amount of one hundred rupees or upwards shall be punishable with imprisonment for a term which shall not be less than six months but which may extend to five years; and with fine:

Provided that the court may, for any adequate and special reasons to be mentioned in the judgment, impose a sentence of imprisonment for a term of less than six months.

*Explanation.*—For the purposes of this section,—

(i) "mischief" shall have the same meaning as in section 425 of the Indian Penal Code (Central Act XLV of 1860);

(ii) "public property whether movable or immovable or machinery" means any property or machinery owned or controlled by,—

(*a*) the State Government; or

(*b*) any Local authority; or

(c) the Tamil Nadu State Electricity Board; or

(*d*) anyUniversity in this State; or

(*e*) any co-operative Society including a land development bank, registered or deemed to be registered under the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961); or

(f) any corporate body constituted under any Act passed by the Legislature of this State ; or

(g) any other Corporation owned or controlled by the State Government.

3. *Punishment for throwing stones; bricks, etc., upon persons travelling in motor vehicles.*—Whoever commits or instigates, incites or otherwise abets the act of throwing stones, bricks, soda-bottles or any other material whatsoever upon the persons travelling in any motor vehicle, shall be punishable with imprisonment for a term which shall not be less than six months but which may extend to five years and with fine :

Provided that the court may, for any adequate and special reasons to be mentioned in the judgment, impose a sentence of imprisonment for a term of less than six months.

*Explanation.*—For the purposes of this section " motor vehicle " shall have the same meaning as in clause (18) of section 2 of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).

4. *Special provision regarding bail.*—No person accused or convicted of an offence punishable under section 2 or section 3 shall, if in custody, be released on bail or on his own bond unless the prosecution has been given an opportunity to oppose the application for such release.

5. *Order to pay compensation.*—(1) When imposing a sentence of fine for an offence under this Act, the court may when passing judgment, order the whole or any part of the fine recovered to be applied—

(a) in defraying the expenses properly incurred in the procsecution ;

(b) in the payment to any person of compensation for any loss or injury caused by the offence ;

(c) in replacing or, as the case may be, restoring to the previous state, the public property or machinery including any public road, bridge, navigable channel, natural or artificial.

(2) If the fine is imposed in a case which is subject to appeal, no such payment shall be made before the period allowed for presenting the appeal has elapsed, or, if an appeal be presented, before the decision of the appeal.





(3) An order under this section may also be made by an Appellate Court or by the High Court or Court of session when exercising its powers of revision.

(4) At the time of awarding compensation in any subsequent civil suit relating to the same matter, the court shall take into account any sum paid or recovered as compensation under this section.

6. *Power to try offences.*—No court inferior to that of a Chief Metropolitan Magistrate or a Chief Judicial Magistrate shall try any offence punishable under this Act.

7. *Saving.*—The provisions of this Act shall be in addition to, and not in derogation of, any other law for the time being in force and nothing contained herein shall exempt any person from any proceeding by way of investigation or otherwise which might, apart from this Act, be instituted against him.

## இணைப்பு IV.

*[395 ஆம் பக்கத்தில் இனம் 6 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]*

L.A. Bill No. 14 of 1982.
(As passed by the Assembly.)

*A Bill further to amned the Provincial Small Cause Courts Act, 1887, in its application to the State of Tamil Nadu.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-third Year of the Republic of India as follows :—

1. *Short title, extent and commencement.*—(1) This Act may be called the Provincial Small Cause Courts (Tamil Nadu Amendment) Act, 1982.

(2) It extends to the whole of the State of Tamil Nadu.

(3) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Substitution of new section for section 25, Central Act IX of 1887.*—For section 25 of the Provincial Small Cause Courts Act, 1887 (Central Act IX of 1887) (hereinafter referred to as the principal Act), the following section shall be substituted, namely :—

"25. *Revision of decrees and orders of Courts of Small Causes.*—The District Judge, for the purpose of satisfying himself that a decree or order made in any case decided by a Court of Small

Causes is according to law, may of his own motion or on the application of an aggrieved party, made within thirty days from the date of such decree or order, call for the case and pass such order with respect thereto as he thinks fit :

Provided that in relation to any case decided by a District Judge or Additional District Judge exercising the jurisdiction of a Judge of a Court of Small Causes, the power of revision under this section shall vest in the High Court. ".

3. *Special provision as to pending cases in the High Court.*—All cases pending in the High Court under section 25 of the principal Act at the commencement of this Act shall stand transferred to the District Court concerned and the District Court shall have jurisdiction to hear and determine the same in accordance with the provisions of section 25 of the principal Act as substituted by section 2 of this Act and the judgments and orders of the High Court delivered or made before the commencement of this Act shall be enforceable as if they had been delivered or made by the District Court.

## இணைப்பு V.

*[399 ஆம் பக்கத்தில் இனம் 6 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]*

L.A. Bill No. 15 of 1982.
(As passed by the Assembly.)

*A Bill to repeal the Madras City Civil Court and Presidency Small Cause Courts (Amendment) Act,* 1916.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-third Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madras City Civil Court and Presidency Small Cause Courts (Amendment) Repeal Act, 1982.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Repeal of Tamil Nadu Act V of* 1916.—(1) The Madras City Civil Court and Presidency Small Cause Courts (Amendment) Act, 1916 (Tamil Nadu Act V of 1916), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, all suits instituted in the Madras City Civil Court under section 2 of the said Act or transferred to the said Court under section 3 of the said Act and



which are pending before the said Court on the date of the commencement of this Act shall be disposed of by the said City Civil Court as if this Act had not been passed.

## இணைப்பு VI.

*[400 ஆம் பக்கத்தில் இனம் 6 (4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]*

L.A. Bill No. 17 of 1982.
(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Court-fees and Suits Valuation Act,* 1955.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-third Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Court-fees and Suits Valuation (Amendment) Act, 1982.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Amendment of section 7, Tamil Nadu Act XIV of* 1955.—In section 7 of the Tamil Nadu Court-fees and Suits Valuation Act, 1955 (Tamil Nadu Act XIV of 1955) (hereinafter referred to as the principal Act), sub-section (3) shall be omitted.

3. *Amendment of Schedule II to Tamil Nadu Act XIV of* 1955.—In Schedule II to the principal Act,—

(1) in Article 3 (iii) (A) (2), after item (*b*), the following item shall be inserted, namely :—

" (*bb*) Memorandum of
Writ Appeal Two hundred rupees " ;

(2) in Article 10, in clause (*c*), after the word " a Collector ", the words " or to any officer of the Public Works Department " shall be inserted

(3) in Article 11, in clause (*v*), for the entries in column (2), the following entries shall be substituted, namely :—

" Election petition questioning the election of a person in respect of—

(i) the office of member of a panchayat ;

(ii) the office of President or Vice-President of a panchayat ;

(iii) the office of member of the Municipal Corporation of Madras or of Madurai or of Coimbatore or of any other Municipal Corporation constituted under any law for the time being in force or of member of a Municipal Council or a Panchayat Union Council;

(iv) the office of Mayor or Deputy Mayor of the Municipal Corporation of Madras or of Madurai or of Coimbatore or of any other Municipal Corporation constituted under any law for the time being in force or of Chairman or Vice-Chairman of a Municipal Council or a Panchayat Union Council".

## இணைப்பு VII.

[407 ஆம் பக்கத்தில் இனம் 6 (7)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 14 of 1982.
(As passed by the Assembly.)

*A Bill to validate the Levy and collection of local cess surcharge under the Tamil Nadu Panchayats Act, 1958.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-third Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Panchayats (Validation of Local Cess Surcharge) Act, 1982.

2. *Section 3 of Tamil Nadu Act 12 of 1971, deemed to have come into force on the 1st January 1960.*—Notwithstanding anything contained in clause (*b*) of sub-section (2) of section 1, of the Tamil Nadu Panchayats (Second Amendment and Validation) Act, 1970 (Tamil Nadu Act 12 of 1971) (hereinafter referred to as the 1971 Act) and in the notification of the State Government in the Rural Development and Local Administration Department, S.R.O. No. II—2 No. 167 (*a*) of 1971, dated the 21st August 1971, published at page 1 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 21st August 1971, section 3 of the 1971 Act shall be deemed to have come into force on the 1st January 1960.

3. *Validation of local-cess surcharge under Tamil Nadu Act XXXV of 1958.*—Notwithstanding anything contained in any judgement, decree or order of any court, no levy or collection of local-cess surcharge by a panchayat union counicl under the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)





(hereinafter referred to as the 1958 Act) during the period commencing on the 1st January 1960 and ending with the 21st August 1971 shall be deemed to be invalid or ever to have been invalid on the ground only that no maximum has been prescribed for such local cess surcharge and such local cess surcharge levied or collected or purporting to have been levied or collected shall, for all purposes, deemed to be and to have always been validly levied or collected in accordance with law as if section 3 of the 1971 Act had been force at all material times when such local cess surcharge was levied or collected and accordingly—

(*a*) all acts, proceedings or things done or taken by a panchayat union council or any authority, officer or person in connection with the levy or collection of any local cess surcharge shall, for all purposes, be deemed to be and to have always been done or taken in accordance with law;

(*b*) no suit or other proceeding shall be maintained or continued in any court for the refund of any local cess surcharge so paid;

(*c*) no court shall enforce any decree or order directing the refund of any local cess surcharge so paid; and

(*d*) any local cess surcharge which becomes leviable under the 1958 Act as amended by the 1971 Act for any period not earlier than 1st January 1960 and before the 21st August 1971 may be levied and collected in the manner provided under the Act as amended by the 1971 Act.

## இணைப்பு VIII.

[409 ஆம் பக்கத்தில் இனம் 6 (8)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 27 of 1982.
(As passed by the Assembly.)

*A Bill further to amend the Indian Partnership Act, 1932, in its application to the State of Tamil Nadu.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-third Year of the Republic of India as follows :—

1. *Short title, extent and commencement.*—(1) This Act may be called the Indian Partnership (Tamil Nadu Amendment) Act, 1982.

(2) It extends to the whole of the State of Tamil Nadu.

(3) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Substitution of new Schedule for Schedule I to Central Act IX of 1932.*—For Schedule I to the Indian Partnership Act, 1932 (Central Act IX of 1932), the following Schedule shall be substituted, namely :—

"SCHEDULE I.

*Maximum Fees.*

[*See* sub-section (1) of section 71.]

| *Document or act in respect of which the fee is payable.* | *maximum fee.* |
|---|---|
| | *Rs. p.* |
| 1. Statement under section 58 ... ... ... | 50.00 |
| 2. Statement under section 60 ... ... ... | 5.00 |
| 3. Intimation under section 61 ... ... ... | 5.00 |
| 4. Intimation under section 62 ... ... ... | 5.00 |
| 5. Notice under section 63 ... ... ... ... | 5.00 |
| 6. Application under section 64 ... ... ... | 5.00 |
| 7. Inspection of the Register of Firms under sub-section (1) of section 66. | 2.00 for inspecting the entry of each firm in the Register. |
| 8. Inspection of documents relating to a firm under sub-section (2) of section 66. | 2.00 for each inspection of all documents relating to one firm. |
| 9. Copies from the Register of Firms ... ... | 0.50 for each hundred words or part thereof." |



[422 ஆம் பக்கத்தில் இனம் 6 (10)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 32 of 1982.

(As passed by the Assembly.)

*A Bill to amend the Tamil Nadu Labour Welfare Fund Act, 1972.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-third Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Labour Welfare Fund (Amendment) Act, 1982.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Amendment of section 2, Tamil Nadu Act 36 of 1972.*— In section 2 of the Tamil Nadu Labour Welfare Fund Act, 1972 (Tamil Nadu Act 36 of 1972) (hereinafter referred to as the principal Act),

(i) in clause (*b*), in sub-clause (i),—

(*a*) in the opening portion, for the figures and word "12 months", the words "the preceding twelve months" shall be substituted.

(*b*) in item (*b*), for the expression "Rs. 750", the expression "Rs. 1,000" shall be substituted ;

(ii) in clause (*d*),—

(*a*) in item (iv), the following shall be added at the end, namely :—

"which employs, or on any working day during the preceding twelve months employed, five or more than five persons";

(*b*) in item (v), for the expressions "registered under the Societies Registration Act, 1860 (Central Act XXI of 1860)" 'more than twenty persons", the expression "registered or deemed to be registered under the Tamil Nadu Societies Registration Act, 1975 (Tamil Nadu Act 27 of 1975)" and "five or more persons" shall respectively, be substituted ;

(c) the following *Explanation* shall be added at the end, namely :—

*Explanation*.—For the purposes of this Act, where an establishment consist of different departments or has branches whether situate in the same place or in different places, all such department or branches shall be treated as parts of the same establishment.

3. *Amendment of Section* 3, *Tamil Nadu Act* 36 *of* 1972.—In section 3 of the principal Act, in sub-section (2),—

(1) in clause (*b*), after the expression " the Tamil Nadu Industrial Employment (Standing Orders) Rules, 1947 ", the expression " and under the Certified Standing Orders of the Establishment " shall be inserted ;

(2) in clause (*c*), the following shall be added at the end, namely :—

" and under the proviso to sub-section (2) of section 36 of the Tamil Nadu Shop and Establishments Act, 1947 (Tamil Nadu Act XXXVI of 1947). ".

4. *Amendment of section* 13, *Tamil Nadu Act* 36 *of* 1972.—In section 13 of the principal Act,—

(i) for sub-section (3), the following sub-section shall be substituted, namely :—

" (3) As soon as possible after the payment of any un paid accumulation is made to the Board, the Board shall—

(*a*) exhibit on the notice board of the establisehment in which the unpaid accumulation was earned; and

(*b*) publish in the *Tamil Nadu Government Gazette*, and in such other manner as may be prescribed,

a notice inviting claims by employees, their heirs, legal representatives or assigns for any payment due to them. " ;

(ii) in sub-section (5), for the opening portion commencing with the words " If a claim " and ending with the words " notice in respect of such claim ", the following shall be substituted, namely :—

" If a claim is received whether in response to the notice or otherwise, with a period of six months from the date of the publication of the notice in the *Tamil Nadu Government Gazette* in respect of such claim, ".



5. *Amendment of section* 15, *Tamil Nadu Act* 36 *of* 1972.—In section 15 of the principal Act,—

(i) for sub-section (1), the following sub-section shall be substituted, namely :—

" (i) Every Employee shall contribute two rupees per year to the fund and very employer, shall, in respect of each such employee, contribute four rupees per year to the Fund and the Government shall, in respect of each such employee contribute two rupees per year to the Fund. " ;

((ii) in sub-section (2), the expression " or the Tamil Nadu Shops and Establishments Act, 1947 (Tamil Nadu Act XXXVI of 1947) " shall be added at the end.

6. *Amendment of section* 17, *Tamil Nadu Act* 36 *of* 1972.— In section 17 of the principal Act, in sub-section (2),—

(i) in clause (*j*), the words " or the widows of the deceased employees " shall be added at the end.

(ii) in clause (*b*), after the words " standard of living " the words " and education " shall be inserted.

7. *Amendment of section* 19, *Tamil Nadu Act* 36 *of* 1972.—In section 19 of the principal Act, in sub-section (1), after the expression " (Central Act 5 of 1970) ", the expression " or in the State Co-operative Bank or in any Central Co-operative Bank as defined in section 73-A of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961) or in any corporation owned or controlled by any State Government or the Central Government" shall be inserted.

## இணைப்பு X.

*[411 ஆம் பக்கத்தில் இனம் 6 (9)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]*

L.A. Bill No. 33 of 1982.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Payment of Salaries Act*, 1951.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-third Year of the Republic of Indian as follows :—

1. *Short title and commencement*.—(1) This Act may be called the Tamil Nadu Payment of salaries (Second Amendment) Act, 1982.

(2) (i) Sections 2 to 8 shall be deemed to have come into force on the 1st April 1982.

(ii) Section 9 shall be deemed to have come into force on the 9th March 1982.

2. *Amendment of section 3, Tamil Nadu Act XX of 1951.*—In section 3 of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951) (hereinafter referred to as the principal Act), for the expression "one thousand rupees per mensem,", the expression "one thousand and five hundred rupees per mensem," shall be substituted.

3. *Amendment of section 4, Tamil Nadu Act XX of 1951.*—In section 4 of the principal Act,—

(*a*) in sub-section (1), for the expression "one thousand rupees per mensem,", the expression "one thousand and five hundred rupees per mensem," shall be substituted;

(*b*) in sub-section (2), for the expression "seven hundred and fifty rupees per mensem,", the expression "one thousand and two hundred rupees per mensem," shall be substituted.

4. *Amendment of section 5, Tamil Nadu Act XX of 1951.*—In section 5 of the principal Act,—

(*a*) in sub-section (1), for the expression "one thousand rupees per mensem,", the expression "one thousand and five hundred rupees per mensem," shall be substituted.

(*b*) in sub-section (2), for the expression "seven hundred and fifty rupees per mensem,", the expression "one thousand and two hundred rupees per mensem," shall be substituted.

5. *Amendment of section 6-A, Tamil Nadu Act XX of 1951.*—In section 6-A of the principal Act, in sub-section (1), for the expression "seven hundred and fifty rupees per mensem," the expression "one thousand and two hundred rupees per mensem," shall be substituted.

6. *Amendment of section 6-B, Tamil Nadu Act XX of 1951.*—In section 6-B of the principal Act, in sub-section (1), for the words "or the Leader of the Opposition in the Legislative Council", the words "the Leader of the Opposition in the Legislative Council, the Chief Government Whip in the Legislative Assembly or the Government Whip in the Legislative Council" shall be substituted.



7. *Amendment of section 12, Tamil Nadu Act XX of 1951.*—In section 12 of the principal Act,

(*a*) in sub-section (1), in clause (*a*), for the expression "two hundred and fifty rupees per mensem,", the expression "three hundred rupees per mensem," shall be substituted;

(*b*) in sub-section (4-A), in clause (*a*), for the words "or any other relative in the case of lady members", the words "or with any other companion" shall be substituted;

(*c*) for sub-section (4-B), the following sub-section shall be substituted, namely:—

"(4-B) Every member of the Legislative Assembly or of the Legislative Council, who does not hold any of the offices referred to in sections 3 to 6-A, shall be entitled to receive telephone allowance of three hundred and fifty rupees per mensem irrespective of the fact whether he has any telephone or not.";

(*d*) in sub-section (4-C), the expression, "and the quarterly rent at the rate of the one hundred and seventy five rupees per quarter," shall be omitted.

8. *Amendment of section 12-A, Tamil Nadu Act XX of 1951.*—In section 12-A of the principal Act, in sub-section (1), for the expression "two thousand and five hundred rupees,", the expression "three thosuand rupees" shall be substituted.

9. *Amendment of section 12-B, Tamil Nadu Act XX of 1951.*—in section 12-B of the principal Act, in sub-section (3), for the second proviso, the following proviso shall be substituted, namely:—

"provided further that—

(*a*) no such pension shall be paid to any person for the period during which such person was or is in receipt of, pension for having been a Member of the Parliament or any other State Legislature, or honorarium either from any State or the Central Government or from any company or statutory body owned or controlled by any State or the Central Government and if the amount of such pension, or honorarim is equal to, or in excess of, the pension to which he is entitled under sub-section (1);

(*b*) where the amount of such pension or honorarium is less than the pension to which he is entitled under sub-section (1), such person shall be entitled to receive only the difference as pension under that sub-section.".

# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

## SIXTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA

3rd, 5th, 7th and 8th April 1982

*Volume* CLXXXIX (Nos. 1 to 4).

PAGES.

A.


ACCIDENT(S)—

Question *re* boat—in Tiruchengode Panchayat Union, Salem district due to violation of Ferry Service Rules, action taken thereon ... ... 237—240

ADJOURNMENT MOTION *re*—

Cyclone and heavy rain in Namakkal taluk, Salem district, loss incurred by agriculturists due to ... 348—349

ANANDAM, THIRU V. V. V.—

Sugarcane, calling Minister's attention to non-payment of fair price for—and fall in the selling price of—jaggery ... ... ... 352, 353, 354

ARANGANAYAGAM, THE HON. THIRU C.—

Bill—Perarignar Anna University of Technology (Amendment and Special Provisions) Bill, 1982...117—118, 120, 130, 132, 133

ARRACK AND TODDY (PERSONAL PERMIT) RULES, 1981—

Amendment to—, notification laid on the table 200

PAGES

B—*cont.*


BILL(S)—*cont.*

Newspaper Employees Relief Fund Bill, 1982—

Considered and passed ... ... ... 406—407

Message from the Assembly *re* .. .. .. 351—352

Panchayats (Validation of Local Cess Surcharge) Bill, 1982—

Considered and passed ... ... ... 407—409

Message from the Assembly *re* ... ... 350

Payment of Salaries (Second Amendment) Bill, 1982—

Considered and passed .. .. .. 441—421

Message from the Assembly *re* ... ... ... 350

Message from the Governor *re* ... ... 350

Perarignar Anna University of Technology (Amendment and Special Provisions) Bill, 1982—

Considered and passed ... ... ... 117—133

Message from the Assembly *re* ... ... ... 113

